நற்போதகம்.

க. ஜனுவரிமீ. ௲அஎஅ௵.
1878

Questions for the New Year.

புதுவருஷக்கேள்விகள்.

ஜீவமார்க்கத்தில், இன்னொரு கல் கடந்திருக்கிறது. பிரயாணத்தின் முடிவு கிட்ட அடுத்திருக்கிறது. சகோதரனே கடைசியிலே உன் நிலைமை எப்படி இருக்கப்போகிறது? எங்கேபோய்ச் சேருவாய்? உன்க்குள்ள தங்கப் பவுண்களில் ஒன்று செலவாய்ப் போய்விட்டது! சகோதரனே உன்னுடைய வியாபாரமென்ன. உன்னுடைய அருமையான காலத்தை எப்படிச் செலவிடுகிறாய். உலகத்திற்காகப் பொருளைச் சம்பாதிக்கப்பார்க்கிறாயா பரலோகத்துக்காக ஆஸ்தியைச் சேர்த்துவைக்கிறாயா? நித்திய அறுப்புக்காக இன்னொருவருஷ விதைப்பு விதைத்திருக்கிறாய். கடந்துபோன வருஷத்துக்காக நீ நித்தியமாய் எதை அறுக்கப்போகிறாய்? சகோதரரே! மறுபிறப்பை அடைந்தவர்கள் என்று எண்ணப்பட்டவர்களே! இவை நமக்கு எத்தனை விசேஷித்த கேள்விகள். இதை வாசிக்கிற ஒவ்வொருவரிடத்திலும் அவைகளைத் தனித்தனியாய்க் கேட்கவேண்டுமென்றிருக்கிறோம்.

ஓய் பெரியவரே! வெகுநாளாய்க் கிறிஸ்துமார்க்கத்தில் பிரயாணம்பண்ணி நரைத்துப்போயிருக்கிறீரோ "மோட்சபிரயாண" த்தில் கண்டிருக்கிறதுபோல நீர் பியூலா நாட்டுக்குச் சமீபித்தவர்போலிருக்கிறீரோ. பரம காட்சிகளைக் கண்டாற்போலும் பரம ஓசைகளைக் கேட்டாற்போலுமிருக்குமே. அப்படியிருக்கிறதா? நீர் வெகுநாளாய் அருமைஇரட்சகரை அறிந்து பழகியிருப்பீரோ இப்போது நன்றாய் அவரையறிவீரா? உம்முடைய வயசுக்குத்தக்கதாய் விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் அதிகரித்திருக்கிறதா? அப்படியிருக்கவேண்டுமே. இவ்வுலகக் கட்டுகளாகிய பொருளாசை, இச்சை, பெருமை முதலியவைகள் ஒவ்வொன்றாகக் கழன்றுபோகவேண்டுமே.

வாலிபனே, பெலசாலியே! கடந்துபோன வருஷத்தில் இருக்கிற நற்குணங்களோடு வேறே எந்தக்கிறிஸ்தமான நற்குணத்தையும் புதிதாய்ச் சேர்த்துவைத்திருக்கிறாய்? பரி. பேதுரு தமது நிருபம் ஒன்றில் உரைத்திருக்கிறது என்னவெனில் "நீங்கள் அதிகச் சாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும்" முதலிய சற்குணங்களையும் கூட்டுவீர்களாக என்பதாம்.

உனக்கு விசுவாசமிருந்ததாக்கும். தைரியத்தைக் கூட்டினுயா? கூடிய மட்டும் சிநேகிதரோடும் மற்ற ஜனங்களோடும் கிறிஸ்துவைப்பற்றித் தைரியமாய்ப் பேசுகிறாய் என்று வைத்துக்கொள்வோம். வேதவசனத்தைக் கருத்தாய்ப் படித்து ஞானத்தை அடைந்திருக்கிறாயா? விசுவாசம், தைரியம், ஞானம், இம்மூன்றும் உன்னிடத்திலிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். இச்சையடக்கத்தையும் சேர்த்துக்கொண்டாயா? உன்னுடைய ஆத்துமா சுகமுள்ளதானால் வளர்ந்திருக்குமே. பரி. பேதுரு இன்னும் என்னசொல்லுகிறார், கிருபையிலும் அறிவிலும் வளருங்கள்" என்பதே.

இன்னொருவார்த்தையோடு முடிக்கிறேன். உன் ஆத்தும இரட்சிப்பைப் பற்றிக் கவலையற்ற கிறிஸ்தவனே நீ எங்கேயிருக்கிறாய்? உன் முகம் எங்கே நோக்கமாயிருக்கிறதென்று நான் கேட்கிறதில்லை. அது ஒருவேளை மோக்ஷத்துக்குத் திரும்பியிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. மோக்ஷத்துக்கு முதுகைக் காட்டுகிறவர்கள் கொஞ்சப்பேர் மாத்திரம். நான்கேட்கிறது என்னவெனில் நீ மோக்ஷத்தை நோக்கினும் நரகத்துக்கு நகருகிறாயா? எப்பொழுதும் பக்தியுள்ள தீர்மானங்களைப் பண்ணுகிறவனும் பிறகு அவைகளை மீறுகிறவனுமிருக்கிறாயா? ஒருநாள் பாவத்துக்காகப் புலம்புகிறவனும் மறுநாள் மறுபடியும் அந்தப் பாவத்தைச் செய்கிறவனும் இருக்கிறாயா? ஒரு ரகசியத்தை அறிவிக்கப்போகிறேன். அது இயேசு என்னும் நாமத்தில் அடங்கியிருக்கிறது. அதினர்த்தம் தேவஇரட்சகர். அவர் தேவாக்ஷகராயிருக்கிறார். நீ உன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள சக்தியற்றவன். ஆனால் அவர் பாவத்தின் அதிகாரத்தினின்று நித்தம் உன்னைரட்சித்து இவ்விதமாய் அதின் பயங்கரமான தண்டனையினின்றும் கடைசியாய் உன்னை இரட்சித்துக்கொள்ளக் கூடியவர். பேதுருவைப்போல உன்னைத் தாங்கும்படி கேள். ஆண்டவரே என்னை இரட்சியும் என்று சத்தமிட்டவுடனே அவர் தமது கையை உனக்குநேரே நீட்டுவார்.

II பேதுரு 1: 5, 6.

161973

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

VII. அதிகாரம்.

1-ம் வா.—"பரிசுத்தமாகுதலை." "பூரணப்படுத்தக்கடவோம்," பூரணப்படுத்தக்கடவோம் என்கிற வார்த்தையை நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டும். சிலர், இப்படி நாம் பூரணசற்குணராயிருக்க விரும்புவது கூடாத காரியம். அப்படி விரும்புவதும் சரியல்ல. பரலோகத்தில் மாத்திரம், இப்படி நிறைவாயிருக்கலாமென்கிறார்கள். தேவனுடைய வசனமோ "நீங்கள் பாவத்துக்கு மரித்தீர்களென்றும், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டா"தென்றுஞ் சொல்லியிருக்கிறது. ஆ! நம்முடைய கையை அவருடைய கையிலும் நம்முடைய கண்ணை அவருடைய முகத்திலும் வைத்துக்கொண்டு நடப்போமானால் இப்போதிருக்கிறதுபோல நமது நடக்கை இராது.

2-ம் வா.—"நாங்கள் ஒருவனுக்கும் அநியாயஞ் செய்யவில்லை." அவருடைய சத்துருக்கள் அவர்பேரில் சாற்றின குற்றங்களிவையென்று இங்கே நமக்கு நேராகச் சொல்லப்படவில்லை; என்றாலும் அவர் பாவத்தைக் கண்டித்தது, தருமப் பணங்களைச் சேர்ப்பதில அவருடைய ஆவல், தம்மால் குணப்பட்டவர்களோடே அவர் நடந்துகொண்ட விதம் ஆகிய இவைகளே அவர்பேரில் அவருடைய சத்துருக்கள் குற்றஞ்சாற்றுகிறதற்குப், போதுமான காரணங்களாயிருந்திருக்கும் எனபதற்குச் சந்தேகமில்லை.

6—8-ம் வா.—தாம் எழுதின நிருபத்தினாலுண்டாகும் பலனைப் பற்றி, அப்போஸ்தலன் சந்தேகப்பட்டதுமல்லாமல், தாம் அதை அனுப்பினதையிட்டுத் துக்கப்பட்டதாகவும் தோன்றுகிறது.

10-ம் வா.—"தேவனுக்கேற்ற துக்கம்" தேவனை நோக்கிக்கொண்டிருக்கும். (தேவரீர் ஒருவருக்கே விரோதமாய் நான் பாவஞ்செய்து உமது கண்களுக்குமுன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்.)

"லௌகீக துக்கமோ" அந்தப் பாவத்தினாலுண்டாகும் நஷ்டத்தையும் வெட்கத்தையுமாத்திரம் பார்க்கும். திருஷ்டாந்தரம். சவுல் இராசா. க சாமு. 15: 30.

11-ம் வா.—"அது உங்களிடத்தில் எவ்வளவு சாக்கிரதையை விளங்கப்பண்ணிற்று."

கொரிந்து சபையில் விளங்கின மெய்மனந்திரும்புதலுக்குரிய அநேக குறிப்புகள் இங்ஙனம் படிப்படியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. சாக்கிரதை.
2. அசுத்தமானதை ஏற்கனவே களைந்துவிடாத குற்றந் தீர நியாயஞ் சொல்லுதல்.
3. வெறுப்பு. பாவத்துக்காகவும் அதின் வெட்கத்துக்காகவும் அடைந்த நீதியான கோபம்.
4. பயம். தேவகோபத்தைப் பற்றினது.
5. ஆவல். தேவ தயவை மீளவும் பெற்றுக்கொள்வதற்கு.
6. பத்திவைராக்கியம்.
7. கண்டிப்பு. கண்டிப்பாய் அடக்கிக்கொள்ளுதல். மனந்திரும்பினவன் தான் தவறிவிழுந்த பாவத்துக்கு நேர் எதிரிடையாயிருக்கிற சற்குணத்தை அதிக முக்கியமாய் நாடிவருவதால் தான் செய்த முந்தின பாவத்துக்காக தன்னிடத்தில் பழிவாங்குகிறான். இவ்விதமாகப் பொருளாசையாகிய பாவத்தை விட்டு மனந்திரும்பினவன் உதாரமாகிய சற்குணத்தை முக்கியமாய் நாடுவான். தன் நாவினால் பாவஞ் செய்தவன் மனந்திரும்பினதுமுதல் தன் வார்த்தைகளைப்பற்றி அதிகக் கவலையுடையவனாயிருப்பான். ஆகையால் மெய் மனந்திரும்புதலானது சமையத்துக்கேற்ற துக்கமாயிராமல், நிலையுள்ள குணமாறுதலுக்கும் புதுச் செய்கைக்கும் பயன்படத்தக்கதாகத் தோன்றுகிறது.

13-ம் வா.—தீத்தென்பவன் பவுல் தன்னையனுப்பின காரியத்துக்குச் சந்தேகத்தோடே புறப்பட்டுப்போனதாக வெளியாகிறது. அவனுடைய பயத்தை நீக்கித் தைரியப்படுத்தும்படிக்கு பவுல் கொரிந்துச் சபைக்குள்ளே விளங்கின விசுவாசம், தமது பேரில் வைத்த

அன்பு, தரும சிந்தை, இந்தச் சற்குணங்களைப்பற்றிப் புகழ்ச்சியாய் தீத்துவுக்கு எடுத்துப் பேசினதுபோலிருக்கிறது.

VIII. அதிகாரம்.

எட்டாம் ஒன்பதாம் அதிகாரங்கள் முழுவதும் யூதேயாவிலுள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு உதவியாகப், புறத்தேசத்துச் சபைகளுக்குள்ளே நடப்பிக்கப்பட்டு வந்த தருமப் பணத்தின் சேகரிப்பைப்பற்றினவை.

இந்தச் சேகரிப்பு, வருத்தப்பட்ட மக்கெதோனியா நாட்டிலும், தனமுள்ள அகாயா நாட்டிலும் ஒரே சமையத்தில் நடந்துகொண்டிருந்தது. ஆகையால் பரிசுத்த பவுல் இந்த நாட்டின் தருமச்செய்கையை, மறு நாட்டின் உதாரத்தைக்கொண்டு எழுப்பிவிடும்படி பிரயாசப்படுகிறார். புறத்தேசத்தான் உதாரமாய்க் கொடுக்கவும், யூதன் உற்சாகமாய் ஏற்றுக்கொள்ளவும், இவ்விதமாய் இருவரும் ஏவப்படக் கூடுமானால், புறத்தேசத்துக் கிறிஸ்தவர்களை அன்புடன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாய், யூதர்களுடைய மனம் இளகுமென்கிற நம்பிக்கையே அப்போஸ்தலன் இந்தக் காணிக்கையைச் சேர்க்கிறதற்கான முகாந்தரமாயிருந்தது.

மக்கெதோனியாக் கிறிஸ்தவர்களை வருத்தப்படுத்தின துன்பங்களிவையென்றறிய நட. 16, 17-ம் அதிகாரங்களையும், க தெச. 1: 6, யும் பார்க்க.

5-ம் வா.—கிறிஸ்துவுக்காகவும் தம்முடைய வேலைக்காகவும் தங்கள் பணத்தை மாத்திரமல்ல, முழு ஆத்துமாவோடும் முழுச் செய்கையோடும் தங்களையே கிறிஸ்துவுக்கொப்புக்கொடுத்து, நான் நினைத்ததற்கும் அதிகமாய்ச் செய்தார்கள்.

6-ம் வா.—கொரிந்தியருக்குள்ளே தருமப்பணச் சேகரிப்பை, முதலாவது துவக்கின தீத்து என்பவரே இந்தக் கிருபையுள்ள அன்பின் வேலையை முடிக்கவேண்டுமென்பது அப்போஸ்தலனுடைய கருத்து.

10-ம் வா.—அவர்கள் செய்யவேண்டிய தருமத்தைச் செய்கிறதைப் பார்க்கிலும், அதைச் செய்யவேண்டிய மன உற்சாகமே பெரிதென்று அப்போஸ்தலன் இதில் காட்டியிருக்கிறதைக் கவனிக்க.

15-ம் வா.—(யாத்திராகமம் 16: 18) பார்க்க.

ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவனும் காலையில் புறப்பட்டுப் போய், மன்னாவைப் பொறுக்கிக்கொள்ள, அவனவன் பொறுக்கினது அந்த வீட்டுக்குப் பொதுவாக வைக்கப்படும். வயசினாலாவது பெலவீனத்தினாலாவது சிலர் குறைவாய்ச் சேர்த்தாலும் அவனவனுக்கு அளவுப்படி கிடைக்கும்படியாகத் தேவன் செய்தார். இவ்விதமாய் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாயிருப்பதினால் கிறிஸ்தவர்களுடைய சம்பாத்தியம் எல்லாருக்கும் போதுமானதாயிருக்கும். க கொரி. 9: 9-ல் அடங்கினதுபோல, இந்தப் பழயவேற்பாட்டுச் சரித்திரத்திலே இந்த ஆழ்ந்த சத்தியம் அடங்கினதென்று கவனிக்க.

18-ம் வா.—சிலர் இவர் பரி. லூக்காவென்று அபிப்பிராயப்படுகிறார்கள். பரி. லூக்காவின் நாளுக்குரிய சுருக்கச் செபத்தைப் பார்க்க.

21-ம் வா.—பல கண்கள் கிறிஸ்தவன்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நம்முடைய நேர்மை எல்லாருக்கும் பிரத்தியட்சமாயிருக்கத்தக்கதாய் நாம் நடக்கவேண்டியது. நமக்குப் பணம் ஒப்புவிக்கப்பட்டால், அதை உண்மையாய்ச் சுவாமிக்குமுன்பாகச் செலுத்துகிறதுமல்லாமல், அந்த உண்மை மனுஷருக்குமுன்பாகத் துலங்கத்தக்கதாய்க் கணக்குவைக்கிறது நல்லது.

22-ம் வா.—இது ஒருவேளை சீலா என்பவனாயிருக்கலாம்.

மத்தேயு சுவிசேஷ வியாக்கியான வினா விடை.

அறிவிப்பு.

உபாத்தியாயர்களுக்கும் உபாத்திச்சிமார்களுக்கும் ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களில் உதவிசெய்வோர்களுக்கும் உபயோகமாயிருக்கும்படி பரிசுத்த மத்தேயு சுவிசேஷத்தின்பேரில் வியாக்கியானமாக வினாவிடைகளை அச்சடிக்க விரும்புகிறேன். லேசாய் மறுமொழி தெரிந்துகொள்ளத்தக்க கேள்விகளுக்கு இதில் மறுமொழிகள் எழுதவில்லை. மறுமொழி விளங்காத கேள்விகளுக்கு மறுமொழி குறிப்புகளும், சரித்திர விஸ்தரிப்பும், பொருள் விஸ்தரிப்பும், வேண்டிய விஷயங்களுக்கு சுருக்கமான விஸ்தரிப்பும், அந்தந்த சரித்திரத்தினாலும் பொருளினாலும் கற்றுக்கொள்ளத்தக்க போதனைகளும், படிப்பினைகளும் இதிலடங்கியிருக்கிறது.

பரிசுத்த மத்தேயு சுவிசேஷத்தின்பேரில் இக்கேள்விகள் செய்யப்பட்டவைகளாயினும் மற்ற சுவிசேஷங்களிலும் இயேசுக்கிறிஸ்துநாதரைப்பற்றிச் சொல்லிய சம்பந்தமும் தொடர்ச்சியுமான சரித்திர விசேஷங்களும், அவைகளை விளக்குவிக்கத்தக்கதாய் வேதத்தின் மற்ற ஆகமங்களிலுள்ள சரித்திர குறிப்புகளும் இதில் இடைக்கிடையே எடுத்துக்காட்டியிருக்கிறது.

J. L. Wyatt.

1 பாடம்.

உலக ரட்சகராகிய கிறிஸ்துவின் வம்சமும் பிறப்பும்.

பரி. மத்தேயு. அதி. I.

வசனம் 1. பின்வரும் விஸ்தரிப்பை முந்தவாசிக்கவும்.

வம்ச வரலாறு— இன்னின்னார் இன்ன கொடி கோத்திரத்திலும், குடும்பத்திலும் பிறந்தவரென்று காட்டுகிற விபரம் அல்லது அட்டவணையே வம்ச வரலாறும். ஆஸ்தி பாஸ்திகளையும், சொத்துகளையும் குறித்துண்டாகும் விவாதங்களை விலக்குவதற்கும் தீர்ப்பதற்கும் அவ்வட்டவணைகள் மிகுந்த உபயோகமுள்ளவைகளாயிருந்தது. அதுவுமன்றி அவைகள் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலையும் காட்டத்தக்கவைகளாயுமிருந்தன. ஆதலால் யூத ஜனங்கள் அவ்வட்டவணைகளை வெகு பத்திரப்படுத்தி வந்தார்கள்.

ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான, இயேசுக்கிறிஸ்து—, கிறிஸ்துநாதர் ஆபிரகாம் தாவீது என்பவர்களின் குமாரன்

அல்லது சந்ததியாயிருப்பாரென்று பழைய ஏற்பாட்டுக் காலத்தில் முன்னுரைக்கப் பட்டிருந்தது. ஆகையால் இயேசுக்கிறிஸ்துவை ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனென்று சொல்லியிருக்கிறது.

இங்கே பின்வருங் கேள்விகளையும் அதற்கொப்பான கேள்விகளையும் கேட்கவேண்டியது.

கிறிஸ்துநாதர் ஆபிரகாமின் குமாரனாயிருப்பாரென்று எங்கே முன்னுரைக்கப்பட்டிருக்கிறது?

ஆதி. 22: 18.

கிறிஸ்து தாவீதின் குமாரனாயிருப்பாரென்று எங்கே முன்னுரைக்கப் பட்டிருக்கிறது?

2 சாமு. 7: 12, 13.

ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் கிறிஸ்து பிறக்கிறதற்கு 2000 வருஷத்திற்கு முன்னும், தாவீதுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் 1900 வருஷத்திற்கு முன்னுமாகப் பண்ணப்பட்டிருந்தது. அவைகள் பண்ணப்பட்டு அவ்வளவு காலமாயினும் தேவன் தமது வாக்குத்தத்தங்களை மறந்துவிடவில்லையே. அவ்வளவு நெடுங்காலமாயினும் தேவன் தமது வாக்குத்தத்தத்தை மறந்துவிடாதிருந்த விசேஷம் எந்த வேதவசனத்தைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது?

1 பேது. 3: 8.

இதைக்கொண்டு தேவனுடைய வார்த்தைகளின் நிறைவேறுதலைப்பற்றி நாம் கற்றுக்கொள்ளத்தக்கதென்ன?

வேதத்திலடங்கிய சகல பயமுறுத்தல்களும் வாக்குத்தத்தங்களும், வேத எழுத்துப்படியே நிறைவேறுமென்று கற்றுக்கொள்ளலாம். பரி. மத். 5: 18.

வசனம் 2—. வாசிக்கவும்—. இவ்வசனங்களில் கண்டிருக்கிற நாமங்களின் சம்பந்தமாய் பின்வருங் கேள்விகளையும் அதற்கொப்பான வேறு கேள்விகளையும் கேட்கவேண்டியது.

வச. 2. ஆபிரகாமுக்கு வேதத்தில் என்னென்ன விசேஷித்த பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது?

2 நாளா. 20: 7; பரி. யாக். 2: 23; ரோமர் 4: 16.

வச. 3. ரூத் என்பவளார்?

வச. 6. தாவீது என்பவன் ராஜாவானதெப்படி?

வச. 10. யொசியா என்பவன் எப்படிப்பட்ட ராஜா? 2 இரா. 22: 2. 23: 25. 2 நாளா. 35: 25.

வச. 11. யூதர் யாராலே பாபிலோனுக்குச் சிறைகளாய்க் கொண்டுபோகப்பட்டார்கள்?

பழைய ஏற்பாட்டிலுள்ள எந்த ஆகமத்தில் பாபிலோன் சிறையிருப்பைப் பற்றிய சரித்திரவரலாறு கண்டிருக்கிறது?

சிறையிருப்பிலிருந்த யூதரில் தேவபக்தியுள்ளவர்களாயிருந்து தங்கள் மார்க்கத்திற்கு சாட்சி பகர்ந்தவர்களார்?

இரட்சகருடைய வம்ச வரலாறைக் காட்டுகிற அட்டவணையில் பொல்லாதவர்களாயிருந்த சிலருடைய பேர்களும் வருகிறதே அவர்களில் சிலரைச் சொல்லு?

கிறிஸ்துநாதர் இப்படிப்பட்ட பொல்லாதவர்கள் உள்ள வம்சத்தில் வந்து பிறந்ததினால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்ன?

கொடிய பாவத்தினால் கறைப்பட்ட குடும்பத்தில் வந்து மனுஷ அவதாரஞ்செய்யத் திருவுளங்கொண்ட கிறிஸ்துவின் அன்பையும் தாழ்மையையும் அறிந்துகொள்ளவேண்டியது.

இதினால் கிறிஸ்து பாவ மாம்சத்தின் சாயலானார் என்கிற வேத சத்தியம் உண்மையாயிருக்கிறது. மேலும் எப்பேர்ப்பட்ட பாவிகளும் கிறிஸ்துவினண்டை வரலாமென்பதற்கு ஏதுவாயுமிருக்கிறது. இவர் பாவிகளை யேற்றுக்கொள்ளுகிறாரென்பது கிறிஸ்துவைக்குறித்து சத்துருக்கள் பகர்ந்த சாட்சியாம்.

வச. 18. யோசேப்பு தன் மனைவி மரியாளைச் சேர்த்துக்கொள்ளுமுன் அவர்களிருபேரும் எங்கேயிருந்தார்கள்?

பரி. லூக். 1: 26, 27. பார்க்க.

இயேசுநாதரின் பிறப்பு யோசேப்புக்கு அறிவிக்கப்படுமுன் யாருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது?

பரி. லூக். 1: 35.

யூதருக்குள் மாப்பிள்ளை பெண்பேசி விவாக நியமகம்செய்து கொள்ளும் வழக்கமென்ன?

விவாகம் நடக்கிறதற்கு வெகுநாளுக்கு முன்தானே மாப்பிள்ளை, பெண் பேசி, விவாக நியமகம் நடந்திருக்கும். யூத பாரம்பரியங்கள் அடங்கிய தல்மூத் (Talmud) என்னும் ஆகமத்தில் விவாகம் நடக்கிறதற்கு குறையாமல் 12 மாசத்திற்கு முன்னதாகவே விவாக நியமகம் நடந்திருக்கவேண்டியதென்னும் ஏற்பாடு கண்டிருக்கிறது.

வச. 19. இச்சரித்திரத்தினால் என்னென்ன நற்குணங்கள் யோசேப்பில் விளங்குகிறது?

நீதியும் தயாள சிந்தையுமே.

இதில் யோசேப்பின் நீதி விளங்குகிறதெப்படி?

மரியாள் தோஷமுள்ளவளென்று சமுசய எண்ணங்கொண்ட போது அவன் அவளைத் தள்ளிவிட யோசித்ததினால் அவனுடைய நீதி விளங்குகிறது.

அவனுடைய தயாள சிந்தை விளங்குகிறதெப்படி?

மரியாளுக்குக் கொஞ்சமாகிலும் மனநோவுண்டாகாமலும், அவமானம் உண்டாகாமலும். இரகசியமாய்த் தள்ளிவிட, யோசனைசெய்ததினால், அவனுடைய தயாள சிந்தை வெளியாகிறது.

இதினால் நாம் கற்றுக்கொள்ளவேண்டியதென்ன?

மனதிற்கு மலைவையும் சங்கடத்தையும் கொடுக்கத்தக்க கடமைகளை தயாள சிந்தையோடும் அன்போடும் நிறைவேற்றவேண்டுமென்று கற்றுக்கொள்ளலாம்.

வச. 20. இச்சரித்திரத்தினால் யோசேப்பினுடைய வேறென்ன நற்குணமும் வெளியாகிறது?

வெடுவெடுப்பும் கோபமுமில்லாத பொறுமையே. அனேகர் பிறர் செய்யும் குற்றத்தைக் கண்டுபிடிக்கும்போது முன்பின் யோசியாமல் சடுதியாய்க் காரியங்களை நடப்பிப்பார்கள். யோசேப்போ, பதஷ்டமாய் யாதொன்றும் நடப்பியாமல் சாவதானத்தோடே காரியத்தை நடப்பிக்க யோசனையாயிருந்தான். ஒருவேளை அவன் அப்போது தன் காரியத்தை, செபத்தோடு நடப்பித்திருந்திருக்கலாம். ஏனென்றால் பயபக்தியுள்ள நல்ல மனுஷர் வழிநடப்பிப் போகிறவர்களுக் காகவும் சங்கடமான காரியங்களிலும் வேளைகளிலும், தேவ நடத்துதலுக்காகவும், ஜெபம்பண்ணுவது வழக்கமே.

யோசேப்புகுண்டான சங்கடத்தில் தேவ நடத்துதல் கிடைத்த வகையென்ன?

சொப்பனத்தின் வழியாய்த் தேவன் தமது சித்தத்தை மனுஷருக்கு வெளிப்படுத்தினாரென்பதற்கு திருஷ்டாந்தங்களுண்டா?

உண்டு. ஆதியா. 28: 12, 13. பரி. மத். 2: 13. அப். 10: 10.

சங்கடமான காரியங்களிலும், காலங்களிலும் தேவன் தமது சனங்களை வழிகாட்டி நடத்துவார் என்பதாக வேதத்தில் பொதுவான வாக்குத்தத்தமுண்டா?

நீதி. 3: 5, 6. பார்க்க.

சங்கடமான காலங்களில் நாம் செய்யவேண்டியதென்ன?

சங். 55: 22.

வச. 21 இயேசு என்னும் நாமத்திற்கு அர்த்தமென்ன?

தேவரட்சகர்.

அந்த நாமம் கிறிஸ்துநாதருக்குக் கொடுக்கப்பட்டதேன்?

அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிக்கிற இரட்சகர் ஆனபடியால் அது கொடுக்கப்பட்டது.

கிறிஸ்துநாதர் யாரை இரட்சிக்கிறார்?

தமது ஜனங்களை இரட்சிக்கிறார்.

கிறிஸ்துநாதருக்கு ஜனங்களாகிறதெப்படி?

1 பேதுரு 2: 7, 9.

கிறிஸ்து நம்மைத் தமக்கு ஜனங்களாக்கிக்கொள்ளச் சித்தமுள்ளவரா?

வெளி. 3: 20.

கிறிஸ்து எவர்களையும் தமக்கு ஜனங்களாக்கிக்கொள்ள பிரிய சித்தமுள்ளவரென்கிற சம்பந்தமாய் சிறுவரைப்பற்றி அவர் சொல்லியிருக்கிறதென்ன?

பரி. மத். 19: 14.

இயேசுநாதருடைய ஜனங்கள் எதிலிருந்து இரட்சிக்கப்படுகிறார்கள்?

பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறதாவதென்ன?

பாவத்திற்காக வரும் தண்டனையிலும், அதின் அசுத்தத்திலும், கேட்டிலும், அதின் வல்லமையிலுமிருந்து விடுவிக்கப் படுவதே பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதாம்.

கிறிஸ்துவின் ஜனங்கள் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்களென்று காட்டு?

ரோமர் 8: 1.

பாவத்தின் அசுத்தம் அல்லது தீட்டினின்று அவர்கள் விடுவிக்கப்படுகிறார்களென்று காட்டு?

எசேக். 36: 25, 26.

பாவத்தின் வல்லமையினின்று விடுவிக்கப்படுகிறார்களென்று காட்டு?

ரோமர் 6: 14.

கவனிப்பு— இதிலடங்கிய கேள்விகளைக் கேட்கிறதோடு ஒவ்வொருவரும் தங்கள் பாவத்தினின்று இரட்சிக்கப்படத்தக்கதாக அவர்கள் இயேசுநாதரை நோக்கி மன்றாடும்படி பட்சமாய் ஏவியெழுப்பிவிடவேண்டும்.

வச. 22. இதில் குறிக்கப்படுகிற தீர்க்கதரிசி யார்?

ஏசாயா 7: 14.

வச. 23. இம்மானுவேலென்கிற நாமம் கிறிஸ்துவுக்கு இடப்பட்டதனால் அவருக்கு என்ன தன்மையிருந்ததாக விளங்குகிறது?

தேவதன்மை.

கிறிஸ்துநாதருடைய இரு தன்மைகளுமென்ன?

தேவதன்மையும், மனுஷ தன்மையுமே. பாவத்தினால் தேவனுக்கும் நமக்கும் பிரிவினையுண்டாயிற்று. கிறிஸ்துநாதர் மனுஷனானபோது அப்பிரிவினை நீங்கி ஒப்புரவாகுதலுண்டாயிற்று. அவர்மூலமாய் தேவனை திரும்பவும் நம்மோடிருக்கப் பெற்றுக்கொள்ளுவது நமக்குக் கிடைத்த பெரிய சலாக்கியமாயிருக்கிறது. எவர்கள் கிறிஸ்துநாதர் தங்களுக்கு வேண்டாமென்று வெறுக்கிறார்களோ அவர்கள் தேவன் தங்களோடிருக்கவேண்டாமென்று சொல்லுகிறவர்களாயிருக்கிறார்கள். தேவனற்றவர்களாயிருக்கிறவர்கள் பரிசுத்தமும், பாக்கியமும சமாதானமுமற்றவர்களாயிருப்பார்கள். அப்படியிருப்பது அவர்களுக்கு நித்திய ஆக்கினையாயிருக்கும்.

இச்சரித்திரத்தினால் யோசேப்பினுடைய குணங்களில் வேறென்ன குணமும் வெளியாகிறது?

கீழ்ப்படிதல்.

இதுவரையும் எடுத்துக் காட்டிய யோசேப்பின் குணங்களையெல்லாம் சொல்லு?

இயேசுக்கிறிஸ்து பிறந்ததெங்கே?

பரி. லூக். 2: 4.

Life of Rev: Bernard Gilpin.

பெர்னார்ட் கில்பின் போதகர் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

ஒருவிசை கில்பின் போதகர் வழக்கப்படி வடசீமைகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கப் புறப்பட இருக்கிறசமையத்தில், அடுத்த ஓய்வுநாளில் அச்சேகரத்துக் குருமார் சந்திப்பில் பிரசங்கிக்கவேண்டுமென்று டர்ஹாம் கண்காணியாராகிய டாக்டர் பார்ன்ஸ் என்பவரிடத்திலிருந்து உத்தரவுவந்தது. கில்பின் என்பவரோ, வடசேகரங்களுக்கு வருகிறேனென்று செய்தியனுப்பிவிட்டேன், பிரயாணத்துக்குரிய திட்டங்களெல்லாம் செய்தாயிற்று, ஆகையால் தமக்கு மாப்புச் செய்யவேண்டுமென்று கண்காணியாரிடத்தில் வருந்திக் கேட்டுக்கொண்டு பயணப்பட்டார். அவர் தேசாந்தரம் போயிருந்தவேளையில், அவரது சத்துராதிகளின் துர்யோசனையின்பேரில் கண்காணியார் அவரை உத்தியோகத்தினின்று நீக்கிவைத்தார். இந்தச் செய்தி பிரயாணம் முடிந்து வீடுவந்து சேர்ந்தபிறகுதான் அவருக்குத் தெரிந்தது. அதற்குக் கொஞ்சகாலைக்குப்பிறகு, கண்காணியார் செஸ்ற்றர் நகரத்துக்குப் போயிருக்கையில், கில்பின் போதகரை வரவழைத்து, தமக்கு முன்பாகவும் அச்சமயத்தில் கூடிவந்திருந்த குருமார்களுக்கு முன்பாகவும் பிரசங்கிக்கும்படி கற்பித்தார். கில்பின் என்பவர் மனமில்லாமையாய் போக்குச் சாக்குச் சொல்லியும் கண்காணியார் சம்மதிக்காததினாலே கடைசியில் உத்தரவுப் பிரகாரம் பிரசங்கித்தார். பிரசங்கத்தை முடிக்கிறதற்குமுன், கண்காணியார் புறமாய்த் திரும்பி அவரைப் பார்த்துச் சொன்னது;

"கனம்பொருந்திய தகப்பனே, இப்பொழுது நான் உம்மைப் பார்த்துப் பேசவேண்டும். தேவன் உம்மை இந்தச் சேகரத்துக்குக் கண்காணியாராக உயர்த்தியிருக்கிறாரோ, அதை என்னவிதமாய் ஆண்டு நடத்திவருகிறீரென்பதைக்குறித்து உம்மிடத்திற் கணக்குக்கேட்கிறார். இந்தச்சபையில் சீர்கேடாயிருக்கிற விஷயங்களையெல்லாம் சீர்ப்படுத்துவது உம்முடைய கடமை. எத்தனையோ கேடுபாடுகளும் அக்கிரமங்களும் எங்கும் பிரத்தியட்சமாய் நடந்துகொண்டிருக்க, அவைகளை ஒருவரும் எனக்கு அறிவிக்கவில்லை, அவைகள் ஒருக்காலும் எனக்குத் தெரியவுமில்லை என்று நீர் ஒருவேளை சொல்ல நேரிடாதபடிக்கு, இதோ இப்பொழுது இவைகளை உமக்கு அறிவிக்கிறேன். இந்தக்கேடுபாடுகளெல்லாம் எனக்குத் தெரியாமல் மற்றவர்களுடைய தப்பிதத்தினால் நடந்தன என்று அன்றைத்தினத்தில் சொல்லாதேயும். நீரே செய்ததானாலும் சரி, நீர் கண்சாடையாயிருந்ததனால் மற்றவர்கள் செய்ததானாலும் சரி, அது முழுவதுமாய் உம்முடையதுதான். ஆகையால் இந்த எல்லாக்கேடுகளுக்கும் நீரே காரணரென்று தேவனுக்கு முன்பாகவும் தேவதூதர்களுக்கு முன்பாகவும் மனுஷர்களுக்கு முன்பாகவும் அறிக்கைபண்ணுகிறேன். ஆம், சகல மனிதரும் உத்தரவாதஞ்செய்யும் அந்தப் பெரிய நாளில், இவைகளெல்லாம் என்னாலே உமக்கு அறிவிக்கப்பட்டதென்று நானே உமக்கு விரோதமாய்ச் சாக்ஷிசொல்லுவேன். இன்று நான் உம்மோடு பேசினதைக் கேட்ட இந்த எல்லா மனிதர்களும் அப்படியே சாக்ஷிசொல்லுவார்கள்" என்று சொல்லி பிரசங்கத்தை முடித்தார்.

அவர் இவ்வளவு தைரியமாய்ப் பேசினதினிமித்தம் என்ன நேரிடுமோவென்று அவருடைய சிநேகிதர் வெகுவாய்ப் பயந்துகொண்டிருந்தார்கள். கில்பின் என்பவரோ கொஞ்சமேனும் பயப்படவில்லை. "அவர் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்தப்பார்க்கிறவராயிருந்தால், கிறிஸ்துவின் ஊழியக்காரனல்ல" என்பதைப் பிரசங்கம் பண்ணுகிறதற்கு முன்னமேயே அறிந்திருந்தார். இப்பொழுதும் "தமது ஊழியக்காரரின் எலும்புகளிலொன்றும் முறியாதபடிக்குக் காப்பாற்றுகிறவர்" பேரிலேயே தம் நம்பிக்கையை வைத்திருந்தார். அந்த நம்பிக்கை அவமாய்ப்போகவுமில்லை. எப்படியென்றால், சாப்பாடு ஆனபிறகு கில்பின் போதகர், வீட்டுக்குப் போக கண்காணியாரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொள்ளப் போனதில், கண்காணியார் அவரைப் பார்த்து, "உம்முடைய வீட்டில் வந்து உம்மைக் கண்டு பேசிக்கொள்ள யோசனையாயிருக்கிறேன்" என்றார். அந்தப்படியே அவர் போய் கில்பின் என்பவர் அறையில் பிரவேசித்தவுடனே அவர் கையைப் பிடித்துக்கொண்டு ஆவலோடு சொன்னது; "தகப்பனாகிய கில்பின் என்பவரே, டரஹம் கண்காணியாராயிருக்க என்னைப்பார்க்க நீரே தகுதியுள்ளவரென்றும், உம்முடைய இந்தச் சபைக்குக் குருவாயிருக்க முதலாய் நான் தகுதியுள்ளவனல்லவென்றும் அறிக்கையிடுகிறேன். தகப்பனே, கடந்த காலத்திலுள்ள என் குற்றங்களை மன்னியும். உமக்குச் சத்துருக்களிருப்பதை அறிவேன். ஆகிலும் நான் டரஹம் கண்காணியாயிருக்கிறவரையில் எவர்களாலும் உமக்கு ஒரு தொல்லையும் நேரிடாதென்று நிச்சயித்துக்கொள்ளும்" என்றார்.

கில்பின் போதகருடைய தர்ம குணத்துக்கும் தயாள சிந்தைக்கும் மட்டில்லை. இதுகளை விளக்கிய திருஷ்டாந்தங்கள் அநேகம் எழுதப்பட்டிருக்கிறது. அவரது அதிசயமான தயாள குணத்தினிமித்தம் அவருடைய பெயரும் பிரஸ்தாபமும் தேசமெங்கும் வெகுவாய்க்

கொண்டாடப்பட்டுவந்தது. இரண்டு வாரத்துக்கு ஒருவிசை அவர் வீட்டில் நாற்பது புஷல் கோதுமை இருபது புஷல் வாற்கோதுமை ஒரு பெரிய எருது மற்றும் பல தீன்பதார்த்தங்களும் செலவிடுவார். வியாழக்கிழமைதோறும் ஏராளமான இறைச்சி சமைத்து ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுக்கப்படும். அதன்றியும் அவர்கள் நாடோறும் தங்களுக்குவேண்டிய இறைச்சி ஆணம் அங்கே கொடுக்கப் பெற்றுக்கொள்வார்கள். மிக்கலமஸ் திருநாள்முதல் உயிர்த்தெழுந்த திருநாள் வரையுமுள்ள ஒவ்வொரு ஓய்வுநாளிலும் தம்முடைய சபையார்களுக்கு குடும்பசகிதமாய் விருந்துசெய்து வருவார். எலிசபேத்து இராணிக்குப் பொக்கிஷக்காரனாயிருந்த பர்லேய் என்ற பிரபு இராணி காரியமாய் ஒருவிசை ஸ்கொத்லாந்துக்குப் போயிருந்து திரும்பி வருகிற மார்க்கத்தில் கில்பின் போதகர் வீட்டில் தங்கி அவரது உதாரத்தையும் தர்ம குணத்தையும் கண்ணாரக் கண்டும் அனுபவத்தினால் அறிந்தும் சாக்ஷியிட்டிருக்கிறார். கில்பின் போதகர் வீட்டுக் காரியாதிகளெல்லாம் மகா கிரமமாயும் திட்டவட்டமாயும் நடப்பிக்கப்பட்டதைப் பார்த்து மிகவும் சந்துஷ்டியடைந்தார். அதன்றியும் அவரும் அவருடைய பரிவாரத்தாரும் மகா சிறப்பாயும் பெருந்தகைமையாயும் உபசரிக்கப்பட்டதினாலே, கந்தர்புரி சிரேஷ்ட கண்காணியாருடைய அரண்மனையிலும் இதற்கு மிஞ்சின உதாரத்தையும் உபசாரத்தையுங் காண்பது அரிது என்று அவ்விடத்தை விட்டுப் புறப்படும்பொழுது சொன்னதல்லாமலும் பிற்காலத்தில் மற்றநேக சமயங்களிலும் சொல்லிவந்தாராம்.

கில்பின் போதகர் கடைசியாய் நடப்பித்த முக்கிய காரியம் யாதெனில், தாம் ஸ்தாபித்திருந்த பாடசாலைக்கு சலக்கரணைப்பத்திரம் பெற்றுக்கொண்டதுதான். மேற்படி பாடசாலையின் உபயோகத்துக்காக விவேகமான அநேக சட்டங்கள் எழுதிச் சேர்த்து அதிக வருமானத்துக்கும் வகைசெய்தபின்புதான் இந்தச் சலக்கரணைப்பத்திரம் பெற்றுக்கொண்டது. அவர் கடைசிவரையும் நன்மைசெய்வதிலேயே ஓயாமல் முயற்சியாயிருந்தும், அவருக்கு மிகுந்த அவதூறும் பின்புறணியும் கோளும் நன்றிகேடும் நேரிட்டதில் அவர் சகித்த கஸ்தியும் வியாகுலமும் கொஞ்சமல்ல. அதிக வயசினாலே தள்ளாடி வருகிற இந்தக் காலத்தில் மேற்படி துன்பம் அவருக்குச் சுமப்பதற்கரிய பாரமபோலிருந்தது. கிறிஸ்துமார்க்கப் பெலனும் ஆறுதலும் அவருக்குத் திரளாய்க் கிடைத்திராதிருக்குமாகில் இந்தப் பாரத்தினால் அவர் முற்றும் மனஞ்சோர்ந்து முயற்சியில் தளர்ந்துபோயிருப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. விருத்தாப்பியத்தில் அவருக்கு நேரிட்ட ஒரு ஆபத்தினாலே அவருடைய தேகம் பலட்சயப்படவும் சுகம் குன்றிப்போகவும் ஏதுவாயிற்று. அதென்னவென்றால், டரஹம் நகரத்துச் சந்தைவெளியில் அவர் நடந்துபோகையில், ஒரு துஷ்ட எருது மூர்க்கத்தோடு அவர்மேல் பாய்ந்து கீழே விழுத்திவிட்டதுதான். அப்புறம் அதினாலுண்டான காயங்களாறி அவர் ஒருவாறு சுகப்பட்டு வெளியே நடமாடித்திரிந்தபோதிலும், பலட்சயப்பட்டிருந்த அவருடைய தேகம் முற்றும் சொஸ்தமடையாமல் நாளுக்கு நாள் பெலவீனப்பட்டுக்கொண்டே வந்தது. 1583-ம்௵ பெபுருவரி மாதத்தில் பலவீனம் மேலிட்டதினால், அவர் தமது அந்தியம் சமீபித்துவிட்டதென்று உணர்ந்துகொண்டு, தம் சிநேகிதர்கள், மாணாக்கர்கள், வேலைக்காரர்கள் முதலிய யாவரையும் தம் படுக்கையண்டை வரவழைத்து அவரவர் ஸ்திதிக்கும் சீருக்கும் தக்கதாக அவரவர்களுக்கு பட்சத்தோடும் கன

பத்தியோடும் வெகு புத்தி போதனை சொன்னதுமல்லாமல், மோட்ச மகிமையடைவோமென்கிற நம்பிக்கை ஒன்றே கடைசியில் மெய்ச் சமாதானத்தைக் கொடுக்கக்கூடியது என்று வற்புறுத்திச் சொல்லிக் காண்பித்தார். அப்பால் 1583-ம் ௵ மார்ச்சு ௴ 4௳ அறுபத்தாறு வயசுள்ளவராய் தேகவியோகமானார். அவருடைய பிரேதம் அவர் திவ்விய ஊழியம் நடப்பித்த ஹாட்டன் என்னும் ஊர்த் தேவாலயத்திலேயே க்ஷேமிக்கப்பட்டது. அவரது அஞ்சா வைராக்கியத்தினாலும் அளவில்லாத் தர்ம சிந்தையினாலும், கிறிஸ்தமார்க்கத்துக்கும விசேஷமாய் புரோட்டெஸ்தாந்து கிறிஸ்து சபைக்கும், அலங்காரமான ஆபரணமாயிருந்தார். கிறிஸ்தமார்க்கம் இருக்கும் வரையில் உலகமுடிவுபரியந்தமும் இவ்விசேஷங்கள் அவர் பெயருக்குப் புகழ்ச்சியாய்க் கொண்டாடப்பட்டு வரும் என்பதற்குச் சந்தேகமில்லை.

The Cities of Refuge.

அடைக்கலப் பட்டணங்கள்.

முற்பகையின்றி கைப்பிசகாய்ப் பிறனைக்கொன்றுபோட்ட மனுஷன், விசாரணையில் குற்றவாளியென்றாவது குற்றமற்றவனென்றாவது விளங்கும்வரையில், பழி வாங்குகிறவன் கையில் அகப்படாதபடி தப்பியோடி அடைக்கலம் புகுந்துகொள்ளும்பொருட்டு மோசேயினால் மூன்று பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. (எண்ணாகமம் 35: 24-28; உபாகமம 4: 41-43)-மூன்றாயிருந்தது அப்புறம் ஆறாயிற்று. (யோசுவா 20: 7-9.) இவ்வாறு யோர்தானுக்கு இப்புறத்தில் மூன்றும் அப்புறத்தில் மூன்றுமாக ஆறு பட்டணங்கள் அடைக்கலப் பட்டணங்களாக நியமிக்கப்பட்டவைகள். கைப்பிசகாய்க்கொன்றவர்கள் தடையின்றி ஓடித்தப்பிக்கொள்ளத்தக்கதாக அப்பட்டணங்களுக்குப் போகும் மார்க்கங்களைக் கூடிய அளவு செவ்வையாய் வைத்திருக்கவேண்டுமென்று இஸ்ரவேலருக்கு தேவன் கண்டிப்பாய்க் கற்பித்திருந்தார். மேற்படி மார்க்கங்கள் முப்பத்திரண்டு முழ அகலமாயிருக்கவேண்டும். ஆறுகள் குறுக்கிட்டால் அவைகளால் ஓடுகிறவர்களுக்குத் தடை நேரிடாதபடிக்கு பாலங்கள் கட்டியிருக்கும். குறுக்குப்பாதைகளில் திகைப்புண்டாகாமல், அடைக்கலப் பட்டணத்துக்குப்போகும் பாதையைக்காண்பிக்கும் கை காட்டி மரம் நிறுத்தி அதில் அடைக்கலம் என்று வரைந்தும் வைத்திருக்கும். கைப்பிசகாய்க் கொலையுண்டவனுக்குக்கிட்டின இனத்தான் பழிவாங்குகிறவன், கொலைசெய்தவன் அடைக்கலப்பட்டணங்கள் ஒன்றில் பிரவேசிக்கிறதற்குமுன் அகப்பட்டுக்கொள்வானாகில், பழிகாரன் அவனைக் கொன்றுபோடலாம். அவன் பட்டணத்துக்குள் பிரவேசித்தபின்பு அவனைத் தொடப்படாது. அவன் சுகமாயிருப்பான். கொலையுண்டவனுக்காக அவனுக்குக்கிட்டின இனத்தான் எவ்விதத்திலும் பழிவாங்கவேண்டுமென்பது தற்காலத்திலும் கிழக்கத்தித் தேசத்தார்களுடைய அபிப்பிராயம். மகமது எழுதிய கோரான் வேதத்திலும் பழிவாங்குதல் விலக்கப்படவில்லை. சீர்கெட்ட இருதயத்தில் மதர்த்து வளருகிற களைதான் இது. பவுல் அப்போஸ்தலன் அக்காலத்தில் நாகரீகமடைந்திருந்த அஞ்ஞானிகளுடைய குணம் நடத்தைகளை விவரிக்கிற இடத்தில், அவர்களை

"வன்மம் நிறைந்தவர்கள், இரக்கமில்லாதவர்கள்" என்கிறார். எக்காலத்திலும் இயற்கையான மனுஷனுடைய குணம் இதுவே. தேவாவியின் அருளால் மனுஷன் மறுஜெனமம் அடைந்த பின்புதான் வன்மத்தையும பகையையும் வெறுத்துத்தள்ளவும் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளவும பிறனுடைய குற்றத்தை மன்னித்து விடவும் கற்றுக்கொள்ளுகிறான்.

கைப்பிசகாய்க் கொலைசெய்தவன் பழிகாரன் கைக்குத்தப்பி அடைக்கலப் பட்டணங்களிலொன்றில் பிரவேசித்துக்கொண்டபோதிலும், அப்பட்டணத்து அதிகாரி பழி செய்தவனை மேற்படி பழி நடந்த இடத்துக்குக்கூட்டிக்கொண்டுபோய், விசாரணை செய்யவேண்டியது. விசாரணை கண்டிப்பாய் நடந்ததின்பேரில் வன்மத்தினாலாவது பகையினாலாவது அப்பழி நடந்ததல்லவென்று துலாம்பரமானால், அவன் மரணாக்கினையின்றித் தப்பிக்கொள்ளுவான். ஆனாலும் அக்காலத்துப் பிரதான ஆசாரியன் மரிக்கும்வரையில் அவன் அவ்வடைக்கலப்பட்டணத்துக்குள்ளேயே இருக்கவேண்டியது. எப்பொழுதாவது பட்டணத்துக்கு வெளியே காணப்படுவானாகில் அவனைக் கொன்றுபோடலாகும். முற்பகையினாலும் வன்மத்தினாலும் மேற்படி பழி நடந்ததென்று விசாரணையில் தெரிய வருமாகில், பழி செய்தவன் அடைக்கலப்பட்டணங்களொன்றில் புகுந்துகொண்டவனென்றாலும், மரண ஆக்கினையடைவான். (உபாகமம் 19: 11.) தேவன் இந்த ஏற்பாடு செய்த நோக்கம் யாதெனில், மனுஷசீவன் எவ்வளவோ அருமையானதென்றும், கொலைபாதகம் எவ்வளவாய் அருவருக்கப்படத்தக்கதென்றும், உணர்த்தும்படியாகத்தான். இது மகா இரக்கமும் ஞானமுமான ஏற்பாடு. தேவனுடைய பூர்வீக சனங்களாகிய இஸ்ரவேலரின் நிலைமைக்கு இது மிகவும் ஏற்றது.

கைப்பிசகாய்க் கொலைசெய்தவர்களுக்காக ஆதியில் ஏற்படுத்தப்பட்ட அடைக்கலப்பட்டணங்கள் பிற்காலங்களில் அடங்காத துஷ்டரும் கொடிய பாதகர்களும் தப்பிக்கொள்ளுகிறதற்கு உபயோகப்படுத்தப்பட்டன. பிராங்கிலின் என்ற ஒருவர் இவ்விஷயத்தைப்பற்றிச்சொல்வது, "பாரசீகத்தில் ஷிராஸ் நகரம் பன்னிரண்டு வட்டங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வட்டத்துக்கும் ஒவ்வொரு பரிசுத்தவான் காவலாளனாயிருந்து பரிபாலித்து வருகிறதாக சனங்களுடைய எண்ணம். பாரசீகர் வெள்ளி இரவு என்று சொல்லும் வியாழன் இரவு தோறும், அந்தந்தப் பள்ளிவாசற்காப்போர் அந்தந்த வட்டத்தைப் பரிபாலிக்கும் காவலாளனான பரிசுத்தவானின் விர்த்தாந்தங்களை ஓதுவது வழக்கம். இவ்வாறு செய்துவருவதினால் அவ்விடத்திற்குடியிருக்கும் சனங்கள் விரும்பும் நன்மைகளெல்லாம் அவர்களுக்கு அருளப்படுகிறதோடு, அவர்கள் பாவங்களும் மன்னிக்கப்படுமாம். பாரசீகர் இந்தப் பரிசுத்தவான்களைக்குறித்து வெகுவாய் பேசிக்கொள்ளுகிறதும் அவர்கள் பேரில் அடிக்கடி ஆணையிடுகிறதுமன்றி, துன்பம் துக்கம் வறுமை வியாதி முதலிய ஆபத்துக்கள் நேரிடும் சமயங்களிலெல்லாம அதுகளை நீக்கும்பொருட்டு அவர்களைப் பிரார்த்தித்தும், தங்களுக்குக் காரியசித்தியும் மற்றும் அனுகூலங்களும் உண்டாகும்பொழுதெல்லாம் அவர்களுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தியும் வருவார்கள். மேற்படி பரிசுத்தவான்களின் பின்னடியார் கோரிகளெல்லாம் குற்றவாளிகளுக்கு அடைக்கல ஸ்தானங்களாக உதவுகின்றன. ஷிராஸ் நகரத்திலுள்ள அடைக்கல ஸ்தானங்களிலெல்லாம் மகா பரிசுத்தமானதென்று கொண்டாடப்படுகிறது ஷா

சீராங் என்று பெயர்கொண்ட கோரிதான். அதைப் பரிசுத்தகுலைச்சலாக்க எவர்களும் துணியார்கள். எப்பேர்பட்ட கொடிய பாதகர்கள் அதில் அடைக்கலம் புகுந்தாலும் அவ்விடத்துக் குடிகள் மாத்திரம் ஆட்சேபிக்காத பக்ஷத்தில், சத்துராதிகள் கைக்கு நீங்கிப் பாதுகாக்கப்படுவார்கள்" என்பதே.

இஸ்பாகான் நகரத்தைப்பற்றி விவரித்துக்கொண்டுவருகிற இடத்தில் டெல்லிவாலி என்ற ஒருவர் அடியில் வருமாறு எழுதியிருக்கிறார். "ஒருவன் எவ்வளவு பெரும் பாதகத்தை நடப்பித்திருந்தாலும், அவன் இராசாவின் அரண்மனைக்குள் ஓடி அடைக்கலம் புகுந்துகொள்வானாகில் நியாயாதிபதிகள் முதலாய் அவனைத் தொடப்படாது. இராஜஅரண்மனை விசேஷித்த அடைக்கல ஸ்தானமாம். தற்சமையத்திலும் ஒரு பெரிய மனுஷன் அங்கேயிருக்கிறான். அவன் துரைத்தனத்துக்கு விரோதமாய்ச் செய்த ஓர் சதியோசனையினிமித்தம் இராஜா அவனுக்கு மரணாக்கினைசெய்ய ஆயத்தமாயிருக்கையில், அவன் அதிசீக்கிரம் இராஜ அரண்மனைக்குள் புகுந்துகொள்ளவே மோசத்துக்குத் தப்பிச்சுகமாயிருக்கிறான். ஒலிமுக வாசலுக்கு வெளியே ஒரு அடி எடுத்துவைத்தாலும், எவ்வகை விசாரணையுமின்றி தட்சணமே கொன்றுபோடுவார்கள். இராஜ அரண்மனைக்குட்போக எவர்களுக்கும் தடையில்லை. அவர்கள் வாசற்படியை முத்தஞ்செய்துவிட்டுக் கடந்தவுடனே, அடைக்கலம்பெற பாத்தியஸ்தராகிறார்கள்."

ஹாமில்ற்றன் என்ற வேறொருவரும் சொல்வது, "சீயம்தேசத்தில் எந்தபிராணியாகிலும் ஓர் தேவஸ்தானத்தின் எல்லைக்குள் வந்துவிட்டால் ஒருவரும் அதைத்துரத்தவும் அதற்கு எவ்வகையான கொடுமை செய்யவும்படாது. சீயம் தேசத்தில் குடியிருந்த ஒரு பொர்த்துக்கீஸ்காரனை நான் அறிவேன். அவன் ஓர் தேவஸ்தானத்தின் ஓரத்தில் நின்ற மரத்திலிருந்த ஒரு காகத்தை துப்பாக்கியினாற் சுட்டுக்கொன்றுபோட்டான். அதைக்கண்ட பூசாசாரிகள் பெருங்கூட்டமான சனங்களை எழுப்பிவிட்டு இவர்கள் அந்த ஏழை மனிதனுடைய கைகளையும் கால்களையும் முறித்து செத்துப்போனானென்று வெளியிலே போட்டுவிட்டார்கள். அப்பால் சில கிறிஸ்தவர்கள் தற்செயலாய் அங்ஙனம் வந்து அவனைக்கண்டு ஒரு படகில் வைத்து பிராஞ்சுதேசத்தானான ஒரு ரணவைத்தியனிடத்திற்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இவன் அவன் எலும்புகளை எடுத்துவைத்துக்கட்டி அவனைச் சொஸ்தப்படுத்தினான்" என்பதே.

பலிப்பீடங்கள், தேவஸ்தானங்கள், கோரிகள், பிரஸ்தாபமடைந்த பெரியோர் பிரதிமைகள், ஞாபகஸ்தம்பங்கள், இவைகளெல்லாம் பூர்வகாலந்தொடங்கியே குற்றவாளிகளுக்கு தண்டனைக்குத் தப்பிக்கொள்ளத்தக்க அடைக்கலஸ்தானங்களாக உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணமாக எபேசுப்பட்டணத்திலிருந்த தியானாள்தேவி கோவில் கடன்காரருக்கு அடைக்கலமாகவும், தேசியுஎன்பவன் கோரி அடிமைகளுக்கு அடைக்கலமாகவுமிருந்தன. ரோமருக்குள் ரோமுலுஸ் என்பவன் ரோமாபுரியைக் குடியேற்றும் நோக்கமாய் பலத்தீன் கப்பிததோலீன் என்ற மலைகளுக்கு இடையில் பேர்போன ஓர் அடைக்கலஸ்தானத்தை ஸ்தாபித்தான். சகலவிதமான நாடோடிகள் வீணர்கள் போக்கிரிகள் அடிமைகள் குற்றவாளிகள் கடன்காரரெல்லாம் அதற்கு ஓடி அடைக்கலம் பெற்றுவந்தார்கள்.

பூர்வீகத்திலிருந்த அஞ்ஞானிகள் சிலர் அவபக்தியினாலும் மற்றவர்கள் பட்டணங்களைக்குடியேற்றும் நோக்கமாயும் மகா சண்டாள

ருக்கும் கொடிய படுபாதகர்களுக்குங்கூட அடைக்கலங்கொடுத்து தண்டனைக்கு அவர்களை தப்புவித்துவிடுவது வழக்கம். இவ்விதமாகவே இவ்வகையான சனங்களைக்கொண்டு தேபே அத்தேனே ரோமை முதலிய நகரங்கள் குடியேற்றப்பட்டன. பூர்வகவுலர் காலத்தில் லீயான்ஸ் வீயனாப்பட்டணங்களிலும் அடைக்கலஸ்தானங்கள் ஏற்பட்டிருந்ததாக வாசிக்கிறோம். ஜர்மனிதேசத்திலுள்ள சில பட்டணங்கள் குற்றவாளிகளுக்கு அடைக்கலங்கொடுக்கிற அந்தப்பூர்வ சுதந்தரத்தை நாளது வரையும உடையவைகளாயிருக்கின்றன.

ஹொனோரியுஸ் தேவடோசியுஸ் என்ற இராயர்களால் கிறிஸ்தமான கோவில்களுக்கும் இந்த சுதந்தர சலாக்கியங்கள் அளிக்கப்பட்டன. அதன்பேரில் கண்காணிமார்களும் சந்நியாசிகளும் தங்களுக்கு இஷ்டமான ஓர் இடத்தை வளைந்துகொண்டு அதற்குள் லௌகீக அதிகாரம் செல்லாதபடிக்கு இடம் பண்ணிக்கொண்டார்கள். அப்புறம் சிறிதுகாலத்துக்குள் சந்நியாசி மடங்கள் அரண்களுக்கொப்பாகிவிட, பெயர்போன துஷ்டர்களும் சண்டாளரும் அதுகளில் அடைக்கலம் புகுந்துகொண்டு லௌகீக அதிகாரத்தைக் கொஞ்சமென்கிலும் சட்டைபண்ணாமல் தண்டனைக்கு முற்றுந் தப்பிக்கொண்டார்கள். இந்தச்சலாக்கியங்கள் கடைசியில் கிறிஸ்தமான கோவில்களுக்கும் கோவிற் பிராகாரங்களுக்கு மாத்திரமல்ல, கண்காணிமார் வீடுகளுக்கும் அளிக்கப்பட்டது. இதுகளில் அடைக்கலம்பெற்ற குற்றவாளிகளுக்கு உயிருக்கு மோசம் வராதென்பதாகவும் குற்றம் முற்றும் மாப்புச்செய்யப்படுவதாகவும் அதிகாரப்பத்திரம் கொடுத்தாலேயன்றி அவர்களை வெளியே விடமாட்டார்கள்.

ஜர்ஸி என்னும் தீவின் சரித்திரத்தை எழுதின ஒருவர் அடியில் வருமாறு குறிப்பித்திருக்கிறார். "அங்குள்ள பெரும்பாதைகள் முற்காலத்தில் பற்பல அசலமுள்ளவைகளாயிருந்தன. இதைக்குறித்துக் கண்டிப்பான ஏற்பாடுகளுமுண்டு. மேற்படி பாதைகளில் ஒன்றுக்குப் பெர்குவேஜ் என்று பெயர். இந்த விசேஷித்த பாதை ஒவ்வொரு சேகரத்துக்கும் ஒவ்வொன்றுண்டு. இது விசேஷித்த ஓர் நோக்கமாயேற்படுத்தப்பட்டிருந்தது. அது கோவில் வாசலில் தொடங்கி நேரே சமுத்திரக்கரைமட்டும் செல்லும். அது என்ன நோக்கமாயேற்படுத்தப்பட்டிருந்ததென்றால், கொலைபாதகம் செய்து அந்தந்தக்கோவிலில் அடைக்கலம் புகுந்திருந்து அப்பால் தேசாந்தரம்போகத் தீர்ப்புப்பெற்ற குற்றவாளிகள் அபாயமின்றிச் சுகமே கடற்கரைபோய்ச் சேரும்படியாகத்தான். பெர்குவேஜ என்ற மேற்படி பாதையைவிட்டு வலது இடது புறம் விலகிப்போவார்களாகில், அவர்கள் பிடிபட்டு சட்டப்படி மரணாக்கினையடைய ஏதுவாவார்கள். இந்தச்சலாக்கியபாதைகள் திருச்சபை சீர்திருத்தமடைந்த காலத்தில் நீக்கப்பட்டன" என்பதே.

Notes on Numbers.

எண்ணாகம வியாக்கியானம்.

முகவுரை.

முதல் (4) அதிகாரங்களிலும் 26ம் அதிகாரத்திலும், இஸ்ரவேலர் எண்ணப்பட்ட சங்கதி அடங்கியிருப்பதால், இவ்வாகமத்துக்கு எண்ணாகமம் என்ற பேர் வந்தது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷத் துவக்கத்தில், அவர்கள் முதல்விசையாக சீனாய் பர்வதத்தில் எண்ணப்பட்டார்கள். இதற்கு (38) வருஷத்துக்கு பிற்பாடு அவர்கள் கானான்தேசத்தில் பிரவேசிக்கிறதற்கு சற்று முன்னதாக மோவாப்தேசத்தில் இரண்டாவதுவிசை எண்ணப்பட்டார்கள். இப்படி மறுபடி குடிமதிப்புச் செய்யப்பட்டதையும், அது செய்யப்பட்ட வகையையும் கவனித்தால், அந்தந்த இஸ்ரவேலனுடைய வம்ச அட்டவணையைத் திட்டமாய் எழுதும்படியான நோக்கமாய்ச் செய்யப்பட்டதென்று விளங்கும். மேலும் இருசாதிக் கலப்பில்லாத எபிரேய குடும்பங்கள் இன்னின்னது என்று குறிப்பித்து வித்தியாசப்படுத்துவதினாலே பொல்லாத விக்கிரகாராதனைக்காரரோடு சம்பந்தங் கலவாதபடி தடுக்கிறதாயுமிருந்தது. அல்லாமலும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட ஆபிரகாமின் வித்தாகிய மேசியாவின் வம்ச வழியைக் காட்டும்படி முக்கிய நோக்கமாய் இது நடந்தது.

இப்படி இரண்டுவிசை எண்ணப்பட்டதினாலே வேறே பிரயோசனங்களுமுண்டு. இஸ்ரவேலர் அவிசுவாசத்தினாலும் கோழைத்தனத்தினாலும் வாக்குத்தத்த தேசத்தில் எல்லாரும் பிரவேசியாமல் போனதும், (38) வருஷகாலமாய்த் தாமதப்பட்டதும், அடிக்கடி தண்டிக்கப்பட்டதும், இவர்கள் துவக்கத்தில் பெருக்கமான ஜனங்களாயிருந்தாலும் (38)ம் வருஷக் கடைசியில் குறைந்துபோனதும் ஆக இந்தச் சம்பவங்களை, இந்த இரண்டு குடிமதிப்புக் கணக்குகளையும் ஒத்துப்பார்ப்பதினாலே திருஷ்டாந்தமாய் அறிந்துகொள்ளலாம். (26: 2. வியா.)

இவ்வாகமத்தில் இரண்டு காரியங்களைப் பார்க்கிறோம். 1-வது, தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலருக்கு சர்வவல்லவராலே வனாந்தரத்தில் கிடைத்த நீங்காத பராமரிப்பு 2-வது இஸ்ரவேலருடைய முறுமுறுப்பு, துரோகம், இவற்றால் அவர்கள் வருவித்துக்கொண்ட தேவகோபம் ஆகிய இவைகளே. எபி. 3: 19. 1 கொரி. 10: 1—11.

இவ்வாகமம் ஐந்து பிரிவுள்ளது

I. இஸ்ரவேலர் முதலாவது எண்ணப்பட்டது.

அவர்களுடைய வம்ச வரிசைப்படி பிரிக்கப்பட்டது. கூடாரமுறை. லேவியருடைய தொகையும் தொழிலும். முதற்பேறுகள் மீட்கப்பட்டது. (அதி. 1—4.)

II. பலவகை பிரமாணங்களும் ஏற்பாடுகளும்.

5 அதி. கூடாரசுத்திகரிப்பு.

6: 1—21. நசரேயருக்கடுத்த சட்டங்கள்.

22—27. ஆசீர்வாத முறை.

7: பிரபுக்களுடைய காணிக்கைகள்.

8: லேவியரின் அபிஷேகம்.

9:—10: 1—10. பஸ்கா, மேகத்தூண், அக்கினித்தூண். வெள்ளிப் பூரிகைகள்.

III. இஸ்ரவேலர் சீனாயிலிருந்து கானான்தேச எல்லைவரையும் பிரயாணப்பட்டது.

10: 11—36. சீனாயைவிட்டுப் புறப்பட்டது.

11: மன்னாவை வெறுத்து, இறைச்சியின்பேரில் இச்சைப்பட்டு, தண்டிக்கப்பட்டது.

12: ஆரோனும் மிரியாமும் மோசேக்கு விரோதமாய்ப் பேசினது

13: வேவுகாரர்.

14: சனங்கள் கலகஞ்செய்தது. சாபம்.

IV. இஸ்ரவேலர் கானான்தேச எல்லையிலிருந்து மாறித் திரும்பினதுமுதல் ஏறக்குறைய (37) வருஷங்களுக்குப் பிற்பாடு மறுபடி அங்கே போய்ச் சேர்ந்ததுவரையுமுள்ள சம்பவங்கள்.

15: பல கட்டளைகள்.

16: கோராகு வகையறா கலகமும் மரணமும்.

17: 18: ஆரோன் கோல் துளிர்த்தது முதலியது.

18: தீட்டுக்கழிக்கும் ஜலம்.

V. பிரயாணமுடிவு. கானான்தேசத்தைப் பிடிக்க ஆரம்பித்தது 20. 36. அதி.

க. அதிகாரம்

லேவியரைத்தவிர இஸ்ரவேலர் எண்ணப்பட்டது.

2. இப்போ எண்ணப்பட்ட கணக்கு (46 வா) முன் கூட்டிச்சொல்லப்பட்டது. (யாத்தி. 38: 26.) 20. வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் தொகையைக் கவனிக்கும்போது, இஸ்ரவேலர் எல்லாருடைய தொகை (20) லட்சம்போல் இருக்கும் என்று நிதானிக்கலாம். எண்ணப்பட்ட புருஷர், யுத்த புருஷராயும் வேலைசெய்யத் திறமையுள்ளவர்களாயுமிருந்தார்கள்.

21. நூற்றுக்கணக்காக எண்ணப்பட்டிருக்கிறார்கள். ஒரே ஒரு ஐம்பது மட்டும் வருகிறது. ஆகையால் ஐம்பதுக்குக் கீழ்ப்பட்ட தொகை விட்டுவிடப்பட்டிருக்கும் என்று நினைக்கலாம்.

51. "அந்நியன்" லேவியன் அல்லாதவன் என்று அர்த்தம். 3: 10, 38. 18: 22 1 சாமு. 6: 19. 2 சாமு. 6: 6, 7.

53. "கடுங்கோபம்" அதாவது தேவகோபம் ‡ பாவத்தைத்தடுப்பது, தேவகோபத்தைத் தடுப்பதற்கு ச்சரி.

படிப்பினை.

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எவ்விதமும் நிறைவேறும்.—நம்மைப் பராமரித்துப் பாதுகாக்கிறவர் கர்த்தரே.—எத்தனை ஏராளமான பிரேதங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயின. தேவனை நம்பாமல் போகிறது மிகவும் பயங்கரமான பாவம். கிறிஸ்துநாதரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் பிழைப்பார்கள்.

உ. அதிகாரம்

கோத்திரங்கள் கூடாரம்போட்ட முறை.

2. தேவாலயக்கூடாரத்தைச்சூழ மற்றவர்கள் கூடாரம் அடிக்கும்படி கற்பிக்கப்பட்டார்கள். தேவன நம்மெல்லாருக்கும் எல்லாமா

கிறது நியாயம். மேசியா யூதாக்கோத்திரத்தில் தோன்றுவதினாலே அவன் கோத்திரம் விசேஷிக்கப்பட்டது.

படிப்பினை.

தேவன் வனாந்தரத்தில் கூடாரம் அடிக்க அவரவருக்கு இடங் குறித்ததுபோல, நமக்குக் குடியிருப்பெல்லைகளையும் உத்தியோக வரிசையையும் அவரேகுறிக்கிறார். ஆகையால் நம்முடைய வீட்டையும் அந்தஸ்தையும் குறித்து முறையிடாமலும், நமக்குக் குறிக்கப்பட்டதற்கு மேலாக யாதொன்றை இச்சியாமலும் மனரம்மியமாய் இருக்கவேண்டியது நமது கடமை. நாம் வனாந்தரத்தில், குடிசையில், தரித்திரத்திலிருந்தாலும், நாம் முறுமுறுக்கவேண்டியதில்லை. நமக்கு கானான் தேசம்மட்டும் கிடைத்தால் போதும்.—இந்த இஸ்ரவேலரைப் போல்கிறிஸ்தவர்கள் ஐக்கியமாய்க் குடியிருக்கவேண்டும்.—நம்முடைய குடியிருப்பைப்போல் நம்முடைய பிரேதக்குடியிருப்பும் தேவனாலே யேகுறிக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் கிறிஸ்துநாதருக்குத் தெரியும்.

---

௩. அதிகாரம்.

ஆசாரியரும் லேவியரும் தெரிந்துகொள்ளப்பட்டது.

1. லேவியருடைய வம்சவரலாற்றைக் குறித்துக் கவனிக்கவேண்டியதாவது;

(1) ஆரோனுடைய வம்சவரிசை ஆசாரிய வரிசையில் முதலில் வருகிறது. மோசேயினுடைய குமாரர் லேவியராய்மட்டுமிருந்தபடியினாலே அவர்கள் பேர் சொல்லப்படவில்லை.

(2) ஆண்பிள்ளைகளெல்லாரும் தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்யப்பட்டவர்களாக எண்ணப்படவேண்டும். ஒருமாசத்துக் குழந்தை முதல் எண்ணுவார்கள். பிற்பாடு மூன்றிலோர் பங்குப் பேர் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலைசெய்ய லாயக்குள்ளவர்களாவார்கள். (4: 47, 48.)

(3) லேவிக்கோத்திரம் அவர்களுடைய வம்சங்களின்படியே கெர்சோனர் கோகாத்தியர், மெராரியர் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டார்கள். அந்தந்த வம்சத்தாருக்கு வெவ்வேறு தொழில்களும் குறிக்கப்பட்டது.

(4) இந்தக் கோத்திரம் வேறெந்தக் கோத்திரத்தைப்பார்க்கிலும் சிறிதாயிருந்தது. அந்தக் காலத்திலிருந்த தலைச்சன்களுடைய தொகைக்கும் சரிவரவில்லை.

25. "வாசஸ்தலமும்" இதின் மூடிகளை என்று அர்த்தம். ஏனென்றால் பலகைகள் மெராரியரைச்சேர்ந்தது.

27. கோகாத்தியருக்குள் மோசேயின் குமாரரும் சேர்ந்தவர்கள். பரிசுத்த பணிமுட்டுகளை எடுப்பது இவர்கள் வேலை. (4: 24, 28)

39. லேவியர் தொகை (22,300) 22: 28, 34. இதில் (300) பேர் தலைச்
சன்களாயிருக்கலாம். 22,000. ல் லேவியருடைய தலைச்சன்கள் (30)) பே
ரும் சேரவில்லை என்றும், லேவியருடைய தலைச்சன்கள் மற்றவர்களைப்
போல தேவனுக்குப் பிரதிஷ்டையாய்ப் போய்விட்டதினாலே மற்றவர்
களுடைய தலைச்சன்களுக்குப் பதிலாக ஒப்புக்கொள்ளப்படுவது சரி
யல்ல என்றும் அநேகர் நினைத்திருக்கிறார்கள். வசு. (43, 46)

41. லேவியருடைய மிருகஜீவன்களை அவர்களை விட்டெடுக்கவும் கூடாது, பலியிடவும் கூடாது. ஆனால் லேவியரும் அவர்கள் மிருக

ஜீவன்களும் தேவனுக்கென்று படைக்கப்படவேண்டும். அவர்கள் தேவபணிவிடைக்காரராயிருந்ததினாலே, அவர்களுடைய மிருகஜீவன்கள் அவர்களுடைய உபயோகத்துக்காகக் கொடுக்கப்பட்டது.

48. "திரவியத்தை" இது சம்பந்தமாய். 1 பேது. 1: 18. சொல்லப்படுகிறதென்று தோன்றும.

படிப்பினை.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய லேவியன்போலிருக்கிறான். கிறிஸ்துநாதருடைய சபையில் அவனவனுக்குக் குறிக்கப்பட்ட வேலையுண்டு.

---

௪ அதிகாரம்.

லேவியருடைய உத்தியோகம்.

3. "முப்பது" 8: 24 ல் (25) வயது என்று சொல்லியிருக்கிறதே என்றால், (25) வயதுமுதல் (30) வரையும் லேவியர் தங்கள் வேலைகளைப் படிக்கிறவர்களாய் அற்ப சொற்பவேலைகளைமட்டும் செய்து வந்தார்கள் என்று தோன்றும். தாவீது ராசாவின் காலத்தில் (20) வயதில் ஆரம்பித்தார்கள். 1 நாளா. 23: 24—32.

"ஐம்பது" (50) வயதுக்குமேல் அவர்கள் பாரமான வேலைகளைச் செய்யாமல் அற்ப சொற்பவேலைகளைப் பார்த்துவருவார்கள்.

10. "தண்டிலேகட்டி" காவட்டுப் போடும்படியாக என்று தோன்றும். (13: 23)

15. மகா பரிசுத்த ஸ்தலத்தை மேகம் மூடியிருக்கும்பொழுது மாத்திரம் லேவியர் அதற்குள்ளே பிரவேசிக்கக்கூடாது என்று கட்டளையிருந்தது.

"மூடி" பரிசுத்த பணிமுட்டுகள் பத்திரமாயும், மரியாதையாயும், மறைவாயும் இருக்கும்படி இப்படி மூடப்பட்டது. இதினாலே பரிசுத்தகாரியங்களைக்குறித்து பயபத்தியாயிருக்கவேண்டுமென்பதும், பழய உடன்படிக்கை மறைவானது என்பதும் காட்டப்பட்டது.

18. அதாவது, அவர்கள் பரிசுத்த பணிமுட்டுகளைத் தொட்டு அதினால் அவர்கள் அழிந்துபோகும்படி நீங்கள் இடங்கொடாதிருங்கள் என்றர்த்தம்.

33. இஸ்ரவேலர் பிரயாணம்பண்ணுகையில் கோகாத்தியர்: உடன்படிக்கைப்பெட்டி, பரிசுத்த ஸ்தலத்தின் பாத்திரங்கள், வெண்கல பலிபீடம் முதலான பரிசுத்த பணிமுட்டுகளைச் சுமக்கவேண்டும். கெர்சோனர்: திரைகள், தோரணங்கள் முதலான புடைவைச் சாமான்களைச் சுமக்கவேண்டும். மெராரியர்: தூல்கள், பலகைகள், தாழ்ப்பாழ்கள் முதலிய பருமனும் பளுவுமான சாமான்களை ஏற்றிக்கொண்டு போகவேண்டும். தங்கள் வழக்கமான பணிவிடையில் அவரவர் கண்பார்த்து காபந்துபண்ணிவந்த சாமான்களையே அவரவர் கொண்டுபோனார்கள். இதற்கு அநேகம்பேர் வேலைகொள்ளப்பட்டபடியினாலே ஆசரிப்புக்கூடாரத்தைச் சீக்கிரம் எடுப்பிக்கவும், இறக்கவும் ஏதுவிருந்தது.

44. மெராரி வம்சம் மற்றிரண்டையும் பார்க்கிலும் சிறிதாயிருந்தாலும், வேலைசெய்யத் திராணியுள்ளவர்கள் அநேகர் இருந்தார்கள்.

படிப்பினை.

தேவபணிவிடைக்காரருக்கு எவ்வளவோ பயபக்தியும், வணக்கமும், விவேகமும் சுறுசுறுப்பும் இருக்கவேண்டும்.—நாம் பழயஏற்

பாட்டின் மறைவு திரைக்குள்ளிருக்கிறவர்களல்ல.—நாம் எங்கே போனாலும் நம்முடைய மார்க்கத்தையும் கூடக்கொண்டுபோகவேண்டும். நம்மைக் கிறிஸ்தவர்களென்று வெளிப்படுத்தவும் வேண்டும்.

ருஷிய துர்க்கிய யுத்தம்.

நவம்பர். 9. ஐரோப்பாவிலும் ஆசியாவிலுமிருந்துவந்த யுத்த சமாசாரங்கள் முழுவதுந் துருக்கியர் பட்சத்துக்கு எதிரிடையாகவேயிருக்கிறது. முக்ற்றார் பாஷா எர்சரும் என்ற இடத்தில் முறியடிக்கப்பட்டான். அந்த இடத்தில் ருஷியர் வாசம்பண்ணுகிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பிளவினா முற்றிலுமுற்றிக்கையிடப் பட்டிருக்கிறது. ஆஸ்மன் பாஷா ஜோபியாவோடு நடப்பித்துக்கொண்டுவந்த சமாசாரப்போக்கு நின்றுபோய்விட்டது. பிரசண்ட மாருதமான உறைந்த பனியும் மழையும் ஷிப்க்காவைக் கடந்துபோகாதபடிக்கு இடையூறாகவிருந்தது. பக்கவழியான வேறொரு சமாசாரத்தால் துருக்கியர் அந்த நகரத்தை விட்டுவிட்டதாகத்தோன்றுகிறது.

டிசம்பர். 2. ருஷியர் தானியூப் நதியின்மேல் நாலாவது பாலத்தைக்கட்டிமுடித்து இன்னும் அதிகமாய் வேறிரண்டு பாலங்களையுங் கட்டுகிறார்கள். ருஷியர் லாம்பிளாங்காயென்னும் இடத்தைக்கைவசப்படுத்திக்கொண்டதால் துருக்கியர் உவிடின் என்னும் பட்டணத்துக்குப்பின்வாங்கிப்போயிருக்கிறார்கள்.

Plevna fallen. பிளவினா ருஷியரால் பிடிபட்டது. யுத்தக்களத்திலிருந்து கடைசியாக வந்த சமாசாரம் மிகவும் விசேஷித்தது. பசியினாலும் வியாதியினாலும் நெருக்கப்பட்டு கேரிஆசமன் டிசம்பர்மீ 9உ தன்னுடைய சேனைகளோடு பிளவினாவைவிட்டுத் தப்பியோடப்பார்த்தான். அவர்கள் முன்னும் பின்னும் ருஷியராலே தாக்கப்பட்டார்கள். கடுமையான சண்டை நடந்ததின்பேரில் அவர்கள் தோற்றுப்போனார்கள். 40000 பேர் சிறைகளாகவும் 20000 பேர் நோயாளிகளாகவும் கொண்டுபோகப்பட்டார்கள். சங்காரம் அளவற்றதாயிருந்தது. 400 பீரங்கிகள் பிடிபட்டது. யுத்தம் அதிகக்காலம் நடந்தேற ஏதுவில்லாமல் போய்விட்டது. சமாதானமாய்ப்போகும்படி ருஷியர் எதைக்கேட்பார்களோ ஒன்றும் வெளியாகவில்லை.

THE SULTAN.

ஸுல்த்தான்.

மான்செஸ்டர் பத்திரிகை ஒன்று சொல்லியது:—துர்க்கிய மன்னராகிய ஸுல்த்தான் சம்பளம் தினம் ஒன்றுக்கு இரண்டாயிரம் பௌண்ட். குறை அதிகம் இல்லாதவர்களுக்கு இச்சம்பளம் பிரளயமெனத்தோன்றும். இப்பொழுது துர்க்கிய ஸுல்த்தானாகிய அப்துல் ஹமித் பெற்றுவரும் தினச்சம்பளம் இது. எத்தேசத்து மன்னரும் இவரிலும் அதிகமாய் வருந்தி உழைத்துச் சம்பளம் பெற்றுக்கொள்வது அறியோம். கண்டுபேச இஷ்டமுள்ள எவருக்கும் கூடும் சமயந்தோறும் அவர் இடம் கொடுப்பார். சந்தர்ப்பமில்லாதிருக்கும்பொழுது அவர் பிரதம சகாயர் அவருக்குப்பதிலாக கண்டுபேசுவார். சுல்த்தான் அதிகாலையில் எழுந்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்து ரத்

தினக்கம்பளத்தில் முகம் குப்புறப்படுத்து, காலைப் பிரார்த்தனைசெய்து, அதன்மேல் ருசிகரமான பானம் ஒரு கிண்ணம் பருகி, அரசாட்சி கருமத்திற்பிரவேசிப்பார்; பத்திரங்கள் வரப்பெற்று, மறு பத்திரங்கள் அனுப்புவார்; அறிக்கைகளை வாசித்து அங்கீகரிப்பார்; செலவு கணக்குகளுக்கு அனுமதிகொடுப்பார்; வெகுமதிகள் பதக்கங்கள் பட்டங்கள் கொடுப்பார். மந்திரிகளையும் ஸ்தானாதிபதிகளையும் கண்டுபேசுவார். இதற்கு நாலைந்து மணிநேரம் செல்லும். பக்தஜனாதிபதியாகிய அவர் அடிக்கீழ் விரித்திருக்கும் ரத்தனக்கம்பளத்தில் கால் நீட்டி முகம் குப்புறப்படுத்து உச்சிக்காலப்பிரார்த்தனை செய்தபின்பு பகற்போசனம் பண்ணி, அப்புறம் குதிரைச்சவாரி, அல்லது ரதசாரிபோய் திரும்பிவந்து குடும்ப விஷயங்களிற்பிரவேசிப்பார்; சகோதரர் சகோதரிகள் கண்டுபேச இடங்கொடுப்பார்; அரண்மனை அதிகாரிகள் எழுதி வாசிக்கும் அறிக்கைகளைக்கேட்பார்; அந்தப்புரத்து அந்தரங்கங்களைக்குறித்து அண்ணகர் தலைவரைக்கண்டுபேசுவார். அவருக்குச் சட்டதிட்டங்கள் செய்வார். அண்ணகர் தலைவர் பதவியில் உயர்ந்து பிரதம மந்திரிக்கு இரண்டாந்தரமாக மதிக்கப்படுவார். யுத்தகளத்தினின்று அறிக்கை வரும்பொழுது அந்தப்புரத்து மாதருக்கு அதை வாசித்துச்சொல்பவர் அண்ணகர் தலைவரே. சாயரக்ஷை அரண்மனைக்குருவந்து சுல்த்தானுக்கு பத்திக்குரிய புஸ்தகம் ஏதும் வாசித்துப் பிரார்த்தனை செய்வார். வாரந்தோறும் மூன்றுதினம் பிரான்சிய சங்கீத வித்தகராகிய ஒருவர் சுல்த்தான் கேட்கச் சுரமண்டலம் வாசிப்பார். கேட்பதன்றி தாம் வாசித்துப் பழகுவதில்லை. ராத்திரி நாழிகை ஏற ராஜகாரியம் பார்த்துவருவார். அர்த்தராத்திரிக்கு ஒரு நாழிகைமுந்தி அண்ணகர் தலைவரோடு அந்தப்புரத்தின் அந்தரங்க மாளிகைக்கு உட்செல்வார். ஆகவே சுல்த்தான் நெற்றித்தண்ணீர் நேத்திரத்தில் விழக் கஷ்டப்பட்டு உழைத்துப் பிழைப்பதாகப் பிறக்கும் வதந்தி அணுவும் தவறாது வாஸ்தவமாயிருக்கிறது.

வருஷாந்த விசேஷ ஜெபவாரம்.

பிரிய கிறிஸ்தவ சகோதரரே!

கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லாருக்கும் அவசியமானதும், நம்முடைய ஒரே கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தின்மூலமாய் நாம் தேவனிடத்தில் வேண்டிக்கொள்ள விரும்புவதுமான நன்மைகளுக்காக ஒருமித்து ஜெபம் செய்யும்படி எழுப்பிவிடுவதே சுவிசேஷ ஐக்கிய சங்கத்தாருடைய நோக்கமாயிருக்கிறது. 1846-ம்௵ "இந்த ஐக்கிய சங்கம்" ஏற்பட்டபோது உலகமெங்குமிருக்கிற அதன் அவயவத்தார், ஒவ்வொரு வருஷத்திலும் வருஷ ஆரம்ப நாட்களை ஐக்கிய ஜெப நாட்களாகத் தெரிந்து ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று ஏற்பாடுசெய்யப்பட்டது. இதனாலேதான் இந்த விசேஷ ஐக்கிய ஜெபவாரமுண்டாயிற்று. இந்த வழக்கம் வருஷத்துக்கு வருஷம் அதிகப்படுகிறதுந்தவிர, பிரியத்தோடும் நல்ல மனசோடும் கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வருகிறது.

சுவிசேஷ சபைகளுக்குள்ளே வழங்கிவருகிற இந்த ஜெபவாரமானது, கிறிஸ்தவர்களுக்குள் ஐக்கியமும், அந்நியோன்யமான எண்ணங்களுமுண்டாவதற்கும், கிருபாசனத்தண்டை நாம் நெருங்கிச் சேரவும் தகுந்தசமயமாயிருக்கிறது. கடந்தவருஷ ஆரம்பத்தில் நாம் பண்ணின விண்ணப்பங்களுக்கு பதில் அளிக்கப்பட்டதென்பதுக்குப் போந்த அத்தாட்சிகளுண்டு. அதினாலே கிறிஸ்தவர்களெல்லாரும், நன்றியறிதலுள்ளவர்களாய் தேவனுக்குத் துதிசெலுத்தவும், ஒவ்வொரு வருஷ ஆரம்பத்திலும் இப்படியே தேவனைப் பார்த்து மன்றாடவும் எழுப்பிவிடப்படுகிறார்கள். இதைச் சரியானபடி கைக்கொள்ளுதலும், இதைக் கைக்கொள்ளும்படி நம்மைச் சேர்ந்த சபையாரை ஏவிவிடுவதும், கிறிஸ்தவர்களாகிய நம்மெல்லார்மேலும் விழுந்த கடமையா யிருக்கிறது.

சுவிசேஷ ஐக்கிய சங்கததார், ஜாதிகளைக் கலங்கச் செய்கிற மிகவும் முக்கியமான சங்கதிகளையும், உலகமெங்குமுள்ள கிறிஸ்துசபைக்குள்ளிருக்கிற பற்பல பிரிவுகளையுங் கண்ணுற்றவர்களாய் 1878-ம்௵ ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களெல்லாரும் ஆவியின் ஒருமையோடும், விசுவாசத்தோடும், அன்போடும், ஜனுவரிமீ 6௳ முதல் துவக்குகிற வாரத்தை ஐக்கிய மன்றாட்டுக்கு முக்கிய சமயமாக விசேஷித்துக்கொள்ள மிகவும் ஆவலாய்க் கேட்டுக்கொள்ளுகிறார்கள். "நீங்கள் பூமியிலே ஒருமனப்பட்டு எதைக் கேட்டாலும் கொடுப்போம்" என்று நமதாண்டவர் தாமே தம்முடைய சீஷர்களுக்கு அளித்த வாக்குத்தத்தத்தை நினைவுகூருவோமாக.

எல்லாத் தேசங்களிலும் வாசஞ்செய்யும் கிறிஸ்தவ சிநேகிதரே! இரக்கத்தில் ஐசுவரியமுள்ள நமது தேவன் புதுவருஷத்தைக் காணும்படி நம்மெல்லாருக்கும் அருள் புரிவாரானால், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நமக்குண்டாயிருக்கிற நன்மைகள் நிறைவுபெறும்படி ஏகமனதோடு நமது சத்தத்தையுயர்த்தி அவரை நோக்கி வேண்டிக்கொள்ளுவோமாக.

விசேஷ ஜெபவாரத்தில் செய்யவேண்டிய பிரசங்கங்களுக்கும் பிரார்த்தனைகளுக்கும் பின்வரும் விஷயங்கள் தகுந்தவையென்று நிதானித்து ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஜனுவரிமீ 6௳ ஞாயிறு.

பிரசங்கம். கிறிஸ்தவர்களுடைய ஐக்கியம் பரிபூரணமடைய:- வெளி. 7: 9—10.

7௳ திங்கள்.

தனிப்படவும், பொதுவாகவும் பெற்றுக்கொண்ட இரக்கங்களை நினைவுகூர்ந்து அதற்காக ஸ்துதி; நாம் அனுபவிக்கிற சலாக்கியங்களின்பேரில் தேவாசீர்வாதமிருக்கவும், தாழ்மையும் நொறுங்குண்டதுமான ஆவி நமக்குக் கடாட்சிக்கப்படும்படியாகவும் ஜெபம்.

8௳ செவ்வாய்.

எல்லாத் தேசங்களிலுமிருக்கிற கிறிஸ்து சபைக்காக ஜெபம்; அது தப்பறைகளிலிருந்து நீங்கவும்; விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும், கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுக்கு சாட்சியாக வல்லமையிலும் வளரவும்; பரிசுத்தாவியின் கிருபையைப் பெற்று அவரால் நடத்தப்படும்படிக்கும் செபிக்கவேண்டும்.

9௳ புதன்.

கிறிஸ்தவ குடும்பங்களுக்காக ஜெபம். வியாதிப்பட்டவர்கள் துன்பப்பட்டவர்களுக்காகவும், பள்ளிக்கூடங்களிலிருக்கிற பிள்ளைகளுக்காகவும், பற்பல உத்தியோகங்களில் பிரவேசிக்கிற வாலிபருக்காகவும், தூரதேசங்களுக்குப் போயிருக்கிறவர்களுக்காகவும், கிறிஸ்துவை வெளியரங்கமாய் நமது குமாரர் குமாரத்திகள் அறிக்கையிடவும் செபிக்கவேண்டும்.

10௳ வியாழன்.

ஜாதிகளுக்காக ஜெபம். அதிகாரிகளுக்காகவும், நீதியதிபர்களுக்காகவும், ஆலோசனைக் கர்த்தாக்களுக்காகவும், கரையிலும் கப்பலிலுமிருக்கிற சேனைகளுக்காகவும்; தருமஞ்செய்யவும் ஜனோபகாரமுமானவைகளை நடப்பிக்கவு மேற்பட்டிருக்கும் ஸ்தாபனங்களுக்காகவும், மார்க்க சுயாதீனத்துக்காகவும், சுவிசேஷ பிரசங்கிகளுக்குப் பலமான கதவு திறக்கப்படும்படியாகவும், யுத்தம் ஓயவும், நீதியும் சமாதானமுமான ஆளுகை வரவும் செபிக்கவேண்டும்.

11௳ வெள்ளி.

யூதர்களுக்கும் புற ஜாதிகளுக்கும் பிரயோசனமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற மிஷியோன்களுக்காக ஜெபம். ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்காகவும், இரட்சணிய சுவிசேஷத்தின் நற்செய்தியைப் பரவச்செய்கிற எல்லா முயற்சிகளின்பேரிலும் தேவாசீர்வாதம் உண்டாகவும் செபிக்கவேண்டும்.

12௳ சனி.

வேத புஸ்தக பிரபலியத்திற்காகவும், ஓய்வுநாள் ஆசரிப்புக்காகவும், குடிவெறி நீங்கவும், சீரழிந்தவர்களின் சீர்திருத்தத்துக்காகவும், நிலத்திலும் நீரிலும் யாத்திரைசெய்கிறவர்களின் க்ஷேமத்திற்காகவும் ஜெபிக்கவேண்டும்.

13௳ ஞாயிறு.

கிறிஸ்தவர்களின் நடக்கையைப் பற்றிய பிரசங்கம். "உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது". மத். 5: 16.

ஜனுவரி௴ நாள்31. மார்கழி௴19வ முதல், தை௴20வவரை.

வாரம்.	இங்லிஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
செ	1	௰௯	என்சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். யாத். 33: 14.
பு	2	௨௰	நீர் அவரோடே பழகி சமாதானமாயிரும். யோபு 22: 21.
வி	3	௨௰௧	பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு. லூக். 8: 50.
வெ	4	௨௰௨	நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. எபி. 13: 14.
ச	5	௨௰௩	தேவனுடைய செயலைக் கவனித்துப் பார். பிரசங். 7: 13.
ஞா	6	௨௰௪	இயேசுவைக் காண விரும்புகிறோம். யோ. 12: 21.
தி	7	௨௰௫	கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். கொலோ. 3: 11.
செ	8	௨௰௬	உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும்.
பு	9	௨௰௭	ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான். சங்.
வி	10	௨௰௮	நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். ரோ. 14: 8. [50: 23.
வெ	11	௨௰௯	எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள். லூக். 14: 17.
ச	12	௧	நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். எபி. 3 13.
ஞா	13	௨	கர்த்தர் பூமியின் மீதெங்கும் இராசாவாயிருப்பார். சகரி. 14: 9.
தி	14	௩	கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரமாய் அறுப்பார்கள்.
செ	15	௪	விழித்துக்கொண்டிரு. வெளி. 3: 2.
பு	16	௫	நம்பியிருக்கிற ஆனந்தபாக்கியத்துக்கு. தீத்து 2:13.
வி	17	௬	கர்த்தாவே நீர் சமீபமாயிருக்கிறீர். சங். 119:151.
வெ	18	௭	அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகிப்பேன். எரே. 31: 3.
ச	19	௮	நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையுந்தள்ளிவிட்டு. எபி.
ஞா	20	௯	அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். சங். 116:12. [12:1.
தி	21	௰	இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொள்வேன். சங். 116: 13.
செ	22	௰௧	கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ. எண். 11: 23.
பு	23	௰௨	நீங்கள் அசதியாயிராதேயுங்கள். எபி. 6: 11. [ருக்கிறோம்.
வி	24	௰௩	ஏசுக்கிறிஸ்துவின் மூலமாய்த் தேவனிடத்திற் சமாதானம்பெற்றி
வெ	25	௰௪	ஆண்டவரே நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர். அப். 9: 6.
ச	26	௰௫	கிறிஸ்துவினுடைய அன்பு, எங்களை நெருக்கி ஏவுகிறது. 2 கொ. 5:
ஞா	27	௰௬	என்னைநோக்கிப் பாருங்கள் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்.
தி	28	௰௭	என் உடம்படிக்கையை நான் ஒருக்காலுமுறித்துப்போடுவதில்லை
செ	29	௰௮	நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர். எரே 23: 24.
பு	30	௰௯	இடைவிடாமற் செம்பண்ணுங்கள். கொலோ. 4: 2.
வி	31	௨௰	என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். யோவா. 15: 9.

விசேஷித்த நாட்கள்.

1. விருத்தசேதனத் திருநாள்.
3. அமாவாசை.
6. பிரசன்னத் திருநாள்.
13. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
18. பௌரணமி.
20. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
25. பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
27. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், மூன்றாம் ஞாயிறு.

நற்போதகம்.

௨. பெப்ருவரி௴. ௲அஎஅ௵.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

IX. அதிகாரம்.

1. "தர்மசகாயம்." யூதேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்காக. ரோ. 15: 26. 1 கொ. 1: 2 கொ. 8:

"அதிகமாய்" ஏனென்றால் கொரிந்தியர் இக்காரியத்தைக்குறித்து மிகவும் கவலையுள்ளவர்களாயிருந்தார்கள்.

2. "அகாயா" கொரிந்து பிரதான பட்டணமாயிருக்கிற கிரேக்க தேசத்தின் தென்பாகத்திற்கு அகாயா என்று பெயர். கொரிந்துப் பட்டணத்தில் மாத்திரமல்ல, அகாயாவில், கெங்கிரேயா (ரோ. 16: 1) முதலான பட்டணங்களிலும் சபை இருந்ததென்று நிதானிக்கலாம்.

3. "இந்தச் சகோதரரை" 8: 8, 18, 22, 23 வாக்கியங்களில் சொல்லிய சகோதரராம்.

4. "மக்கெதோனியர் என்னுடனே வந்து" சில கிறிஸ்தவர்கள் பவுல் அப்போஸ்தலனோடேகூட ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பிரயாணம்பண்ணுவது வழக்கமாயிருந்தது. அல்லாமலும் மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் இராச்சிய சம்பந்தமாயும், வியாபார சம்பந்தமாயும் போக்குவரவுண்டாயிருந்தது. ஆகையால் பவுல் கொரிந்துவுக்குப் போகும்பொழுது, மக்கெதோனியரில் சிலர் தன்னுடனே கூடவருவார்களென்று நினைக்க ஏதுவிருந்தது.

"நாங்களே வெட்கப்பட" கொரிந்தியர் தர்மப்பணங்களைச் சேர்த்து ஆயத்தமாயிருப்பார்களென்று பவுல் கொரிந்தியரால் அறிந்து நிச்சயித்து மேன்மைபாராட்டியிருந்தார். இதினால் மக்கெதோனியரை உற்சாகப்படுத்தியுமிருந்தார். இப்படி உதாரத்துவமாய்க் கொடுக்கும்படி மக்கெதோனியரை ஏவியுமிருந்தார். (8: 1—4) இப்படியெல்லாமிருக்க, மக்கெதோனியாவிலிருந்து கொரிந்துவுக்குப் பவுலோடு கூட வரும் கிறிஸ்தவர்கள், கொரிந்தியர் ஒன்றும் கொடுக்கவில்லை என்றாவது, அல்லது லோபத்தனமாய்க் கொடுத்திருக்கிறதாயாவது கண்டால், பவுல் சொன்னதும் செய்ததுமெல்லாம் தப்பிதமாகுமே. பவுல் தந்திரக்காரனென்றும், உபாயமும் பித்தலாட்டமுமுள்ளவனென்றும், பேச்சுவருமே.

5. "தானதர்மம்" மூலபாஷையில் "ஆசீர்வாதம்" என்றும், 8; 1ல் "கிருபை" என்றுமிருக்கிறது.

8. "பெருக அறுப்பான்" அவனுக்கு மனச்சமாதானமும் மனப்பாக்கியமும் பெருகும். அவன் கர்த்தருக்கென்று கொடுப்பது, பரலோகத்தில் கூட்டிவைக்கப்பட்ட பொக்கிஷமாகும்.

9. சங். 112: 9.

10. "சொல்லிமுடியாத ஈவு" உலக இரட்சகர். யோவா. 3: 16. கலாத்தி. 1: 4. 2: 20. பவுல், தர்மமாகிய ஈவைக்குறித்துப்பேசிவந்ததில், அகமலர்ந்து எல்லா ஈவுக்கு மேலான இந்த உன்னத ஈவைச் சொல்லி முடிக்கிறார்.

படிப்பினை.

தர்மஞ்செய்வது கிறிஸ்தவர்களுக்குச் சலாக்கியமாகமாத்திரமல்ல, கடமையாகவுமிருக்கிறது.

X. அதிகாரம்.

பரிசுத்த பவுலின் சத்துருக்கள் அவரைக்குறித்துச் சொன்ன குற்றங்களுக்கு இந்த அதிகாரத்தில் பதில் சொல்லுகிறார். தம்முடைய அப்போஸ்தல அதிகாரத்தை ஸ்தாபிப்பதும், மற்ற அப்போஸ்தலரைப்போல தாமும் தேவனாலே அனுப்பப்பட்டவரென்று ரூபிப்பதும் 10, 11, 12 அதிகாரங்களின் நோக்கமாம். இந்த அதிகாரத்தில் தாம் புறம்பான காரியங்களைச் சார்ந்து நடக்கவில்லையென்று சாதிக்கிறார்.

1. சத்துருக்கள் சொன்ன வார்த்தைகளை வைத்துக்கொண்டு அப்போஸ்தலன் அடிக்கடி பேசுவதைக் காணலாம். 10 வா. 1 கொரி. 2: 3. 7: 6.

"தாழ்மையாயும்" கிறிஸ்துவும் தாழ்மையுடையவராயிருந்தார். நான் அவருடைய தாசன் என்று கருத்து.

3. நான் மனுஷன்தான், என்னுடைய சரீரத்தோற்றத்தில் இழிவானவன்போலவுமிருக்கிறேன். ஏனாலும் என்னுடைய அப்போஸ்தல ஊழியத்தை உலகத்தாருடைய புகழ்ச்சிக்கேற்க நடப்பிக்கிறதில்லை. ஆவிக்குரிய நோக்கத்தோடும் கருவிகளோடும் நடப்பிக்கிறேன்.

4. நாங்கள் சுவிசேஷத்தை விர்த்திசெய்கிற எத்தனம் மனுஷருடைய சாதுரிய பிரசங்கமும், மனுஷ ஞானமுமல்ல. அற்புத வரங்களினாலும் பரிசுத்த ஆவியின் வல்லமைகளினாலும் என்றர்த்தம்.

"போராயுதங்கள்" என்பது பரிசுத்த ஆவியின் ஏவுதல், அற்புதங்கள், பல பாஷை பேசும் வரம், மற்றவர்களை அற்புதமாயுணர்த்துதல் என்றும், இப்படிப்பட்டவை, ஈட்டி, பட்டயங்கள், சாதுரியப் பிரசங்கங்கள் முதலான உலக ஆயுதங்களுக்கு எதிரிடையானவைகளென்றும் அப்போஸ்தலன் சொல்லுகிறதாக ஒரு சாஸ்திரி சொல்லுகிறார்.

"அரண்களை" பூர்வத்தில் கோட்டைகளை உடைக்கிற வகை இங்கே குறிக்கப்படுகிறது. சுவிசேஷத்துக்கு விரோதமான தடைகளை அப்போஸ்தலன் அரண்களென்று சொல்லுகிறார். விக்கிரகபத்தி, பாவப்பழக்கங்கள், கெட்டவழக்கங்கள், வீண்சடங்காசாரங்கள், மோசேயின் பிரமாணங்களை சுவிசேஷத்தைப்பார்க்கிலும் மேன்மையாய் எண்ணுகிற பிடிவாதங்கள், சுய நீதியின் உபதேசம் ஆகிய இவை சில அரண்களாம். வாக்கியத்தில் முக்கியமாய் மனுஷ ஞானத்தையும்

கோட்பாடுகளையும் குறிக்கும். தேவ வாக்கு எப்பேர்ப்பட்ட அரண்களையும் நிர்மூலமாக்குமே. மத்தேயு. 28: 18—20.

5. "எந்த எண்ணத்தையும்" அதாவது கிறிஸ்துமார்க்க உபதேசங்களுக்கு விரோதமாக மனுஷர் தங்கள் சொந்த ஞானத்தால் போதிக்கும் உபதேசங்களை என்றர்த்தம். கிரேக்கருடைய ஞானத்தைக் குறித்து அப்போஸ்தலன் சொல்லுகிறதாக சிலர் நினைக்கிறார்கள்.

"மேட்டிமை" பூர்வகாலத்தில் முற்றிக்கைபோடப்பட்ட பட்டணத்தார் முற்றிக்கையிட்ட சத்துராதிகளைத் தூரத்தும்படி, பட்டணத்தின்மேல் எழுப்புகிற சிகரத்தை அப்போஸ்தலன் குறிப்பிட்டுப் பேசுகிறதாகத்தோன்றும். சுவிசேஷத்துக்கு விரோதிகளானவர்களுடைய மேட்டிமையான எண்ணங்களை இந்த சிகரத்துக்கு ஒப்பிடுகிறார்.

"சிறை" யுத்தத்தில் அபஜெயப்பட்டவர்கள் ஆயுதமிழந்து, பலம் குறைந்து போக்கற்றுப்போய் எதிரி கையில் அசக்தராய் விழுந்து எதிரியின இஷ்டத்துக்குச் சிறைப்படுவதுபோல, சுவிசேஷத்துக்கு விரோதமான அறிவும் உபதேசமும் தேவ வசனத்தால் ஜெயிக்கப்பட்டு சிறைப்படும் என்றர்த்தமாம்.

மத்தேயு சுவிசேஷ வியாக்கியான வினா விடை.

2 பாடம்.

பரி. மத்தேயு. அதி. II. 1-12.

கிழக்கத்துச் சாஸ்திரிகள் கிறிஸ்துநாதரைக்கண்டு காணிக்கை செலுத்தி அவரை வணங்கினது.

வச. 1. இயேசுநாதர் பெத்லெகேமில் பிறந்ததைப்பற்றிய சரித்திர விபரம் எங்கே கண்டிருக்கிறது?

பரி. லூக். அதி. 2.

அவர் பெத்லெகேமில் பிறந்த சரித்திரத்திலுள்ள சில விசேஷங்களைச்சொல்லு?

பெத்லெகேமைப்பற்றி பழைய ஏற்பாட்டில் கண்டிருக்கிற விசேஷங்களைச்சொல்லு?

ரூத். 1: 19. 1சாமு. 16: 4.

ஏரோது யார்?

பலஸ்தீனு தேசத்தை ஆண்ட ரோமர்களால் யூதேயா நாட்டை ஆளும்படி நியமிக்கப்பட்ட அரசன். அவன் ஏதோமிய ஜாதியான், அவன் மிகுந்த சூரமும் தந்திரமும் சமர்த்துமுள்ளவன். அவன் இயேசுநாதரைக் கொல்லத் தேடுமுன் தன் மனைவியையும் தன் குமாரரில் இருவரையும் இன்னும் பலரையும் கொலைசெய்திருந்தான். யூதருக்குத் தன்னைப்பற்றிப் பிரியமுண்டாகும்படி யூதேயாவிலும் எருசலேமிலும் அநேக கட்டடங்களைப் புதிதாய்க் கட்டியும் அநேக கட்டடங்களையும் விசேஷமாய் எருசலேம் தேவாலயத்தையும் பழுதுபார்த்து அலங்கரித்தான்.

புதிய ஏற்பாட்டில் பல ஏரோதுகள் கண்டிருக்கிறதே; அவர்கள் யார்?

1, பெரிய ஏரோது; அவனே இச்சரித்திரத்தில் கண்டவன்.

2, ஏரோது அந்திப்பா; இவன் பெரிய ஏரோதின் மகனும் யோவானிஸ்நானனைச் சிரச்சேதம்பண்ணினவனுமானவன். பரி. மத். 14: 1.

3. I-ம் ஏரோது அகரிப்பா; இவன் ஏரோது அந்திப்பாவின் குமாரன். பரி. அப். 12-1, 23.

4. II-ம் ஏரோது அகரிப்பா; இவன் I-ம் அகரிப்பா குமாரன். பரி. அப். 25: 13. 26: 28.

கீழ்தேசத்தில் சாஸ்திரிகளிருந்தார்களென்று வேதத்தில் வேறெங்கே சொல்லியிருக்கிறது?

எண். 18: 7. தானி. 2: 2, 12.

இந்த சாஸ்திரிகள் கீழ்தேசங்களில் எந்தத் தேசத்திலிருந்து வந்திருக்கலாம்?

கல்தேயா தேசத்திலிருந்தாவது அரபி தேசத்திலிருந்தாவது பார்சு தேசத்திலிருந்தாவது வந்திருக்கலாம்.

யூதர் கல்தேயாவிலிருந்ததுண்டா? அவர்கள் அங்கேயிருந்த காலமெது?

2 இரா. 25: 21. கிறிஸ்துநாதர் பிறந்த காலத்திலும் அநேகயூதர்கள் அங்கேயும் மற்றும் தேசங்களிலும் வாசம்பண்ணி வந்தார்கள்.

வச. 2. சாஸ்திரிகள் யூதருடைய இராஜாவைக்குறித்து என்ன வகையாய் அறிய வந்திருக்கலாம்?

யூதருக்குள் வழங்கிவந்த எபிரேய தீர்க்கத்தரிசிகளின் ஆகமங்கள் மூலமாயும் விசேஷமாய் தானியேல் தீர்க்கத்தரிசியின் ஆகமத்தின் மூலமாயும் சாஸ்திரிகள் யூத இராஜாவைப்பற்றிய அறிவை அடைந்திருக்கலாம்.

ஒரு நட்சத்திரம் தோன்றினதைக்கொண்டு கிறிஸ்து பிறந்தார் என்று அவர்கள் எண்ணுவதற்கு ஆதாரமென்ன?

எண்ணாகமம் 24: 17ல் கண்டிருக்கிறபடி நட்சத்திரத்தைப்பற்றி பீலேயாம் உரைத்த தீர்க்கத்தரிசனம் அதற்கு ஆதாரமாயிருந்திருக்கலாம்.

கல்தேயாவிலிருந்து பிரயாணம்பண்ணி யூதேயாவுக்கு வந்துசேர எவ்வளவு காலம் சென்றிருக்கும்?

எஸ்று. 7: 8.

இந்த சாஸ்திரிகள் என்ன நோக்கமாய் வந்தார்கள்?

அவர்கள் தங்கள் இனஜனங்களையும் வீடு வாசல்களையும் விட்டு நெடும்பிரயாணம்பண்ணி வழியில் நேரிட்ட பல வருத்தங்களையுஞ் சகித்துக் கிறிஸ்துவைத் தேடி வந்தார்களே: இதைக்கொண்டு நாம் கற்றுக்கொள்ளத்தக்கதென்ன?

1. எவ்வகை வருத்தத்தையும் பெரிதாக எண்ணாமல் கிறிஸ்து ரட்சகரைத் தேடிக்கண்டடைந்துகொள்ளவேண்டும். அதற்காகப் பிரயாசப்படாதவர்களுக்கு விரோதமாய் அந்தச்சாஸ்திரிகள் நியாயத்தீர்ப்பு நாளில் எழும்பி நின்று அவர்கள்மேல் குற்றம் சுமத்துவார்கள்.

2. அநேக சலாக்கியங்களுடையவர்களைப் பார்க்கிலும் அற்பசொற்ப சலாக்கியங்களுடையவர்கள் பெரும்பாலும் அதிக ஊக்கமுடையவர்களாயிருப்பதுண்டு. திருஷ்டாந்தமாக அந்தச் சாஸ்திரிகள் அக்காலத்தில் பிறந்திருந்த யூத இராஜாவைத் தேடிக் கண்டுகொள்ளும்படி மிகுந்த ஆசைகொண்டு வெகு வருத்தத்தைச் சகித்து வந்து யூத இராஜாவைக்கண்டு களிப்படைந்தார்கள். பலஸ்தினாவிலிருந்த யூத

ராவது கல்தேயாவிலிருந்த யூதராவது தங்கள் இராஜாவைப்பற்றி கொஞ்சமேனும் ஆசையும் அன்பும் காட்டவேயில்லை. பரி. மத். 8: 11, 19, 30. வசனங்களை வாசிக்கவும். நாம் பெற்றிருக்கிற சகல சலாக்கியங்களோடும் இவ்வசனங்களில் கண்டிருக்கிற ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகாதபடிக்கு மிகுந்த கவலையுள்ளவர்களாயிருக்கவேண்டியது.

வச. 3. ஏரோது இராஜா கலங்கினானென்று கண்டிருக்கிறதே: அவன் அப்படிக் கலங்கினதற்குக் காரணம் என்னமாயிருக்கலாம்.

தன் சிம்மாசனத்திற்கு எதிரி ஒருவன் தோன்றினானென்கிற பயங்கர எண்ணமே காரணமாயிருக்கலாம்.

எருசலேம்நகரத்தார் அனைவரும் கலங்கினதற்குக்காரணமென்ன?

யுத்தமும் கலகமுமுண்டாகுமென்கிற பயங்கரம்.

தேவதூதர் பாடின பாட்டையும் கிறிஸ்துவின் இராச்சியத்தைப் பற்றி ஏசாயா தீர்க்கத்தரிசி உரைத்த தீர்க்கத்தரிசனத்தையும் (9: 6.) ஏரோதும் எருசலேம் நகரத்தாரும் கவனித்திருந்திருப்பார்களானால் அவர்கள் கலங்குகிறதற்கு இடமிருந்ததா?

இல்லை. கிறிஸ்துவின் இராச்சியம் நீதியும் சமாதானமுமான இராச்சியமானதால் அவர்கள் அப்படிக் கலங்குகிறதற்கு இடமிருக்கவில்லை.

ஏரோது இராஜாவின் கொடுங்கோல் அரசாட்சியினின்று கிறிஸ்துநாதர் தமது ஜனங்களை இரட்சிப்பாரென்று தேவதூதன் சொன்னான்?

அல்ல. பரி. மத். 1: 21. பார்க்கவும்.

வச. 4. இதில் பிரதான ஆசாரியரென்று சொல்லியிருக்கிறதே: அவர்கள் யார்?

பிரதான ஆசாரியரென்பது அக்காலத்துப் பிரதான ஆசாரியனையும் அவன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் அதற்கு முன்னிருந்த பிரதான ஆசாரியர்களையும் 24 ஆசாரிய வகுப்பின் தலைவர்களையும் குறிக்கலாம். தாவீது இராஜா ஆசாரியரை 24 வகுப்புகளாக வகுத்த சரித்திரத்தை வாசித்து அறியவும். 1நாளா. அதி. 24:

வேதபாரகர் யார்?

பழைய ஏற்பாட்டு வேதாகமங்களை எழுதி வியாக்கியானம் செய்து அவைகளைப் போதித்தவர்கள்.

ஏரோது கூடிவரச்செய்த கூட்டம் பிரதான ஆசாரியர், ஆசாரியர் முதலியவர்கள் அடங்கினதும் 70 பேர் சேர்ந்ததுமான சனகிரிம் (Sanhedrim) என்ற யூதருடைய பிரதான ஆலோசனைச்சங்கக் கூட்டமாய் இருந்திருக்கலாம்.

வச. 5. ஏரோது கேட்ட கேள்விக்கு ஆசாரியர் முதலியவர்கள் சரியான மறுமொழி சொன்னார்களா? எப்படி?

எல்லாவகை அத்தாட்சியிலும் உத்தம அத்தாட்சியான வேதவசனத்திலிருந்து மறுமொழி சொன்னார்கள். அவர்களுக்கிருந்த வேத அறிவு குறைவுள்ளதாயிருக்கவில்லை. மீகா. 5: 1.

அவர்கள் வேத சத்தியங்களை அறிந்திருந்தும் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லையே: இதினால் நாம் அறிந்துகொள்ளுகிறதென்ன?

தெய்வ கிருபையின்றி வேத சத்தியங்களைப்பற்றிய அறிவு மாத்திரம் இரட்சிப்புக்குப்போதாதென்று அறிந்துகொள்ளலாம்.

வச. 6. இவ்வசனத்தில் கண்டிருக்கிற தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட காலமெது?

கிறிஸ்துநாதர் பிறக்க 700 வருஷங்களுக்குமுன் உரைக்கப்பட்டிருந்தது.

வச. 7. நட்சத்திரம் காணப்பட்ட காலத்தை அறியும்படி ஏரோது மிகுந்த ஆவலாயிருந்ததாக விளங்குகிறதே: அவன் அப்படி ஆவலாயிருந்ததற்குக் காரணமென்ன?

பிறந்திருந்த யூதருடைய இராஜாவைக் கொல்லும்படியாகவே. 16-ம் வசனம் பார்க்க.

வச. 8. எருசலேமுக்கும் பெத்லேகேமுக்கும் தூரமென்ன? ஏறக்குறைய 6 மயில். கிறிஸ்துநாதர் பிறந்த ஊருக்கும் அவர் மரித்த பட்டணத்திற்கும் இடையிலிருக்கிற மலை உச்சியிலிருந்து பார்த்தால் அவ்விரண்டு இடங்களையும் காணலாம்.

ஏரோது சாஸ்திரிகளிடத்தில் பேசின வார்த்தைகள் உண்மையுள்ளவைகளா?

சகலவகைப் பொய்யரையுங்குறித்து வேதம் சொல்லுகிறதென்ன?

வெளிப்படு. 21: 8.

இதைக்கொண்டு நாம் படித்துக்கொள்ளத்தக்கதென்ன?

எபேசியர். 4: 25.

வச. 9. சாஸ்திரிகளை வழி நடத்தின நட்சத்திரம் வழக்கமாய்க் காணப்படுகிற நட்சத்திரங்களில் ஒன்றுயிருக்கலாமா?

அல்ல. அது நூதனமும் ஆச்சரியமுமான ஒரு விசேஷித்த நட்சத்திரமாய் இருந்திருக்கவேண்டும். அதின் கிரணங்கள் விசேஷித்த வகையாய் வானத்கிலிருந்து வீசி பிள்ளை இருந்த இடம் இன்னதென்று காட்டத்தக்கதாய் இருந்திருக்கவேண்டும்.

கிறிஸ்துநாதரை நட்சத்திரமென்று வேதத்தில் எங்கே அழைத்திருக்கிறது?

வெளிப்படு. 22: 16.

வச. 10 சாஸ்திரிகள் திரும்ப அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள் என்று சொல்லியிருக்கிறதே: அப்படி ஏன் சொலலியிருக்கிறது?

நமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறதாயிருக்கவேண்டியதென்ன?

பரலோகத்திலே சந்தோஷத்திற்கு ஏதுகரமாயிருக்கிறதென்ன? பரி. லூக். 15: 10.

வச. 11. சாஸ்திரிகள் தங்கள் விசுவாசத்தைக் காட்டினதெப்படி?

இயேசுநாதர் சிறு பாலனும் ஏழைத் தாய் தந்தையர்களுடைய பிள்ளையுமாயிருந்தார். அப்படியிருந்தும் அவரை ஒரு பெரிய இராஜாவென்று அவர்கள் எண்ணி ஏற்றுக்கொண்டார்கள்.

இயேசுவானவர் தாழ்மையுள்ளவராயிருந்தும் சாஸ்திரிகள் அவரை இராஜாவென்று விசுவாசித்ததினுல் கடிந்துகொள்ளப்படுகிற பெரிய பாவமெது?

ஏசாயா. 53-ம் அதிகாரம். பரி. யோவான். 1: 11.

புறம்பான தோற்றங்களைக்கொண்டு ஒரு காரியத்தைக்குறித்து நிதானிக்கிறதும் தீர்மானமும் தீர்ப்பும் செய்கிறதும் சரியா?

ஒரு பெரிய தீர்க்கதரிசி ஒருவிசை இப்படிச்செய்து தப்பிதத்துக்குளானுரோ அவர் யார்? எப்போது?

I சாமுவேல். 16: 6, 7.

சாஸ்திரிகள் கிறிஸ்துநாதருக்குச்செலுத்தின காணிக்கைகளென்ன?

அவர்கள் செலுதகின காணிக்கைப் பொருள்கள் எத்தேசத்து விளைவுகள்?

கீழ் தேசத்து விளைவுகளாம். அவைகள் முக்கியமாய் இந்து தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டவைகளாயிருக்கலாம். இவ்விதமாக அவர்கள் கிறிஸ்துநாதருக்குக் காணிக்கைகளைச் செலுத்தினபோது அவைகள் விளைந்த தேசங்களையும் விசேஷமாய் இந்து தேசத்தையும் அவருக்குப் பாத காணிக்கையாகப் படைத்தார்களென்றும் இந்து தேசம் அப்போதே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதென்றும் சொல்லலாம். சாஸ்திரிகள் அந்தக்காணிக்கைகளையும் அவைகள் எந்தத்தேசத்து விளைவுகளாயிருந்ததோ அத்தேசங்களையும் செலுத்திஞர்களே. நாமோ நம்மைக் கிறிஸ்துநாதருக்குப் பாத காணிக்கையாகப் படைத்து ஒப்புவிக்கவேண்டும்.

சாஸ்திரிகள் தங்கள் தாழ்மையைக் காட்டினதெப்படி?

கிறிஸ்துவின் அருமையைக்குறித்துத் தங்களுக்குண்டாயிருந்த எண்ணிக்கையைக் காட்டினதெப்படி?

சாஸ்திரிகள் இதில் கண்டிருக்கிறபடி சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்துகொண்ட காரியம் பரலோகத்தில் நடக்கிற எந்தக்காட்சியை ஞாபகப்படுத்துகிறது?

வெளிப்படு. 4: 10, 11.

சாஸ்திரிகளுடைய நடக்கையைக்கொண்டு நாம் என்ன கடமையை நிறைவேற்றவேண்டுமென்று கற்றுக்கொள்ளலாம்?

கிறிஸ்துவைக்குறித்து வெட்கமடைகிறவர்களுடைய முடிவு எப்படியிருக்கும்?

அவர்கள் வெட்கமடைவார்கள். பரி. மத். 10: 32, 33.

வச. 12. சாஸ்திரிகள் யாரால் நடத்தப்பட்டார்கள்?

அவர்கள் தேவ நடத்துதலுக்குள்ளானதெப்படி?

சங். 34: 7.

அச்சமயத்தில் சாஸ்திரிகள் தங்கள் விசுவாசத்தைப் பின்னும் எப்படிக் காட்டிஞர்கள்.

வேறு வழியாய் அவர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போஞர்களே: அந்த வழி எதுவாயிருக்கலாம்?

அவர்கள் பெத்லேகேமிலிருந்து நேர் கிழக்கே உப்புக்கடலோரமாய்ப்போய் அங்கிருந்து யோர்தான் நதியின் பள்ளத்தாக்கு வழியாய்த் தமஸ்குப் பட்டணத்திற்கும் அங்கிருந்து தங்கள் தேசத்திற்கும் போய்ச் சேர்ந்திருப்பார்கள்.

நாம் இந்தச் சரித்திரத்திஞல் இதுவரையும் கற்றுக்கொண்ட படிப்பினைகளையெல்லாஞ் சொல்லு?

இச்சரித்திரத்தைக்கொண்டு இன்னும் வேறென்ன படிப்பினைகளைக்கற்றுக்கொள்ளலாம்?

படிப்பினைகளெல்லாம் சொல்லியானபின்பு சகலரும் கிறிஸ்துநாதரைத் தேடிக்கொள்வதில் சாஸ்திரிகளுக் கொப்பானவர்களாயிருக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டிக் கிறிஸ்துநாதரைத் தேடும்படி ஏவிவிடவேண்டும். சாஸ்திரிகள் நட்சத்திரத்தைக் கண்டவுடனே யாதொரு தாமதஞ்செய்யாமல் கிறிஸ்துநாதரைத் தேடிப் போகும்படி பிரயாணப்பட்டதுபோல் ஒவ்வொருவரும் காலதாமதமின்றி இயேசுஇரட்சகரை ஏற்றகாலத்தில் தேடிக்கொள்ளும்படி ஏவி எழுப்பிவிடவேண்டும். கிறிஸ்துநாதரை முழு இருதயத்தோடே தேடி அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரைத் தேடும் போதுண்டாகும் சகல வருத்தங்களையும் சகிக்கவேண்டும். நம்முடைய பாவங்களையெல்லாம் அவர்மேல் போட்டு அவரை நமக்குக் கர்த்தராக விசுவாசித்து நம்மை அவருக்கு ஒப்புவிக்கவேண்டும். பரிசுத்த

ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவண்டைக்கு வழி நடத்தவும் நாம் இரட்சிக்கப்படத்தக்கதாக நம்மை அவரோடே ஐக்கியப்படுத்தவும் வேண்டுமென்று வேண்டிக்கொள்ளவேண்டும்.

Notes on Numbers.

எண்ணாகம வியாக்கியானம்.

௫. அதிகாரம்.

பாளயச் சுத்திகரிப்பு.

2. "பாளயத்திலிருந்து" பாழான வனாந்தரத்துக்கென்றல்ல, சனங்கள் குடியிருக்கிற பாளயத்துக்குப் புறம்பே என்றர்த்தம்.

3. "நான் வாசம்பண்ணுகிற" நம்முடைய வீடுகளிலும் தேவன் வாசம்பண்ணுகிறவரென்றால், அவை எவ்வளவோ பரிசுத்தமுள்ளவைகளாயிருக்கவேண்டும்.

6, 7. லேவியர் 6: 3—6 வரையுள்ள சட்டங்கள் இங்கே மறுபடி சொல்லப்படுகிறது. (8) ம் வாக்கியத்திலுள்ள சங்கதி கூட்டிச்சொல்லப்படுகிறது. (8) ம் வாக்கியத்தைச் சொல்லவேண்டியதற்காகத்தான் அதின் சம்பந்தம் மறுபடி எடுத்துச் சொல்லப்படுகிறது; அதாவது, அபகரித்த பொருளுக்கு எந்த வகையாயாவது பதில் கொடுத்துத்தீரவேண்டும். சுதந்தரவாளியில்லாவிட்டால், பதில் பரிகாரம் ஆசாரியனைச் சேரவேண்டும். ஏனென்றால் அநியாயமாய் அபகரிக்கப்பட்ட பொருள் அபகரித்தவன் கையிலிருக்குமட்டும் குற்றம் அவன் மனச்சாட்சியைவிட்டு நீங்கமாட்டாதே. பலி காணிக்கைகளினாலாவது, செபதப கண்ணீர்களினாலாவது நிவர்த்தியாகவுமாட்டாது. ஆனால் செய்த குற்றம் நிவர்த்தியாகும்படி பலியிடப்படவேண்டும், அபகரித்த பொருள் அகத்தியம் திரும்பச் செலுத்தப்படவும்வேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் கிறிஸ்துநாதனை விசுவாசிப்பதினால் பாவக்குற்றம் மன்னிக்கப்படுறதென்று சொல்லி, எவ்வகை அக்கிரமங்களிலும் நிலைத்திருக்கலாமே. அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்.

15. "தூபவர்க்கம்" எண்ணெய் வார்க்காமலும், தூபவர்க்கம் போடாமலும் இருப்பானாக, என்பதினாலே இது இழிவும் நீசத்தனமுமான குற்றம் என்று தோன்றும். மேலுமிது கர்த்தருக்குப் படைக்கும் உற்சாகக் காணிக்கையென்றல்ல, அவள் குற்றவாளியாயிருந்தால் அவளைத் தண்டிக்கும்படி கர்த்தரிடத்தில் கேட்டுக்கொள்ளுகிற நினைப்பூட்டுதலின் காணிக்கையாயிருக்கிறது.

16. 'கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்தி" இப்படிப்பட்ட குற்றத்தை தேவன் தாமே விசாரிக்கும்படி தம்மிடத்தில் கொண்டுவரச் சொல்லுகிறார். ஏனென்றால் அவள் குற்றம் செய்திருந்தால், மறைக்கப்பட்ட குற்றத்தை வெளிக்குக்கொண்டுவரவும், அவள் குற்றம் செய்யாமல் அநியாயமாய் சமுசயப்பட்டிருந்தால், அதை நிவர்த்திசெய்யவுமாக இந்த ஏற்பாடுசெய்தார். இந்தச் சடங்குகள் உபமானக்கருத்துள்ளது. மற்றப்படி அவள் குற்றவாளியாயிருந்தபோதிலும் சாபத்

துக்கு ஏதுவான கசப்பான தண்ணீரிலும், சாபத்தை எழுதும் எழுத்தாணியிலும், சாபத்தை அளிக்கத்தக்க இயல்பான சத்து இருந்ததில்லை. எல்லாம் தேவனுடைய சித்தத்தினாலேமட்டும் நடந்துவந்தது. மனுஷர்கள் வீணாக அக்கினியிலும் கொதி தண்ணிரிலும் இப்படிச் சமுசயப்பட்ட நபர்களைக் கைமுக்கச்செய்து பரீக்ஷைசெய்யும் வீண் புத்திக்கு இந்தச் சட்டம் இடங்கொடுக்கிறதேயில்லை. அக்கினியில் கையிடச்செய்தால், நல்லார் பொல்லார் ஆகிய எல்லாருடைய கைகளும் ஒன்றுபோல வெந்தேபோகும். இது மனுஷருடைய வீண் தோற்றமான செய்கையேயல்லாது தேவகட்டளையே இல்லை.

படிப்பினை.

தேவனுடைய ஏற்பாடுகளெல்லாம் பரிசுத்தமுள்ளது. நாம் பாவமாய்த் தோன்றுகிறவற்றுக்கும்கூட விலகி நடக்கவேண்டும். சுத்தமான மனச்சாட்சியைக் காத்துக்கொள்ளுவது மிகவும் வருத்தமான காரியம். ஆனால் அப்படிச் செய்யும்படி அதிகமாய்ப் பிரயாசப்படவேண்டும். சிற்றின்பம் எவ்விதத்திலும் கசப்பாய்முடியும். கிறிஸ்துநாதருடைய சட்டமே நமக்குச் சட்டமாயிருக்கவேண்டும். மத். 5: 28.

---

௬. அதிகாரம்.

நசரேயப் பொருத்தனை.

2. நசரேயனென்றால் "பிரிக்கப்பட்டவன்" என்றர்த்தம். இப்படிப்பட்ட பொருத்தனைகளைக்குறித்து இதற்குமுன்னும் வாசித்திருக்கிறோம். (லேவி. 27.) இந்த அதிகாரத்தில் நசரேயருக்குரிய சட்டங்கள் கற்பிக்கப்பட்டது. விக்கிரக பத்திக்கடுத்த பழக்கங்களைத் தடுக்கவும், நசரேயர் தாங்கள் செய்தபொருத்தனையில் உண்மையாய் நிலைத்திருக்கவும் தக்கதாக இந்த விரதங்கள் கட்டளையிடப்பட்டது. நசரேயப் பொருத்தனை முழுச் சீவகாலத்துக்காகிலும், குறிக்கப்பட்ட ஒரு மட்டான காலத்துக்காகிலும் செய்யப்படலாம். சிம்சோனும், சாமுவேலும் அவர்கள் பிறப்புக்கு முன்னுண்டான தேவ நியமிப்பின்படியே அவர் கட்டளைக்கு அடங்கி தங்கள் முழுச் சீவகாலமெல்லாம் நசரேயப் பொருத்தனையோடிருந்தார்கள். ரெகாபியர் சில காலங்களாய் அப்படியிருந்தார்கள். (எரே. 35: 2—19) இந்தப் பொருத்தனை (30) நாளுக்குக் குறையச்செய்யப்படாதென்று யூதர் சொல்லுகிறார்கள். ஆனால் பரி. பவுல் (7) நாள்மட்டுந்தான் இந்தப் பொருத்தனையை ஏற்றுக்கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. நடபடி. 21: 24—27. ஆனால் பெரும்பாலும் இந்தப் பொருத்தனை, யாராவது இன்னின்ன உலக பாசங்களை வெறுத்து, மார்க்கத்தில் தேவபக்தியும் தேவகருத்துமாயிருக்கும்படி மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுக்கிற பிரதிக்கினையாயிருந்தது. திராட்சரசத்துக்கு விலகியிருப்பது முதலிய புறம்பான விரதங்கள்தான் இந்தப் பொருத்தனையின் விசேஷமென்று சொல்லக்கூடாது. அநேக நசரேயர்கள் புறபான விரதங்களோடு ஆவிக்குரிய உத்தமராயும் நடந்துகொண்டு மெய்த்தேவபக்தியோடு சீவனம் பண்ணிவந்தார்கள். இப்படிப்பட்ட நசரேயப் பொருத்தனை செய்யும்படி தேவன் அநேகரை ஏவி எழுப்பிவிடும்பொழுது, அது தேசத்துக்குப் பொதுவான முக்கிய ஆசீர்வாதமாக எண்ணப்பட்டது. ஆமோ. 2: 11. பார்.

"விரதம் அவன் தலைமேல்" அதாவது தேவனுடைய விசேஷித்த அடையாளம் அவன் தலைமேலிருக்கிறதென்றர்த்தம். கிட்டின இனத்தாருடைய இழவுக்குமுதலாய்ப் போகக்கூடாதென்று தடுக்கப்பட்டவிஷயத்தில், இவர்கள் வழக்கமான ஆசாரியரைப்பார்க்கிலும் அதிகப் பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தார்கள். இந்த விஷயத்தில் பிரதான ஆசாரியனுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அப்படியிருந்தபோதிலும் இவர்கள் விவாகம் செய்யப்படாதென்ற கட்டளையில்லை. மற்ற இஸ்ரவேலருக்கொப்பந்தம் மாம்சபதார்த்தங்களும் சாப்பிட்டுக்கொள்ளலாம். ரோமான்மார்க்கத்தார் தேவவசனத்தை அதிகமாய்ப் புரட்டியிருக்கிறார்கள். விவாகம் இல்லாதிருப்பதும், மாம்சபதார்த்தங்களைப் புசியாமலிருப்பதும் புண்ணியமென்று நினைப்பது தவறு.

14. "பாவநிவாரணபலியாக" அவன் விரதம் காக்கும் நாட்கள் நிறைவேறின பின்பும் பாவநிவாரணப்பலி வேண்டியதாயிருந்ததே! நாம் செய்கிற முதல்தரமான உத்தம ஆராதனையிலும் மகா திவ்யமான ஆராதனையிலுங்கூட ஆகாமியமிருக்கிறது. அதற்கும் பாவநிவர்த்திவேண்டும்.

கிறிஸ்துநாதர்மாத்திரம்
நோவை நீக்கும் பாத்திரம்,
கிறிஸ்துநாதர் நீதிமான்
தப்பில்லாத தர்மவான்.

"என்னிடத்தில் பாவமுண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?"

24. நேர்த்தியான பொருளடக்கமுள்ள இநத ஆசீர்வாத முறையானது பலகாலங்களில் வழங்கப்பட்டதாகத்தோன்றும். விசேஷமாய் ஆசாரியன் பரிசுத்தஸ்தலத்துக்குப் போய் தூபங்காட்டிவிட்டு ஜனங்களிடத்துக்குத் திரும்பி வரும்பொழுது இது வழங்கப்பட்டதென்று தோன்றும். (லூக். 1: 22.) பக்தியுள்ள எபிரேயர் இதிலுள்ள பொருளைப்பிடித்து செபம்பண்ணுவார்கள். யெகோவாவின் நாமம் மும்முறை வழங்கியதைப்பார்த்து, திரித்துவ உபதேசம் இதிலடங்கியிருக்கிறதாக அநேகர் நினைத்திருக்கிறார்கள்.

நம்முடைய செபபுஸ்தகத்தைப் பார்த்தால், விவாகம் நடத்தும் முறைமையில் முக்கியபாகம் இந்த ஆசீர்வாதமுறையோடு முடிவதல்லாமலும், மேற்காட்டிய கருத்தோடும் கூறப்படுகிறது.

படிப்பினை.

கிறிஸ்துநாதருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையாக நடந்துகொள்ளுகிற விஷயத்தில், ஒவ்வொரு கிறிஸ்தவனும் நசரேயனென்று சொல்லப்படலாம். கிறிஸ்தவனென்றால் அபிஷேகம்பண்ணப்பட்டவன் என்றர்த்தம். அவன் கிறிஸ்துவின் சிலுவையின் உபதேசத்தை மனதில்வைத்து நடக்கவேண்டும். மோக்ஷமாவதென்ன? கர்த்தராகிய இயேசு தம்முடைய முகத்தை நம்மேல் பிரகாசிக்கப்பண்ணுவதுதான். இயேசுவின் திருமுகம் உன்மேலும் உனக்குள்ளும் பிரகாசித்திருந்தால் நீ அவருக்காகப் பிழைப்பாய்.

அவர் முகத்தில் பார்த்து பிழை,
அவர் புயத்தில் சாய்ந்து பிழை,
அவர் பக்கத்திலிருந்து பிழை,
அவர் பாதத்தண்டையில் பிழை.

The Cities of Refuge.

அடைக்கலப் பட்டணங்கள்.

(தொடர்ச்சி.)

மேலே விவரித்த அடைக்கலங்களும் குற்றங்களும் கொடுமைகளும் அபரிமிதமாய்ப் பெருகவும், துஷ்டர்களும் சண்டாளரும் அஞ்சாமையுந் துணிகரமுடையவர்களாகவும் ஏதுக்களாயிருந்தபடியால் அவர்களுக்குரிய சலாக்கியங்களும் எடுபட்டுப்போயின.

தேவ கற்பனையாயேற்படுத்தப்பட்டிருந்த இந்த அடைக்கலப் பட்டணங்கள் கைப்பிசகாய்க் கொலைசெய்தவர்கள் ஓடித் தப்பிக்கொள்ளத்தக்க புகலிடங்களாய் மாத்திரமல்ல, பாவக்கேட்டையும் அதினால் நேரிடத்தக்க மோசத்தையும் உணர்ந்து பாவத்தை நீக்கும் கிருபாதாரப்பலியாயும் பாவவிமோசனமாயுமிருக்கிற துதிக்கப்படத்தக்க இரட்சகரண்டை ஓடிச் சேருகிறவர்களுக்குக்கிடைக்கும் சுகத்துக்கு முன்னடையாளமாயும், அவரைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் தங்கள் அக்கிரமங்களினிமித்தம் அடையவேண்டிய தண்டனை விலக்கப்படுகிறதைக்காட்டும் குறிப்பாகவும் இருந்தன என்பதற்குச் சந்தேகமேயில்லை.—"தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன்வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதல் உண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச்செய்தார்." இந்தவகையாய்க் கவனிக்குமிடத்து, அடைக்கலப் பட்டணங்கள் விசுவாசிகளுக்கு மகா முக்கியமான விஷயமாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. அடைக்கலப்பட்டணங்களிற் சேர்ந்தவர்கள் தண்டனைக்குத் தப்பிக்கொண்டார்களே. அதினால் கிறிஸ்துஇயேசுவுக்குட்பட்டு ஆக்கினைத்தீர்ப்புக்கு நீங்கலாயிருக்கிறவர்களுடைய பூரணசுகத்தைக் கண்டுகொள்வார்கள். அவ்வடைக்கலம் எவர்களுக்கும் தாராளமாய்க் கிடைக்கத்தக்கதாயிருந்த சங்கதியினால், "என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருக்காலும் தள்ளமாட்டேன்" என்ற கிருபையுள்ள வாக்குத்தத்தம் அவர்கள் ஞாபகத்தில் வரும். பூமி நிலைமாறினாலும், பர்வதங்கள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்தாலும், அதின் சலங்கள் கொந்தளித்துப்பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நித்திய தேவன் அவர்களுக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமாயிருக்கிறார். மாறாத எகோவாவின் உடன்படிக்கைக்குரிய வாக்குத்தததத்தை அவர்கள் பிடித்துக்கொண்டு, "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்! கிறிஸ்துவே மரித்தவர்; அவரோ எழுந்துமிருக்கிறவர்; அவரோ தேவனுடைய வலது பாரிசத்திலுமிருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" என்று தைரியத்தோடும் அக்களிப்போடும் சொல்லுகிறவர்களாயிருப்பார்கள்.

The life of the Rev: John Newton.

ஜான் நியூற்றன் போதகர் ஜீவிய சரித்திரம்.

"கர்த்தர் சகலத்தையும் தமக்கென்று சிருஷ்டித்தார்" என்றும், "அவருடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" என்றும் எழுதியிருக்கிறதே. சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்களிலெல்லாம் மனுஷன் தேவனுடைய மாட்சிமைபொருந்திய கிரியையாயிருக்கிறான். மனுஷனைத் தேவன் சிருஷ்டிக்கப்போகும்பொழுது திரித்துவத்திலுள்ள மூவரும் கூடி அதைக்குறித்து ஆலோசனை பண்ணிக்கொண்டதுபோல காணப்படுகிறது. "பின்பு தேவன், நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" என்று சொல்லி, "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்." ஐயோ மாட்சிமைபொருந்திய இத்தச்சிருஷ்டி எவ்வளவாய்த் தவறி விழுந்து சீர்கெட்டுப்போயிற்று. மனுஷனுடைய சிறப்பையெல்லாம் பாவம் எவ்வளவாய்க்கெடுத்துவிட்டது. ஆகையாலே நாம் இப்பொழுது முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதும் சிந்திக்கவேண்டியதுமான விஷயம் மீட்பின் கிரியைதான். இந்தக்கிரியையிலே நமது இரட்சகராகிய தேவனின் மகிமை மகா துலாம்பரமாய்ப் பிரகாசிக்கிறதுபோல வேறெதிலும் பிரகாசிக்கிறதில்லை.

மனுஷர் உள்ளத்தில் நடந்தேறும் "புதிய சிருஷ்டிப்பும்" இத்தத்திவ்விய கிரியையின் ஓர் முக்கியபாகந்தான். அதின் "பரிசுத்த அலங்காரத்தைப்" பார்த்து, "தேவன் என்ன செய்தார்" என்று சொல்லி திருச்சபையானது சந்தோஷ பூரிப்போடு தேவனைப் புகழ்ந்து போற்றுகிறதுபோலவே, உலகமும் வேண்டாவெறுப்போடாயினும் தேவனுடைய கரத்தை ஒப்புக்கொண்டு அறிக்கையிடுகிறதாயிருக்கும். கிறிஸ்துநாதர் திரும்பவரும் சிறந்த நாளிலேதான் அவருடைய மகிமை அவரது பரிசுத்தவான்களிடத்தில் விளங்கும் என்றல்ல; அப்பொழுதுதான் அவர்கள் அவரது நித்திய கிரீடத்தில் பதிக்கப்பட்ட இரத்தினங்களாய் வெளிப்படுவார்களென்றுமல்ல; "கர்த்தருடைய கரம் இதைச்செய்ததென்றும் இஸ்ரவேலின் பரிசுத்தர் இதைச் சிருஷ்டித்தாரென்றும் உலகத்தார் கண்டும் அறிந்தும் உணர்ந்துங்கொள்ளும்படியாக" அவர்களை உணர்த்தும்பொருட்டு, இப்பொழுதும் அவர்கள் "அவரது சுதந்தரத்தின் மகிமையாகவே" இருக்கிறார்கள்.

மனுஷாத்துமமானது அந்தகாரத்தினின்று தேவனுடைய அதிசய வெளிச்சத்துக்கும் பசாசின் அதிகாரத்தினின்று தேவனிடத்துக்கும் திரும்புதலாகிய புதிய சிருஷ்டிப்பில் விளங்கிய தேவ வல்லமை கிருபை என்றவைகளின் ஆச்சரியமான செயல்களைக் காண்பிக்கும்பொருட்டே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரரில் ஒருவனுடைய சீவிய விர்த்தாந்தங்களை இங்ஙனம் விவரிக்கப்போகிறோம்.

ஜான் நியூற்றன் போதகர்தாமே தமது இளம்பிராயத்தைக் குறித்தும் தாம் பாவ வழிகளைவிட்டுத் தேவனிடம் மனந்திரும்பின விதத்தைக்குறித்தும் நேர்த்தியான ஒரு பிரபந்தம் எழுதியிருக்கிறார்.

இப்பிரபந்தத்திலிருந்தே முதல் முதல் சில விசேஷங்களைத் தெரிந்தெடுத்துச்சொல்லுவோம். அவர் எப்படித்தொடங்குகிறார் என்றால்;

The Seven Churches of Asia.

I. EPHESUS.

ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்.

I. எபேசு சபையைக்குறித்தது.

வெளிப்படுத்தின விசேஷம் 2-ம் அதிகாரம் 1—7 வாக்கியங்கள். "எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில் ஏழு நட்சத்திரங்களைத் தமது வலதுகரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும், நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன். ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாயென்று உன்பேரில் எனக்குக் குறையுண்டு. ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன். நான் வெறுக்கிற நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளை நீயும் வெறுக்கிறாய், இது உன்டத்திலுண்டு. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; செயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன் என்றெழுது" எபேசு நகரத்தில் முதல் முதல் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது பரி. பவுல் அப்போஸ்தலனாலேதான். இவ்வப்போஸ்தலன் கொரிந்துப் பட்டணத்திலிருந்து யூதேயாவுக்கு யாத்திரை போகுமார்க்கத்தில் எபேசு நகரியில் இறங்கி (அப்போ. 18: 19—21.) செபஆலயத்தில் பிரவேசித்து கிறிஸ்துமார்க்கத்துக்குரிய முக்கிய சத்தியங்களை அங்குள்ளவர்களுக்குப் போதித்தார். இந்தச் சமயத்தில் அவர் அவ்விடத்தில் அதிககாலம் தரித்திருக்கவில்லை. அப்புறம் எருசலேமிலிருந்து திரும்பிவந்து (அப்போ. 19: 1.) செபஆலயத்தில் பிரவேசித்து மூன்றுமாதமளவும் தேவனுடைய ராச்சியத்துக்கடுத்தவைகளைக்குறித்து தைரியமாய்ப் பிரசங்கித்துக்கொண்டுவந்தார். முந்தின விசை அவருடைய பிரசங்கத்துக்கு மனோற்சாகமாய்ச் செவிகொடுத்த யூதர்கள் இப்பொழுது அவரை மூர்க்கமாயெதிர்க்கவும் மார்க்கத்தைத தூஷிக்கவும் தலைப்பட்டார்கள். அதன்பேரில் அவர் அவர்களை விட்டுவிலகிப் பிரிந்து, திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியாசாலையிலிருந்துகொண்டு இர

ண்டு வருஷக்காலம் மார்க்க விஷயங்களைப்பற்றி அனுதினமும் சம்பாஷணைபண்ணிப் புத்திசொல்லிக்கொண்டு வந்தார். இவ்வாறு ஆசியாவிற் குடியிருந்த யூதரும் கிரேக்கருமான சகலரும் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு அறிந்தார்கள்.

இக்காலத்தில் எபேசுப்பட்டணம் செல்வத்திற் சிறந்த நகரமாயிருந்தது. அதின் குடிச்சனங்கள் விக்கிரகாராதனைக்காரர். தியானாள் தேவியைத் தொழுதுவந்தார்கள். மேற்படி தியானாள் தேவிக்கு மகா அலங்கிர்தமான ஆலயம் ஒன்று அவ்விடத்திற் கட்டப்பட்டிருந்தது. இவ்வாலயம் உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் ஒன்றாக எண்ணப்பட்டது. தியானாள் தேவியின் உற்சவங்களில் அளவில்லாத திரவியஞ் செலவிடப்பட்டது. எபேசுபட்டணத்தார் துன்மார்க்கத்தில் மூழ்கினவர்களாயிருந்தார்கள். அப்போஸ்தலனும் அவர்களை "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள்" என்றும் "இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நடந்துகொண்டார்கள்" என்றுஞ் சொல்லுகிறார். மேலும் அவர்களுக்குள் நடப்பாயிருந்த மாந்திரியம், பில்லிசூனியம் முதலிய மாயவித்தைகளைக் காண்பிக்கும் மேரையாகவே, "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரபிரபுவாகிய ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டீர்கள்" என்று அவர் பேசுவதாகவும் நிதானிக்கத்தக்கது.

என்றாலும் சுவிசேஷம் அவர்களுக்குள் பிரசங்கிக்கப்பட்டபொழுது; அநேகர் அதை உண்மையாய் அங்கீகரித்துக்கொண்டார்கள். கொடிய விரோதமும் பயங்கரமுமான துன்பமும் உண்டாயிருந்தபோதிலும், கர்த்தருடைய வசனம் பலமாய் விர்த்தியடைந்து மேற்கொண்டபடியால் அந்நகரத்தில் ஒரு பெரிய கிறிஸ்துசபை ஸ்தாபகமாயிற்று. மார்க்கத்தை அனுசரித்து மேற்படி சபையைச் சேர்ந்துகொண்டவர்கள் விக்கிரகபக்திக்குரிய தங்கள் துர் வழக்கங்களையும் வீணாசாரங்களையுமெல்லாம் மனப்பூர்வமாய் வெறுத்துவிட்டதுமல்லாமல், மாயவித்தைக்காரராயிருந்தவர்கள் அவ்வித்தைக்கடுத்த புஸ்தகங்களையும் சுவடிகளையும் பகிரங்கமாய்ச் சுட்டெரித்து இவ்வாறு தங்கள் உண்மையைத் திருஷ்டாந்த பூர்வமாய் வெளிப்படுத்தினார்கள். பவுல் அப்போஸ்தலன் அவர்களுடைய ஆத்தும நன்மையையும் ஆவிக்குரிய விர்த்தியையுங் குறித்து மகா வைராக்கியமும் கரிசனையுமுடையவராயிருந்து உழைத்ததையும், தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்துவையாமல் எல்லாவற்றையும் அவர்களுக்கு அறிவித்ததையும்" அவர் தைரியமாய் அவர்களைப் பார்த்துச் சொல்லக்கூடியவராயிருந்தார். அவர் எபேசியருக்கு எழுதின நிருபத்தில், திவ்விய அறிவில் அவர்கள் வெகுவாய் விர்த்தியடைந்து வந்ததற்காக அவர்களைப் புகழ்ந்துகொள்ளுகிறார். அந்தச் சபை இவ்வளவாய்த் தேறியிருந்தபோதிலும் தாம் அவர்களை விட்டுப்போய்விட்ட பிற்பாடு ஒருவேளை அது சீர்கெட்டுப்போகுமோவென்று அவர் பயமுங் கவலையுமுடையவராயிருந்தார். என்னத்தினாலென்றால் "மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் அவர்களுக்குள் நுழைந்து, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று" அப்போஸ்தலன் அறிந்திருந்ததினாலேதான். இந்த எச்சரிப்பு எவ்வளவோ அவசியமென்று, இதற்குக் கொஞ்சக்காலத்துக்குப்பின் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தினாலே பரிஷ்காரமாய்த் தெரியவருகிறது. "ஆசியாநாட்டிலிருக்கிற யாவரும் என்னைவிட்டு விலகினார்கள்" என்று அவர் ஓரிடத்தில் பிரலாபிக்கிறார். இயோவான் அப்போஸ்தலனுக்கு அருளப்பட்ட தரிசனையிலும் இந்தச் சபையார் "ஆதியிற்கொண்டிருந்த அன்பைவிட்டார்கள்" என்று முறையிட்டிருக்கிறது. அதாவது கள்ளப்போதகர்களால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டு சுவிசேஷத்தின் பலத்தை ஒருவாறு கைநெகிழ்ந்து மார்க்க வைராக்கியத்தில் குன்றிப்போனார்களென்று அவர்கள்பேரில் கனமான குற்றம் பாரிக்கப்பட்டிருக்கிறது.

எபேசுச் சபைக்கு அனுப்பப்பட்ட இந்த நிருபத்தில் மேற்படி சபையின் ஆதி நிலைமையும் சீரும் வெகு திட்டமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. அது செய்த கிரியைகள், பட்ட பிரயாசங்கள், காண்பித்த பொறுமை, பொல்லாப்பை நிர்ணயத்தோடு எதிர்த்து நின்றது, அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று பிதற்றிக்கொண்டதைக் கரிசனையாய்ச் சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்தது, காமவிகாரம் சிற்றின்பம் முதலிய துர்நடத்தைகளுக்கு இடங்கொடுத்த நிக்கொலாய் மதஸ்தரின் கிரியைகளைக் கடைசிவரையும் வெறுத்துத் தள்ளினது இவைமுதலிய விசேஷங்களெல்லாம் அச்சபைக்குப் புகழ்ச்சியாகப் பாராட்டப்படுகிறது. என்றாலும் "ஆதியிற்கொண்டிருந்த அன்பைவிட்டது" என்ற குற்றமும் அதின்பேரில் சாட்டப்படுகிறது. அச்சபையாரிடத்தில் துவக்கத்தில் விளங்கின அன்பும் வைராக்கியமும் ஒருவாறு குன்றிப்போயிற்று என்பதே அவர்கள் பேரில் கூறப்படுகிற குறைவு.

இந்தக் குறைவினிமித்தம் எபேசுச் சபையானது ஆதியில் அடைந்திருந்த ஆவிக்குரிய செழிப்பும் சிறப்பும் பொருந்திய நிலைமையை நினைத்து, சீர்கெட்டுப்போன அதன் தற்கால நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கவும், தன் சீர்கேட்டைக்குறித்துப் பச்சாதாபப்பட்டு மனந்திரும்பி ஆதியிலிருந்த மேலான நிலைமையை அடைந்துகொள்ளப் பிரயாசப்படவும் இங்கே அதற்குப் புத்திசொல்லியிருக்கிறது. மேலும் அது சீர்ப்பட்டு ஆதியிற்செய்த கிரியைகளைச் செய்து, ஆதியிற் காண்பித்த பொறுமையையும் பிரயாசத்தையும் வெளிப்படுத்தவேண்டுமென்று எச்சரித்து, மேற்படி எச்சரிப்புக்கிணங்கிச் சீர்ப்படாத பட்சத்தில் "அதின் விளக்குத்தண்டு அதனிடத்தினின்று நீக்கிவிடப்படும்" என்று பயமுறுத்தியுமிருக்கிறது. இதின் பொருள் என்னவென்றால் அந்தச் சபையில் வீசியிருந்த கிறிஸ்துமார்க்க ஒளி மங்கிப்போய் அச்சபையார் தம் பூர்வ அவபக்திக்கும் மற்றுங் கள்ளமார்க்கங்களுக்கும் திரும்புவார்கள் என்பதுதான். அதற்கு விரோதமாய் இந்த ஆக்கினையைக் கூறுகிறவர், ஏழு சபைகளின் தூதர்களாகிய ஏழு நட்சத்திரங்களைத் தமது வலதுகரத்திலேந்திக்கொண்டு, ஏழு சபைகளாகிய ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவரும், இவ்வாறு அந்தந்தச் சபையின் எதார்த்தமான சீரையும் ஸ்திதியையும் உள்ளபடி அறியக்கூடியவருமான கிறிஸ்து இரட்சகரே. இதில் வருகிற ஒவ்வொரு நிருபத்திலும் கர்த்தராகிய இயேசுவானவர் அது அதிலடங்கிய விசேஷங்களுக்கடுத்ததான ஒவ்வொரு விசேஷித்த பட்டப்பெயரால் பேசுகிறதை எவர்களும் கவனிக்கலாகும்.

எபேசுச் சபைக்கு விரோதமாய்க் கூறப்பட்ட மேற்படி ஆக்கினை எவ்வளவு பூரணமாய் நிறைவேறியிருக்கிறதென்று எபேசுவின் தற்கால ஸ்திதி நன்றாய்ச் சாக்ஷியிடுகின்றது. அதற்குச் சொல்லப்பட்ட எச்சரிப்புக் கவனிக்கப்படவில்லை. அதற்கு விரோதமாய்க் கூறப்பட்ட பயமுறுத்துதல் பொருள் செய்யப்படவில்லை. ஆகையால் எபேசுப் பட்டணம் தற்காலத்தில் திவ்விய சத்திய ஒளி மங்கிப்போன நகரமாய்க்

காணப்படுகிறதுமன்றி, சின்ன ஆசியாவின் தலை நகரியாகிய அதற்கு ஆதியிலிருந்த செல்வத்தையுஞ் சிறப்பையும் விளக்கிய ஒரு அறிகுறிதானும் காணப்படுகிறதேயில்லை.

ஒருகாலத்தில் மகா பிரஸ்தாபமடைந்திருந்த இந்நகரத்தின் தற்கால ஸ்திதியைக்குறித்து அமெரிக்கா தேசத்து மிஷனரி ஒருவர் எழுதியிருக்கிறதை இதற்கு அத்தாட்சியாக அடியில் எடுத்துரைக்கிறோம்.

அவர் சொல்லுவது;—"சிமிர்னா நகரத்தைவிட்டுப் புறப்பட்டு பன்னிரண்டு மணிநேரம் சவாரிசெய்து ஐசலுக்குஎன்ற இடம் வந்து சேர்ந்தோம். எபேசுப்பட்டணம் சிமிர்னாவுக்குத் தெற்கே நாற்பது மைல் தூரத்திலிருக்கிறதென்று ஸ்திரேபோ என்ற நூலாசிரியன் குறிப்பித்திருக்கிறான். எங்கள் பிரயாணமும் இதற்கு ஒத்திருந்தது.

ஐசலுக்கு ஊரில் இங்கிலிஷ் துரைமக்கள் மூவரைக்கண்டோம். இவர்கள் எகிப்து சிரியா தேசங்களில் பிரயாணஞ் செய்துவிட்டு சிமிர்னா நகரத்துக்குப் போகிற மார்க்கத்தில் அங்கே தங்கியிருந்தவர்கள். இந்த ஊரில் சத்திரம் என்று சொல்லத்தக்கது ஒன்றே ஒன்றிருக்கிறது. அதிலேயே நாங்களெல்லாரும் தங்கியிருந்தோம். அவ்விடுதியின் சுவர்கள் கல்லினாலும் மண்ணினாலும் கட்டப்பட்டவைகள். அதின் கூரை புல்லினாலும் வைக்கோலினாலும் வேயப்பட்டு தகைவிலான் குருவிக்கூடுகளால் நிறைந்திருந்தது. மேற்படி விடுதி இரண்டு அறையுள்ளது. ஒன்று பிரயாணிகளுக்கும் மற்றது அவர்கள் குதிரைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தக் குதிரைலாயத்துக்குச் சாப்பிடுகிற அறைவழியாய்த்தான் போகவேண்டும். சத்திரத்துக்கு எதிரே பிரேதக் கல்லறை ஒன்றிருக்கிறது. அதில் தீட்டியிருந்த வாசகம் இப்பொழுது வாசிக்கக்கூடாதபடி கிட்டத்தட்ட மங்கிப்போயிருக்கிறது. கல்லறைக்கு அப்பாலே மகம்மதியர் பள்ளிவாசல் ஒன்றிருக்கிறது. அங்ஙனம் நின்று பார்த்தால் துருக்கருடைய பல ஸ்நானத்தொட்டிகள் அழிந்து கிடக்கிறதைக் காணலாம். சத்திரத்தைச் சுற்றிலும் அலங்கோலமான சில குடிசைகள் கட்டப்பட்டிருக்கிறது. இந்தக் குடிசைகளுக்குத்தான் வழக்கமாய் ஐசலுக்கு ஊர் என்று சொல்லுகிறது"

(இன்னும் வரும்.)

நாளுவர்த்தமானம்.

The Fortieth Jubilee.

நாற்பதாம் வருஷத்து யூபிலி உற்சவம்.

1878-ம் ௵ ஜனுவரி ௴ 8 ௳ மங்கல வாரம் மகா கனம்பொருந்திய வேத சாஸ்திர பண்டிதராகிய கால்டுவெல் அத்தியக்ஷரவர்களினது இந்திய திருப்பணிவிடையின் நாற்பதாவது யூபிலி வருஷோற்சவம் இடையன்குடியில் கொண்டாடப்பட்டது.

மகா கனம் அத்தியக்ஷரவர்கள் இங்கிலாந்திலிருந்து 1838 ௵ ஜனுவரி ௴ 8 ௳ சென்னபட்டண துறைமுகத்தில் வந்திறங்கினது முதல் நாளதுவரையும் சென்ற நாற்பது வருஷங்களாய் தேவ கிருபையால் குருவாகவும் பின்பு அத்தியக்ஷராகவும் இந்நாட்டில் தேவ பணிவிடையை நடாத்திவரப் பெற்ற பேறுக்காக, இடையன்குடி

இராதாபுரம், முதலூர், கிறிஸ்தியானகரம் ஆகிய தென்பாகத்து ஐரோப்பிய சுதேச குருக்களும், உபதேசி உபாத்திமார்களும், மாணாக்கர் பள்ளிப்பிள்ளைகளும், சபை அங்கத்தவர்களும் ஒன்றுகூடி அந்தநாளை கருணாகர தேவனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரஞ் செலுத்தும் சுபதினமாகக் கொண்டாடக் கருதி, அந்தப்படி மேற்படி தெய்தியில் காலை 7 மணி முதல் இரவு 11 மணிவரையும் அடியிற்கண்ட நானாவகையாய் பார்ப்போர் மனங்களிக்க, கேட்போர் உளஞ்செழிக்கக் கொண்டாடினார்கள்.

முந்தின நாள் இரவு தொடங்கி மேற்காட்டிய நாலா சேகரங்களிலுமிருந்து பலரும் வந்து அங்கங்கே தங்கியிருக்க, கஸ்பா போர்டிங் பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் வாலிபரும் ஒன்று சேர்ந்து இலை தழை புஷ்பாதிகளால் கோயிலை அலங்கரிக்க, புதிதாய்க் கட்டப்படும் கற்கோவிலின் கோபுர சிகரத்தில் சிவப்பும் வெள்ளையுங் கலந்த சிலுவைக்கொடி பறக்க, மங்கலவார உதயம் 7 மணிக்கு கோயில் மணிகள் ஏககாலத்தில் சதுர்தொனியாய்ச் சப்தித்தது. உற்சவத்துக்கு வந்த ஆயிரக்கணக்கான யாவரும் சிறந்த வஸ்திராபரண அலங்கிர்தத்துடன் தங்கள் கரங்களில் புத்தகங்களேந்தினவர்களாய் கோயிலுக்கும் பங்களாவிற்குமிடையில் வந்துகூடினார்கள். கூடவே எல்லாரும் அத்தியக்ஷரவர்களுடன் ஊர்கோலம் வருதற்கென்று, முன்னணியில், போர்டிங் ஆண் பெண்பிள்ளைகள் தங்கள் இருபக்கங்களிலும், "தேவனே எங்கள் அத்தியக்ஷரை ஆசீர்வதியும்' "அத்தியக்ஷ ஆதீனம் வாழ்க" என்று தீட்டப்பட்டதும், இன்னமும் பல அட்சரங்கள் வரையப்பட்டதுமான நானாவித துவசங்களைப் பிடித்தவர்களாய் நிற்கவும், சாயர்புரம் மாணாக்கர் அவர்கள் பின் கேதனங்களேந்தி நிரைபிடிக்கவும், சுதேசிகளான ஒன்பது குருக்கள் வெள்ளை அங்கிதரித்து அவர்கள் பின் சோடணிக்கவும், மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் தங்கள் பக்கத்தில் பொன்மயமான சிலுவைக்கொடி பறக்க உத்தியோக உடையணிந்தவர்களாய் அவர்கள் பின் வந்து நின்றார்கள். பின்பு, உபதேசிமார் உபாத்திமார்களும், அவர்கள் பின் சபையின் புருஷர் ஸ்திரீகளும் இடைக்கிடையே விருதுக்கொடிகளும் மங்கல துவசங்களும் புடைசூழ்ந்தவர்களாய் முறையே நிரை வகுத்து நின்றார்கள். கனம்பொருந்திய ஒயற்றையரவர்களும், சங்கை ஷேராக் துரையவர்களும் மேற்படி நிரைமுறை பிரளாதபடி தளபதிகள்போல நாற்சாரியும் கண்காணித்துவர, பாடகர்கள் அத்தியக்ஷரவர்களுக்கு முன்னும் பின்னும் தோத்திர கீதம் பாடிக்கொண்டு அடிமேல் அடிவைத்து நடக்க, அந்தப்படியே வணக்கமாய் ஊர்கோலஞ் சுற்றி கடைசியாய் பக்திவிநயத்துடன் எல்லோரும் ஆலயத்துட் பிரவேசித்தனர்.

பிரவேசிக்கவே, கனம்: ஒயற்றையரவர்கள் ஆராதனை நடத்தினார்கள். அப்போ இந்தச் சுபதினத்திற்கென்று குறிக்கப்பட்ட 96 ம் 103 ம் சங்கீதங்கள் பாடப்பட்டது. பின்பு கனம்: பாக்கியம் ஐயர், வெளிப்படுத்தல் 21 ம் அதிகாரத்தை விசேஷித்த பாடமாக வாசித்தார். மூன்றும் சுருக்கஜெபத்துக்குப்பின்பு ஏசா. 52: 7 ல் அடங்கியிருக்கிற "How beautiful upon the mountains" என்ற கீதத்தை சங்கை ஒயற்றம் மாளவர்கள் கின்னரத்தில் கொட்ட, போர்டிங் பிள்ளைகள் இங்கிலீஷில் வெகு இன்பமாய்ப் பாடினார்கள். பின்பு அத்தியக்ஷரவர்கள் எபி. 13: 8 ல் கண்டிருக்கிறபடி, "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்ற வாக்கியத்தின்பேரில், (1) கிறிஸ்துவின் திவ்விய இலக்ஷணங்களும், அவருடைய அன்பும், இரட்சிப்பின் பலன்

களும், தமது பக்தருக்கு அளிக்கும் மறுமையின் நன்மைகளும் நேற்றும் இன்றும் என்றும் மாறாததென்றும்; (2) அப்படியே மெய்க்கிறிஸ்தவர்களும் அவரைப்போல விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் அன்பிலும் தேவபக்தியிலும் மாறாதவர்களாயிருக்கவேணுமென்றும், இவைகளில் மாறாமலிருக்கிறவர்கள் அவைகளை அபிவிர்த்திசெய்வதில், அருணோதயமுதல் உச்சிப்பகல்வரையும் தன் பிரகாசத்திலும் கிரணத்திலும ஓட்டத்திலும் அதிகரித்தே வருஞ் சூரியனைப்போல மாறுகிறவர்களாயிருக்கவேணுமென்றும்; (3) இந்தப்படி இம்மையில் கிறிஸ்துவைப் பின்பற்றின தேவபக்தர்களுக்கு மறுமையில் அவர் என்றும் சதாகாலமாய் அவர்களுடைய மாறாத பங்காகவேயிருப்பாரென்றும் வெகு சுருக்கமும் அதிவிளக்கமுமான ஒரு பிரசங்கம் செய்தார்கள். பின்பு காணிக்கையுடன் ஆராதனை முடிந்தது. முடிந்த அந்நேரமே பரி. நற்கருணை பெறுவோர் வெகு அமைதலும் மரியாதையுமாய் புருஷர் ஓர் பக்கமும், ஸ்திரீகளோர் பக்கமும் நிரை நிரையாய் உட்கார்ந்தார்கள். அச்சமயம் 11 குருக்களால் 275 ஸ்திரீ புருஷர்களுக்கு பரி. நற்கருணை பரிமாறப்பட்டு, கடைசியாய் அத்தியக்ஷரவர்களின் ஆசீர்வாதத்துடன் கூட்டங் கலைந்தது.

அதன்பின் ஒரு மணிக்கு மறுபடியும் மணியடிக்கப்பட்டது. அப்போ சகலமான ஜனங்களும் பேட்டிக்குரிய ஆயத்தமாய் கோவிலில் கூடிவந்தார்கள். அந்தந்தக் கிராமப் பிரதானிகள் தங்கள் கைகளில் புஷ்பாதிகளேந்தினவர்களாய் ஒரு பக்கமும், தேவர்த்தனர் இச்சுபதினத்திற்கென்று நவமாய் இயற்றப்பட்டிருந்த பிரதிகளுடன் வேறோர் பக்கமும், உபசாரப்பத்திரம் கைப்பிடிக்கவோ மற்றோர் பக்கமும் ஒருங்கே நிற்க, மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் குடும்ப சமேதராய் அக்கோயிலினுள் வந்து உட்கார்ந்தார்கள். உடனே எல்லாரும் எழுந்து வந்தனம்சொல்லி இருந்தனர். பாடகர் சமயோசித கீதங்களை தங்கள் நிலையிலெழுந்து நின்று பாடிக்கொண்டிருக்க, சங்கேதப்படி அத்தியக்ஷரவர்களுக்கும் அவர்கள் பத்தினிக்கும் புஷ்பாலங்காரஞ் செய்யப்பட்டது. பின்பு கனம்: பாக்கியம் ஐயர் நடுவே நின்று, நிகழ்ந்த காலங்களில் அத்தியக்ஷரவர்கள் இந்நாட்டவரின் இகபர வாழ்வுக்கென்று எடுத்துக்கொண்ட அரும்பிரயாசங்களையும், செய்துவந்த போதனாப்பியாசங்களையும், கொடுத்துதவிய பொருள் சகாயங்களையும், அவற்றால் விளைந்திருக்கின்ற நற்பயன்களையும் ஒருவாறு விளக்கிய வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து அதை அத்தியக்ஷரவர்கள் கரமளித்தனர்.

அப்போ மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் எழுந்து அன்பின் கண்ணீரோடானந்த பரவசமாகிச் சொல்வார்கள், தேவஊழியத்திற்கென்று சீமையிலிருந்து புறப்பட்டு 1838௵ ஜனுவரி௴ 8௳ சென்னபட்டணத்துறை வந்திறங்கின என்னை, இம்மட்டுங்காத்து இரட்சைபுரியும் ஜீவதயாபரனை ஸ்தோத்திரம்பண்ணுகிறேன். சீமையிலும் இந்தியாவிலும் என் உடற்கூறைக் கண்ணுற்ற துரைகள் பலரால், அவர்கள் புத்திக்கேற்க, நான் இந்தியாவில் ஒரு வருஷமாத்திரம் இருக்கக்கூடியதென்பதாய்த் தீர்ப்பிடப்பட்டிருந்தாலும், இந்த 40ம் வருஷோற்சவதினத்தை நான் காண அன்றே தேவதீர்ப்படைந்தவனாய் இன்று உங்கள் நடுவே எழுந்து நிற்கக் கிருபைபெற்றிருக்கிறேன். "உங்கள் வழிகள் என்னுடைய வழிகளல்ல" என்று திருவாக்குரைத்த கிருபாகரர்க்கே ஸ்தோத்திரம். இந்தியாவுக்கு வந்திருந்த அக்காலத்தோரான ஐரோப்பிய ஐயன்மார் யாவரும் இறந்துபோயிருக்க நான் ஒருவன் மாத்திரம் மீந்திருப்பது, காட்டில் காய்ந்து இலை யுதிர்ந்து நிற்கும் மரத்தின் ஓர்

கிளையின் நுனியில் சற்றே தொங்கி காற்றில் அசைவாடும் ஓரே இலைக்குச் சமமாயிருக்கிறது. அந்த ஒரு இலையும் எப்போ விழுமோ தெரியாது. இம்மட்டும் என்றால் இந்நாட்டில் செய்யப்பட்டும் நன்றுபெற்றும் வருகிற பல செயல்களையும் சபாநாயகருக்கே பாதகாணிக்கையாக வைக்கிறேன். சென்ற நாற்பதாண்டாய் இவ்விந்தியா கல்வியிலும் நாகரீகத்திலும் சுவிசேஷ விர்த்தியிலும், புகைரதம் மின்தந்தி நீராவி இயந்திரம் முதலிய பல நூதன ஏற்பாடுகளிலும முன்னுக்கு வந்திருப்பதைப் பார்த்த நான், இன்னமும் சடாத்மார்த்தமான நானாவிஷயங்களிலும் அது வளர்ந்தோங்க ஞானகரனைப் பிரார்த்திக்கிறேன். தேவனுக்கென்று உழைப்பதில், அதிகம் அல்லது கொஞ்சமென்ற காலத்திட்டத்தைக் கவனிப்பது கூடாத காரியம். ஏனெனில் மறுமையில் காலத்தளவாயல்ல, அவரவரின் விசுவாசம் பக்தி உழைப்பு முதலிய அளவுக்குத்தக்கதாகவே பலனளிக்கப்படும். ஆதலால் இனி மீதியாயிருக்கும் நாளை நாம் தேவமகிமைப்பிரதாபத்துக்கென்றே செலவிடுவது உத்தமம் என்று இப்படிப் பலவாறாய் மனதிற்குணர்ச்சியும் எழுப்புதலுமுண்டாகச் சாங்கோபாங்கமாய் உபந்யாசித்து, பின்பு, "ஒன்றாக ஆண்டிருக்கிற" என்ற தோத்திர கீதத்துடன் சனங்களுக்கு ஆசீர்வசனங்கூறி அனுப்பினார்கள்.

அதன்பின் மூன்று மணிக்குமேல் விசேஷித்த வகையாய் ஆயத்தம்பண்ணப்பட்டிருந்த இனிய விருந்து சுதேச குருக்கள் முதலானவர்களுக்கு பங்களாவில் நடந்தது. அச்சமயம் பந்தி மேசையில் இடைக்கிடை அபிநயித்துக்கொண்ட ஐரோப்பியருடைய யுக்தி வசனங்கள் காதுக்கின்பமும் மனதுக்கு உவப்புமாயிருந்தது. பின்பு, சங்கைபொருந்திய கால்டுவெல் அம்மாளவர்கள் விருந்தினர்க்கு, தங்கள் பெற்றோர் உற்றோர் இஷ்டர் பந்துக்கள் அநேகருடைய முகப்படங்களைக் காட்டி எக்களிப்புண்டாக்கினார்கள். அதன்றி, அந்நேரம் 350 பள்ளிப்பிள்ளைகளுக்கும் 150 ஏழைகளுக்கும் சம்பிரமபோசனம் அளிக்கப்பட்டது. விருந்துண்ணும்பரியந்தம் மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் தங்கள் குடும்ப சகிதமாய் பக்கத்தேயிருந்தமையால், பந்தமுடிந்த அந்த நிமிஷம் பிள்ளைகளெல்லாரும் மரியாதையாய் நின்று "God save the Queen" என்ற கீதத்தை இந்திய சக்கிரவர்த்தினிக்காகப் பாடி, அத்தியக்ஷரவர்களையும் ஒட்டோலகமாய் பெருந்தொனியோடு வாழ்த்தினார்கள்.

இரவு ஒன்பதுமணிக்கு போர்டிங் ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்திற்குமுன் வாணவேடிக்கை நடந்தது. காட்சிக்கு வந்த ஜனத்தொகைக்குக் கணக்கில்லை. விந்தைவிந்தையான வாணங்கள் ஆகாயத்திலும் பூமியிலும் இரைந்து விசிறிக்கொண்டிருக்க, கோபுர மத்தியில் சந்திரோதயம்போன்ற மத்தாப்புகள் எரிந்து இலங்கியதால், அங்குத்தொங்கி இயங்கிய சிலுவைக்கொடியானது அதிவிநோதமாய்த் துலங்கிற்று. மேலும் குதிரை, இராக்ஷதன் கயிறு, மீன்கொத்தமுதலிய வாணக்காட்சி, கூடிய ஐரோப்பியருள்ளத்தைப் பூரிப்பித்தது. இப்படியாக அத்தியக்ஷரவர்களினது நாற்பதாவது யூபில் வருஷோற்சவக் கொண்டாட்டம் நன்குபெற்றது.

இதை வசிக்கும் இஷ்டரே, முற்காலத்தில் யூதச்சபையின் பரிபாலனரும் தலைவருமாகிய தாவீது, சாலொமோன் முதலான மகாத்துமாக்களுக்கு தேவன் 40 வருஷ அரசாக்ஷி கடாக்ஷித்த வண்ணம் இவ் அத்தியக்ஷரவர்களுக்கும் இம்மட்டுங் கருணைபுரிந்த நமதருள் நாதனைத் துதித்து "உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள், உன் கண்கள் உன் போதகர்களைக் காணும்" என்ற திருமொ

றிப்படி, திருப்பணிவிடையை நன்குமுடிக்க இன்னமும் அவர்களுக்கு தேவன் நீடிய சுகாயுளையும் திவ்விய பெலனையும் ஞானவரங்களையும் மேன்மேலும் பொழிந்தருள அவனை மன்றுடுவோமாக.

ருஷிய துர்க்கிய யுத்தம்.

ருஷியருக்கும் துர்க்கியருக்கும் உண்டான யுத்தம் இன்னம் முடியவில்லை. ஆயினும் விரைவில் யுத்தம் நின்று, இரு சக்ஷியாரும் சமாதான சங்கேதங்களுக்குட்படுவார்களென்று நம்ப முகாந்தரமுண்டு. ருஷியர் கேட்கும் சங்கேதங்களை சுல்த்தான் வரப்பெற்முர். அவையாவன: பல்கேரியாத்தேசம் முழுவதும் கப்பங்கட்டும் பிரதேசமாகி, அதற்கு அந்தப்பேரே வழங்கி, அதைருஷியாவில் நியதிபெறும் கிறிஸ்த அதிகாரி ஒருவர் ஆளுவது; ரொமேனியா, மொண்டி நிக்ரோ-ஸெர்வியா என்னும் பிரதானிக்க பிரதேசங்கள் பின்னும் எல்லை அகலப்பெற்று ஸ்வாதீனமடைவது; போஸ்னியா–ஹெர்ஜிகோவினு அரசாட்சி சுதந்தரம் பிரத்தியேகமாய்ப் பெற்றுக்கொள்வது; மற்றக் கிறிஸ்தவ பிரதேசங்களிற் சீர்திருத்தம் திரளாக நடந்தேறுவது.

ருஷியாவிற்கு யுத்தத்தில் சேர்ந்த சேதம், செலவிற்குக் கட்டும் ஈடு ரொக்கமோ, பூதன பிரதேசமோ, வேறேதாயினுமோ, இன்னம் தீரவில்லை.

டார்டெனல்ஸ் ஜலசந்தியில் ருஷர் க்ஷேமரக்ஷணைக்காக அறுதியில் ஒரு உடன்படிக்கைசெய்யப்படும்.

இச்சங்கேதங்கள் ஐரோப்பாவின் தென்கீழ் பாகத்தின் ஒருமைக்கு நெற்றிக்கல்லாயிருப்பதை நசிப்பதுமன்றி, ஐரோப்பிய பிரித்தானிய துரைத்தன க்ஷேமத்தையும் பீடிக்குமென்று ஸ்ரீ நார்த்கோட் மொழிந்தார்.

ருஷாவும் துர்க்கியும் தமக்குள் பிரத்தியேகமாய் உடன்படிக்கை செய்துகொள்வது ஏற்காது. ஐரோப்பிய துரைத்தன பக்ஷத்தார் அனைவரும் சபைகூடிப் பேசித்தெளியவேண்டும்.

இதற்கு ஒளஸ்திரியா இங்கிலாந்துடன் சம்மதிக்கின்றது. ஆனால் மேற்படி சபையில் ருஷாவிற்குத் தானே ஆதிக்கம்பெற்றுக்கொள்ளும் அபிப்பிராயம் இருக்கவுங் கூடும்.

சென்ற மாசம் பார்லிமெந்து சபை கூடிய சமயத்தில் மஹாராஜாத்தியவர்கள் சிங்காதனத்தில் வீற்றிருந்து செய்த பிரசங்கத்திற்கும், அன்றிரவு பிரபுஜனர் ஜனபிரதிநிதிகள் சபை இரண்டிலும் நடந்தேறிய விவாதத்திற்கும் உள்ளுறை பொருள் "போர்க்களை கூவலல்ல, போரைத் தடுத்தல்" கிழக்கு ஐரோப்பாவில் நடந்துவரும் கடுயுத்தத்தை முடிவிக்க பிரித்தானிய துரைத்தனத்தார் செய்திருக்கும் எத்தனங்களைப் பிரஜைகளுக்கு விவரணமாக வெளியிடும் ஆசையால் தாம் பார்லிமெந்து சபையைக் குறித்த காலத்திற்குச் சிறிது முந்தி மீளவும் கூட்டங்கூட வரவழைத்ததாக மஹாராஜாத்தியவர்கள் தெளிய மொழிந்தார்கள். துர்க்கி பிரத்தியேகமாய் இங்கிலாந்தை மத்தியஸ்தரம்படி கேட்ட கேள்விக்கு உத்தரமாக மஹாராஜாத்தியவர்

கள் துரைத்தனத்தார் ருஷ சக்கரவர்த்திக்குக் கடிதம் பிரயோகித்துச் சமாதான சங்கேதங்களை ஒப்புக்கொள்ளச் சித்தமாயிருக்கிறீரா என்று கேட்டதற்கு, சக்கரவர்த்தி சமாதான உடன்படிக்கை செய்வது தமக்கு மிகவும் பிரீதியென்று மறுமொழி பகர்ந்தார். பின்னிட்டு துர்க்கிக்கும் ருஷாவிற்கும் இதைத்தொட்டு நடந்தேறும் உத்தரபிரதி யுத்தரங்கள் இருதிறத்தாருக்கும் சமாதானமாய் முடியுமென்று மஹாராஜாத்தியவர்களுக்கு நம்பிக்கை உண்டாயிருக்கின்றது. இங்கிலாந்தின் விபக்ஷபாத ஸ்திதியை யுத்தம்செய்யும் இருதிறத்தாரும் இதுவரையில் விஸ்வாச பங்கமின்றிப் பேணி ஆசரித்துவந்தார்கள். அந்த விபக்ஷபாத ஸ்திதியின் சங்கேதங்கள் மீறப்படாதிருக்கிறவரையில் இங்கிலாந்து சங்கேத ரூபமாய்ச் சார்ந்தொழுகும் விபக்ஷபாத நிலையிற் பிரிவதில்லை. சண்டை நீடித்து நடந்து யாதாயினும் விபரீதம் எண்ணுவண்ணம் விளையுமானால் விக்கினம் உண்டாகுமுன்னதாகவே மஹாராஜாத்தியவர்கள் துரைத்தனத்தார் அதைத் தவிர்க்கும் உபாயம் பூர்வதிருஷ்டியாகச் செய்யும்படி நேரிடாது போகாது. இவ்வாறு விபரீதம் ஏதும் உண்டாகும் பக்ஷம் யுத்தசண்டமாருதம் அடிக்கத் தொடங்குமுன்னதாகவே அதற்குத் தகும் எத்தனம் செய்யும்பொருட்டுச் செலவிற்கு வேண்டும் திரவியமுதலிய சாதனங்களைச் சவதரித்துக்கொடுக்க பார்லிமெந்து சபையாரைக் கேட்டிருக்கின்றது.

நோட்டீஸ்.

(F. A.) எவ். எ. வகுப்பு.

நாளது ௵-த்து மெற்றிரிக்கிலேஷன் (Matriculation) பரீட்சையில் தேறினவர்கள் பெயர் ஜாபிதா பிரசுரமானவுடனே, பாளையங்கோட்டை இங்கிலிஷ்க்கல்விச்சாலையில் (F. A.) எவ். எ. வகுப்பு ஏற்படுத்தி நடத்தப்படுமென்று இதினால் தெரிவிக்கிறோம். மேற்படி வகுப்பிற்சேர்ந்து கல்வியப்பியாசஞ்செய்யப் பிரியமுள்ளவர்கள் மேற்படி கல்விச்சாலை தலைமை உபாத்தியாயரவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டியது.

H. Schaffter,

Principal of the C. M. S. English Institution,

Palamcottah.

பிப்ரவரிமீ நாள்28. தைமீ21உ முதல், மாசிமீ 18உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
வெ	1	உக	தம்முடைய தூதனை உனக்கு முன் அனுப்புவார். 1 மோ. 24:7.
ச	2	உஉ	கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். 27.
ஞா	3	உ௩	கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே உள்ளே வா. 31.
தி	4	உ௪	இந்தக் காரியம் கர்த்தராலே வந்தது. 50.
செ	5	உ௫	என் உதடுகள் அக்கிரமம் சொல்வதில்லை. யோபு 27: 3.
பு	6	உ௬	என் உத்தமத்தை என்னைவிட்டு விலக்கேன். 5.
வி	7	உ௭	ஆண்டவருக்குப் பயப்படுகிறதே ஞானம். 28: 28.
வெ	8	உ௮	பொல்லாப்பைவிட்டு விலகுகிறதே உணர்வு 28.
ச	9	உ௯	தேவரீர் என் பெலனாகிய பராபரன். சங்கீதம் 43:2.
ஞா	10	௩0	நீதியைச் சிநேகித்து ஆகாமியத்தைப் பகைக்கிறீர். 45: 7.
தி	11	க	பராபரன் நமக்கு அடைக்கலமானவர். 46: 1.
செ	12	உ	பராபரன் அதின் நடுவிலிருக்கிறார். 5.
பு	13	௩	சேனைகளுடைய கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார். 7.
வி	14	௪	பராபரன் பூமியனைத்துக்கும் இராசா 47:7.
வெ	15	௫	உமது வலது கரம் நீதியால் நிறைந்திருக்கிறது. 48:10.
ச	16	௬	நம்மை மரணத்தைக் கடக்க அழைத்துக்கொண்டுபோவார். 14.
ஞா	17	௭	நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான். நீதிமொழி 20: 7.
தி	18	௮	தீமைக்குச் சரிக்கட்டுவேனென்னாதே. 22.
செ	19	௯	கர்த்தராலே மனுஷனுடைய நடைகள் வாய்க்கும். 24.
பு	20	க0	மனுஷனுடைய ஆத்துமா கர்த்தர் தந்த தீபம். 27.
வி	21	கக	எல்லா மாம்சமும் புல்லைப்போலிருக்கிறது. ஏசாயா 40: 6.
வெ	22	கஉ	பராபரனுடைய வசனம் என்றென்றைக்கும் நிற்கும். 8.
ச	23	க௩	அவருடைய பலன் அவரோடுங்கூடவருகிறது. 10.
ஞா	24	க௪	சிலர் நித்திய சீவனுக்கு எழுந்திருப்பார்கள். தானி. 12. 2.
தி	25	க௫	சிலர் நித்திய நிந்தைகளுக்கு எழுந்திருப்பார்கள். 2.
செ	26	க௬	என் ஆத்துமா மரணவேதனைப்படுகின்றது. மாற்கு 14: 34.
பு	27	க௭	அப்பா பிதாவே, உம்மாலே எல்லாம் ஆகும். 36.
வி	28	க௮	நானே இருதயங்களை ஆராய்கிறவர். வெளி. 2: 23.

விசேஷ நாட்கள்.

2. அமாவாசை.
   பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.
3. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், நாலாம் ஞாயிறு.
10. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.
17. பௌர்ணமி.
   செப்துவகெசிமா ஞாயிறு.
24. செக்சகெசிமா ஞாயிறு.
   பரி. அப். மத்தியாவின் திருநாள்.

நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲௮௱௮௰௯.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

X. அதிகாரம்.

7. இப்பொழுது பவுல் தமது சத்துருக்களைக்குறித்து நேராய்ப் பேசுகிறார். வெளித்தோற்றத்தின்படி பார்த்தாலும் பவுல் தாழ்ந்தவரல்ல. யாராவது கிறிஸ்துநாதராலே அனுப்பப்பட்டவர்களென்று மேன்மை பாராட்டினால், அந்த நியாயம் தமக்கு அதிகமாய்ச் செல்லுமென்று பவுல் சொல்லுகிறார். வெளித்தோற்றங்களைக்கொண்டு எதிரிகள் பவுலை அற்பமாய் எண்ணினார்கள். ஒரு அப்போஸ்தலனுக்கு இருக்கவேண்டிய வெளித்தோற்றமான அடையாளங்கள் மற்றவர்களுக்கிருக்கிறதைவிட தமக்கு அதிகமாயிருக்கிறதென்கிறார்.

8. "நிர்மூலமாக்குகிறதற்கல்ல" அப்போஸ்தல அதிகாரம் அருளப்பட்ட நோக்கம் சபையை ஊன்றக்கட்டவே.

"அதிகாரம்" அப்போஸ்தல அதிகாரமாம். முக்கியமாய் முரட்டாட்டக்காரரை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிற அதிகாரத்தைக் குறிக்கும். (1 கொரி. 4: 21. 5. 5.) இந்த அதிகாரம் தங்களுக்கிருந்ததாக கள்ளப்போதகர்கள் ஒருவரும் சொல்லத் துணியவில்லை.

"மேன்மைபாராட்டினாலும்" தான் மேன்மைபாராட்டப் போகிற தீர்மானமாயல்ல, அப்படி நேரிட்டால் (Hypothetical) என்கிற உத்தேசக்கருத்தாய்ச் சொல்லுகிறார்.

இதற்கு முன் அப்போஸ்தலன் கொரிந்தியருக்கு (2) நிருபங்களை எழுதியிருந்தார். அவைகளைக்குறித்து இங்கே சொல்லுகிறாரென்று நினைக்கவேண்டாம். இப்பொழுது எழுதுகிற (2)-ம் நிருபத்தைக்குறித்துச் சொல்லுகிறாரென்று நிதானிக்கலாம். பவுல் கண்டிப்பான நிருபங்களை எழுதி சும்மா மிரட்டுகிறானென்று எதிரிகள் சொன்னார்கள். அப்போஸ்தலனோ, அப்படி நான் சும்மா மிரட்டுகிறவனல்ல, என் அப்போஸ்தல அதிகாரத்தின்படி ஒருவன் மேல் அற்புதமாய் தண்டனை வருவிக்க சக்தியுள்ளவனாயுமிருக்கிறேன். நான் பயமுறுத்தினால் அந்தப்படி நிறைவேற்றத்தக்க அதிகாரமுமுண்டென்று சொல்லுகிறதாகத் தோன்றும்.

10. கிறிசொஸ்தம் முதலான சில பூர்வத்தார் பவுல் குள்ளனும், கூனனும், மொட்டயனுமாயிருந்தாரென்று சொல்லுகிறார்கள். அதைக் குறித்து இந்த வாக்கியத்தில் சொன்னதாக சில வியாக்கியானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இந்த வாக்கியத்தில் சத்துருக்களல்

லவோ சொல்லியிருக்கிறார்கள், சத்துருக்கள் சொன்னதைக்கொண்டு நாம் தீர்மானிப்பது சரியல்ல. இந்த வாக்கியம் அப்போஸ்தலனுடைய அங்க ஈனத்தைக்குறித்துப் பேசுகிறதாக நாம் அர்த்தம்பண்ணவேண்டிய நிமித்தமில்லை. இந்த வாக்கியத்திற்கு அப்போஸ்தலன் தாமே (1 கொரி. 2: 1—3)ல் சொல்லியது வியாக்கியானமாயிருக்கிறது. எப்படியென்றால், பவுல் அப்போஸ்தலன் கொரிந்தியர் நடுவில் வந்திருந்தபோது, அதிகாரம் செலுத்துகிறவனாய் ஆள்பாதி ஆங்காரம் பாதியென்றிராமலும், நயவசனிப்பில்லாமலும், பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். இதைக்குறித்துச் சத்துராதிகள் சொன்ன குறை இதில் குறிக்கப்படுகிறதாக பெரும்பாலும் சொல்லப்படுகிறது.

12—18. மல்ல யுத்த விளையாட்டுக்களில் பந்தயம் பெற்றவர்களும் தோல்வியடைந்தவர்களும் பேசிக்கொள்ளுகிற வகையை உபமானமாக வைத்து அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

12. "சிலருக்கு" கள்ளப்போதகன்மாருக்கு.

"ஒப்பிடத்துணியமாட்டோம்" சிலேடை அல்லது எதிர்நிலைப்பொருள் அணியாய் (Irony) சொல்லுகிறதாகத் தோன்றும்.

"தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்ளுகிற" தமது பேரில் எதிரிகள் பொய்யாய்ச்சாற்றின குற்றத்தையே (8:1.5:12) பவுல் அவர்கள் பேரில் உள்ளபடி சாற்றுகிறார்.

"தங்களைக்கொண்டு" அளக்கிறதும் தாங்கள் தான். அளந்துகொள்ளுகிறதும் தங்களைத்தான். அவர்கள் உபயோகிக்கிற அளவுகோலும் தாங்கள் தான். இது புத்தியீனமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறார்.

13. தனக்குக் குறிக்கப்படாத இடத்தில் பவுல் பிரசங்கிக்கவில்லை. கொரிந்துப் பட்டணமும் அதை அடுத்த இடங்களும் அவருடைய எல்லைக்குட் பட்டதுதான் என்றுசொல்லுகிறார்.

"அளவுக்கு மிஞ்சி" எனக்குக் குறிக்கப்பட்ட எல்லைக்கு மிஞ்சி.

"அளவுப் பிரமாணம்" தேவனால் பவுல் அப்போஸ்தலனுக்குப் பிரசங்கிக்கும்படி குறிக்கப்பட்ட இடங்களின் எல்லைப் பிரமாணமென்று ஒருவர் சொல்லுகிறார் ரோ. 15: 20. இவ்விடத்தில் கொரிந்தியர் இடம்வரையும் போய் எட்டுகிறதை அளவுப் பிரமாணம் என்கிறார்.

14. பவுல் தனக்குக் குறிக்கப்பட்ட அளவுப் பிரமாணத்தின்படி எருசலேம் தொடங்கி சின்ன ஆசியாவிலுள்ள நாடுகளெங்கும் பிரசங்கித்தார். சின்ன ஆசியாவிலிருந்து மக்கேதோனியாவுக்குப் போய் அங்கே அநேக பிரதான பட்டணங்களில் பிரசங்கித்தார். பிற்பாடு கிரேக்கையிலும் முக்கியமாய் அத்தேனேயிலும் பிரசங்கித்துக் கடைசியாகக் கொரிந்துக்கு வந்தார். இதற்கு முன் ஒரு நாளும் யாராவது கொரிந்துவில் பிரசங்கம் பண்ணவில்லை.

"விர்த்தியாகும்போது" கொரிந்துக் கிறிஸ்தவர்கள் தொகையிலும் மெய் விசுவாசத்திலும் விர்த்தியாகும்போது கொரிந்துக்கு அப்புறமான இடங்களிலும் பிரசங்கிப்பதாகச் சொல்லுகிறார்.

14—16. வரை பவுல் அப்போஸ்தலன் கள்ள அப்போஸ்தலன்மாருக்கு மேற்பட்டவனென்று நியாயங்களால் ரூபிக்கிறார்.

(1) கொரிந்தியருக்குப் பிரசங்கம்பண்ணும்படி கள்ளஅப்போஸ்தலன்மாருக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஆனால் பவுலுக்கோ அந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

(2) ஸ்தாபிக்கப்பட்டிருந்த சபைகளை கள்ளஅப்போஸ்தலன்

மார் அழிக்க வந்தார்கள்; பவுலோ கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடினார். ரோமர் 15: 25.

17, "மேன்மைபாராட்டுகிறவன்" எதிரிகள் மற்றவர்களுடைய எல்லைக்குட்பிரவேசிப்பதைச் சிறப்பாக எண்ணி மேன்மைபாராட்டிவந்தார்கள். பவுலோ கர்த்தரைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டுமென்கிறார். ஏனென்றால் தெய்வஊழியத்திற்கு வேண்டிய கிருபையையும் சக்தியையும் சித்தியையும் அளிக்கிறவர் அவரே.

18. "கர்த்தரால் புகழப்படுகிறவனே" ஆவியின் வரங்களினாலும், அவனுடைய ஊழியத்தில் கிறிஸ்துவினுடைய வல்லமை அவனுக்கு அளிக்கப்படுவதாலும் கர்த்தர் அவனைப் புகழுகிறார்.

XI. அதிகாரம்.

பரிசுத்த பவுல்: தம்மைக்குறித்து கொரிந்தியருக்கு நல்லெண்ணம் படவும், தம்மைக்குறித்து சரியான அப்போஸ்தலனல்ல என்று கள்ளப்போதகன்மார் சொன்னதினாலே, தமது அப்போஸ்தல அதிகாரத்தைப்பற்றிக் கொரிந்தியருக்குச் சரியான எண்ணத்தை உண்டாக்கவும் கள்ளப்போதகன்மார் சொன்ன ஒரு காரியத்தைப் பிடித்து விரிவாய்ப் பேசுகிறார், அதாவது தாம் சபையின் செலவினாலே ஆதரிக்கப்படவில்லையென்கிறார். மேலும் முக்கியமாய் யூதக் கள்ளப்போதகன்மாரோடு தம்மை ஒப்பிட்டு, தாம் கிறிஸ்து மார்க்கத்துக்காகப் பட்ட மிகுதியான துன்பங்கள், சபையாருக்காகப்பட்ட பிரயாசங்கள், அவர்களுக்காக எடுத்த கவலைகள், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்காகவும் பரிதாபப்பட்டது முதலான எவ்விஷயத்தைப் பார்த்தாலும் தாம் மேற்படி கள்ளப்போதகன்மாருக்கு மேற்பட்டவனென்று இந்த அதிகாரத்தில் காட்டுகிறார்.

1. தற்புகழ்ச்சி இயல்பிலே புத்தியீனந்தான. ஆனால் இங்கே பரி. பவுல் தமது அப்போஸ்தலப் பட்டத்தை ஸ்தாபிக்கவேண்டிய அவசியம் நேரிட்டபடியினாலே தம்மைப்பற்றி இப்படிப் பேசுகிறார். இது புத்தியீனமல்ல. 16 வா. 12: 6.

2. "நியமித்த" பவுல் கொரிந்துவில் பிரசங்கித்தபோது நியமித்தார்.

"கிறிஸ்து" பவுல் தம்மை மணவாளனாகச் சொல்லவில்லை. திருச்சபையாகிய மணவாட்டியை ஞானமணவாளனாகிய கிறிஸ்துவினிடத்துக்கு நடத்துகிறவனாய் மட்டுமிருந்தார் என்கிறார். யோ. 3: 29.

"கற்புள்ள கன்னிகையாக" திருச்சபையானது ஆசீர்வதிக்கப்பட்ட மரியாளைப்போல, கன்னிகையும், தாயுமாயிருக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், பிறர்முகம்பாராத அதாவது களங்கமில்லாத விசுவாசத்திலும், பரிசுத்த நடக்கையிலும், பரம மணவறையின்பேரிலுள்ள நம்பிக்கையிலும் உண்மையாய் நிலைத்திருப்பேனென்று பரம நாயகராகிய கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானத்தில் வாக்குப்பாடு கொடுத்திருக்கிறான். அந்த உடன்படிக்கையில் பிசகாதிருப்பது கடமையாம்.

"ஒரே புருஷனுக்கு" கிறிஸ்து ஒருவரோ ஆத்தும நேசராயிருக்கிற விஷயத்தில், கிறிஸ்துமார்க்கமானது ஆத்துமாவைக் கிறிஸ்துவுக்கு மணம்புரிகிற கலியாணமாயிருக்கிறது. (3 வா). ஆகவே விக்கிரகபத்தியானது ஆவிக்குரிய விபசாரமாயும், பாஷண்டமானது, ஆவிக்குரிய வேசித்தனமாயுமிருக்கிறது.

“வைராக்கியம்கொண்டிருக்கிறேன்.” உங்கள் நன்மையை விரும்பி உங்களுக்கு உண்மையாயிருக்கிறேன். யாராவது உங்களை தேவனைவிட்டும், சத்தியத்தைவிட்டும், என்னைவிட்டும் பிரிக்கத்தக்கதாக உங்கள் இருதயங்களைக் கவர்ந்துகொண்டால், அவர்களுக்கு விரோதமாக மிகவும் கண்டிப்பாய் தேவ வைராக்கியம்கொண்டிருக்கிறேன். உங்கள் கள்ளப்போதகன்மாரும் உங்களுக்காக வைராக்கியம காட்டுகிறவர்கள்போலிருப்பார்கள். யூதமார்க்க உடன்படிக்கைக்குட்படுத்தி விருத்தசேதனக் குடும்பத்துக்குட்படுத்த வெகு கவலையாயிருப்பார்கள். ஆனால் அந்த வைராக்கியம், பொறாமையான வைராக்கியம். அவர்கள் நோக்கமெல்லாம் கூடி, உங்கள் ஞானஸ்நான உடன்படிக்கையினின்று உங்களை விழத்தட்டி யூதமார்க்கத்துக்கு இழுத்துக்கொள்ளவே.

3. சாத்தான் சர்ப்பரூபமெடுத்து ஏவாளிடத்தில் வந்தது இந்த வாக்கியத்தினால் மெய்ப்பிக்கப்படுகிறது. வெளி. 20: 2.

ஆதாம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருந்ததுபோல, ஆதாமின் மனைவியும், சீவனுள்ளோருக்கெல்லாம் தாயுமாகிய ஏவாள், கிறிஸ்துவின் சபைக்கு முன்னடையாளமாயிருந்தாள். ஆதாம் நித்திரையாயிருக்கும்போது ஆதாமின் விலாவிலிருந்து ஏவாள் உண்டாக்கப்பட்டதுபோல, கிறிஸ்து சிலுவையிலிருக்கும்போது அவருடைய விலாவிலிருந்து திருச்சபை உண்டானது. ஆதாமோடு ஏவாள் தேவனாலே இணைக்கப்பட்டதுபோல, கிறிஸ்துவோடு திருச்சபையும் தேவனாலே இணைக்கப்பட்டது. பிசாசு ஏவாளை வஞ்சித்ததுபோல, திருச்சபையையும் அவன் வஞ்சிக்கப்பார்க்கிறான். வெளி. 12: 9—17.

பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தைக் கொரிந்தியர் சமுசயிக்கத்தக்கதாக கள்ளப்போதகன் பகிரங்கமாயல்ல, உபாயமாய்க் கேடுசெய்ததாக இதினால் தோன்றுகிறது.

4. “வருகிறவன்” தன்னாலே தானே வருகிறான். தானே தனக்கு அதிகாரம் கொடுத்துக்கொண்டுவருகிறான்; அதாவது இன்னொருவராலே சரியான முறைப்படி நியமுகமாகி அனுப்பப்பட்டு வரவில்லையென்றர்த்தம். கெடுகிலும் கள்ளப்போதகன்மாருடைய குறிப்பு இதுவே. யோவான் 10: 8.

The life of the Rev: John Newton.

ஜான் நியுற்றன் போதகர் ஜீவிய சரித்திரம்.

(தொடர்ச்சி.)

“கர்த்தாவே நான் உம்முடைய அடியான், உமது அடியாளின் குமாரனாகிய உமதடியான், என் கட்டுகளை அவிழ்த்தீர்” என்று தாவீது சொன்னதுபோல சில வேளைகளில் நன்றியறிந்த புத்தியாய்ச் சொல்வது எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. தேவன் என்பேரில் வைத்த உருக்கஇரக்கங்கள் நான் பிறந்த நிமிஷத்திலேயே வெளியரங்கமாயிற்று. நான் அவர் வீட்டில் பிறந்தவன்போலும் குழந்தைப்பிராயத்திலேயே அவருக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டவன்போலுமிருக்கிறேன். அநேகரால் நான் கேள்வியாகிறபடி, என் தாயார் மகா பக்தியுள்ள தேறின கிறிஸ்தவள். நான் அவளுக்கு ஒரே பிள்ளை

அவள் பலட்சய தேகமுடையவளாயும் தனிவாசப் பிரீதியுள்ளவளாயுமிருந்தபடியால், என்னைக் கரிசனையாய்ப் படிப்பித்து வளர்ப்பதே அவளுடைய முழு வேலையாயிருந்தது. நான் மூன்று வயசாயிருக்கும்போழுதே இங்கிலிஷ் வாசிக்க என்னை அநுகூலமாய்ப்பயிற்றுவித்ததினால், நாலு வயசில் எந்தப்புஸ்தகமும் செவ்வையாய் வாசிக்கக்கூடியவனாயிருந்தேன். வேதாகமத்திலுள்ள அநேக அதிகாரங்கள் வாக்கியங்களையும் ஞானப்பாட்டுகள் கீர்த்தனைகள் முதலியவைகளையும் ஏராளமாய் என் மனக்களஞ்சியத்தில் சேர்த்து வைத்தாள். எப்பேர்ப்பட்ட படிப்பும் தேவ அனுக்கிரகமின்றி இருதயத்தைச் சீர்ப்படுத்தப்போதாதென்பது அடியில்வரும் என் பின்னடபடிக்கைகளினால் பரிஷ்காரமாய் விளங்கும். என்றாலும் பக்தியுள்ள தாய்தந்தைகள் தங்கள் பிள்ளைகளை நல்லொழுக்கத்திலும் தேவ பயத்திலும் வளர்க்கிறதற்கு என் சரித்திரத்தினால் தைரியமடைந்துகொள்ளவும் இடமுண்டு. எப்படியென்றால், என் மனதிற்பதிந்திருந்த நல்லெண்ணங்களையெல்லாம் நான் பிற்காலத்தில் எண்ணாமல் பாவத்தை நடப்பித்துவந்தபோதிலும், வெகுகாலம் அவைகள் எனக்குத் தடுக்கலாயிருந்தது. அவைகள் மேலுமேலும் என் ஞாபகத்தில் வந்து என்னை எச்சரித்துக் கண்டிக்கிறதுபோலிருந்தது. அவைகளை முழுவதுமாய்த் தள்ளிவிடுவதற்கு வெகுகாலம் பிடித்தது. கடைசியில் கர்த்தர் என் கண்களைத்திறந்தபொழுது, அவைகளை ஞாபகப்படுத்திக்கொண்டதினால் எனக்குண்டான அநுகூலக்கொஞ்சமல்ல. என் நேசத்தாயார் மேற்காட்டிய பிரகாரம் நல்லெண்ணங்களையும் பக்திக்கநுகூலமான கருத்துக்களையும் என் மனதில் நன்றாய்ப்பதிப்பித்ததுந்தவிர, மிகுந்த கண்ணீரோடும் செபத்தோடும் அடிக்கடி என்னைத் தேவனுக்குக் கையளித்து வந்தாள். மேற்படி செபத்தின் பலனை நாளதுவரையும் நான் அநுபவித்து வருகிறேனென்பதற்குச் சந்தேகமேயில்லை.

சிறு பிராயத்தில் என்னிடத்தில் விளங்கிய தேர்ச்சியை என் தாயார் மட்டில்லாத மகிழ்ச்சியோடு கவனித்து, கர்த்தருக்குச்சித்தமானால் திவ்விய ஊழியத்துக்கு என்னை வளர்த்து ஒப்புக்கொடுக்கும்படி துவக்கமுதலே தீர்மானித்துக்கொண்டாள். ஆகிலும் தேவனுடைய நீடியபொறுமை, விசேஷித்த பராமரிப்பு அதிசய கிருபை என்றவைகளுக்கு நான் ஆச்சரியமான திருஷ்டாந்தமாகவேண்டுமென்பது தேவ சித்தமாயிருந்தது. எப்படியென்றால் என் சிநேகிதர்கள் கொண்டிருந்த நோக்கம் சிதறிப்போகத்தக்கதாக, நான் ஏழு வயசாகுமுன்னமேயே தேவன் என் தாயாரை என்னைவிட்டு எடுத்துக்கொண்டார். நான் பிறந்தது 1725-ம் ௵ ஜூலை௴ 24௳. அவள் மரித்துப்போனது 1732-ம் ௵ ஜூலை௴ 11௳. என் தாயார் மறுமைக்குட்பட்ட சமையத்தில் என் தந்தை கடலில் யாத்திரைபோயிருந்தார். மெதித்திராணியாக்கடலுக்குப் போக்குவரவாயிருந்த வியாபாரக்கப்பல் ஒன்றில் அவர் மாலுமியாயிருந்தவர். அவர் மறு வருஷத்தில் வீடு வந்துசேர்ந்து சிறிது காலத்துக்குள் மறு விவாகஞ்செய்துகொண்டார். இவ்வாறு நான் அந்நியர் சவரட்சணைக்குள்ளானேன். அப்பால் இதுவரையும் லண்டன் நகரியிலிருந்த நான் எசக்ஸ் மாகாணத்திலுள்ள ஓர் போர்டிங் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டுப் போய்ப்படித்துக்கொண்டுவந்தேன். நான் பதினொரு வயசானதோடு பள்ளிக்கூடத்தைவிட்டு என் தகப்பனோடு சேர்ந்து 1742-ம் ௵ வரையும் பல தடவை யாத்திரை செய்தேன்” என்பதே.

இக்காலத்தில் நியுற்றன் போதகர் பலமுறையும் ஆத்ம உணர்வ

டைந்து நடந்ததாகக் குறிப்பித்திருக்கிறார். அவர் பன்னிரண்டு வயசா
காததற்குமுன்னே, பக்திக்கனுகூலமான ஓர் புஸ்தகத்தை வாசித்து
எழுப்புதலடைந்து அதிற்காட்டிய பிரகாரம் பக்தியாய் நடக்கப்பிரயா
சப்பட்டு வந்தாராம். அப்பால் பல நூதன காரியங்கள் சம்பவித்து
தற்சமையத்தில் அவரது மனச்சாக்ஷியைப் பலமாயேவிவிட்டும்' அவை
கள் ஒவ்வொன்றாய் அதிசீக்கிரம் அவர் மனதைவிட்டுப்போயின. சிறி
துகாலத்துக்குப்பின் அவர் வேறொரு நூல் வாசித்ததில், கொஞ்சம்
சீர்ப்பாடாய் நடக்க ஏவப்பட்டார். இவ்வாறு அவர் பதினாறு வயசா
கிறதற்குள்ளாக மூன்று நாலுவிசை பக்தியாய் நடக்கப் பிரதிக்கினை
பண்ணிக் கைநெகிழ்ந்துவிட்டதாகத் தோன்றுகிறது.

இந்தப்பிராயத்தில் கடைசியான அவரது சீர்ப்பாட்டைக்குறித்து
அவர் சொல்வது என்னவென்றால்,—"இதற்குமுன் என்னிடத்திற்
கண்ட சீர்ப்பாடுகளிலெல்லாம் இது மகா விசேஷித்தது. எப்படியெ
னில் நம்முடைய மார்க்கத்திலுள்ள சமைய பேதங்களில் மிகவும் கண்
டிப்பான சமயத்துக்கு இசைந்தபடி பரிசேயனாய் நடந்தேன்' என்று
அப்போஸ்தலனைப்போல நானும் இக்காலத்தில் சொல்லத்தக்கதாயி
ருந்தது. தேவனுடைய நீதியை முற்றும் அறியாதவனாய் தன் சுய
நீதியை நிலைநிறுத்தப்பார்க்கிற ஒருவன் எதைச்செய்வானோ அதை
எல்லாம் நானும் செய்துவந்தேன். நாடோறும் வேதத்தை வாசிப்
பதிலும் செபத்தியானம் பண்ணுவதிலும் மிகுதியான நேரத்தைப்பின்
னிட்டுவந்தேன். பலமுறை உபவாசித்து வந்தேன். மூன்று மாதம
ளவும் மாங்கிஷமான யாதொன்றையும் சாப்பிடாமல் விலகியிருந்
தேன். வீண் வார்த்தை என் வாயிலிருந்து பிறந்துவிடுமோவென்ற
பயத்தினால் கேட்கிற கேள்விகளுக்கு முதலாய்த் தாராளமாய் உத்
தரம் சொல்லாதிருந்தேன். என் முந்திய துர்நடத்தைகளைக்குறித்து
மகா அங்கலாய்ப்போடும் சிலவேளை கண்ணீரோடும் துக்கித்துப் புலம்
பினவனாகவும் விளங்கினேன். மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால்,
நான் சந்நியாசியாகி' சோதனைகளுக்கு நீங்கலாயிருக்கும்பொருட்டு
கூடியமட்டும் மனுஷர் சகவாசத்தை வெறுக்கப் பிரயாசப்பட்டேன்.
இந்தவிதமாக இரண்டு வருஷம் நடந்து வந்தேன். என்றாலும் இது
உத்தம பக்தியல்லவே. அநேக விஷயங்களில் பாவத்தின் அடிமைத்
தனத்துக்குள்ளாகவே இருந்தேன். அவ்வளவு காலமும் என் முகத்
தில் அருளேயில்லை. பிறர் என் சகவாசத்தை நாடவுமில்லை, நான்
பிறருக்கு எவ்வளவேனும் பிரயோசனப்படவுமில்லை" என்பதே.

1743-ம் வரு-த்தில் ஜமெய்க்காத்தீவில் பாரி உத்தியோகம் ஒன்று
அவருக்கு நியமகமாயிற்று. அதைக் கைக்கொள்ளப்போக அவர்
புறப்பட இருந்த சமயத்தில் முக்கியமான ஒரு காரியம் நடந்தது.
மேற்படி காரியம் அவருடைய தீர்மானங்களையெல்லாம் மாற்றிவிட்
டதுமல்லாமல், அவருடைய பின்னடக்கைகளில் விளங்கிய அநேக
விபரீதங்களுக்கு ஏதுவுமாயிற்று. அது என்னவென்றால் கென்று மா
காணத்திற் குடியிருந்த பதினாலு வயசுக்குக்கீழ்ப்பட்ட ஒரு பெண்
ணின்பேரில் அவர் திடீரென்று அமோகமாய்ப் பாசங்கொண்டதுதான்.
அவருடைய இருதயம் முழுமையையும் அது பலமாய்க்கவர்ந்து ஆண்
டுகொண்டது. அதுமுதல் அவரிடத்தில் மார்க்க ஒழுக்கத்தைப்பற்
றிய நினைவுமில்லை, பக்தியைக்குறித்த எண்ணமுமில்லை. மனச்சாக்ஷி
யின் எச்சரிப்புக்கு அவர் செவிகொடுக்கவுமில்லை. புத்தியின் கண்
டித்தலைப் பொருள்செய்யவுமில்லை. அந்தப்பெண்ணின்பேரில் அவ
ருக்குண்டான பிரியமோ எவ்வளவேனும் குன்றிப்போகாமல்

பொழுதும் ஒரே சீராயிருந்தது. அப்புறம் ஏழு வருஷக்காலமாய்
அவர் பட்ட எல்லாச்சங்கடங்களிலும் நடப்பித்த சகல கேடுகளிலும்
மேற்படி பெண்ணின் நினைவு ஒருமணி நேரமாவது அவர் மனதை
விட்டுப்போகவில்லையாம். இவ்வாறு அவர் ஜமெய்க்காத் தீவுக்குப்
போகிற பயணத்தை கைநெகிழ்ந்துவிட்டார். இந்நிமித்தம் அவர்
தந்தை அவர்பேரில் வெகு கோபதாபங்கொள்ளவே அவர் வெனிஸ்
நகரத்துக்கு யாத்திரை போய்விட்டார்.

Notes on Numbers.

எண்ணாகம வியாக்கியானம்.

எ. அதிகாரம்.

பிரபுக்களின் காணிக்கை.

7, 8, 9. அதிகாரங்களில் இஸ்ரவேலர் சீனாய்மலையிலிருந்தபொழு
து நடந்த கடைசியான சங்கதிகளைச் சொல்லியிருக்கிறது.

1. "நாளில்" காணிக்கைசெலுத்தி முடிய 12 நாள் சென்றது.
பிரபுக்களானவர்கள், இஸ்ரவேலர் குடிமதிப்பு லக்கம் பார்க்கப்பட்ட
தில் பிரபுக்கள் வரிசைக்கு உயர்த்தப்பட்டவர்களாயிருந்தார்கள். (1:
1—16.) அந்தக் குடிமதிப்புக்குப் பின்னும் சீனாய்மலையிலிருந்து கூடாரம்
பெயர்க்குமுன்னும் இவர்கள் காணிக்கைசெலுத்தினார்கள். இது இரண்
டாம் வருஷம் இரண்டாம்மாதம், முதலாம் இருபதாம் தேதிகளுக்
குள்ளாக நடந்தது. (1: 2). வாசஸ்தலத்தை அபிஷேகம்பண்ணினதாக
இவ்விடத்தில் சொல்லப்படுவது, முதலாம் மாதத்தில் நடந்ததென்ப
தற்குச் சந்தேகமில்லை. (யாத்தி. 40: 17. லேவி. 8: 10), முதலாம் மா
தத்தில் அபிஷேகம்பண்ணிமுடிய (8) நாள் சென்றது. (லேவி. 8; 33).
லேவியராகமம் (10)-ம் அதிகாரமுதல் எண்ணாகமம் (6)-ம் அதிகாரம்
முடிவுவரையும் சொல்லியிருக்கிற கட்டளைகளும் சட்டங்களும், வாச
ஸ்தலம் பிரதிஷ்டையானதுமுதல் இஸ்ரவேலர் சீனாயிலிருந்து புறப்
பட்டதுவரையும் ஊடேயுள்ள பற்பல காலங்களில் கூறப்பட்டதென்
பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இசைவுக்காகச் சேர்த்துச் சொல்லப்
பட்டிருக்கிறது. அப்படியே இந்த அதிகாரத்தின் சங்கதியும், இனி
வரும் பிரயாணத்திலே சுமந்துகொண்டுபோகவேண்டிய வாசஸ்தல
மும் அதின் தட்டுமுட்டுக்களும், மேற்சொல்லியதுக்குப் பிந்திச்சொல்
லப்படுகிறது. சங்கதிகளை வகுத்திருக்கிற ஒழுங்கைப் பார்க்கும்போ
து, மேற்படி சங்கதிகள் நடக்கும்போது கூட இருந்தவனே மேற்படி
சங்கதிகளை எழுதியிருக்கிறானென்று விளங்குகிறது.

3. இந்த வண்டிகள் பைதா உருளையினால் உருண்டுபோகிறவைக
ளென்று தோன்றமாட்டாது. ஆனால் இவை முன்னும் பின்னுமாக இர
ண்டு மாடுகள் சுமந்துகொண்டுபோகிறவைகளாம். கரடுமுரடான தே
சங்களில் பைதா வண்டிகளைப் பார்க்கிலும் இப்படிப்பட்டதுதான் பிர
யோசனமுள்ளவைகளாயிருக்குமென்று நிதானிக்கலாம்.

7—9. 3: 25, 26, 31, 37.

12—83. கோத்திர வரிசையின்படியே பிரபுக்கள் காணிக்கை

செலுத்தினார்கள். (2 ம் அதி). பிரபுக்கள் செலுத்தினதும் அந்தந்தக்
கோத்திரத்துச் சனங்களே தங்கள் தங்கள் பிரபுக்கள்மூலமாய்க் கா
ணிக்கைசெலுத்தினார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. (12) காணிக்
கைகளும் ஒன்றுபோலிருப்பதால், இவைகள் முந்தியே ஆயத்தமாக்
கப்பட்டு ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்ததென்பதற்குச் சந்தேகமில்லை.
இவைகள் (12) வெவ்வேறான நாட்களில் செலுத்தப்பட்டது. அந்தந்த
பிரபு பலிசெலுத்தின அன்று, அவனவன் கொண்டுவந்த பலியும் தக
ணிக்கப்பட்டது. தாலங்கள், கலங்கள், கரண்டிகள் ஆகிய இவைகள்
ஆசரிப்புக்கூடாரத்தின் பிற்கால உபயோகத்துக்காக பத்திரம்பண்
ணப்பட்டது.

84—88. ஒரு வெள்ளிச்சேக்கல் $2\frac{1}{2}$ ஷில்லிங் இடையாகவும், ஒரு
பொன் சேக்கல் $1\frac{15}{100}$ பவுன் இடையாகவும் வைத்துக்கொண்டால், ஒரு
வெள்ளித்தாலத்தின் விலை, (325) ஷில்லிங். ஒரு வெள்ளிக்கலத்தின்
விலை, (175) ஷில்லிங். ஒரு பொற்கரண்டியின் விலை, (230) ஷில்லிங்
ஆகும். அப்படியே எல்லாக்காணிக்கைகளும் சேர்ந்து, (488) பவுனா
கும். சொற்பக் காலத்திற்குமுன்தான் பெரிய செலவுசெய்து ஆசரிப்
புக்கூடாரமும் கட்டப்பட்டதென்பதை மறந்துபோகக்கூடாது.

89. இப்படியாக (யாத்தி. 25: 20—22)ல் சொல்லிய வாக்குத்தத்
தம் நிறைவேறியது. தேவன் கற்பித்தபடி எல்லாம் முடிந்தது. பாள
யமும் சுத்திகரிக்கப்பட்டது. இப்போ தேவன் முன்போல ஆரமான
சீனாயின் கொடுமுடியிலிருந்து, சனங்களின் மத்தியஸ்தனான மோசே
யோடு பேசாமல் சனங்களின் நடுவே வாசஸ்தலத்திலே, அவனோடு
பேசினார்.

படிப்பினை.

இஸ்ரவேலருடைய மாதிரியைப் பார்த்து கர்த்தருக்குக் கொடுக்
கக் கற்றுக்கொள்ளுவோமாக. நாம் அவரைக் கனம்பண்ணினால் அவ
ரும் நம்மைக் கனம்பண்ணுவார்.

அ. அதிகாரம்.

1—4. யாத்தி. 25: 31. 27: 20. 37: 17. 40: 24, 25. இப்பொழுது
வெளிப்பட்ட தேவசமுகத்துக்கு அடையாளமாயிருந்தது.

5—22. லேவியருடைய நியமகம் காலவரிசைப்படி இங்கே வரு
கிறது.

லேவி. (8)அதி. ஆசாரியருடைய அபிஷேகத்தைக் காட்டியது.
லேவியருக்கு அவர்களைப்போல உயர்ந்தவகையாயல்ல. ஆனால்,
லேவியர் தண்ணீரினால் தெளிக்கப்படவேண்டும்.
தங்கள் வஸ்திரங்களை வெளுக்கவேண்டும்.
சவரம் பண்ணவேணும். 7 வா.
இவர்களுக்கு ஸ்நானமில்லை.
அபிஷேக பலியின் இரத்தத்தால் தெளிக்கப்படுமெறுமி
ல்லை. லேவி. 8: 6, 22, 30.

7. "சுத்திகரிக்கும் ஜலம்" பத அர்த்தப்படி சொன்னால், "பாவ
ஜலம்" அதாவது, பாவத்தைச் சுத்திகரிக்கும் ஜலம். ஆசரிப்புக்கூ
டாரத்தில் தொட்டியிலிருந்து இந்த ஜலம் எடுக்கப்பட்டது. (5: 17.
யாத்தி. 30: 18.) குஷ்டரோகியின் தீட்டுக்கழிக்கவும் இந்தத்தொட்
டியிலுள்ள ஜலந்தான் உபயோகிக்கப்பட்டது. (லேவி. 14: 5—)

"தெளித்து" பொதுவாகத்தான் தெளிக்கப்பட்டது. 8. லேவி.
8: 14.

19. தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் நடுவில், லேவியரும் மத்தி
யஸ்தர்போலிருந்தார்கள். முதற்பேறுகளுக்குப்பதிலாக லேவியர் ஏற்
பட்டது தேவ இரக்கத்தினால வந்த செய்கையாக இவ்வாக்கியத்திற்
சொல்லப்படுகிறது. ஏனென்றால் முதற்பேறுகள், மேற்காட்டிய சட்
டதிட்டங்களின்படி நடக்கத்தவறிப்போய் அல்லது மீறி தண்டனைக்
குட்படுவார்கள். ஆசாரியரும் லேவியருங்கூட பிழையற்றிருக்கவில்
லையே. லேவி. 10: 1. எண். 17: 2சாமு. 6: 6.

21. சவரம்பண்ணி வஸ்திரங்களைத் தோய்த்து சுத்திகரிக்கப்பட்
டார்கள்.

23—26. 4: 3, 23, 30, வாக்கியங்களில் 30 வயது என்று தற்கா
லத்துக்கென்று சொல்லப்பட்டது. இவ்விடத்திற் சொல்லிய வயசு
தான் நிலையானது. (1நா. 23: 3. 14-28. 2நா. 31: 17. எஸ்றா. 3: 8.)

படிப்பினை.

சுத்திகரிப்பில்லாமல் ஒருவன் தேவ பணிவிடை செய்யலாகாது.
அப்படிச்செய்தால் இரக்கமில்லாமல் அதிக தண்டனை அடைவான்.

க. அதிகாரம்.

1—5. இந்தப் பஸ்கா முதலாம் மாதத்தில் கொண்டாடப்பட்ட
படியினாலே, 1: 1ல் சொல்லிய குடிமதிப்பும், இவவாகமத்திற் காட்
டிய மற்றும் சங்கதிகளும் நடந்த காலத்துக்கு முந்தியே அது ஆச
ரிக்கப்பட்டது. ஆனால் இந்த அதிகாரம் 6—14 வாக்கியங்களிற் சொல்
லியிருக்கிற தொடர் பஸ்காவின் ஏற்பாட்டுக்கு முகவுரையாக இவ்வி
டத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தத் தொடர் பஸ்காவை ஆசரித்த
து, இஸ்ரவேலர் சீனாயிலிருந்தபொழுது நடந்த கடைசி வர்த்தமானங்
களிலொன்றாம். யாத்தி. 12: 25. 13: 5-10 வாக்கியங்களிற் சொல்லிய
பஸ்கா ஏற்பாட்டின் வக்கணைகளைப்பார்த்தால், அடுத்த இரண்டாம்பஸ்
காவை இஸ்ரவேலர் கானான்தேசத்தில் பிரவேசித்த பிற்பாடுதான்
ஆசரிப்பார்கள் என்ற நோக்கத்தோடு கற்பிக்கப்பட்டதாகக் காணப்
படுகிறது. ஆனால் இஸ்ரவேலர் வனாந்தரத்தைக் கடக்குமுன்னதாகவே
பஸ்காவின் வருஷாந்த உற்சவம் வந்துவிட்டபடியினாலே, அதை வனாந்
தரத்திலே ஆசரிக்கும்படி தேவனுடைய விசேஷித்த கட்டளைகொடுக்
கப்பட்டது. பின்னாலே சொல்லியபடி சனங்கள் கலகம்பண்ணாவிட்
டால், மூன்றாந்தரம் பஸ்காவை ஆசரிக்கிறதற்கு முன்னாடி அவர்கள்
கானானுக்குட்பிரவேசித்திருப்பார்கள்.

5. இந்த விசேஷமான பஸ்கா ஆசரிக்கப்பட்ட வகையைக்குறித்
து (3)ம் வாக்கியத்தில் பொதுவாய்ச் சொல்லியிருக்கிறது. அதாவது,
"எல்லாக் கட்டளைகளின்படியேயும் முறைமைகளின்படியேயும்" என்
றிருக்கிறது. ஆகிலும் இஸ்ரவேலர் இதற்குமுன் எகிப்தில் ஆசரித்த
பஸ்காவிலும், இதற்குப் பின்னான காலங்களில் ஆசரித்த பஸ்காவிலு
மிருந்து இந்தப் பஸ்கா சில விஷயங்களில் வித்தியாசமாய் ஆசரிக்கப்
பட்டதென்று தோன்றும். எப்படியென்றால், "வீட்டுவாசல் நிலைக்
கால்கள் இரண்டிலும்" தெளிக்கவேண்டுமென்று யாத்தி. 12: 7 ல் சொ
ல்லிய கட்டளை, சனங்கள் கூடாரங்களில் வாசஞ்செய்யும்போது,

வார்த்தை வார்த்தைப்படி நிறைவேற்றப்படக்கூடாதென்பது தெளிவாயிருக்கிறதே. பஸ்கா ஆட்டுக்குட்டியை வீட்டில் கொல்லலாமென்ற கட்டளை. லேவி. 17: 3—6 வாக்கியங்களால் விலக்கப்பட்டு, உபா. 16: 5 ல் மேற்படி விலக்கு உறுதிப்பட்டிருக்கிறது.

மேலும் இப்பொழுது இரத்தம் ஆசாரியராலே பலிபீடத்தின் மேல் தெளிக்கப்பட்டது. பஸ்காபலியின் இரத்தம் ஆசாரியராலே பலிபீடத்தின்மேல் தெளிக்கப்படவேண்டியதென்றால், இப்பொழுதிருந்த ஆரோன், எலியேசர், இத்தாமார் என்ற மூன்றே ஆசாரியர்குறிக்கப்பட்ட காலத்துக்குள் அதாவது சாயுங்காலங்களின் மத்தியில் (யாத்தி. 12: 6), என்னமாய் தங்கள் கடமையை நிறைவேற்றக்கூடும் என்ற கேள்வி வரும். பஸ்கா பலியின் மாம்சத்தில் ஒரு துண்டு சாப்பிட்டாலும் பஸ்கா ஆசரித்தாயிற்று என்பது யூதருடைய கொள்கை. இந்தச் சமயத்தில் பிற்காலத்தில் நடந்ததுபோல (2 நாளா. 30: 16. 35: 11) ஆசாரியர், லேவியராலே உதவிசெய்யப்பட்டு தங்கள் வேலையை நிறைவேற்றினார்களென்பதற்குச் சந்தேகமில்லை. யோசேப்புஸ் தமது காலத்தில், (256,000) பலிகளின் இரத்தம் பலிபீடத்தின்மேல் (3) மணி நேரத்துக்குள்ளாக தெளிக்கப்பட்டதென்று சொல்லுகிறார்.

6. "சிலர்" பஸ்காவாரம் முடியுமுன் மீசவேலும் எல்சாபானும், நாதாப் அபியூவை அடக்கம்பணணினார்கள். லேவி. 10: 4, 5. மோசேயினுடைய நேரான கட்டளையினாலே தங்களைத் தீட்டுப்படுத்திக்கொண்ட மோசேயின் இனத்தாராயல்லாமல் மற்றவர்கள் இப்படிக் கேட்டிருக்கமாட்டார்கள்.

11. "இரண்டாம் மாதம் பதினாலாம் தேதி." பிற்காலத்து யூதர்கள் இதை சின்ன பஸ்கா என்று சொல்வார்கள். இது சரியான பஸ்காவின் காலத்துக்கு ஒரு மாசத்துக்குப் பிந்திவந்ததினாலே, தீட்டுப்பட்டவன் தன்னைச் சுத்திகரித்துக்கொள்ளப் போதுமான காலமிருந்தது. தூரமான இடத்துக்குப்போயிருந்தாலும் திரும்பிவந்துவிடலாம். இந்த ஏற்பாட்டின் தன்மையை வைத்துக்கொண்டு, எசேக்கியா தன் அரசாட்சியின் துவக்கத்தில் தேவாலயச் சுத்திகரிப்பையும் ஆசாரிய முறைமையையும் சரியான பஸ்கா காலத்துக்குள் ஒழுங்குப்படுத்தக் கூடாமல், ஒரு பெரிய பஸ்காபண்டிகையை இரண்டாம் மாதத்தில் கொண்டாடினான். 2 நாளா. 29: 30.

12. "பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும்" பஸ்கா ஆட்டுக்குட்டிக்கடுத்ததாய்ச் சொல்லிய முறைமைகளாம். பஸ்காபண்டிகைக்கடுத்தவைகளல்ல. ஏனென்றால், யூதர் சொல்லுகிறபடி, இந்த சின்னபஸ்கா ஒரே ஒருநாளில்தான் ஆசரிக்கப்பட்டது. இதில் புளித்தமாவை அகற்றவேண்டிய அகத்தியமுமிருந்ததில்லை.

15. இது யாத்தி. 40: 34 ல் சொல்லியதுதான். இது இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபொழுதே காணப்பட்டது. (யாத்தி. 13: 21, 22). இப்பொழுதோ அவர்களுடைய யாத்திரைக்கடுத்ததாக மறுபடியும் அதிக விபரமாய்ச் சொல்லப்படுகிறது.

22. "ஒரு வருஷம்" எபிரேயுவில் "நாட்கள்" என்றிருக்கிறது. பாஷை நடைப்படி லேவி. 25: 29 ல் ஒரு வருஷத்தைக்குறிக்கிறது. இது ஒரு நிறைவான காலத்தைக்குறிக்கிற வார்த்தை.

படிப்பினை.

நமது பாவ இச்சைகளாலே நாம் தீட்டுப்படுகிறோம்.—நமது மனச்சாட்சி நமக்கு விரோதமாய்ப் பேசும்போது, பக்தியுள்ள போதகன்மாரிடத்தில் யோசனை கேட்பது நன்று.—அடிக்கடி நமது சொந்தக்குற்றமில்லாவிட்டாலும், தேவனுடைய பரிசுத்த ஏற்பாடுகளுக்குப் புறம்பாக்கப்படலாம். அப்படி நேரிட்டால் நாம் ஆசீர்வாதத்தை இழந்துபோகக்கூடாது.—பலியிடப்பட்ட கிறிஸ்துவாகிய பஸ்காவில் புறச்சாதியாராகிய நமக்கும் பங்கு கிடைத்திருக்கிறதற்காக தேவனுக்குஸ்தோத்திரம். குறித்திருக்கிறபடி பஸ்காவை ஆசரிக்கக்கடவோம். 1கொரி. 5: 6-8.—யூதரை நடத்தின அற்புத ஸ்தம்பங்கள் இப்போ நமக்கு இல்லாவிட்டாலும், தேவ வசனம், தேவ வாக்குத்தத்தங்களாகிய ஸ்தம்பங்களிருக்கிறது. கிறிஸ்துநாதராகிய ஞான வழிகாட்டி நமக்கிருக்கிறார். விசுவாசத்தோடுமாத்திரம் அவரைப்பின்பற்றி நடக்கக்கடவோம். அப்போ நம்மை எவ்விதத்திலும் பரம கானானில் சேர்ப்பார்.

௰. அதிகாரம்.

வெள்ளிப் பூரிகைகள்.

1—10. வெள்ளிப் பூரிகைகளைக்குறித்து லேவி. 25: 9 லும் குறிப்புச்சொல்லியிருக்கிறது.

2. "பூரிகைகள்" யூதர் வழங்கிவந்த பூரிகையானது யோசேப்புஸ் சொல்லுகிறபடி, கொஞ்சம் குறைய ஒரு முழ நீளமும் ஒடுக்கமான குழாயுமுள்ளது. புல்லாங்குழலைப் (Flute) பார்க்கிலும் சற்று திண்மையும், ஊதுகிறதற்குத்தக்க விரிவுமுள்ளதாயிருந்தது. தீத்துஸ் வளைவில் அப்பம் வைக்கிற மேசையும், தூபக்கிண்ணங்களுமல்லாமலும், இரண்டு வெள்ளி எக்காளங்களும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பார்த்தாலும், இந்தப்பூரிகைகள் கரு கொம்புபோல் வளைவாயிராமல் நேர் குழாயாயிருந்ததென்று விளங்கும். இவைகள் இஸ்ரவேலருடைய பிரயாணத்துக்கு அறிகுறியாக உபயோகிக்கப்பட்டது.

5. அதாவது விடாமல் மூச்சடக்கி பேரொலியிட்டுக்கொண்டே இருக்கும்போது.

6. மூன்றாந்தரம் நாலாந்தரம் முழக்கும்போது மேறகேயும் வடக்கேயுமிருக்கிற பாளயங்கள் பிரயாணப்படக்கடவது என்று செப்துவஜிந்த் திருப்புதலில் போட்டிருக்கிறது. எபிரேயு பாஷையிலில்லை. எப்படியும் செப்துவஜிந்டிலிருக்கிறபடிதான் நடந்ததென்று அநுமானித்துக்கொள்ளலாம்.

7. "ஊத" அதாவது மூச்சடக்காமல் விட்டுவிட்டு ஊதவேண்டும் என்றர்த்தம்.

8. "ஆசாரியர்" பூரிகைகள் தேவனுடைய சத்தத்துக்கு அடையாளமாயிருந்தபடியினாலே ஆசாரியர் மட்டும் ஊதவேண்டும். இப்பொழுது ஆரோனின் குமாரர் இரண்டுபேர்மட்டுமிருந்தார்கள். பிற்காலத்தில் ஆசாரியர் பெருகப்பெருக, அதிகமான பூரிகைகளும் செய்யப்பட்டது. தாவீதின் காலத்தில் (7) பூரிகைகளைக்குறித்தும் (1நாளா. 15: 24), சாலொமோன் காலத்தில் (120) பூரிகைகளைக்குறித்தும் வாசிக்கிறோம். (2நாளா. 5: 12).

9. யுத்தகாலங்களில் இவைகளை வழங்கினதற்குத் திருஷ்டாந்தமாக, 31: 6. யோசு. 6: 2நாளா. 13: 12, 14. 20: 28. காண்க. தேவனுடைய சனங்கள் யுத்தங்களில் தேவ துணையை நம்பியிருக்கிறார்கள்

என்பதற்கு அறிகுறியாக இது அந்த இடுக்கணான காலங்களிலும் உபயோகிக்கப்பட்டது.

10. 29: 1. லேவி. 23: 24. 2நாளா. 29: 27. எஸ்ரு. 3: 10. நெகே. 12: 35, 41. சங்கி. 81: 3.

“நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.” உங்கள் தேவனான கர்த்தராகிய எனக்குமுன்பாக என்று திருப்பப்பட்டால் அதிக நன்றாயிருக்கும்.

மகமது ஜீவிய விருத்தாந்தம்.

(தொடர்ச்சி.)

மகமது மக்காநகரத்தை விட்டு ஓடி மெதினாவில் தப்பிச்சேர்ந்த பின்பு இராசாவாகி, தான் ஒரு ஏழைத்தீர்க்கத்தரிசியாக மார்க்கத்தைப்போதித்ததை விட இப்பொழுது வேறே வகையாய் போதிக்கத்துவக்கினார். அவர் பயமாயாவது, இரகசியமாயாவது போதிக்கவேண்டியதல்லாததால் உடனே ஒரு பள்ளிவாசல் கட்டத்தொடங்கினார். அவரும் அவருடைய கூட்டாளிகளும தரித்திரராகையால் அவர் கட்டின பள்ளிவாசலும் யாதொரு அலங்கார மற்றிருந்தது. அது செங்கலாலும் களிமண்ணாலும் கட்டப்பட்டு கற்றூணில்லாமல் பேரீச்சமரத்தூண்களுள்ளதாயும் மேற் கூரை கம்புகள் போட்டு ஓலைகள் வேயப்பட்டதாயுமிருந்தது. துவக்கத்தில் அவருக்கு ஒரு பொற்பமுதலாயில்லாமல் பேரீச்ச மரத்தூண்கள் ஒன்றில் சாய்ந்துகொண்டார். அவருக்கு வெளிச்சங்கொடுக்க பேரீச்ச மரச்சிராய்கள் பந்தங்கள் போலிருந்தது, அவர் தம்முடைய சனங்களுக்கு ஜெபம்பண்ணமாத்திரம் படிப்பித்தார். அவருடைய உபதேசம் கிறிஸ்துமார்க்கத்தை விட மற்ற எல்லாமார்க்கங்களிலும் போதிப்பிக்கப்படாத அன்பையும், சாந்தத்தையும் போதித்தது. அன்பும் அன்பின் கிரியைகளுமே உயர்ந்த புண்ணியமென்பது அவருடைய முக்கியமான உபதேசமாம். தேவனுடைய பிள்ளைகளிலும் அவருடைய சிருட்டிகளிலும் அன்பு கூராத எவனிலும் தேவன் அன்பாயிருக்கமாட்டார். என்னுடைய சீஷர்களில் யாராவது எளியவர்களுக்கு வஸ்திரம் கொடுக்கிறதானால் அவனுக்குப் பரதீசில் வஸ்திரங்களைத் தரிப்பிப்பார் என்றும், ஒவ்வொரு அன்பான வார்த்தைக்கும், செய்கைக்கும், நினைவுக்கும் பலனளிக்கப்படுமென்றும் போதித்தார். சகோதரன்மேலுள்ள அன்பின் பார்வையும், நற்செய்கைகளைச் செய்யும்படி அவனுக்குப் போதிக்கிறதும், வழிதப்பி அலைகிறவனுக்கு நேர்பாதை காட்டுகிறதும், குருடனை நடத்துகிறதும், தாகமாயிருக்கிறவர்களுக்குத் தண்ணீர்கொடுக்கிறதும், பெரும்பாதையில் கிடக்கிற முள்ளையும் கற்களையும் பொறுக்கி எறிந்து விடுகிறதும் அன்பின்செய்கைகளாம். அவைகளுக்காக உண்மையுள்ள மகமதியனுக்குப் பிரதிபலனுண்டாகும். தன்வலதுகை செய்கிறதை இடதுகை அறியாமல் எந்த நல்லமனிதனும் செய்கிற தருமமானது ஆகாயத்திலுள்ள காற்றைவிட பலமாயும் எந்த இடையூறுகளையும் நீக்கத்தக்கதாயுமிருக்கிறது. அன்பின்கிரியைகளைப் பற்றிமாத்திரம் பேசாமல், அன்பின் வசனங்களைப்பற்றியும் முக்கியமாய்ப் பேசுகிறார். “ஒருவனைப் பற்றியும் தீதாய்ப்பேசாதே” அவருடைய சீஷர்கள் தங்களுடைய விசுவா

சத்தைச் சரியாய் காத்துக்கொண்டகாலமளவும் இந்தக் கற்பனையை மறந்து போகவில்லை. சனங்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு, அவர்கள் அன்பின் கிரியைகளின் புண்ணியம் இறந்துபோன தங்களுடைய இனத்தாருக்கும் பிரயோசனமாயிருக்குமென்று போதித்தார். என்னுடைய தாயின் ஆத்துமம் கரையேற நான் செய்யவேண்டிய நல்ல தருமம் எதென்று அவருடைய சீஷரிலொருவன் கேட்க, அவளுக்காக ஒரு கிணற்றை வெட்டித் தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீர் கொடு என்றார். இந்தத் தெளிவான நாட்டமுள்ள கோட்பாடு திரள் விக்கிராராதனைக்காரரான அரபிகளால் அங்கிகரிக்கப்பட்டது. கிறிஸ்துவானவருடைய தெய்வீகத்தை விசுவாசியாத கிறிஸ்தவ கூட்டத்தாரும், கிறிஸ்துவானவர் மகா தீர்க்கதரிசியாய் மாத்திரமிருக்கிறாரென்ற இந்த உபதேசத்தைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். யூதர்களைப் பிரியப்படுத்த அவர்களுடைய ரபிமாருடைய போதனைகளில் சிலவற்றை உபதேசித்து, அவர்களுடைய சடங்குகளில் சிலவற்றை அனுசரிக்கச் சொல்லி, மகமதுமார்க்கத்தார் எருசலேமுக்கு நேரே வணங்கவேண்டுமென்று போதித்தபோதிலும் யூதர்கள் நம்பவில்லை. யூதர்கள் தங்களிலிருந்து எழும்பாத ஒருவரைத் தீர்க்கதரிசியாய் அங்கிகரிக்கக்கூடாது. அவர்களுக்குள் நெடுகிலுமிருந்த பகை சுவாலை போல் எரிந்து விட்டது. அடுத்த வமிசங்களிலிருந்து திரள் திரளாய் அவரைச் சேர்ந்த அவருடைய சீஷர்கள் சீக்கிரத்தில் அவருடைய புது மார்க்கத்தினுபதேசங்களையும், ஆசாரங்களையும் வியர்த்தமாக்கி விட்டார்கள். இப்பொழுது அவரைச் சேர்ந்தவர்கள் முன்னைப்போல பதமையானவர்களாயிராமல், போர் வீரராக நிர்ணயிக்கப்பட்டவர்களும், தங்கள் சிறுபிராய முதல் சண்டையில் பழக்கப்பட்டவர்களுமாம். அவர்கள் மகமதுவைத் தங்களுக்குக் குருவாகமாத்திரமெண்ணாமல் இராசாவாகவும், அப்போஸ்தலனாகமாத்திரமல்ல சேனையின் தளகர்த்தனாகவும் எண்ணினார்கள். மகமது தன்னை இராசாவாகவும் யுத்தவீரனாகவும் ஆக்கிக்கொண்டதற்கு முகாந்தரம் என்னவென்றால், தம்முடைய கூட்டாளிகளின் எண்ணம் குலையாமலும், 13 வருஷக்காலங்களாக அவர் அனுபவித்து வந்த நிந்தை, மோசம் முதலியவற்றையிட்டுப் பழிவாங்கவேண்டுமென்றும் கொண்டிருந்த அபேட்சையாயிருக்கலாம். அவரொரு புதுக்கற்பனையைப் பிரசித்தப்படுத்துகிறார். அதென்னவென்றால், தேவன் தம்முடைய இரக்கத்தையும் பராமரிப்பையும் உலகத்துக்குப் பிரசித்தப்படுத்தச் சித்தமாகி அவர் மோசேயை அனுப்பினார். சாலமோனைக்கொண்டு தம்முடைய ஞானத்தையும், மகத்துவத்தையும், மகிமையையும் வெளிப்படுத்தினார். தம்முடைய நீதி, சருவஞ்ஞும், வல்லமை விளங்கச்செய்யும் பொருட்டு இயேசுகிறிஸ்துவை அனுப்பினார். அவருடைய நீதி தம்முடைய பரிசுத்த நடக்கையாலும் அவருடைய சருவஞ்ஞும் எல்லா இருதயங்களின் இரகசியங்களையும் தோற்றுவித்த அறிவினாலும் அவருடைய வல்லமை அவர் செய்த அற்புதங்களினாலும் விளங்கிற்று. மனிதரோ எல்லாத் தீர்க்கதரிசிகளையும் தள்ளிவிட்டு மோசேயுடைய அற்புதங்களையும் இயேசுவானவருடைய அற்புதங்களையும் நம்பாதேபோனார்கள். ஆகையால் எல்லாருக்கும் கடைசித் தீர்க்கத்தரிசியாய் நான் பட்டையத்தோடு அனுப்பப்பட்டிருக்கிறேன். என்னுடைய கற்பனையைப் பிரசுரம் செய்கிறவர்கள் எல்லாரும், யாதொரு வாக்குவாதத்துக்கும் வழக்குக்கும் இடங்கொடாமல், கட்டளைக்கு அமையாத எல்லாரையும் கொல்லக்கடவர்கள். சத்திய மார்க்கத்துக்காக செய்யப்படும் சண்டையில்

அவன் விழுந்தாலும் ஜெயித்தாலும் நிச்சயமாகவே மகிமையான பலனடைவான். பட்டையமானது மோட்சம், நரகம் என்பவைகளின் திறவுகோலாயிருக்கிறது. சத்தியத்திநிமித்தம் அதைப் பிரயோகிக்கிற எல்லாருக்கும் லௌகிகப் பிரயோசனங்களுண்டு. அவர்களுடைய இரத்தத்தில் சிந்தப்படுகிற ஒவ்வொரு துளியும், அவர்களனுபவிக்கும் வருத்தமும சேதமும், ஜெபம் உபவாசம் என்பவைகளின் புண்ணியங்களுக்கு மேலானதாக உன்னதத்தில் தாக்கலாகும். அவர்கள் யுத்தத்தில் மாண்டு போனார்களானால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும். அவர்கள் பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நித்திய சந்தோஷத்தில் களிகூரும்படியாய் ஹௌரிஸ் என்பவர்களுடைய புயங்களில் வைக்கப்படுவார்கள்.

பத்துக் கற்பனைகள்.

சீனாய் மலை தனிலே
தேவ தூதரின் நடுவே
வான பரனவர்தான்—பத்து மொழி
வரைந்து கொடுத்தாரடி.

1. ஒன்றான மெய்த் தேவன்
உன்னை உண்டாக்கினவன்
என்றும் நினைப்பாயடி—வேறு தெய்வம்
எங்கேயுமில்லையடி.

2. சந்திர சூரியர்
சமமான மானிடர்
எந்த உருக்களையும்—தெய்வமென்று
எண்ணித் தொழாதேயடி.

3. பரிசுத்த தேவனின்
பயங்கர நாமமதை
விருதாவிலே வழங்க—வேண்டாமடி
வேதனடிப் பாரடி.

4. ஆதித்த வாரமதில்
ஆண்டவரைத் தானினைத்து
சாதித்து நிற்பாயடி—வேலைசெய்யச்
சற்றும் போகாதேயடி.

5. சேமிதனிலுன் வயது
நீடித் திருப்பதற்கு
சாமிக்குப் பின்னுனது—தாய் தகப்பன்
தம்மை மதிப்பாயடி.

6. கோபம் பகை வர்மம்
கொலைத் தொழிலான பல
பாபமாகா தெனவே—தற்பரனார்
பகர்ந்த மொழி கேளடி.

7. அஷண வார்த்தைகளைச்
சொல்லாமலேயிருந்து
வேசித்தனமதையும்—சீயெனவே
வெறுத்து நடப்பாயடி.

8. வஞ்சகஞ் சூது பல
வன் களவு செய்யாதே
கொஞ்ச நாளைக்கிருக்கும்—இவ்வுலகம்
குப்பை யென்றெண்ணுவாயடி.

9. கண்ணாரக்கண்டதலை
கரந்து மறைக்காதே
காணாத காரியமும்—கண்டதுபோல
காட்டி மொழியாதடி.

10. வேறொருவர் தன் பொருளை
விரும்பித் திகையாதே
இருதயந்தன்னிலேயும்—இச்சியாதே
என்று மொழிந்தாரடி.

நாளுவர்த்தமானம்.

ருஷியரும் துருக்கியரும் சமாதானமாதல்.

டார்டனெலீஸ் ஜலசந்தியில் துர்க்கி பிரித்தானிய கடற்றளத்தையும் இதர திறத்தார் தளங்களையும் பிரவேசிக்கவிட மறுத்ததினாலே உள்ளுக்குள்ளாகத் துர்க்கிக்கும் ருஷாவிற்கும் இணக்கமுண்டாயிருப்பதாகத் தோன்றுகிறது. தற்காலம் நேர்ந்திருக்கும் சங்கடத்தினின்று எளிதில் தப்பிக்கொள்ளத் தகும் உபாயமென்று துர்க்கி விரோதம் மறந்து மாற்றான் பட்சத்தில் சேர்ந்துகொண்டதுபோலும். கன்ஸ்டான்டிநோபில் ராஜதானியில் அரசாட்சி சம்பந்தமான நிலைமை அசதியில் இவ்வண்ணம் புது ருபங்கொண்டது நாடகம் ஆடுவதுபோலிருக்கும். துர்க்கிய பார்லியமெந்து சபை பிரித்தானிய கப்பற் படையைக் கன்ஸ்டான்டிநோபில் நகரத்திற்குச் செல்லவிடாது ஒரு நிலையாய் நின்று தடுக்குமென ஒரு மாச முந்திப் பூர்வநிர்ஷடியாய்க் கூறிய எவரையும் கிஞ்சித்தும் தவறாது பின்னிகழ்ச்சியை முன்னாடி கண்டு வெளியிட வல்ல தூரதிர்ஷ்டரென்று நன்கு மதிக்கத்தகும். ஆனாலும் அங்கையில் நெல்லிக்கனிபோலத் தோன்றும் அந்தரங்கம் இது:—பிரித்தானியரால் தமக்கு உதவி உண்டென்று துர்க்கியர் இதுவரையில் எண்ணமிட்டிருந்து அலுத்துப்போனார்கள். அவர்கள் தமக்குப் பிரகன்னனவிற்கு வந்திருக்கும் இகதத்ததியில் உதவிபுரியப் பிரத்தானியனா இரந்துவேண்டிவேண்டி வாய் சலித்துப்போயிற்று. இனித் தப்ப வகை மற்றொன்றுமில்லையென்று அந்தத் ததியில் அவர்கள் தமக்கு ஆரும் தஞ்சம் சத்துரு தலையென்றெண்ணிச் சரணடைந்தார்கள். ருஷா பரிவோடு காத்திருந்தது இதுதான். சிறிதுகாலம் ஸுல்த்தானுக்கு ரக்ஷகர்த்தாவாகவும் மந்திரியாகவும் நின்றுதவும் அரும்பேறு அசதியில் பெறுதுக்கொண்ட பிரதிஷ்டைக்காக ருஷா முன்கேட்ட திரவிய ஈட்டிலும் பிரதேச ஈட்டிலும் அதிகபாகத்தைத் தள்ளிவிடச் சம்மதித்

தாலும் சம்மதிக்கும். கன்ஸ்டாண்டிநோபில் சமஸ்தானத்தில் ருஷா
விற்குச் செல்வாக்கு உண்டென்பது தூர்க்கிய பார்லிமெந்தின் வாக்கி
னின்று இப்பொழுதே பிறந்திருக்கின்ற அதிசய வார்த்தைகளால் தெ
ளிவுறக் காண்கிறது. ருஷாவின் தூண்டுதலால் தூர்கி டார்டனெலீஸ்
ஜலசந்தியில் இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலியா, ஔஸ்திரியா இந்
நான்கு திறத்தார் சண்டைக்கப்பல் பிரவேசிக்கலாகாதென்றும், கன்
ஸ்டாண்டிநோபிலுக்குக் கடற்றளம் அனுப்புவதாக அச்சம் காட்டிய
படிசெய்யத் துணிந்தால் பின் நிகழ்வதற்கெல்லாம் இங்கிலாந்தே பா
ரம் பழி தாங்கும் உத்தரவாதியாகவேண்டுமென்றும் உறுதிமொழி
சொல்லியது. இவ்வண்ணம் நடந்தேறும் இயற்கையைப் பார்க்குமிடத்
தில், தூர்க்கிய பார்லிமெந்து கார்ச்சிகாப் மந்திரி பிரயோகித்த பகட்
டான மின்மொழியைப் பிரதி சப்திக்கின்றதேதவிர, மற்றப்படி அல்ல.

தூர்க்கிய பார்லிமெந்து இவ்வண்ணம் விபரீதமாய்க் கருமம்
கடைத்தேற்றத் தலைப்படுவதனால், ஒரு விதத்தில் தூர்க்கிக்குச் சமயத்
திற்கேற்ற அனுகூலம் உண்டாம். அவ்வனுகூலம் சங்கடமின்றி எளிதில்
இருதிறத்தாருக்கும் உள்ள வழக்கு அறுவதே. தூர்க்கியை ருஷாவின்
கைவசப்பட விடாது தடுபடைசெய்யும் வழக்குத் தீர்ந்து உடன்படிக்
கையால் உறுதிப்பட்டிருக்கின்ற பிரித்தானிய ஐரோப்பிய சுதந்தரங்
களை ஆதரிக்கும் வழக்குத் தொடர்ந்திருக்கின்றது. டார்டனலீஸைக்
குறித்துள்ள ருஷாவின்மர்மமெல்லாம் லண்டன் டைமஸ் பத்திரிகைக்
கு ஸெண்ட பீற்றர்ஸ்பர்க் நகரத்தினின்று ஒருவர் எழுதிய கடிதத்தில்
பிரத்தியக்ஷமாய்த் தெரிகின்றன. ருஷா தன் கடற்றளமும் தூர்க்கியர்
கடற்றளமும் ஜலசந்திகளில் பிரதிபந்தமின்றிப் பிரவேசிக்கும் சுதந்
தரம் ஒன்றிலேயே நாட்டம் வைத்திருக்கின்றது. மற்றெல்லாத்தேசத்
தாரின் சண்டைக் கலங்கள் மேற்குறித்த ஜலசந்திகளிற் பிரவேசிக்கும்
சுதந்தரத்தை ஒரு மொழியாய்த் தவிர்த்துவிடுவது அவ்விருதிறத்தார்
தாற்பரியம். ருஷர் தூர்க்கியரைத் திருஷ்டாந்த பூர்வமாய்ச் சிறைப்
படுத்த ஆதரவாய்க்கொண்ட அனுகூலமான சித்தவிர்த்தி சாதனம்
இதே. தூர்க்கியர் தங்கள் பூர்வ சம்பந்திகளாகிய அங்கிலேயர் முதலி
யவர்களுக்குக் கன ரொக்கம் கடன்பட்டிருப்பதனால் இந்த ஆபத்தில்
அவர்களை விலக்கிவிட நினைந்ததாக இருப்பினும் இருக்கும். ஏற்கெனக்
கூடிய ஸ்தானாதிபதிகள் சபையார் தூர்க்கியின் அரசாட்சி ஸ்திதியை
நயப்படுத்தி அதன் அரசிறைக் கிரமத்தைத் திருத்தும் உபாயம் சூழ்ந்து
சொல்லக் கன்ஸ்டாண்டிநோபில் நகரத்தில் பல கட்சியார் சேர்ந்த
கமிஷனர் சபை ஒன்றை ஸ்தாபிக்க விரும்பினார்கள். "பழைய உற
வைப் புதுப்பிப்போமானால், இங்கிலாந்தும் பிரான்சும் நமது ரொக்
கத்தைக் கொள்ளைகொள்வதன்றி, நமக்கொரு நயமும் இல்லை. வருந்
திக் கேட்டபொழுது நமக்கு உதவ அவர்கள் மறுத்ததினால், நாம் அவர்
களுக்குச் செலுத்தும் கடனை மறந்திடுவோம்" எனத் தூர்க்கிய அரைத்
தனத்தார் நினைந்திருக்கின்றார்கள்போலும். தூர்க்கியருக்குக் கடன்
கொடுத்துப் பத்திரம் வாங்கி வைத்திருப்பவர்கள் பணம் கடலில் வீசி
விட்ட ரொக்கம்போல் அறக் கைகடந்து போய்விடுமென்று நமக்குச்
சந்தேகம் நேரிடுகின்றது.

யுத்தஞ்செய்யும் உபயகட்சியாரும் டார்டெனலீஸ் விவகாரத்தில்
பேதமற இணங்கியிருப்பது நாட்பட நிலைநிற்காது போலும். ருஷா
வும் தூர்க்கியும் டார்டெனலீஸ் ஜலசந்தியையும் கருங்கடலையும் தங்கள்
சொந்த உபயோகத்திற்காக வைத்துக்கொள்ள நினைந்திருக்கும் தாற்
பரியத்தை, மத்தியதரைக் கடலை வசப்படுத்தியிருக்கும் அரைத்தன

கட்சியார், இதர அரைத்தன கட்சியார் எவரும் உற்று நினைந்தால்
உறுதியாய் ஒப்புக்கொள்ளார்கள்போலும். ருஷா தூர்க்கியர் பிரஸ்
தாபிக்கும் இந்தத் தாஷ்டாந்தத்தில் மறைந்திருக்கும் மூலாதார நியா
யத்தை அசந்தர்ப்பமும் யுத்திபுத்திக்கு விரோதமுமாக வெகுதூரத்
திற்கு விர்த்திக்கும்படி செய்தாலும் செய்யலாம். இதற்கு உதாரண
மாக ஒன்று சொல்லுகிறோம்:—ருஷாவும் தூர்க்கியும் இதர அரைத்தன
கட்சிகளின் கலங்களைக் கருங்கடலினின்று விலக்கியவண்ணம், இங்கி
லாந்தும் பிரான்சும் இத்தாலியாவும் ஔஸ்திரியாவும் கிரீஸும் ருஷ
தூர்க்கிய யுத்தகலங்களை மத்தியதரைக் கடலினின்று விலக்குவது அத்
தனையும் நியாயமாயிருக்குமேதவிர, மற்றப்படியல்லவே. நூதனமாக
ருஷர் பிரஸ்தாபித்த பேச்சு யுத்திபுத்திக்கு ஏற்காதிருப்பதனால், ஐரோப்
பாவின் இதர அரைத்தனத்தார் அனைவரும் அதற்கு உடன்படார்க
ளென்பது உறுதிக்குறுதியே. உடன்படாவிடில், ஐரோப்பாவெல்லாம்
கைகலந்து ஒரு கட்சியாகத் திரண்டுவர, ருஷாவிற்குத் தன்னந்தனி
யே எதிர் நின்று சண்டையிட இன்னும் நிர்வாகம் இல்லையே.

(தினவர்த்தமானி.)

பிந்தி பிரசித்தமானது.

பிந்திப் பிரசித்தமான மின்சொல், சண்டை ஒழிந்து சமாதா
னம் உண்டாமென்றெண்ண இடம் தருகின்றது. ஜர்மானியா ருஷா
வின் பகைப்பைச் சாந்திசெய்யச் சூழ்ந்த உபாயம் ஏதாயிருப்பினும்
இப்பொழுது அந்த உபாயத்தால் ருஷர் மனப்பகைப்பும் யுத்தசங்கற்
பமும் தணிந்ததாகத் தோன்றுகிறது. ருஷதளம் கன்ஸ்டாண்டிநோபில்
நகரத்தைக் கைக்கொண்டு அடிக்குள்ளே அங்கிருந்து நீங்கியதே. இந்
நகரத்தை விட்டு விலகியதன்மேல், கலிபொலியை ருஷர் கைவசப்படு
த்திக்கொள்ள எத்தனிப்பார்களென்று எண்ண ஏது இல்லாதிருந்தும்,
அவர்கள் இன்னும் கலிபோலிக்குப் படையேற எண்ணமிடுவதாக டர்
பிப் பிரபு வாய்ப்பிறப்பு மின்சொல்லால் வெளிவருகின்றது. ருஷ
தண்டுகள் கன்ஸ்டாண்டிநோபில் ராஜதானியைக் கைக்கொண்டிருக்கத்
கொள்ள, அரைத்தன கட்சியார்கள் விவகாரம் பேசித்தெளிவது
அசாத்தியமென்று ஜர்மானிய அரைத்தனத்தார் ருஷருக்குக் குறிப்
பாய் உணர்த்தினார்கள் போலும். அரைத்தன கட்சியார் கூடும் கூட்
டத்தில் பேசித் தெளியக் குறித்த விவகாரங்களைத் தேற விசாரித்து
அறுதியிடுமளவும் ருஷசைநியம் கன்ஸ்டாண்டிநோபில் நகர அயலிடத்
தை விட்டு நீங்குமென நாம் எண்ணவில்லை. ருஷர் கலிபொலியைத்
தீண்டாதிருப்பார்களானால், அரைத்தன கட்சியார் கூட்டம் கூடி
ருஷோ தூர்க்கியர் பிணக்கை மனம்தேறச் சிந்தித்துத் தெளியும் சம
யத்தில், இங்கிலாந்து தன் சமுத்திரதளத்தை டார்டெனலீஸ் ஜலசந்
தியின்று விலக்கிக் கொண்டுபோக இணங்கினாலும் இணங்கும். இங்கி
லாந்திற்கும் ருஷாவிற்கும் யுத்தம் உண்டாதற்கு முன்னுள்ள ஏது
தற்காலஸ்திதியே முழுக்கூறாய் எண்ணுங்கால வெகுதூரம் குன்றியது.
ஐரோப்பா அரைத்தன கட்சியார் பலர் ஒன்றாய்க் கலந்து எதிரிடுவது
கண்டு, ருஷா முன்னுள்ள நிமிர்ச்சி குன்றி மனம் நெகிழ்ந்து வழிப்
படுகின்றதுபோலும். ஔஸ்திரியாவும் இங்கிலாந்தும் கைகலந்து ருஷா
வுடன் சண்டைக்கு எத்தனிப்பதாகத் தோன்றிய தோற்றம் ருஷா
விற்கு மறைந்திருக்கவில்லை. தூர்க்கியில் ருஷர் துள்ளாட்டம் பிணக்

கருத்துச் சமாதான ஸ்திதியை வருவித்துக்கொள்ள அநுகூலிக்கா தென்று ஜர்மானியா ருஷியாவிற்குக் குறிப்பித்தமாத்திரத்தில் ருஷா மனம் திரும்பியது. இப்பொழுதுள்ள பிணக்கை ஐரோப்பாவிற் கூடும் கூட்டத்தார் இருதிறத்தோர்க்கும் சமாதானமுண்டாம் வண்ணம் எளி தில் தீர்க்க இனித் தடை ஒன்றுமில்லை. கூட்டத்தார் அறுத்திடுவது ருஷாவிற்கு நெஞ்சாரத் திருப்திகரமாயிருக்குமென்று நாம் நினைக்க வில்லை. ஆனாலும், கூட்டத்தார் தாம் செய்யும் தீர்ப்பைக் குறை பாராட்டாது அங்கீகரித்துக்கொள்ளும்படி ருஷாவை நெருக்கித் தூண்டு வார்கள். ருஷ பூர்வ பிரஜைகளாயிருந்த சமஸ்தரும் இப்பொழுது வேறு வேறு ராச்சியங்களிற் சேர்ந்திருந்தும், சமயத்தில் ருஷ துரைத் தனத்தோடு ஒரு கையாகத் திரண்டுவருவார்களென்று சக்கரவர்த்தி எண்ணிய எண்ணம் இப்பொழுது நடந்த சண்டை வரலாற்றால் விப ரீதமெனத் திருஷ்டாந்த பூர்வமாய்த் தெரிந்தது. ஸெர்வியர், ரோமா னியர், பல்கேரியர் தங்கள் தங்கள் சுதந்தரங்களைப் பழுதறக் காக் கும் எத்தனங்களில் திருஷ்டிவைத்திருந்தார்களே தவிர, ருஷருடன் பிரிவறச் சம்பந்தப்படுவதை முக்கியமாய்ப் பாராட்டவில்லையென் பது எவரொவர்க்கும் தெரியவந்தது. இந்த யுத்தத்தைக்கொண்டு ருஷ துரைத்தனத்தின் அதிக அபேக்ஷைப் பெருக்கத்தை விர்த்திசெய்யப் பார்த்த ருஷ மந்திரி முதலானவர்கள் அறுதியில் ஏமாறிப்போனார் கள். ருஷர் தாம் குறித்த சமாதான சங்கேதப்படி தவறாது கரும முடித்துக்கொள்வார்களென வைத்துக்கொள்ளினும், அவர்கள் வரப் பெறும் நயம் ரணவீரர் லக்ஷம்பேரைப் படுகளத்தில் மடியக்கொ டுத்தும், ஆறு கோடி திரவியத்தை அவலமாய் அள்ளி இறைத்தும் வரப்பெறுவதன்றி, மற்றப்படியல்லவே. நெடுநாள்வரையில் யுத்தம் நடந்தேறக் கண்டும், பதறாமல் பிரத்தியேகமாய் ஒதுங்கி நின்று இங் கிலாந்து அற்றறுதியில் இத்தனை நிர்ணயத்தோடு அச்சமின்றி நெருங் கிவந்து தன் சுதந்தரத்தைப் பின்னமறப் பேணிக்கொள்ளக் கங்கணம் கட்டி நின்ற சாமர்த்தியமே சாமர்த்தியம். வெகுநாள் முந்தியல்ல, நாலைந்து வாரத்திற்குள் நிபிடிகரமாய்த் துர்க்கே-ருஷியர் சண்டை யிட, அங்கிலேய மந்திரிகள் விபக்ஷபாதராய்ச் சிந்தனையின்றி முயற்சி யற்றுத் துரைத்தன க்ஷேமத்தில் கண்ணும் கருத்தும் ஒழிந்திருந்தார் களென்று எத்திறத்தோரும் குறை சொல்லத் தலைப்பட்டதறிவோ மே. இப்பொழுது இங்கிலாந்து சமாதானம் நிலைநிறுத்தச் சூழ்ந்த உபாயமும் செய்த கடற்படை முயற்சியும் தருமெனப் பிரதான ஐரோப்பிய துரைத்தன கட்சியார்கள் வியந்து, தாமும் இங்கிலாந்து டன் கலந்துகொள்ளமனம் உவந்திருப்பதாகத் தெரிகின்றது. இவ்வரு ஞ்சித்தி பிரித்தானிய மந்திரிகளின் திறமைக்கு விசேஷ கௌரவம் தருவதுமன்றி, பீகன்ஸ்பீல்ட் பிரபு மந்திரி சபையைப் பின்னும் அதிக காலம் கலையாது நிறுத்தும் போலும்.

(தினவர்த்தமானி.)

அத்தியக்ஷர் பந்தயப்பரீட்சை.

1878-ம் வருஷத்தில் நடக்கும் இப்பரீட்சைக்குக் குறிக்கப்பட்ட பாடங்கள்.

கிரேக்குப் பாஷையில் பரி. லூக்கா எழுதின சுவிசேஷம்.
தமிழ்ப் பாஷையில் 1. பிளண்ட் என்பவர் செய்த கருதாத சம்பந்தங் கள். 3 ம் 4 ம் பாகங்கள்.
2. கொரிந்தியருக்கு எழுதின 2 ம் நிருபம்.
3. எபேசியர் நிருபம். 4 ம் 5 ம் அதிகாரங்கள்,
ஞாபகப்பாடம்.

1879-ம் வருஷத்துக்குக் குறிக்கப்பட்ட பாடங்கள்.

கிரேக்குப் பாஷையில் பரி. மத்தேயு எழுதின சுவிசேஷம்.
தமிழ்ப் பாஷையில் 1. எஸ்றா, நெகேமியா, எஸ்தர்.
2. பரி. மத்தேயு எழுதின சுவிசேஷம்.
3. ஏசாயாவின் தீர்க்கதரிசனம் 52: 53, 54, 55 அதிகாரங்கள் ஞாபகப்பாடம்.

☞ திருநெல்வேலி ஜில்லாவில் 1878-ம் வருஷத்தில் நடக்கும் பரீட் சைக்கு ஏற்படுகிறவர்கள் தங்கள் பேர், இடம் முதலியவைகளை, கூடன் குளத்திலிருக்கும் கனம்; தானியேல் சாமுவேல் ஐயரவர்களுக்கு நா ளது வருஷம் ஏப்பிரில் மீ 30 உக்குள்ளாக எழுதித் தெரியப்படுத்திக்கொள் ளவேண்டும்.

மார்ச்சுமீ நாள் 31. மாசிமீ 19உ முதல், பங்குனிமீ 20உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
வெ.	1	௧௯	உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம். சங். 119: 160.
ச	2	௨௦	நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. ரோமர் 3: 10.
ஞா	3	௨௧	கர்த்தரோ உண்மையுள்ளவர். 2 தெச. 3: 3.
தி	4	௨௨	என்னை ஆதரித்தருளும். சங்கீதம் 119: 117.
செ	5	௨௩	நாம் தேவனுடனே போர்செய்வது தகாது. அப். 23: 9.
பு	6	௨௪	சில ஊற்று உம்மிடத்திலிருக்கிறது. சங். 36: 9. (22:8.
வி	7	௨௫	அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான். நீதி
வெ	8	௨௬	கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறது. ஓசி. 10: 12.
ச	9	௨௭	புத்தியைக் கேட்டு ஞானமடையுங்கள். நீதி. 8: 33.
ஞா	10	௨௮	உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது. சங். 119: 140.
தி	11	௨௯	என்னைத் தவிர தேவன் இல்லை. ஏசாயா 45: 5.
செ	12	௧	எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான். நீதி. 28: 14.
பு	13	௨	கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார். 1 சா.
வி	14	௩	நீங்கள் சீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள். ஓசி. 11:10. [2:6.
வெ	15	௪	மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும். நீதி. 29: 23.
ச	16	௫	கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள் வாசமாயிருப்பதாக. கொலோ
ஞா	17	௬	என் முகத்தைத் தேடுங்கள். சங். 27: 8. [3: 16.
தி	18	௭	நீதிமான்கள் பெருகினால் சனங்கள் மகிழ்வார்கள். நீதி. 29: 2.
செ	19	௮	விண்ணப்பம்பண்ணியும் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.
பு	20	௯	தேவனிடத்தில் சேருங்கள். யாக். 4: 8. [யாக். 4: 3.
வி	21	௧௦	உங்களை நடத்துகிறவர்களுக்கு அடங்குங்கள். எபி. 13: 17.
வெ	22	௧௧	நன்மைசெய்ய நாடுங்கள். 1 தெச. 5: 15.
ச	23	௧௨	மாம்சமெல்லாம் புல்லைப்போலிருக்கிறது. 1 பே. 2: 5.
ஞா	24	௧௩	கர்த்தரில் பலப்படுங்கள். எபே. 6: 10.
தி	25	௧௪	ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துங்கள். 1 பே. 1: 24.
செ	26	௧௫	அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். 1 யோ. 1: 6.
பு	27	௧௬	நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5: 21.
வி	28	௧௭	தேவரீர் என் இளவயதின் அதிபதி. எரே. 3: 4.
வெ	29	௧௮	அவர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர். 1 சாமு. 2:7.
ச	30	௧௯	மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். சங். 19:12.
ஞா	31	௨௦	என் வீடு செபவீடாயிருக்கிறது. லூக்கா 19: 12.

விசேஷ நாட்கள்.

3. இன்குவெகிமா ஞாயிறு.
4. அமாவாசை.
6. லெந்தென்னும் நாட்களில், முதலாம் நாள்.
10. லெந்தென்னும் நாட்களில், முதலாம் ஞாயிறு.
17. லெந்தென்னும் நாட்களில், இரண்டாம் ஞாயிறு.
19. பௌரணமி.
24. லெந்தென்னும் நாட்களில், மூன்றாம் ஞாயிறு.
25. பரி. கன்னிமரியாள் மங்களவார்த்துத் திருநாள்.
31. லெந்தென்னும் நாட்களில், நாலாம் ஞாயிறு.

நற்போதகம்.

௪. எப்பிரல்மீ. ௲௮௱௮௰௯.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

XI. அதிகாரம்.

6. "பேச்சிலே கல்லாதவன்." எதிரிகள் இப்படிச் சொன்னார்கள். மற்றப்படி பவுல் சாமர்த்தியப் பிரசங்கிதான். இவர் கிரேக்கருடைய ஞானத்தைப் போதியாமல் இரட்சிப்புக்குரிய அறிவை நன்றாய்ப் போதித்துவந்தார். அதினால் எதிரிகள் இப்படிச் சொன்னார்கள்.

7. "குற்றஞ்செய்தேனோ." இதொரு சிலேடை (Irony) யாயிருக்கிறது.

9. நடபடி. 18: 3—5.

10. "நீங்குவதில்லை." தடைப்படுவதில்லையென்று அர்த்தம். மூலபாஷையில் சுவர்வேலி அல்லது மதிலால் தடைப்படுகிறதில்லை என்ற அர்த்தமாய் வருகிறது. இது ஒரு ரூபக அலங்காரமாம்.

வடதிசையிலிருந்து அகாயாவில் சத்துருக்கள் வந்து விழாதபடி கொரிந்தியர்: கொரிந்து பூசந்தியில் ஒரு பெரிய வேலிச்சுவர் கட்டியிருந்தார்கள். இந்தப் பூசந்திச்சுவரின் அஸ்திபாரம் இடிந்து கிடக்கிறதை இப்பொழுதும் காணலாம். பவுல் இந்த நிருபத்தை இந்தப் பூசந்திக்கு வடக்கே மக்கேதோனியாவிலிருந்து எழுதுகிறார். 10: 14 ல் பவுல் தமது ஆவிக்குரிய வேலையின் எல்லை கொரிந்தியரிடம்வரைக்கும் என்று சொல்லியிருந்தார். இப்பொழுது அவர்: "அகாயா நாட்டின் திசைகளிலே" தமது திறமையைக்காட்டவும் கிறிஸ்துவுக்குள் மேன்மைபாராட்டவும் எந்தத் தடையும் தம்மைக் கட்டுப்படுத்தமாட்டாது என்று மேற்காட்டிய மதிலை மனதில் வைத்துக்கொண்டு ரூபக பாவனையாய்ச் சொல்லுகிறார்.

12. கிடையாதபடிக்கு" மூலபாஷையில், வெட்டிப்போடும்படி என்றர்த்தம். இது இராணுவத்துக்கடுத்த ஒரு ரூபகமாம். முற்றிக்கை போடும்படி வருகிற சத்துருவைப்போல் கள்ளப்போதகன்மார் என்னை எண்ணி, நான் கொரிந்துக்குவராதபடி என்னை அடைத்துப்போடும்படி நினைப்பார்கள். ஆனால் அவர்களுடைய பதிவிடை அவமாய்ப்போகும்படி செய்வேன் என்றர்த்தமாய்ச் சொல்லுகிறார்.

17. "கருத்தருக்கேற்றபடி." அதாவது கர்த்தருக்கேற்றபடி சொல்லாமல் உங்கள் நிமித்தம் பலவந்தம்பண்ணப்பட்டுச் சொல்லுகி

றேன் என்றர்த்தம். இதினாலே பரி. பவுல் இப்பொழுது எழுதுவது தேவாவியின் ஏவுதல் பெறாதது என்று சொல்லுகிறதில்லை.

தற்புகழ்ச்சி அவசியமாய் வேண்டியபோது அது தப்பிதமாகமாட்டாது. "பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்" என்பது கிறிஸ்துநாதருடையகட்டளை. எபி. 6: 16, 17 வாசி பரி. பவுலின் நடக்கையையும் அப்போஸ்தல அதிகாரத்தையும் குறித்து கள்ளப்போதகன்மார் ஆட்சேபித்ததற்கு உத்தரவாக, தேவனுக்கும் சபைக்கும் விரோதமில்லாமல் பவுல் தற்புகழ்ச்சியாய்ப் பேசுகிறார். அவசியமான சமயங்களில் ஆணை வேண்டியதாயிருந்ததுபோலவே இதுவுமிருக்கிறது. தேவனுடைய சத்துருக்களை அழிக்கும்படி தாவீதின் கையில் பெலிஸ்தருடைய பட்டையம் ஏற்ற ஆயுதமாயிருந்ததுபோல, பவுலின் வாயில் தற்புகழ்ச்சியுமிருந்தது. கள்ளப்போதகன்மார் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை ஆட்சேபிக்கிராவிட்டால், பவுலிடத்தில் விளங்கிய தேவ கிருபையின் வல்லமையும் வெளிப்பட்டிராது. பவுல் இரத்தச்சாட்சியாகிறதற்கு (10) வருஷத்துக்கு முன் எழுதப்பட்ட இந்த நடபடிகளோடு, பின்னான (10) வருஷ நடபடிகளையும் சேர்த்தால் எப்படியிருக்கும். மற்றவைகள் கடைசிநாளில் தான் தெரியவரும்.

22. நடபடி. 6: 1. பிலி: 3: 5.

23. நான் கிறிஸ்துவினிமித்தம் பட்ட பாடுகளே எனக்கு மகிமை.

24. நடபடி. 26: 11. யூதருடைய செபஆலயங்களில் நடந்தது.

25. அஞ்ஞான துரைகளால் பிலிப்பியில் நடந்ததுபோல நடபடி. 16: 22.

"கல்லெறி." நடபடி 14: 19. 14: 5.

கவனிப்பு.—(1) நடபடி சரித்திரத்திலும், பவுலின் பாடுகளை லூக்கா நிறைவாய்ச் சொல்லவில்லை.

(2) லூக்கா எழுதிய சரித்திரமானது பவுல் இரத்தச்சாட்சியான காலத்துக்கு (5) வருஷத்துக்கு முன்னமே முடிந்துபோவதால், பவுலின் பாடுகள் அநேகமாய் விட்டுவிடப்பட்டிருக்கிறது.

(3) பவுல் ஒருதரம் மிலாறுகளால் அடிபட்டதையும் நடபடி. 16: 22), ஒருதரம் கல்லெறியுண்டதையும் (நட. 14: 19). ஒருதரம் கப்பல் சேதத்திலிருந்ததையும் (நட. 27: 41), லூக்கா சொல்லுகிறார்.

"கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்" அதாவது கடல்தண்ணீரிலே, கால் தரையில் தட்டுப்படாமலிருந்தேன். "நான் மூன்றுதரம் கப்பற்சேதத்திலிருந்தேன்" ஒரு சமயத்திலோ கப்பல் சேதமானபின், ஒரு இராப்பகல் முழுவதுமாய் (தரை வந்து சேராமல்), ஆழமான தண்ணீரிலே கிடந்து நீந்திநீந்தி அலைகளால் அலைசடிப்பட்டேன் என்றர்த்தமாம்.

28. அப்போஸ்தலருக்குள் யாராவது எல்லாச் சபைகளுக்கும் முதன்மையாயிருந்தால் அது பேதுருவல்ல, பவுலாயிருக்கவேண்டும்.

29. "எரியாதிருக்குமோ" துக்கத்தினாலும் வெட்கத்தினாலும் எரியாதிருக்குமோ, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே.

30. நான் செய்த அற்புதங்களைக் குறித்தல்ல. ஆனால் என்பாடுகளைக்குறித்து மேன்மைபாராட்டுவேன்.

31. முந்திச் சொல்லியதை உறுதிப்படுத்துகிறார். அதிகமாய்ப் பாடுபடுகிறவன் அதிகமாய்க் கிறிஸ்துவுக்கொப்பாகிறான். என்ன பாக்கியம்.

32, 33. பலவீனத்திற்கடுத்தவைகளைக்குறித்து மேன்மைபாராட்டுவதாக பவுல் சொல்லியிருந்தாரே. அந்தச் சம்பந்தமாய், இந்த ஆபத்

தில் மோசே, எலியா, எலிஷா இவர்களைப்போல் அற்புதமாய் விடுதலையாக்கப்படாமல், இழிவான வகையாய்க் கூடையில் வைத்து இறக்கிவிடப்பட்டதாகச் சொல்லுகிறார்.

இந்த வாக்கியங்கள் விளங்கும்படி பின்வரும் சரித்திர சம்பந்தத்தைக் கவனிக்கவேண்டும்.

ஏரோது அந்திப்பா சமாரியப் பெண்ணாகிய மால்த்தஸ் என்பவளால் மகா ஏரோதுக்குப் பிறந்த மகன். இவன் காற்பங்காகிய கலிலேயாவுக்கும் பெரேயாவுக்கும் தேசாதிபதியாயிருந்தான். இவன் அரபி (பெற்றிரியா) இராசாவின் மகளைக் கலியாணம்செய்திருந்தான். மகா ஏரோதின் மகனான அரிஸ்தொபுலுவின் குமாரத்தியும், மரியமுனையாலே மகா ஏரோதுக்குப் பிறந்த மனாகிய பிலிப்புவின் மனைவியுமான ஏரோதியாளை (பிலிப்பு உயிரோடிருக்கும்போதே), ஏரோது அந்திப்பா எடுத்துக்கொண்டு ஷெ அரேத்தா இராசாவின் மகளை அவள் தகப்பன் வீட்டுக்குத் துரத்திவிட்டான். யோசேப்புஸ் சொல்லுகிறபடி, இதினிமித்தம் அரேத்தா குரோதங்கொண்டு மருமகனோடு சண்டைக்குவந்து (யூதர் சொல்லுகிறபடி யோவான்ஸ்நானனுடைய பழிக்குப்பழிவாங்கினாற்போல்), அவன் சேனையை மடங்கடித்து நாசமாக்கிப்போட்டான்.

ஏரோது அகிரிப்பா தன்னைக் காப்பாற்றும்படி ரோமா இராயனுக்கு அப்பீல் பண்ணினான். சீரியாவும் ரோமருக்குள்ளான நாடானதால், அப்பொழுது சீரியதேசத்திலிருந்த ரோமசேனைக்கு அதிபதியும், சீரியதேசத்துக்குத் துரையுமாயிருந்த விற்றெல்லியுஸ் (Vitellius) என்பவன் ஏரோது அகிரிப்பாவுக்கு உதவிசெய்து, அரேத்தாவைக் கொன்றுவது, உயிரோடேயாவது ரோமைக்குக் கொண்டுவரும்படி, திபேரியு இராயன் உத்தரவு அனுப்பினான். இப்படியிருக்கிறதுவாயில், திபேரியு கி. பி. 37 ல் மரித்துப்போனான். இந்தச் செய்தியைக் கேட்டு விற்றெல்லியுஸ் ரோமைக்குப் போய்விட்டான்.

முந்தின ஜெயங்களினால் கெருவங்கொண்டிருந்த அரேத்தா இராசா, இது சமயம் பிடித்து சூரியாவைச் சூறையாடும்படி தீர்மானித்து, தமஸ்குவைத் தன் கைவசப்படுத்திக்கொண்டான். அவன் ஒரு தலைவனை (Ethnarch) நியமித்து அவன் கைக்குள் ஒரு காப்புச்சேனையையும் வைத்தான்.

ஏரோது அந்திப்பாவின் மேல் வெறுப்பாயிருந்த யூதர், அரேத்தா அவன்மேல் ஜெயமடைந்ததைக் குறித்துச் சந்தோஷப்பட்டார்கள். அதினாலே அரேத்தா அவர்களுக்குச் சகாயம் செய்யும்படியாக, சனேத்ரீம் சங்கத்தாராலே அதிகாரம்பெற்றிருந்தவனும், தற்சமயத்தில் யூதருக்கு விரோதியும், "தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினவனும், (ஏறக்குறைய மூன்று வருஷமாய் அரபிக்குப் போய்த் திரும்பிவந்தவனும்) ஆயிருந்த பவுலைப் பிடிக்கும்படி தன் சேனைத்தலைவனுக்கு கட்டளையிட்டான். இது பவுல் இரண்டாந்தரம் தமஸ்குக்கு வந்தபொழுது நடந்த சங்கதியாம்.

"தமஸ்கருடைய." நிலையான அரசாட்சியில்லாத இக்காலத்தில் தமஸ்கர் கொஞ்சம் சுயாதீனத்திலிருந்ததாகத் தோன்றும்.

"கூடையிலே." யூதர்கள் கோட்டை வாசல்களைக் காத்துக்கொண்டதினால் இதல்லாத வேறு வழியில்லை. நட. 9: 24. யோசேப்புஸ் சொல்லுகிறபடி (10,000) யூதர்கள் தமஸ்குவிலிருந்தார்கள்.

"தப்பினேன்." மத். 10: 23. நட. 9: 25. 17: 14. 8: 1. 14: 6.

கிறிஸ்துவை மறுதலிக்கிறதைப் பார்க்கிலும் இரத்தச்சாட்சியாகிறதே சரி. ஆனால் அப்படியில்லாத சமயத்தில் நமது சீவனை வலிய

இழக்கக் கொடுக்கிறது சரியல்ல. பவுல் இப்படித் தப்பினது சபைக்கு இடறுதலாயிருந்திருக்குமோ என்று விசாரித்தால், அப்படியுமில்லை. கிறிஸ்தவர்கள் இவன் தப்புவதற்கு உதவிசெய்திருக்கிறார்கள்.

Notes on Numbers.

எண்ணாகம வியாக்கியானம்.

௰. அதிகாரம்.

இஸரவேலர் சீனாயைவிட்டுப் பிரயாணப்பட்டது.

---

11. இந்த வாக்கியமுதல் 14 அதிகாரம் முடிய இவ்வாகமத்தின் இரண்டாம் பெரிய பிரிவு அடங்கியது.

12. "பாரான் வனாந்தரம்" எகிப்துக்கும் கானானுக்கும் நடுவிலிருக்கிற பெனின்சலாவில், பாரான் வனாந்தரத்தைச் சேர்ந்த நாடு மூன்றிலொரு பாகத்தை அடக்கியது. இந்தப் பெனின்சலாவின் மத்தியில் ஒரு பெரிய சுக்கான் கல் (Lime Stone Plateau) மேட்டுநிலமிருக்கிறது. இந்த மேட்டின் கீழ்பாதி பாரான் வனாந்தரமாம். இதற்கு வட எல்லை கானானியர் எல்லைதான். மேல் எல்லை, ஷெ மேட்டு நிலத்தின் மேல் பாதியாகிய சூர் வனாந்தரத்தைப் பிரிக்கிற எகிப்து நதியாம். தென் எல்லை, இரண்டு குடாக்கடல்களையும் இணைக்கிற பெரிய மணல் தேரியாம். கீழ் எல்லை, எலானிற்றிக் குடாக்கடலும் அராபா பள்ளத்தாக்குமாம். இதின் வடகீழ் கோடியில், கானானின் எல்லைக்கடுத்த சீன் (Zin) வனாந்தரமிருக்கிறது. (34: 3). [சீன் (Zin) வனாந்தரம் வேறே. சின் (Sin) வனாந்தரம் வேறே என்றறியவும்.]

இஸரவேலர் இப்பொழுது சீனாயைவிட்டுக் கானானுக்குப் புறப்பட்டு பாரான் வனாந்தரத்துக்கு நேரே வந்தார்கள். இந்தப் பாழ்வனாந்தரத்திலே அவர்கள் (38வரு) அலைந்து திரியப்போகிறது அவர்களுக்கு இப்பொழுது தெரியாது. பாரான் வனாந்தரமென்று இவ்வாக்கியத்தில் முன் கூட்டிச் சொல்லியிருக்கிறது. ஏனென்றால் இதற்கு வர ஒரு பெரிய தேரியைக் கடக்கவேணும். மேலும் இவர்கள் முதலில் வந்து தாமதித்த கிப்ரோத்அத்தாவா, ஆசரோத் என்ற இடங்கள், இந்த வனாந்தர எல்லைக்குள்ளில்லை. 11: 35. 12: 16.

13. "முதல்" யூதாக்கோத்திரம் முதலாவது செல்லுவதைக் குறிக்கும். 14—28.

17. பரிசுத்த தட்டுமுட்டுக்களை வைக்கும்படி வாசஸ்தலம் முந்திப்போய் ஆயத்தமாயிருக்கவேண்டியது தானே. 2: 17ல் இதற்கடுத்த உத்தரவு பொதுவாய்ச் சொல்லியிருக்கிறது. 21 வா.

29. ஓபாபும் எத்திரோவும் ரேகுவேலின் மக்களாயும், ஒருவருக்கொருவர் சகோதரராயுமிருந்திருக்கலாம். ஓபாவும் எத்திரோவும் ஒரே ஆளைத்தான் குறிக்குமென்று அநேக பூர்வ நவீன சாஸ்திரிகள் சொன்னாலும், அப்படி இருக்கக்கூடியதாய்த் தோன்றவில்லை. ரேகுவேல், எத்திரோ, ஓபாப் ஆகிய இம்மூன்று பேரும் ஒரே ஆளைத்தான் குறிக்கிறதென்று சிலர் சொல்வது சற்றாகிலும் இசையவில்லை.

மோசேக்கு ஓபாப், மாமனல்ல, மச்சினனாயிருந்தான். ஓபாப், ரேகுவேலின் மகன் என்று சொல்லியிருக்கிறது. வனாந்தரத்திலே வழிகாட்டியாயிருக்கும்படி மோசே இவனை அழைப்பதினால், இவன் இப்பொழுது, மோசேயின் மாமனுக்கு இளையவனாயிருக்கவேணுமென்று விளங்குகிறது. யாத்தி. 18: 27ல் இஸ்ரவேலர் சீனாயில் சேருமுன்னே எத்திரோ தன் தேசத்துக்குத் திரும்பிவிட்டானென்று சொல்லியிருக்கிறது. ஆனால் ஓபாபோ, இஸரவேலரோடு கூடப்போய் கானானில் சுதந்தரம் அடைந்தானென்று காணப்படுகிறது. (இந்த வாக்கியத்தை நியாயாதிபதி 1: 16. 4: 11. ஓடு ஒத்துப்பார்).

மாமன் என்று திருப்பியிருக்கிற எபிரேயு வார்த்தை, கலியாண உறவினால் சம்பந்தப்பட்ட எந்த முறையையும் குறிக்கிற பொது வார்த்தையாம்.

31. இஸரவேலருக்கு முன்சென்ற ஸ்தம்பமானது அவர்கள் போகவேண்டிய திசையை மட்டும் பொதுவாய்க் காட்டினதென்று தோன்றும். மற்றும் காரியங்களுக்கு பொதுவான தேவபராமரிப்பின்படி நடத்தப்பட்டார்கள். தண்ணீர், விறகு, மேய்ச்சல் கிடைக்கக் கூடிய இடங்கள் இன்னது, புயல் சூறாவளி எடுக்கிற இடங்கள் இன்னது, கள்ளர் கூட்டமிருக்கிற இடங்கள் இன்னது என்று மோசேக்குத் தெரிவிக்கும் விஷயத்தில் ஓபாப் கண்களைப்போலிருப்பான்.

33. "மூன்றுநாள் பிரயாணம்." "ஒரு ஓய்வுநாள் பிரயாணதூரம்" என்பதுபோல் இதுவும் ஒரு குழூஉக்குறியென்று தோன்றும். ஒருநாளில் கடக்கக்கூடாத வழிக்கு மூன்றுநாள் பிரயாணமென்று எபிரேயர் சொல்வார்கள். ஆகையால் மூன்றுநாளும் தாமதியாமலும் சரியான ஆகாரமில்லாமலும் பிரயாணம்பண்ணினார்கள் என்றர்த்தம். (ஆதி. 30: 36. யாத்தி. 3: 18. 5: 3. 8: 27. 15: 22). மூன்றுநாள் பிரயாணம் என்பதை வார்த்தைப்படியே அர்த்தம்பண்ணினாலும், யூதருடைய கணக்குப்படி, மூன்றுநாளென்பது ஒரு முழுநாளும் இரண்டு நாட்களின் பாகங்களுந்தான். இந்தப் பிரயாணமுடிவில் வாசஸ்தலம் முதலாவது மறுபடி ஸ்தாபனம்பண்ணப்பட்டு சதாப்பாளயமிறங்கின இடம் கிப்ரோத்அத்தாவாதான். 11: 24, 34. 33: 16.

"உடன்படிக்கைப்பெட்டி முன் சென்றது" 21 வா. 2: 17 வாக்கியங்களினால், உடன்படிக்கைப்பெட்டி வழக்கமாய் பாளயங்களின் நடுவே பிரயாணப்பட்டுப் போகவேண்டுமென்று தோன்றும். ஆனால் யோசுவா 3: அதில், அது சனங்களுக்கு முன்சென்றது விசேஷித்த வகையாய் நடந்தது. சில யூத வியாக்கியானிகள்: யோர்தானில் விசேஷித்த வகையாய் அது முன் சென்றதுபோலவே, இஸரவேலர் சீனாயை விட்டுப்போனமுதல் பிரயாணத்திலும் அது விசேஷித்த வகையாய் முன் சென்றது என்று சொல்லுகிறார்கள். இன்னும் சில வியாக்கியானிகள்: இதைக்குறித்து முன்சொல்லிய கட்டளைகளுக்கெல்லாம் இந்த வாக்கியத்தைத் திறவுகோலாக வைத்துக்கொண்டு, உடன்படிக்கைப்பெட்டி எப்பொழுதும் முந்தியே சென்றது என்கிறார்கள்.

சரியான வியாக்கியானமாவது, "முன்சென்றது." என்ற வார்த்தை இவ்விடத்தில் இடத்தைக் குறிக்கமாட்டாது. ஆனால் ஒரு தளகர்த்தன் தன் சேனைக்கு முகாமையாய் நின்று அதை நடத்துவதைக் குறிக்கிற வார்த்தையாம். (27: 17. உபா. 31: 3. 1 சாமு. 18: 16. 2 நாளா. 1: 10) தளகர்த்தனானவன் தன் சேனைக்கு எப்போதும் முன் அணியில் செல்லவேண்டிய அகத்தியமில்லையே. அப்படியே உடன்படிக்கைப்

பெட்டி இஸ்ரவேலருடைய நடுவில் சென்றாலும், இத்தால் நடத்தப் பட்டுப் போனதினாலே முன்சென்றது என்று சொல்லலாம்.

35, 36. பெட்டியானது புறப்படுவது ஜெயத்துக்குக் குறிப்பு. அது தங்குவது வாழ்வுக்கும் இளைப்பாறுதலுக்கும் குறிப்பாம்.

படிப்பினை.

விசுவாசிகளுக்கு வழிகாட்டுகிறவர் எகோவாவே. அப்போ நாம், அவர் பார்ப்பார், அவர் காப்பார் என்று தைரியமாயிருக்கலாமே. இவ் வுலகத்தில் தேவநடத்துதல் நமக்கு விளங்காத காரியம். நாம் நமது புத்தியை முயற்சிக்க நேரிடும்போது கவனமாய் நடக்கவேண்டும். முறுமுறுக்கக்கூடாது. 31.—மோசே ஓபாபைக் கூப்பிட்டதுபோல் நாமும் நமது இனசனத்தாரைக் கிறிஸ்துராட்சகரிடத்துக்குக் கூப்பிட வேண்டும்.

கக. அதிகாரம்.

11முதல் 14 அதிகாரம்வரை இஸ்ரவேலர் சீனாயிலிருந்து புறப்பட்ட பிற்பாடு செய்த கலகங்களைச் சொல்லியது. இதினாலே அவர்கள் வாக்குத்தத்த தேசத்திற்குட் பிரவேசியாதபடி சபிக்கப்பட்டார்கள். சரித்திரப்போக்கானது அவர்கள் வடக்கைநோக்கிப் பிரயாணஞ்செய் தார்களென்பதற்கு தற்செயலாய் சில விபரங்களைக் காட்டுகிறது.

1. பிரயாணத்தில் நேரிட்ட அசௌகுறைகளையிட்டு முறுமுறுத் தார்கள்.

"கர்த்தருடைய அக்கினி" மின்னல் என்றுதோன்றும். (சங்கீதம் 78: 21). 16: 35 ஆம் லேவி. 10: 2 ஆம் சொல்லியது இதற்கு வித்தியாசமானதென்று காணப்படுகிறது.

"கடைசியிலிருந்த" அக்கினி பாளையத்துக்குட் பிரவேசிக்க வில்லை. மோசேயின் மனறாட்டின்பேரில் அது சீக்கிரத்தில் நின்றுபோயிற்று.

3. "தபேரா" எரிவு என்றர்த்தம். இது இஸ்ரவேலர் பாளையமிறங்கியிருந்த இடங்களில் ஒன்றல்ல. அதினாலேதான் 33 அதிகாரத்திற காட்டியிருக்கிற டாப்பில் இந்தப் பேரில்லை. இது அக்கினியெழும்பின இடத்துக்குமட்டும் பேராயிருந்தது. இந்தச் சங்கதி கிப்ரோத் அத்தாவாவில் நடந்ததாகத் தோன்றும். 34 வா. உபா. 9: 22.

4—35. கிப்ரோத்அத்தாவாவில் நடந்தசங்கதிகள்.

4. "பலசாதியான" எகிப்திலிருந்து இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்த அந்நிய சாதியாராம். யாத்தி. 12: 38 பார்.

"திரும்ப அழுது" முன் செய்ததுபோல். யாத்தி. 16: 2.

5. எகிப்தில் அநுருசியுள்ளபதார்த்தங்கள் இங்கே தற்செயலாய்ச் சொல்லப்படுகிறது. இவைகளைச் சாப்பிட வாஞ்சம். இவைகள் இப்பொழுதும் எகிப்தில் மிகுதியாயுண்டு. சனங்களுக்கு முக்கிய சாப்பாடாயுமிருக்கிறது.

"வெண்காயம்" பிரமிட் என்னும் கோபுரங்களைக் கட்டுவதில் வேலைசெய்த கூலிக்காரருக்கு இதுதான் வழக்கமான முக்கிய சாப்பாடு. இது எகிப்தில் பருமனாய் உண்டாகும். லேசான ருசியாயிருக்கும்.

6. சங்கி. 25: 15.

7—9. மன்னாவை வெறுக்கும்படி சனங்களுக்கு நியாயமில்லையென்று காட்ட இங்கே சொல்லப்படுகிறது.

10 ஏகமான அழுகைச் சத்தம் உண்டாயிற்று.

11—15 மோசே செய்தது ஆதி 18: 23 போலும், அதிகமாய் 1 இராசா 19: 4. யோனா 4: 1—3 போலுமிருக்கிறது. இந்தச் சமயத்தில் திகைப்பினால் அவனுடைய சாந்தம் போய்விட்டது. (12: 3) பூமியிலுள்ள பேர்போன பரிசுத்தவான்களும் குறைவுள்ளவர்கள்தான். அந்தச் "சனங்கள் எல்லாருடைய பாரத்தையும்" என்று மோசே சொல்வது நியாயமல்ல. அவனுக்கு எத்தனையோ வகையான சகாயத்தை தேவன் கட்டளையிட்டிருந்தார். எகோவா எத்தனை தயாளமுள்ளவரென்று பாருங்கள்.

16. இவர்கள் யாத்தி. 18: 21லும், உபா. 1: 9லும் சொல்லிய அதிபதிகளுக்கு முற்றிலும் விசுவாசமானவர்களாம்.

"மூப்பரும் தலைவரும்" யாத்தி. 3; 16. 5: 6. மூப்பரானவர்கள், இஸ்ரவேலருடைய சுயாதீனத்துக்காக முயற்சிசெய்தவர்கள். தலைவரானவர்கள், இஸ்ரவேலருக்குத் தலைவராக எகிப்தியராலே நியமிக்கப்பட்டு, மனமில்லாமல் இஸ்ரவேலரை அடிமை வேலை வாங்கிவந்த இஸ்ரவேலர். இருவகைப் பேரிலுமிருந்து (70) பேர் கூடிய இந்த ஆலோசனைச் சங்கம்ஏற்படுத்தப்பட்டது.

25. "தீர்க்கதரிசனம் சொன்னார்கள்" அதாவது பரிசுத்த ஆவியானவருடைய விசேஷித்த வரமடைந்து, தேவனுடைய சித்தத்தை அல்லது துதிகளைச்சொல்லிப் புகழ்ந்தார்கள் என்று அர்த்தம். இது அவர்கள் தேவனாலே நியமுகம்பெற்றவர்கள் என்பதற்கு அத்தாட்சியாயிருந்தது.

29. "எனக்காக வைராக்கியம்" மாற்கு 9: 38. தீர்க்கதரிசன வரம் அளிக்கப்படும்போது எழுபது பேரில் இரண்டு பேர் தவிர மற்றவர்களெல்லாரும் மோசேயோடே கூட இருந்தார்கள். 16, 24, 25). மோசேயின் மேலிருந்த ஆவியை அவர்கள் பெற்று, மோசேக்காகவும் மோசே மூலமாயும் தங்கள் உத்தியோகத்தை வெளியரங்கமாய் நிறைவேற்றினார்கள். ஆனால் எல்தாதும் மேதாதும் பாளயத்திலிருந்து தீர்க்கதரிசனம் சொன்னது, சுயாதீனமாக வேறொரு இடத்தில் அதிகாரத்தை ஸ்தாபிக்கிறதுபோல் யோசுவாவுக்குப் பட்டது.

31. "காற்று" சிவந்த சமுத்திரத்தைச் சேர்ந்த எலாநிற்றிக் குடாக்கடலிலிருந்து புறப்பட்ட தென்கிழ் காற்று. சங்கி. 78: 26.

"காடைகளை" யாத்தி. 16: 13.

காடைகள் தவித்துப்போய் வந்து விழுந்ததினால் பிடிக்க லேசாயிருந்தது.

32. "பத்து ஓமர் அளவு." ஓமர் என்றால் எபிரேயருக்குள் வழங்கிய பெரிய முகத்தலளவு. ஒரு ஓமர் (10) எப்பாவுக்குச் சமம். (எசே. 45: 11). ஆகையால் ஒரு ஓமர்: $5\frac{1}{2}$ புஷலுக்கு அதிகமாயிருக்கும். ஒரு புஷல் திருநெல்வேலி ஜில்லாவில் வழங்கிய சேர்ப்படிக்கு (28) படி கொண்ட அளவாம். (லேவி. 19: 36). இதினால் காடைகள் அற்புதமாய் அகப்பட்டது என்பது தெளிவாயிருக்கிறதே.

இந்த வனாந்தரத்தில் இப்பொழுதும் காடைகள் சூரியனை மறைக்கத்தக்கவிதமாய் வந்து விழுவதை பிரயாணிகள் கண்டிருக்கிறார்கள். வனாந்தரத்தில் காடைகள் வந்து விழுந்ததை இஸ்ரவேலர் இதற்கு முந்தியும் கண்டிருக்கிறார்கள். யாத்தி. 16: 13.

"குவித்துவைத்தார்கள்" உப்பிட்டு உலர்த்திக் காயவைக்கும்படி.

33. காடைகள் தானியதவசங்களைத் தின்று கொழுப்பதினால் மனுஷருக்கு நஞ்சுள்ளவைகளாகச் சுகத்துக்கேதுவானவைகளல்லவென்று பூர்வ தத்துவசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இதை ஒரு மாசமாய்ச் சாப்பிடுவது (20 வா), எவ்விதமும் வியாதியை உண்டாக்குமே. இப்படியாக இயல்பான காரணங்களைக்கொண்டு தேவன் அவர்களை அற்புதமாய் வாதித்தார்.

35. "கிப்ரோத்அத்தாவா" காடைகளை மூக்குமுட்டத் தின்னும்படி, நியாயமாய்த் தாமதிக்கவேண்டிய காலத்துக்கு அதிகமாய் இங்கிலிருந்துவிட்டார்கள். இவர்களுடைய இச்சையும் தேவன் அதற்கு இடங்கொடுத்ததும் அவர்கள் இதைவிட்டுப் புறப்படுவதற்குத் தடையாயிருந்தது. ஒரு மாசம் சென்றபின் வாதையின் முகாந்தரமாய் அந்தப் பிரேதக்குழியை விட்டுவிடத் துரிதப்பட்டார்கள். அவர்கள் முன்னுக்குச் செல்லும்படி ஸ்தம்பமும் எழும்பிற்று.

"ஆசரோத்" இது சீனாய்க்கு வடகிழக்கே (40) மயில் தூரத்திலிருக்கிற ஒரு நீரூற்றாம். இது உபா. 1:1 ல் சொல்லிய ஆசரோத் அல்லவென்று தோன்றும். (12: 16. 33: 18 வியா).

படிப்பினை.

இவ்வுலகத்தில் திர்பதியைக் காண்பது அபூர்வம். 1-3.—இயல்பாய்ப் பிறந்த மனுஷரில் கறைப்படாத மனுஷரில்லை. நாம் அடிக்கடி எந்த நற்குணத்தில் பேரெடுப்பாயிருக்கிறோமோ, அந்த நற்குணத்தில் தவறுகிறோம். ஆகையால் நாம் நம்மைப்பற்றி எவ்விஷயத்திலும் விழிப்பாயிருக்கவேண்டும். 10-15.—இச்சை ஆத்தும ரோகமாம். உலக நன்மைகளை ஆவல் தாகமாய்த் தேவனிடத்தில் கேளாதேயுங்கள். அதில் நஞ்சு கலந்திருக்கும். சுபாவ இன்ப அநுபவங்களும் பொல்லாப்பாயிருக்கிறதே. "முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு (போடு பொருள்போல்) கூடக் கொடுக்கப்படும்."—தேவன் நம்மைப் பசி பட்டினி தரித்திரம் முதலான சோதனையில் வைத்திருந்தால், நாம் பிதாவுடைவான தேவபராமரிப்பை அவமதித்தாவது, துணிகரங்கொண்டாவது, சுளுவான வழிவகைகளைத் தேடியாவது தகாதவிதமாய் அந்தச் சோதனையிலிருந்து வெளியேறப் பார்க்கக்கூடாது. "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று சொல்லி, அந்தச் சோதனையிலிருந்து தேவன் தாமாய் நம்மைக் கரையேற்றும்வரையும், அந்தச் சோதனையிலிருக்கிறதே நலம். கிறிஸ்துநாதர் கல்லை அப்பமாக்கிப் புசித்துப் பசியாறுவதைப் பார்க்கிலும், பவுல் லஞ்சம் கொடுத்து சிறைச்சாலையிலிருந்து விடுதலையாவதைப் பார்க்கிலும் அந்தச் சோதனையிலேயே பின்னுமிருந்தார்கள். நீ சகிக்கக்கூடாத சோதனையிலிருந்தால், பிதாவே இதுவே உமக்குப் பிரியமாயிருந்தது; என் சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று அவருடைய கருணாகரத்துக்குள் அடங்கியிரு.

அயதுறு நிழலை மண்ணிட் டகனிலம் புதைக்க வெண்ணி
முயலுறு வார்போல் நெஞ்சில் மூண்டெழுந் துடற்று கின்ற
அயர்பிற ரறியா வண்ணந் துடைத்திட முயன்றான் வாளா
வியன்அகத் தியல்மு கத்து விளங்குமென் றுணரான் போலும். 7

விள்ளருஞ் ஜீவ சாக்ஷி விளைத்திடும் உபாதிச் சும்மை
தள்ளரு நீர்மைத் தாகச் சமழ்த்தலாற் பரிந்தில் லாளை
எள்ளரு மகாரைக் கூவி இனிதரு கிருத்தி யென்றன்
உள்ளுயி ரனையீர் உற்ற தொன்றியா னுரைக்கக் கேண்மின். 8

பரியவ மொருங்கு கூடித் திரண்டவோர் பாரச் சும்மை
வெரிநுறீஇ அமிழ்த்த ஆறறேன் மிகமெலிந் தயர்ந்தேன் மேலும்
எரிதரு தேவகோப இருங்கனல் மாரிபெய்து
விரிதிரை யுலகும் நாமும் வெந்தழிந் தொழிவே மன்றே. 9

இத்திறம் நிகழு மென்றற் கெட்டுணை ஐயமில்லை
எத்திறம் தப்பி யுய்வ தென்பதும் அறியேன் இன்னே
நித்திய ஜீவ மார்க்க நெறியறிந் தோடே மாயிற்
சத்தியம் அவியாத் தீயிற் சாவது சரத மாதோ. 10

ஈசனார் கோபத்தாலே யெரிந்து நீறுகும் இந்த
நாசதேசத்தை விட்டு நடப்பதே கருமம் அன்றேல்
மோசம் வந்தடையும் பின்னர் முயல்வது விருதாவென்று
பேசினான் பலகால் தன்னைப் பிணித்த பேரன்பினாலே. 11

இன்னணம் நிகழும் வேலை இனத்தவர் பலருங்கூடி
என்னவோ பித்த மேலிட் டிவையெலாம் பிதற்றுகின்றாய்;
உன்னது தலைசாய்த் தின்னே உறங்குதி புலரி தோன்றும்
முன்னரோ சுகமுண்டாகும் எனவிவை மொழிந்து போனார். 12

என்னுறு வருத்தந் தேரா திகழ்ந்துரை யாடுகின்ற
இன்னார் புன்மதி தான் என்னென் றிரங்கி நித்திரை சற்றின்றிப்
பன்னருந் துயர முற்றான் பகலினும் பதின் மடங்காக்
கன்னலோ ருகமதாகக் கழிந்தன அவற்குக் கங்குல். 13

கனையிருட் பிழம்பை நூறிக் கதிரவன் குணபாற் றோன்ற
வினைசுமர் தலறி யுள்ளம் மெலியும் ஆத்தும விசாரி
மனைவயிற் குறுகி யுய்யு மதியிலா நிருவிசாரர்
அனையவன் பிராண தாபம் அதிகரித்ததனைக் கண்டார். 14

கண்டனர் உண்மை தேரார் கவல் கின்றார் அல்லர் கள்ளை
உண்டு வாயுழறுவார் போல் உணர்வின்றி யுரைக்கலுற்ற
மிண்டருக் கிரங்கி நேரு மெய்ம்மையைத் தெரித்தல் நன்றென்
றண்டர் நாயகனை யுள்ளி ஆத்தும விசாரி சொல்வான். 15

திருவருள் மகிழ்ந்து செங்கோல் செலுத்தி யிச்செகத்தை முற்றும்
ஒருகுடை நிழற் கிழாக்கி உவந்து காத்தளிக்கும் வேந்தன்
மருவுநங் குடை நிழற்கீழ் வாழு மன்னுயிர்கட் கெல்லாம்
தரு பிரமாணம் பத்தாம் தனித்தனி சாற்றக் கேண்மின். 16

நம்மையே வணங்கல் வேண்டும் நமக்கிணை யாக வேறோர்
பொம்மையைப் புனைந்து தாழ்ந்து போற்றிடா திருங்கள் வீணே
நம்மது நாமஞ் செப்பில் நாசமே வருந்தப்பாது,
செம்மை சேர் ஓய்வு நாளைச் சிந்தையால் தூய்மை செய்மின். 17

கலத்தொடு தந்தை தாயை நனி யுபசரித்தல் வேண்டும்,
கொலைத்தொழில் துரிச்சையென்னுங் கொடுந்தொழில்களவு பொய்
புலைத்தொழில் புரியலாகாபுறத்தவன் பொருள்யாதொன்றை [யாம்
அலைத் தபகரிக்க வெண்ணும் ஆசையை யடர்த்தல் வேண்டும். 18

என்றிவை சிலையிற் றீட்டி எம்மனோர் காத்து நல்கி
நன்று நீரடைய வேண்டில் நயந் ததுட்டியு மிப்பத்தில்
ஒன்று மீறிடினும் அந்தோ ஒருங்கு தீச்சிறைக்குள் ளாவீர்
இன்று மீட்பென்று சொன்ன இறையவன் யாவுங் கேட்டேன். 19

புவன மன்னுயிர்க ளிந்தப் பொதுவிதிப் பிரமாணத்தை
அவமதித் தொழுகுங்காலை அவரவ ரகத்து வாழும்
தவலறுஞ் ஜீவ சாக்ஷி தடுப்பன் அத்தடையை மீறில்
குவலய திபனுக் கெல்லாங் கூறி முன்னிற்பன் மாதோ. 20

ஆதலாற் பரமராஜன் அருள் நசவிதி கைக்கொண்டு
மேதகு ஜீவ சாக்ஷி விரோத மின்றாக ஒம்பித்
தீதொரீஇ நன்மை செய்து செம்முறை திறம்ப லின்றிக்
கோதறு நெறியி னிற்றல் குடிகள் தங்கடமை யாமால். 21

நாமும் நாம் வசிக்கும் இந்த நாசதேசத்துளாரும்
கோமுறை வழுவாத் தூய கொற்றவன் றனைப் போற்றாமல்
தீமுறை துணிந்து செய்யும் ஜெகப்புலையனுக் காட்பட்டுச்
சாமுறை துணிந்து நின்ற சருவ சண்டாள ரானோம். 22

நீணிலத்தவர் நகைக்க நினைப்பின்றி யிறைவன் பேரை
வீணிலே யுழறி யந்தோ வீணர்க்குள் வீணரானோம்
மாணுறும் ஓய்வு நாளை மதியாது மதியுங் கெட்டோம்
பேணினோ மிலைப் பெற்றோரைப் பேயரிற் பேயர் யாமே. 23

நன்மை செய்தோரு மில்லை நன்மை செய்வதற்குத் தக்க
தன்மையும் நமக்குளில்லை சார்வதா நன்றி கெட்ட
புன்மையும் களவும் சூதும் பொறுமையும் புரட்டும் பொய்யும்
வன்மமும் பகையும்உள்ளோம் மறத்தொழில் பயின்றுவாழ்வோம். 24

REVISED RULES EOR RESULTS GRANTS.

போர்ட்டு செயிண்டு ஜார்ஜு, கஅளஎ௵
அக்டோபர்மீ கஅவ.

விளம்பரம்.

கஅகூஎ௵ டிசம்பர்மீ ௩வையுடைய விளம்பரத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டு, வித்தியாவிஷயமான சகாய திரவிய விதகளோடு இதுவரையில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருந்த பிரத்தியேகமான நிபந்தனைகளும் ஷெடியூல்களும் பரிட்சையில் தேறும் திறமைக்குத் தக்க சகாயதிரவியத்தைக்குறித்து அடியில் கண்டிருக்கிற திருத்துப்பாடான விதிகளினால் ரத்தாய்விடும்.

உ, கஅளஅ௵ ஏப்பிரல்மீ கவுமுதற்கொண்டு புது விதிகளின்படி பரிட்சைகளும நடத்தப்படும், சகாய திரவியமும் கொடுக்கப்படும். கஅளஅ - எகூ௵த்தில் பரிட்சையில் தேறும் திறமைக்குத்தக்க சகாய திரவியத்திற்காக தன்னுடைய பாடசாலையைப் பரிட்சிப்பிக்கக் கோருகிற பிரதி மானேஜரும் அந்த பாடசாலையிருக்கிற முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டுக்காவது லோகல்பண்டு போர்டின் பிரசிடெண்டுக்காவது - க -வது விதியில் கண்டிருக்கிற விண்ணப்பத்தை - கஅளஎ௵ டிசம்பர்மீ ௩கவுக்கு முன்னமே அனுப்பவேண்டியது. பரீட்சைக்காக தெரிந்தெடுக்கப்பட்ட கல்விச்சாலைகளையும் அப்படிப்பட்ட பரீட்சைக்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிகளையுங் குறித்து ஜாபிதாக்கள் கஅளஅ௵ மார்ச்சுமீ ௩கவுக்கு முன்னமே டிஸ்திரிக்டு கேஜட்டுகளில் பிரசுரஞ்செய்யப்படும், பொதுவாகவாவது குறித்த கல்விச்சாலைகளைப்பற்றியாவது சகாயதிரவிய ஏற்பாட்டில் பின்னிட்டுஎவ்வளவாவது குறைக்கிறதாயிருந்தால் அதுவும் அப்போதே ௩ - ஐ. உஅ-வது விதிகளின்படி விளம்பாஞ் செய்யப்படும்.

௩. நிகழும் சர்க்கார் வருஷத்தில் மிகுதியாயிருக்கிற காலத்திலே இதுவரையில் நடந்தேறி வந்த விதிகளின்படி பரிட்சைகளும் நடத்தப்பட்டு சகாயதிரவியமும் கொடுக்கப்படும்.

(ஆலோசனை சபையிலுள்ள மகத்துவந்தங்கிய கவர்னரவர்களுடைய உத்திரவின்படி)

கையொப்பம் - டி - எப் -கார்மிகாயல்,
சீவ் செக்ரிட்டேரி.

பரிட்சையில் தேறும் திறமைக்குத்தக்கபடி ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயஞ்செய்வதைக் குறித்த விதிகள்.

குறிப்பு.—திறமைக்குத்தக்கதாகவும் சம்பள ரூபமாகவும் திரவிய சகாயம் பெறுகிற கல்விச்சாலைகளுக்குச் சம்பந்தப்படத்தக்கதல்ல.

க. கல்விச்சாலைகளைத் தெரிந்தெடுப்பது.

க. பரிட்சையில் தேறும் திறமைக்குத்தக்கபடி திரவிய சகாயம் பெறுவதற்காக தன்னுடைய கல்விச்சாலையைப் பரிட்சிக்கும்படி கோருகிற பிரதி மானேஜரும் அடியில் கண்டிருக்கிற A குறிப்பு நமுனாப்படி விண்ணப்பமெழுதி, லோக்கல் பண்டு போர்டு பிரசிடெண்டுக்காவது அந்தக் கல்விச்சாலையிலிருக்கிற முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டுக்காவது டிசம்பர்௴ ௩௧௳க்கு முன்னமே அனுப்பவேண்டியது.

உ. அப்படிப்பட்ட பிரதிவிண்ணப்பமும் டிப்டி இன்ஸ்பெக்டரிடத்திற்கு அனுப்பப்படும், அவர் ஜனவரி௴ ௧௳க்குப் பின்பு கூடுமான சீக்கிரத்திலே, தன்னிடத்திற்கு வந்த சகல விண்ணப்பங்களினுமுள்ள சாராம்சங்களை அட்டவணை ஜாபிதாவிலெழுதி, அதையும் அதோடுகூட திரவிய சகாயத்திற்கு மனுவுசெய்துகொள்ளுகிற அந்தந்த கல்விச்சாலைக்கு இவ்வளவிவ்வளவு சகாயஞ்செய்யவேணுமென்பதைக் குறித்துத் தெரிவிக்கத் தனக்கு யுக்தமாகத் தோற்றுகிற சங்கதிகளைத் தான் சுருக்கமாய்க் கண்டெழுதிய கடிதத்தையும் டிவிஷன் இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டியதுமல்லாமல், அந்தந்த கல்விச்சாலையை தான் பரீட்சைசெய்ய உத்தேசிக்கிற தேதியையும் அந்த கடிதத்தில் கண்டெழுதவேண்டியது.

௩. அந்த டிவிஷன் இன்ஸ்பெக்டரானவர் அந்தக் கடிதத்திற்கும் ஜாபிதாவிற்கும் நகலை தன்னுடைய அபிப்பிராய சகிதமாய் லோக்கல் பண்டு போர்டாருக்காவது முனிசிபாலிட்டியாருக்காவது அனுப்பவேண்டியது, அவர்கள் இன்னின்ன கல்விச்சாலைகள் அடுத்துவருகிற சர்க்கார் வருஷத்தில் லோக்கல்பண்டிலிருந்தாவது முனிசிபல் பண்டிலிருந்தாவது கொடுக்கத்தக்க ரிசல்டுகிராண்டு என்னும் திரவிய சகாயம் பெறுவதற்கு யோக்கியமானவைகளென்று நிச்சயிப்பார்கள். அப்படிப்பட்ட கல்விச்சாலைகளையும் அதுகளை பரிட்சிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிகளையுங் குறித்து ஜாபிதாவை மார்ச்சு௴ ௩௧௳க்கு முன்னமே டிஸ்திரிக்டு கேஜட்டில் பிரசித்தம்பண்ணவேண்டியது, லோக்கல் பண்டிலிருந்தாவது முனிசிபல் பண்டிலிருந்தாவது கொடுக்கத்தக்க ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயம் பெறுவதற்கு வேறே கல்விச்சாலைகளை பிரத்தியேகமான உத்திரவில்லாமல் பரிட்சிக்கக் கூடாது. யாதொரு கல்விச்சாலை லோக்கல்பண்டு ஜாபிதாவிலாவது முனிசிபல் ஜாபிதாவிலாவது தாக்கல் செய்யப்பட்டிருக்குமாகில், அது நாலாவது (ஸ்டாண்டார்டு) பிரமாணம் அடையத்தக்கதாயிருந்தால் அதற்காக புரொவின்ஷல் பண்டிலிருந்து திரவியசகாயம் பெறுவதற்குத் தகுந்ததாக எண்ணப்படும்.

௪. புரொவின்ஷல பண்டிலிருந்து மாத்திரம் கொடுக்கத்தக்க ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயத்திற்கு விண்ணப்பஞ்செய்துகொள்ளுகிற கல்விச்சாலைகளுக்கு அந்த ஜாபிதாவிலும் ரிப்போர்ட்டுகளிலும் சம்பந்தப்படுகிற பாகங்களை லோகல்பண்டின் போர்டு பிரசிடெண்டாவது முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டாவது தன்னுடைய அபிப்பிராய சகிதமாய் பப்ளிக் இன்ஸ்திரக்ஷன் டைரெக்டருக்கு அனுப்பவேண்டியது, அந்த டைரெக்டரானவர் இன்னின்ன கல்விச்சாலைகள் அடுத்துவருகிற சர்க்கார் வருஷத்தில் புரொவின்ஷல் பண்டிலிருந்து மாத்திரம் கொடுக்கத்தக்க ரிசல்டு கிராண்டு என்னும் திரவியசகாயம் பெறுவதற்கு யோக்கியமானவைகளென்று நிச்சயிப்பார். அப்படிப்பட்ட கல்விச்சாலைகளின் பேர்களையும் அதுகளை பரிட்சிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிகளையும் லோக்கல்பண்டின் போர்டு பிரசிடெண்டாவது முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டாவது டிஸ்திரிக்டு கேஜட்டில் பிரசித்தம்பண்ணவேண்டியது, புரொவின்ஷல் பண்டிலிருந்து மாத்திரம் கொடுக்கத்தக்க ரிசல்ட்டு கிராண்டு என்னும் திரவியசகாயம் பெறுவதற்கு வேறே கல்விச்சாலைகள் பிரத்தியேகமான உத்திரவில்லாமல் பரிட்சிக்கப்படாது.

௫. சகாயம் பெறும்படியான கல்விச்சாலைகளைத் தெரிந்தெடுப்பதில், உதவத்தக்கபண்டின் தொகையையும் முக்கியமான அக்கம்பக்கத்திலும் அந்தவட்டம அல்லது முனிசிபாலிட்டியில்தானேயும் கல்விவேண்டியிருப்பதையும் யோசித்துச்செய்யவேண்டியது.

௬. லோக்கல்பண்டு போர்டின் பிரசிடெண்டினாலாவது முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டினாலாவது பப்ளிக் இன்ஸ்திரக்ஷன் டைரெக்டரினாலாவது யாதொரு கல்விச்சாலையை ரிசல்டு கிராண்டு என்னும் திரவியசகாயம் பெறத்தக்கதாக எடுத்துக்கொள்ள நிராகரித்துச் செய்யப்பட்ட யாதொரு உத்திரவின்பேரில் கவர்ன்மெண்டுக்கு அப்பீல்செய்துகொள்ளலாகும். யாதொரு கல்விச்சாலையைக்குறித்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் (A) குறிப்பு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்து அந்த கல்விச்சாலை பிரசித்தஞ்செய்யப்பட்ட ஜாபிதாவிலிருக்

து நீக்கப்பட்டிருக்குமாகில், அது நிராகரித்துச்செய்கிற உத்தரவுக்குச் சமானமாக எண்ணப்படும்.

உ. சகாயத்தைக்குறித்த திட்டங்கள்.

எ. யாதொரு கலவிச்சாலையிலே நாலாவது (ஸ்ட்டாண்டார்டு) பிரமாணத்திற்கு மிஞ்சி பயிற்சிசெய்யும் வகுப்புகளிருந்தால், அந்தக் கல்விச்சாலையானது ரிசல்டு கிராண்டு என்னும் திரவியசகாயம் பெறத் தக்கதாக எண்ணப்படாது.

அ. சம்பளரூபமாக சகாயம்பெறுகிற யாதொரு கல்விச்சாலைக்கு அதே சர்க்கார் வருஷத்தில் ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயம் கிடைக்கமாட்டாது, அப்பிரகாரமே ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயம் பெறுகிற கல்விச்சாலைக்கு சம்பளரூபமான சகாயம் கிடைக்கமாட்டாது.

கூ. யாதொரு கல்விச்சாலையிலே ஓர் பாகத்திற்கு சம்பளரூபமான சகாயமும் மற்றொரு பாகத்திற்கு ரிசல்டு கிராண்டு என்னும் சகாயமும் கிடைக்கமாட்டாது.

க0. மற்றப்படி சமமாய்த் தகுந்தவைகளாயிருக்கிற கல்விச்சாலைகளுக்குள் பிள்ளைகளிடத்தில் சம்பளம் வசூல்செய்து அந்த சம்பளத்தைக்குறித்து நம்பிக்கையானகணக்கு அனுப்புகிற கல்விச்சாலைகள் சிரேஷ்டமாக எடுததுக்கொள்ளப்படும்.

கக. ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயம்பெறுகிற சகல கல்விச்சாலைகளும் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படுகிற கணக்குகளையும் ஜாபிதாக்களையும் அனுப்பவேண்டியது.

கஉ. பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதையும் அவர்கள் கல்விச்சாலைக்கு வருவதையும் அவர்களிடத்தில் சம்பளம் வசூல்செய்வதையுங் குறித்து கிரமமான ரிஜிஸ்தர்கள் வைத்து, கேட்கப்படும்போது அதுகளைப் பார்வையிட அனுப்பவேண்டியது.

கங. பிள்ளைகள் காலக்கிரமமாய் வருவதைக்குறித்த ரிஜிஸ்தர்களிலே அவர்கள் வருகிற பிரதிதடவையிலும் குறிப்புசெய்யவேண்டியது.

கச. பிள்ளைகளின் ஊர்ப்பெயர்அல்லது குடிப்பெயரை எல்லா ரிஜிஸ்தர்களிலும் பூர்த்தியாய் எழுதவேண்டியது, ஒரே பெயருடைய இரண்டு பிள்ளைகளிருந்தால் தகப்பன் பெயரையும் எழுதவேண்டியது. முதலில் பென்ஸலினுலெழுதி பின்பு அதின்பேரில் இங்கியினுலெழுதக்கூடாது, இடம்விட்டாவது கிறுக்கியாவதிருக்கவுங்கூடாது ஏதாவது பிசகு விழுந்துவிட்டால் அடியிலே குறிப்பிட்டு அதைத் திருத்தி எழுதவேண்டியது. பிரதிவிஷயத்திலும் அசல் ரிஜிஸ்தரைக்

கொண்டுவந்து காட்டவேணுமேயல்லாமல் அதற்கு சுத்தமான நகலெழுதிக்கொண்டுவந்து காட்டக்கூடாது.

கரு. பிரதி ரிஜிஸ்தரிலும் யாதொரு பதிவுசெய்வதற்கு முன்னமே ஏட்டிலக்கம் போட்டிருக்கவேணடியது.

ங. பரிட்சை.

கசு. யாதொரு கல்விச்சாலையை ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயத்திற்காக வருஷத்திற்கொருதரம் பரீட்சைசெய்யவேண்டியது.

கஎ. அப்படிப்பட்ட பரீட்சைக்கு வந்திருக்க தங்களில் ஒருவர் அல்லது பல மெம்பர்களை அனுப்பும்படி லோக்கல்பண்டு போர்ட்டாரையும் முனிசிபல் போர்ட்டாரையும் கேட்டுக்கொள்ளலாகிறது. கிராமங்களிலே கிராம பெரியதனக்காரரும் அவ்விடத்திய மற்ற கிராம உத்தியோகஸ்தர்களும் அப்படிப்பட்ட பரீட்சைக்கு வந்திருக்கவேண்டியது.

கஅ. அந்தந்த (ஸ்ட்டாண்டார்டு) பிரமாணத்தின்படி பரீட்சை விஷயங்கள் (B) குறிப்பு ஷிடியூலில் கண்டிருக்கிறது.

ககூ. பரிட்சைக்கு முந்தி படித்துக்கொண்டிருக்கிற ஆறுமாசகாலத்தில் குறைந்தது தொண்ணூறுநாள் யாதொரு பிள்ளை கல்விச்சாலைக்கு வந்திருந்தால்தான் அந்தப் பிள்ளையை பட்ரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளலாகும். மூன்று மணிநேரத்துக்குக் குறையாமல் வந்திருந்தால் அது ஒருநாளாகக் கணக்குசெய்துகொள்வதற்குப் போதுமானதாகும்.

உ0. பார்வையிடப்படுவதற்கு முந்தி பயிற்சிசெய்துகொண்டிருக்கிற ஆறுமாசகாலமுழுதும் (ஸ்ட்டாண்டார்டுகள்) பிரமாணங்களுக்குள் வாஸ்தவமாய் வாசித்துக்கொண்டிருக்கிற பிள்ளைகள் மாத்திரம் பரிட்சைக்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவாகளாவார்கள்.

உக. முதலாவது அல்லது இரண்டாவது ஸ்ட்டாண்டார்டின்படி பரிட்சைக்கு வருகிற யாதொரு ஆண்பிள்ளைக்காவது பெண்பிள்ளைக்காவது, அந்த ஸ்ட்டாண்டார்டின் க-உ-அல்லது ங-வது தலைப்புகளில் குறைந்தது இரண்டிலே பரிட்சையில் தேறினுலொழிய, யாதொரு திரவிய சகாயமும் கிடைக்கமாட்டாது. மூன்ருவது அல்லது நான்காவது ஸ்ட்டாண்டார்டின்படி பரிட்சைக்கு வருகிற யாதொரு ஆண்பிள்ளைக்காவது பெண்பிள்ளைக்காவது, குறைந்தது மூன்று தலைப்புகளில் பரிட்சையில் தேறினுலொழிய, யாதொரு திரவியசகாயமும் கிடைக்கமாட்டாது, அம்மூன்று தலைப்புகளில் இரண்டு க-உ-அல்லது ங-வதாயிருக்கவேண்டும்.

உஉ. யாதொரு பிள்ளை யாதொரு ஸ்ட்டாண்டார்டுக்காக முன்னதாகவே திரவிய சகாயம்பெற்றிருந்தால், அந்த ஸ்ட்டாண்டார்டின்படி அந்தப் பிள்ளையை மறுபடி பரிட்சைக்குக் கொண்டுவரக்கூடாது.

௨௩. யாதொரு பிள்ளை எந்த தலைப்பிலாது பரீட்சையில் தேறுவ
தற்கு அந்ததலைப்புக்கு ஏற்படுத்தியிருக்கப்பட்ட எண்ணில் பாதி அடை
ய வேண்டும். ஆயினும் யாதொருதலைப்பில் நூற்றுக்கு நாற்பதுவீதம்
எண்ணடைந்திருந்தால், வேறொரு தலைப்பில் அதிக எண் அடைவதினு
லே அந்தக் குறைவு சரிப்பட்டுப்போகிற பட்சத்தில், நூற்றுக்கு நாற்
பது வீதமாகிய அந்த எண்ணையும் ஏற்றுக்கொள்ளலாம்.

௨௪. பரீட்சையில் அடைந்த பலன்களில் சிலது அந்தப் பட்ட
ணம் அல்லது கிராமத்திலே வேறே யாதொரு கல்விச்சாலைக்கு சித்
திக்கும்படியானதாயிருக்கிறதென்று பிரத்தியட்சமாய்த் தெரியவரும்
போது, அந்தப் பலன்களைக்குறித்து திரவியசகாயம் ஜாரிசெய்யப்
படாது, எதின்பேரில் அதை நிறுத்திவைக்க உத்தேசஞ்செய்யப்படுகிற
தோ அந்த ஏதுவை, லோகல்பண்டிலிருந்தாவது முனிசிபல்பண்டிலி
ருந்தாவது அந்த திரவிய சகாயம் செய்யத்தக்கதாயிருந்தால் லோ
கல்பண்டுபோர்டு அல்லது முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டுக்கும்,
பிரோவின்ஷல் பண்டிலிருந்து அந்த திரவிய சகாயஞ்செய்யத்தக்கதா
யிருந்தால் அந்த டிவிஷன் இன்ஸ்பெக்டருக்கும் அங்கீகாரத்துக்காக
ரிபோர்ட்டுபண்ணவேண்டியது.

௨௫. ரிஜிஸ்தர்களிலே யாதொரு அபத்தமிருந்தாலும், பிள்ளை
கள் சம்பளத்தையும் அவர்கள் கல்விச்சாலைக்கு வருவதையுங்குறித்து
யாதொரு மாறுபாடு தெரிவிக்கப்பட்டிருந்தாலும், பிள்ளைகளைப் பரீட்
சைக்குக் கொண்டுவருவதில் யாதொரு மோசமிருந்தாலும், வேறே
யாதொரு சூது அல்லது அக்கிரமம் நடந்திருந்தாலும், அதுகளை பரீட்
சை முடிந்தபின்பு அப்பிரகாரமே ரிபோர்ட்டுபண்ணவேண்டியது,
மேற்கையெழுத்துசெய்கிற உத்தியோகஸ்தர் அப்படிப்பட்ட விஷயங்
களிலே திரவியசகாயம்செய்வதைநிறுத்திவைக்கவும், அந்தச்சமையத்
தில் செய்யவேண்டியதாக தனக்குத் தோற்றுகிறவகைகளைப் பிந்திச்
செய்யவும் அதிகாரமுடையவராவார்.

௨௬. பார்வையிடும் உத்தியோகஸ்தரானவர் பரீட்சை முடிந்த
பின்பு கூடுமான சீக்கிரத்திலே, பரீட்சையில் தேறின பிள்ளைகளின்
பேர்களையும் அவர்கள் பரீட்சிக்கப்பட்ட ஸ்டாண்டார்டுகளையும் அந்
தந்த தலைப்பின் கீழ் அவர்கள் அடைந்த எண்களையும் கண்டெழுதி மா
னேஜருக்குக் கொடுக்கவேண்டியது.

நானாவர்த்தமானம்.

யுத்த சங்கதி.

ஐரோப்பிய பிணக்கிற்குத் தினமொரு கோலம் உண்டாகின்றது. அதுவுமோ, சமாதானமுகமாயல்ல; இங்கிலாந்து தானும் ஓரவயவமாய்க் கலந்திருக்கின்ற உடன்படிக்கையை ருஷா மீறியதென்று குறைகூற, ருஷா மீறியது வாஸ்தவமென்று ஒப்புக்கொண்டும், அற்றுதியில் இனித் திராதென்று உடன்படிக்கை மீறியதைத் தகுமென அங்கிகரித்துக்கொள்ளும்படி ஐரோப்பா அனைத்தனத்தாரைக் கேட்கின்றது.

இச்சங்கதிகளைச் சிந்திக்கின்ற இத்தருணத்தில், பதினாறு மாசமுந்தி கில்ட் ஹாலில் பீகன்ஸ்பீல்ட் பிரபு மொழிந்த வாக்கைத் திருப்பிச் சிந்திப்பது நலம். அது வருமாறு:—“இங்கிலாந்தின் ராச்சியசாதுரியம் சமாதானமேயாயினும், நம் தேசத்தைப்போல் யுத்தஞ்செய்ய அத்தனை சித்தமாயிருக்கின்ற தேசம் வேறில்லை.. இங்கிலாந்து நியாயமான கருமத்தில் சண்டையிடப் புகுந்தால்,—நியாயமான கருமத்திற்கன்றி, இங்கிலாந்து சண்டையில் இறங்குமென்று நாம் நம்பவில்லை,—அந்த யுத்தம் அதன் சுதந்தரத்தை, சுவாதீனத்தை, அல்லது ராச்சியத்தைக் குறித்துண்டாமெனில், அதற்கு வேண்டும் தளம்-பொருள் முதலிய வளங்கள் அருகாதவைகளென்று என் மனம் அறுதியிடுகின்றது. ஒரு யுத்தத்தில் இறங்கியபின், அடுத்துப் பின்னும் இரண்டொரு யுத்தம் செய்யத்தக்க ஆதரவு தனக்கு உண்டோ எனச் சிந்தனையோடு விசாரிப்பது இங்கிலாந்தின் பிரகிர்தியல்ல.” இவ்வாறு ஷெ பிரதம மந்திரி இங்கிலாந்தின் யுத்த ஆண்மையை மதிப்பிட்டு வெளியிட்ட தாற்பரியத்தை இப்பொழுது விகற்பித்திருக்கிறாரென்று எண்ணுவதற்குப் பின்னிட்டு அவர் வாக்கினின்று பிறந்த மொழி ஒன்றும் நமக்கு இடந்தரவில்லை; ருஷா ஒரு யுத்தம் செய்துமுடிந்தவுடன், மீளவும் ஒன்று தொடங்கி நிர்வகிக்க வல்ல தேசமல்லவென்று சொல்ல ஏது இருக்கின்றது.

(தினவர்த்தமானி.)

எப்பிரல்மீ நாள் 30. பங்குனிமீ 21௳ முதல், சித்திரைமீ 19௳ வரை.			
வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
தி	1	௨௧	கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். மீகா. 7: 8.
செ	2	௨௨	என்னிடத்தில் வருகிறவனை நான் தள்ளுவதில்லை. யோவா. 6: 37.
பு	3	௨௩	நான் கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன். யோனு. 1: 9.
வி	4	௨௪	மாம்ச சிந்தை மரணம். ரோமர். 8: 6. (15:33
வெ	5	௨௫	ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக்கெடுக்கும். 1 கொ
ச	6	௨௬	தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? யோ.
ஞா	7	௨௭	நமது தேவனைத் துதியுங்கள். அறி. 19: 5. (9:35
தி	8	௨௮	கர்த்தருக்குக் காத்திரு. நீதி. 20: 22.
செ	9	௨௯	தேவனையே நோக்கி அமர்ந்திரு. சங்கீதம் 62: 5.
பு	10	௩0	அவரே நம்முடைய சமாதான காரணர். எபே. 2: 14.
வி	11	௩௧	அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன். ஓசி. 14: 4.
வெ	12	௧	உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆமோ. 4: 12.
ச	13	௨	எல்லாம் அன்போடு செய்யப்படக்கடவது. 1 கொரி. 16: 14.
ஞா	14	௩	உங்கள் வழிகளைச் சிந்தித்துப்பாருங்கள். ஆகா. 1: 7.
தி	15	௪	கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது. செப். 1: 14.
செ	16	௫	எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. 1 பேது. 4: 7.
பு	17	௬	வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடவுங்கள். எபே. 5: 8.
வி	18	௭	உன்தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படு. 5 மோ. 31 12.
வெ	19	௮	கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார். 1 கொரி. 15: 3.
ச	20	௯	தேவன் அவர்களுடைய தேவன். எபி. 11: 16.
ஞா	21	௧0	மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். 1 கொரி. 15: 4.
தி	22	௧௧	தேவகிருபையினாலே இருக்கிறேன். 10.
செ	23	௧௨	எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. 10.
பு	24	௧௩	உமது கிருபை வான பரியந்தம் எட்டுகிறது. சங். 57: 10.
வி	25	௧௪	பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பினார். லூக் 1: 53.
வெ	26	௧௫	என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக. சங். 18: 46
ச	27	௧௬	எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத்தாரும். லூக். 11: 3.
ஞா	28	௧௭	எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும். 4.
தி	29	௧௮	நீரே என் நம்பிக்கையாயிருக்கிறீர். சங். 71: 5.
செ	30	௧௯	கர்த்தர் நன்மையானதைத்தருவார். சங். 85: 12.

விசேஷ நாட்கள்.

6. அமாவாசை.
7. லெந்தென்னும் நாட்களில் ஐந்தாம் ஞாயிறு.
14. உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் ஞாயிறு.
17. பௌரணமி.
19. பெரிய வெள்ளிக்கிழமை.
21. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளாகிய ஈஸ்தர் பண்டிகை.
25. பரி. மாற்கு சுவி. திருநாள்.
28. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு.

நற்போதகம்.

௫. மேமீ. ௲௮௭௮௵.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

XII. அதிகாரம்.

1. இதின் சம்பந்தத்தைப்பற்றி 11: 32, 33 காண்க.

2 "ஒரு மனுஷனை" அதாவது பவுல்தான். 7வா.

"பதினாலு வருஷம்" பவுல் அப்போஸ்தலப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட காலமுதல் (நட. 13: 2) இதை யெழுதுகிற வருஷம் உள்பட (14) ஆமாம். அவர் குணப்பட்ட காலமுதல் எண்ணக்கூடாது. ஆகையால் அவர் அப்போஸ்தலப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட சமயத்தில்தான் மூன்றாம்வானம் வரைக்கும், பரதீசுக்குள்ளும் எடுக்கப்பட்டு தரிசனங்களையும் வெளிப்படுத்தல்களையும் அடைந்தார். இந்த வெளிப்படுத்தல்கள் அந்தியோகியா பட்டணத்திலிருக்கும்போது அவருக்கு உண்டானதென்று நினைக்கத்தக்கது.

பவுல் மற்ற அப்போஸ்தலரைப் பார்க்கிலும் அதிகமான பாடுகளைப்படவும் அதிகமாய் உழைக்கவும் அழைக்கப்பட்டதால், இந்தத்தரிசனைகளும் வெளிப்படுத்தல்களும் அவருக்கு அளிக்கப்பட்டதென்று தோன்றும். கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகப் பிரசங்கிக்கும்படி இப்பொழுதுதான் முதல்விசையாக விசேஷித்து அனுப்பப்பட்டுப் போகிறபடியினாலே இந்த விசேஷித்த சமயத்தில் இந்தத் தரிசனங்கள் அவருக்கு அருளப்பட்டது.

இவைகள் 14 வருஷத்துக்குமுன் இவருக்கு அளிக்கப்பட்டது; இதற்கு முன் கொரிந்துவில் 18 மாசமிருந்திருக்கிறார்; இதற்கு முன் ஒரு நிருபத்தையும், எழுதியிருக்கிறார். இப்படி யெல்லாமிருந்தாலும் இந்தமகிமையான காட்சிகளினாலே தமக்குக்கிடைத்த மகத்தான சலாக்கியங்களை வெளியிடவில்லை. இதென்ன தாழ்மை இதென்ன அடக்கம் நாம் இதைப் பின்பற்ற வேண்டும். மேலும் பவுல் தம்மைப் பற்றிப் பேசுவதில் மிகுந்த அவையடக்க முள்ளவரா யிருந்தாரென்பதற்கு இது பலத்த அத்தாட்சியா யிருக்கிறது. இப்பொழுதுகூட அவசியத்தி

னிமித்தம் இவைகளைச் சொல்லும்படி பலவந்தம் பண்ணப்பட்டதினாலும், இவருக்கு மாம்சத்திலே கொடுக்கப்பட்ட முள்ளு இவர் தம்மை உயர்த்தாதபடிக்கு, செய்யவேண்டியதைச் செய்து முடித்திருந்ததினாலும் அந்தத் தரிசனங்களைச் சொல்லுகிறார்.

இப்பொழுது சொல்லப்படுகிற தரிசனம் ஒரு ஞானதிருஷ்டியல்ல. மெய்யாகவே இடப்பெயர்ச்சியடைந்து கண்ட காட்சியாம். இது ஒரு ஞானதிருஷ்டியாயிருந்தால், "அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பே இருந்தானோ" என்று பவுல் சந்தேகப்படவேண்டிய நிமித்தமில்லையே, ஏனென்றால் ஞான திருஷ்டிகளிலெல்லாம், சரீரமும் ஆத்துமாவும் ஒன்றுகூடியே இருக்கும். மேலும் தமது ஆத்துமமும் சரீரமுமாகிய இரண்டும் ஒன்றாய் எடுக்கப்பட்டதோ அல்லது ஆத்துமா சரீரத்தை விட்டுப்பிரிந்து, ஆத்துமாமட்டும் எடுக்கப்பட்டதோ என்பதுதான் பவுல் சந்தேகப்படுகிற காரியம். (4)ம் வாக்கியத்தினாலே ஆத்துமா சரீரத்தை விட்டுப்பிரிந்த பின்னும் அதற்கு அறிவும் உணர்ச்சியும் உண்டென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. எப்படியெனில் சரீரத்தைவிட்டு ஆத்துமா பிரிந்தபின் ஆத்துமாவுக்கு உய்த்துணர்வு இல்லையென்றால் பவுலின் சரீரமும் ஆத்துமாவும் பிரியாமல் கூடியே எடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது தீர்மான காரியம். அப்படியிருக்க சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பே இருந்தானோ என்று பவுல்சந்தேகிக்க முகாந்தரமில்லையே. ஆகையால் மரணத்தினால் ஆத்துமா சரீரத்தை விட்டுப்பிரிந்த பின்னும் ஆத்துமா உணர்வற்று நித்திரையாயிருக்கிறதில்லை என்கிற உபதேசம் இதினால் உறுதிப்படுகிறது 2-4. இவற்றில் வெவ்வேறான இரண்டு இடங்களுக்கு பவுல் எடுக்கப்பட்டதாகச் சொல்லுகிறார். மூன்றாம் வானம் பரதீசு என்று இரண்டு வித்தியாசமான பேர்களை வழங்கியிருப்பதாலும் அத்தோடு முறையே "வரைக்கும்" "உள்" என்று இரண்டு வித்தியாசமான கூட்டுச் சொற்களைச் சேர்த்திருப்பதாலும் அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட இடங்கள் இரண்டு என்பது பிரத்தியட்சமாம்.

(1) "மூன்றாம் வானம் வரைக்கும்" இதற்கு மிஞ்சின உன்னத வானமில்லை. பவுல் தேவதூதர் வசிக்கிற இடத்திற்கு உயர்த்தப்பட்டு, தேவனுக்கு அதிசமீபத்தில் நிற்கிற சேராபீன்களோடு சேர்ந்து அவ்விடத்து மகிமையான காட்சிகளைக் கண்டு அனுபவித்தார். அதினாலே வைராக்கிய அனலையும், கொளுந்துவிட்டெரிகிற அன்பையும், பிரகாசமான அறிவையும் அடைந்து உலகத்தாரை ஏவி எழுப்பிவிட்டுப் பிரகாசிப்பித்தார்.

(2) "பரதீசுக்குள்" எடுக்கப்பட்டார். அதாவது, நீதிமான்களுடைய ஆத்துமாக்கள், சரீரத்தைவிட்டு பிரிந்தவுடனே போய்ச்சேருகிற இடமாம். இது சமாதானமும் சந்தோஷமும் நிறைந்த இடம்.

பொதுவான உயிர்த்தெழுதல் நடக்கிறவரையும் இந்த இடத்திலேதான் அவர்கள் ஆத்துமாக்கள் இருக்கும்.

"பரதீசு" என்பது ஆதியில் கீழ்தேசத்தாருக்குள் வழங்கிய வார்த்தை. அதற்கு விருட்சங்களாலும் பூஞ்செடிகளாலும் அலங்கரிக்கப்பட்டும், மிருகங்களாலும் பட்சிகளாலும் நிறைந்தும், நேர்த்தியான நதிகளால் நீர்ப்பாய்ச்சப்பட்டுமிருக்கிற இராஜதோட்டம் என்பது முதல் அர்த்தம். இதினிமித்தம் செப்ற்றியுஜின்ட் திருப்புதலில் ஏதேன் தோட்டத்துக்கு பரதீசு என்று வழங்கியிருக்கிறது.

பரதீசானது மேற்காட்டிய முதற்கருத்தின்படி சாதாரண தரையிலிருந்து பிரித்து வேலியடைக்கப்பட்டும், சூழ இருக்கும் தரையைப்பார்க்கிலும் அதிக அலங்காரமானதும் இராஜ அரமனைக்குச் செல்லும் வழியுடைத்தானதுமாயிருந்தபோதிலும், இராஜஅரண்மனை அதல்ல. அப்படியே உவமானக்கருத்தின்படியும் அது, பூமிக்கு அலாதியானதும், பூமியைப்பார்க்கிலும் ஆசிக்கப்படத்தக்கதும், மூன்றாம் வானமாகிய தேவஅரண்மனைக்குச் செல்லும் வழியுமாயிருக்கிற இடத்தைக்குறித்தபோதிலும், பரம இராசாவின் அரண்மனை அதல்ல. பரதீசானது விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் நிலையாய் வாசம்பண்ணுகிற இடமல்ல.

கீழ்தேசத்து இராசாக்கள் மற்ற இடங்களுக்குப் போவதைப்பார்க்கிலும் தங்கள் தோட்டமாகிய பரதீசுக்கு அடிக்கடி போவது வழக்கம். அப்படியே உத்தமருடைய ஆத்துமாக்கள் பூமியிலிருக்கும்பொழுது தேவசமுகத்தை அநுபவித்ததைப்பார்க்கிலும், பரதீசில் அதிகக்கிட்டத்திலிருந்து தேவசமுகத்தைத் தரிசிக்கிறார்கள். இதினாலேதான் அவர்கள் தேவசரத்திலிருக்கிறதாகவும், கிறிஸ்துவோடுகூட இருக்கிறதாகவும் வேதத்தில் சொல்லியிருக்கிறது.

பரதீசு என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் மட்டும் வருகிறது. லூக். 23: 43. 2கொரி. 12: 4. வெளி. 2: 7.

மேற்காட்டியபடி இரண்டு வெவ்வேறான இடங்களுக்குப் பவுலை எடுத்ததற்கு முகாந்தரமென்ன? பவுல் இனிமேல் அநுபவிக்கப்போகிற துன்பங்களைத்தாங்கவும், "இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று" நமக்குப் போதிக்கவும் அவனைப் பக்குவப் படுத்தும்படியாக சர்வவல்லமையுள்ள தேவன், மூன்றாம் வானத்திலுள்ள பரிபூரணநித்தியானந்தங்களைக் காட்டினதோடுகூட, நீதிமான்களுடைய ஆத்துமாக்கள் சரீரமாகிய சுமை நீங்கினவுடனே அநுபவிக்கும் பரதீசின் சந்தோஷங்களையும் பவுலுக்குக் காட்டச்சித்தமானார்.

பரதீசின் ஆநந்தங்களுக்கு மேலான நித்தியாநந்தங்களும் பரம மகிமைகளுமுள்ள மூன்றாம் வானத்தின் பேரின்பங்களைக் காட்டினபிற்பாடு பவுலை பரதீசுக்குள் எடுத்ததேன்ன? மூன்றாம் வானத்து பரம மகிமைகள், பொதுவான உயிர்த்தெழுதலுக்கும் கடைசி நியாயத்

தீர்ப்பு நாளுக்கும் பிற்பாடு தான் விசுவாசிகளுக்கு அருளப்படும். ஆகையால் இது பவுலின் மரணத்துக்கு வெகுகாலத்துக்குப்பின் கிடைக்கும் மகிமையாக இருந்தது. ஆனால் பாதீசின் மகிமைகளோ பவுல் மரித்த க்ஷணத்தில் உடனே அவனுக்கு கிடைக்கிறவையானதால் பின்வரும் துன்பங்களில் அவனுக்கு மிகவும் மிகுதியான ஆறுதலையும் அதிகமான தைரியத்தையும் கொடுக்கத்தக்கது.

7 "முள்ளு" பவுல் குணப்பட்டபொழுது கண்ணிலுண்டான ஒரு பழுது என்று சிலர் நினைப்பது சரியல்ல. நட. 9: 18. வாசி. மேலும் இந்த முள்ளு வெளிப்படுத்தலை ஒட்டிக்கொடுக்கப்பட்டது. இது இன்னதென்று நாம் தீர்மானிக்க ஏதுவில்லை. இவன் பரலோக மகிமைகளைக் கண்டதினிமித்தம் இவன் தேவனுக்கு விரோதமாகத் தன் காலை தூக்காதபடி, சத்துருக்கள் நிந்திக்கத்தக்கதாக இவன் தேகத்தில் வெளிப்படையாய்க் காணப்பட்ட ஒரு குறைவு என்று சாஸ்திரிகள் நினைக்கிறார்கள். தேவனிடத்திலிருந்து அற்புதங்களைச் செய்யும்படி வரம் பெற்றவர்கள் தங்கள் சொந்தக் குறைவை நிவிர்த்தி பண்ணிக்கொள்ள அதிகாரம் கொடுக்கப்படவில்லை.

9 விசுவாசிகள் கேட்டகாரியம் கிடையாவிட்டாலும் அவர்கள் செபம் கேட்கப்படுவது நிச்சயம். கிறிஸ்துநாதரிடத்தில்' மன்னிப்பின் கிருபை, நடத்தும் கிருபை, பரிசுத்தமாக்கும் கிருபை, மகிமை அளிக்கும் கிருபை ஆகிய இவைகளெல்லாம் சம்பூரணமாயிருக்கிறது.

12. கள்ளப் போதகன்மாருக்கு இந்த அடையாளங்களில்லை

13. இதொரு சிலேடை (Irony)

14. (13: 1. வியா) நான் வர ஆயத்தப்பட்டது மூன்றாம் விசை. முதல்விசை ஆயத்தப்பட்டபடியே வந்தேன். நட. 18: 1-11. இரண்டாம் விசை ஆயத்தப்பட்டேன்; ஆனால் என்னை ஏற்றுக்கொள்ள உங்களிடத்திலுள்ள தாறுமாறுகளினாலே நீங்கள் ஆயத்தமாயிராததால் நான் தடைப்பட்டேன். மறுபடியும் "மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்" என்கிறார்.

18. தீத்து கொரிந்தியரிடத்தில் பணங்கேட்கவில்லை. ஆகையால் அவனை அனுப்பிய பவுல் விரோதிகள் சொல்லியதுபோல் பணத்துக்கு ஆசைப்பட்டவனல்ல. தானும் கேட்கவில்லை. ஆள்மூலமாயும் கேட்கவில்லை.

"ஒரு சகோதரனை" இது லூக்காவையாவது, 8: 18. அல்லது 8: 22ல் சொல்லிய சகோதரனையாவது குறிக்கும்.

இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

நம்பர மாக வைத்த நல்லுறு பொருளைப் பேணி
இம்ப ருதியஞ் செய்யாமல் இருநிலம் புதைத்து வைத்தோம்
அம்பர லோக ராஜன் அணுகி நங்கணக்கை ஆயில்
வம்பரில் வம்பரொன்று மாதண்டம் விதிப்பர் அன்றே. 25

அச்சுத நயவேந்தன் அருளினால் உபகரிக்கும்
உச்சித மான வாழ்வை உவக்கிலேம் உலர்ந்த என்பை
நச்சி யிங்குழலும் நாய்போல் நலமிலா நாச தேசக்
குச்சித வாழ்வில் இச்சை கொண்டலை கின்றோம் யாமே. 26

வென்றி சேர் அரசன் தந்த விதிவிலக் கெவையு மீறிக்
கன்றிய மனத்த ராகிக் காமியச் சுவையை நாடிச்
சென்றனம் கடிந்து கூறும் ஜீவசாக்ஷியையுந் தேய்த்துக்
கொன்றுளே அடக்கி வைத்தோம் கொடுமை யிங்கிதில் வேறுண்டோ. 27

மருங்கெரி கதுவத் தூங்கும் மாசுண முனரா தாங்கு
நெருங்கிய அரசன் சீற்ற நெருப்பினால் நாச தேசம்
ஒருங்கவிந் தொழியுங் காலம் உற்றதை உணரேமாகி
நருங்குடற் போகம் ஒன்றே நச்சி நாட் கழித்தல் நன்றோ. 28

நந்தம் நான் யார்? ஏன் இங்கு நாடினேன்? நலமே நல்கி
இந்த மட்டெனைப் புரந்தாற் கென்கடன் யா? என் செய்தேன்?
வந்திடுங் கதியென்? என்று மாவிசாரஞ் செய்யாது
சிந்தை யற்றுழலு மாந்தர் ஜென்மமுஞ் ஜென்மமாமோ. 29

காட்சியாற் கருத்தாற் காணுங் காசினிப் பொருள்கள் யார
தாட்சி? மற்றவற்குச் சொந்த மாய காரணமோ? தம்மான்
மாட்சி சால் குண மெவ்வாறு? வசிப்பிடமெது? என்றின்ன
சூழ்ச்சி யற்றிருக்கு மாந்தர் சுமையன்றோ நிலத்துக்கம்மா. 30

தன்னைத் தன்னிலையை மேலாந் தலைவனை யவன் சித்தத்தை
முன்னைத்தான் அறிந்து பின்னர் முறையறிந் தொழுகல் வேண்டும்
பின்னைத்தான் அறிதும் என்றல் பெரும்பிழை பெரிது மோசம்
என்னத்தான் கவலுகின்றேன் யாதும் நீர் கவலுகில்லீர். 31

வித்தக அரசன் செய்த விளம்பரத் தொனி கேட்டின்னும்
இத்தலத் திருந்து நாசம் எய்துதல் இனிதன் றென்று
சுத்த சத்திய முமக்குச் சொல்லி வற்புறுத்து மென்னைப்
பித்த னென் றிகழ் கின்றீர்நும் பேதைமை பெரிது மாதோ. 32

இழவு வந்திடு மென்றேங்கி யீராம்ப திருபான் ஆண்டு
கிழமுனி பகர்ந்த நீதி கேட்டுணராதமூடப்
பழ உலகத்தை வேந்தன் பயோததிப் பரப்பை யேவி
அழ அழ அமிழ்த்திக் கொன்ற அற்புதம் அறிகிலீரோ. 33

தீதோடு நின்றீர் இன்னே திரும்புமின் வேந்தன் சீற்றம்
போ தோ டிங்கெழும்பும் என்ற புங்கவன் மொழியைத் தள்ளி
வாதாடு மூடர் பொன்ற வயங்கனல் மாரி சிந்திச்
சோதோமைச் சுடுகாடாக்கித் தொலைத்தமை தோன்றா தென்னே. 34

அடல்கெழும் இறை சீற்றத்தால் கோர வாதைக ளெழும்பிப்
படருறிஇ எகிப்து நாடு பட்ட பாடுணரீர் கொல்லோ
மிடலுடைப் பார்வோன் தானும் சேனையும் விரைந்து சென்று
கடலிடைக் குளித்த மாற்றங் கதை யெனக் கருதினீரோ. 35

வருமுன்னர்க் காவாதார்க்கு வாழ்க்கை யெத்தனைய வேனும்
எரி முன்ன ருற்ற வைத்தூ றெனக்கெடும் என்பர் இன்னல்
பொரு முன்னர் விலகி யோடிப் புகலிட மாய சோமான்
திருமுன்னர் அடையில் நித்ய ஜீவனை யடைதல் திண்ணம். 36

ஈண்டு நான் உரைத்த மாற்றம் யாவு மிப்புத்தகத்த
தாண்டகை அருளினாலே அடுத்த தென் கரத்து முன்னம்
காண்டகு மிதனை நீவிர் கருத்துற வாசித் துய்ம்மின்
வேண்டுமேற் றருவல் ராஜ விளம்பரம் வெறுத்திடாதீர். 37

ஆவது கருது வீரேல் அரைக் கணமுந் தாழாது
தீவர விருந்த நாசதேசத்தை யொருவி யின்னே
ஜீவனே யென்று கூவித் திவிரித் தோடல் வேண்டும்
சாவது துணிந்தீ ராயிற் றங்கு மித்தேயத் தென்றான். 38

இந்த வாறுரைத்த வெல்லாம் இருஞ்சிலை மீதுதாக்கும்
பந்தென லாயதன்றிப் பாமரர் பழுதமல்கும்
சிந்தையில் நிலையாதாகச் சினந்தவ மதிக்கலுற்றார்
பந்தமே கொளுந்தினாலும் பயனுண்டோ குருடர்க்கம்மா. 39

என்னைப்போல் பரம ஞானி யில்லை யென் றெமை யிகழ்ந்த
உன்னைப்போற் பித்தனிந்த உலகத்தில் இல்லை யென்பார்
பொன்னைத்தான் மாதரைத்தான் பூவைத்தான் புறக்கணித்தாற்
பின்னைத்தான் எய்துமின்பம் பிறிதுண்டோ பேசு கென்பார். 40

பதறி வாய் குழறி நீசொல் பழங்கதை தனைமுன் சில்லோர்
கதறினார் தெருக்கடோறும் கதித்தெழுந் தருத்தியாங்கள்
சிதறிட அடித்தோ மென்பார் செவிகொடா திவன் வீண்பேச்சை
உதறிவிட் டேகுவோம் நம் உறையுளை நாடியென்பார். 41

ஜீவ சாக்ஷியரைக் கொன்று சேமித்தோ மென்று நம்மேல்
தாவரும் பழியைச் சாட்டித் தனைச்சுத்த னாகக் காட்டும்
பாவ காரியைப் போல் யாரோபாதக னென்பார் மேலைத் (42
தீவரும் வருமென் றெம்மைத் திகைப்பிப்பான் இவனே யென்பார்.

சேய், கொண்ட மனையாள் உற்ற சிநேகரை வெறுப்பான் ஏதோ
பேய் கொண்டான் என்பார் ஹேது பிறிதிலைப் பித்தமிக்கு
நோய் கொண்ட கோல மென்பார் நுனித்திடு மதியற் றின்ன
வாய் கொண்ட மட்டும் பேசி வாயடி அடித்தார் மன்னோ. 43

கண்ணிணை கலுழி காலக் கணவனுக் குள மருட்சி
நண்ணிய தினியென் செய்கோ நானெனக் கவன்றணைந்தாள்
நுண்ணுணர் வுடைய நீரார் நூலொடு பழகினாலும்
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமை யுடைத்தா மன்றே. 44

பொற்றொடி இனையு மாறும் புறக்கணித் தகந்தை பேசி
உற்றவ ரிகழ்ந்த வாறும் உணர்ந்த ஆத்தும விசாரி
எற்றிவர் தன்மை யந்தோ என்னினிச் செய்வ லென்று
சற்றுநின் றேகாந்தத் தில் தம்பிரான் திருமுன் கிட்டி. 45

சருவ லோகத்தை யாளுந் தயாபரா தமியேற் சூழ்ந்த
நிருவிசாரிகள் சன்மார்க்க நெறியறி யாது செய்யும்
பொருவரும் பிழைக ளெல்லாம் பொறுத் தருள் புரியுந் தூய
திருவுள மிரங்கி யென்று ஜெபித்தனன் சிந்தை யொன்றி. 46

அறங்கிளர் பரலோகத்துக் கரசனைப் பரவிப் போந்து
புறங்கிளர் வெளியு லாவிப் புத்தகச் சுருளை நோக்கி
இறங்கிய முகத்தனாகி என்செய்கேன் இரக்ஷைக் கென்று
சறங்கெனச் சுழலும் நெஞ்சன் கவன்றனன் கலக்க முற்றான். 47

தேச நாசத்தை யெண்ணித் திகிற்படும் பிணித்து நின்ற
பாச வெவ்வினையின் மிக்க பாரத்தால் அழுந்தும் யானே
ஈசனே யுய்யுமாறு நெறி தெரித் திடுவ லென்னும்
மாசறு முயிரைக் கூவி வாய் திறந் தரற்று மாதோ. 48

(வேறு.)

வித்தக ஆத்தும விசாரி இவ்வணம்
தத்துறல் அடைந் துயிர் தன்னை நாடிச்சென்
றெய்த் திடு முடலென வினைந்து சில் பகல்
மத்தரிற் கழித்தனன் ஆண் டோர் வைகல் வாய். 49

தண்ணளி தயங்கிய முகத்துத் தாமரைக்
கண்ணிணை மல்கிய கருணை காட்டிட
உண்ணிறை அன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை அமிர்து வார்ந்துக. 50

எண்ணருந் துயர்க்கெலாம் இறுதி காட்டுமெய்ப்
புண்ணியம் உருக்கொடு பொலிந் திலங்கிய
வண்ணமென் றுணர்வுளார் மனங் களிப்புற
நண்ணினன் இருஞ்சுவி சேஷ நாமத்தன். 51

உருகிமெய் விசாரியை உற்றுநோக்கி நின்
றருகணைந் தியாரை நீ அவலிக் கின்றனை
பெருகுமித் துயருனக் குற்ற பெற்றி யென
திருகலில் சிந்தையாய் செப்புவா யென்றான். 52

அய்யகேள் நாச தேசத்தன் ஆங்கமர்
வெய்யரில் வெய்யன்யான் வெகுளித் தீவிழுந்
தொய்யென இவனெலாம் ஒருங் கவிழ்ந்தபின்
மெய்யுற வரும் நடுத் தீர்வை வேந்தனால். 53

ஆயிடைக் கருணைவேந் தாணை மீறிய
தீயனாந் தீச்சிறைப் படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதிநூல் இயம்பு கின்றதை
ஆயவித் துயர்க்கடல் அமிழ்ந்தி னேனென்றான் 54

நன்றிகொன் றிறைவனை மறந்து நாடொறும்
புன்றொழில் புரிந்து வீண் பொழுது போக்கிய
வன்றலைப் புலையனேன் மருவு தண்டனைக்
கின்றுநின் றிரங்குவ தியாவ தாங்கொலோ 55

சாகவு மனமிலைத் தண்டனைக் கெதிர்
போகவும் துணிவிலைப் புறத்து ளாரைப்போல்
ஏகவும் புகலிலை ஈடுசெய்ய வோர்
பாசமும் பலமிலைப் பதைக்கின் றேனென்றான். 56

(இன்னும் வரும்)

பரிட்சையில் தேறும் திறமைக்குத்தக்கபடி ரீசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயஞ்செய்வதைக் குறித்த விதிகள்.

(84-ம்-பக்கம் தொடர்ச்சி)

௪. திரவிய சகாயஞ்செய்வது.

௨௭. இந்த விதிகளின்படி கிடைக்கத்தக்க திரவிய சகாயத்தின் உயர்ந்த வீதம் C குறிப்பு ஷிடியூலில் கண்டிருக்கிறது. குறைந்த சகாயம் போதுமானதென்று பரிஷ்காரமாய்த் தோற்றினால், யாதொரு கல்விச்சாலைக்கு உயர்ந்த வீதத்திற்குக் குறைவாக திரவியசகாயம் செய்யலாகும்.

௨௮. பொதுவாகவாவது குறித்த கல்விச்சாலைகளைப்பற்றியாவது திரவியசகாயவீதத்தில் பின்னிட்டுக் குறைக்கிறதாயிருந்தால், அதுகளையெல்லாம் சகாயம்பெறத்தக்க கல்விச்சாலைகளின் ஜாபிதாவை பிரசித்தம்பண்ணும்போது டிஸ்திரிக்ட்டு கேஜட்டில் விளம்பரஞ்செய்யவேண்டியது.

௨௯. பார்வையிடுகிற உத்தியோகஸ்தரானவர் யாதொரு கல்விச்சாலையின் பரீட்சை முடிந்தபின்பு கூடுமான சீக்கிரத்திலே அந்தந்த ஸ்ட்டாண்டார்டின்படி பரிட்சிக்கப்பட்டுத் தேறின பிள்ளைகளின் சங்கியையையும், அதைப்பற்றி உயர்ந்த வீதப்படிக்காவது டிஸ்திரிக்ட்டு கேஜட்டில் விளம்பரஞ்செய்திருக்கிற குறைந்த வீதப்படிக்காவது கிடைக்கத்தக்க திரவிய சகாயத்தையும் கண்டெழுதி, இரட்டைப் பிரதியாக சர்ட்டிபைசெய்கிற ஒரு யாதாஸ்தையாவது அவசியமானால் இரட்டைப் பிரதியாக சர்ட்டிபைசெய்கிற இரண்டு யாதாஸ்துகளையாவது மானேஜருக்குக் கொடுக்கவேண்டியது.

௩௦. லோகல்பண்டிலிருந்தாவது முனிசிபல்பண்டிலிருந்தாவது திரவிய சகாயஞ் செய்யத்தக்கதாயிருந்தால், சர்ட்டிபைசெய்கிற யாதாஸ்தை லோகல்பண்டு போர்டின் பிரசிடெண்டுக்காவது முனிசிபாலிட்டியின் பிரசிடெண்டுக்காவது அனுப்பவேண்டியது, அவர் மேற்கையெழுத்துசெய்வதின்பேரில் அதில் கண்டிருக்கிற தொகையை அந்த வட்டத்தின் கஜானா உத்தியோகஸ்தராவது தகுந்த முனிசிபல் உத்தியோகஸ்தராவது செலுத்தவேண்டியது.

௩௧. புரோவின்ஷல் பண்டிலிருந்து திரவிய சகாயஞ்செய்யத்தக்கதாயிருந்தால் சர்ட்டிபைசெய்கிற யாதாஸ்தை அந்த டிவிஷன் இன்ஸ்பெக்ட்டருக்கு அனுப்பவேண்டியது, அவர் மேற்கையெழுத்து செய்வதின்பேரில் அதில் கண்டிருக்கிற தொகையை கஜானா உத்தியோகஸ்தர் செலுத்தவேண்டியது.

௩௨. சர்ட்டிபைசெய்கிற பிரதி யாதாஸ்தின் இரண்டாம்பிரதியை செலுத்தப்பட்ட தொகையை அதின்பேரில் கண்டெழுதி, பப்ளிக் இன்ஸ்திரக்ஷன் டைரெக்ட்டருக்கு அனுப்பும்படியாக அந்த டிவிஷன் இன்ஸ்பெக்ட்டரிடத்திற்கு அனுப்பவேண்டியது.

௩௩. முதலாவது இரண்டாவது மூன்றாவது ஸ்ட்டாண்டார்டுகளிலே பிள்ளைகள் பரீட்சையில் தேறுகிற திறமைக்குத்தக்கபடி சகாயஞ்செய்யும்படியான திரவியங்களெல்லாம் லோகல்பண்டிலிருந்தும் முனிசிபல்பண்டிலிருந்தும் செலுத்தப்படத்தக்கதாகும். பரிட்சையில் தேறுகிற திறமைக்குத்தக்கபடி செய்யும்படியான மற்ற சகாயதிரவியளெல்லாம் புரோவின்ஷல் பண்டிலிருந்து செலுத்தப்படத்தக்கதாகும்.

௩௪. எவ்விதத்திலாவது பிசகாய்க் கணக்குசெய்வதினாலே, சகாயமாகக் கொடுக்கக்கூடியதாயிருக்கிற தொகை வேண்டியிருக்கிற தொகைக்குக் குறைவுபடுமாகில், சென்ற வருஷத்திற்காகச் செலுத்தாமல் பாக்கியாயிருக்கிற சகல தொகைகளையும் நிகழும் வருஷத்தில் செய்யவேண்டி கேரிடுகிற சகாயத்திற்காக யாதொரு தொகை செலுத்தப்படுவதற்கு முன்னமே செலுத்திவிடவேண்டியது.

A.

விண்ணப்பத்திற்கு நமூனா.

௧			௨	௩	௪	௫	௬	௭	௮	௯
பிரதேசம்.										
வட்டம் அல்லது முனிசிபாலிட்டி.	தாலூகா.	பட்டணம் அல்லது கிராமம்.	கல்விச்சாலை விவரம்.	உத்தரவாதியாகிய மானேஜர்.	உபாத்தியாயர்களின் பெயர்களும் அவர்கள் கொடுத்திருக்கிற பரீட்சைகள் இன்னதென்பதும்.	சென்ற மூன்று மாசங்களில் பிள்ளைகளின் சராசரி சங்கியை.	சென்ற மூன்று மாசங்களில் சராசரி செலவு.	அந்தந்த வகுப்பில் வாங்கப்பட்ட சம்பளவீதமும் சென்ற மூன்று மாசகாலத்திலே வசூலான பிள்ளைகள் சம்பளத்தின் சராசரி மாசாந்திரத்தொகையும்.	அந்தந்த ஸ்டாண்டார்டுகளுள்ள அந்தந்த தலைப்பின்கீழ் பரீட்சைக்கு வரும்படியான பிள்ளைகளின் உத்தேச சங்கியையும் அவர்கள் பரீட்சை கொடுக்கப்போகும் பாஷைகளும்.	ஷரா.

மேற்படி கல்விச்சாலையின் உத்தரவாதஞ் செய்யும்படியான மானேஜராகிய நான், பரிட்சையில் தேறும் திறமைக்குத்தக்கபடி திரவியசகாயஞ்செய்யும்படியான ஏற்பாட்டின்படி சகாயம் பெறுகிற பட்சத்தில், திரவிய சகாயவிதிகளிலுள்ள சகல நிபந்தனைகளின்படிக்கும் நடந்துகொள்ளக்கடவேன்.

(தேதி)

மானேஜரின் கையெழுத்து.

B.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்.

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
		முதலாவது (தாழ்ந்த ஸ்ட்டாண்டார்டு)
௪.	௧-வது தலைப்பு. (வாசகம்.)	(a) முன்னமே படியாததும் முதற்பாடபுஸ்தகத்தின் முதலாம் பாகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய அங்கீகரிக்கப்பட்ட யாதொரு புஸ்தகத்தில் சிலவரிகளைத் திருத்தமாய் வாசிப்பது.
௪.	......	(b) முதற்பாடபுஸ்தகத்தின் முதலாம் பாகத்திலாவது, அவ்வளவு கஷ்டமுள்ள யாதொரு அங்கீகரிக்கப்பட்ட புஸ்தகத்திலே முன்னதாய்ப்படித்திருக்கிற அவ்வளவு பாகத்திலாவது அர்த்தத்தையும் சங்கதியையுங்குறித்து மிகவும் சுலபமான வினாக்களுக்கு விடைகொடுப்பது. அச்சிட்ட புஸ்தகங்களுக்கு பதிலாய் கையெழுத்துப் புஸ்தகங்களையாவது ஓலைப் புஸ்தகங்களையாவது கொண்டுவரலாம்.
௮.		
௩.	௨-வது தலைப்பு. (எழுதுதல்.)	(a) உபயோகிக்கப்பட்ட வாசக புஸ்தகத்திலிருந்து ஒரு சிறுவாக்கியத்தைப்பார்த்து கற்பலகையின்பேரிலாவது மரப்பலகையின்பேரிலாவது ஓலையின்பேரிலாவது பெரிய எழுத்தாக எழுதுவது.
௩.	......	(b) உபயோகிக்கப்பட்ட வாசகபுஸ்தகத்திலிருந்து சொல்லப்பட்ட சிறுவார்த்தைகளை எழுதுவது.
௬.		
௧௦.	௩-வது தலைப்பு. (கணிதம்.)	நான்குஸ்தான லக்கங்களை எழுத்தாலும் எண்களாலும் எழுதுவது. ௪-௧௧ இத்தனை என்கிறவரையில் பெருக்கல் வாய்பாடு. நான்கு லக்கங்களடங்கிய எண்களை ஐந்துவரியிலே தனிக்கூட்டல். இந்து தேசத்துப்பணக்கணக்கில் மாத்திரம் தொடர்கூட்டல். இதிலும் உயர்ந்த ஸ்ட்டாண்டார்டுகளிலும் இங்கிலீஷ் லக்கங்களை எழுதவேண்டியது.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி).

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
கரு.	௪-வது தலைப்பு. (செய்யுள்.)	(a) மிகவும் சுலபமான பாட்டு அல்லது நீதி வாக்கியங்களில் சிலவரிகளைப்பாராமற் சொல்லுவது. இருபதுவரிகளை வரப்படுத்தியிருக்கவேணும்.
கரு.	......	(b) வரப்படுத்தியிருக்கிற பாட்டு அல்லது நீதிவாக்கியங்களில் அர்த்தத்தையுஞ்சங்கதியையுங்குறித்து மிகவும் சுலபமான வினாக்களுக்கு விடைகொடுப்பது.
௩௰.		
		பெண்பிள்ளைகளுக்காக விசேஷ விஷயம்.
க௦.	௬-வது தலைப்பு (தையல்வேலை)	கம்பிக்கோ அல்லது முதருதுணியில் ஓரம் தைப்பது.
		இரண்டாவது ஸ்ட்டாண்டார்டு.
ரு.	க-வது தலைப்பு. (வாசகம்.)	(a) முன்னமே படியாததும் முதற்பாடபுஸ்தகத்தின் இரண்டாம்பாகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய அங்கீகரிக்கப்பட்ட யாதொரு புஸ்தகத்தில் சிலவரிகளைத் திருத்தமாய் வாசிப்பது.
அ.	......	(b) முதற்பாடபுஸ்தகத்தின் இரண்டாம் பாகத்திலாவது, அவ்வளவு கஷ்டமுள்ள யாதொரு அங்கீகரிக்கப்பட்ட புஸ்தகத்திலே முன்னதாய்ப் படித்திருக்கிற அவ்வளவுபாகத்திலாவது அர்த்தத்தையும் சங்கதியையுங்குறித்து சுலபமான வினாக்களுக்கு விடைகொடுப்பது. அச்சிட்ட புஸ்தகங்களுக்குபதிலாய் கையெழுத்துபுஸ்தகங்களையாவது ஓலை புஸ்தகங்களையாவது கொண்டுவரலாம்.
க௦.		
ரு.	௨-வது தலைப்பு. (எழுதுதல்.)	(a) உபயோகிக்கப்பட்ட வாசக புஸ்தகத்திலிருந்து ஒரு வாக்கியத்தைப்பார்த்து கற்பலகையின்பேரிலாவது மரப்பலகையின்பேரிலாவது ஓலையின்பேரிலாவது குண்டெழுத்தாக எழுதுவது.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி).

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
ரு.	௨-வது தலைப்பு. (எழுதுதல்.)	(b) முன்னமே படியாததும் முதற்பாடபுஸ்தகத்தின் இரண்டாம்பாகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய யாதொரு புஸ்தகத்திலிருந்து சொல்லப்பட்ட சிறுவாக்கியங்களை யெழுதுவது.
க௦.		
கரு.	௩-வது தலைப்பு. (கணிதம்.)	எழுஸ்தான லக்கங்களை எழுத்தாலும் எண்களாலும் எழுதுவது. க௨-கரு-(இத்தனை) என்கிறவரையில் பெருக்கல் வாய்பாடு, தனிக்கூட்டல் கழித்தல் பெருக்கல் கொடுத்தல். இந்ததேசத்துப் பணக்கணக்கில் மாத்திரம் தொடர் கூட்டல் கழித்தல் பெருக்கல் கொடுத்தல்.
௨.	௪-வது தலைப்பு. (செய்யுள்.)	(a) மிகவும் சுலபமான பாட்டு அல்லது நீதி வாக்கியங்களில் சிலவரிகளை பாராமற் சொல்லுவது. முதலாவது ஸ்ட்டாண்டார்டின்படி வரப்படுத்தியிருக்கிறது நீங்கலாக ஐம்பதுவரிகள் வரப்படுத்தியிருக்கவேணும்.
௪.	......	(b) வரப்படுத்தியிருக்கிற பாட்டு அல்லது நீதிவாக்கியங்களில் அர்த்தத்தையும் சங்கதியையுங்குறித்து சுலபமான வினாக்களுக்கு விடைகொடுப்பது.
௬.		
		பெண்பிள்ளைகளுக்காக விசேஷ விஷயம்.
கரு.	௬-வது தலைப்பு (தையல்வேலை.)	காணயமானதுணியில் ஓரம் இணைப்பது தைப்பது, பட்டைமடிப்பது.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி)

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
		மூன்றாவது ஸ்ட்டாண்டார்டு.
		சுதேச பாஷை.
௮.	௧-வது தலைப்பு. (வாசகம்.)	(a) முன்னமே படியாததும் இரண்டாம் பாடபுஸ்தகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய அங்கீகரிக்கப்பட்ட யாதொரு புஸ்தகத்திலும், தெளிவாயெழுதியிருக்கிற கையெழுத்துப் பிரதியிலும் சிலவரிகளை சுலபமாயும் திருத்தமாயும் வாசிப்பது.
௧௦.	......	(b) இரண்டாம்பாடபுஸ்தகத்திலாவது அவ்வளவு கஷ்டமுள்ள யாதொரு அங்கீகரிக்கப்பட்ட வாசகபாடபுஸ்தகத்திலாவது முன்னதாய்ப் படித்திருக்கிற ஓர் பிரகரணத்திலடங்கிய பாடங்களில் அர்த்தத்தையும் சங்கதியையுங்குறித்து விளுக்களுக்கு விடைகொடுப்பது. அறுபது பக்கங்கள் படித்திருக்கவேணும்.
௧௮.		
௪.	௨-வது தலைப்பு. (எழுதல்.)	(a) உபயோகிக்கப்பட்டவாசக புஸ்தகத்திலிருந்து ஒரு வாக்கியத்தைப்பார்த்து கடுதாசியின்பேரில் சிறு எழுத்தாக எழுதுவது.
௬.	......	(b) முன்னமே படியாததும் இரண்டாம் பாடபுஸ்தகத்தைப்போல அவ்வளவுகஷ்டமுள்ளதுமாகிய யாதொருபுஸ்தகத்திலிருந்து சொல்லப்பட்ட ஒரு பத்தியை எழுதுவது.
௧௦.		
௨௨	௩-வது தலைப்பு. (கணிதம்.)	இங்கிலீஷும் சுதேசபாஷையும் கலந்த கல்விச்சாலைகளில் பப்ளிக் இன்ஸ்திரக்ஷன் டைரெக்ட்டரால் பிரசித்தஞ்செய்யப்பட்ட சாதாரணமான எடை-அளவு-நாணயம்-இவைகளில்மாத்திரமும், சுதேசபாஷை கல்விச்சாலைகளில் பப்ளிக் இனிஸ்திரக்ஷன் டைரெக்ட்டரால் பிரசித்தஞ்செய்யப்பட்ட இந்த தேசத்து எடை-அளவு-நாணயம் இவைகளில்

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி)

161973

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
		மாத்திரமும் தொடர் கூட்டல் கழித்தல் பெருக்கல் கொடுத்தலும் இவைகளின் மாற்றிலும் சுலபமான விளுக்கள், தனிக் கூட்டல் கழித்தல் பெருக்கல் கொடுத்தல்களில்மாத்திரம் சுலபமான வாய்மொழிக்கணக்கு.
௩.	௪-வது தலைப்பு. (செய்யுள்.)	(a) சுலபமான பாட்டு அல்லது நீதிவாக்கியங்களில் சிலவரிகளை பாராமற்சொல்லுவது. முதலாவது அல்லது இரண்டாவது ஸ்ட்டாண்டார்டின்படி வரப்படுத்தியிருக்கிறது நீங்கலாக நூறுவரிகள் வரப்படுத்தியிருக்கவேணும்.
௫.	......	(b) வரப்படுத்தியிருக்கிற பாட்டு அல்லது நீதிவாக்கியங்களில் அர்த்தத்தையும்சங்கதியையுங்குறித்து விளுக்களுக்கு விடைகொடுப்பது.
௮.		
௧௦.	௫-வது தலைப்பு. (இலக்கணம்.)	அங்கீகரிக்கப்பட்ட யாதொரு இலக்கணச்சுருக்கத்திலே சொல்லியிருக்கிறபடி சொல்லதிகாரத்தில் விளுக்களுக்கு விடைகொடுப்பதும், சொற்களுக்கு இலக்கணங்கூறுவதும், வாசகபுஸ்தகத்திற்கு இலக்கணவிதிகளைப்பொருத்தி சுலபமான சம்பந்தங்காட்டுவதும்.
௬.	௬-வது தலைப்பு. (பூகோளம்.)	சென்னபட்டணத்து ராச்சியத்திலுள்ள ஜில்லாக்களையும், பிரதான பட்டணங்களையும் முக்கிய நதிகளையும் மலைகளையும் பூமிப்படத்தில் காட்டுவதும், அந்தக் கல்விச்சாலையிருக்கிற ஜில்லாவைக்குறித்து சென்னபட்டணத்து ராச்சியத்தின் சங்கிரகமான விருத்தாந்தத்திலாவது அவ்வித யாதொரு புஸ்தகத்திலாவது தெரிந்துகொள்ளும்படியான பூமிசாஸ்த்திரக்கியானம் அடைந்திருப்பதும்.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி)

உயர்ந்த எண்கள்	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
		இங்கிலீஷ்.
அ	எ-வது தலைப்பு. (வாசகம்.)	(a) முன்னமே படியாததும் மதிராஸ் இஸ்கூல்புக்ஸொஸைட்டியின் முதலாம் வாசக பாடபுஸ்தகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய அங்கீகரிக்கப்பட்ட யாதொரு புஸ்தகத்தில் சிலவரிகளை வாசிப்பது.
கச.	......	(b) முதலாம் வாசகபாட புஸ்தகத்திலாவது அவ்வளவு கஷ்டமும் அளவுமுள்ளதாய் முன்னமே படித்திருக்கிற யாதொரு அங்கீகரிக்கப்பட்ட புஸ்தகத்திலாவது ஒருபத்திக்கு அர்த்தஞ்சொல்லுவது.
உஉ.		
ரு.	அ-வது தலைப்பு. (எழுதுதல்.)	(a) காப்பி புக் என்னும் உருப்பெழுத்து புஸ்தகத்தை முழுதும் பெரியஎழுத்தாக எழுதிவைத்துக் காட்டுவது. அதில் ஒவ்வொரு பக்கத்துக்கும் தேதிபோட்டிருக்கவேணும்.
ரு.	......	b) உபயோகிக்கப்பட்ட இங்கிலீஷ் வாசக பாட புஸ்தகத்திலிருந்து சொல்லப்பட்ட வார்த்தைகளை யெழுதுவது.
க0.		
		மாறிவருகிற சுதேசபாஷை விஷயங்கள்.
௬உ.	க0-வதுதலைப்பு (சரித்திரம்)	யாதொரு அங்கீகரிக்கப்பட்ட சுருக்கமான சரித்திரத்தில் சொல்லியிருக்கிறபடி ௧௭௯௯ஆம் ௵த்தில் ஸ்ரீரங்கபட்டணம் பிடிபட்டதுவரையில் இந்துதேசசரித்திரத்திலே முக்கியமான சங்கதிகள், சாதாரணமான பூகோளசாஸ்திரத்திலும் இந்துதேசத்து பூகோளசாஸ்திரத்திலும்மேற்படி விஷயத்தைத் தெளிவோடு வாசிப்பதற்கு அவசியமான ஞானமிருக்கவேணும்.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்ட்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி).

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
		பெண்பிள்ளைகளுக்காக விசேஷ விஷயம்.
உஉ.	கரு-வது தலைப்பு. (தையல் வேலை)	கலிகோதுணியில் குச்சுபிடித்தல், துமட்டல் காஜாதைத்தல், இழையோட்டுதலுமாகிய ஏதாவது முதுகு உள்சட்டையின் கையிலாவது இத்தேசத்தாருடையசொக்காக்கையிலாவது சாதாரணமாய்ச் செய்யப்பட்டவேலை.
		நான்காவது ஸ்ட்டாண்டார்டு.
		சுதேசபாஷை.
சா.	க-வது தலைப்பு. (வாசகம்)	(a) முன்னமே படியாததும் மூன்றும்பாடபுஸ்தகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய அங்கீகரிக்கப்பட்டயாதொரு புஸ்தகத்திலும், சாதாரணமான யாதொரு கையெழுத்துப் பிரதியிலும் சிலவரிகளை சுலபமாயும் திருத்தமாயும் வாசிப்பது.
கஅ	......	(b) மூன்றும்பாடபுஸ்தகத்திலாவது அவ்வளவு கஷ்டமுள்ளயாதொரு அங்கீகரிக்கப்பட்ட வாசக பாடபுஸ்தகத்திலாவது முன்னதாய்ப்படித்திருக்கிற ஓர் பாகத்திலடங்கிய பாடங்களில் அர்த்தத்தையும் சங்கதியையுங்குறித்து வினாக்களுக்கு விடைகொடுப்பது. ஐம்பது பக்கங்கள் படித்திருக்கவேணும்.
உஉ.		
௬.	உ-வது தலைப்பு (எழுதுதல்.)	(a) உபயோகிக்கப்பட்ட வாசகபுஸ்தகத்திலிருந்து ஒரு வாக்கியத்தைப்பார்த்துக் சுலேட்டின் பேரில் கொலுசுஎழுத்தாக எழுதுவது.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி).

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
௭.	௧-வது தலைப்பு. (எழுதுதல்.)	(b) முன்னமேபடியாததும் மூன்றும்பாடபுஸ்தகத்தைப்போல் அவ்வளவு கஷ்டமுள்ளதுமாகிய யாதொரு புஸ்தகத்திலிருந்து சொல்லப்பட்ட ஒருபத்தியை எழுதுவது.
௧௦.		
௫௨.	௨-வது தலைப்பு. (கணிதம்.)	தொடர் கூட்டல் கழித்தல் பெருக்கல் கொடுத்தலிலும் இனமாற்றிலும் பலவகைப்பட்ட வினாக்களும், சாதாரணபின்னங்களில் சுலபமான வினாக்களும் கடைக்காரியங்களில் உபயோகமான வாய்மொழிக்கணக்கும்.
		சுதேசபாஷைக் கல்விச்சாலைகளில், A குறிப்பிட்ட முழு எண்களுடையவும் பின்னங்களுடையவும் சுதேச பெருக்கல் வாய்பாடும், சுதேசகடைகளில் வழங்குவதாகிய B குறிப்பிட்ட அலகுமுறையுமுள்பட பப்ளிக் இன்ஸ்பெக்ஷன் டைரெக்டரால் பிரசித்தஞ்செய்யப்பட்ட இந்தேசத்து அலகுமுறைகளின்பேரில் மாத்திரம் வினாக்கள் கேட்கவேணும்.
௰.	௩-வது தலைப்பு. (செய்யுள்.)	(a) க-வது நம்பர் செய்யுட்கலம்பகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதாயிருக்கிற யாதொரு அங்கீகரிக்கப்பட்ட செய்யுட் புஸ்தகத்திலிருந்தாவது, நீதிவாக்கியங்களிலிருந்தாவது சில வரிகளைப்பாராமல் சொல்வது. முந்திய ஸ்டாண்டார்டுகளின்படி வரப்படுத்தியிருக்கிறது நீங்கலாக இருநூறுவரிகள் வரப்படுத்தியிருக்கவேணும்.
௭.	......	(b) வரப்படுத்தியிருக்கிற பாட்டு அல்லது நீதிவாக்கியங்களில் அர்த்தத்தையும் சங்கதியையுங்குறித்து வினாக்களுக்கு விடைகொடுப்பது.

(இன்னம் வரும்.)

சமாசாரத்திரட்டு.

இங்கிலாந்து.—ருஷியாவானது மற்றைய ராஜாங்கத்தாரது யோசனை கேளாமல் தனக்கும் துர்க்கியாவுக்கும் தனிப்பாடாய்ச் சமாதானம் பண்ணிக்கொண்ட சங்கதியையிட்டு இங்கிலாந்தில் மகா அலைசடியும் மனவெழுச்சியும் தோன்றியிருக்கிறது. சமாதான சங்கதிகள் அனைத்தும் ஒரு மகா சபையில் பேசித் தெளியவேண்டுமென்று இங்கிலாந்து கேட்கிறது. ருஷியாவோ இதற்கு உடன்படுகிறதில்லை. ஆகையால் இங்கிலாந்தில் மேன்மேலும் யுத்த ஆயத்தங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. இங்கிலீஷ் போர்க்கப்பல்கள் மர்மோராக் கடலுக்கு அனுப்பப்படவே, அவைகள் கொன்ஸ்தாந்தீன்புரிக்குச்சமீபமாய் நங்கூரமிட்டு நிற்கின்றன. யுத்த முயற்சிக்காக ராணுவம் தயாராக்கப்படுவதுமன்றி, சைமிருப்புப் படைகளும் ஆஜராகின்றது. இங்கிலீஷ் ஜன சமுதாயத்தாரில் யுத்தத்துக்குச் சார்பானவர்களும் சமாதானத்துக்குச் சார்பானவர்களும் ஏறக்குறைய சரி சமனாயிருக்கும். பிரதேச காரிய மந்திரியாகிய டார்பி பிரபு இந்த யுத்த நடபடிகளுக்கு எதிர்பேசி உத்தியோகம் கைவிட்டார். இந்திய துரைத்தன மந்திரியாகிய ஸலிஸ்புரி பிரபு அவரது ஸ்தானத்தில் அமரவும், ஸ்தேப்பில் ஹார்ஸ்து பிரபு என்ற நாமதேயத்துடன் இப்போது பிரபுப் பட்டம்பெற்ற ஹார்டி துரை இந்திய துரைத்தன மந்திரியானார்.

ருசியா.-துர்க்கியா.—இவ்விருதேசத்தாரும் தமக்குள் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கைக்குக் கையொப்பம் வைத்தாயிற்று. ஆகிலும் ருஷிய போர்வீரர் இன்னம் திரும்பிப் போகவில்லை. இதன் மூகாந்தரம் முன் சொல்லியபடி யுத்தம் இன்னம் தொடங்கிவிடுமோ அல்லவோ என்கிற சந்தேகந்தான். ருஷிய சக்கரவர்த்தியின் சகோதரனும் ருஷிய சேனையின் பிரதான தளபதியுமாகிய நிக்கோலாஸ் மகா டியூக் பிரபு கொன்ஸ்தாந்தீன்புரியில் சுல்த்தானை தரிசித்தார். பிளெவ்னா கோட்டையை வீரதீரமாய் காவல்செய்த ஒஸ்மான் பாட்சா கொன்ஸ்தாந்தீன் புரியில் கவர்னராக நியமகம்பெற்றார்.

இந்தியா.—நூதன வரியை விரோதிக்கும்படி சூரத் நகரத்தில் பெருங்கலாதிகள் உண்டாயின. அவற்றை அடக்க பட்டாளத்தார் அழைக்கப்படவே கலகக்காரரில் ஒருவன் வெடிக்குண்டுபட்டு மடிந்தான். சுமார் 100 பேர் காவலில் வைக்கப்பட்டனர். வட இந்தியாவில் சுதேச பாஷை வர்த்தமானப்பத்திரிகைகளின் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்துவதான புதியசட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இது சென்னை சமஸ்தானத்தில் செல்லாது. கலகம அல்லது பொல்லாப்பை மூட்டிவிடுவதற்கேதுவான வன்சொற்களைப் பிரயோகிக்கும் எந்தப் பத்திரிகைக்கும் இந்தச்சட்டத்தினாலே அபராதம் விதிக்கப்படும். திரும்பவும் அந்தக் குற்றத்திற்குட்பட்டால் பத்திரிகை நிறுத்தப்பட்டுப்போவதுமன்றி, அச்சடிக்கும் தளவாடங்களும் பறிமுதலாகும். வங்காளத்திலும் வடமேற்கு மாகாணங்களிலும் பிரசுரமாகின்ற சில பத்திரிகைகளின்கலாப வசனிப்புகள் மூலமாய் இந்த சட்டம் ஏற்பாடானது. இந்த சட்டத்தின் அவசியம் யுக்தியைக்குறித்து சனங்கள் வெவ்வேறு அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்கள்.

(தேசோபகாரி.)

மேமீ நாள் 31. சித்திரைமீ 20உ முதல், வைகாசிமீ 19உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அனுதினத் தியானம்.
பு	1	உ0	அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். வெளி. 21: 4.
வி	2	உக	கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். யாக். 4: 10.
வெ	3	உஉ	நாம் அவரிடத்தில் அன்புகூருகிறோம். 1யோ. 4: 19.
ச	4	உங	தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தைச் செயிக்கும். 5: 4.
ஞா	5	உச	விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். கலா. 3: 11.
தி	6	உரு	கிறிஸ்து நமக்காகச் சாபமானார். 13.
செ	7	உசு	கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். நீதி. 16: 20.
பு	8	உஎ	நடக்கப்போகிறதின்னதென்று மனிதன் அறியான். பிர. 10: 14.
வி	9	உஅ	நீங்கள் விடுதலையாக்கப்படுவீர்கள். லூக்கா 6: 37.
வெ	10	உகூ	நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போவேன். 15: 18.
ச	11	கூ0	தேவனைத் தொழுதுகொள். வெளி. 22: 9.
ஞா	12	கூக	மரணத்தின் கூர் பாவம். 1 கொரி. 15: 56.
தி	13	க	பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். எபே. 4: 30.
செ	14	உ	அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும். நீதி. 13: 10.
பு	15	ங	நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச. 5: 22.
வி	16	ச	அநீதியெல்லாம் பாவந்தான். 1யோ. 5: 17.
வெ	17	ரு	எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். 1தெச. 5: 18.
ச	18	சு	பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். 1சாமு. 2: 9. [2
ஞா	19	எ	மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். சங். 100
தி	20	அ	தேவன் இரட்சிப்பை அருளும் தேவன். சங். 68: 20.
செ	21	கூ	விக்கிரகங்களுக்கு விலகி, காத்துக்கொள்ளுவீர்களாக. 1 யோ. 5: 21
பு	22	ய	கர்த்தராகிய யேசுகிறிஸ்துவை விசுவாசி. அப். 16: 31.
வி	23	கக	தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருங்கள். 1 பே. 5: 8.
வெ	24	கஉ	புதிதான ஆவியுள்ளவர்களாகுங்கள். எபே. 4: 23.
ச	25	கங	நீதிக்கேற்க விழித்துக்கொள்ளுங்கள். 1 கொரி. 15: 34.
ஞா	26	கச	அவரே நம்முடைய சமாதான காரணரானார். எபே. 2: 14.
தி	27	கரு	ஞானவான்கள் அறிவைச் சேர்த்து வைக்கிறார்கள். நீதி. 10. 14.
செ	28	கசு	உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். எபி. 4: 7.
பு	29	கஎ	பிள்ளைகளே, எனக்குச்செவி கொடுங்கள். சங். 34: 11.
வி	30	கஅ	தேவ கிருபையினாலே இருக்கிறேன், 1 கொரி 15: 10. [806
வெ	31	ககூ	இரட்சிக்கப்படும் படிக்கு நான் என்ன செய்ய வேண்டும். அப். 1

விசேஷ நாட்கள்.

1. பரி. பிலிப்பு, யாக்கோபு திருநாள்.
2. அமாவாசை.
5. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு.
12. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் மூன்றும் ஞாயிறு.
16. பௌரணமி.
19. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் நாலாம் ஞாயிறு.
26. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு.
30. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.

நற்போதகம்.

கா. ஜூன்மீ. ௲அ௱அ௯.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

XIII. அதிகாரம்.

1. "மூன்றாந்தரம்" இதற்குமுன் ஒருவிசைமட்டும் கொரிந்துக்குப்போய் (18) மாசமிருந்தார். இந்த நிருபத்தை எழுதினதற்கு 3½ வருஷத்துக்குமுன் அவர் கொரிந்துவிலிருந்து புறப்பட்டார். இந்த நிருபத்தை எழுதினபின் அவர் கொரிந்துக்கு மறுபடியும் போனார். அது இரண்டாந்தரம். (1: 15. 13: 2.) அப்படியிருக்க "மூன்றாந்தரம்" என்பது தாம் கொரிந்துக்குப்போக ஆயத்தப்பட்டது மூன்றாந்தரமாம். 2 கொரி. 1: 23. இப்படியாக அவருடைய விருப்பத்தில் மூன்றாந்தரமென்று சொல்லுகிறார்.

12. "பரிசுத்தமுத்தம்" 1 தெச. 5: 26. 1 கொரி. 16: 20. ரோ. 16: 16.

13 இது திரித்துவத்தில் மூவருண்டென்பதற்கு ருசுவாயிருக்கிறது.

இதற்கு ஒப்புமையான வேதவாக்கியம். லூக்கா-20, 21. எண்ணாகமம் 6: 23-26. சொல்லிய ஆசீர்வாதம் இத்தன்மையுள்ளதுதான். அங்கே கர்த்தரென்பது எகோவாதான். எகோவாஎன்று மூன்றுதரமுஞ் சொல்லப்படுகிறது. செபற்றியுஜின்ட் திருத்தலில் எகோவாஎன்பதை கர்த்தரென்று திருப்பினார்கள்.

குமாரனை பிதாவுக்கு முந்திச்சொல்லியிருக்கிறது. இதினாலே குமாரன் பிதாவுக்குச் சமமானவரென்பது ருசுவாகிறது. மத். 28: 19.

இந்த ஆசீர்வாதத்தில் கவனிக்கவேண்டியதாவது.—

(1) ஆவிக்குரிய ஆசீர்வாதங்களெல்லாம் பிதாவாகிய தேவனிடத்திலிருந்து, குமாரனாகிய தேவன் மூலமாய், பரிசுத்தாவியாகிய தேவனாலே நமக்கு வருகிறது.

தேவனுடைய அன்பானது, வற்றாத நீரூற்றாயிருக்கிறது. அந்த ஒரே ஊற்றிலிருந்துதான் மனுஷருக்குக் கிடைக்கக்கூடிய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களெல்லாம் வருகிறது. இந்த ஆசீர்வாதங்களெல்லாம் குமாரன் மூலமாய் அருளப்படுகிறது. "சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கிறது." அவர் நமது சுபாவத்தை எடுத்த இம்மானுவேல், அதாவது நம்மோடிருக்கிற தேவன். நம்மைத் தமக்கு அவயவங்களாக்கி நமக்குக் கிருபையினை வழங்குகிறார். இப்படியாக "அவருடைய பரிபூரணத்தினால் நாம எல்லாரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்."

பிதாவினுடைய அன்பின் ஊற்றிலிருந்து குமாரன் மூலமாய்ச் சுரந்து வருகிற இந்தக் கிருபையானது, நமக்குத் தனித்தனியே சொந்தமாகப் பரிசுத்தாவியானவரால் பிரயோகிக்கப்படுகிறது. இவ்வுலகத்தில் நாம் ஆவிக்குரிய "புதுப்பிறப்பு" புதுப்பிறப்பை அடைந்து மறுமையில் நித்திய இரட்சிப்பைப் பெறும்படி இவர் இந்தக் கிருபையை நமக்குப் பிரயோகிக்கிறார். எப்படியெனில் கன்னிமரியாள் கர்ப்பத்தில் நம்முடைய தன்மை உண்டாகும்படி நிழலிட்டார். லூக். 1: 35. அவர், இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவை உருவாக்கும்படி செய்தார். இப்படியாக நம்முடைய தன்மை புதுப்பிறப்பை உண்டாக்கினார். இந்தப் புதுப்பிறப்பே, கிறிஸ்தவின் ஜீவனுக்கு ஆரம்பம். இப்படியெல்லாஞ் செய்த பரிசுத்தாவியானவரே பாவியின் மனதை ஐக்கியப்பட்டு, பிதாவினிடத்திலிருந்து குமாரன் மூலமாய்ச் சுரந்து வருகிற கிருபையை நாம் மறுபிறப்பு அடையும்படி நமக்குச் சொந்தமாக (ஐக்கியப்படுத்தி) பிரயோகிக்கிறார். கிறிஸ்து நமக்குள்ளே வடிவுகொள்ளும்படி செய்கிறார். அவருடைய புத்திரராக்குஞ் செயலினாலும் உயிர்ப்பிக்குஞ் செயலினாலும் கிறிஸ்து நமக்குள்ளும் நாம் கிறிஸ்துவுக்குள்ளும வாசம்பண்ணும்படிசெய்கிறார்.

(2) இந்தத் திரித்துவ மூவரும் கிருபையின்கிரியையில் சம்பந்தப்பட்டிருப்பதுபோலவே, இயற்கையிலுஞ் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். பிதா உலகத்தை உண்டாக்கினார். அந்த சிருஷ்டிப்பின் வேலை குமாரன் மூலமாய் நடந்தேறினது. யோவான் 1: 2, 3 பரிசுத்தாவியானவர் அவற்றை உயிர்ப்பிக்க ஒழுங்குப்படுத்தினார். ஆதி. 1: 2.

(3) மேற்காட்டிய கிருபை கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது வெளிப்பட்டது.

(4) இந்த ஆசீர்வாதமானது தேவனிடத்திலிருந்து நன்மைகள் நமக்கு வருகிற வகையைக் காட்டுகிறதல்லாமலும், நாம் தேவனிடத்திற்குச்செல்லுகிற வகையையும் காட்டுகிறதாயிருக்கிறது.

இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

அஞ்சலி சேஷன் நீ அறைந்த யாவையும்
வஞ்சமின் றுண்மையே மருவும் இம்மையில்
எஞ்சுறு வேதனை யினையுதல் கண்டு மேன்
அஞ்சுதி சாவதற் கமைந்து கூறென. 57

ஜென்ம நாட் டொடங்கி யான் செய்த தீவினை
என் முது குறுக்குற விறுக்க தாற்புலைக்
கன்மியர் குழுமுறீக் கடற் கிடங்கிடை
அம்மையில் அமிழ்த்து மென் றஞ்சுகின்றனன். 58

பல கலை கற்றுணர் பரம யோகி இவ்
உலக, மன்னவ னொரு பொருத்தற் கஞ்சவேம்
கில வுல கியாவையும் பிறுத்த நீதிமன்
அலகறு தண்டனைக் கஞ்சி டேன்கொலோ. 59

இனைய சிந்தனை யென திதயத் தூன்றலால்
வினை பொலன் சுழலினுய் வருந்து வேனென
அனையவை யறிந்தபின் தவர்க்கு நன்மையே
நினை சுவிசேஷனும் நிகழ்த்து வானரோ. 60

நன்று நன் றுன்னிலை நாச தேசத்துள்
நின்று நின் றித்தனை தாழ்த்தல் நேர்மையோ
பொன்றிடா வருமுனம் புகலிடம் பெறச்
சென்றிடா திவணுழல் சிந்தை யென்னென்றான். 61

உய்வழி யிதுவிதென் றுழலும் பல்வழி
பொய் வழி அவ்வழி போகுவேன் அலன்
தெய்வநாயகன் திருநகர்க்குச் செல்வழி
எவ்வழி அவ்வழி யின்னுந் தேர்கிலேன். 62

ஆதியான் திருநகர் அடுக்கும் ஜீவநற்
பாதை நீ யறிதிபேற் பகர்தி யாலென
வேதியர் திலகனை வினவினான் அவன்
ஓதுவல் கேட்டி யென்றுரைத்தல் மேவினான். 63

மக்களை மனைவியை மனையைக் காதல் கூர்
ஒக்கலை உரிமையை உவக்குந் தேசத்தை
இக்கணம் விடுத்து யாணியம்பு தேயத்தில்
புக்குவாழ்ந் திருத்தி நீ போதியாலெனு. 64

எழுதிய தோற்சுரு ளெடுத்து நண்ப நீ
பழுதிலா மொழியிது பார்த்தி யோவென
உழுவலன் பொமென முவந்து நோக்கியீண்
டெழுவல் யான் செல்வழி யாதிங் கென்றனன். 65

ஆங்குறு பெருவெளிக் கப்புறத் தொரு
பாங்குறு வாயிலைப் பார்த்தி அல்லையேல்
ஓங்கிருஞ் சுடரொளி யொன்று காண்டிமற்
றீங்கிது குறிக்கொளீஇ யேகற் பாலையால். 66

எட்டி நீ நடந்து சென் றிடுக்க வாயிலைக்
கிட்டியுன் கரங்கொடு கிளர் கபாடத்தைத்
தட்டுதி யுனக்கறி தக்க யாவையும்
உட்டெளிவுற அவண் உரைக்க லாகுமால். 67

என்னுரை யணுத்துணை யிகப்பை யாயினும்
மன்னர்கோன் வளநகர் மருவு வாயிலை
பன்னுறு கவர்வழி பலவுண் டாங்கவை
உன்னரும் நரகபா தலத்தில் உய்க்குமால். 68

நெறிபிச காதிடை நின்றிடா தொளிக்
குறிபிடித் தேகெனக் கோதில் அன்பொடு
செறியும் நல்லாசிகள் செப்பினன் உவந்
தறிவனும் அஞ்சலித் தகன்று போயினன். 69

இடுக்குறு வாயில் சென் றெய்திடா முனம்
தடுக்கருந் தடையயற் சாருமோ வென
நடுக்குறு மாயினும் நாயினே னைக்கை
விடுக்குமோ இறையென வெருட்சி நீங்கினன். 70

கண்ணிலான் இருவிழி காணப் பெற்றபோல்
மண்ணக இருள்கெட வயங்கு மார்சுடர்
நண்ணிடம் அறிந்தள மகிழ்ந்து நாட்டம்வைத்
தெண்ணமற் றின்றியே விரைவி னேகினன். 71

போவது கண்டெமைத் துறந்து போதல் நன்
காவதோ திரும்புகென் றுருகுலத்துடன்
கூவினர் மனைமகார் குறிக்கொ ளாதவன்
ஜீவனே ஜீவனே யென்னச் சென்றனன். 72

மூண்டெரி வளைந்திட முடுகி யிற்புறந்
தாண்டிவீழ்ந் தாருயிர் தப்பி நின்று பின்
வேண்டுவ முயலுவா ரலது வெண்மையால்
மாண்டழிந் தொழிவரோ மனை மகாரொடும். 73

பற்றியாங் கொணர்வ மென் றிருவர் பன்னிப்போய்
உற்றனர் விரைந்துசென் றுவந்து வேதியன்
கொற்றவன் திருநகர் குறித்த கொள்கையோ
மற்றுறுங் கருத்தெது வழுத்து வீரென்றான். 74

இன்று நீ மனந்துணிந் தெமை விட்டேகிடில்
ஒன்றிடும் பெருந்துயர் உண்மை யாதலால்
சென்றிடேல் எம்முடன் திரும்பு வாயெனில்
நன்றுனக் காம்பெரு நமர்க்கும் நல்லையால். 75

அரும்பெறல் மக்களை யாவி யொன்றனை
விரும்பிய மனைவியை வெறுத்திட் டேகுதல்
கரும்பு வேம்பாய தோர் கணக்குப் போலுமால்,
இரும்பியல் நெஞ்சினாய் இது நன் காவதோ. 76

இத்தலத் துரிமையாவையும் இகந்துசென்
றத்தலத் தழிவில் பேறடைவன் என்றியால்
கைத்தலத் தரும்பொருள் சழிய வீசிடும்
பித்தரோ தனக்கொடி பிறக்க வாழுவார். 77

என்றவன் னெஞ்சன் ஈதியம்பக் கேட்டலும்
நன்று நன் றுன்னுரை நாச தேசத்தில்
நின்றுயி ரழிந்தெரி நிரையஞ் சேரவோ
இன்றெனைக் கூவுதி திரும்பென் றேழை நீ. 78

சீலமும் ஒழுக்கமும் நிறம்பு தேசத்தின்
சாலமும் மாயமும் தழுவி யின்னுமென்
காலமும் ஜீவனும் கவிழ்ப்பனோ கொலாம்
ஆலமென் றறிந்தபின் அருந்து வாரொவர் 79

நிலைநிலா தழிவது நிரையத் துய்ப்பது
கலைவலார் வெறுப்பது களங்க மிக்கது
மலைவுறு துன்ப நோய் மலியப் பெற்றது
புலை யுலகத் தநுபோக சாரமே. 80

குறைவுறு நித்தியங் குலவத் தக்கது
யுறு நலத்தது கருதொணு தது
நிறைவது வாடிடும் நீர்மைத் தன்றுகாண்
இறைபர லோக பேரின்ப பாக்கியம். 81

ஆழியான் பேருல கனுகு மின்பத்துக்
கூழியிவ் வுலகிருந் துறுகண் இன்றியே
வாழினும் இஃதனு மட்டொப் பாகுமோ
பாழிலே உழலுதி பயனை யோர்கிலாய். 82

மகத்துவ மாய பேரின்ப வாழ்வினை
அகத்திடை மதிப்பவர் அலகிலாதுவர்
இகத்துறு பாடெல்லாம் நொய் தென்றெண்ணுவார்
ஜெகத்தையே மதிப்பவர் சிந்தை மாழ்குவர். 83

புற்புத உடற்சுக போகம் நச்சியே
பிற்படு குழியில் வீழ்ந்தழிவர் பேதையர்
முற்படு துயரினை முருக்கி நித்திய
சிற்பர சுகநிலை யடைவர் செவ்வியோர். 84

சகளகளு வுலகெலாங் காக்கு மெம்பிரான்
கிளையலால் நலந்தரு கிளையெற் கில்லையால்
வளையுமிக் குழூஉவினை மயற்குள் ளாக்கிடும்
தளையலாற் கிளையெனச் சாற்றல் ஒல்லுமோ. 85

மேழிகைப் பிடித்தனன் விடுக்கிலேன் இனி
நாழியொன் றாயினும் நாச தேசத்துத்
தாழிலேன் உன்கெடு மதியைச் சார்ந்துநின்
றாழிநாயகன் உரை கடக்க ஒண்ணுமோ. 86

மற்றினி யுரைப்பதென் வன்னெஞ்சோய் இவன்
சொற்றவை மெய்யெனத் துணிதியேல் எற்பின்
பற்றிவான் பரகதிப் பயன்றுய் இன்றெனில்
நிற்றியேல் நில்லென நிகழ்த்தினனோ. 87

கேட்டுவன் னெஞ்சன் ஈதமையுங் கேவல
நாட்டு வாழ்வு வந்தனை நடத்தி நீ யெனு
மீட்டியாம் போதும் மென்னெஞ்ச வேதியன்
கூட்டுறவினி யொலா தென்று கூறினன். 88

ஓதுமெய்ச் சுருதிநூல் உரைக்கும் நீதியும்
தீதுநாம் இயற்றிய திறனும் மேல்வரும்
மாதுயரக் ககன்றுயும் மார்க்க மாவதும்
காதலாய்த் தெரித்திடும் இவனைக் காய்தியோ. 89

வேதியன் இங்ஙனம் விதந்த வாய்மையும்
கோதறு செய்கையும் குணமு மொத்தலால்
தீதல இவன் வழிச் சேறலென் றியான்
போதர விசைந் துளம் பொருந்தினே னென்றான். 90

உற்ற மென்னெஞ்ச கையுற வருந்திட
வெற்றுமிக் குத்துதல் விழுமி தன்றுகாண்
சுற்றமுங் காதலுந் துனியின் மூழ்க நீ
பெற்றிடு பயனொரு பெற்றித் தாகுமோ. 91

(இன்னும் வரும்.)

பரிட்சையில் தேறும் திறமைக்குத்தக்கபடி ரிசல்டு கிராண்டு என்னும் திரவிய சகாயஞ்செய்வதைக்குறித்த விதிகள்.

(105-ம்-பக்கம் தொடர்ச்சி.)

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்டாண்டார்டுகள்—தொடர்ச்சி.)

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
க0.	ரு-வது தலைப்பு (இலக்கணம்.)	அங்கீகரிக்கப்பட்ட யாதொரு இலக்கணச்சுருக்கத்தில் வினாக்களுக்கு விடைசொற்பதும் - சொற்களுக்கு இலக்கணக் குறிப்பும், வாக்கியங்களுக்கு இலக்கணவிதிகளின்படிபொருத்தும் சம்பந்தங் காட்டுவதும்.
கசு	சு-வது தலைப்பு. (பூகோளம்.)	உலகத்தைக்குறித்த பூகோளசாஸ்திரத்தற்கு க-ம் பாகமாக டன்கன் அவர்கள் செய்திருக்கிற முகவுரையிலாவது அங்கீகரிக்கப்பட்ட யாதொரு பூகோள சம்பந்தமான பாலபாடத்திலாவது சொல்லியிருக்கிறபடி ஏஷியாவைக்குறித்து உபயோகமான பூகோளசாஸ்திரஞானம்
		இங்கிலீஷ்.
அ.	எ-வது தலைப்பு. (வாசகம்.)	(a) முன்னமே படியாததும் மதிராஸ் இஸ்கூல்புக்ஸொஸைட்டியின் இரண்டாம்பாடபுஸ்தகத்தைப்போல அவ்வளவு கஷ்டமுள்ளதாகிய அங்கீகரிக்கப்பட்ட யாதொருபுஸ்தகத்தில் சிலவரிகளை வாசிப்பது.
உச.	......	(a) இரண்டாம்பாடபுஸ்தகத்திலாவது அவ்வளவு கஷ்டமும் அளவுமுள்ளதாய் முன்னமே படித்திருக்கிற யாதொரு அங்கீகரிக்கப்பட்ட புஸ்தகத்திலாவது ஒருபத்திக்கு அர்த்தஞ்சொல்லுவது.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்டாண்டார்டுகள்—தொடர்ச்சி

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
௩௨. ௪.	௮-வது தலைப்பு. (எழுதுதல்)	(a) காப்பி புக் என்னும் உருப்பெழுத்து புஸ்தகத்தை முழுவதும் குண்டெழுத்தாக எழுதிவைத்துக்காட்டுவது, அதில் ஒவ்வொருபக்கத்துக்கும் அந்தப்பிள்ளை தேதிபோட்டுக் கையெழுத்துப்பண்ணவேணும்.
௬.	......	(b) உபயோகிக்கப்பட்ட இங்கிலீஷ் வாசக புஸ்தகத்திலிருந்து சொல்லப்பட்ட வாக்கியங்களை எழுதுவது.
௧௦. ௧௧.	௯-வது தலைப்பு. (இலக்கணம்.)	(a) சொல்லதிகாரத்தில் சுலபமான விகுக்களுக்குவிடைகொடுப்பதும், சொற்களுக்கு இலக்கணங்கூறுவதும், வாசகபுஸ்தகத்திற்கு இலக்கணவிதிகளைப்பொருத்தி சுலபமான சம்பந்தம்காட்டுவது.
௧௧.	.....	(b) மிகவும் சுலபமான வாக்கியங்களை இங்கிலீஷில் வாய்மொழியாய்மொழிபெயர்ப்பது.
௨௨.		மாறிவருகிற சுதேசபாஷை விஷயங்கள்.
௩௨. •	௧௦-வதுதலைப்பு (சரித்திரம்) ○	யாதொரு அங்கீகரிக்கப்பட்ட சுருக்கமான சரித்திரத்தில் சொல்லியிருக்கிறபடி களைவு ஆறுத்தில் ஸ்ரீரங்கபட்டணம் பிடிபட்டதுமுதல் கஅருஅ ஆறுத்தில் ஈஸ்ட்டிண்டியா கம்பெனியாருடைய துரைத்தன அதிகாரம் ஒழிந்ததுவரையில் இந்துதேசசரித்திரத்திலே முக்கியமான சங்கதிகள், சாதாரணமான பூகோளசாஸ்திரத்திலும் இந்துதேசத்து பூகோளசாஸ்திரத்திலும் மேற்படி விஷயத்தைத்தெளிவோடு வாசிப்பதற்கு அவசியமான ஞானமிருக்கவேணும்.

பரீட்சாவிஷயங்களாகிய ஸ்டாண்டார்டுகள்—(தொடர்ச்சி.)

உயர்ந்த எண்கள்.	தலைப்புகள்.	பரீட்சாவிஷயங்கள்.
௩௨.	௧௧-வதுதலைப்பு (சுகாதார விளக்கம்)	டப்ள்யூ-ஈ-தனகோட்டிராஜு இயற்றிய சுகாதார விளக்க சங்கிரகம்அல்லது சுகாதாரத்தைக்குறித்து சுலபமான பாடங்களடங்கிய யாதொரு அங்கிகாரமானபுஸ்தகம்.
௩௨.	௧௨-வதுதலைப்பு. (வியவசாயம்)	ராபர்ட்ஸன் அவர்களுடைய வியவசாய பாடபுஸ்தகம் அல்லது வேறேயாதொருஅங்கீகாரமான புஸ்தகம்.
		பெண்பிள்ளைகளுக்காக விசேஷவிஷயம்.
		உயர்ந்தபரீட்சை.
௩௮.	௧௩-வதுதலைப்பு. (தையல்வேலை)	(a) நாணயமான துணியிலே நேர்த்தியாகச் செய்யப்பட்டயூரோப்பியருடைய உட்சட்டை கத்தரித்துத்தைப்பது. கூடுமான காலத்திற்குள் முடிக்கும்படியான பாகம்.
		அல்லது.
௩௨.	...	தாழ்ந்த பரீட்சை.
		(b) நாணயமான துணியில் நேர்த்தியாய்த்தைக்கப்பட சுதேசத்தானுடைய சொக்காய்அல்லது சுதேச ஸ்திரீயினுடைய ரவிக்கையும் பாவாடையும் கத்தரித்துத்தைப்பது. கூடுமானகாலத்திற்குள் முடிக்கும்படியானபாகம்.

C.

அந்தந்த ஸ்ட்டாண்டார்டின்படி பரீட்சையில் தேறுகிற பிள்ளைகளுக்குக் கொடுக்கத்தக்க சகாயதிரவியம்.

ஸ்ட்டாண்டார்டுகள்.	சுதேசபாஷை. ௧. வாசகம்.	௨. எழுதுதல்.	௩. கணிதம்.	௪. செய்யுள்.	௫. இலக்கணம்.	௬. பூகோள சாஸ்திரம்.	மாறிவருகிற விஷயங்கள். இங்கிலீஷ் அல்லது விசேஷபாஷை. ௭. வாசகம்.	௮. எழுதுதல்.	௯. இலக்கணம்.	சுதேசபாஷை. ௧௦. சரித்திரம்.	௧௧. சுகாதாரவிளக்கம்.	௧௨. விவசாயம்.	மொத்தம்.	பெண்பிள்ளைகளுக்காக விசேஷ விஷயம். ௧௩. தையல்வேலை.
	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.	ரூ. அ.
௧ ...	௦ ௮	௦ ௬	௦ ௧௦	௦ ௩	...	...	...	...	...	...	...	...	௧ ௧௧	௦ ௧௦
௨ ...	௦ ௧௦	௦ ௧௦	௧ ௦	௦ ௬	...	...	...	...	...	...	...	...	௨ ௧௦	௧ ௦
௩ ...	௦ ௧௪	௦ ௧௦	௧ ௬	௦ ௮	௦ ௧௦	௦ ௬	௧ ௬	௦ ௧௦	...	௨ ௦	...	...	௬ ௬	௧ ௬
௪ ...	௧ ௬	௦ ௧௦	௨ ௦	௦ ௧௦	௧ ௦	௧ ௦	௨ ௦	௦ ௧௦	௧ ௬	௨ ௦	௨ ௦	௨ ௦	௧௦ ௧௦	௨ அல்லது ௨-௬-௦

(a) மாறிவருகிற விஷயங்கள்.—மூன்றுவது ஸ்ட்டாண்டார்டிலே ௭-வது ௮-வது தலைப்புகளுக்குவதிலாய் - ௧ - வது தலைப்பை வைத்துக்கொள்ளலாம். நான்காவது ஸ்ட்டாண்டார்டிலே ஆண்பிள்ளைகள் பாடசாலைகளில் -௭- வது ௮-வது ௯-வது இந்த மூன்று தலைப்புகளுக்கு வதிலாய் -௧௦- வது ௧௧- வது- ௧௨-வது தலைப்புகளில் ஏதாவதிரண்டை வைத்துக்கொள்ளலாம்; பெண்பிள்ளைகள் பாடசாலைகளில் -௯-வது ௧௧-வது தலைப்புகளைமாத்திரம் அப்படியே வதிலாகவைத்துக்கொள்ளலாம்.

(b.) விசேஷபாஷை.— இங்கிலீஷ்பேசுகிற பிள்ளைகள் இங்கிலீஷ் பாஷையை தங்கள் சுயபாஷையாகவும் இந்த ராச்சியத்தின் சுதேசபாஷைகளில் ஒன்றை விசேஷபாஷையாகவும் பயிற்சி செய்யலாம். துலுக்கப்பிள்ளைகள் பெர்ஷியன் பாஷையோடுகூட ஹிந்துஸ்தானியை தங்கள் சுயபாஷையாகவும், யாதொரு இந்துபாஷையையாவது இங்கிலீஷையாவது தங்கள் விசேஷபாஷையாகவும் பயிற்சி செய்யலாம், அல்லது இந்துஸ்தானியோடுகூட யாதொரு இந்துபாஷையை தங்கள் சுயபாஷையாகவும், பெர்ஷியன் அல்லது இங்கிலீஷ் பாஷையை தங்கள் விசேஷபாஷையாகவும் பயிற்சிசெய்யலாம்.

(c.) பெண்பிள்ளைகளின் கல்விச்சாலைகள்.— பெண்பிள்ளைகளின் கல்விச்சாலைகள் விஷயத்தில், ௧- முதல் -௧௧ வரையிலுள்ள தலைப்புகளின்படி சகாயதிரவியம் நூற்றுக்கு -௭௫- வீதம் அதிகமாகக்கிடைக்கும். தையல்வேலைக்காக விசேஷ சகாயதிரவியம் பெறும்படியான யோக்கியதை அடைவதற்கு யாதொரு பெண்பிள்ளை இந்தத் தலைப்புகளில் இரண்டின்படி பரீட்சையில் தேறவேணும். நான்காவது ஸ்ட்டாண்டார்டின் கீழ் தையல்வேலைக்காக பரீட்சை எவ்வளவு உயர்வாயிருக்கிறதோ அவ்வளவு உயர்ந்த சகாயதிரவியம்கிடைக்கும்.

கையொப்பம் - ஆர் - எம் - மக்டானல்டு, கர்னல்,
பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் டைரெக்டர்.

A true Translation.

WALTER F. WRIGHT, Major,
Tamil Translator to Government.

பலஸ்தீனா யாத்திரை.

திருநெல்வேலி சர்ச்சுமிஷனைச்சேர்ந்த கனம்பொருந்திய வி. ஆர்க்கோட்டய்யரவர்கள் சுகத்துக்காக சென்ற மார்ச்சுமாசத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுப்போனது நமது இஷ்டர் அநேகருக்குத் தெரியுமே. சீமைக்குப் போகுமார்க்கத்தில் பலஸதீனாவென்று சொல்லப்படுகிற கானான்தேசத்திலுள்ள எருஷலேம், பெத்லகேம், நாசரேத் முதலிய ஸ்தலங்களைப் பார்வையிட்டுப்போக அவர்கள் உத்தேசித்திருந்தபடி யோப்பாவென்னும் கடற்றுறைப் பட்டணத்தில் இறங்கி அங்கிருந்து எழுதிய கடிதம் ஒன்று நமது கைக்கு வந்தெட்டியது. நற்போதகத்தை வாசிக்கும் இஷ்டர் பலருக்கும் அது மனதுக்குச் சந்தோஷத்தையும் எழுப்புதலையு முண்டாக்கக்கூடியதென்று ஐயமற நம்பி உடனே அதை இவ்விடத்தில் அச்சிடுகிறோம். ஆண்டவர் ஷை ஐயரவர்களுடன் கூடவிருந்து அவர்கள் க்ஷேமமாய் இங்கிலாந்து போய்ச்சேரவும் அங்கிருந்து மறுபடியும் இவ்விடம் வந்து திவ்விய ஊழியத்தை நடப்பிக்கவும் வேண்டிய கிருபையை அருளுவாராக.

(கடிதம்.)

யோப்பா.

1878௵. ஏப்பிரல்௴. 16௳

நற்போதக பத்திராதிபருக்கு,

பிரியமுள்ள ஐயாவே,

தேவ ஒத்தாசையினால், எருஷலேமுக்கு 38மைல் தூரத்திலிருக்கிற யோப்பா அல்லது யாவா என்னும் கடற்றுறைப் பட்டணம் வந்து சேர்ந்திருக்கிறேன். நான் ஏறிய புகைக்கப்பலின் மாலுமி சற்றே பிசகாய் கப்பலைத் தெற்கே ஓட்டியதினால் நாங்கள் இராக்காலத்தில் மேலே சொல்லிய துறைமுகத்தைக் கடந்துபோகவேண்டியது நேரிட்டது. ஆயினும் ஒருமணி நேரத்துக்குப்பின் கப்பலைத்திருப்பி வடதிசையாய்ச் செலுத்தினோம். இந்த தாமதத்தினால் ஞாயிற்றுக்கிழமையாகிய நேற்றையத்தினம் காலை 7 அல்லது 8மணிக்கு சேரவேண்டிய மேல்குறித்த இடத்தில் பகல் நேரத்தில் வந்து சேர்ந்தோம்.

உலகத்திலுள்ள அதிபூர்வமான பட்டணங்களில் ஒன்றாகிய மேற்சொல்லிய இடத்தையும் அதிலுள்ள ஒடுக்கமும் மங்கலும் உயர்ந்ததுமான கட்டிடங்களையும் நான் தூரத்திலிருந்து பிரமிப்போடு பார்த்துக்கொண்டிருந்தேன். கரையிலிருந்து ஒன்றோடொன்று மோதிக்கொண்டு கப்பலைநோக்கி வருகிற படவுகளிலும் அதினால் உண்டான இரைச்சலிலும் என் மனசு செல்லவில்லை.

அச்சமயத்திலுண்டான அமளியில் என் மனதைச் செலுத்தாமல் கரை இறங்கிப்போவதைப்பற்றி அமரிக்கையாய் யோசித்துக்கொண்டிருந்தேன். முன்சொல்லியபடி ஏராளமான படவுகள் நெருங்கி வருவதையும் அந்தப் படவுக்காரருக்குள் நடந்த சண்டைகளையும் நான் கப்பல் மாலுமியின் பக்கத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கையில் விவேகஸ்தனான ஒரு துருக்கன் எனக்கு வந்தனஞ்செய்து கரை இறங்கவேண்டுமோவென்று என்னிடத்தில் கேட்டான். அவனிடத்தில் காணப்பட்ட அமரிக்கையினால் இங்கிலிஷ்காரரான என் தோழன் ஒருவரும் அவருடைய ரோமானிய சிநேகிதர் ஒருவரும் நானும் அவனுடைய படகை குடிக்கூலிக்கு அமர்த்தினோம். நான் சற்றே அதிகத்தைரியமாய் தோணியில் குதித்ததினால் இரண்டு தோணிகளுக்கிடையில் விழுந்துவிட்டேன். ஆகிலும் யாதொரு சேதமின்றி ஒரு நிமிஷத்தில் தூக்கிவிடப்பட்டேன். கரை இறங்கி அங்குள்ள லத்தீன் சன்னியாசி மடத்தில் என்னுடைய இரண்டு சிநேகிதர்களையும் பெட்டியையும் வைத்துவிட்டு நானும் வழிகாட்டிஒருவனுமாக ஆல்துரை வீட்டுக்குப்போனோம். அவருக்கு ஒரு கடிதாசியும் நான் வாங்கிக்கொண்டு வந்திருந்தேன். அவர் என்னை வெகுகரிசனமாய் ஏற்றுக்கொண்டதுமல்லாமல் அடுத்த புதன்கிழமை நான் எருசலேமுக்குப் போகையில் பாதித்தூரமான ராம்லாவரையும் என்னோடுகூட வருகிறதாயும் சொல்லியிருக்கிறார். இவ்விதமாய் அநேக அலைச்சலுக்குப பின்பு நான் ஆல்துரை வீட்டில் சௌக்கியமாயிருக்கிறதுமன்றியில் புண்ணிய பூமியின் ருசிவர்க்கங்களாகிய பெத்லேகேமின் தேனையும் அதன் சமீபத்திலுள்ள தோப்புகளில் உண்டாகின்ற முதற்றரமான ஆரஞ்சிப்பழங்களையும் திராட்சரசத்தையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு காலத்தில் தோல் பதனிடுகிறனாகிய சீமோன் வீடு இருந்த இடத்தின் பக்கமாய் இந்த ஆல்துரைவீடு இருக்கிறது. நாங்கள் மேல்மெத்தையில் உலாவிக்கொண்டிருக்கையில் கடல் அலைகள் கரையில் மோதுகிற சத்தத்தையும் பக்கத்தில் கல்லறைத் தோட்டத்துக்கு பிரேதம் ஒன்றைக்கொண்டுபோகிற கிரேக்கர் கூட்டத்தையும் அந்த பிரேதத்துக்குமுன் தூபவர்க்கமிட்ட பாத்திரமொன்றை குருவானவர் ஆட்டிக்கொண்டுபோகிறதையும் கடல்கரையிலிருந்து சுமைஏற்றிவருகிற ஒட்டகைக் கூட்டங்களையும் கவனித்துக்கொண்டிருந்தோம். கண்ணெட்டும் தூரத்தில் வேலிக்கரைகளில் காட்டுப்புஷ்பங்கள் பார்வைக்கு அலங்காரமாய்த் தோன்றுகிறதையும் கடற்கரை ஓரத்தில் தோல் பதனிட்டுக்கொண்டிருக்கிறவர்கள் வீடுகள் இன்னும் இருப்பதையும் கிழக்கே வெகு துலையில் காணப்படுகிற யூதேயாவின் மலைகளையும் கவனித்தேன். இவைகளெல்லாம் மனதுக்கு வெகு இன்பமாயிருக்கிறது. தேசம் வெகு அமரிக்கையாயிருக்கிறதென்று கேள்வியாகிறதினால் தமஸ்குப் பட்டணவரையும் அமைதலாய்ப் போகலாமென்று எண்ணுகிறேன். யுத்தம் மறுபடி ஆரம்பிக்காமலும் எனக்கு செலவுக்கு பணக்குறைவில்லாமலும் இருக்குமாகில் கொன்ஸ்தந்திநோபுரிவரையும் போகலாமென்று எண்ணியிருக்கிறேன்.

என்னுடைய பழைய சிநேகிதர்களை எல்லாம் நான் மறவாமல் அவர்களுக்கு சலாம் சொல்லுகிறேன்.

தங்களின் உண்மையுள்ள

V. W. HARCOURT.

சமாசாரத்திரட்டு.

ருஷியா.-துர்க்கியா.—இவ்விருதேசங்களுக்குள்ளும் சமாதானம் நிர்வகிக்கப்பட்டபோதிலும், காரியாதிகள் இன்னம் ஒப்புரவுக்குவரவில்லை. ருஷிய சைனியம் கொன்ஸ்தந்தீன்புரியினின்று விலகவும், துர்க்கிய ராணுவம் பல்கேரியாவிலுள்ள 4 அலங்கங்களை விட்டு அகலவும்வேண்டுமென்பது சமாதான நிபந்தனைகளில் ஒன்று. இதை அனுசரிக்க இருகட்சியாருக்கும் மனம்வராமல், இவ்விஷயத்தில் மனசாரத் தகரார் உண்டுபண்ணுகிறவர்களாக ஒருவரை ஒருவர் குறைபேசுகின்றனர். இருபட்சத்தாருக்கும் இதின்பேரில் கோபதாபம் மூண்டிருக்கின்றமையால், அவர்கள் ஏற்கனவேயுத்தம்பண்ணி அலுப்படைந்திருந்தும், இன்னமும் சண்டைக்கு கங்கணம் கட்டினசாடை காண்பிக்கிறார்கள். யுத்தம்நடந்த மாகாணங்களில் கலாபனைகளும் எழும்பியிருக்கிறது. பல்கேரியர் சிறிது மகமதிய போர்வீரரின் உதவிபெற்று, தங்க நாட்டில் பாளையமிறங்கியிருக்கிற ருஷியரைப்பொருதி, அவர்களுக்குப் பெருஞ்சேதம் வருவித்தார்கள். ஒருதடவை கலகக்காரர் புரிந்தசமரில் ருஷியர் 1-ஆ படைஞரை இழந்தனர். ஸ்தானாபத்திய சபைகூடுதலையிட்டு வாக்காலுவாதம் இன்னம் நடந்துவரினும், முடிவுஎன்னவாயிருக்குமென்று இப்போது எவர்களுக்குந்தெரியாது. ருஷியாவும் துர்க்கியாவும் தம்மிலேசெய்துகொண்ட சமாதான உடன்படிக்கை முழுவதும் ஐரோப்பா முக்கிய ராஜாங்கத்தார் அனைவராலும் பேசித் தெளிந்து அனுமதிபெறவேண்டுமென்று இங்கிலாந்து சாதிக்கிறது. இப்படிப்பேசித் தெளிகிறது ருஷியாவுக்குச் சம்மதியாகிலும், பேதப்படுத்த அது உடன்படுகிறதில்லை. இதுகாரியம் தீர்மானமாகிறவரையில் பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் மர்மோராக்கடலில் தரிகொள்ளுவதுமன்றி, இங்கிலாந்து யுத்தாயுதங்கள் இயற்றிக்கொண்டே இருக்குப.

இங்கிலாந்து.—மேலேசொல்லியபடி சமாதானஉடன்படிக்கைவிஷயத்தில் ருஷியா ஐரோப்பா ராஜாங்கத்தாரின் சொல்லுக்கு அமைய மனங்கொள்ளாததையிட்டு இங்கிலாந்து தீர்க்கமாய் யுத்தகோலம் புனைந்துதான்நிற்கின்றது. கையிருப்புப்படைகள் திரட்டப்படுகிறதுமல்லாமல், 30ஆ படைஞருள்ள ஒருசேனை உத்திரவு பிறந்த மறுநாள் எவ்விடத்துக்கும் கப்பலேறிப்போக ஆஜராயிருக்கிறது. ஆகிலும் இங்லாந்துக்கும் ருஷியாவுக்கும் இடையில் பேசப்பட்டுவரும் சாமோபாயங்கள் எவ்விதத்திலும் யுத்தத்தைத் தடுக்குமென்ற நம்பிக்கையும் உதித்திருக்கிறது. இந்தியாவிலிருந்து சுதேச தண்டுகளை மால்த்தாவுக்கு அனுப்புவதின்பேரில் பார்லிமென்துசபையில் தர்க்கமுண்டாயிற்று.

இந்தியா.—ருஷியாவோடு சண்டைநேரிடுமென்கிற முன்னறிவினால் சுதேச துரகபதாதிகளான சில பட்டாளங்கள் மால்த்தாவுக்குப்போய் அங்கே அரண்காவல்வேலை செய்யவேண்டும் என்பதாய் பிரிட்டிஷ் அரசாட்சியார் உத்தரவுபண்ணியிருக்கிறார்கள். யுத்தம் தொடங்குமாகில், இவர்கள் அதில் கூடிநின்று உதவவோ, இப்போது மால்த்தாவிலிருக்கிற பிரித்தானிய போர்வீரரின் ஸ்தானத்தைக்காக்கவோ கூடும். சுதேச போர்ச்சேவகர் அப்படியே போவதற்கு வெகுமனப்பூர்வமுள்ளவர்களாய் இருந்ததுமன்றி, அநேகர் வலியவே இதற்கு உடன்

பட்டார்கள். சென்னைப்பட்டாளங்களே இதுகாரியத்தில் விசேஷித்த ஆனந்தாவேஷம் காண்பித்தன. குறிக்கப்பட்ட பட்டாளங்கள் கப்பலேறிப்போய் சிவந்தகடலில் சேர்ந்தாயிற்று. இந்த வர்த்தமானம் அச்சிட்டு வருவதற்குள்ளாக அவர்கள் மால்த்தாவை அடைந்திருப்பார்கள்—வங்காள சமஸ்தானத்தைச்சேர்ந்த பூரியின் ராஜா தமக்கு விரோதமாய் மந்திரோச்சாரணம் செய்தவனாக உத்தேசிக்கப்பட்ட ஒரு சன்னியாசியைக் கொலைசெய்வித்ததற்காக ஜீவகாலமெல்லாம் கடுஞ்சிறையிலிருக்கத் தீர்ப்புப்பெற்றார். இதின்பேரில் அவர்மேல் கோட்டில் அப்பீல் செய்தும், முன் தீர்ப்பு ஊர்ஜிதப்பட்டது.—உலகமெங்குமுள்ள புரோத்தெஸ்தாந்து சபை அத்தியட்சர்கள்கூடுவதான குருச்சங்கத்தில் சமுகமாயிருப்பதற்காக மகாகனம்பொருந்திய சென்னை அத்தியட்சரவர்கள் சீமைக்குப்போயிருக்கிறார்கள்.

சீனா.—இந்தியாவில்வந்த பஞ்சோபத்திரவம் இப்போது சீனாவுக்கு மாறிப்போயிருக்கிறது. முதலில் மழைத் தாழ்ச்சியினால் கொடிய கருப்பு நேரிட்டிருந்தது. அதோடே இப்போது ஆபத்தான பிரவாகங்களும் உண்டாகி, மிகுதியான பொருட்சேதம் உயிர்ச்சேதங்களை வருவித்திருக்கிறது. கஷ்டப்படுகிறவர்களுக்குச் சகாயமாக இங்கிலாந்திலிருந்து பணம் இலவசமாய் அனுப்பப்பட்டது.

தென் ஆப்பிரிக்கா.—இப்பிரதேசத்துக் காப்பிரிகளோடு கலந்த சண்டை இன்னம் நடந்துவருகிறதுமன்றி, அதிக பயங்கரகோலங்கொள்ளுமென்கிற தத்தளிப்பும் உண்டாயிருக்கிறது. கலகத் துரோகிகளை அடக்குமாறு இங்கிலாந்திலிருந்து போர்வீரர் அனுப்பப்பட்டதுந்தவிர, கேப்கலனி நாட்டிலிருந்து தன்னிஷ்ட படைகளுஞ்சேர்க்கப்பட்டன.

ஜர்மானியா.—ஜர்மானிய சக்கரவர்த்தி சிறிது நாளுக்கு முன் பெர்லின் நகரத்து தெருக்கள்வழியாய் சவாரிபோகையில்; லீப்சிக் நகரத்தானமசோன்மத்தன் ஒருவன் அவரை துபாக்கியினால் சுட்டான். சக்கரவர்த்தி அபாயமின்றி தப்பவே, சண்டாளன் கைது செய்யப்பட்டான்.

(தேசோபகாரி.)

ஜுன்மீ நாள் 30. வைகாசிமீ 20உ முதல், ஆனிமீ 18உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
ச	1	௨௦	நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயம். ரோ. 5: 9.
ஞா	2	௨௧	தேவன் அன்பாகவேயிருக்கிறார். 1 யோ. 4: 8.
தி	3	௨௨	நீரே என் நம்பிக்கையாயிருக்கிறீர். சங். 71: 5.
செ	4	௨௩	தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். யூதா. [22.
பு	5	௨௪	கர்த்தர் என் மேய்ப்பர். சங். 23: 1.
வி	6	௨௫	முக்கியமான வரங்களை நாடுங்கள். 1 கொரி. 12: 31.
வெ	7	௨௬	வீண் புகழ்ச்சியை விரும்பாதிருங்கள். கலாத். 5: 26.
ச	8	௨௭	தன் ஜீவனுக்கீடாக என்னத்தைக் கொடுப்பான். மத். 16: 26.
ஞா	9	௨௮	அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளிப்பார். 27.
தி	10	௨௯	விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம். 1 தெச. [5: 6.
செ	11	௩௦	என் மீறுதல்களை நினையாதிரும். சங். 25: 7.
பு	12	௩௧	என்னை உமது கிருபையின்படியே நினைத்தருளும். 7.
வி	13	௧	உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது. சங். 36: 7.
வெ	14	௨	கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். எபி. 4: 16.
ச	15	௩	நீதிமான்களுடைய ஆசை நன்மையே. நீதி. 11: 23.
ஞா	16	௪	உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும். 25.
தி	17	௫	நீதி மரணத்துக்குத் தப்புவிக்கும். 10: 2.
செ	18	௬	தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானமுண்டு. 11: 2.
பு	19	௭	தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலை. சங். 94: 22.
வி	20	௮	தீமையை வெறுத்துவிடுங்கள். 97: 10.
வெ	21	௯	பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். லூக். 12: 15.
ச	22	௧௦	தேவனுக்கு ஸ்தோத்திரப் பலியிடு. சங். 50: 14.
ஞா	23	௧௧	பரிசுத்த ஆவியை எடுத்துக்கொள்ளாமலிரும். 51: 11.
தி	24	௧௨	இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசியுங்கள். லூக். 13: 24.
செ	25	௧௩	கிருபை உம்முடையது, ஆண்டவரே! சங். 62: 12.
பு	26	௧௪	சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம்பண்ணுங்கள். லூக். 22: 40.
வி	27	௧௫	கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர். சங். 84: 11.
வெ	28	௧௬	தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். 1 பே. 4: 7.
ச	29	௧௭	சகோதரரே, சமாதானமாயிருங்கள். 2 கொரி. 13: 11.
ஞா	30	௧௮	சத்தியத்தையறிகிற அறிவை அடையுங்கள். 1 தீமோ. 2: 4.

விசேஷ நாட்கள்.

1. அமாவாசை.
2. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும், ஞாயிறு.
9. பரிசுத்த ஆவியின் திருநாளாகிய ஞாயிறு.
11. பரி. அப். பர்னபாவின் திருநாள்.
15. பௌர்ணமி.
16. திரித்துவத் திருநாளாகிய ஞாயிறு.
23. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
24. பரி. யோவான்ஸ்நானன் பிறந்த நாள்.
29. பரி. அப். பேதுருவின் திருநாள்.
30. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.

நற்போதகம்.

௭. ஜூலை. ௲௮௭௮௵.

எஸ்றாவின் புஸ்தகம்

முகவுரை.

எஸ்றா நெகேமியா என்னும் (2) புஸ்தகங்களும், யூதசபையாராலும் பூர்வ கிறிஸ்தவப் பிதாக்களாலும், இரண்டு பங்குகளடங்கிய ஒரே புஸ்தகமாக வழங்கப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் நவீனகாலத்துச் சாஸ்திரிகள், ஷெ. ஆகமங்கள் ஆதியிலே (2) வெவ்வேறான புஸ்தகங்களாயிருந்ததென்று சொல்லுகிறார்கள். இதுவே நாம் ஒப்புக்கொள்ளத்தக்கதாயிருக்கிறது. ஏனென்றால் இரண்டு புஸ்தகங்களின் நடை ஒன்றுபோலிருந்தாலும், அவை வெவ்வேறு ஆட்களால் எழுதப்பட்டதென்று காட்டுகிற போதுமான வித்தியாசங்களிருக்கிறது. எஸ்றாவில் கண்டிராத அநேக வார்த்தைகளையும் தொடர்மொழிகளையும் நெகேமியா தன் புஸ்தகத்தில் வழங்குகிறார். திருஷ்டாந்தமாக, நெகேமியா தன்னைக்குறித்துப் பேசும்போது, சர்வவல்லவரை "பரலோகத்தின் தேவன்" என்று அழைக்கிறார். நெகே. 1: 4, 5. 2: 4, 20. எஸ்றாவின் புஸ்தகத்திலோ, இவ்வார்த்தைகள் அஞ்ஞானிகளால் மட்டும் வழங்கப்படுகிறதாகத் தெரியவருகிறது. மேலும் நெகேமியா, சங்கதிகளுக்கிடையே சுருக்கமான சிறு சிறு ஜெபங்களை வழங்குகிறார். 4: 4, 5. 5: 19. 6: 9, 14. 13: 14, 22, 31. அல்லாமலும் நெகேமியா தன் புஸ்தகத்தை ஆரம்பிக்கிறதில், இன்னொரு புஸ்தகத்தின் தொடர்ச்சியாயிருக்கிறதாகக் காட்டாமல் தன் பொருளுள்ள பிரத்தியேகமான புஸ்தகமாகவே காட்டுகிறார். நெகே. 1: 1. ஆகையால் இவ்விரு புஸ்தகங்களும் ஒரே புஸ்தகமாகச் சேர்க்கப்பட்டு ஒரே பேராலே வழங்கப்பட்டதாக நாம் ஒப்புக்கொள்ளாமல், வெவ்வேறான புஸ்தகமாக இருந்ததென்றே ஒப்புக்கொள்ளவேணும்.

I. இப்புஸ்தகத்தின் நோக்கம்.

யூதர்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த சரித்திரத்தையும், அர்தசஷ்டா இராசாவின் 8-ம் வருஷம் அதாவது கி. மு. 457௵வரையும் பலஸ்தீனா தேசத்து யூதர்களுக்கு நேரிட்ட சம்பவங்

களையும் காட்டுகிற நோக்கமுள்ளதாம். எஸ்றாவின் புஸ்தகம் தெளிவும் சாதாரணமுமான சரித்திரமாயிருக்கிறது. பார்சு இராச்சியத்தின் ஆரம்பத்திலிருந்த அரசர் காலத்தில் யூதர்கள் நிலையான ஒரு பெரிய இராச்சியத்தின் குடிகளைச் சேர்ந்தவர்களாய், பார்சருக்குச் சமமான சலாக்கியங்களைப் பெற்றநுபவித்துச் சமாதானமாய் வாழ்ந்தார்கள்.

எஸ்றா மூன்றே காரியங்களைக் குறித்துப் பேசுகிறார்.

1. எஸ்றா, செருபாபேல் இவர்களோடு பாபிலோனிலிருந்து திரும்பி வந்த யூதர்களின் தொகை, வம்சம், ஒருவாறு அவர்களுடைய பேர் இன்னதென்று காட்டுகிறார். II அதி. VIII. 1—20.

2. தேவாலயம் மறுபடி கட்டப்பட்டதும், அதற்கடுத்த சம்பவங்களும் சொல்லப்படுகிறது. I. III. V. VII.

3. திரும்பி வந்த யூதர்கள் அந்நிய விவாகஞ்செய்த தப்பிதத்தையும், அதற்காக எஸ்றா செய்த பிரயத்தனங்களையும் காட்டுகிறார். IX, X அதி.

II. இப்புஸ்தகத்தின் இரண்டு பிரிவுகள்.

இப்புஸ்தகம் (2) வித்தியாசமான பிரிவுகளுள்ளது.

1 பிரிவு. அதி. I-VI—யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பினதும், அதை ஒட்டின சங்கதிகளுமாக 538ளு முதல் 516ளு வரையுமுள்ள சம்பவங்கள். இது 23 வருஷகாலச் சரித்திரமுள்ளது. இந்த காலத்தில், செருபாபேல் யூதேயாவுக்கு அதிபதியும், யெசுவா பிரதான ஆசாரியனும், சகரியாவும் ஆகாயும் தீர்க்கதரிசிகளுமாயிருந்தார்கள்.

2. பிரிவு. அதி. VII-X. அர்தசஷ்டாலங்கிமனு அரசன் தன் அரசாட்சியின் ஏழாம் வருஷமாகிய கி. மு. 458ளுல், எஸ்றாவுக்குக் கொடுத்த அதிகாரமும்; எஸ்றா எருசலேமுக்குப் பிரயாணம் பண்ணினதும்; எஸ்றா எருசலேமுக்குப் போய்ச் சேர்ந்த வருஷத்திலும் அடுத்த வருஷத்தின் துவக்கத்திலும், அந்நிய விவாகத்துக்கடுத்ததாகச் செய்த நடபடிகளுமடங்கியது. இந்தப் பிரிவிலடங்கிய சங்கதிகள், கி. மு. 458ளு ஏப்பிரல்மீ முதல் 457ளு ஏப்பிரல்மீ வரையுமுள்ள (12) மாசச் சரித்திரமுள்ளது. இப்படியாக முதலாம் பிரிவுக்கும் இரண்டாம் பிரிவுக்கும் இடையே 57ளு சென்றிருக்கிறது. இதினாலே முதலாம் பிரிவில் சொல்லிய சங்கதிகளை, இரண்டாம் பிரிவை எழுதுகிறவன் கண்டிருக்கமாட்டானென்று காணப்படுகிறது. ஏனென்றால் இவன் அவர்களுக்குப் பிந்தின இரண்டாம் தலைமுறையிலுள்ளவனாயிருக்கிறான்.

III. ஆக்கியோன்.

எஸ்றாவின் புஸ்தகத்தை எஸ்றாதான் எழுதினானென்று யூதருடைய பாரம்பரை சொல்லுகிறது. நவீன சாஸ்திரிகள், இப்புஸ்தகத்தின் ஒரு பங்கை மட்டும் எஸ்றா எழுதினானென்றும், அவன் காலத்திலிருந்த இன்னொருவன், எஸ்றா எழுதினதையும் மற்றதையும் சேர்த்து முடித்தானென்றும் பொதுவாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவர்கள் இப்படிச் சொல்வதற்கு முகாந்தரமாக, VII அதி. முதல் X அதி. வரையுள்ள இரண்டாம் பிரிவில், தன்மையிடமும் படர்க்கையிடமும் மாறி மாறி வழங்கியிருக்கிறதென்றும், முழுப் புஸ்தகத்தையும் எஸ்றா தானே எழுதியிருப்பாரானால், ஒரே விதமாய் வழங்கியிருப்பாரென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் தானியேலின் புஸ்தகத்திலும் இதைப்போலவே இடவித்தியாசமாய் வழங்கியிருக்கிறது. தானியேலின் புஸ்தகமோ, மற்றொருவனாலல்ல, தானியேலாலேயே எழுதப்பட்டதென்பதற்குப் போதுமான நியாயமிருக்கிறது. அந்தக் காலத்திலிருந்த கிரேக்கச் சரித்திரக்காரன் எழுதின புஸ்தகத்திலும் இடம் வித்தியாசமாய் வழங்கப்பட்டிருக்கிறது. எஸ்றாவில் தன்மையிடமும் படர்க்கையிடமும் வழங்கிய பாகங்களின் நடை ஒன்றுபோலிருப்பதினாலே இரண்டையும் எழுதினவன் ஒருவன்தான் என்று நிதானிக்கத்தக்கதாயிருக்கிறது.

7: 6—8. படர்க்கையிடம் வழங்கியிருக்க, 7: 28. 8: 22, 31. இந்த வாக்கியங்களில் தன்மையிடம் வழங்கியிருக்கிறது. மாசம், தேதி ஒன்றுபோலவே நுட்பமாய் வழங்கப்பட்டிருக்கிறது. (7: 9 ஐ 8: 31. 10: 9, 16. ஒடு ஒத்துப் பார்க்க.) சனங்கள், ஆசாரியர், லேவியர் இந்த வரிசை ஒன்றுபோலவே இருவகையிலும் வழங்கப்படுகிறது. 7: 7. 8: 15. 9: 1. தேவாலயமானது தேவனுடைய வீடு என்று தன்மையிடம் வருகிற பாகத்தில் வழங்கியிருப்பதுபோலவே, படர்க்கையிடம் வருகிற பாகத்திலும் வழங்கியிருக்கிறது. 7: 16, 17, 19, 20, 27. 8: 17, 25, 29, 30, 33, 36 இப்படியாகப் பார்த்தால், எஸ்றாவின் இரண்டாம் பிரிவை எஸ்றாதான் சுயமாய் எழுதினானென்று ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

எஸ்றாவின் புஸ்தகம் முதலாம் பிரிவையும் எஸ்றா தான் எழுதினானென்று சொன்னால், அதற்கு வேறே ஆதாரமிருக்கவேண்டும். முதலாம் பிரிவிலுள்ள சங்கதிகளின் சரித்திரமானது எஸ்றாவின் காலத்துக்கு 50 முதல் 80ளு காலத்துக்கு முந்தினதாயிருக்கிறது. இப்படி தனக்கு முன்னுள்ள சங்கதிகளை எஸ்றா தானே முதலாவதாக சுயமாய் எழுதியிருக்கக்கூடாது. இவைகளை இவன் விசாரித்தாவது அல்லது முந்தி யெழுதியிருந்த சாதனங்களைப் பார்த்தாவது எழுதியிருக்கவேண்டும். இப்படியாக புஸ்தகத்தின் முதலாம் பிரிவானது மற்றச் சாதனங்களிலிருந்து இவன் சேர்த்ததாயும், இரண்டாம் பிரிவானது இவன் சுயமாய் எழுதினதாயுமிருக்கிறது.

இவன் கி. மு. 538ளு முதல் 516ளு வரையுள்ள சங்கதிகளை எந்தச் சாதனங்களிலிருந்தெடுத்துச் சேர்த்தானென்று விசாரித்தால்,

எருசலேமுக்கு செருபாபேலோடுகூட வந்த சிலர் இதிலுள்ள முக்கிய சங்கதிகளை எழுதிவைத்திருக்கவேண்டுமென்று துலங்கும். எஸ்றா நகல் செய்த மூலசாதனங்கள் எதுபோலிருக்குமென்றால், சிறையிருப்பின் காலத்தில், தானியேல் எழுதிவைத்திருந்ததைப்போலவும், அதற்கு முந்தி, பல தீர்க்கதரிசிகள் வெவ்வேறு இராசாக்களின் நடபடிகளை எழுதிவைத்திருந்ததைப்போலவுமிருக்கும். கோரேசுடைய விளம்பரத்தை (1: 2—4.) யூதர்கள் பாபிலோனிலிருந்து கொண்டுவந்து தங்கள் விடுதலைக்கும் சுயாதீனத்துக்கும் ஆதாரமாகப் பத்திரமாய்க் காப்பாற்றி வந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. பாபிலோனியப் பொக்கிஷத்திலிருந்து எருசலேம் தேவாலயத்துக்கு மறுபடி கொடுத்து விடப்பட்ட பணிமுட்டுக்களின் டாப்பும் 9—11; திரும்பி வந்தவர்களின் தொகையையும் குடும்பத்தையும் (2: 2—64), அவர்களுடைய வேலைக்காரரையும் (65), அவர்களுடைய மிருகஜீவன்களையும் (66, 67), அவர்களுடைய காணிக்கைகளையும் (69), காட்டிய டாப்பும், ஆகாய் அல்லது சகரியாவால் எழுதப்பட்டிருக்கும். ரெகூமின் நிருபமும் (4: 9—16) அர்தசஷ்டாவின் நிருபமும் (4: 17—22), தத்னாயின் நிருபமும் (5: 3—17), இதற்கு தரியு எழுதின பதிலும் (6: 3—12), இராசாங்கத்துச் சாதனங்களானதால், யூதபாரசிய ரிக்கார்ட் கச்சேரிகளில் இவைகளைப் பத்திரப்படுத்தியிருக்கும். இப்படியாக எஸ்றாவின் முதலாம் பிரிவிலுள்ள (157) வாக்கியங்களில் (112) வாக்கியங்கள் அதாவது முழுப் பிரிவின் முக்கால் பங்குபோல், மேற்காட்டிய வகையாய்க் கிடைத்தது. ஆகாய் அல்லது சகரியா எழுதின சரித்திரக்குறிப்புகளும் மேற்காட்டிய சாதனங்களோடு சேர்ந்திருக்கும். ஆனால் எஸ்றாவில் காணப்படுகிற ஒரே போங்கான நடையானது, இப்படிப்பட்ட சரித்திரக் குறிப்புகளிலெதையாவது நுழைத்திருப்பான் என்பதற்கு விரோதமாயிருக்கிறதே என்றால், ஷை சரித்திரக் குறிப்புகளையெல்லாம் எஸ்றா தமது சொந்த வார்த்தைகளினாலே எழுதியிருப்பார்.

முதலாம் பிரிவுக்கும் இரண்டாம் பிரிவுக்தும் ஒற்றுமையிருக்கிறது. திருஷ்டாந்தமாக.

1. கால நுட்பம் ஒன்றுபோலிருக்கிறது, (8: 6. 6: 15. 6: 19 ஐ 7 9. 8: 31. 10: 9, 16, 17. ஒடு ஒத்துப்பார்.)

2. ஜாபிதாக்களையும் டாப்புகளையும் திட்டமாய் நகல்படுத்துவதும் ஒன்றுபோல் ஒத்திருக்கிறது, 1: 9-11. 2: 2—67. ஐ 8: 2—14, 26, 27. 10: 18—43 ஒடு ஒத்துப்பார்.)

3. எபிரேயு, கல்தேயுப் பாஷை வார்த்தைகளை மாற்றி மாற்றி வழங்குவது ஒன்றுபோலிருக்கிறது.

4. ஆலயம் என்ற வார்த்தைக்குப் பதிலாக தேவனுடைய வீடு என்று இரண்டு பிரிவிலும் வழங்கியிருக்கிறது. (2: 68. 3: 8, 9, 11, 12. 4: 3. 5: 2. 6: 16, 17, 22 ஐ 7: 16, 17, 19, 20, 27. 8: 17, 25, 29, 30, 33, 36. ஒடு ஒத்துப்பார்.)

5. சிறையிருப்பிலிருந்து திரும்பின இஸ்ரவேலரை "சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள்" என்றும், (4: 1 6: 16, 19, 20 ஐ 8: 35. 10: 7, 16 ஒடு ஒத்துப்பார்). "யூதா பென்யமீன்" என்றும் ஒன்றுபோல் அழைக்கிறார். (1: 5. 4: 1. ஐ 1: 9. ஒடு ஒத்துப்பார்.)

6. லேவியரை விசேஷித்து அடிக்கடி சொல்வது. (2: 70. 3: 8, 9, 10. 6: 16, 18, 20 ஐ 8: 15—19, 29, 30, 33. 9: 1. 10: 5, 15 ஒடு ஒத்துப்பார்).

7. நியாயப்பிரமாணத்தை "மோசேயின் நியாயப்பிரமாணம் அல்லது மோசேயின் புஸ்தகம்" என்று சொல்வது. (3: 2. 6: 18 ஐ 8: 6 ஒடு ஒத்துப்பார்)

8. பார்சுதேசத்து, மன்னர்களுக்கு "இராசா" என்ற பட்டப்பேர் சேர்த்துச் சொல்வது. (1: 7. 4: 23. 5: 13, 14, 17. 6: 3 ஐ 7: 7, 11. 8: 1 ஒடு ஒத்துப்பார்).

9. வம்சங்களின் தலைவர் (1: 5. 2: 68. 4: 2, 3 ஐ 8: 1, 19. 10: 16 ஒடு.

10. இஸ்ரவேலரை "சனங்கள்" "ஆசாரியர்" "லேவியர்" "பாடகர்" "வாசல் காவலாளர்" "நிதனிமியர்" என்று பிரித்துச் சொல்வது. (2: 70 ஐ 7: 7 ஒடு).

11. அஞ்ஞானிகளை "தேசத்தின் சனங்கள்" என்று அழைப்பது. (3: 3. 4: 4 ஐ 9: 1, 2. 10: 2 ஒடு).

12. சர்வவல்லவரை "இஸ்ரவேலின் தேவன்" என்றும். (3: 2. 6: 14. 4: 22 ஐ 8: 35. 9: 15 ஒடு). "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்றும் அழைப்பது. (4: 1, 3. 6: 21 ஐ 7: 6 ஒடு). தேவனை இப்படி அழைப்பது ஆகாமத்தில்வழக்கமாயிருந்தாலும், தானியேல், ஆகாய், சகரியா, நெகேமியா, மல்கி, இந்தப் புஸ்தகங்களில் வழக்கமில்லையென்று கவனித்துக்கொள்ளவும்.

13. மேலும் எஸ்றாவால் மட்டும் வழங்கப்படுகிற அநேக வார்த்தைகள் இரு பிரிவிலும் ஒன்றுபோல் வழங்கப்படுகிறது. திருஷ்.

பொற்கிண்ணி 1: 10: ஐ 8: 27.
"பகுதி, தீர்வை, ஆயம்." 4: 13, 20 ஐ 7: 24.
"மனு" 4: 7. ஐ 7: 11.
"உப்பு" 4: 14 ஐ 7: 22.
"சஜானு" 5: 17 ஐ 7: 20.

14. முதலாம் பிரிவின் பாகங்களுக்கும் இரண்டாம் பிரிவின் பாகங்களுக்கும் நுட்பமான இசைவு இருக்கிறது. திருஷ். 1: 2—4 உள்ள விளம்பரத்துக்கும், 7: 11—26 உள்ள நிருபத்துக்கும் இசைவு.

1: 9—11. பணிமுட்டுகளின் டாப்புக்கும்; 8: 26, 27 டாப்புக்கும் இசைவு.

2: 2—64. சனங்களின் அட்டவணைக்கும்; 8: 2—20. அட்டவணைக்கு இசைவு.

2: 1. 8: 1. அட்டவணையின் தலைப்பில் இசைவு.

6: 17. 8: 35. காணிக்கைகளின் விபரத்திலும் இசைவிருக்கிறது.

15. முதலாம் பிரிவில் வருகிற குறிப்பான சங்கதிகளே இரண்டாம் பிரிவிலும், மூர்த்தின முறைப்படியே வருகிறது. ஷை சங்கதிகளைச் சொல்லிக் கொண்டுபோகிற வகையும் ஒன்றுபோலவேயிருக்கிறது. ஆகையால் எஸ்றாவில் காணப்படுகிற ஒரே போக்கான நடையானது எஸ்றாவின் புஸ்தகத்திலுள்ள இரண்டு பிரிவுகளையும் எஸ்றாதான் எழுதினானென்று சாட்சியிடுகிறது.

இரக்ஷண்யாநுபூதி.

தானைமடி மீதலவித் தங்கியதும் வானாட்டுத்
தாதர்முடி மீதணி தோய்ந்ததுவும், — மாதவரயிற்
கானுருவி அன்பர் கருத்தூற் றிருப்பதும் இம்
மானுவேல் செஞ்சே வடி.

பாசாடவி யூடு பதைத்து மனம்
வேசாறி விடாய்த் துயர் வீடு வரோ
ஈசா நர தேகம் இயைந்த பர
வாசா அருண் ஞான வரோ தயனே. 1

தேராமல் உஞற்றிய தீமை யெலாம்
பேராமல் என் முன்பு பிறங்க நைவேன்
ஓரா தரம் இன்றுனை யன்றி யெனக்
காரா அமு தாய அரும் பொருளே. 2

நல்லா னொரு தந்தையை நாடி வரும்
பொல்லா மகனிற் கொடியேன் புலையேன்
எல்லா மறியும் திரு வுள்ள மிரங்க்
அல்லா யெனில் ஆர் புகல் ஆண்டவனே. 3

பண்ணூடு மொழிச் சியர் பால் மயலே
உண்ணாடி யொழிந்தன நாள்க ளெலாம்
கண்ணூடிய தண் ணருள் காட்டிதியால்
விண்ணோர் தொழுங் கழல் வித்தகனே. 4

அன் றஞ்சுறு தீர காழவரும்
என் றஞ்சி மலங்கி யிடர்ப் படுவேன்
உன் றஞ்ச மலால் ஒரு தஞ்சமிலேன்
இன் றஞ்ச லெனு அருள் எம்பரனே. 5

பொல்லா உலகத் தொடு போரிடவும்
மல்லா டிதயத்தை மலைத்திடவும்
வல்லா ரெவர் உன்னருள் வாய்த் திலரேல்
எல்லாம் வல யேசு தயாபரனே. 6

பன்னப்படு பாதகர் பாருலகில்
என்னிற் பெரியாரிலை யென்ன நினைந்த்
இன்னற படுபாவி யெனக் குருகி
மன்னித் தருள்வாய் மனுவேலரசே. 7

வல்லாய் உனருட் செயல் வாழ்த்திடவும்
கல்லாய என் னெஞ்ச கனிந் திலதே
எல்லா முடையாய் உனையெய்தும் வகை
சொல்லாய் அருணோத சுராதிபனே. 8

உச்சிட்டம் உவந்தலை குக்கலென
நச்சிட்ட புலன்னிகல் நாளுமனம்
வைச்சிட் டலைவுற்று மயங்கிடலோ
முச்சிட்டரோ டொன்றிய முன்னவனே. 9

என்போல் அடியாரிடர் தீர்த்தருளற்க்
உன்போல் உரியாரிலை உண்மையதால்
பின்பே யெறி யென் பிழை யத்தனையும்
அன்பே உருவாகிய ஆரணனே. 10

ஆகாமியன் எற்கருணா யெனில் இத்
தேகாதி சதஷ்டய சிக்கறுமோ
ஆகாயம் அகன் றவனிக் குருகி
மாகாயம் எடுத்த வரோ தயனே. 11

முப்பற் றெனும் ஆர்கலி மோதலை யாய்த்
துப்பற்றுழல் கின்ற துரும்பெ னுளம்
ஒப்பற் றுய ருன்னடி பற்ற அருள்
எப்பற்று மிலாத சர்வேஸ் பரனே. 12

உன்னா ரருள் ஒன்றடியேற் குளதேல்
என்னா லடையாப் பயன் யாது கொலாம்
இன்னே திரு வுள்ளம் இரங்குதியால்
பொன்னாடு தொழுங் குண பூதரனே. 13

முந்தாரண நூல் நெறி முற்று மிகந்த்
அந்தோ கொடும் பாதக னாயினன் யான்
நந்தா உன்னருட் பிரசாத நலம்
தந்தாதரி யேசு தயாபரனே. 14

நன்றே துயிலேன் உயிர் நா மறுநாள்
இன்றோ அல தெப்பொழுதோ அறியேன்
என்றோ கருணைக்கி லக்கா கிடுவேன்
பொன்று நெறி காடிய புண்ணியனே. 15

சிந்தா குலமும் உகு செம்புனலும்
ஐந்தாகிய காயமும் ஆக்கை படும்
சந்தாபமும் என் உனக்குத் தமியேன்
வெந்தீ வினைகாண் விபுதாதிபனே. 16

ஆண்டாயிரம் ஆயிரம் ஆயுள் படைத்
தீண்டோர் அரசாயுல காளினுமென்
மீண்டாருயிர் பெற்றனை மேவிலரேல்
மாண்டா ருயிர் ஈந்த மஹா குருவே. 17

அல்வந்த மனத்தின ருயினு முன்
சொல் வந்து தெருட்டியதித் துணை நீ
நில் வந்தனம் ஐய நினைந் துனருட்
செல்வந்தனை யீதி ஜெகத் குருவே. 18

தேடும்படி யும்பர திகாந்த மெலாம்
ஓடுந்தமியே னுளமா உனையே
நாடும்படி ஓர் வரம் நல்கிஉயர்
வீடுந் தருவாய் அருள் வித்தகனே. 19

படியேன் கனியேன் பணியேன் விழிநீர்
வடியேன் ஒருநாள் மறவேன் மறம் நான்
கொடியே னெனினு குமரேச வுணக்
அடியேன் அடியேன் அருணாயகனே. 20

நஞ்சத்தை நிகர்த்தெனை நாளும் நலி
நெஞ்சத்தை யடக்கல் தினக்கரிதோ
கஞ்சத்தை நிகர்த்த கழற் றுணையால்
வஞ்சத்தை யடக்கிய மாதவனே. 21

என்னீதி யெனச் சொல யாதுமிலேன்
உன்னீதி யடைந்தென தாவியுய
இன்னே திருவுள்ளம் இரங்குதியால்
மன்னே அருள் பொங்கு மகோததியே. 22

நீரின் றமையா துலகத்து நெறி
வேரின் றமையாது வியன்றரு நின்
பேரின்றமை யாது பிறங்குகதி
யாரின்றெனை மீட்பர் அரும்பொருளே. 23

நாவார மொழிந்து நயந்துனடி
பாவார மிலைந்து பழிச்ச அருள்
ஜீவார மணிய செஞ்சொற் கவிஞர்
தேவார மிலைந்த செழும்புயனே. 24

கழியாத கடுந்துயர் கைவரினும்
ஒழியாத விஸ்வாசம் உவந்தருள் வாய்
பழியாது மிலாதரும் பாடு புணர்ந்
தழியாத பதந்தரும் ஆண்டவனே. 25

வெங்கானலை நீரென வேட்டிடல் போல்
இங்காதா முற்றுன தின்னரு ளென்
பங்காக உளதவோர் பாமரன் யான்
மங்காத நலந்தரும் மானவனே. 26

ஆவிக்குறு வெந்துயர் ஆற்றுகிலாப்
பாவிக்குனை அல்லது பற்றுளதோ
காவிக்கு நிகர்த்த கருங்கண்மரி
தேவிக் கொருபுத்ர சிகாமணியே. 27

போராடும் இகத்துயிர் போன் றிடுநாள்
சீராடு பொலன் கழல் சேர்ப்பை கொலோ
காராடு பொழிற் கணோர் காதுதிர
வேராடு மெழிற் றிருமேனியனே. 28

கையேன் பிணியுற் றலை காயமிதை
எய்யேன் பலதீவினை ஈட் டிடவும்
செய்யேன் உனதன்புள சேவடிக்கே
ஐயா இஃதென்னிலை ஆரணனே. 29

பின்னித்திகழ் என்பிழை யத்தனையும்
மன்னித் திலகும்பத வாழ்வருள் வாய்
நன்னித்திலம் ஒத்த நகைத்துவர் வாய்க்
கன்னித் திலகந்தரு கான்முளையே. 30

நேமிக்கிரிபோல் நிமிர் நீச வினைக்
காமிக்குயர் விண்கதி கூடுவதோ
சாமிக்கொரு சேய் தயைகூர் பரிவால்
பூமிக்கிடர் தீர்த்தனை புண்ணியனே. 31

நெஞ்சக் கருமைக்கல் நினைப்பதனை
வஞ்சக்கடுவாய் வசனிப் பதிலாப்
பஞ்சைக் கருள் பல்கிடுமோ பரமன்
மைஞ்சக் கனியாய மனோகரனே 32

என்றும் களவிற் பயில் நெஞ்சினன் யான்
நன்றுன் கழல் நீழலை நண்ணுவனோ
பொன்றும் பொழுதற் புகுவாய் பரதீச
இன்றென்னுடன் எனதரு ளெம்பரனே. 33

வருமித் தகியாய வழக் கிடுவோர்
கருமத்தையும் மெய்யுறு கக்ஷி தனின்
மருமத்தையு மோருகி வந்ததவென்
தருமத்துரை யாய தயாநிதியே. 34

பாசானொரு துக்கள் பகைத்தவளைத்
தேசா வருபோழ் தெனையஞ்ச லெனுப்
பேசா வருணல்கிய பேருதவிக்
கீசா அடியேன் புரியீளதோ. 35

பகல்புகக நிலத்திருள் பாறுதல் போல்
இகல்புக்க இடர்தெரி யாதியைப்
புகல்புக்க வெனக்கருள் பூத்தனையே
அகல் புட்கர வீறடல் ஆரணனே. 36

சாலத்தின் முதிர்ந்த சழக்கர் தொழின்
மூலத்தை யறிந்து முனிந்தெளியேன்
ஓலத்தை யுவர்ந்தது வுற்றனைமா
சீலத்தவ ஞான திவாகரனே. 37

மாயா பிரபஞ்ச வனத் திருளிற்
பேயோடு நடம்புரி பித்த னெனைக்
காயாது கசிந்து கடைக் கணியென்
தாயே தாளிக்கொரு தாரகமே. 38

முன்பாக்கிய தீமை முதிர்ந்து தினம்
துன்பாக்கிய நோவு துடைத் தருள்வாய்
என்பாக்கியம் நீ யல தில்லைசுகம்
நன் பாக்கியம் நல்கு நராதிபனே. 39

மறுத்தா யென்முன் னொருமாதவனை
வெறுத்தாயலை யென்றுறு வெம்பிழையும்
பொறுத்தா யெனில் உன்புகழ் மற்றதைவிட்
டொறுத்தா யெனின் உன் உளம் உத்தமனே. 40

(இன்னும் வரும்.)

இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

என்ன துன்மதி யுனக்கியைந்த திங்கிவன்
உன்னரும் பைத்திய முனக்கும் நேர்ந்ததோ
சொன்ன அத்திருநகர் துன்னினார் எவர்
பன்னு சொப்பனப் பொருள் பலிக்குமே யோராம். 92

ஓடிட மருந்தயின் றுறங்கி வீழ்தல்போல்
நாடி யிங்கிவற்றர நவின்று வந்தினே
சோடிய மனத்தின னேடுகூடி நீ
கேடுறத் துணிந்தனை கிளக்க லாவதென். 93

மன்வழி மரபுளார் வகுத்துக் காட்டிய
முன்வழி யிகப்பது முறைமை யன்றினி
உன்வழிச் சேறியேற் சேறி யொல்லிய
என்வழி யேகுவன் யானென் றேகினான். 94

ஏகுவன் னெஞ்சனுக் கிரங்கி யெய்திநீ
போகலை யெம்முடன் பொருந்து வாயெனில்
சாகலை நித்திய சாம்பிராஜ்ஜிய
போக பூமியினலம் பொருந்து வாயென்றான். 95

பன்முறை வேதியன் பரிந்து கூவவும்
நன்முறை யறிகிலான் நாச தேசத்துச்
சென்முறை துணிந்தனன் ஜீவன் மல்கிய
சொன்முறை நிற்பரோ கேடு சூழ்ந்துளார். 96

கல்லென உரத்த வன்னெஞ்ச கன்குலை
எல்லெனக் கூறியாங் கிறில் துன்பத்தைச்
சொல்லரும் சுகமெனத் துணிந்து போதல்கண்
டொல்லை மென்னெஞ்சனீ துசாவு வானரோ. 97

உத்தம தோழநீ யுவந்து பேசிய
முத்திமர் நகர்க்கொரு முதல்வன் ஆக்கிய
அத்தகு பாதைநீ யறிதியோ அஃ
தெத்திசை யேகுதும் எழுகவென்றனன். 98

துனைவ நோக் காயிடைத் தோன்று கின்றவோர்
இணையறு சுடருகிடக்க வாயிலை
அணையில் மற்றவை யவன் அறியலாகுமத்
திணிசுடர் குறிக்கொடு செல்ல வேண்டுமால். 99

பொருவரும் இருவருட் புணர்ப்பி னாலியாம்
இருவரும் உடன்செல இசைந்து நின்றனம்
வெருவா வின்றிமேல் விரைந்து செல்வதே
கருமமிப் பெரு வெளி கடத்து மென்றனன். 100

வஞ்சமில் வேதியன் வகுத்தல் கேட்டுமென்
னெஞ்சனும் ஒருப்படீஇ நெறியைப் பற்றினான்
எஞ்சுறு இருவரும் விரைவி னேகினார்
பஞ்சரம் நீத்த பைங்கிளியின் பான்மையார். 101

வேறு.

இன்ன தன்மைய ரிருவரும் பெருவெளி யிசைந்து
மன்னிவ் வோரடித் தடந்தைவிட் டயற்புறம் வழுவில்
துன்னு மின்னலென் றஞ்சினராய்ச் சுவிசேஷன்
சொன்ன சொற்குறி கடைப்பிடித் தேகினார் துணிந்து. 102

ஆயகாலை மென்னெஞ்ச னிங் காரையுங் காணாம்
தூய வேதிய நாம் செலத் துணிந்த காரியமென்
போய் இனிக்குடி புகுமிடம் யாதவண் புகுவோர்க்
கேயும் நற்சுகான னந்தமென் இயம்புதி யென்றான். 103

நன்று நின்வினா உத்தரம் சுருதியே நவிலும்
அன்றி யெம்மனோர் வாக்கினுக் கதீதமாம் ஐயம்
ஒன்றிடாது கேட் டுய்த்துணர்ந் திடுக வீதுண்மை
என்று புத்தகச் சுருள் படித் திவையிவை யியம்பும். 104

ஜீவரக்ஷையை நாடிநாம் சென்றுசேர் இடந்தான்
ஓவலில் பரலோக ராஜ்ஜிய மகி தற்றால்
மேவரும் பரமா னந்த சுகநிலை மேவும்
தாவில் நித்திய ஜீவனைப் பெறுவதும் சரதம். 105

துன்ப ஆழியில் மூழ்கிவெந் துயரெலாம் தொலைத்து
மன்பதைக் கழியாப் பதம்வழங்கிய வரதன்
அன்பு மல்கிய ஜீவமா நதித்துறை யாடிப்
பொன் பொலிந்த செஞ் சேவடிக் கற்பகம் புகுவேம். 106

விழுத்தருங் கதிரொழி திவழ் வெண்டுகில் புனைந்து
வழுத்து தற்கரு மகிமை யொண் மௌலியைச் சூடிப்
பழுத்த பத்தியிற் பரவச ராகிநம் பரனைத்
தொழத் தருஞ்சுர கணங்களோடடி யிணை தொழுவேம். 107

புனித ராகிய புங்கவர் புரையில் புத்தேளிர்
நனி திருப்பணி விடைபுரி தூதர் நம்பனுக்காய்த்
துனி சுமந்துயிர் விடுத்து வான் கதிபெற்ற சூரர்
இனி இனைத்துபல் லாண்டிசை செவிமடுத் துய்வேம். 108

ஜீவ தாருவின் செழுங்கனித் தீஞ்சுவை யமிர்தத்
தேவ போனகம் ஆரவுண் டானந்தம் தேக்கி
ஓவி லன்பொடு துதிபகர்ந் துவந்தினி திருப்பேம்
பாவ சங்கடம் யாவையும் நம்முறை படரா. 109

வாக்கினால் மனத்தால் அளப்பரி திம்மாண் கதியில்
போக்கு வித்தெமைப் புரப்பது புரவலன் புதல்வன்
ஆக்கு புண்ணியம் அசற்கெமைப் பக்குவப் படுத்திக்
காக்க வல்லதிக் காழிவேந் தாவியின் கருணை. 110

இன்ன தோர்ந் தருள் வாக்கினை மதித்திள வாசன்
தன்னை மெய் விசு வாசத்தினால் தனதாக்கிப்
பின்ன மற்றநல் லாவியின் பேரருள்பேணி
நன்னெறிப் படில் இறுவரை நணுகும் அப்பேறு. 111

சுருதி நூல்படித் திவ்வணங் கிறிஸ்தவன் சொல்லக்
கருதி யாங்கு மென்னெஞ்சனும் வியந்துளங் களித்துப்
பெரிது நம்வழி தாழ்ப்பது பிழைவிரைந் தோடி
வருதி யென்றலும் வேதியன் றன்னிலை வகுப்பான். 112

ஒன்று கேட்டிமென் னெஞ்சவென் றுற்பவந் தொடங்கி
நின்ற வல்வினை ஈட்டிய தீவினை நெருங்கித்
துன்றி யென்முது குளுக்குற விமிரும் அத்துணியால்
பின்று கின்றனன் நீயது பெறுகிலா யென்றான் 113

இத்திறந்த சம்பாஷணை யியைந் திருவோரும்
மித்திரத் துலமாகின ராய்வெட்ட வெளியின்
மத்தியிற் செலும் போதொரு மருங்கு சேறுளையில்
சித்த சாஞ்சலி யத்தினால் விழுந்தனர் திகைத்து. 114

திகைத்து விழ்ந்து தத்தளித்துடன் முழுவதுஞ் சேறாய்
அகைத் தழுக்கினின் றடிபெயர்த் திடவொணா தழுந்தி
உகைத் தென்செய்வலென் றாற்றிய பெரும்பிழையுன்னி
மிகைந்த சிந்தையான் வேதியன் வெருண்டுள மெலிந்தான். 115

இனைய னாசமென் னெஞ்சனும் சிறுபொழு திளைந்து
புனையும் நன்மொழி புகன்றெனைத் தெருட்டிய புலவோய்
எனைய துன்னிலை யிறங்கிடு துறையில் நீத்தென்றால்
பினையு றுங்கதி விதந்துரை யாடவும் பெறுமோ. 116

இன்று மெத்தனை யவதியோ துன்பமோ இடுக்கண்
என்னவோ உயிர்ச்சேதம் வந்தியையினும் இயையும்
அன்ன தாதலிற் ஜீவனோ டகன்றியான் அகத்தைத்
துன்னி யின்னலற் றிருப்பதே நலனெனத் துணிந்தேன். 117

(இன்னும் வரும்.)

Numbers.

எண்ணாகமம்.

கஉ. அதிகாரம்.

"எத்தியோப்பிய" எபிரேயுவில் ("கூஷிய") என்றிருக்கிறது. "ஸ்திரியை" இவன் சிப்போராளென்று நினைக்க இடமில்லை. ஏனென்றால் அவள் மீதியானிச்சி. யாத்தி 2: 21. சிப்போராள் கறுப்பியாயிருந்ததினிமித்தம் எத்தியோப்பிய ஸ்திரியென்று மிரியாம் நிந்தையாய்ச் சொல்லியிருப்பாளோ என்றால், மோசே இவளைக் கலியாணஞ் செய்தது அனைநூற்றுண்டு ஆகிறது; மோசே தேவனாலே அழைக்கப்படுமுன் இது நடந்தது. இப்படிப்பட்ட காரியத்தை இத்தனை காலத்துக்குப்பின் எடுத்துப் பேசுகிறதாக நினைக்க இடமில்லை. சிப்போராள் மரித்துப் போயிருக்கவேண்டும். அதினாலே மிரியாம், வீட்டுக்கு அதிகாரிபோலிருந்திருப்பாள். அவள் மனதுக்கு விரோதமாய் மோசே இந்தக் கலியாணம் செய்திருப்பான். இதினாலே இந்த முறுமுறுப்பு வந்தது.

காமுடைய சந்ததியிலுள்ள பெண்ணை மோசே விவாகம்செய்தது தடுக்கப்படவில்லை. இவள் கானானுதேசத்தாளல்ல யாத்தி. 34: 11—16. மோசே முதலில் மீதியானிச்சியையும், பிற்பாடு எத்தியோப்பியாளையும் விவாகஞ்செய்தது, தேவனுடைய உடன்படிக்கையும் வாக்குத்தத்தங்களும், பிற்காலத்தில் புறச்சாதியாருக்கும் செல்லும் என்பதை முன் குறித்ததென்றும், (சங். 45: 9. உன். 1: 4); மிரியாமும் ஆரோனும் அதை விரோதித்தது, புறச்சாதியாரைக்குறித்து யூதர்கள் விரோதம் பாராட்டுவதை முன் குறித்ததென்றும், (லூக். 15: 29, 30) கிறிஸ்தவ பிதாக்கள் சொல்லுகிறார்கள்.

3. மோசே இப்படி தன்னைக்குறித்துப் புகழ்ச்சியாயெழுதமாட்டான், பின்பு எவனோ இங்கே நுழைத்தெழுதியிருக்கிறான், ஆகையால் இவ்வாகமங்கள் உண்மைத்தப்பானது என்று ஆட்சேபிக்கப்படுவதுண்டு. மோசே தானாய் எழுதாமல் ஆவியின் ஏவுதலால் எழுதியிருப்பதால் இப்படி யெழுதுகிறான், (11: 17). மோசே பட்சபாதமில்லாமல் தன் தப்பிதங்களையும் எடுத்துச்சொல்லுகிறானே. 20: 12. யாத்தி. 4. 24. உபா. 1: 37. மோசே இப்போதுண்டான விரோதத்தில் வழக்குப் பேசாமலும், பதிலுக்குப்பதில் செய்யாமலும், தன் நியாயத்தை இழந்துவிட்டிருந்தானென்பதற்கு அர்த்தமாக சாந்தகுணமுள்ளவனாயிருந்தானென்று சொல்லியிருக்கிறது.

7. "வீட்டில்" தேவனோடு உடன்படிக்கைக்குள்ளான (இஸ்ரவேல்) சனங்களுக்குள் என்று அர்த்தம்.

"எங்கும்" இஸ்ரவேலரில் ஒரு பாகமாவது மோசேயின் விசாரணைக்குளளாகாமலிருக்கவில்லை.

"உண்மையுள்ளவன்." என் சனங்களை ஆண்டு நடாத்தனம் பண்ணுவதில் எனக்குப் பதிலாளாக என்னாலே அங்கிகரிக்கப்பட்டவன் என்றர்த்தம். இதென்ன ஆச்சரியமான உண்மை! தேவனாலே இப்படி நற்சாட்சிபெறுவது எத்தனை பாக்கியம். கிறிஸ்துசபையை ஆண்டு நடத்துகிற போதகன்மார் எல்லாரையும் குறித்து இப்படி "என் வீட்டில் எங்கும்" (இன்னான்) "உண்மையுள்ளவன்" என்று சொல்லக் கூடுமோ?

8. "முகமுகமாகவும்" மூன்றாவதான ஒருவர் அல்லது ஒன்றின் மூலமாய் அல்ல என்றர்த்தம். யாத்தி 33: 11. உபா. 34: 10.

"பிரத்தியட்சமாகவும்" தேவவெளிப்படுத்தலை மோசே சொப்பனம், தரிசனம், உவமை, அசரீரவாக்கு இந்த வகையாய்ப் பெற்றுக்கொள்ளாமல், நேராக தேவன சொல்ல இவன் கேட்டான். தேவன் எழுதிக்கொடுக்க இவன் வாங்கினான். யாத்தி. 33: 11. உபா. 34: 10.

"கர்த்தரின் சாயலை" "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை." (யோவான் 1: 18. 1 தீமோ. 6: 16. யாத்தி. 33: 20). ஆகையால் தேவதன்மையின் சுயமகிமையை மோசே காணவில்லை. அல்லது எசேக்கியேலைப்போல் வெறும் பாவனையாகமட்டும் காணவுமில்லை. எசே. 1: 26. தானி. 7: 9. அல்லது தேவனுக்குத் தானுபதியாய் வந்த ஒரு தூதனைக் காணவுமில்லை. ஆனால் தேவன் தாமே மனுஷ கண்ணுக்குத் தெரியத்தக்கதாய் தம்மைக் காட்டினார். இப்படியெல்லாமிருக்க மிரியாம் தேவனாலே ஏற்படுத்தப்பட்டு கனம்பெற்றவனுக்கு விரோதமாகமட்டுமென்றல்ல, தேவனுடைய நடாத்தன ஏற்பாட்டுக்கு விரோதம்பண்ணினதற்காகவும் இவ்வளவு பயங்கரமாய்த் தண்டிக்கப்பட்டாள்.

12. "செத்து" குஷ்டரோகிகள் உயிர்ப்பிரேதங்களைதான். இவர்கள் தேகத்திலுள்ள ஊற்றுச்சால்களெல்லாம் நஞ்சாய்ப்போம். தேகநீரெல்லாம் கெட்டு சுரக்கும். தேகமெல்லாம் படிப்படியாய் அழுகி அழியும். அவயவங்கள் ஒன்றின்பின்னொன்றாய் தேய்ந்தழிந்து விழுந்துபோம்.

14. அவளுடைய உலகத்தகப்பன் அவளை நிந்தையாய் நடத்தினால் (உபா. 25: 9) அவள் தன்னைக் கொஞ்சக்காலம் சிறுமைப்பட்டவளாக எண்ணுவாளே. தேவன் அவளைச் சிறுமைப்படுத்தியிருக்கும்போது அவள் எவ்வளவு அதிகமாய்த் தாழ்மைப்படவேண்டும் என்றர்த்தம்.

"ஏழுநாள்" லேவி. 13: 4, 5.

16. 10, 12. வியாக்கியானம் காண்க.

படிப்பினை.

தேவனாலே விசேஷித்த கனம் பெற்றவர்களுக்கு அன்புக்குரித்தான மனுஷராலும் நிந்தாக்ஷணைவரும் என்று எதிர் பார்த்திருக்கவேண்டும்.—சகோதரருக்குள்ளும் விசுவாசிகளுக்குள்ளும் சண்டையெழுப்புவது பெருமை, பொருளாசை, விரோதம், தன்னயம் இவைகள் மட்டுமென்றல்ல, சாத்தான் என்றும் நினைக்கவேணும்.—மோசேயை தூஷித்ததற்கு இப்பாடானால், தேவகுமாரனைத் தூஷிக்கிறவன் எப்பாடு படுவானோ!

A Farewell Address.

சென்னபட்டணம் கனம்: V. சிமியோன் ஐயர் அனுப்பிய ஓர் பயனுபசார பத்திரம்.

சென்னபட்டணத்தில் வெகுகாலமாய் வாசஞ்செய்த Dr. S. ஏசுதாசபிள்ளையவர்கள் உத்தியோகவிஷயமாய் மாற்றப்பட்டு திருநெல்

வேலி ஜில்லாவுக்குப் புறப்பட ஆயத்தமாயிருந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்குச் சர்ச்சுமிஷியோன் பிளாக்டவுண் ஆலயத்தில் சபையார் வழக்கப்பிரகாரம் ஆராதனைக்கு கூடிவந்திருந்தார்கள். ஜெபஆராதனை வாசித்தபின் கனம்: வி. சிமியோன் ஐயரால் யாத்திராகமம் 33: 16. வாக்கியத்தின்பேரில் சுருக்கமாயும், தெளிவாயும், பிரசங்கித்து ஆசீர்வாதஞ்சொல்லி முடித்தபின் எல்லாரும் அமரிக்கையாய் அவரவரிடத்திலிருக்க ஷெ சபை சர்ச்சு கமிற்றியின் காரியதரிசியாகிய Mr. ஜான் ஞானப்பிரகாசம் உபாத்தியாயர் ஓர்வந்தன பத்திரம் வாசித்தார். அதுபின் வருமாறு—.

சென்னபட்டணம் சர்ச்சுமிஷியோனைச் சேர்ந்த பிளாக்டவுண்
சுதேச சபையார் மேற்படி சபையைச் சேர்ந்த
முகாமை Dr. S. ஏசுதாசபிள்ளையவர்களுக்கு
எழுதிக்கொடுத்த பயணோபசார வந்தன பத்திரம்:—

சங்கைபொருந்திய ஐயாவே,

தங்கள் முன்னோர காலமுதல் கிறிஸ்துமார்க்கத்தை யனுசரித்து இந்தப் பட்டணத்தில் அநேக கோவில்களிருந்தாலும் பிளாக்டவுண் சர்ச்சுமிஷியோன் ஆலயத்தையே தெரிந்துகொண்டு அன்னாள்முதல் இதுவரை இதைத் தங்கள் பூர்வீக கோவிலாக பாவித்து நடந்துகொண்டு வந்திருக்கிறீர்கள். இங்கிலீஷ் சபைக்குத் தர்ம கர்த்தாக்களிருந்து சகல காரியங்களையும் ஒழுங்காயும் கவலையாயும் நடத்தி வருவதுபோல, இந்தத் தமிழ்ச் சபைக்குத் தாங்களே முகாமையாயிருந்து அதற்கடுத்த சகல விஷயங்களுக்கும் சமயோசிதமான நல்லாலோசனை சொல்லி ஒழுங்குப்படுத்தி வந்திருக்கிறீர்கள். இந்த ஆலயத்திற்குத் தாங்களும் தங்கள் வீட்டாரும் ஓய்வுநாட்கள்தோறும் கிரமமாய் வந்துபோயிருந்தது எங்களுக்கும் புறச்சபையாருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்துக்கொண்டேயிருந்தது.

இலேசாய் மறக்கக்கூடாத இன்னொரு சங்கதியை இச்சமையத்தில் சொல்லாமல் விடுவது சரியல்ல. அதாவது தங்கள் குமாரராகிய தேவசகாயம் பிள்ளை சிறு பிராயமுதல் தங்கள் சொந்தச் செலவால் கின்னரம் வாசிக்கப் பழகும்படி செய்த முயற்சிகளும், அதின் பயனாகச் சென்ற சில வருஷங்களில் இந்த ஆலயத்தில் தேவ நாமத்துக்கு மகிமையாகவும், ஆராதனைக்குச் சிறப்பாகவும், சபையாருக்கு எழுப்புதலாகவும், சம்பளமின்றி இதுவரை கின்னரம் வாசித்து வந்ததும், யாவருக்கும் உச்சாகத்தையுஞ் சந்தோஷத்தையுங் கொடுத்திருக்கிறது. தற்காலத்தில் அந்தச் சலாக்கியங் குறைபடுவதினாலுண்டாகும் எங்கள் மனவருத்தம் இவ்வளவென்றல்ல.

மேலும், தாங்கள் பொதுவாக இந்தப் பட்டணத்திலுள்ள சுதேசக் கிறிஸ்தோர்களுக்குச் சிரேஷ்டர்களாயிருந்து, எவ்வகை மதஸ்தராலும் கண்யமாய் எண்ணப்பட்டு வந்தது எங்களுக்கு மிகவும் மேன்மையாயிருந்தது. கோவிலுக்கடுத்த செலவு விஷயத்திலும், ஏழைகளுடைய பராமரிப்புக்கடுத்த விஷயங்களிலும், பின்னும் பொதுவான தர்ம விஷயங்களிலும் தாங்கள் செய்துவந்த உதவி ஒத்தாசைகள் எளிதில் மறக்கத்தக்கவைகளல்ல. தாங்கள் எப்போதும் இந்த இடத்திலிருப்பீர்களென்றும், இன்னம் இந்த ஆலயத்துக்குச் சிறப்பாக அனேக காரியங்கள் தங்களால் நடக்குமென்றும் எண்ணியிருந்த சமையத்தில் தங்களின் உத்தியோக மாறுதலினால் சற்றுக் காலம் இதர ஜில்லாவில் வாசஞ் செய்யும்படி நேரிட்டது தேவ சித்தமென்று உணருகிறோம். இது எங்களுக்குத் தற்சமையத்திற்குச் சற்று விசனமாய்க் காணப்பட்டாலும், இதினால் எங்களுக்குந் தங்கள் வீட்டாருக்கும் தேவன் மன ஆறுதலையுஞ் சரீர சவுக்கியத்தையும் அதிகமாய்க் கொடுப்பாரென்று நம்பி ஆறுதலடைகிறோம்.

இப்போதுந் தாங்கள் சரீரப்பிரகாரம் உத்தேசம் நானூறு மைல் தூரத்தில் வாசம்பண்ணும்படி நேரிட்டிருந்தாலும், ஆவியின் பிரகாரம் தங்கள் சிந்தையும் விருப்பமும் இந்தக் கோவிலின் பேரிலும் சபையின் பேரிலும் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

திரியேக தேவன் தங்களோடும் அம்மாளோடும் அருமையான பிள்ளைகளோடும் பிரயாணத்தில் கூடவேயிருந்து, குறிக்கப்பட்ட இடத்தில் கொண்டுபோய்ச்சேர்த்து, தங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தைச் சந்தோஷத்தோடும் மன ஆறுதலோடுஞ் செய்துவரவும், அவ்விடத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு நன்மையுண்டாகப் பிரயாசப்படவும், சுவிசேஷ பிரபல்லியத்துக்குத் தாங்கள் ஒரு பலத்த கருவியாயிருக்கவும் கிருபை செய்யும்படி அவரை நோக்கிப் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்குத் தங்களின் சுகத்தையும் நன்மையையும்
விரும்புகிற பிளாக்டவுன் C. M. S. சுதேச சபையார்.

மேற்காட்டிய பத்திரம் வாசித்து முடிந்த பின் Dr. S. ஏசுதாசபிள்ளை சபையாரைப்பார்த்துச் சொன்ன உபசார மொழியாவது;—

எனது மிகவும் பிரியமும் பட்சமுமுள்ள சபையார்களே,

நீங்கள் எனக்கு எழுதிக் கொடுத்த பயணோபசார பத்திரத்திற்காக மிகவும நன்றியறிதலுள்ளவனாயிருக்கிறேன். உத்தியோக விஷயமாய் நான் இந்த ஆலயத்தை விட்டு சிறிது காலம் வேறே இடத்திற்குப் போக நேரிட்டிருக்கிறது உங்கள் பத்திரத்தில் கண்டிருக்கிறபடி தேவசித்தமென்றே உணருகிறேன். இந்த ஆலயத்தில் நீங்களும் நானும் பெற்றிருக்கிற நன்மைகள் கொஞ்சமல்ல. அதற்காக நாம் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் என்னோடுகூட இருந்து என்னுடைய வேலைகளையும் செய்கைகளையும் ஆசீர்வதிக்கும்படி எனக்காகச் செபம்பண்ணும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆலயத்தையும் உங்களையும் விட்டு இப்போது வேறு இடத்திற்குப்போக நேரிட்டிருப்பதாலுண்டாகிய மனக் கவலையினாலே நான் இந்த சமையத்தில் அதிகமாய்ப் பேசக் கூடாததற்காக மிகவும் விசனப்படுகிறேன். தயவுசெய்து மன்னித்துக்கொள்ளுங்கள் என்பதே.

24th February 1878.
Black Town.

சமாசாரத்திரட்டு.

ஐரோப்பா.—ருஷியாவுக்கும் துர்க்கிக்கும் சமாதானமுண்டாக்கத்தக்க சங்கேதங்களைப்பற்றிய வாதானுவாதங்கள் ஓர் பக்கத்திலும் சண்டை மறுபடியும் ஆரம்பிக்குமென்று அச்சமுண்டாக்கத்தக்க குறிப்புகள் மற்றோர்பக்கத்திலும் இருந்துவந்தாலும், பெர்லின்நகரத்தில் ஸ்தாருபத்திய சங்கங்கூடித் தீர்மானிக்கவேண்டுமென்ற கோரிக்கைக்கு எல்லாரும் உடன்பட்டதினால் குறித்த இடத்தில் அந்தச்சங்கம் கூடியிருக்கிறது. ஐரோப்பாவின் பிரதான ராஜாங்கத்தார் அனைவரும் தத்தம் பிரதிநிதிகளை அந்த சங்கத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஜர்மானிய மந்திரியாகிய பிஸ்மார்க் ராஜபிரபு அச்சங்கத்தின் சபாநாயகராயிருக்கிறார். பெக்கன்ஸ்பீல்ட் பிரபுவும் ஸலிஸ்புரிபிரபுவும் இங்கிலாந்தின் முக்கிய பிரதிநிதிகளாம். ருஷியாவுக்கும் துர்க்கிக்கும் இடையில் உண்டுபட்ட சமாதானஉடன்படிக்கை முழுவதும் மேற்குறித்த சங்கத்தில் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படவேணுமென்கிற விஷயத்தின்பேரில் ருஷியாவுக்கும் இங்கிலாந்துக்குமிருந்த தகறுர்கள் நீங்கி, அச்சமாதான உடன்படிக்கையில் மாற்றவும் தள்ளவும் அங்கீகரிக்கவும் வேண்டியதான விஷயங்களைக் குறித்த சங்கேதங்களை ருஷியரும் இங்கிலாந்தரும் ஏற்கனவேசெய்துகொண்டார்கள். ஆகையால், சங்கத்தின் அவயவங்களாயிருக்கிறவர்கள் தங் கருமத்தை எளிதில் நிறைவேற்றக்கூடியதாயிருப்பதுந்தவிர, எவ்விதமும் சமாதானமான முடிவு உண்டாகுமென்று நம்பவுங் கூடியதாயிருககிறது. ருஷிய தளபதியாகிய ஜெனரல் டாட்லிபின் என்பவர் தம்சேனைகளை கொன்ஸ்தந்திநோபுரியை விட்டுப் பெயரும்படி செய்தார்.

இங்கிலாந்து.—மந்திரிகள் சபையில் 50 வருஷத்துக்கதிகமாய் உத்தியோகம் நிறைவேற்றி கீர்த்திப்பிரதாபம் அடைந்தவராகிய ரஸல் ஏரல்பிரபு சிறிது நாளுக்குமுன் தேகவியோகமானார். லாம்பெத் மாளிகையில் ஜூலை௴ 3௳யில் அத்தியட்சகுருக்களின் மகா சங்கம் கூடினது. பாம்பே, சென்னை, கொழும்பு அத்தியட்சர்கள் உள்பட அக்கூட்டத்தில் வந்திருந்த அத்தியட்சர்களின் தொகை நூறு.

ஜர்மானியா.—சக்கரவர்த்தியை மறுபடியும் ஒருவன் துப்பாக்கியினால் சுட்டதினால் அவர் நெற்றியிலும் கழுத்திலும் கடுங்காயங்கள் உண்டுபட்டது. பிராணுபாயமில்லை. ராஜரீகத்தை விரோதிக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களால் இவ்வித சர்ப்பனைகள் நடக்கிறதாக உத்தேசம்.

பிரான்ஸ்.—பிரான்சிலுள்ள பரீஸ் நகரத்தில் பலபொருட்காட்சி வேடிக்கையுற்சவம் தொடங்கியிருக்கிறது. நானு தேசத்தாரும் தத்தம்விளைவாதிகளின் மாதிரிப்பொருட்களை அங்கு அனுப்பியிருக்கிறதினால் அவ்வுசற்வம் விசேஷமானதாயிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் நிதசரி அவ்வேடிக்கையைப் போய்ப் பார்த்துவருகிறார்கள்.

இந்தியா.—இத்தேசத்தில் உண்டாகும் பஞ்சத்தின் காரணங்களையும் அவற்றைப் பரிகரிக்கும் ஏதுக்களையும் விசாரித்துத் தெளியும்பொருட்டு ஒரு கமிற்றிசபை ஏற்படுத்தப்பட்டது.

நோட்டீஸ்.

1878௵ ஜூலாய்௴ 11௳ வியாழக்கிழமையன்று C. M. S. திருநெல்வேலி உபதேசிமார் கைபெண் விசாரணைச் சங்கம் கூடும்.

1878௵ ஜூலை௴ 12௳ வெள்ளிக்கிழமையன்று மகாகனம் சென்னை அத்தியக்ஷர் வேதாகம பந்தையப் பரீட்சை நடக்கும்.

மகாகனம் சென்னை அத்தியக்ஷராவர்கள் வேதாகமப் பந்தயப் பரீட்சை.

1879௵-த்துப் பாடங்கள்.

கிரேக் புதியஏற்பாடு.

பரிசுத்த மத்தேயு.

தமிழ்ப்பாடங்கள்.

1. எஸ்ரு, நெகேமியா, எஸ்தர்.
2. பரிசுத்த மத்தேயு.
3. ஏசாயா. 52, 53, 54, 55-ம் அதிகாரங்கள். மனப்பாடம்.

E. Sargent, D. D, Bishop.

ஜூலைமீ நாள் 31. ஆனிமீ 19உ முதல், ஆடிமீ 17உவரை

வாரம்	இங்கிலீஷ் தேதி	தமிழ்த் தேதி	அன்றுடகத் தியானம்.
தி	1	௧௯	சத்தியத்தையறிகிற அறிவை அடையுங்கள். 1 தீமோ. 2: 4.
செ	2	௨௦	தேவனுக்கேற்கும் பலி நொறுங்குண்ட ஆவி. சங். 51: 17.
பு	3	௨௧	உமது வார்த்தை புடமிடப்பட்டது. சங். 119: 140.
வி	4	௨௨	என் கட்டளைகளைக் காத்துக்கொள். நீதி. 7: 2.
வெ	5	௨௩	அவர்களை மரணத்துக்கு விடுவிப்பேன். ஓசி. 13: 14.
ச	6	௨௪	இயேசு கிறிஸ்துவின் கிருபையில் வளருங்கள். 2 பேதுரு. 3: 18.
ஞா	7	௨௫	அவர் பாதபடியிலே பணியுங்கள். சங். 99: 5.
தி	8	௨௬	தேவையானது ஒன்றே. லூக்கா. 10: 42.
செ	9	௨௭	கர்த்தர் என்னை இரட்சிப்பார். சங். 55: 16.
பு	10	௨௮	எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும். சங். 90: 14.
வி	11	௨௯	பாவத்தின் சம்பளம் மரணம். ரோமர். 6: 23.
வெ	12	௩௦	பிறனிடத்தில் அன்புகூர்வாயாக. மத். 22: 39.
ச	13	௩௧	இது நீங்கள் இளைப்பாறும் இடம் அல்ல. மீகா. 2: 10.
ஞா	14	௩௨	உமது சனத்தைத் தப்பவிடும். யோவேல். 2: 17.
தி	15	௧	நீ மரணபரியந்தம் உண்மையாயிரு. வெளி. 2: 10
செ	16	௨	தேவபக்தியே மிகுந்த ஆதாயம். 1 தீமோ. 6: 6.
பு	17	௩	பரலோகராச்சியம் சமீபமாயிருக்கிறது. மத். 4: 17.
வி	18	௪	சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. எபி. 13: 1.
வெ	19	௫	தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. ரோமர். 2: 11.
ச	20	௬	உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. யோவான். 14: 1.
ஞா	21	௭	ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள். எரே. 17: 22.
தி	22	௮	இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். மத். 5: 7.
செ	23	௯	எல்லாரும் பாவஞ்செய்தோம். ரோமர். 3: 23.
பு	24	௧௦	நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப்பாருங்கள். 1 கொரி. 1: 26.
வி	25	௧௧	கிறிஸ்து நமக்காக மரித்தார். ரோமர். 5: 8.
வெ	26	௧௨	நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். 1 கொரி. 3: 23.
ச	27	௧௩	கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். எபே. 2: 5.
ஞா	28	௧௪	அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள். சங். 135: 3.
தி	29	௧௫	புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். 1 கொரி. 5: 7.
செ	30	௧௬	கொடுமையை நம்பாதிருங்கள். சங். 62: 10.
பு	31	௧௭	விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். கலாத். 3: 11.

விசேஷ நாட்கள்.

7. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், மூன்றாம் ஞாயிறு.
14. பௌரணமி.
14. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், நான்காம் ஞாயிறு.
21. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.
25. பரி. அப். யாக்கோபின் திருநாள்.
29. அமாவாசை.
28. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், ஆறாம் ஞாயிறு.

நற்போதகம்.

4. ஆகஸ்துமீ. ௲அ௱எ௰௩.

எஸ்றாவின் புஸ்தகம்

முகவுரை.

IV. இது எழுதப்பட்ட காலம்.

எஸ்றா அந்நிய விவாகத்தை விலக்கி ஒழுங்குப்படுத்தினபின் இதை எழுதினானென்று தோன்றும். அதாவது கி. மு. 457 அல்லது 456ஆம் வருஷம் எழுதப்பட்டது. எப்படியும் அர்தசஷ்டாவின் 20-ம் வருஷம் (அதாவது கி. மு. 445ஆம் வருஷம்)ல் நெகேமியா சூசானிலிருந்து எருசலேமுக்கு வருமுன்னதாக இது எழுதப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றால் நெகேமியா எருசலேமுக்கு வந்தது மகா முக்கியமான சங்கதியானதினாலே, பிந்தி எழுதப்பட்டால் இது எவ்விதமும் காட்டப்பட்டிருக்கும். எஸ்றா தற்காலத்துக்கென்றுமட்டும் பார்சியா இராசனாலே அதிகாரம்பெற்று வந்தபடியினாலே, அந்நிய விவாகத்தை ஒழுங்குப்படுத்தின உடனே பார்சிய அரமனைக்குத் திரும்பியிருக்கவேண்டும். இப்படித்திரும்பினதற்குச் சற்று முன்னாவது பின்னாவது இந்தப் புஸ்தகத்தை எழுதினானென்று பெரும்பாலும் சொல்லப்படும். இதினாலேதான் அந்நிய விவாகத்தைப்பற்றிச் சொன்னபின் புஸ்தகத்தைத் திடீரென்று முடித்துவிடுகிறார். அந்நிய விவாகத்தைச் சீர்ப்படுத்தின சங்கதியே அவர் கடைசியாய்ச் செய்த வேலையாயிருந்தால்தான் புஸ்தகத்தைத் திடீரென முடித்துவிடுவது இயல்பாயிருக்கிறது. ஆகையால் இது கி. மு 457, பிந்தினால் 456ல், எழுதப்பட்டதென்று சொல்லவேண்டும்.

V. புஸ்தகத்தின் விசேஷ லட்சணம்.

இந்தப் புஸ்தகம் அலெக்சந்தரியாக்கனோனிலும் எபிரேயுக்கனோனிலும் தானியேலுக்கு முன்னாகவும், நெகேமியாவுக்கும் நாளாகமங்களுக்கும் பின்னாகவும் வருகிறது. செப்துயஜின்ட் திருப்புதலில் இப்பொழுதிருக்கிறபடியே நாளாகமத்துக்கும் நெகேமியாவுக்கும் இடையில் வருகிறது. இப்படியாக எஸ்றாவுக்கு முன்னும் பின்னுமுள்ள புஸ்தகங்களைப்போலவே இதுவும் சரித்திரப் போக்கானதாயிருக்கிறது. பெரும்பாலும் இது நாளாகமத்துக்கு ஒத்திருக்கிறது. நாளாகமத்தைப் போலவே இதுவும் முக்கியமாய் மார்க்க ஆசாரங்களைக்குறித்தும், தேவாலயம் மறுபடி கட்டப்பட்டதைக் குறித்தும், அதில் தேவாராதனையைப் புதிப்பித்ததைக்குறித்தும், ஆசாரியனையும் லேவியனையும் அந்த வேலைக்கு மறுபடி ஏற்படுத்தினதைக்குறித்தும் (6: 18), பண்டிகை ஆசரிப்பைக்குறித்தும், (3: 4. 6: 19, 22), பரிசுத்த பணிமுட்டுக்களை

மறுபடி ஸ்தாபித்ததைக்குறித்தும் அதிகமாய்ச் சொல்லுகிறது. மேலும் நாளாகமத்தைப்போலவே இதிலும், லேவியர் கொஞ்சப்பேராயிருந்தாலும் அவர்களை முக்கியப்படுத்தியும் (2: 40. 8: 15-19), அவர்களுக்கு விசேஷமான வேலைகளை ஏற்படுத்தியும் (3: 8. 6: 20), அவர்களை எப்போதும் ஆசாரியரோடும் சனங்களோடும் சேர்த்துப் பேசியுமிருக்கிறது. (1: 5. 2: 70. 3: 8, 10, 12. 6: 16, 18, 20. 8: 29, 30, 33. 9: 1. 10: 5). அல்லாமலும் நாளாகமத்தைப்போலவே இதுவும், வம்சவரிசையை அதிகமாய்ப்பிடித்துப் பேசுகிறது. இவர் எழுதுகிற சரித்திரத்தோடு சம்பந்தப்பட்ட ஆட்களை, அவர்கள் ஒரே சங்கதியில்மட்டும் சம்பந்தப்பட்டு இவர் எழுதுகிற பிந்திய சரித்திரத்தில் சம்பந்தப்படாவிட்டாலும், அப்படிப்பட்டவர்களையும் விடாமல் காட்டுகிறார். (1: 8. 2: 2-61. 3: 9. 4: 7, 8. 5: 3. 7: 1-5. 8: 2-14, 16, 18, 19 33. 10: 2, 15, 18-43). உலக காரியங்கள் தேவாதீனமாய் நடத்தப்படுகிற முறையைக்குறித்து நாளாகமத்தைப்போல அத்தனை தெளிவாயும் திட்டமாயும் எஸ்றாவில் சொல்லப்பட்டிராவிட்டாலும், தேவனுடைய விசேஷித்த பராமரிப்புக்கடுத்த பொதுவான ஏற்பாடுகளை மிகவும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. (8: 22). இந்தப்பொது விதிகளைச் சரித்திரத்தின் விசேஷித்த சங்கதிகளுக்கும் அடிக்கடி உபயோகித்திருக்கிறது. (5: 5. 7: 9, 28. 8: 23, 31. 9: 7, 9, 14. 10: 14). நாளாகமத்தைப்போல எஸ்றா அத்தனை மகிழ்ச்சியாய் எழுதுகிறதாய்த் தோன்றவில்லை. எஸ்றாவில் திரும்பிவந்த யூதருடைய தாறுமாறுகள் எஸ்றாவின் மனதுக்கு வெளியரங்கமாயிருந்தது. சிறைப்பட்டுப்போகுமுன்னிருந்த யூதர்களின் நிலைமையை, சிறையிலிருந்து திரும்பின யூதர்களின் நிலைமையோடு ஒத்துப்பார்த்ததில், திரும்பின யூதர்களின் நிலைமை குறைவும் கேவலமுமாயிருந்ததென்று எஸ்றாவின் மனதுக்கு பிரத்தியட்சமாயிருந்தது. இரண்டாம் தேவாலயத்துக்கு அஸ்திபாரம் போட்டபொழுது அதைக்கண்ட யூதருக்குள் சந்தோஷமும் துக்கமும் கலந்திருந்ததுபோல (3: 11-13), எஸ்றாவின் மனதிலும் சந்தோஷமும் துக்கமும் கலந்திருந்தது. சந்தோஷம், துக்கம் இதில் எது அவர் மனதில் அதிகமாயிருந்ததென்று சொல்லக்கூடவில்லை. மொத்தமாய்ச்சொன்னால், யூதருடைய பிற்கால நிலைமை செவ்வையாயிருக்குமென்று அவர் எண்ணினதாகத்தோன்றுகிறது. ஏனென்றால் அந்நிய விவாகத்தைக்குறித்து யூதர் துக்கப்பட்டு அதற்கு விலகிவிட்டார்கள். அந்நிய விவாகச் சங்கதிதான் எஸ்றாவின் மனதுக்குக் கவலையை உண்டாக்கியிருந்தது. என்றாலும் நாளாகமத்தின் நடையும் ஒருவாறு இதிலும் காட்டப்படுகிறது.

எஸ்றா நடையில், வேதத்திலுள்ள மற்றெல்லாப் புஸ்தகங்களைப் பார்க்கிலும் தானியேலுக்கு ஒத்தருக்கிறது. [மற்ற வேத புஸ்தகங்களென்று சொல்லும்போது நாளாகமம் தவிர என்று நினைத்துக்கொள்ளவும்]. தானியேலிலும் எரேமியாவிலும், எபிரேயுவோடு கல்தேயுப்பாஷை கலந்துவருவதுபோலவே, எஸறாவிலும் வருகிறது. பாஷை நடையும் தொடர்மொழியுமோ எரேமியாவிலுள்ளதைப்போலல்ல. தானியேலைப் போலுள்ளதாயிருக்கிறது. (எஸ்றா 1: 7. தானி. 1: 2 ஓடு). எஸ்றா 1: 2. 5. 11. தானி. 2: 18, 19 ஓடு). எஸ்றா 3: 2. தானி. 9:11 ஓடு). (எஸ்றா 6: 10. தானி. 2: 46). (எஸ்றா 6: 11. தானி. 2: 5. 3: 29). (எஸறா 9: 7. தானி. 9: 7, 8) ஓடு ஒத்துப்பார்க்க. இந்த வித்தியாசம் வந்ததற்கு முகாந்தரமாவது, எஸ்றாவும் தானியேலும் பாபிலோனிய யூதராயிருந்தார்கள்.

எரேமியாவோ பாபிலோனிலிருந்ததாகத் தோன்றாது. அவன் பாபிலோனுக்குப் போனாலும் போகாவிட்டாலும் தன் ஆகமத்தை பலஸ்தினாவிலிருந்து எழுதினான். எஸ்றா மேலான காரியங்களைச் சிறந்த வகையாயும் ஒரே போக்காயும் எழுதுகிறார். அவருடைய செபம்மட்டும் சாதுரியமாயிருக்கிறது. (9: 6-15). இந்தச்செபம், தானி. 9: 4-19 உள்ள செபத்தைப் போலதான். எஸ்றாவில் மிகுதியான பார்சு வார்த்தைகள் வழங்கப்படுகிறது. இப்படிப் பார்சு வார்த்தைகளை இவன் மட்டும் வழங்கியிருக்கலாம். அல்லது சிறையிருப்புக்குப்பிந்தி அடுத்தாற்போலிருந்த ஆசிரியரும் வழங்கியிருக்கலாம். மொத்தமாய்ச் சொன்னால், யூதர், பாபிலோனியரோடும் பார்சியரோடும் கலந்திருந்த காலத்தில் இப்படிப்பட்ட அந்நிய பாஷை வார்த்தைகள் கலந்து வருவது இயல்புதான்.

VI. மூலப்பிரதிகள்.

எஸ்றா எழுதின அசல்ப்பிரதிக்கு இப்போதிருக்கிற பிரதிகள் வித்தியாசமாயிருக்கிறது. எப்படியென்றால் பேர்களைப்பற்றியும் தொகைகளைப்பற்றியும் முக்கியமாய் அநேக பிசகுகளிருக்கிறது. ஒரு வார்த்தையை வழங்கவேண்டிய இடத்திலே வடிவத்திலும் உச்சரிப்பிலும் அதற்கினமான வேறொரு வார்த்தையைச் சாதாரணமாய் வழங்கியிருக்கிறது. சில இடத்தில் அர்த்தம் விளங்கும்படி இருக்கிற வார்த்தைகளுக்குப்பதிலாக வேறே வார்த்தையைப் பிரயோகிக்கவேண்டியதாயிருக்கிறது. இந்த அற்பசொற்ப வித்தியாசங்கள் பேர்களையும் லக்கங்களையும் பற்றினதாயிருப்பதால், புஸ்தகத்தின் சரித்திரத் தொடர்ச்சிக்கு யாதொரு விகற்பம் உண்டாகிறதில்லை.

VII. சரித்திர உண்மை.

எஸ்றாவின் சரித்திர உண்மை ஆட்சேபிக்கப்பட்டிருப்பதில்லை. ஏனென்றால் இயல்புக்கு விரோதமான அற்புத சங்கதி இதிலில்லை. யூதர் மறுபடி திரும்பும்படி உத்தரவு பெற்றுக்கொண்டதுமாத்திரம் அசம்பவமான சங்கதிபோல் தோன்றினாலும், அது சரித்திரத்தினால் திட்டமாய் ரூபிக்கப்பட்டிருப்பதினாலே யாராவது அதை ஆட்சேபிக்க இடமில்லை. இந்தப் புஸ்தகத்தை எஸ்றா எழுதினது நிசமென்றால், இதின் பின்பாகம் கண்கண்ட சாட்சியினால் எழுதப்பட்டிருப்பது பிரத்தியட்சமாம். முந்தின பாகத்தையும் பிழையற எழுதுகிறதற்கு எஸ்றா ஏற்றவனாயிருந்தானென்று தெளிவாய் விளங்குகிறது. யூத பார்சியருடைய ரிக்காடுகளைப் பார்க்கக்கூடிய ஸ்திதியிலிருந்தான். பாரம்பரையாய் இறங்கிவந்த சங்கதிகளையும் அறியக்கூடியவனாயிருந்தான். இந்தப் புஸ்தகத்தின் அக உதாரணமும் உண்மையுள்ளதென்று விளங்கும். பார்சு தேசத்து இராசாக்களுடைய நடபடிகளையும் குணாகுணங்களையும் குறித்து எஸ்றா சொல்லுகிறபடியே அஞ்ஞான சரித்திரக்காரரும் சொல்லுகிறார்கள். யூதர், சமாரியர் இவர்களுடைய நடத்தைகள் சரித்திர சம்பந்தத்துக்கு ஏற்றதாய்த்தானிருக்கிறது.

திருநெல்வேலி சர்க்கிள்.

1878—1879ஹு ல் ரிசல்ட்கிரான்றுக்காக
மிஷியோன் பள்ளிக்கூடங்களை சர்க்கார் இன்ஸ்பெக்றர்
சோதிக்கும் தேதியைக் காட்டிய அட்டவணை.

ஆ = ஆண்பள்ளிக்கூடம் (Boys schools.)
க = கலப்புப்பள்ளிக்கூடம் (Mixed schools.)
(ஜில்லா கெசட்டிலிருந்து எடுத்தெழுதியது.)

திருநெல்வேலித் தாலூகா.

பள்ளிக்கூடம்.		தேதி.		
கொங்கந்தான்பாறை. ...	க	24	7	78
நாஞ்சான்குளம். ...	ஆ	23	10	78
தச்சநல்லூர்.	ஆ	18	7	78
உக்கிரன்கோட்டை.	ஆ	21	10	78
அருகன்குளம்.	க	15	10	78
சுத்தமல்லி.	ஆ	17	10	78
கருங்காடு.	க	19	7	78
ஆனைக்குளம்.	க	25	7	78
மேலக்கல்லூர்.	ஆ	16	10	78
மணற்காடு.	க	15	7	78
தென்கலம்.	க	23	10	78
கண்டித்தான்குளம்.	க	23	7	78
பார்வதியாபுரம்.	ஆ	22	10	78

பிள்ளையார்குளம். ...	க	22	10	78
வெள்ளாளன்குளம். ...	க	19	10	78
மடத்துப்பட்டி. ...	ஆ	6	3	79
கட்டாரன்குளம். ...	ஆ	5	3	79
ஓமநல்லூர். ...	ஆ	22	7	78
வெண்கலப்பொட்டல். ...	ஆ	23	10	78
பூக்குளி. ...	க	23	7	78
மேலக்குளம். ...	ஆ	15	7	78
வீரளப்பிரான்சேரி. ...	க	24	7	78
திடியூர். ...	க	23	7	78
மாவடி. ...	ஆ	23	10	78

தென்கரைத் தாலூகா.

நாசரேத் (போர்டிங்.) ...	ஆ	14	8	78
ஆறுமுகனேரி. ...	ஆ	7	1	79
ஆசீர்வாதபுரம். ...	க	9, 10	12	78
சாயர்புரம். ...	க	11	1	79
திருவை. A. V. S. ...		17	12	78
மெஞ்ஞானபுரம். ...	ஆ	19, 20, 21	ஆகஸ்து	78
வெள்ளாளன்விளை. ...	ஆ	6	1	79
கடாட்சபுரம். ...	ஆ	21	12	78
முத்துக்கிஷ்ணபுரம். ...	க	11, 12, 13	டிச.	78
குலசேகரம்பட்டணம். ... A. V. S.	ஆ	24	12	78
மெய்யூர். ...	க	21	12	78
ஆழ்வார்தோப்பு. ...	ஆ	4	1	79
மூக்குப்பீறி. ...	க	15 16	ஆகஸ்.	78
சந்தோஷபுரம். ...	க	9 10	டிச.	78
சாத்தான்குளம். ... R. C. &,	ஆ	11, 12, 13	டிச.	78
விசயராமபுரம். ...	க		ஷை	
பண்ணைவிளை. ...	ஆ	9 10		79
பெருங்குளம். ...			ஷை	
அமந்தவொண்ணக்குடி. ...	க	11, 12, 13	டிச.	78
சேதுங்கநல்லூர். ...	ஆ	27	7	78
பண்டாரவிளை. ...	ஆ	9, 10	ஜனு.	79
குமரன்விளை. ...	ஆ	14, 16	டிச.	78
சிவசுப்பிரமணியபுரம். ...	க	17	12	78
கண்டிபுரம். ...	க	14 16	டிச.	78

கண்காணியார்புரம்.	க	19, 20	டிச.	78
மணற்கரை.	ஆ	5	12	78
கிருபாபுரம்.	க	11, 12, 13	டிச.	78
தங்கநகரம்.	க	23	12	78
இடையர்காடு.	க	11	1	79
சற்குளம்.	ஆ	5	12	78
பனைக்குளம்.	க	9, 10	டிச.	78
உடையார்குளம்.	க	15, 16	ஆகஸ்	78
சத்தியநகரம்.	ஆ	11, 12. 13	டிச.	78
அகப்பைகுளம்.	க	15, 16	ஆகஸ்.	78
குமாரபுரம்.	க	11	1	79
முதலூர்.	ஆ	19, 20	டிச.	78
சிரீவைகுண்டம்.	ஆ	4	1	79
நெய்விளை.	க	22, 23	ஆகஸ்.	78
புதுக்குளம்.	க	11, 12, 13	டிச.	78
பரமன்குறிச்சி.	க	6	1	79
திருவழுதிநாடான்விளை.	ஆ	9	10 ஜனு.	79
செவலை,	க		ஷை	
மனரம்மியபுரம்.	க	11, 12, 13	டிச.	78
இலக்கறிவிளை.	க	17	12	78
திருப்புளியங்குடி.	க	4	1	79
அன்பினகரம்.	ஆ	21	12	78
சாந்தபுரம்.	ஆ	19, 20, 21	ஆகஸ்.	78
அடையல்.	க	19	20 டிச.	78
நேசபுரம்.	க	21	12	78
நெடுங்குளம்.	ஆ	9	10 டிச.	78
மீரான்குளம்.	க		மேற்படி.	
கலுங்குவிளை.	ஆ		மேற்படி.	
கிறிஸ்தியானகரம்.	ஆ	23	12	78
ஆரோக்கியபுரம்.	க	19, 20, 21	ஆகஸ்.	78
சுப்பிரமணியபுரம்.	க	11	1	79
புளியன்மனை.	க	15, 16	ஆகஸ்.	78
பழனியப்பபுரம்.	க	9, 10	டிச.	78
நட்டாத்தி.	க	9, 10	ஜனு.	79
புதூர்.	க	19, 20	டிச.	78
கிறிஸ்தியானகரம்வடக்கூர்.	ஆ	24	12	78
படுக்கைப்பற்று.	க	18	12	78
கட்டாரிமங்கலம்.	க	9	10 டிச.	78
பண்ணிமடல்.	க	24	8	78
முடித்தானந்தல்.	ஆ	9, 10	ஜனு.	79
நடுவக்குறிச்சி.	க	11	1	79
டக்கர்புரம்.	க	19, 20	டிச.	78
அடைக்கலபுரம்.	க	9, 10	ஜனு.	79
பூலிகுடியிருப்பு.	க	19, 20, 21	ஆகஸ்.	78
பாட்டக்கரை.	ஆ	22, 23	ஆகஸ்.	78
வல்லநாடு.	ஆ	11	7	78
மேலப்புதுக்குடி.	க	4	1	79
கொம்புக்காரன்பொட்டல்.	க	9	10 ஜனு.	79
தஞ்சநகரம்.	க	11, 12, 13	டிச.	78
பழங்குளம்.	ஆ	6, 7	ஷை	
சவுக்கியபுரம்.	க	14, 16	ஷை	
நாயீனூர்.	க	18	12	78
திருவரங்கநேரி.	ஆ	6, 7	டிச.	78
குளத்துக்குடி.	ஆ	24	8	78
கொங்கராயகுறிச்சி.	ஆ	5	12	78
கிழத்தருவை.	ஆ	17	12	78
தர்மநகரம்.	ஆ	18	12	78
பிரகாசபுரம்.	ஆ	22, 23	ஆகஸ்.	78
கட்டான்மடம்.	க	19, 20	டிச.	78
மாணிக்கபுரம்.	க	19 20, 21	ஆகஸ்.	78
அருளூர்.	க	9, 10	டிச.	78
கொட்டன்காடு.	க	23	12	78
எருசலேம்.	க	15, 16	ஆகஸ்.	78
பிள்ளைவிளை.	ஆ	19, 20, 21,	,,	,,
செபபுரம்.	க	11	1	79
தஞ்சபுரம்.	க	17	12	78
அதிசயபுரம்.	க	14, 16	டிச.	78
குலசேகரநத்தம்.	ஆ	4	1	79
காலன்குடி.	ஆ	23	12	78
அநுககிரகபுரம்.	ஆ	18	12	78
சுகநகரம்.	ஆ	,,	,,	,,
மங்களபுரம்.	க	9, 10	ஜனு.	79
கருங்கடல்.	க	9, 10	டிச.	78
நாலுமாவடி.	ஆ	22, 23	ஆகஸ்.	77
சோமலிங்கபுரம்.	க	21	12	78
லட்சுமிபுரம்.	ஆ	19, 20' 21	ஆகஸ்.	78

மணல்குண்டு.	க	12	8	78
ஒய்யாண்குடி.	க	15, 16	,,	,,
கிழபு க்குடி	க	7	1	79
சிறட்டூர்.	ஆ	11, 12, 13	டிச.	78
தாதன்குளம்.	க	27	7	78
மங்களபுரம்.	க	23	12	78
பிள்ளையார்புரம்.	க	19, 20	டிச.	78
பாவநாசபுரம்.	க	19, 20, 21	ஆகஸ்.	78
பனைவிளை.	ஆ	14, 16	டிச.	78
திருவரங்கப்பட்டி.	க	9	10	,,
ரட்சண்ணியபுரம்.	க	22, 23	ஆகஸ்.	78
கருவேலம்பாடு.	க	6, 7	டிச.	78
மணல்விளை.	க	9	10	,,
குப்பாபுரம்.	க	6	7	,,
செம்மறிக்குளம்.	ஆ	19, 20, 21	ஆகஸ்.	78
நல்லூர்.	க	14, 16	டிச.	78
ஆநந்தபுரம்.	ஆ	6	7	,,
வேதக்கொடைவிளை.	க	23	,,	,,
செக்கடிவிளை.	க	11, 12, 13	டிச.	78
களன்குடி.	ஆ	19, 20	மேற்படி	
சவுந்தரபுரம்.	க		ஷை	
அரியாமொழி.	க	6, 7	மேற்படி,	
கடையனோடை.	க	24	8	78
கள்ளம்பாறை.	ஆ	,,	,,	,,
கல்விளை.	ஆ	19, 20, 21	ஆகஸ்.	78
குறிப்பன்குளம்	க	6, 7	டிச.	78
பூச்சிக்காடு.	க	14, 16	,,	,,
தச்சன்விளை.	க		ஷை	
தொட்டியன்குடி.	க	24	8	78
மேலத்தருவை.	க	17	12	78
வெள்ளமடம்.	க	15, 16	ஆகஸ்.	78
கீழநாலுமாவடி.	ஆ	22, 23	,,	,,
புதுஅரங்கன்விளை.	க	6	1	79
தெற்குத்தருவை.	க	17	12	78
சொக்கலிங்கபுரம்.	ஆ	11, 12, 13	டிச.	78
கால்வாய்.	க	9, 10	,,	,,
இராஜபதி.	க	22, 23	ஆகஸ்.	78

ஒட்டப்பிடாரந்தாலூகா.

புதியம்புத்தூர். (டே& போர்டிங்.)...	ஆ	11	9	78
பண்ணிகுளம். டே & (போர்டிங்.) ...	ஆ	28, 29	அக்ட்.	78
புதுக்கோட்டை.	க	13	1	79
வேப்பலோடை.	க	14	9	78
கழுகுமலை.	க	10	3	79
மருதன்வாழ்வு.	ஆ	25	11	78
மேலசெயித்தலை.	க	13	9	78
தளவாய்புரம். C. M. S.	க	31	8	78
முடுக்கலான்.	ஆ	20, 21	செப்.	78
தொட்டம்பட்டி.	க		ஷை	
தெற்குமைலோடை.	ஆ	26	10	78
கைலாசபுரம்.	ஆ	31	8	78
ஐரவன்பட்டி.	க	28, 29	அக்ட்.	78
கோவிந்தபுரம்.		25	11	78
தளவாய்புரம். S. P. G.	க	13	9	78
சிந்தலக்கட்டை.	க	,,	,,	,,
ராமநாதபுரம்.	க	10	3	79
கொலையன்கரிசல்.	க	13	1	79
வடக்குசக்கம்மாள்புரம்.	க	13	9	78
கல்லத்திக்கிணறு.	ஆ	26	11	78
சங்கரலிங்கபுரம்.	ஆ	10	3	79
கடலை.	க	23	9	78
வேப்பன்குளம்.	க	26	10	78
மாத்தாண்டம்பட்டி....	க	16	9	78
துரையூர்.	ஆ	20, 21	செப்.	78
கசவன்குண்டு.	ஆ		ஷை	
கரிசல்க்குளம்.	ஆ	29	11	78
மண்டிகுளம்.	க	16	9	78
சேர்வைகாரமடம்.	க	18	1	79
நாரைக்கிணறு.	க	25	11	78
சிவஞார்.	க	29	11	78
வடஇலந்தைக்குளம்....	ஆ	25	10	78
வாலம்பட்டி,	ஆ	20, 21	செப்.	78
சிட்டவநாயக்கர்பட்டி.	க	16	9	78
ஆலம்பட்டி	க	23	9	78
சிங்கம்பட்டி.	க		,,	

சாத்தூர்த் தாலூகா.

சாட்சியாபுரம். போர்டிங்		...	ஆ	30	9	78
பாலகர்.	...	...				
முதலிபட்டி	...	...	ஆ	27	,,	,,
தம்மநாய்க்கன்பட்டி.	...	...	ஆ		மேற்படி.	
கஞ்சம்பட்டி.	...	...	ஆ	24	,,	,,
பனையடிப்பட்டி.	...	...	ஆ	12	3	79
இருக்கன்குடி.	...	...	க	25	9	78
ஊமத்தேவன்பட்டி.	...	...	க	24	,,	,,
ஏழாயிரம்பண்ணை.	...	...	க	12	3	79
ரொட்டியாபட்டி.	...	...	க	25	3	79
விருதுபட்டி.	...	...	க		,,	
கொல்லபட்டி.	...	...	க	27	6	78
தெற்கு மேற்கு கிழ் ஏழாயிரம்பண்ணை.			ஆ	29	6	78
கமஸ்கரித்தான்பட்டி	...	...	ஆ	30	9	78
சாத்தூர்.	...	...	ஆ	27	6	78
உப்பாத்தூர்.	...	...	ஆ	24	9	78
வாலம்பட்டி.	...	...	ஆ	29	6	78
சிவகாசி.	...	...	க	30	9	78
நல்லன்செட்டிப்பட்டி	...	...	க	23	9	78
இலுப்பையூரணி.	...	...	ஆ	21	9	78
கட்டனொட்டிபட்டி.	...	...	ஆ	27	9	78
அச்சன்குளம்,	...	...	ஆ	29	6	78
மேட்டுப்பட்டி	...	...	ஆ		,,	
ஒத்தையால்,	...	...	ஆ		,,	
நல்லமுத்தன்பட்டி.	...	...	ஆ	24	9	78

சிரிவில்லிப்புத்தூர்த் தாலூகா.

புத்தூர்	...	...	க	15	3	79
சிரிவிலிப்புத்தூர் சந்தைப்பேட்டை.	...	...	க	19, 20	மார்.	79
வன்னியம்பட்டி.	...	...	ஆ		ஷை	
ஆத்திகுளம்.	...	...	க		ஷை	
அவுட்டன்புரம்,	...	...	க		ஷை	
ராஜபாளையம்.	...	...	க	17	,,	,,
மாதாங்கோவில்பட்டி	...	...	ஆ	14	,,	,,

திருநெல்வேலித் தாலூகா.

பெண்பள்ளிக்கூடங்கள்.

கொக்கரகுளம்.	...	...	4	7	78
உக்கிரன்கோட்டை.	...	...	21	10	78
வண்ணார்பேட்டை.	...	...	17	7	78
மூனைனீர்ப்பள்ளம்.	...	...	7	9	78
தச்சநல்லூர்.	...	...	1	3	79
பேட்டை.	...	...	18	10	78
பார்வதியாபுரம்.	...	...	22	10	78
நாஞ்சான்குளம்.	...	...	23	,,	,,
சுத்தமல்லி.	...	...	17	,,	,,
வீரராகவபுரம்.	...	...	1	3	79

தென்கரைத் தாலூகா.

மெஞ்ஞானபுரம் போர்டிங்.	&.	டே.	19, 20, 21	ஆகஸ்.	78
நாசரேத்	...	...	14	,,	,,
முதலூர்.	...	...	19 20,	டிச.	78
வெள்ளாளன்விளை.	...	...	6	1	79
பண்ணைவிளை போர்டிங்.		...	9, 10	ஜனு.	79
கடாட்சபுரம்.	...	...	21	12	78
சிறப்பூர்.	...	...	11, 12, 13	டிச,	78
அன்பினகரம்.	...	...	21	12	78
பழங்குளம்.	...	...	6, 7	டிச.	78
சத்தியநகரம்.	...	...	11, 12, 13	டிச.	78
நல்லம்மாள்புரம்.	...	...	14, 16	டிச.	78
பூவரசூர்.	...	...	7	1	79
சாத்தன்குளம்.	...	...	11, 12 13	டிச.	78
கிறிஸ்தியானகரம்.	...	...	23	12	78
நெடுங்குளம்.	...	...	9, 10	டிச.	78
கண்ணாண்டிவிளை.	...	...	9, 10	ஜனு.	79
பண்டாரவிளை.	...	...		ஷை	
திருவரங்கனேரி.	...	...	6, 7	டிச.	78
செவலை.	...	...	9, 10	ஜனு.	79
சின்னநட்டாத்தி.	...	...		ஷை	
பிரகாசபுரம்.	...	...	22, 23	ஆகஸ்.	78
ஆறுமுகநேரி.	...	...	7	1	79
ஆனந்தபுரம்.	...	...	6, 7	டிச.	78
சாந்தபுரம்.	...	...	19, 20, 21	ஆகஸ்.	78

பெருங்குளம்.	9, 10	ஜனு.	79
பெருமாள்விளை		ஷை	
அனுக்கிரகபுரம்.	18	டிச.	78
லட்சுமிபுரம்.	19, 20, 21	ஆகஸ்.	78
தர்மநகரம்.	18	12	78
குலசேகரம்பட்டணம்.	21	12	78
சமாதானபுரம்.	9, 10	ஜனு.	79
சொக்கலிங்கபுரம்.	11, 12, 13	டிச.	78
சுகநகரம்.	18	12	78
கலுங்குவிளை.	9, 10	டிச.	78
பாவநாசபுரம்.	19, 20, 21	ஆகஸ்.	78
பிள்ளைவிளை.		ஷை	
பாட்டக்கரை.	22, 23	ஆகஸ்.	78
பனைவிளை.	14, 16	டிச.	78
கல்விளை.	19, 20, 21	ஆகஸ்.	78
முடித்தானந்தல்.	9, 10	ஜனு.	79
ஏறல்.	9, 10	டிச.	78
மணற்கரை.	5	12	78
களன்குடி.	23	12	78
மேலகீழ ஆழ்வார்தோப்பு.	4	1	79
சகாயபுரம்.	6	1	79
நாலுமாவடி.	22, 23	ஆகஸ்.	78
ஆகாளிகுளம்.	9, 10	டிச.	78
கீழநாலுமாவடி.	22, 23	ஆகஸ்.	78

ஓட்டப்பிடாரம் தாலுகா.

புதியபுத்தூர்.	11	9	78
கைலாசபுரம்.	31	8	78
தெற்குமைலோடை.	23	10	78
துரையூர்.	20, 21	செப்.	78
கல்லத்திக்கிணறு.	26	11	78
அகிலாண்டபுரம்.	28, 29	அக்ட.	78
மருதன்வாழ்வு.	25	11	78
கசவன்குண்டு.	20, 21	செப்.	78
சிவகிரி.	6	11	78
தடியாபுரம்.	17	10	78
புளியங்குடி.	7, 8	நவ.	78
வாகைக்குளம்.	19	10	78
குறுணிகுளம்.		ஷை	

சாத்தூர்த்தாலுகா.

சாட்சியாபுரம்.	30	9	78

ஸ்ரீவில்லிப்புத்தூர்த்தாலுகா.

ஸ்ரீவில்லிப்புத்தூர்.	19, 20	மார்ச்.	79

சேர்மாதேவிசர்க்கிள்.

தென்காசித்தாலுகா.

தென்காசி.		ஆ	21, 22	ஜூன்.	78
வாகைக்குளம்.		க	16	அகட்.	78
குருக்கள்பட்டி.		க	18	ஷை	
சின்னத்தம்பியூர்.	சேர்ந்தமங்கலத்தில்	க	9	நவம்பர்	78
சொக்கம்பட்டி.	சோதனை.	க	11, 12		,,
மறுக்காலன்குளம்.		ஆ	18	,,	,,
கிஷ்ணப்பேரி.	(கோவிலூத்தில் சோதனை)	ஆ	20, 21	ஜனு.	79
மீனாட்சிபுரம்.		ஆ	22	,,	,,
ஆவுடைநாடானூர்.		ஆ		ஷை	
பெத்தநாடான்பட்டி.		க		ஷை	
பாலூர்.		ஆ	23	,,	,,
சுரண்டை & புதுசுரண்டை.		க	27, 28	,,	,,
பரங்குன்றபுரம்.		க		ஷை	
ராஜகோபாலப்பேரி.		ஆ	27, 28	ஜனு	79
கருவந்தாவு.		க		ஷை	
ஊத்துமலை.		ஆ	29	30	,,
மேலக்கலங்கல்.		ஆ	,,	,,	,,
நல்லூர்.		ஆ	31 ஜனு	& 1 பெபு.	79
குருவண்கோட்டை.		ஆ	,,	,,	,,
ஆலன்குளம்.		ஆ	,,	,,	,,
ரெட்டியார்பட்டி.		க	,,	,,	,,
நல்லூர். (போர்டிங்)		ஆ	1879 பெபுருவரி 27க்கும் மார்ச்சு 18க்கும் ஊடே.		
சுறண்டை.	(,,)	ஆ			

அம்பாசமுத்திரந்தாலுகா.

ரெட்டியாபுரம்.	ஆ	21 ஆகஸ்.	78
திருமலையப்பபுரம்.	ஆ	24 செப்.	78

உகாந்தாட்சிபுரம்.	...	க	12	அக்ட்.	78
ஈரிசல்.	...	க	,,	,,	,,
செவ்வல்.	...	க	14	,,	,,
கோபாலசமுத்திரம்.	...	க	,,	,,	,,
வீரவநல்லூர்.	...	க	25 26	நவ.	78
காருகுறிச்சி.	...	க	27	,,	,,
கல்லடைக்குறிச்சி.	...	க	11	ஜனு.	79
அம்பாசமுத்திரம்.	...	ஆ	13	14	,,
சாட்டுப்பத்து.	...	ஆ	,,	,,	,,
செவந்திபுரம்.	...	ஆ	15	,,	,,
கலியாணிபுரம். (ஆழ்வார்குறிச்சியில்சோதனை.)		ஆ	16	,, ,,	,,
கடையம். A. V. S.	...	ஆ	17	18 ஜனு.	79
சேர்வைகாரன்பட்டி.	...	ஆ	,,	,,	,,
புலையூர்.	...	ஆ	,,	,,	,,
கோவிலூத்து.	...	ஆ	20*	21	,,
மைலப்பபுரம்.	...	ஆ	,,	,,	,,
ஜந்தான்கட்டளை.	...	ஆ	,,	,,	,,
மேட்டூர். (பாவூரில் சோதனை.)	...	ஆ	23	,,	,,
சிவலசமுத்திரம்.	...	ஆ	3	பெபு.	79
மதுராம்புத்தூர்.	...	ஆ	,,	,,	,,
இடமறித்தான்	...	ஆ	,,	,,	,,
பாப்பாக்குடி.	...	ஆ	4	,,	,,
மூக்குடல்.	...	ஆ	5	,,	,,

நாங்கூனேரித்தாலூகா.

சமாரியா.	...	ஆ	6	ஆகஸ்.	78
மகிழ்ச்சிபுரம். { வள்ளியூரில்		க	12	,,	,,
சகாயபுரம். { சோதனை.	...	க		ஷை	
டோனாவூர். (போர்டிங்.)	...	ஆ	16, 17		,,
,, டே	...	ஆ		ஷை	
இடையன்குளம்.	...	ஆ	2	டிச.	78
ஆதிச்சப்பேரி.	...	க		ஷை	
பரமேசுரபுரம். { ராதாபுரத்தில்					
மருதப்பபுரம். { சோதனை.			9.	ஷை	
சொக்கலிங்கபுரம்.	...	க	11, 12	ஷை	,,
குண்டல்.	...	க	,,	,,	,,
பெட்டைக்குளம்.	...	க	,,	,,	,,

புதூர்.	...	க	,,	,,	,,
கோடாவிளை.	...	க	,,	,,	,,
காரிகோவில்.	...	க	,,	,,	,,
ஆயன்குளம்.	...	க	,,	,,	,,
ராமன்குடி.	...	க	,,	,,	,,
கைலாசபுரம்.		க	13	14	,,
உவரி.	{ இடையன்	க	,,	,,	,,
முதமொத்தமொழி.	{ குடியில்	க	,,	,,	,,
ஆனைகுடி.	{ சோதனை.	க	,,	,,	,,
நவ்வலடி.		க	,,	,,	,,
சோதிநகரம்.	...	ஆ	17	,,	,,
சின்னம்மாள்புரம்.	...	க	12, 13	பெபு.	79
மைலாப்புதூர்.	...	க	,,	,,	,,
கண்ணநல்லூர்.	...	க	,,	,,	,,
ஆனைகுளம்.	...	க	,,	,,	,,
கண்டிகப்பேரி.	...	க	,,	,,	,,
பேர்பூலான்குளம்.	...	ஆ	14	,,	,,
நாசரேத்.	...	க	,,	,,	,,
சிதம்பரபுரம்.	...	க	15	,,	,,
உதயத்தூர்.	...	க	,,	,,	,,
திருவம்பலபுரம்.	...	க	15	,,	,,
கணக்கன்குளம்.	...	க	,,	,,	,,
ஆவுடையாபுரம்.	...	க	,,	,,	,,
கூடன்குளம்	...	ஆ	17	,,	,,
பண்ணை.	...	க	18	,,	,,
யாக்கோபுபுரம்.	...	க	19	,,	,,
ஆவரைகுளம்.	...	க		ஷை	
வடவன்குளம்.	...	க	21, 22	ஷை	,,
ராமலிங்கபுரம்.	...	க	21, 22	பெபு.	79
பண்குடி.	...	க	24	,,	,,
புதூர்.	...	க	,,	,,	,,
பெருமாள்குளம்.	{ களக்காட்டில் சோதனை }	க	22	மார்ச.	79
அவரைகுளம்.	...	க	,,	,,	,,
மேல செட்டிகுளம்.	...	க	24, 25	,,	,,
காடன்குளம்.	...	க	,,	,,	,,
அத்திகுளம்.	...	க	,,	,,	,,
ஆள்வாநேரி.	...	க	26	,,	,,
அம்பலம்.	...	க	,,	,,	,,
மருதகுளம்.	...	க	27	,,	,,

கோவைகுளம்.	...	க	,,	,,	,,
பூலிப்பாட்டம்.	...	க்	,,	,,	,,
மூனாருடைப்பு.	...	க	28	,,	,,
புதுக்குளம்.	...	க	,,	,,	,,
இடையன்குடி. (போர்டிங்)		ஆ	1879 பெபுருவரி 27உ கரும் மார்ச் சுமீ 18உக்கும் ஊடே.		
பறப்பாடி.	...	க	1, 2	ஆகஸ்.	78
சமுதூர்.	...	க	,,	,,	,,
பாப்பான்குளம்.	..	க	,,	,,	,,
சீயோன்மலே.	...	க	,,	,,	,,
சுவிசேஷபுரம்.	...	ஆ	18, 19	டிச.	78
சுப்பிரமணியபுரம்.	...	க	,,	,,	,,
இட்டமொழி.	...	க	,,	,,	,,
பெரும்பனே.	...	க	,,	,,	,,
மீனாட்சிநாதபுரம்.	...	க	,,	,,	,,
கிளாக்காரன்தட்டு.	...	க	,,	,,	,,

தென்காசித் தாலூகா.

பெண்பள்ளிக்கூடங்கள்.

கிஷ்ணபேரி. (கோவிலூற்றில் சோதனே.		20 21	ஜனு.	79
மீனாட்சிபுரம்.	...	22	,,	,,
ஆவுடைநாடானூர்.	...	,,	,,	,,
பாவூர்.	...	23	,,	,,
தென்காசி.	...	24	,,	,,
இலஞ்சி.	...	25	,,	,,
வீராணம்.	...	27	28	,,
அதிசயபுரம்.	...	,,	,,	,,
ஊற்றுமலே.	...	29, 30		,,
மேலக்கலங்கல்.	...	,,	,,	,,
நல்லூர்.	...	1879 ஜனுவரி 31உ	பெபுரு—	1உ
குருவன்கோட்டை.	...	,,	,,	,,
ஆலன்குளம்.	...	,,	,,	,,
நல்லூர். S. T. ... சுறண்டை. DO.		1879 பெபுரு. 27உக்கும் மார்ச். 18உக்கும் ஊடே.		

அம்பாசமுத்திரந்தாலூகா.

கல்லடைக்குறிச்சி.	...	7	செப்.	78

திருமலேயப்பபுரம்.	...	24	ஷை	
பிரமதேசம்.	...	26, 27		,,
ஒட்டியாபுரம்.	...	11	அக்ட்.	78
அம்பாசமுத்திரம்.	...	13, 14	ஜனு.	79
சாட்டுப்பத்து.	...	,,	,,	,,
செவந்திபுரம்.	...	15	,,	,,
கலியாணிபுரம்.	...	16	,,	,,
கடையம்.	...	17	18	,,
சேர்வைகாரன்பட்டி.	...	,,	,,	,,
புலவனூர்.	...	,,	,,	,,
கோவிலூற்று.	...	20, 21		,,
மைலப்பபுரம்.	...	,,	,,	,,
ஐந்தான்கட்டளே.	...	,,	,,	,,
மேட்டூர்.	...	23	,,	,,
சீவலசமுத்திரம். (பாவூரில் சோதனே.)		3	பெபு.	79
புதுப்பட்டி.	...	,,	,,	,,
ஓடமறித்தான்.	...	,,	,,	,,
இடகால்.	...	4	,,	,,
பாப்பாக்குடி.	...	,,	,,	,,
மூக்குடல்.	...	5	,,	,,

நாங்குனேரித்தாலூகா.

நாங்குனேரி.	...	31	ஜுலாய்.	78
சமாரியா.	...	6	ஆகஸ்.	78
ராதாபுரம்.	...	8	,,	,,
டோனவூர்.	...	16, 17		,,
இடையன்குளம்.	...	2	டிச.	78
சோதிநகரம்.	...	17	,,	,,
பேர்ப்பூலான்குளம்.	...	14	பெபு.	78
கூடன்குளம்.	...	17	,,	,,
இடையன்குடி.	...	1879 பெபு. 27க்கும் மார்ச். 18க்கும் ஊடே.		
சுவிசேஷபுரம்.	...	18, 19	டிச.	77

சேர்மாதேவி சர்க்கிள்.

புதுப்பள்ளிக்கூடங்கள்.

தென்காசித் தாலூகா.

கருத்தப்பிள்ளையூர்.	...	க	16	1	79
பிரமதேசம். ...	...	க	26, 27	செப்.	78
இடகால். ...	...	ஆ	4	2	89

நாங்கூநேரித் தாலூகா.

தர்மபுரம். ...	...	க	14	8	78
தட்டான்குளம்	...	க	30	7	78
கலுங்கடி. ...	...	க	21	12	78
நல்லமாம். ...	...	க	16, 17	ஆகஸ்து.	78
குமிழம்பாடு. ...	...	க	7	12	78
மேலக்கூடன்குளம்.	...	க	17	2	79
இராமநாதபுரம். ...	...	க	11, 12	டிச.	78

E. SARGENT D D
BISHOP.

Numbers.

எண்ணாகமம்.

XIII. அதிகாரம்.

இஸ்ரவேலர் வடக்கை நோக்கிச்சென்ற பிரயாணத்தில் செய்த முக்கியமானதும் 4-வதுமான கலகமானது, அவர்கள் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட இரண்டாம் வருஷத்தின் கோடைகாலத்தில் நடந்தது. 20, 1: 1. 20: 22. 33: 38. இந்தச் சரித்திரம் (2) அதிகாரம் நிறையச் சொல்லப்படுகிறது.

"கர்த்தர்". கானான் தேசத்தை வேவுபார்க்கும்படி. இஸ்ரவேலர் தான் முதலாவது யோசனை சொன்னது. உபா. 1: 22.

2. "தலைவர்கள்." 3 வா. இவர்கள் அந்தந்தக் கோத்திரப் பிரபுக்களல்ல, அந்தந்த வீட்டுக்கு அல்லது வம்சத்துக்குத் தலைவராயிருந்தவர்கள்.

3. "பாரான் வனாந்தரத்திலிருந்து" பாரான் வனாந்தரத்திலி
ருக்கிற காதேசிலிருந்து அனுப்பினான். 26. 32: 8.
4—15. செபுலோன் கோத்திரம் (10) தன் வரிசையில் வரவில்
லை. இது இசக்காருக்குப் பிந்தி வரவேண்டியது, லேயாளுக்குக் கடை
சியாய்ப் பிறந்தவன். பென்யமீன் (9), எப்பிராயீமுக்கும் மனாசேக்
கும் ஊடே வருகிறான். இந்த வித்தியாசம் நகல் எழுதுவதிலுண்டான
பிசகென்று சொல்லப்படும்.
லேவிக்கோத்திரத்தார் முன்னமே தேவகாரியத்துக்கென்று பிரித்
தெடுக்கப்பட்டவர்களானதால் அவர்கள் ஒரு வேவுகாரனை அனுப்ப
வில்லை. மேற்படி வாக்கியங்களிற் காட்டிய வேவுகாரரில் நமக்குத்
தெரிந்தவர்கள் யோசுவாவும் காலேபும்.
6. "காலேப்" 32: 11. யோசுவா 14-ல் (2) விசை காலேப் "கே
னேசியன்" என்று சொல்லப்படுகிறான். ஏதோம் தேசத்துப் பிரபுக்
களில் கேனாஸ் ஒருவன். ஆதி. 36: 11, 15. 1 நாளா. 2. அதி-ல் சொல்லிய
காலேபின் கொடிவழியில் ஏதோமியப் பேர்களும் வருகிறது. இருஷ்.
சோபால். (1 நாளா. 2: 50, 52. ஆதி. 36: 20, 23). இந்த முகாந்தரங்
களினாலே, காலேபின் வம்சம் பூர்வத்தில் ஏதோமியச் சாதியைச் சேர்
ந்திருந்ததென்றும் பிற்பாடு யூதாக்கோத்திரத்தாரோடு சம்பந்தம் கல
ந்து போயிற்றென்றும் நினைக்கப்படுகிறது. என்றாலும் இஸ்ரவேலரும்
ஏதோமியரும் கிட்ட நெருங்கின வழியிலுள்ளவர்களானதால் இரண்டு
ஜாதிப்பேரும் கலந்து ஒன்று மற்றதுக்கு வழங்கியிருக்கலாமென்றும்
ஒத்துக்கொள்ளவேணும்.
யோசுவா என்று இப்போதான் முதல் விசையாக வழங்கியிருக்க
லாம். ஆனால் முன்னமே யாத்தி. 17: 9. 24: 13 முதலிய வாக்கியங்
களில் யோசுவா என்று வழங்கியிருக்கிறதேயென்றால், ஒசேயாவுக்குப்
பதிலாக யோசுவா என்ற பேர் சாதாரணமாய் வழங்கிப்போனபிற்
பாடு தானே யாத்திராகமம் எழுதப்பட்டதால் விகற்பமில்லை. என்றா
லும் பழய பேரும் வழங்கியிருப்பதுண்டு. உபா. 32: 44.
ஒசேயா என்று கடைசி இஸ்ரவேல் இராசாவுக்கும், முதல்
சின்ன தீர்க்கதரிசிக்கும் பேர். இந்தப் பேருக்கு, "விடுதலை" அல்
லது "இரட்சிப்பு" என்றர்த்தம். இந்தப் பேரோடு, தேவ நாமம்
அடங்கிய ஜா அல்லது ஜிகோவா என்ற அசையை மோசே கூட்டினான்
இதினாலே அந்த இரட்சிப்பு, தேவனிடத்திலும், "தேவ இரட்சிப்பு"
என்ற நாமத்தையுடையவரிடத்திலுமிருந்து வருகிறதென்று மோசே
குறிப்பித்தான். பிற்காலத்தில் வழங்கின எபிரேயு பாஷையில் இயோ
சுவா என்ற வார்த்தை, யெசுவா என்று வழங்கினது. (நெகே. 8:
17). லத்தீன் பாஷையில் "யோஸ்வா" என்றிருக்கிறது.
17. "தெற்கே" "தென்தேசம்" என்றர்த்தம். இது கானான்
தேசத்தில் தெற்குக் கடைசியான நாடு; கானான் தேசத்திலெல்லாம்
மிகவும் குறைந்த செழிப்புள்ள இடம், பிற்காலத்தில் யூதாவுக்குச்
சுதந்தரமாய்க் கிடைத்த பூமி. இது காதேசுக்கு வடக்கும் எபிரோ
னுக்குத் தெற்கும், மெதித்திராணியாக் கடலுக்கும் சவக்கடலுக்கும்
இடையிலுமுள்ள நாடாம். யோசு. 15: 21-32.
"மலையில் ஏறி" கானான் தேசத்தின் மத்தியிலும் தென்பாகத்
திலுமிருக்கிற மலைத்தேசமாம். இதின் மிகுதியான பங்கு, யூதா எப்
பிராயீம் இந்தக் கோத்திரங்களின் எல்லைகளுக்குள்ளாயிருக்கிறது.
இந்த நாடு, எபிரோனுக்குத் தெற்கே சில மயில் தூரத்திலிருந்து ஆரம்
பித்து, வடக்கே எஸ்றோயேல் சமபூமிவரையும் சென்று, வடமேற்

காக கர்மேல் மேட்டு நிலம்வரையும் சமுத்திரத்துக்குள்ளாகப் போய் நீண்டிருக்கிறது.

19. "கூடாரங்களில்" சுற்று மதிலில்லாத ஊர்கள் என்றர்த்தம்

20. "தைரியங்கொண்டிருந்து" அந்நிய தேசத்திலிருந்து பழங்களை எடுத்துவரப் பயப்படுவாரகளென்று நினைத்துச்சொல்லுகிறார்.

"அக்காலம் முதற்பழம் பழுக்கிற காலம்." பலஸ்தீனுவில், ஜூலாய் ஆகஸ்து மாசங்களில் திராட்சச்செடியின் முதற்போகம் பழுக்கும். திராட்சப்பழப்போகம் செப்ற்றெம்பர் அகற்றோபர் மாசங்களில் சேர்க்கப்படும். இந்தக் காலக்குறிப்பு, முந்திய சரித்திரத்துக்கு ஒத்திருக்கிறது. எப்படியென்றால், இரண்டாம் மாசம் 20உ அல்லது மே மாசத்தின் மத்திபோல இஸரவேல் சேனையெல்லாம் சீனாயைவிட்டுப் புறப்பட்டது; (10: 11). அதற்குப் பிற்பாடு, கிப்ரோத் அத்தாவாவில் ஒரு மாசமும், ஆசரோத்தில் ஒரு வாரமும் பின்னிட்டு, 150 முதல் 200 மயில் வரையும் நடந்துவந்திருக்கிறார்கள். இது ஜூலாய்மீ துவக்கம் அல்லது இன்னம் ஒரு மாசம் பிந்தி வேவுகாரர் வாக்குத்தத்த தேசத்துக்குப் புறப்பட்ட காலமாயிருக்கவேண்டும்.

21. "சீன்" (Zin. 10: 12 வியா). பாரான் வனாந்தரத்தின் வடகீழ் பாகமாம். 34: 8.

"ரேகொப்" தாண் லாயீசுக்குக்கிட்ட இருக்கிற (நியா. 18: 28.) பெத்ரேகொப் என்று நினைக்கப்படும். இந்த ரேகொப், தாண்லாயீசுக்கு வடக்கேயிருக்கவேண்டுமென்பது தெளிவாம். ஏனென்றால் இந்தப் பேரபேலே, சூரியாவிலுள்ள ஒரு இராச்சியத்துக்குப் பேர் வந்தது

மகாகனம்பொருந்திய சென்னை அத்தியக்ஷரவர்களுக்கு மெலனீசியா அத்தியக்ஷரவர்கள் நோர்போக் தீவிலிருந்து 1877-ம்ளு நொவம்பர்மீ 30உ எழுதியனுப்பிய கடிதத்தின் பொழிப்பு.

மிஷன்களுக்காக விசேஷ செப ஆராதனை செய்யும்படி குறிக்கப்பட்ட தினத்தில் நோர்போக் தீவாரைச்சேர்ந்த தேவாலயத்தில் காணிக்கையாகச் சேகரித்தது (பவுண்டுக்கு ரூபாய் பத்தாக) ரூ	389	0	0
மேற்சொல்லிய தினத்தில் பர்ணபாஸ் என்ற ஸ்தானத்திலிருக்கும் மிஷன் ஆலயத்தில் கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறப்பட்ட சமையத்தில் விழுந்த காணிக்கை ரூ	77	0	0
மேற்படி மிஷன் ஆலயத்தில் 1877-ம்ளு-த்துக்காகச் சேகரிக்கப்பட்ட பொதுவான தர்மகாணிக்கையிலிருந்து எடுத்தது ரூ.	50	0	0
ஆக ரூ.	516	0	0

"இந்தத் தொகையைப் பஞ்ச நிவிர்த்திக்காகச் செலவிடும்பொருட்டு தங்களுக்கு நேரே அனுப்புகிறேன். தொகை அவ்வளவு பெரிதாயிருப்பதினாலல்ல, அதைக் கொடுத்தவர்களிடத்தில் விளங்கிய கிறிஸ்தமான சிந்தையினிமித்தமும் மனமகிழ்ச்சியோடு அனுப்புகிறேன்.

தங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நோர்போக் தீவார் பௌண்டி (Bounty) என்ற கப்பலில் புரளி பண்ணின மாலுமிகளாருடைய பின் சந்ததியாரானவர்கள். மேற்படி கலகக்காரர் முதல்முதல் பித்கார்ண் என்ற ஒரு தீவிலே குடியேறியிருந்தார்கள். அப்பால் 1857ம்ளு-த்தில் இங்கிலிஷ் துரைத்தனத்தாரால் அவர்கள் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, இந்த நோர்போக் தீவிலே குடியேற்றப்பட்டார்கள்.

தற்காலத்தில் இந்தச் சனக்கூட்டத்தார் மொத்தத்தொகை நானூறு பெயர்தானுமில்லை. அவர்கள் தனவான்களேயல்ல. பெரும்பாலும் தீவிலகல மீன் பிடித்து சீவனம்பண்ணுகிறவர்கள். ஒரு வருஷத்தில் ஆறு மாதம் வேட்டையாடி அகப்படும மீன்களை மேற்படி தொழிற்செய்கிற யாராயினும் தங்களுக்கு நேரிட்டால் அவர்களுக்கு விற்றும், நியுக்காலிடோனியா என்ற அயல் தீவுக்கு ஆடுமாடு முதலிய மிருகங்கள் கொண்டுபோய் விற்பனைசெய்தும் பொருள் சம்பாதிக்கிறவர்களேயல்லாமல் மற்றப்படியல்ல.

இப்பேர்ப்பட்ட ஸ்திதியுடையவர்களென்றாலும், இந்து தேசத்தில் எண்ணிறந்த சனங்கள் கொடிய பஞ்சத்தினால் வருந்திக் கஷ்டப்படுகிறார்களென்று கேள்விப்பட்டதோடு அவர்கள் மிகவும் மனதுருகிப் பரிதாபங்கொண்டு, மேற்படியாருக்குத் தங்களால் கூடிய உதவி செய்யவேண்டுமென்று தீர்மானித்து, அதற்கென்று மிஷன்களுக்காக விசேஷசெப ஆராதனை செய்யக் குறிக்கப்பட்ட தினத்தில், மீன் பிடிக்கப் போயிருந்த காலத்தில் தேவன் தங்களைப் பாதுகாத்து சுகமே வீடு கொண்டுவந்து சேர்த்ததற்காக நன்றியறிதலான ஸ்தோத்திரஞ்செலுத்தவும் காணிக்கை சேர்க்கவும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். ஆகையால் இந்த அவர்கள் காணிக்கையை ஒருவாறு ஸ்தோத்திரக் காணிக்கையென்றும் சொல்லத்தகும். அன்றைத்தினத்தில் வெள்ளைக்காரக்கிறிஸ்தவர்கள் சபையில் கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறப்பட்டபொழுது நான் சேகரித்த காணிக்கையையும் மேற்படியார்கள் காணிக்கையோடு சேர்த்திருக்கிறேன். மற்ற ஐம்பது ரூபாயும் நம்முடைய மிஷன் பள்ளிக்கூடத்திற் படிக்கிற பையன்கள் கொடுத்துவருகிற பொதுவான தர்ம காணிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது.

தங்களுடைய சுதேச கிறிஸ்தவர்களில் யாராவது இந்தக் காணிக்கையைக் காணும்பொழுதும் அதைக்குறித்து அறியும்பொழுதும், ஆதிக்

கிறிஸ்தவர்களுக்குள் மிகுதியாயிருந்ததாக அவர்கள் வாசிக்கிற கிறிஸ்சமான அன்பும் அனுதாபமும் முற்றும் ஒழிந்துபோகவில்லையென்றும், தூரமான தீவாந்தரங்களிலும் சஞ்சரிக்கிற அவர்கள் சகோதரர் இந்த ஆபத்துக்காலத்தில் அவர்களைக்குறித்து நினைவுள்ளவர்களாய் அவர்களுக்குத் தங்களாற் கூடிய உதவி செய்கிறார்களென்றும் பார்த்து உணர்ந்துகொள்வதினாலே, அவர்கள் விசுவாசம் பலப்படவேண்டுமென்று நான் விரும்புகிறேன்."

இந்த கோர்போக் தீவார் உற்பத்தியைக்குறித்த சரித்திரம் அடுத்த சங்கியையில் தொடங்கி விபரமாய்ச் சொல்லப்படும்.

SUBJECTS OF PRAYER FOR THE WEEK.

Monday	The Native Church and Pastoral work.
Tuesday	Female Education.
Wednesday	Itinerating work.
Thursday	English Institution & Vernacular Education.
Friday	Zenana Mission.
Saturday	All Missionaries and Mission work.
Sunday	Missionaries' children & Missionary children's Home.

திங்கள். சுதேச சபைக்காகவும், அதை நடத்தும் பாஸ்றர்கள் உபதேசிமார் உபாத்திமார்களுக்காகவும்.

செவ்வாய். பெண்களுக்குள் கல்வி விருத்தியடையவேண்டுமென்று.

புதன். திருநெல்வேலி நாட்டிலுள்ள அஞ்ஞானிகளுக்குள் சுவிசேஷம் பிரபலியமாவதற்காக.

வியாழன். இங்கிலீஷ்கல்விச்சாலைகள் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் இவை விருத்தியடையவதற்காக.

வெள்ளி. அந்தஸ்துள்ள சுதேச ஸ்திரீகளுக்குள் சுவிசேஷ பிரபலியத்துக்காகச் செய்யப்படுகிற முயற்சிகள் பயன் பெறுவதற்காக.

சனி. எங்குமுள்ள மிஷியனெரிகளுக்காகவும், அவர்கள் பிரயாசை பயன்படும்படியாகவும்.

ஞாயிறு. மிஷியனெரிகள் முதலான போதகன்மார்களுடைய பிள்ளைகளுக்காகவும், அவர்கள் பள்ளிக்கூடங்களுக்காகவும் ஜெபம்பண்ணவேண்டும்.

நோட்டீஸ்.

கர்த்தருக்குச் சித்தமானால் நாளது௵ செப்றெம்பர்௴ 22உ பாளையங்கோட்டை திரித்துவ தேவாலயத்தில், மகாகனம் சார்சென்று அத்தியக்ஷரவர்கள், உத்தேசம் 10 பேருக்கு குருப்பட்டமும், 8 அல்லது 9 பேருக்கு டீக்கன் பட்டமும் கொடுப்பார்கள். உத்தம கிறிஸ்தவர்களெல்லாரும் அந்த நாளை மனதில் வைத்துக்கொண்டு கர்த்தரை மன்றாடி வரும்படி இதினால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
வி	1	௧௯	பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம். மத். 5: 34.
வெ	2	௨0	மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ரோமர். 8:13.
ச	3	௨௧	உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். மத். 5: 44.
ஞா	4	௨௨	கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. சங். 134: 3.
தி	5	௨௩	கேளுங்கள் அப்பொழுது கொடுக்கப்படும். மத். 7: 7.
செ	6	௨௪	நமக்கு விரோதமாயிருப்பவன்யார்? ரோமர். 8:31.
பு	7	௨௫	கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறார். 1 கொரி. 5: 7.
வி	8	௨௬	தட்டுங்கள், அப்பொழுது திறக்கப்படும். மத். 7: 7.
வெ	9	௨௭	சாபத்திற்கு நம்மை விலக்கி மீட்டார். கலாத். 3: 13.
ச	10	௨௮	மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. ரோமர். 11: 20.
ஞா	11	௨௯	தேவன் ஆவியாயிருக்கிறார். யோவான். 4: 24.
தி	12	௩0	இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். மத். 7: 13.
செ	13	௩௧	நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய். கலாத். 4:7.
பு	14	௩௨	அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். மத். 7: 20.
வி	15	௧	திருவசனத்தின்படி செய்கிறவர்களாயிருங்கள். யாக். 1: 22. (20: 12.
வெ	16	௨	உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. யாத்.
ச	17	௩	கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக. நீதி.
ஞா	18	௪	முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிரு. (3: 3.
தி	19	௫	நீதிக்கேற்க விழித்துக்கொள்ளுங்கள். 1 கொரி. 15: 34. (நீதி. 3: 5.
செ	20	௬	பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. 1 யோ. 2: 2.
பு	21	௭	என் ஆவி இரட்சகராகிய தேவனிடத்தில் களிகூருகிறது. லூக். 1: 47.
வி	22	௮	துரோகிகளின் வழிகரடுமுரடானது. நீதி. 13. 15.
வெ	23	௯	ஸ்தோத்திரப் பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான்.
ச	24	௧0	பிறனிடத்தில் அன்புகூருவாயாக. கலாத். 5: 14. (சங். 50: 23.
ஞா	25	௧௧	என் ஓய்வுநாட்களை ஆசரியுங்கள். லேவி. 19. 30.
தி	26	௧௨	என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன். நீதி. 8: 17.
செ	27	௧௩	என் மகனே, என் போதகத்தை மறவாதே. நீதி. 3: 1.
பு	28	௧௪	நீரே என் நம்பிக்கையாயிருக்கிறீர். சங். 71: 5.
வி	29	௧௫	கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர். சங். 116: 5.
வெ	30	௧௬	நம்பிக்கையை விட்டு அசையாமலிருங்கள். கொலோ. 1: 22.
ச	31	௧௭	கர்த்தர் சமீபமாயிருக்கிறார். பிலிப்பியர். 4: 5.

விசேஷ நாட்கள்.

4. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், ஏழாம் ஞாயிறு.
11. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், எட்டாம் ஞாயிறு.
12. பௌர்ணமி.
18. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் ஒன்பதாம் ஞாயிறு.
25. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பத்தாம் ஞாயிறு.
28. அமாவாசை.

நற்போதகம்.

௯. செப்தெம்பர்மீ. ௲௮௭௮௵.

எஸ்றாவின் புஸ்தகம்.

I. அதிகாரம்.

1. "முதலாம் வருஷத்திலே" கோரேசு பாபிலோனியனை ஆண்ட முதலாம் வருஷமென்று அர்த்தம். அந்த வருஷந்தான் அவன் யூதனை ஆண்ட முதல் வருஷமாயுமிருந்தது. இது கி. மு. (538.)

"நிறைவேறும்படிக்கு" எரேமி. 25: 11, 12. 29: 10. எரேமியா முன் குறித்த (70)வருஷ சிறையிருப்பானது, யோயாக்கீமின் (4)வருஷல் அதாவது கி. மு (605) ல் ஆரம்பித்தது. (எரேமி. 1: 12ஐ தானி. 1: 1 ஓடு.) ஆகையால் கி. மு. (536) ல் சிறையிருப்பு முடிந்திருக்கவேணும். கோரேசு பாபிலோனைப் பிடித்தது கி. மு. 538 என்று புறச்சரித்திரங்களால் துலங்கினாலும், பாபிலோனைப் பிடித்த (2) வருஷத்துக்குப்பின் மேதியனாகிய தரியுவின் மரணமுதல்தான் பார்சுஇராஜ்யத்தின் ஆளுகை சரியானபடி ஆரம்பித்ததாகச் சொல்லப்படும்.

2. "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர்" அதாவது பரலோகத்தின் தேவனாகிய யெகோவா. பார்சு மூலப்பாஷையில், பரலோகத்தின்தேவனாகிய ஆர்மஸ்ட் (Ormazd) என்றிருக்கிறது. இது எபிரேயுப் பாஷையில் உடனே திருப்பப்பட்டிருக்கும். இந்த எபிரேயுத் திருப்புதலில், ஆர்மஸ்ட்க்குப் பதிலாக எகோவாஎன்ற வார்த்தைபோடப்பட்டிருக்கும். யூதர் யெகோவாவைப்பற்றி மேலான எண்ணங்கொண்டிருந்ததுபோல, பார்சர் கடவுளைக்குறித்தும் எண்ணியிருந்தார்கள். அவர்கள் கடவுளை அகுராமசிடா (Ahura mazda) என்று சொல்வார்கள்.

"பூமியின் இராஜ்யங்களை யெல்லாம் எனக்குத் தந்தருளி."
தரியுவும் ஒருசாசனத்தில்இதைப்போல் எழுதுகிறார். அதாவது

"தேவர்களுக்கெல்லாம் முக்கிய தெய்வமாகிய
ஆர்மஸ்ட்என்னும் மகாதேவன்,
தரியுவை இராஜாவாக ஏற்படுத்தி,
அவனுக்கு இராஜ்யத்தை அளித்தார்.
ஆர்மஸ்டின் கிருபையினால் தரியு இராசாவாயிருக்கிறான்.

இதே மாதிரி வக்கணையாக அநேக பார்சு சாசனங்களில் வழங்கியிருக்கிறது.

"ஆலயத்தைக் கட்டும்படிக்கு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்." கோரேஸ் பாபிலோனை முற்றிக்கைபோட்டிருக்கும் போது; ஏசா 44: 28ல் அடங்கிய தீர்க்கதரிசனத்தை தானியேல் எடுத்துக்காட்டியிருப்பான். கோரேஸ் இதை வைத்துக் கொண்டு, தேவன் கட்டளையிட்டிருக்கிறதாக எண்ணியிருப்பான்.

3. "வாசம்பண்ணுகிற தேவனே தேவன்." இதை தரியு சொல்வதோடு ஒத்துப்பார். தானியேல். 6: 26. "அவர் ஜீவனுள்ள தேவன்."

"அவ்விடத்துஜனங்கள்." அதாவது அஞ்ஞானிகள்.

"உச்சாகமாய் காணிக்கை." இது கோரேஸ்கொடுத்த காணிக்கை என்று தோன்றும். வா. 7—11. தன் மாதிரியை தன் பிரஜைகளும் பின்பற்றி, தம் தம் பொக்கிஷத்திலிருந்து யூதருக்கு உதவிசெய்யும்படி ஏவினான். 6 வா.

5. "எழும்பினார்கள்." யூதர்களெல்லாரும் சிறையிலிருந்து திரும்பும்படி கோரேஸ் கட்டளைகொடுத்தான். 3 வா. ஆனால் அவர்களில் ஒரு பங்குப்பேர் மட்டும் திரும்பினார்கள். அநேகர் தங்கள் சொத்துக்களை விட்டுவிட மனமில்லாமல் பாபிலோனிலேயே இருந்துவிட்டதாக யோசேப்புஸ் சொல்லுகிறார். தேவன் எவர்களுடைய ஆவியை ஏவினாரோ அவர்கள் மட்டும் திரும்பினார்கள்.

"யூதா பென்யமீன்." 1 நா. 9: 3 ல் திரும்பினவர்களில் சிலர், மனாசே எப்பிராயீம் கோத்திரத்தாரென்றும் தெரியவருகிறது.

7. "பணிமுட்டுகள்." 1. இராசா. 25: 14, 15. 2. நாளா. 36: 7. எரேமி. 27: 21, 22. தானியேல். 5. 2. ஒத்துப்பார்.

"தன் தேவன்." மெரோதாக் என்பவனே.

"மித்திரோதாத்." இதினாலே கோரேசின். காலமுதலே சூரியவணக்கமிருந்ததென்று தோன்றுகிறது.

8. "சேஸ்பாத்சார்." சரித்திர சம்பந்தத்தினாலும் விசேஷமாய் 5; 14 னாலும் செருபாபேலென்று தெரியவருகிறது.

"யூதாவின் அதிபதி." செருபாபேல் இராஜ வம்சத்தானென்பதற்கு- 1 நாளா. 3: 19. பார். இதில் அவன், பெதாயாவின் குமாரனென்றும், எஸ்றா. 3: 2, 8. 5: 2. நெகே. 12: 1. ஆகாய. 1: 1, 12, 14. 2: 23. மத். 1: 12. லூக். 3: 27. முதலிய இடங்களில், சலாத்தியேலின் குமாரன் என்றும் சொல்லப்படுகிறான். இதினால் அவன் சலாத்தியேலுக்குச் சுதந்தரப் புத்திரன் என்று விளங்கும். ஆனால் சரியானபடி, சலாத்தியேலின் சகோதரனாகிய பெதாயாவின் குமாரன்.

10. 1 நாளா. 28: 17.

11. "கிண்ணிகள்." இவன் கொடுத்த பாத்திரங்களெல்லாம்

(540). எபிரேயுப்பாஷை வேதாகமத்தில் (2499) என்றிருக்கிறது. எஸ்டிராஸ் என்னும் புஸ்தகத்தில் (5469.) என்றிருக்கிறது. இத்தொகைக்கு ஷை ஆகமத்திற் சொல்லிய விபரங்களும் சரியாய் ஒத்திருக்கிறது. அநேக வியாக்கியானிகள் இதுதான் சரியென்கிறார்கள். ஆனால் எஸ்டிராஸ் ஆகமத்தில் சொல்லிய விபரம், இருக்கக்கூடியதல்ல. பொன்தட்டுகளின் தொகையும் வெள்ளித்தட்டுகளின் தொகையும் ஒன்றுபோல் சொல்லியிருக்கிறது. இது சரியென்று தோன்றவில்லை. மேலும் வெள்ளிக்கிண்ணிகள் (2410) என்றும், பொற்கிண்ணிகள் (30) என்றும் சொல்லியிருக்கிறது. இது எதார்த்தமான வித்தியாசமல்ல. பொதுவாகச் சொன்னால் நமது வேதாகமத்திற் சொல்லியிருக்கிற தொகை மாறுதலடைந்திருக்கவேணும்.

II. அதிகாரம்.

2. "தேசத்துப் புத்திரர்." யூதேயா ஒரு இராஜ்யமாயிராமல் பார்சுவைச் சேர்ந்த ஒரு தேசமாய் மட்டுமிருந்தது.

"தங்கள் தங்கள்" அதாவது தங்கள் தங்கள் பேரன் பூட்டன் முதலான முற்பிதாக்களிருந்த இடங்களுக்கு என்றர்த்தம். சிலபேருக்கு ஷை இடங்கள் தெரியாதிருந்தது. 59—62.

"யெசுவா." இவன் பிரதானஆசாரியன். ஆகாய். 1: 1. சகரி. 3: 1, இவன் நேபுகாத்நேச்சாரால் சிறையாக்கப்பட்ட யோசதாக்கின் குமாரன். 1 நா. 6: 15.

43. "நிதனீமியர்." இந்த வார்த்தைக்கு பரிசுத்த அடிமைகள் என்றர்த்தம். தேவாலயத்தில் தாழ்வான வேலைகளைச் செய்யும்படி லேவியருக்கு உதவியாகக் கொடுக்கப்பட்டவர்கள். மோசேயின் காலத்திலும் சிலர் இப்படிப்பட்ட வேலைக்குக்கொடுக்கப்பட்டார்கள். எண். 31: 47. கிபியோனியர் இஸரவேலருக்கு அடிமைப்பட்டபின், இவர்கள் லேவியரோடு சேர்ந்து கொண்டார்கள். தாவீது இராசா இந்தத்தொகையை பின்னும் அதிகப்படுத்தினான். எஸ்றா. 8: 20. யூதர் சிறையிருப்பிலிருந்து திரும்பினபொழுது லேவியர் கொஞ்சப்பேராயிருந்ததினால், இந்த நிதனீமியருடைய உதவி மிகவும் அவசியமாயிருந்தது. எஸ்றா, நெகேமியா. நாளாகமங்கள் இந்தப் புஸ்தகங்களிலேதான் இவர்களுக்கு நிதனீமியர் என்ற பேர் வழங்கியிருக்கிறது நிதனீமியர் என்கிற வார்த்தை நாத்தான் என்ற வார்த்தையிலிருந்து பிறந்தது. நாத்தான் என்ற வார்த்தைக்கு "கொடுக்கப்பட்ட" என்றர்த்தம்.

55. "சாலொமோனுடைய வேலையாட்களின் புத்திரர்." இவர்கள் சாலொமோன் அமஞ்சிவேலைசெய்ய அடிமைப்படுத்திக்கொண்ட கானானிய ஜாதியாருடைய பின்சந்ததியாரென்று தோன்றும். 1 இராசா 9: 20, 21, 22.

69. இது பாபிலோனில் யூதர் குடியிருந்த கிராமங்களாம்.

63. "திர்ஷாதா." இதற்கு அதிபதி என்று அர்த்தம். இவன் செருபாபேல்தான்.

"மகாபரிசுத்தமானதிலே." ஆசாரியர் புசித்தபலியின் பாகங்களாம். "எழும்புமட்டும்." இரண்டாம் தேவாலயத்தில் ஊரிம் தும்மிம் இருந்ததேயில்லை. ஆனால் செருபாபேல் தற்காலத்துக்குமட்டும் இந்த மகிமை அற்றிருக்கும் என்றெண்ணினான்.

70. "எல்லாரும்." பத்துக்கோத்திரத்தாரும் செருபாபேலோடு திரும்பிவந்தார்களென்று.

(1) 1 நாளா. 9. 3 னாலும்.

(2) நெகேமி. 7: 7 ல்.(12) தலைவர்களைச் சொல்லியிருப்பதாலும்.

(3) எஸ்று. 2: 2, 59. 3: 1. முதலானபலநாமங்களினாலும் விளங்கும்.

III. அதிகாரம்.

1. "ஏழாம் மாதம்." இது திஸ்ரிமாதமாம். யூதருக்கு இது பரிசுத்தமாதம். நம்முடைய செப்றெம்பருக்குச்சரி. யாத்தி. 23: 16. லேவி. 23: 24—41.

"சனங்கள் ஏகோபித்து." நியாயப்பிரமாணத்தின் கட்டளைப்படி. உபா. 16: 16.

2. செருபாபேல் சரியானபடி சலாத்தியேலின் தம்பியாகிய பெதாயாவின் குமாரன். ஆனால் சலாத்தியேலுக்குக் குமாரரில்லாததினாலும், இராஜ வம்சவரிசை செருபாபேல்வழியாய்ச் சென்றதினாலும், சலாத்தியேலின் மகன் என்னப்படுகிறான்.

"தேவனுடைய மனிதன்" இந்தக் கனமானபேர் வேதாகமங்களில் (5) விசை மோசேக்கு வழங்கியிருக்கிறது. உபா. 33: 1. யோசு. 14: 6. 1 நாளா. 23: 14. 2 நாளா. 30: 16 எஸ்று. 3: 2. மூன்றுதரம் தாவீதுக்குச் சொல்லப்படுகிறது. 2 நாளா. 8: 14. நெகே. 12: 24, 36. செமாயாவுக்கு ஒருதரம் சொல்லப்படுகிறது. 1 இராசா 12: 22.

4. "எழுதியிருக்கிறபடி." உபா. 16: 13—15. லேவி. 23: 34—42. "கணக்கு." எண். 29: 13, 17, 20, 23.

9. "யெசுவா." இவன் பிரதான ஆசாரியனல்ல. திரும்பிவந்த இரண்டு லேவி வம்சங்களில் ஒன்றுக்கு இவன் தலைவன். 2: 40.

---

4. அதிகாரம்.

"சத்துருக்கள்." பின்சம்பந்தத்தினாலே இவர்கள் சமாரியர் என்று தெரியவரும். இவர்கள் கலப்பு சனங்கள் . ஒரு பங்கு இஸ்ரவே

லராயும் பெரும்பாலும் அந்நிய ஜாதியாராயுமிருந்தார்கள். இவ்விடத்து பூர்வகுடிகளாகிய இஸ்ரவேலரை சர்கோன் இராசா சிறையாக்கிக் கொண்டுபோன பிற்பாடு அவர்களிருந்த இடத்திலே இவர்களைக் குடியேற்றினான். (2 இரா. 17: 6) வாசி.

(கவனிப்பு—சமாரியாவைப் பிடித்த அசீரியா இராசா, சல்மனாசர் அல்ல, "சர்கோன்" என்று அசீரிய சாசனங்களினால் துலங்குகிறது. இவன்தான் ஆண்ட முதலாம் வருஷத்தில் இவர்களைச் சிறைப்பிடித்ததாகச் சொல்லப்படுகிறது. இது கி. மு. 721௵. இராசாக்களின் புஸ்தகத்தை எழுதினவன், சல்மனாசர் சிறையாக்கினான் என்று சொல்லாமல், "அசீரிய இராசா" என்கிறான். 2 இராசா 18: 10 னால் இன்னம் தெளிவாகிறது. இதில் சல்மனாசர் பிடித்ததாகச் சொல்லாமல் "அவர்கள்,,அதைப் பிடித்தார்கள். என்றிருக்கிறது. முதலில் சமாரியாவிலிருந்து, 27,280 பேரை சர்கோன் சிறைப்பிடித்துக் கொண்டுபோனான். அப்பொழுது அவன் சமாரியாவின் குடிகளை முழுவதுமாய் அற்றுப்போகப்பண்ணவில்லை. மீதியாயிருந்த குடிகளுக்கு, அவர்கள் ஜெயிக்கப்படுமுன்னிருந்த தாரணைப்படி தீர்வையைச் சுமத்தினான். ஆனால் அவன் அரசாட்சியின் பிந்திய காலங்களில் 2 இராசா 17: 6 ல் சொல்லியபடி எல்லாரையும் சிறைப்பிடித்துக்கொண்டு போனான். இவன் செய்துவந்த யுத்தங்களிலெல்லாம் இப்படிச் சிறைபிடித்துக்கொண்டுபோவதே இவனுக்குவழக்கம். இவனுடைய சாசனங்களில் துலங்குகிறபடி அந்த நாட்டில் அரபியரைக்கொண்டு போய் குடியேற்றினான்.]

2. "உங்கள் தேவனை நாடுவோம்." 2 இரா. 17: 24—28 ஒடு.

"நாட்கள் முதல்" ஏசரத்தோன் கி. மு. 681௵-ல் அசீரியாவுக்கு இராசனாகி, கி. மு. 668௵வரை ஆண்டான். இப்படியாக குறைந்த பக்ஷம் 130௵த்துக்கு முன் நடந்த சங்கதியை சமாரியர் சொல்லுகிறார்கள்.

இவ்விடத்துக்கு எங்களை வரப்பண்ணின அசீரியாவின் இராசாவாகிய "ஏசரத்தோன்." அசீரியா இராசாக்கள் சமாரியாவை (3) விசை குடியேற்றுவித்ததாகத் தோன்றுகிறது. (1) "சர்கோன்" தான் சமாரியாவைக் கீழ்ப்படுத்தின உடனே, பாபிலோனியாவிலும் ஆமாத்திலுமிருந்து வேறே ஆட்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். 2. இரா. 17: 24. (2) இவன் அரசாண்ட பிந்திய காலத்தில், தான் முதலில் குடியேற்றினவர்களோடு அரபியரையும் கொண்டுவந்து சேர்த்தான். (3) இதற்கு 30 அல்லது 40௵ங்களுக்குப் பிற்பாடு இவன் பேரனாகிய ஏசரத்தோன் தன் இராச்சியத்தின் பற்பல இடங்களிலும், முக்கியமாய் தென்கீழ்பாகத்திலுள்ள சூசியானா, எலிமாயிஸ், யார்சு என்னும் இடங்களிலிருந்து மிகுதியான குடிகளைக் கொண்டுவந்து இருந்தவர்களோடு சேர்த்தான். (9வா) இப்படியாக எஸ்று காலத்தி

லிருந்த சமாரியர் முற்றிலும் பல ஜாதிக் கலப்புள்ளவர்களாயிருந்தார்கள்.

"சம்பந்தமில்லை." இது கடினமான உத்தரவுபோல் தோன்றினாலும் மெய்த்தேவாராதனையோடு விக்கிரகாராதனைக் கடுத்த சடங்குகளையும் சமாரியர் சேர்த்திருந்ததினாலே, அவர்களோடு சேர்ந்து தேவாலயத்தைக் கட்டுவது, பூசமார்க்கத்தின் சுத்தத்தை அழித்துக் கெடுத்துப் போடுவதாயிருக்குமாதலால் இவர்களை சேராதது நியாயந்தான்.

இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி)

நித்தி யானந்த ராஜ்ஜிய நெறி கடைப்பிடித்துப்
பத்தி யானது பழுத்தலை போலநீ பகர்ந்த
முத்தி மாநலம் உளைநில முழுமையுங் கடந்து
தத்தி யேறி அக்கரைப் படிற் பெற்றனை தக்கோய். 118

என்று கூறிய வமைதியில் மறைந்துடன் இயைந்து
நின்ற காமமோ கிசன்பிர பஞ்சன் நன் னெறியைத்
தொன்று தொட்டறத் துடைத்திட முயல்கின்ற தூர்த்தன்
ஒன்றி மூவருங் குதுகலித் தோடிவந் துற்றூர். 119

உற்றடைந்து மென்னெஞ்சனுக் குவப்புரைபேசிப்
பற்றி ஈர்த்தனர் பிடர்பிடித் துந்தினர் பழுது
துற்று சிந்தையி னூனு மங்கவரொடு தொடர்ந்து
நற்றி றங்கெடு நாசதேசத்தை நண்ணினனால். 120

கோது தற்றிய நிலையிலாக் குச்சித வாழ்வைக்
காதலித்து நித்தியசுக வாழ் வினைக் கசந்தான்
ஏதங் கொண்டுநல் லூதியம் போகவிட் டிடுமிப்
பேதைக் கெங்ஙனம் வாய்க்குங்கொல் பேரருட் பெற்றி. 121

நிருவி சாரத்தை யடைதலும் நெறிநிலா மாக்கள்
பெரு விசாரியைப் பின்றொடர்ந் தேகிய பித்தன்
வரு விசாரத்தை யறிகுதும் யாமெனா வல்லே
தெரு விசாலத்தை யடைத்தனர் வயின்றோறும் திரண்டு. 122

மீண்ட காரியம் வினவிநன் றெனச்சிலர் வியந்தார்
மாண்ட போதினும் வசையறு தெனச்சிலர் வைதார்
ஆண் டவஸ்தையுண் டென்றுகண் டச்சமுற் றவலித்
தீண் டணைந்தனன் கோழையென் றூர்சிலர் இகழ்ந்து. 123

முட்டிப் பின்குனி மூடனென் றூர்சிலர் முனிந்து
திட்டிப் போயினர் சிலர் சிலர் தீண்டலி ரிவனைக்
கிட்டிப் பேசினுங் கேடென்றூர் சிலர் சிலர் கெழுமி
மட்டிக் காயிரஞ் சொலினும் நன்மதிவரா தென்றூர். 124

மறங் குலாவிய மனத்தின ரின்னணம் வகுத்துப்
புறங் குரைத்திட வூசலா டுளத்தொடும் போனான்
இறங்கு சென்னிய னாகிமென் னெஞ்சனாண் டிப்பால்
அறங்குலாவிய வேதியற் குற்றதை யறைவாம். 125

மயல் அளற்றில் வீழ்ந்துழல்பவன் மருவு தன்பலத்துக்
கியலு மட்டுமக் கரைப்பட முயன்றுமெய் தரிதாய்ச்
செயல் ஒழிந்தியான் திருமினும் தேசநாசத்தில்
அயல் உளாரொடும் அவிவனே யென்றறி வழிந்தான். 126

சேற்று நீணிலம் கடந்து நன்னெறிக் கரைசேர
ஆற்ற லின்றிநின் றுகுலித் தவசமுற் றருகே
தோற்று மிச்சுடர் வாயிலைத் துன்னியான் உய்ய
மாற்ற ருந்துணை வாய்க்குமோ வீண்டென மலைந்தான். 127

ஆபகாலை நஞ்சுண்டவர்க் கருமருந்தளிக்கும்
சேய நன்மருந் ததிர்ந்தெனத் தேம்பிநின் றழுசேய்க்
கா யெதிர்ந்தென அஞ்சலென் றுங்குவந்தடுத்தான்
நேய மிக்க சஹாயனென் றுரைபெறு நெடியோன். 128

கிட்டிவந்து நின்றெம்பிநீ கெடுநொதி யிசனுட்
பட்டுயங்குவ தென்னைநம் பார்த்திவன் அருளால்
இட்ட கற்களி லூன்றிநின் றிக்கரை யேறாத்
அட்ட திக்கையும் பார்ப்பதென் அவமதி யென்றான். 129

ஐய கேள்சுவிசேஷகனுருயிர்க்கரணும்
தெய்வ வாயில்புக் குய்தியென் றுரைத்தனன் தெருண்டு
மெய் யொளிக்குறி பிடித்தியான் விரைந்து வந்தளற்றில்
வெய்ய தீவினை முன்னின்று வெருட்டலில் வீழ்ந்தேன். 130

கண் ணிருண்டுளங் கலங்கலாற் கதித்திடுஞ் சுமையால்
அண்ணல் வாக்கினில் அமைந்த அஞ்சிலை தெரியாமல்
எண்ண மிட்டுழல் கின்றனன் இவனென விசைத்தான்
நிணையங் கடைப் பிடித்துநல் வழிப்பட்ட நிவிர்த்தன். 131

சொற்ற தோர்ந்தருட் சஹாயனும் துரிசறு முரைக்கல்
இற்றி தீதெனக் காட்டி ஆண்டூன்றி நின் றென்கை
பற்று கென்றுதன் கரங்கொடு பற்றியீர்த் தூரங்கொள்
நற்ற வாக்கனே நிறுவிமற் றவற்கிவை நவில்வான். 132

நல்ல நூனெறி யாமிது வாயிலை நாடிச்
செல் லயற்புறம் விலகிடிற் றீங்குறல் திண்ணம்
புல்ல ரோடுறை யாடிவீண் பொழுது போக்காது
ஒல்லை யேயென விடை கொடுத் தேவினன் உவந்து. 133

தீங்கு சேர்ந்ததும் செஞ்சுடர் முன்பனி சிதறி
நீங்கு மாறு சுரேந்திரன் அருளிய நெறியும்
ஓங்கும் அன்பொடு சஹாயன் வந்துதவிய உரித்தும்
வீங்கு காதலோ டுன்னி வேதியனிவை விளம்பும். 134

இல்லை நோய் பசிதாக மாதிய துயரொன்றும்
இல்லை மூப்பகையால் வரு முபாதிக ளென்றும்
இல்லை வேதனை யுற்றழு கண்கணீரொன்றும்
இல்லையோர் குறை யெம்பிரானி ராஜ்ஜியத்தென்றும். * 135

அரவு கவ்விய தேரையை மீட்டென அநாதத்
துர வளற்றினின் றெனைக் கரை யேற்றிய தோன்றால்
காவி லாதுனைப் பழிச்சுவ தலதுகைம் மாறென்ற்
உரவு நீணிலத் துண்டுகொல் யானுனக்குதவ. 136

பன்னரும்பல பாதகம் பயின்ற பாமரனும்
என்னை யுன்ன வெம்மாத்திரம் எம்பிரானுளத்தில்
அன்ன தாசநின் னரியபே ருதவி யெற்கமைத்த
மன் னிரும்பெரும் கருணைக்கு முளகொலோ வரம்பு. 137

பற்றி யாதுமின் றுசவும் பரிந்துமெய் யன்போட்
உற்று சேர்ந்தவர்க் குயிரளித் தாயினு முதவி
முற்றி யாதரம் புரிவரால் முன்னவன் அருளைக்
கற்று வல்லசான் றோரெனக் கேட்டுனைக் கண்டேன். 138

என்று பன்முறை நன்றியை வியந்தின இயம்பித்
தன்று ணைக்கரங் குவித்து வந் தனம்பல சாற்றி
முன்று றுங்கடை வாயிலை நோக்கினன் முடுகிச்
சென்றனன் ஒரு தமியனாய் வேதியர் திலகன். 139

நிகழ்ந்த சம்பவம் யாவுங்கை நெல்லியம் கனியில்
திகழ்ந்த அவ்வயிற் சஹாயனை நோக்கியான் திருமி
அகழ்ந்து வைத்தவர் யாவர் இந்நொதிக் கிடங் கரசன்
இகழ்ந்த தென்னையோ செவ்விதாக் காமலிவ் வழியை. 140

பரம ராஜ்ஜியம் நாடியோர் படர் நொதியிதனுள்
உரமி லாதுவீழ்ந் தயங்கவிட்டிருப்பதென்னுரிமை

* இது. 110ம் கவியாக இருக்கவேண்டும். முன்விடுபட்டதினால் இங்ஙனம் சேர்த்திருக்கிறது.

தரமி லாதுயர் மகிபதி யருட்கிது தகுமோ
வரம னேகர தெரித்தியென் றுரைத்தனன் வணங்கி. 141

நம்பி சொல்லுவல் கேட்டிமற் றிதன் றிறம் நலஞ்சேர்
தம்பி ராளொடு மாறு கொண் டிடுமொரு சழக்கன்
வெம்பி மானிடக் குழுக்களை நன்னெறி விலக்கிக்
கும்பி பாகத்திற் குடிபுகுத் துவதவன் கொள்கை. 142

சேற்று நீணில மாமிது செய்த தீவினையைத்
தோற்று விப்பது பரனருள் மறைத்திருள் தொகுத்து
மாற்ற ருந்திகில் விளைப்பது வன்றுயர் குழுமி
வீற்றி ருப்பது நொதிப்பது வெறுமனஸ்தாபம். 143

வஞ்ச நெஞ்சென வாழ்ந்தது மருவு மூவாசை
விஞ்சி னலெனப் பரந்தது வெவ்வினைத் திரள்போற்
செஞ்சவே செறிந் துளதுபொய் வேதியர் செயலில்
எஞ்சு றுதலுர்ந் நாற்ற மிக்கது புறம் எங்கும். 144

கால் நிலைத்து நின்றேலிடக் கவிழ்ந்த அஞ்சிரத்தை
மேல் நிமிர்த்த வொட்டா தமிழ்த்துவ திதை விறல்கொள்
ஆணி துற்றிய அழிம்பனும் அலகைமுன் அகழ்ந்தான்
நாணி லத்தவ நம்பிக்கை யெனப்படும் நாமம். 145

செப்ப னிட்டிட முடிவதன் றுகலிற் சேற்றுக்
கெப்பு றத்தினும் இடைக்கிடை யிருஞ்சிலை நிறுவி
ஒப்பம் இட்டனர் கருணைமன் அதுபிடித் தூந்தித்
தப்பி இக்கரைப் படுகிலார்க ளுய்விலை தக்கோய். 146

தேமலர்த் தொடை நரபதி யொருவன் முன்தியங்கி
காம மோகிதன் எனுமொரு கள்வனாற் கவிழ்ந்திங்
கேம மின்றியே தத்தளித் திடருழந் திளைந்தான்
மீமகீபதி நிறுவிய சிலைபற்றி மீண்டான். 147

மீண்டி ருங்கரை யேறியுய்ந் தவர் சிலர் மீளா
தியாண்டும் நீங்கரி தாகிவெவ் விடருழந் தேங்கி
ஆண்ட நாயகன் அருட்டுணை பற்றிடா தவமே
மாண்டு போனவர் வாரிதி மணலினும் பலரால். 148

மண்ணில் ஆரண நூனெறி மயக்கற விளக்கி
விண்ணில் ஆரருள் ஞான சூரிய னொளிவீசக்
கண்ணி லானென மருண்டுளைப் படுவது கருதில்
அண்ண லார் பிழை யன்றிவர் அறிமட மாமால். 149

மன்ன னேவலில் வருபிரயாணிகள் வழுவி
இன்ன லெய்திடா திராஜ பாதையினிரு மருங்கும்

முன்னர் ஆக்கிய பித்தியுண் டிவ்வகை மோசம்
துன்னு முதுசெந் நெறிக்கடை வாயிலைத் துன்னில். 150

இன்ன வாறெனக் கிதமுற வெழின்முக மலர்ந்து
நன்னர் வாசகம் நவிற்றிய சஹாயர்க்கு நன்றி
பன்னி யஞ்சலி வரன்முறை பணிவுடன் நல்கிச்
சொன்ன வேதியன் நிலையினை நாடுவான் துணிந்தேன். 151

(இன்னும் வரும்.)

Narrative of the Mutiny of the Bounty.

நோர்போக்த் தீவார் விர்த்தாந்தம்.

உத்தேசம் நூறு வருஷத்துக்கு முன்னே, மேல் இந்தியத் தீவுகளில் வர்த்தகம் நடப்பித்தும் கிருஷி முயற்சி செய்தும் லாபமடைந்து வந்தவர்கள், ஈரப்பலா (Bread-Fruit.) என்ற மகா அருமையான விருட்சத்தை மேற்படி தீவுகளில் பயிரிட்டு விர்த்தி செய்யவேண்டுமென்று ஆவலும் கவலையுமுள்ளவர்களானார்கள். இப்பேர்ப்பட்ட காரியம் துரைத்தனத்தாருடைய முயற்சியினாலேயன்றி மற்றப்படி அவ்வளவு அநுகூலமாய் முடியாதென்று உணர்ந்துகொண்டு, அக்காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் செங்கோல் செலுத்தின அரசனிடத்தில் அதைக்குறித்து மனுப்பண்ணினார்கள்- மந்திரிமார்களுடைய தாக்ஷிணியத்தினாலே மேற்படி மனு அங்கீகாரமாகவே, தாங்கள் கருதிய காரியத்தை நிறைவேற்றும் பொருட்டு, 1787-ம்௵ ஆகஸ்டு௴ 16௳ பௌண்டி (Bounty) என்னப்பட்ட பலமான ஓர் கப்பலைத்தெரிந்து பிளை (Captain W. Bligh.) என்ற ஒருவரை அதை நடத்தும் மாலுமியாகவும் நியமித்து கப்பலை அவர் வசத்தில் ஒப்புவித்தார்கள். கப்பலுக்குரிய பற்பல வேலைகளைச் செய்வதற்கு 44 ஆட்களும் செடிகளைப் பரிபாலனஞ்செய்வதற்கு கூட இரண்டுபெயரும் ஆக நாற்பத்தாறு ஆட்கள் நியமிக்கப்பட்டதோடு பதினெட்டு மாசத்துக்குப் போதுமான போசனபதார்த்தங்களும் தளவாடங்களும் கப்பலில் சேகரித்துவைக்கப்பட்டன.

பௌண்டிஎன்ற கப்பல் இவ்வாறு ஆயத்தமாகி, மேற்படி ௵ டிசம்பர்௴ 23௳ பாய்வலித்தோடியது. அப்புறம் நடந்த சம்பவங்களைக்குறித்து, பிளைஎன்ற மாலுமி தானே நேர்த்தியாய் எழுதியிருக்கிற பிரபந்தத்தை இங்ஙனம் சுருக்கிச் சொல்லுவோம். அவர் சொல்வது;—

இந்த யாத்திரையைக்குறித்து கப்பல்தளக்கர்த்தர்களால் எனக்கு விதிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் என்னவென்றால், நான் புறப்பட்டு கூடிய சீக்கிரத்தில் ஹார்ண்முனையைச் சுற்றி சோசைட்டித்தீவுகளுக்குப் போகவேண்டும். அங்குசேர்ந்தவுடனே, தேவையான செடிகள் விருக்ஷங்கள் சவதரித்துக் கப்பலிலேற்றிக்கொண்டு, நியுஹோலாந்து தீவையும் நியுகினியாத்தீவையும் பிரிக்கிற எண்டவர் கால்வாய் வழியாய் சுண்டாக்கால் வாயிலிருக்கும் பிரின்ஸ்தீவுக்குப் போகவேண்டும். வசதியாயிருக்குமாயின் அவ்விடம்போவதை நிறுத்தி ஜாவாத்தீவின் கீழ்கரை பிடித்தோடி மேற்படிதீவின் வடபாரிசத்திலுள்ள ஓர் துறைமுகத்திற் சேரவேண்டும். கொண்டுபோயிருந்த ஈரப்பலாக்கன்றுகள் சேதப்பட்டாவது பட்டுப்போயாவது இருந்தால் அவற்றிற்குப் பதிலாக வேறுநல்லகன்றுகள் இவ்விடத்தில் சேகரித்துவைத்துக்கொள்ளவேண்டும். அப்புறம் பிரின்ஸ்தீவையாவது ஜாவாத்தீவையாவது விட்டுப்புறப்பட்டு நன்னம்பிக்கைமுனையைச் சுற்றி மேல் இந்தியதீவுகளுக்குப்போய் விண்டுவார்ட்தீவுகளில் நட்டுப் பயிர்செய்யும்பொருட்டு மேற்படி செடிகள் விருக்ஷங்களில் பாதியை வின்செண்டு தீவிலிறக்கிவிட்டு ஜமேய்க்காத்தீவுக்குப் போகவேண்டும். அவ்விடம்போனவுடனே இக்காரியத்துக்காக தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களிடத்தில் மீதியான செடிகளை ஒப்புவித்துவிட்டு கூடியசீக்கிரம் இங்கிலாந்துக்கு நாங்கள் திரும்பிவிடவேண்டும் என்பவைகளே.

மேலே நான குறிப்பித்த பிரகாரம், இந்தத்திட்டங்களுக்கிணங்க 1787ம்௵ டிசம்பர்௴ 23௳ ஸ்பித்தெட்துறை பெயர்ந்து பாய்வலித்தோடி 1788ம்௵ ஏப்பிரல் மாதத்துவக்கத்தில் ஹார்ண்முனைக்கு அருகாண்மையில்வந்து சேர்ந்தோம். இம்மட்டும் விசேஷித்த யாதொரு காரியமும் சம்பவிக்கவில்லை. ஹார்ண்முனையைச் சுற்றி யாத்திரை செய்ய நான் கற்பிக்கப்பட்டிருந்தும், எதிர்காற்று பலமாயடித்துக்கொண்டிருந்தபடியால் எவ்வகை முயற்சியினாலும் அந்தமார்க்கமாய்ச் செல்வது கூடாதிருந்தது. ஏப்பிரல்௴ 9௳ காலையில், மெகலன்கால்வாயின்மேல் பாரிசத்திலிருக்கிற டெசீடாமுனைக்கு மேற்கே மூன்று பாகைதூரம் வந்தோம். இதுதான் மேற்கில் நாங்கள் சென்ற அதிகமான தூரம். அன்று சாயங்காலத்துக்குள்ளாக கப்பல் அவ்விடம்விட்டுப் பேர்ந்து எதிர்திசையாயோடி கிழக்கே நாலு பாகைபோல் போய்விட்டதாகவும், மேலும் மேலும் அத்திசையே போய்க்கொண்டிருந்ததாகவும் கண்டுபிடித்தோம். அதினால் இந்த மார்க்கமாய் சோசைட்டித்தீவுக்குப்போகப் பார்ப்பது அசாத்தியமென்றும் அவிவேகமென்றும் தெரியவந்தது. காற்று திசைமாறி அநுகூலப்படாதோவென்று யோசித்தால் அதற்கும் எவ்வளவேனும் இடமிருந்ததில்லை. மேலும் அடித்துக்கொண்டிருந்த காற்றுக்கு எதிரே கப்பலைச்செலுத்த எத்தனிப்பது முற்றும் ஏலாத காரியமென்றும் காற்று அநுகூலப்படாத பக்ஷத்தில்

முன்னுக்குச்செல்வது அரிதென்றும் நாங்கள் அனுபவபூர்வமாயறிந்துகொண்டோம். ஆனால் காற்று சமரேகைக்குத் தெற்கே கிழக்காக அடித்துக்கொண்டிருந்தபடியால், அதிசீக்கிரம் நன்னம்பிக்கைமுனைசேர்ந்து, அங்கிருந்து பாய்வலித்து நியுஹொல்லாந்து தீவைச் சுற்றி கிழக்காகச் செல்வது லேசென்றும் பரிஷ்காரமாய் விளங்கிற்று. இத்தியாதி காரியங்களையெல்லாம் தீர்க்கமாயாலோசித்துத் தெளிந்துகொண்டதின்பேரில் எனக்குக் கற்பிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கு விபரீதமாய் நன்னம்பிக்கைமுனைக்குக் கப்பலைச் செலுத்தத் தீர்மானித்தேன். அவ்வாறே ஷை ௴ 22௳ சாயந்தரம் ஐந்து மணிக்கு காற்றும் மேற்காக பலமாய் அடித்துக்கொண்டிருக்க, சுக்கானைத் திருப்பிக் கப்பலை யெதிர்திசையாயோட்டும்படி உத்தரவுகொடுத்தேன் அது கப்பலிலிருந்த சகலருக்கும் மிகவும் சந்தோஷமாயிருந்தது. அதன்பேரில் காற்று எங்களுக்கு அனுகூலமாயிருந்ததினாலே, மேய் ௴ 24௳ நன்னம்பிக்கை முனையில் சேர்ந்து அங்கே முப்பத்தெட்டு நாள் தாமதித்திருந்து நானாவிதமான தளவாடங்களும் போசனபதார்த்தங்களும் ஏற்றிக்கொண்டோம். நன்னம்பிக்கை முனையிலிருந்து பாய்வலித்து வண்டிமன்தீவுக்கு நேரேயோடி 1788௵ ஆகஸ்டு௴ 20௳ மேற்படி தீவிற் கரைபிடித்தோம். இவ்விடத்தில் அநேகநாளிருந்து, நன்னம்பிக்கை முனையிலிருந்து நாங்கள் கொண்டுவந்த கனிவிருக்ஷங்களில் சிலவற்றை நட்டதுமன்றி, அத்தீவாரோடு பழகி உறவுபண்ணவும் பார்த்தோம். ஐரோப்பியக் கப்பற்காரர் முன்னிரண்டொரு விசை அவ்விடத்துக்கு வந்திருந்தும், நாங்கள் விரும்பிய காரியம் கைகூட்வில்லை. ஒருநாள் அவர்கள் கடற்கரையில் கூட்டமாய்த் திரண்டுவந்து வாத்துக்களைப்போல் கொக்கரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு பலவாறு சைகைகள் காட்டி சில அற்ப வெகுமதிகளுங் கொடுத்தோம். என்றாலும் அவர்கள் எங்களிடத்தில் நெருங்கி வரவும் உறவு பண்ணவும் மனமற்றிருந்தார்கள். இந்த வண்டிமன் தீவார், கூக் என்ற மாலுமி குறிப்பித்திருக்கிறபடி கறுப்புநிறமுள்ளவர்கள். வளர்த்தியில் குள்ளர். அவர்களுக்குள் ஒருவனுடைய தேகத்தில் மாத்திரம் செங்காவி மண்பூசியிருந்தது. மற்றவர்களெல்லாரும் ஓர்வகை புகையுறையினால் கறுப்புப் பூசியிருந்தார்கள். இந்தப் பூச்சி முகத்திலும் தோளிலும் ரொம்பத் தடிப்பாயிருந்ததினால் அவர்கள் முகத்தோற்றம் எப்படிப்பட்டதென்று அறிய ஏதுவில்லை. அவர்கள் மலையேறுவதில் மகா வேகமுள்ளவர்களாயும், வெகுதூரம் பார்க்கக்கூடியவர்களாயும் எறியப்பட்ட பதார்த்தங்களைப் பிடிப்பதில் சாமர்த்தியமுடையவர்களாயும் விளங்கினார்கள். அவர்கள் முழங்கால் அக்கிளைத் தொடத்தக்கதாகக் குந்தியிருந்துகொண்டு எங்களோடு பேசினார்கள். எவ்வளவேனும் உடையில்லாமல் முழு நிருவாணிகளாயிருந்தார்கள்.

வண்டிமன்தீவைவிட்டுத் துறைபேர்ந்து தென் கிழக்காயோடி

நியுசீலாந்து தீவின் தென்பாரிசமாய்ச் சென்று ஒத்தயத்தித்தீவிற் கரைபிடிக்கும்படி கப்பலைநடத்தினோம். வண்டிமன்தீவைவிட்டுப் புறப்பட்ட ஐம்பத்திரண்டாம்நாள் அக்டோபர்௴ 25௳ மேற்படி தீவைக் கண்டோம். இந்த நாட்களில் கவனிக்கத்தக்க யாதொரு காரியமும் நடக்கவில்லை. கப்பலாட்களில் ஒருவன் க்ஷயரோகத்தினால் இறந்துபோனான். மற்றவர்களெல்லாரும் சுகமாயிருந்தோம். அக்டோபர்௴ 25௳ அதிகாலையில் வீனஸ்முனை பத்துப் பன்னிரண்டு மைல் தூரத்திலிருக்கிறதாய்க் காணப்பட்டது. நாங்கள் அதைக் கிட்டிப்போகவே, அநேக படவுகள் எங்களிடத்திற்குப் புறப்பட்டுவந்தன.

ஞாயிற்றுக்கிழமையாகிய அன்றுதானே நாங்கள் தீவின் கரைசேர்ந்து நங்கூரம்போட்டோம். அந்நேரமுதல் தீவார் மேலும்மேலும் கப்பலுக்கு வந்துகொண்டேயிருந்தார்கள். ஆகிலும் முக்கியமான பிரதானிகள் ஒருவரும் இன்னம் வரவில்லை. கீழ்த்தரத்துத் தலைவர் இரண்டொருவர் எங்களுக்குச் சில பன்றிகள் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதற்கு ஈடாக நானும் அவர்களுக்குப் பல வெகுமதிகள் கொடுத்து அனுப்பினேன். தேங்காய் எங்களுக்கு ஏராளமாய்க் கிடைத்தபோதிலும் ஈரப்பலாக்காய் அபூர்வமாயிருந்தது. கூக்மாலுமியைக்குறித்தும் இயோசேப்பு பாங்ஸ்துரை மற்றும் பல சிநேகிதர்களைக்குறித்தும் வெகுவாய் விசாரித்தார்கள். சிலகாலத்துக்குமுன்னே ஒரு கப்பல் அவ்விடத்துக்குவந்திருந்ததாகவும் அதின்மூலமாய் கூக்மாலுமி இறந்துபோனதாய் அறிந்துகொண்டதாகவும் சொன்னார்கள். ஆகிலும் அவர் மரணமடைந்த வகை விவரங்களை அவர்கள் அறிந்திருந்ததாகத்தோன்றவில்லை. என் கப்பலாட்கள் ஒருவம் அதை எவர்களுக்காவது சொல்லப்படாதென்று நானும் கண்டிப்பாய்க் கற்பித்திருந்தேன். கூக் மாலுமி கடைசி விசையாய் இவ்விடத்துக்கு வந்திருந்தபோது மத்தவாயென்ற இடத்துக்குப் பிரதானியாயிருந்த ஒட்டூ என்பவன் தற்சமையத்தில் தீவின் வேறொரு பாகத்துக்குப் போயிருந்தான். நாங்கள் வந்திருக்கிற செய்தி அவனுக்குப் போயிருக்கிறதென்றும் அவன் சீக்கிரமாய் வந்துவிடுவானென்றும் அறிவித்தார்கள். தீவார் பெரும்பாலும் எங்களைக் குறித்து நல்லெண்ணமுடையவர்களாக விளங்கினார்கள். நாங்கள் அவ்விடம் வந்ததின் பொருட்டு மிகுதியும் சந்தோஷப்பட்டார்கள்.

திங்கள் அதிகாலையில் சுதேசிகள் கப்பலுக்கு வருகிறதற்குள்ளாக நங்கூரந்தூக்கிக் கப்பலைத் தீவுக்குச் சமீபமாய்க்கொண்டுபோய் கரைக்கு முக்கால் மைல் தூரத்தில் நங்கூரம்போட்டோம். கப்பல் நின்ற இடத்தில் ஏழு பாகந் தண்ணீரிருந்தது. அப்பால் பல பிரதானிகள் கப்பலுக்கு வந்து என்னைக் கண்டு மிகுதியும் சந்தோஷப்பட்டார்கள். அவர்களில் ஒருவனோடு நானும் கரைக்குப்போனேன். கரையிற்சேர்ந்த

வுடனே திரள் கூட்டமானஜனங்கள்வந்து என்னைக் கனிசமாயும் பக்ஷமாயும் ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்குள் மேற்படி பிரதானியின் மனைவியும் சகோதரியும் ஒரு பாயும் ஒரு வஸ்திரமுங் கொண்டுவந்து தீவார் வழக்கப்படி வஸ்திரத்தை எனக்கு உடுத்தி மரியாதைசெய்தார்கள். இவ்வாறு வஸ்திரம் தரிக்கப்பட்டபின், அவ்விருவரும் என்கைகளை ஒவ்வொருவர் ஒவ்வொன்றாகப் பிடித்துக்கொண்டு கரையோரமட்டும் என்னோடு நடந்துவந்து, சீக்கிரம் கப்பலில்வந்து என்னைக் கண்டுகொள்வோமென்று சொல்லி வழியனுப்பிக்கொண்டுபோய்விட்டார்கள். இதனிடையில் சுதேசிகள் திரளான பேர் போசனபதார்த்தங்கள் கப்பலிற்கொண்டுபோய்க் கொடுத்திருந்தார்கள்.

மறுநாள் அதிகாலையில் ஒட்டேஎன்ற பிரதானி கடற்கரையில் வந்து நின்றுகொண்டு கப்பலுக்கு வர மனதாயிருக்கிறதாக எனக்குச் செய்தியனுப்பினான். உடனே நான் ஒரு படகு அனுப்ப, அவனும் அவன் மனைவியும் அதிலேறிவந்து என்னைக் கண்டதற்காக அத்தியந்த சந்தோஷப்படுகிறதாக வெளியிட்டார்கள். ஒரு காரியம் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. அது என்னவென்றால் ஒட்டு என்ற அவனுடைய பழயபெயரை மாற்றி தீனு என்ற பெயரை வழங்கிவந்ததுதான். மேலும் அத்தேச ஆசாரப்படிக்கு ஒட்டுஎன்ற பெயர் யீரி ராகி என்னும் பட்டப்பெயரோடு சேர்த்து சிறுவனாயிருந்த அவன் குமாரனுக்கு வழங்கிவந்ததாகவும் அறிந்தேன். தீனுவின் மனைவியின் பெயர் இடியாள் என்பது-வேறொருபெண்ணும் அவர்களோடு வந்திருந்தாள். அதிகமான வஸ்திரம் அவளைச் சுற்றிக் கட்டியிருந்தது. அதை அவிழ்த்து அதையும், ஒரு பன்றி கொஞ்சம் ஈரப்பலாப்பழம் முதலியவற்றையும் எனக்கு வெகுமதியாகத் தந்தார்கள். அதன்பேரில் நானும் அவர்களை என் அறைக்குள் கூட்டிக்கொண்டுபோய் சில வெகுமதிகள் கொடுத்தேன். தீனு என்பவன், கைக்கோடாரிகள் வாய்ச்சிகள் கைவாள்கள் அரங்கள் முகம்பார்க்குங் கண்ணாடிகள் சிவப்பு இறகுகள் இரண்டொரு வஸ்திரங்கள் முதலியவைகளும்; இடியாள், காது நகைகள் கழுத்துமணிகள் முதலிய ஆபரணங்களும் பெற்றுக்கொண்டார்கள். இடியாளுக்குக் கொடுத்த பதார்த்தங்களின் பேரில் அவளுக்குத் திர்ப்தியில்லாமல் தனக்கும் இரும்புச் சாமான்கள் பேரில் தான் பிரியமென்று சொன்னாள். அதன்பேரில் அவள் புருஷனுக்குக்கொடுத்த பதார்த்தங்களெல்லாம் அவளுக்கும் கொடுக்கப்பட்டது. அப்பால் அந்தந்தப் பதார்த்தத்தின் தாரதம்மியத்தைக் குறித்து வெகுவாய்ப் பேசிக்கொண்டு மிகுந்த இரம்மியமும் சந்தோஷமுமடைந்திருந்ததாகக் காணப்பட்டார்கள். அதற்குப் பின் அவர்கள் அந்தநாள் முழுவதும் என்னோடு பின்னிடத் தீர்மானித்து, கப்பலின் சகலபாகங்களையும் முஸ்திதுகளையும் தங்களுக்குக் காண்பிக்கவும் விசேஷமாய் நான் நித்திரை செய்த அறையைக் காண்பிக்கவும் கேட்டுக்கொண்டார்கள். இது என

க்குப் பிரியமில்லாதிருந்தபோதிலும், அவர்கள் விருப்பத்துக்கு இணங்கிக் காண்பித்தேன். அதினால் விளைந்த கெடுதியென்னவென்றால், அவர்கள் கண்டபொருட்களையெல்லாம் விருப்பப்பட்டுக் கேட்டபடியால், முன் அவர்களுக்குக் கொடுத்த அத்தனை சாமான்கள் மறுபடியும் கொடுக்க நேரிட்டதுதான். அப்புறம் தீனு என்பவன் கப்பலிலிருந்த பெரிய பீரங்கிகளிற் சிலவற்றைச் சுடும்படி கேட்டுக்கொண்டதற்கும் சம்மதித்தேன். சுடப்பட்ட குண்டுகள் சமுத்திரத்தில் வெகுதூரத்திற்போய் விழுந்ததைச் சுதேசிகள் பார்த்தபொழுது, வெகுவாய்ப் பிரமித்து எல்லோரும் ஏகோபித்துக் கைகொட்டி ஆர்ப்பரித்தார்கள்.

தீனுமுதலிய அநேகபிரதானிகள் அன்று என்னோடு சாப்பிட்டார்கள். அத்தீவில் பெரிய பிரதானிகளுக்குள் நடப்பாயிருந்த வழக்கப்படி ஒருவன் இவன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தீனுவுக்குப் போசனம் ஊட்டினான். இந்த வேலைக்காரனுக்கு ஓயாத வேலையிருந்தது. பந்தியிருந்தவர்களில் எவர்களாவது கொஞ்சமாய்ச் சாப்பிட்டார்களென்று குறைகூற நிமித்தமிருந்ததில்லை. ஸ்திரீகள் புருஷர் பார்க்கச் சாப்பிடுகிறது அங்கே வழக்கமல்லாதபடியால், இடியாளும் அவளோடிருந்த பெண்களும் ஒருமணிநேரத்துக்குப் பிறகு, தனிமையாய்ச் சாப்பிட்டார்கள். ஆகிலும் இடியாள் புருஷனாகிய தீனுஎன்பவன் அவர்களோடு சேர்ந்துகொண்டதுமன்றி, தான் முந்திச் சாப்பிட்டிருந்ததை முற்றும் மறந்துபோனவன்போலும் காணப்பட்டான். தீனுஎன்பவன் அன்று பின்னேரம் முழுவதும் என்னோடிருந்தான். அவ்வளவு நேரத்துக்குள்ளாக, என்னோடு பந்தியில் சாப்பிட்டதுதவிர, பொரித்த பன்றியிறைச்சி நாலுவிசை சாப்பிட்டான். அவன் என்னையனுப்பிக்கொண்டு கப்பலைவிட்டுப் புறப்பட்டசமயத்தில், நான் அவனுக்கு வெகுமதியாகக் கொடுத்திருந்த பதார்த்தகங்களைக் களவுபோகாமல் பந்தோபஸ்தாய் வைக்கிறதற்குதன் ஊரில் வசதியான இடமில்லாததினாலே அவைகளை கப்பலிலேயே வைத்துவைக்கும்படி கேட்டுக்கொண்டான். அதினால் அவனுக்கு ஒரு அறையைக் காண்பித்து, மேற்படி சாமான்களை அதிலே வைத்துப் பூட்டி,அதன் திறவுகோலை அவன் கையில் கொடுத்துவிட்டேன்.

இதனிடையில் எங்கள் கப்பலாட்கள் சுதேசிகளோடு பழக்கம் பண்ணிக்கொண்டும் கொடுக்கல் வாங்கல்செய்துகொண்டு மிருந்தார்கள். தீவார்கொண்டுவந்த பன்றிகளிற் சிலது இருநூறு இராத்தல் நிறையாயிருந்தன. அவைகளில் நாலைந்துவாங்கித் துண்டித்து உப்பிட்டுப் பின்னுபயோகத்துக்காக வைத்துக்கொண்டோம். சில வெள்ளாடுகளும் கிரயத்துக்கு வந்தது. ஒரு ஆட்டுக்கும் அதன் குட்டிக்கும் நான்கொடுத்த கிரயம் ஒரு பன்றிக்குட்டிக்குக் கொடுக்கிற கிரயத்திலும் சொற்பம். விருக்ஷங்களைப் பரிபாலனம் பண்ணுகிறதற்காக என்னோடுவந்திருந்த இருவரும் சும்மாவிராமல் எங்களுக்குவேண்டிய

செடிகளுக்காக இங்கும் அங்கும் திரிந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் புறப்பட்டுவந்த காரியம் சுளுவில் கைகூடுமென்று அவர்கள் தெரிவித்ததினால் எனக்கு உண்டானசந்தோஷம் கொஞ்சமல்ல. தீவார் ஈரப்பலாவிருக்ஷங்களின் விலையை அதிகப்படுத்திவிடாதபடிக்கும் வேறு இடையூறுகள் செய்யாதபடிக்கும் அவர்களிலொருவருக்காவது நாங்கள் வந்திருக்கும்நோக்கத்தைத் தெரிவிக்கவேண்டாமென்று கப்பலிலுள்ள ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாய்க் கற்பித்திருந்தேன். என்றாலும் இவ்வளவுஎச்சரிப்புக்கு அவசியங் காணப்படவில்லை.

தீனாவென்பவன் தன்வீட்டுக்கு நான்போவேனென்று எதிர்பார்த்திருந்தபடியால், மறுநாட்காலையில் போனேன். அவன்குடியிருந்தவீடு சிறுகுடிசை. அது மத்தேவாய்முனையிலிருந்து கிழக்கே கால்மைல்தூரத்திலிருந்தது. நான்போனபொழுது அவனும் அவன்மனைவியும் மூன்று பிள்ளைகளும் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். நான்நடந்து போனமார்க்கத்தில் எனக்கெதிர்ப்பட்ட ஒவ்வொருவரும் என்னோடுகூடவேவந்தார்கள். இவ்வாறு திரளானசனங்கள் கூடினதினாலும் ஒவ்வொருவரும் என்முகத்தைச் சற்றுப் பார்த்துக்கொள்ளப் பிரயாசப்பட்டதினாலும், உஷ்டணம் சகிக்கக்கூடாதிருந்தது. என்றாலும் அவர்கள் என்னைநெருக்காமல் பக்கமாயேவந்து, என்னைக் கண்டது தங்களுக்கு எவ்வளவோசந்தோஷமென்று பலவகையில் வெளிப்படுத்தினார்கள். நான் தீனாஎன்பவனைப் பார்க்கவே முக்கியமாய்வந்ததென்று அவனுக்குத் தெரிவித்து, முதல்விசைகொடுத்த அவ்வளவு வெகுமதி இப்பொழுதும் கொடுத்தேன். இந்தப் பதார்த்தங்களையும் மகா சந்தோஷத்தோடு வாங்கிக்கொண்டான். அவனோடிருந்தவர்களில் முக்கியமானவர்களுக்கும் ஓரோர் பதார்த்தம் வெகுமதியாகக்கொடுத்தேன். ஏராளமான பிள்ளைகளும் அங்கேவந்திருந்தன. கைகளிலிருந்த சிறுகுழந்தைகளை நான் கவனித்து அதுகளுக்கு விளையாட மணிகள் கொடுத்ததைப் பார்த்து, பெரியோரும் சிறியோருமான எல்லோரும் தமாஷ் காண்பிக்கவும் யாதாமொரு வெகுமதிபெற்றுக்கொள்ளவும் பார்த்தார்கள். இதற்காக பத்துப் பன்னிரண்டுவயசுப் பிள்ளைகளையும் என்னிடத்தில் கைகளிலேந்திக்கொண்டு வந்தார்கள். இதினாலுண்டான சிரிப்பும் கேலியும் கொஞ்சமல்ல. இவ்வாறு கொஞ்சநேரத்துக்குள்ளாக நான்கரைக்குக்கொண்டு வந்திருந்த சாமான்களெல்லாம் போய்விட்டது.

(இன்னம் வரும்.)

சமாசாரத்திரட்டு.

ஐரோப்பா.—ருஷிய- துர்க்கிய யுத்தத்தை நிறுத்துவதற்காக வேண்டும ஏற்பாடுகளை பேசித் தெளியும்பொருட்டு பர்லின்நகரத்தில் கூடிய ஸ்தானாபதிகள் தம்தம் தேசத்துக்குத் திரும்பினார்கள். அந்த மகாசபை கூடியநோக்கம் பெரும்பாலும் அனுகூலமாய்ப் பலித்தது. பிரிட்டிஷ் ஸ்தானாபதிகள் இங்கிலாந்துக்கு திரும்பிவந்த தருணத்தில் திரள்கூட்டமான ஜனங்கள் அவர்களுக்கெதிர்கொண்டுபோய் அவர்களை சந்தோஷத்துடன் வாழ்த்தினார்கள். அவர்கள் பிரயாசங்களுக்கீடாக கார்ட்டர்நயிட்என்னும் பட்டம் காருண்ணிய மகாராஜாத்தியவர்களால் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் யுத்தமுண்டாகக் கூடுமென்றிருந்த எண்ணம் இப்போது முற்றிலும் நீங்கிப்போனதால் படைமுஸ்தீப்புவிஷயமாய்ச்செய்த நூதனஏற்பாடுகளும் நிறுத்தப்பட்டது. மாட்சிமைதங்கிய மகாராஜாத்தியவர்களின் மருமக்களில் ஒருவராகிய லோரன் மார்குவிஸ்பிரபு கனடாபிரதேசத்தின் கவர்னராக நியமனம்பெற்றாராம். ருஷிய தளங்கள் கிரமங் கிரமமாய் துர்க்கியைவிட்டு தம்சொந்த ஸ்தலங்களுக்குத் திரும்பிப்போகின்றன. ஸ்தானாபத்திய சபையாரின் தீர்மானங்களின்படி பொஸ்னியா, ஹெர்ஜிகோவினாஎன்னும் மாகாணங்களைக் கட்டிக்கொள்வதற்கு ஔஸ்திரியர் தங்கள் தளங்களை அனுப்பியிருக்கிறார்கள். அந்த மாகாணங்களின் குடிகள் ஔஸ்திரிய போர்வீரரை தாக்கினதினால் பல சண்டைகள் நடந்தது. இந்தக் கலகத்தை துர்க்கிய அரசாட்சியர் எழுப்பிவிட்டதாக உத்தேசம். ஔஸ்திரியர் அவர்களை எவ்விதத்திலும் ஜெயிக்காமல் விடார்கள். ஆகையால் இது உயிர்நாசம் வருத்தும் வீண்செய்கையே அன்றி வேறில்லை. அப்படியே கருங்கடலின் ஆசிய தீரத்திலுள்ள பாதூம் என்றதுறைமுகநகரம் ருஷியருக்கு கையளிக்கப்படத் தீர்மானமாயும் அதன் குடிகள் ருஷியருக்குக் கீழடங்க மறுக்கிறதுமன்றி அங்கே 20000 துருக்கர் ருஷியரோடே போர்செய்யு வகைதேடி இருக்கிறதாகவும் பிரஸ்தாபம். ரோமைபாப்பானவரின் லிகிதராகிய கர்தினால்பிரான்சிஎன்பவர் தேகவியோகமானார். பாப்பானவரும் சுகங்குன்றி பலவீன ஸ்திதியிலிருக்கிறாராம்.

இந்தியா.—மறுபடியும் பஞ்சம்நேரிடும்என்று என்னும்படியான குறிப்புகள் உண்டானதினால் மாட்சிமைதங்கிய சென்னை கவர்னரவர்கள் நீலகிரிமலையினின்று இறங்கி ஜூலைமீ அறுதியில் சேலத்தில் ஒரு ஆலோசனைச்சங்கம் கூட்டுவித்தார்கள். ஜனங்களின் குறைச்சல்களை நிவிர்த்திப்பதற்கான வழிவகைகள் அதில்யோசித்துத் தெளிந்தபின் காலமழை வருஷிக்கவே காரியஸ்திதி ஒருவாறு செவ்வைப்பட்டது. வருங்காலத்தில் சரிப்பை விலக்குவதற்கு உத்தம உபகரணங்களை நிரூபிக்குமாறு ஏற்படுத்தப்பட்ட கமிஷனர்கள் இந்தியாவிலெங்கும் பிரவர்த்தி செய்கின்றனர். சற்றுமுன் ஏற்பாடாகியிருக்கிற லைசென்ஸ் வரியை ஆட்சேபித்து இந்தியாவிலிருந்து எழுதப்பட்ட மனுப்பத்திரங்கள் பிரிட்டிஷ்பார்லிமெந்து சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

திருநெல்வேலி.—திருநெல்வேலி நாட்டிலுள்ள ஜெமீந்தாரிகளில் பிரதானமான எட்டயபுரம் ஜெமீந்தாரியின் வாரிசுதார் தகுந்த வயசில்லாத மைனராயிருந்ததினால் அந்த ஜெமீன் காரியங்கள் முழுவதும் சென்னை கவர்ன்மெண்டாரவர்களால் நடப்பிக்கப்பட்டு வந்தது அநேகருக்குத் தெரியுமே. ஷை மைனரவர்களுக்கு சட்டப்படி இப்போது தகுந்த வயசு வந்துவிட்டபடியினால் ஷை ஜெமீன்தாரியை சென்றமாசம் முதல் தெய்திமுதல் ஷை யார்வசம் விட்டுவிடும்படி சென்னை கவர்ண்மெண்டார் உத்தரவு செய்தபிரகாரம் திருநெல்வேலி ஜில்லா கலெக்கட்டரவர்கள் ஐரோப்பிய துரைகளில் அநேகரையும் சுதேசபிரபுக்களில் பலரையும் மேற்குறித்த தெய்தியில் எட்டயபுரத்தில் கூடிவரச்செய்து ஜெமீந்தாரவர்களின் கண்ணியத்துக்கேற்க அநேக விமரிசைகளுடனும் விநோதவேடிக்கைகளுடனும் ஜமீந்தாரியை அவர்கள்வசம் ஒப்புவித்தார்கள். ஷை ஜெமீந்தாரவர்கள் பாலியராயிருந்தகாலத்தில் இங்கிலீசுபாஷையை கற்கவும் அது மூலமாய் மற்ற கல்விநூல்களை வாசித்தறியவும் சென்னை, பாம்பே, கல்குத்தா முதலிய நகரங்களை பார்வையிட்டு நானா காரியங்களை அறியவும் கவர்ண்மெண்டாரவர்கள்ஏற்பாடுசெய்திருந்தமையால் முன்னிருந்த ஜெமீந்தார்களிலும் இவர் நீதிநியாயமும் தம் குடிகள்பேரில் தயைதாக்ஷணியமுமுடையவராய் விளங்குவாரென்று நம்ப இடமுண்டு.

நோட்டீஸ்.

ஜில்லா கெசட்டிலிருந்து எடுத்தெழுதியது.

கிராமப் பள்ளிக்கூடங்கள்.

"கிராமமுனிசீபுகள் தங்களுடைய எல்லைகளுக்குள்ளிருக்கும் ரிசல்ட்டுகிருண்டு முதலிய பள்ளிக்கூடங்கள் இன்ஸ்பெக்டிங் ஸ்கூல் மாஸ்டரால் பார்வையிடப்பட்டதைபற்றி தங்களுடைய டைரிகளில்ஷை கிராமப் பள்ளிக்கூடங்களின் வாத்தியார்கள் தெரிவித்ததின்பேரில் எழுதவேணும். பார்வையிடப்பட்ட அதேதினத்தில் அவர்கள் ஷை விபரத்தை தெரியப்படுத்தவேணும். டைரிகளின் இந்தப்பாகத்தை பள்ளிக்கூடங்களின் டிப்டி இன்ஸ்ப்பெக்ட்டர் பார்வையிடவேணும். கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஷை விபரத்தை தெரிவிப்பதற்கு பள்ளிக்கூடங்களின் வாத்தியார்கள் ஜவாபுதாரியாக இருக்கிறார்கள்."

இது சரியான நகல்.

E. SARGENT. D. D.
BISPOP.

செப்தெம்பர்மீ நாள் 30. ஆவணிமீ 18உமுதல், புரட்டாசிமீ 16உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ் தேதி.	அனுதினத் தியானம்.
ஞா	1	கஅ	உங்கள் அக்கிரமங்களைச் சுமப்பீர்கள். எண். 14: 34.
தி	2	ககூ	நீங்கள் கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன ? 41.
செ	3	உ0	நானே உங்கள் தேவனாகிய கர்த்தர். 15: 14.
பு	4	உக	கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டங் கூடினீர்கள். 16: 11.
வி	5	உஉ	நான் துன்மார்க்கனாயிருந்தால் எனக்கு ஐயோ ! யோபு. 10: 15.
வெ	6	உங	நீர் என் சிறுமையைப் பார்த்தருளும். 16.
ச	7	உச	என் நாட்கள் கொஞ்சமல்லவோ ? 20.
ஞா	8	உரு	சர்வல்லவரோடே நான் பேசினால் நல்லது. 13: 3.
தி	9	உசு	உமது அடியானுக்கு அனுகூலமாயிரும். சங்கீதம் 119: 17.
செ	10	உஎ	உமது கற்பனைகளை எனக்குமறையாதேயும். 19.
பு	11	உஅ	உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமாயிருக்கிறது. 24.
வி	12	உகூ	என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது. 25.
வெ	13	ங0	உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும். 25.
ச	14	ஙக	உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். 26.
ஞா	15	க	பொய் வழியை என்னை விட்டகற்றும். 29.
தி	16	உ	உன் செய்கைகளை கர்த்தருக்கொப்புவி நீதி. 16: 3.
செ	17	ங	விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. 18.
பு	18	ச	கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். 20.
வி	19	ரு	இருதயங்களை சோதிக்கிறவர் கர்த்தர். 17: 3.
வெ	20	சு	குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான். 9.
ச	21	எ	கர்த்தராகிய நான் இரட்சகர். ஏசாயா 60: 19.
ஞா	22	அ	உன் தேவனே உனக்கு மகிமையாயிருப்பார். 19.
தி	23	கூ	கர்த்தரோ உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார். 20.
செ	24	க0	எழுந்திருந்து, உன் தேவனைநோக்கிவேண்டிக்கொள். யோனா 1: 6.
பு	25	கக	கர்த்தாவே, என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர். 2: 6.
வி	26	கஉ	என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். யோவான் 15: 9.
வெ	27	கங	நீங்கள் ஒருவரில், ஒருவர் அன்பாயிருக்கவேண்டும். 12.
ச	28	கச	நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். 1 கொரி. 3: 23
ஞா	29	கரு	நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியகாரர். 4: 10.
தி	30	கசு	நீங்கள் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல. 5: 6.

விசேஷ நாட்கள்.

1. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 11ம் ஞாயிறு.
8. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 12ம் ஞாயிறு.
11. பௌரணமி.
15. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 13ம் ஞாயிறு.
21. பரி. அப். மத்தேயுவின் திருநாள். 13ம் ஞாயிறு.
22. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 14-ம் ஞாயிறு.
26. அமாவாசை.
29. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 15ம் ஞாயிறு.
பரிசுத்த மிகாவேல் முதலிய சகல தேவதூதர்களின் திருநாள்.

நற்போதகம்.

ம. அக்டோபர்மீ. ௲அஎஅ௵.

எஸ்றாவின் புஸ்தகம்.

IV. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

3. சத்துருக்கள் சேர்ந்து கட்டப்படாதென்பதற்கு, கோரேஸ் கொடுத்த கட்டளையை செருபாபேல் மூகாந்தரமாக எடுத்துச்சொல்லுகிறான். அதாவது பாபிலோனிலிருந்து யூதேயாவுக்குப் போகிறவர்களே கட்டவேண்டுமென்பதை வற்புறுத்திக் காண்பிக்கிறான். 1: 3.

5. "ஆலோசனைக்காரருக்கு" பார்சுக் கோர்ட்டிலிருந்த சற்கார் உத்தியோகஸ்தராம், தேவாலயக்கட்டுமான வேலையைத் தடுக்கவும், அதற்குத் தாமதம் உண்டாக்கவும், இடையில் அதற்குச் சங்கடங்களை உண்டுபண்ணவும், ஷை உத்தியோகஸ்தருக்கு கைக்கூலி கட்டினார்கள்.

"தரியுகாலமட்டும்" 24 வா. இந்த தரியு, தரியு நோதஸ் என்று சொல்லப்படுகிறதுண்டு. பார்சுக்கு தரியு நோதஸ் (2 ம் தரியு) இராசாவானது, கி. மு. 424 ௵ அதாவது கோரேசு பாபிலோனைப் பிடித்ததற்கு ஒரு நூற்றாண்டுக்கும் மேல். வா. 5-7, 24 ல் சொல்லப்படுகிற பேர் வரிசையானது மேற்காட்டிய அபிப்பிராயத்துக்கு ஒத்துமிருக்கிறது. ஆனால் கோரேசின் முதலாம் வருஷத்தில் பாபிலோனிலிருந்து திரும்பிவந்த செருபாபேலும் யெசுவாவும், தரியுவின் இரண்டாம் வருஷத்திலும் (5: 2.) ஆறும் வருஷத்திலும் கூட (சகரி. 4: 9.) பலசாலிகளாய் உயிரோடிருந்திருக்கிறார்கள். இந்தச் சங்கதியானது இங்கே சொல்லப்படுகிற தரியு, இரண்டாம் தரியுவாயிருக்கக் கூடாதென்று காட்டுகிறது. ஏனென்றால் அப்போது இரண்டாம் தரியுவின் 6 ம் ௵ ல் செருபாபேலுக்கும் யெசுவாவுக்கும் (150) வயதிருக்கவேண்டும். ஆகையால் எஸ்றாவிற் சொல்லப்படுகிற தரியு: தரியு நோதஸ் (இரண்டாம் தரியு) அல்ல, கிஸ்தஸ்பே என்ற இராசாவின் மகனான

தரியு என்று நவீனகாலத்து வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். மேற்சொல்லியது விளங்கும்படியாக பின்வருவதைக் கவனிக்கவேண்டும்.

	ஆண்ட காலம்
மேதிய பார்சு இராச்சியத்துக்கு கோரேசு இராசாவான முதலாம் வருஷத்தில் விளம்பரம்பண்ணினான். இது கி. மு. 536.	7 ௵
ஷ மகன் கம்பைசிஸ் (இவன் எஸ்று. 4: 6 ல் சொல்லிய ஆகாஸ்வேரு.	7 ௵
சிமேட்டிஸ் (எஸ்று. 4: 7 ல் சொல்லிய அர்தசஷ்டா.)	7 மாசம்
தரியு கிஸ்தஸ்பே.	36 ௵
மகா சர்க்சே.	21 ௵
அர்தசர்க்சேலங்கிமனு. (எஸ்தரில் சொல்லிய ஆகாஸ்வேரு இவன் தான்.	41 ௵
2 ம் சர்க்சே	46 நாள்
சாக்டியானஸ்.	$6\frac{1}{2}$ மாசம்
தரியு நோதஸ். (19 ௵ ஆண்டான்.)...	6 ௵
ஆக உத்தேசம்.	120 ௵

கோரேசின் முதலாம் ௵ ல் இவர்களுக்கு இருக்கவேண்டிய வயதைக் கூட்டினால் தரியு நோதஸ் இராசாவின் ஆறும் ௵ அல்லது கி. மு. 417 ௵ ல் இவர்களுக்கு உத்தேசம் (150) வயதுக்கு அதிகமிருக்கவேணுமே.

6. "ஆகாஸ்வேரு". 5, 24, இந்த வாக்கியங்களிற் சொல்லப்படுகிற தரியு, தரியுகிஸ்தஸ்பேயானால், 6 ம் வாக்கியத்திற் சொல்லிய ஆகாஸ்வேரு, கோரேசுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அவன் மகன் கம்பைசிஸ் ஆயிருக்கவேண்டும். பார்சு இராசாக்கள் இரண்டு நாமங்களை வைத்துக்கொள்வது வழக்கமென்பது எல்லாருக்கும் தெரிந்த சத்தியமே.

7. "அர்தசஷ்டா" இவன் சிமேட்டிஸ் என்னப்பட்டவன். இவன் கம்பைசிசுக்குப்பின் கி. மு. 521 ல் பட்டத்துக்கு வந்து 7 மாசம் ஆண்டபின் தரியுகிஸ்தஸ்பேயால் கொல்லப்பட்டான்.

8. "ஆலோசனைத் தலைவன்" சமாரியா நாட்டுக்கு அதிபதியாயிருக்கும் பார்சுதுரைகளுக்கு இது பட்டப்பேர்.

9. "தீனாவியர்" இவர்கள் தாயான் நாட்டிலிருந்து இவ்விடத்தில் குடியேறினவர்களென்று நினைக்கப்படுகிறது. தாயான் நாடானது, லிக்கியா கப்பத்தோக்கியா என்னும் நாடுகளின் எல்லையிலிருக்கிறதாக அசீரிய ஞாபக சின்னங்களில் அடிக்கடி எழுதப்பட்டிருக்கிறது.

"அபற்சாத்தியர்" 5: 6 ல் சொல்லிய அப்பற்சாகியர் என்று உத்தேசிக்கப்படுகிறது.

"தர்பேலியர்" அசீரியராலே தர்பெலாய் என்றும், கிரேக்கராலே திபரொனி என்றும், எபிரேயரால் தூபால் என்றும் அழைக்கப்பட்ட ஜாதியாருடைய குடியேற்றம்.

"அப்பார்சியர்" பார்சர் என்று தோன்றும். இந்த வார்த்தைக்கு மூலபதம், பாராஸ் என்பது. எபிரெயு பாஷையில் பார்சுக்கு, பாராஸ் என்பதும் பேராக வழங்கியது.

"அற்கேவியர்" ஏரேகிலுள்ள சுதேசிகள். ஆதி. 10: 10.

"சூஷங்கியர்" சூசா அல்லது சூஷானிலிருந்து வந்து குடியேறினவர்கள். தானி. 8: 2. எஸ்தர் 1: 2.

"தெகாவியர்" பார்சருக்குள் தாயி என்னப்பட்ட கோத்திரத்தாருடைய குடியேற்றம்.

"ஏலாமியர்" சூசா நகரத்தைத் தலைநகரியாகக் கொண்ட ஏலாம் அல்லது எலிமாயிஸ் என்னப்பட்ட தேசத்திலிருந்து வந்து குடியேறினவர்கள்.

10. "அஸ்னாப்பர்" இந்தப் பேரைப்பற்றி திட்டமாய்த் தெரியாது. 2 ம் வாக்கியத்திற் சொல்லியபடி ஏசரத்தோன் பலஜாதிக்காரரைக் கொண்டுவந்து குடியேற்றினானே. இந்த அஸ்னாப்பர், ஷ ஜனங்களை ஏசரத்தோன் உத்தரவுப்படி கூட்டிக்கொண்டு வந்து குடியேற்றின துரை என்று நினைக்கப்படுகிறது.

"நதிக்கு இப்பால்" நதிக்கு அப்பால் என்று திருப்பப்பட்டால் நன்றாயிருக்கும்.

11. ஆக்கியோன் 9 ம் 10 ம் வாக்கியங்களில் வக்கணையைச் சொன்னபின் 11 முதல் மனுவைச்சொல்ல ஆரம்பிக்கிறான்.

12. "உம்மிடத்திலிருந்து எங்களிடத்திற்கு" அதாவது நீர் வாசம்பண்ணுகிற தேசத்திலிருந்து நாங்கள் வாசம்பண்ணுகிற தேசத்திற்கு.

13. "பகுதி" தானியமுதலான பொருள் வகைகளிலிருந்து இராஜாவுக்குச் செல்லும் பாகமாம்.

"தீர்வை" அந்தந்த தேசத்தார் இவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்று சுமத்தப்பட்டிருந்தது. அந்த மொத்தப் பணத்தொகையை, தலத்து அதிகாரிகள், குடிகள் பேரால் வீதித்துத் தண்டுவார்கள். அந்தப் பணப்பகுதிக்குத் தீர்வை என்று பேர்.

"ஆயம்" பார்சருடைய இராஜபாதையில் செல்லுகிறவர்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வையென்று தோன்றும்.

14. "உப்பு" கிழ்தேசங்களில் இந்நாள்வரையும் வழங்கிய வார்த்தை. ஒருவனாலே பெறும் சம்பளத்தை மட்டுமல்ல, அவனாலே எவ்வகைப் பிழைப்பைப் பெற்றாலும் அவன் உப்பைத் தின்கிறதாகச் சொல்லப்படும். பார்சருடைய சத்திராப் துரைகள் பார்சு இராசாங்கத்திலிருந்து சம்பளம் வாங்கி ஜீவனம்பண்ணவில்லை. தங்களுக்கும் தங்கள் கோர்ட்டுச் செலவுகளுக்கும் தங்கள் கைக்குள்ளான நாடுகளின்பேரில் தீர்வை ஏற்படுத்தி தண்டிவந்தார்கள்.

15. "நடப்படி புஸ்தகங்களில்" எஸ்தர் 2: 23. 6: 1. 10: 2. பார்சுக் கோர்ட்டுகளில் இப்படிப்பட்ட ரிக்கார்டுகள் வழக்கமாய்ப் பத்திரப்படுத்தப்பட்டிருக்கும்.

"உம்முடைய பிதாக்களின்" உமக்குமுன் பட்டத்துக்கு வந்தவர்கள் என்றர்த்தம். கம்பைசிஸ், கோரேஸ், ஒருவேளை கோரேசின் முற்பிதாக்களாலும் இப்படி நடபடிகளைப் பத்திரம்பண்ணுகிற வழக்கம் ஆரம்பித்திருக்கும். இந்த மனு அர்தசஷ்டா இராசாவுக்கு எழுதப்பட்டது. இவன் 7ம் வாக்கியத்திற் சொல்லியபடி, பிசியடோ சிமேட்டிசாயிருந்தால், மேற்காட்டிய இராசாக்கள் இவனுக்குப் பிதாக்களாயாவது முற்பிதாக்களாயாவது இருக்கக்கூடாது என்பது மெய். ஆனால் இந்த மனு எழுதினவர்கள், இந்த அர்தசஷ்டா கள்ளப்புத்திரனென்று அறிந்திருந்தபோதிலும், ஒரு இராஜாவை எத்தன் என்று சொல்லத் துணியமாட்டார்கள். அப்படி அவனுடைய குலவிபரத்தை இவர்கள் அறிந்திருக்கமாட்டார்களென்றே நாம் நினைக்கவேண்டியதிருக்கிறது.

19. பார்சு உத்தியோகஸ்தர்கள் பாபிலோனிய இராஜ்யத்திலுள்ள பூர்வ ரிக்கார்ட்டுக் கச்சேரிகளைச் சோதித்துப் பார்த்து, யோயாக்கீம் (2 இரா. 24: 1.), யோயாக்கீன் (2 இரா. 24: 10.), சிதேக்கியா (2 இரா. 24: 20.) இந்த இராஜாக்கள் செய்ததும் செய்ய எத்தனித்திருந்ததுமான கலகங்களைக் கண்டுபிடித்திருப்பார்கள். மற்றப்படி பார்சருக்கு விரோதமாய் யூதர் யாதாமொரு கலகம்பண்ணினதாகக் காணப்படவில்லை.

20. "வல்லமையுள்ள இராசாக்கள்...நதிக்கு அப்புறத்திலிருக்கிற சகல தேசங்களையும் ஆண்டுவந்தார்கள்." தாவீது, சாலொமோன் இந்த இராஜாக்களைக்குறித்து, பாபிலோனிய அசீரிய ரிக்கார்ட்டுக் கச்சேரிகளில் நடபடி இருக்கமாட்டாது. இவ்வாக்கியத்திற் சொல்லிய இராஜாக்கள், மெனாகேம் (2 இரா. 15: 16), யோசியா (2 நாளா. 34: 6, 7. 35: 18), இவர்களைக் குறித்திருக்குமென்று நினைக்கவேண்டும்.

24. "நிறுத்தப்பட்டிருந்தது." பிசியடோ சிமேட்டிஸ் என்பவன் தேவாலயத்தின் வேலையைத் தடுத்தது முழுவதும் அவன் குணத்துக்கேற்ற செய்கைதான். அவன் மாகியரைச் சேர்ந்தவனானதால், அவர்களுடைய மார்க்க ஆசாரப்படி பூதியங்களை வணங்கி வந்தவன்.

தேவவஸ்து இல்லையென்று மறுக்கிறவன். ஆலயங்களில் அவர்கள் தொழுகிறதில்லை. அவன் சோராவஸ்தர் மார்க்கத்தாரைத் துன்பப்படுத்தினதினாலே யூதமார்க்கத்துக்கும் விரோதியாயிருப்பான் என்று எண்ணுவது இயல்பாயிருக்கிறது.

"தரியு...இரண்டாம் வருஷமட்டும்" தரியுவின் இரண்டாம் வருஷம் கி. மு. (520). இந்த வேலை பிசியடோ சிமேட்டிஸ் ஆளுகையில் தடைப்பட்டு, தரியுவின் இரண்டாம் வருஷத்தில் மறுபடி ஆரம்பித்திருக்குமானால், அது ஏறக்குறைய இரண்டு வருஷமட்டுந்தான் தடைப்பட்டிருந்தது. ஏனென்றால் பிசியடோ சிமேட்டிஸ் ஆண்ட காலம் ஒரு வருஷங் கூட இல்லை.

இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

வேறு.

ஓதக் கடல்சூழ் உலகத்லைத யுவர்த்து நின்ற
மேதக்க நீர்மை விறல்வேதியன் வேதநூண்ணூற்
போதக் கதிகொண் டொளிவாயில் பொருந்த நோக்கி
நோதக்க சும்மை யொடுபோயினன் சிந்தை நொந்தே. 152

அவ்வேலை யிச்சா புரமென்ன அடுத்திருக்கும்
வெவ்வூரிடை நின்று லௌகிகன் விரைந்து கிட்டி
ஒவ்வாத கடுஞ்சுமை தாங்கியை யொப்ப நைவாய்
எவ்வூர் செல எண்ணுதி நண்ப இயம்புகென்றான். 153

மோகாதுர னாகி யறத்துறை முற்றும் நீத்த
ஆகாமியன் நானென் னருஞ்சுமை யாற்றுகில்லேன்
வாகாய செழுஞ் சுவிசேடன் மெய் வாக்கை நம்பி
ஏகாதிபன் இன்னருள் பெற்றிட ஏகுகின்றேன். 154

முன்னுள திருக்கடை வாயிலை முற்றில் ஐய!
பின்னாக அறிந்திடுவாய் வருபெற்றி யாவும்
என்னா வுரை தந்தெனை யேவினன் என்றிவ் வெல்லாம்
சொன்னான் அதுகேட்டு லௌகிகனும் சொல்லலுற்றான். 155

பொருள் உற்றறியாத புன்மாக்கள் புகன்ற சொல்லால்
மருளுற் றுரிமைத் திறன் யாவும் வரைந்து வீசி
இருளுற் றிடர் துற்றிய பாழ்நெறி யேகினையென்
றருளுற்ற நம் நாட்டவர் பேச அறிந்ததுண்டே. 156

மெய்தான் எனினும் சுவிசேடன் விளம்பு மார்க்கத்
தெய்தார் எவரும் கடுமோசமோ டெண்ணில் துன்பம்
வெய்தாம் பசிதாகம் விரோத மிகுத்ததாலே
நொய்தாக நினைந்து துணிந்தனை நோக்குகில்லாய். 157

இருளுண் டிடருண்டு பசாசுசெய் யின்னலுண்டு
வெருளுண் டிகலுண்டுபல் விக்கினமுண்டு நாட்ட
நருளுண் டரியேறு விடங்கொள் பன்னகமுண்டு
மருளுண்டு தியங்க வரும்பல மார்க்கமுண்டே. 158

துன்பாருலை தோய்ந்தனை யாதலிற் றொழநீயவ்
வன்பாடனு மாத்திர மென்ன மனக்கொள் இன்னும்
முன்பாக ஒவ்வோர் துயர் பெருவின் மும்மையாக
உன்பால் அடையும் கணிப்பில்லன உண்மையோர்தி. 159

இன்னோரன பாடுகள் நேர்ந்தனை யெய்ந்த போதில்
என்னோ புரிகிற்றி யென்றின்னலை யெண்ணி யெண்ணி
அன்னோ வென நின்றழு தேங்குவ தன்றி நன்ப
முன்னோர்ந்து வருந்துயர் நீங்க முயன்றி டின்னே. 160

அந்தோ கெடுவா யுன்னகத்துள் முளைத்து வீங்கும்
சந்தாப விகார மலாற் சமழ்க்கின்ற பாரம்
எந்தோ புகல் தீவினை தீவினை யென்றுரையும்
சிந்தாகுலம் நீங்குதியேற் சுமை தீருமாதோ. 161

கோட்டால் முயல்கீண்டது மேனி குளித்த காயப்
பாட்டால் இளைவுற்றன னென்று பணித்தல் போலாம்
தீட்டாகிய தீவினைச் சும்மை சிதைக்க ஆற்ற
மாட்டா தழல்வேன் எனநீ சொலு மாற்றமன்றோ. 162

மறக்கத் தகுமாறெவன் நீங்கரும் வன்பரத்தை
உறக்கத்தும் வருத்துமென்றால் இஃதொன்று கேணீ
துறக்கத்தை நிகர்த்தது நற்றவர் தொக்கதாண்டு
சிறக்கத்தகுமோர் தருமாபுரி சேய தன்றால். 163

பன்மாண்புறும் அப்பதி சென்னெறி பற்றியேகி
இன்மாண் பன் அறக்கிழவோ னென வேத்தநின்ற
நன்மாண்பனுக் கிற்றிவையாவும் நவிற்றில் அன்னோன்
சொன்மாண்பினில் நின்சுமை யொல்லை தொலைப்பனன்றே. 164

உன்போல் மருளுற் றுழன்றோர் பலர் உய்யும் வண்ணம்
வன்பாரம் அகற்றினன் மற்றிதின் வண்மையுண்டே
இன்பால் அடிசிற் கலம் வீசி யிரந்துநிற்கும்
பன்பான்மை யிதியாண்டு படைத்தனை புந்தியில்லாய். 165

ஈண்டே கடிதேகி யிருஞ்சுமை யின்னல்போக்கி
ஆண்டே குடிப்புக்குனை யாருயிராக அன்பு
பூண்டாதர முற்ற பொலன்கொடி யோடுவாழ்தி
மாண்டா யெனினும் வசையன் றிசையன்றி மாதோ. 166

பெருமாநிதியும் உயர்கல்வியும் பெற்றிசேர்நற்
கருமாதியும் வண்புகழுங் கவினிப் பொலிந்த
தருமா புரியைப் பொருமென்று தராதலத்தே
ஒருமாநகரை யுரைப்பாரெவர் உண்மை தேரில். 167

நன்றென்னில் நலங்கிளர் நல்லறம் நண்ணியுய்தி
அன்றென்னில் வினைச்சுமையோ டடராழி நீந்திச்
சென்றந்நகர் துன்னரிதால் அது தேர்தி யென்றான்
நின்றுன்னி விசாரி திகைத்தனன் நெஞ்சம் வேறாய். 168

நல்லானிவன் வாய்மொழி யாவையும் நன்மைபோலாம்
ஒல்லாவினை தாங்கியிந்நூனெறி யோடியுய்ய
வல்லான நியாயதுரந்தரன் மாடுசேரில்
எல்லாம் நலமா மென வெண்ணிமற் றிதிசைப்பான். 169

வழுக்குற்ற நிலத்தொரு கோல் நனி வாய்த்ததென்ன
ஒழுக்குற்ற நின்வாயுரை யீண்டெனக் குற்றதைய
அழுக்குற்ற மனத்துயரச் சுமை யாற்றுகிற்பான்
இழுக்குற்ற எனக்குரை யிற்புறம் யாண்டை யென்றான். 170

விலங்கா திவழிக்கொடு சென்றவ் விலங்கலுற்றால்
இலங்கா ரொழின்மாநகர் தோன்றுமங் கெய்திவாயில்
அலங்கார நீதியதிபற் றொழும்பாகு சிந்தை
மலங்காதி நலம்பெறுவாயென வாழ்த்தி விட்டான். 171

தற்புத்தியும் போய் சுவிசேஷன் முன் சாற்றுமுண்மைச்
சொற்புத்தியும் போய் லௌகிகன் மன் தூண்டிவிட்ட
துற்புத்தியின் நீர்மையை வேதியன் சூழ்ச்சியற்று
நற்புத்தி யென்னு மருண்டேகினன் நன்மையோரான். 172

நற்றாபதன் எம்முயிர் நாயகன் நல்லநீதி
பற்றாதொரு பத்துவிதித்துணை பற்றிமுத்தி
உற்றாருயிர் பெற்றுலவா நலம் உண்ணுமென்றல்
கற்றூண் தழுவிக் கடல்நீந்தல் கடுக்கு மாதோ. 173

விண்ணா டடையும் நெறியோடு மிளிர்ந்து தோன்றிக்
கண்ணாடு கவின் சுடருங் கருதாது போக்கி
மண்ணாடு தடத்தொரு சார்மலைச் சாரலூடு
புண்ணாடிய நெஞ்சொடு வேதியன் போயினானே. 174

வேறு

வாழிய வானுற நிமிர்ந்த மாண்பது
பாழியங் குவடொரு பத்து மிக்கது
தாழிரும்பொறை நனி சமழ்த்தலால் திரை
ஆழிசூழ் புவிமுது காற்றொன்று தது. 175

கருமுகிற் கணம்புடை கஞலுங் காட்சிய
தருமின முழக்கமிக் குராறுங் கோட்பது
நிருமலன் திருக்கர நீதிப்பட்டயம்
பொருமொளி மின்குழாம் பொலியும் பொற்பது, 176

துப்புறழ் முடித்தலை கவிந்த தோற்றத்த
தெப்புறத் தினும் நனி யிருந்தை யாரழல்
குப்பையை இறைப்பது குலவும் நீணெறி
தப்பிடில் அதோகதித் தடத்தில் உய்ப்பது, 177

தன்னுறு வழிச்செல்ச் சமைந்து ளோர்தமை
முன்னுறும் இருட்சிறைப் படுக்கும் மொய்ம்பது
மன்னுறு வழிகடைப் பிடித்த மாந்தர்க்கும்
பன்னுறு திகில் பல விளைக்கும் பண்பது, 178

வசையற விளங்கிய மாட்சித் தாயினும்
பசையறப் புலர்ந்தது பாலை மாநிலத்
திசையுற விவ்வழி யேகுவோர் தலை
மிசையுறக் கவிழ்ந்திடும் குடுமி மேலது. 179

துன்னரும் நெறியது துலக்க மில்லது
பன்னரும் தரத்தது பவித்தி ரத்தது
மன்னொரு சுதனலால் மனுக்கள் யாரையும்
தன்னடிப் படுக்குறும் தகைமை சான்றது. 180

அதிபதி கனன்று வந்தருளி மேலை நாள்
விதிநிடே தங்களை விதிக்கப் பெற்றது
கதியையும் நரகையும் காட்டு கிற்பது
முதிய சீனாயென மொழி பெயர்த்தது. 181

இம்மலைச் சாரலை யெதிர்ந்து வேதியன்
அம்ம இதென்னென அகந் திகைத்தனன்
விம்மினன் உயிர்த்தனன் வெருண்டு நின்றனன்
மும்மடங் காயது முதுகின் சும்மையும். 182

ஓம்புகென் றுணர்த்திய ஒளியை நீத்திவண்
கூம்பிறு கலமெனக் குலைந் தயங்கினான்

தேம்பினின் றழுதனன் தெருமந்தான் மலைப்
பாம்பின் வாய்த்தேரையிற் பரியும் பான்மையான். 183

மலைமிசைக் குவடிடிந் துருண்டு வல்லையே
தலைமிசை விழுந்திடும் தபயியுய்வழி
இலையினி இனியென வினவுற் றேங்கினான்
அலைமிசை தருதுரும் பனைய நீர்மையான். 184

மாற்றடி பெயர்க்கவும் மனந் துடித்தனன்
வீற்றுவீற் றுருகனல் வெதுப்ப மாழ்கினன்
கூற்றிது வாமெனக் குழங்கி னானுயிர்
ஆற்றலோய்ந் தறிவிழந் தலமந்தானரோ. 185

ஆயிடை முன்னிவற் ககந் தெருட்டிய
நேயமார் தருசுவி சேடன் நேர்ந்து நீ
ஆயமெய் யொளிதிகழ் சுருதி நூனெறி
மேயிடா திகந்த தென் விளம்பு வாயென்றான். 186

(இன்னும் வரும்.)

Narrative of the Mutiny of the Bounty.

நோர்போகத் தீவார் விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

அப்புறம் சில நாட்களாய், பல இடங்களைப் போய்ச் சுற்றிப் பார்த்தும் சுதேசிகளுடைய ஆடல் பாடல்முதலிய வேடிக்கைகளைக் கவனித்தும் உல்லாசமாய்ப் பொழுதுபோக்கினோம். இவ்வாறு சுதேசிகளும் நாங்களும் நெருங்கிய பழக்கமும் அன்னியோன்னிய சிநேகமுமுடையவர்களானோம். சுதேசிகளில் பலர் நாடோறும் கப்பலில் என்னோடு சாப்பிடுவார்கள். அச்சமையங்களில் அவர்கள் காண்பித்த களிப்புக்கும் உல்லாசத்துக்கும் மட்டில்லை. சாப்பிட்டு முடியும்பொழுதெல்லாம் நாங்கள் இராசாவின் சுகவாழ்வை விரும்பி பானம் பருகுவதை அவர்கள் கவனித்திருந்தபடியாலும், இதற்குள்ளாக மதுபானத்தின்பேரில் அவர்கள் மிகுந்த பிரீதியுள்ளவர்களாகிவிட்டபடியாலும், சிலவேளைகளில் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுதே, பிரித்தானியாவின் ஜார்ஜிராஜா வாழ்க என்று கூப்பிட்டுக்கொண்டு மதுபானம் வார்க்கக் கேட்பார்கள். பாத்திரம் நிறைய வார்க்காவிட்டால் என்னைக் கேலியும்பண்ணுவார்கள். இந்த மேரையாக காலம் கழிந்து கொண்டிருந்தது. வெளித்தோற்றத்துக்கு உல்லாசங்களில் பொழுது போக்கினவர்கள்போலிருந்தும், எங்கள் பிரயாணத்தின் நோக்கத்

தைக்குறித்து எவ்வளவேனும் மறதியாயோ அசதியாயோ இருக்கவில்லை. குறிக்கப்பட்டவர்கள் கொண்டுபோகிறதற்கு வேண்டிய முதல்த்தரமான ஈரப்பலாச்செடிகளை ஓயாமல் சேகரித்துக்கொண்டேயிருந்தார்கள். தீனுமுதலிய பிரதானிகளோடு நான் பண்ணின சம்பாஷணைகளினாலே ஒத்தயித்தித் தீவின் ஸ்திதியைக்குறித்தும் அயல் தீவுகளைக்குறித்தும் அநேக விசேஷங்கள் அறியலானேன். மேலும் கூக் என்பவர் அவ்விடம் வந்துவிட்டுப்போனபிறகு அவர்களுக்குள் நிகழ்ந்த காரியங்களையும் விசாரித்து அறிந்தேன். கூக் என்பவரைப்பற்றி வெகு பக்ஷமாயும் பிரஸ்தாபமாயும் பேசினார்கள். அவர்களுக்கு அவர் கொடுத்துப்போயிருந்த அவரது படத்தை மகா பத்திரமாய் வைத்திருந்தார்கள். ஒரு காரியத்தைப்பற்றி மாத்திரம் எனக்குக் கொஞ்சம் விசனமுண்டாச்சுது. அதென்னவென்றால் கூக் என்பவர் தீவில் நட்டிருந்த விருட்சங்கள் விருத்தியடையவும், விட்டிருந்த மிருகாதிகள் பலுகிப் பெருகவும் அவர்கள் அவ்வளவாய்க் கவலைப்படாததுதான். தீனு என்பவன் அருகிலுள்ள சில தீவுகளுக்கு என்னைக் கூட்டிக்கொண்டுபோய்க் காண்பிக்கிறேனென்று பல தடவை பேசிவந்தான். ஒத்தயித்தித் தீவுக்குக் கிழக்கே நாலைந்துநாள் பயணத்தூரத்திலிருந்ததாகச் சொன்ன ஒரு தீவில் எட்டுக்காலுள்ள பெரிய மிருகங்களிருக்கிறதென்று ஒரே சாதனையாய்ச் சாதித்ததுமன்றி, என்னைக் கூட்டிக்கொண்டுபோய் அவைகளைக் காண்பிக்கிறேனென்றும் சொன்னான். அவன் தானே இந்தக் கதையை நம்பியிருந்தானோ இல்லையோவென்று எனக்கு விளங்கவில்லை. அவர்கள் அசாத்தியமான எந்தக் காரியத்தையும் நம்பிக்கொள்ளத்தக்க பேதைகளென்றாலும், தந்திரக்காரராயுமிருந்தபடியால் அவர்கள் சொல்வது நிசமோ பொய்யோ என்று பகுத்தறிவது எப்பொழுதும் லேசல்ல. பூமிசாஸ்திரத்தைக்குறித்து அவர்களுக்குண்டாயிருந்த அறிவு மிகவும் சொற்பம். பூமியானது அகண்ட ஓர் மைதானமென்றும் சூரியசந்திராதிகளாகிய வானுலகங்களெல்லாம் அதை வட்டமிட்டுச் சுற்றிவருகின்றனவென்றும் நினைக்கிறார்கள். சூரியசந்திரர் இருக்கிற இடம்வரையும் போனதுண்டா என்று அவர்கள் பலமுறையும் என்னிடத்திற் கேட்டதுண்டு. நாங்கள் எப்பொழுதும் யாத்திரைசெய்கிறவர்களாயிருந்தபடியால் எங்களாற் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

நாங்கள் ஒத்தயித்தித் தீவுக்கு வந்து இப்பொழுது ஆறு வாரமாயிற்று. இவ்வளவுகாலமும் எங்கள் கப்பல் மத்தேவாய்த் துறைமுகத்தில் நின்றது. நாங்கள் சேகரித்த ஈரப்பலாச்செடிகளைத் தொட்டிகளில் நட்டு வெகு பந்தோபஸ்தாய் கடற்கரையில் வைத்திருந்தது. இதுவரையும் மழையோ காற்றோ இல்லை. சமுத்திரமும் அமரிக்கையாயிருந்தது. ஆகிலும் டிசம்பர்மீ 5உ வெள்ளிக்கிழமையில் காற்று வடமேற்கிலிருந்து அடிக்கத் தொடங்கிச் சமுத்திரம் கொந்தளித்தது. இரவில் பயங்கரமான புசலுமுண்டாயிற்று. அதினாலே இனிமேல் மத்தேவாய்த் துறைமுகத்தில் தங்குவது மோசத்துக்கேதுவாகுமென்று நான் உணர்ந்துகொண்டு, அவ்விடம்விட்டுப் பேர்ந்து கூடிய சீக்கிரம் வசதியான வேறொரு இடம்போய்ச் சேரும்படி தீர்மானித்து எத்தனமாகக் கற்பித்தேன்.

குடிவெறியினாலும் சோம்பலினாலும் வெகுகாலமாய் வியாதியாயிருந்த எங்கள் வைத்தியன் டிசம்பர்மீ 9உ சாயங்காலத்தில் இறந்துபோனான். அவன் பிரேதத்தைக் கடற்கரையில் கொண்டுபோய் க்ஷேமிக்க நினைத்து தீனுவிடத்திற் கேட்டதில், அவன் அதற்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை, என் தகப்பனாரிடத்தில் மாத்திரங் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அதற்காக உடனே புறப்பட்டுப்போய் விட்டான். நான் கடற்கரைக்குப் போனபொழுது, சுதேசிகள் கல்லறை வெட்டி தயார்செய்திருந்ததைக் கண்டேன். சாயங்காலம் நாலு மணிக்குப் பிரேதம் க்ஷேமிக்கப்பட்டது. பிரதானிகளும் சுதேசிகளில் அநேகரும் அடக்கம்பண்ணுகிற விதத்தைப் பார்க்கக் கூடிவந்து மரித்தோரை அடக்கம்பண்ணும் ஒழுங்கு வாசிக்கப்பட்டபொழுது மகா கவனமாய்க் கேட்டுக்கொண்டு நின்றார்கள். மரித்தவனிருந்த அறையில் பேய் பிசாசுகளும் ஆவேசங்களுங் காணப்படுமென்று மேற்படி பிரதானிகள் நினைத்தபடியால், அந்த அறையை என்னசெய்யப் போகிறீர்களென்று என்னிடத்தில் ஆவலாய் விசாரித்தார்கள். ஒத்தயித்தித் தீவில் எவனாவது ஒருவன் மரித்து, அவன் தேகம் பிரேதக்குழியில் வைக்கப்பட்டால், இரவிலே பேய் பிசாசுக்கள் வந்து அதைச் சூழ்ந்துகொள்ளுமென்றும், யாராவது தனிமையாய் அவ்விடத்துக்குப்போனால் அதுகள் அவனைப் பக்ஷித்துவிடுமென்றும் சொன்னார்கள். நான் அதைக் கேட்டபொழுது சிரித்துக்கொண்டு எங்களுக்கு அப்பேர்ப்பட்ட பயம் இல்லையென்று சொன்னதேதவிர, அவர்கள் நினைத்தது தப்பென்று காண்பிக்கப் பிரயாசப்படவில்லை. அன்றிரவில் இறந்துபோனவனுடைய சாமான் தட்டுமுட்டுகளை விற்றுப்போட்டு அவனுக்கு உதவியாய் வந்திருந்தவனை அவன் வேலையைப் பார்க்கத் திட்டம்பண்ணினேன்.

காற்று மழைக்குத் தங்கியிருக்க மத்தாவாய்த் துறைமுகம் வசதியான இடமல்ல என்று நினைத்து அதைவிட்டு அதிசீக்கிரம் போய் விடவேண்டுமென்று நான் கவலையாயிருந்தபடியால், அவ்விடமுதல் தொவாருத் துறைமுகம்வரைக்கும் கடலின் ஆழத்தைப் பரிசோதித்து வரும்படி கப்பலாட்களில் ஒருவனை அனுப்பினேன். அவன் சாயங்காலத்தில் திரும்பிவந்து, கப்பலோட வசதிதானென்றும் எங்கும் ஆழம் பதினாலு பாகத்துக்குக் குறைவில்லையென்றும் அறிவித்தான். தொவாருத்துறை சகலவிதத்திலும் வசதியும் சுகமுமான இடமாகக் காணப்பட்டபடியால் கூடிய சீக்கிரம் கப்பலை அவ்விடத்துக்குக் கொண்டுபோய்விடவேண்டுமென்று தீர்மானித்து, என் நோக்கத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த, எல்லோரும் வெகுவாய்ச் சந்தோஷப்பட்டார்கள். அப்படியே டிசம்பர்மீ 24உ புதன்கிழமையன்று கடற்கரையிலிருந்த செடிகளை கப்பலிலேற்றிக்கொண்டோம். எழுநூற்றியெழுபத்துநாலு தொட்டிகளிலிருந்த மேற்படி செடிகளெல்லாம் நல்ல சுகமான ஸ்திதியிலிருந்தது. சுதேசிகள் சொல்லுகிறபடி எட்டு வகையான ஈரப்பலா விருக்ஷங்கள் உண்டாம். அதுகளுக்கு வெவ்வேறு பெயரும் வழங்குகிறார்கள். இலையின் வடிவத்தினாலும் பழத்தின் பருமனினாலும் அது அதற்குரிய வித்தியாசம் விளங்குமாம். இந்த விருக்ஷங்கள் விதையினால் பயிராகாமல், வாழைமுதலியதுகளைப்போல வேரிலிருந்து வெடிக்கிற கன்றுகளாலேயே பயிராகவேண்டுமாம். ஒத்தயித்தித் தீவார் சந்திரனைக்கொண்டு காலத்தைக் கணிக்கிறதுதான் சாதாரண வழக்கம. அந்தந்தக் காலத்திற் கிடைக்கிற ஈரப்பலாக் கனியைக்கொண்டும் வருஷத்தை ஆறு பிரிவாகப் பிரித்து, அந்தந்தப் பிரிவுக்கு அந்தந்தச் சாதி விருக்ஷத்தின் பெயரையும் வழங்குவார்கள். எந்தக் காலத்திலாகிலும் இந்த விருக்ஷங்கள் முழுவதும் இலையுதிர்ந்துபோய் மொட்டையாய்க் காணப்படுகிறதே இல்லையாம்.

செடிகளைக் கப்பலிலேற்றிக்கொண்ட மறுநாள், நாங்கள் அவ்வி

டம்விட்டுப் பெயர்ந்து தோவாருத்துறை வந்து சேர்ந்தோம். அது சகல விதத்திலும் விரும்பத்தக்க இடமாயும் நல்ல வசதியாயுமிருந்தது. சங்கிலிக் கற்பார்கள் துறைமுகத்தைச் சுற்றி அமைந்திருந்ததினாலே கப்பலுக்கு நல்ல ஒதுக்கிடமுண்டாயிருந்ததன்றியும், கரையில் அலைமும்முரம் கொஞ்சமேனும் இருந்ததில்லை. மேலும் நல்ல தண்ணீருள்ள சிற்றாறு ஒன்று துறைமுகத்தின் மத்தியில் கடலிற் பாய்கிறது. கப்பல் அவ்விடம் வந்து சேர்ந்தவுடனே, மத்தாவாய்த் துறைமுகத்திற் செய்திருந்ததுபோல, இங்கும் செடிகளைக் கரையில் இறக்கிவைக்கக் கற்பித்தேன். தீனு என்பவனும் எங்களுக்குச் சமீபத்திற் குடியிருக்க வந்தான். எங்களுக்கு வேண்டிய சாமான் தட்டுமுட்டுகளைச் சுதேசிகள் வழக்கப்பிரகாரங் கொண்டுவந்து கொடுத்தார்கள். தேங்காய் மகா ஏராளமாய் வந்துகொண்டிருந்தபடியால், கப்பலாட்கள் நாள் முழுவதிலும் அளைப்படி தண்ணீர் முதலாய்க் குடித்திருப்பார்களோ என்று சந்தேகிக்கிறேன். ஈரப்பலாப் பழம் முன்போல் திரளாய் வராவிட்டாலும், எங்கள் செலவுக்குப் போதுமானது கிரயத்துக்குக் கிடைத்தது. மீன் மாத்திரம் திரள்திரளாய் எங்களுக்கு வெகுமதியாக வந்துகொண்டிருந்தது. அவர்கள் மீன்பிடிக்கிறது பெரும்பாலும் இரவில்தான். துறைமுகத்திலிருந்த சங்கிலிக் கற்பார்களிற் போய்த் தீவர்த்திகளும் பந்தங்களும் பிடிக்கவே அந்த வெளிச்சத்துக்கு மீன்கள் ஏராளமாய் வந்து சேருமாம். காற்று மழையில்லாத சில காலங்களில் எண்ணிறந்த படகுகள் மீன்பிடிக்கப்போகும்பொழுது கடல் முழுவதும் ஏகவெளிச்சமாய்க் காணப்படும்.

தோவாருத்துறைக்கு நாங்கள் வந்த கொஞ்சநாளைக்குள்ளாக கவனிக்கத்தக்க ஓர் காரியம் நடந்தது. 1789 ம் ௵ ஜனுவரிமீ 5வ திங்கள்கிழமை அதிகாலை நாலு மணிக்கு கப்பலைச்சேர்ந்த சிறிய வள்ளம் காணாமற் போச்சுது. அது உடனே எனக்கு அறிவிக்கப்பட, நான் கப்பலாட்களையெல்லாம் ஓரிடத்தில் கூட்டிப் பார்த்ததில், மூன்று பெயர் அகப்படவில்லை. அவர்கள் ஏழெட்டுத் துபாக்கிகளும் கொஞ்சம் மருந்து குண்டுமுதலியதும் எடுத்துக்கொண்டுபோயிருந்ததாகவும் தெரியவந்தது. ஆகிலும் அவர்களுடைய நோக்கம் இன்னதென்றும் இன்ன இடத்துக்குப் போயிருந்தார்களென்றும் கப்பலிலுள்ள ஒருவருக்கும் தெரியவில்லை. அதன்பேரில் நான் கரைக்குப்போய்ப் பிரதானிகளிடத்தில் அதைப்பற்றிப் பேசினதில், மேற்படி வள்ளம் மத்தாவாய்த் துறைமுகத்தில் கிடக்கிறதென்றும் அந்தத் துரோகிகள் பெரிய படகு ஒன்றில் ஏறி தெதுரோவா என்னும் தீவுக்குப் போயிருக்கிறார்களென்றும் செய்தி வந்தது. உடனே தீனுமுதலிய பிரதானிகளைப் பார்த்து, மேற்படி துரோகிகளைப் பிடித்துக்கொண்டு வந்து என்னிடத்தில் ஒப்புவிக்கவேண்டுமென்றும் அவர்களில்லாமல் நான் ஒத்தயித்தித் தீவைவிட்டுப் புறப்படமாட்டேனென்றும் வற்புறுத்திச் சொன்னேன். அவர்களைப் பிடித்துக்கொண்டு வர எங்களாற் கூடியமட்டும் பிரயாசப்படுவோமென்று பிரதானிகள் எனக்கு வாக்குறுதி சொல்லிவிட்டு, தங்களில் இருவர் மறுநாள் காலையில் புறப்பட்டு தெதுரோவாவுக்குப்போய் மேற்படியாரைத் தேடிப்பிடித்துக்கொண்டு வரும்படி திட்டம்பண்ணினார்கள்.

கப்பலிலிருந்து ஓடிப்போன துரோகிகளைக் குறித்தாவது அவர்களைத் தேடிப் பிடிக்கப்போன பிரதானிகளைக் குறித்தாவது பதினேழு நாளாய்த் திட்டமான யாதொரு செய்தியும் வந்து எட்டவில்லை. இந்த நாட்களில் நாங்கள் சுதேசிகளோடு வழக்கப்பிரகாரம் கொடுக்கல்

வாங்கல் செய்துகொண்டிருந்தோம். பிரேதங்கள் வைக்கப்படுகிற ஓரிடத்துக்குச் சமீபத்தில் தீனு என்பவனோடு நான் ஒருநாள் நடந்துபோகையில், திடீரென புலம்பி அழுகிற சப்தம் கேட்டது. அப்படி அழுது புலம்பினவளை நான் பார்க்கவேண்டுமென்று விரும்பியபடியால் தீனு என்பவன் என்னை அவ்விடத்துக்குக் கூட்டிக்கொண்டுபோனான். நாங்கள் அங்கே போனபொழுது, சில ஸ்திரீகள் கூடியிருக்கிறதைக் கண்டோம். மேற்படி ஸ்திரீகளுக்குள் ஒருத்தி இறந்துபோய் பிரேதமாய்க் கிடந்த ஒரு பெணகுழந்தையின் தாயாம். அவர்கள் எங்களைக் கண்டதோடு அழுகையை நிறுத்திவிட்டதுமன்றி, கலகலவென்று எல்லாரும் சிரித்துவிட்டார்கள். இந்தச் செய்கையைப் பார்த்த எனக்கு உண்டான பிரமிப்புக் கொஞ்சமல்ல. அதன்பேரில் நான் தீனுவை நோக்கி, அந்த ஸ்திரீக்கு தன் பிள்ளையைக்குறித்துக் கொஞ்சமாவது துக்கமிருக்கவேமாட்டாது, மற்றப்படி அவள் துக்கம் இவ்வளவு லேசாய் அடங்கிப்போகுமா என்றேன். இதைக்கேட்டு தீனு விளையாட்டுப்போல அவளைத் திரும்பவும் அழச்சொன்னான். என்றாலும் நாங்கள் அங்கே நின்றவரையில் அவர்கள் அழவில்லை. இந்த நடபடிக்கையைப் பார்க்கிறவர்களும் கேட்கிறவர்களும், அந்தத் தீவார் அன்பு உருக்கம் எவ்வளவேனுமில்லாத கடின நெஞ்சுள்ளவர்கள் என்று நினைக்க ஏவப்படுவார்கள். ஆகிலும் காரியம் அப்படியல்ல. அவர்கள் பெரும்பாலும் தங்கள் பிள்ளைகள்பேரில் மகா பாசமும் பக்ஷமுமுள்ளவர்கள்தான். ஆகிலும் அவர்கள் குணம் உறுதியில்லாததென்றும், மரணத்தைக்குறித்து அவர்களுக்குள் அவ்வளவான பயமோ கனபத்தியான எண்ணமோ இல்லையென்றும் நிதானிக்கத்தக்கது.

அந்தமாதம் 22வ வியாழன் சாயந்தரத்தில் தெபக்கு என்ற துறைமுகத்திலிருந்து ஒரு செய்திவந்தது. மேற்படி கப்பல் துரோகிகள் அந்த இடத்தின் வழியாய் ஐந்துமைல் தூரத்திலுள்ள தெத்தக்கா என்னும் இடத்திற் போயிருக்கிறார்களென்று அவ்விடத்தார் சொல்லியனுப்பினார்கள். உடனே நான் வள்ளத்தைத் தயார்செய்யும்படி கற்பித்து, சூரியன் அஸ்தமனமாகும் சமயத்தில் கப்பலைவிட்டுப் புறப்பட்டு, மேற்படி துரோகிகள் போயிருந்த இடத்துக்குச் சற்று தூரத்தில் கரை இறங்கினேன். அவர்கள் நான் வந்திருக்கிறதைக் கேட்டிருந்தும், நான் வீட்டுக்குச் சமீபமாய்ப் போனவுடனே நிராயுதபாணிகளாய் வெளியேவந்து தங்களை ஒப்புவித்தார்கள்.

கப்பலாட்களில் மூன்றுபெயர் இப்படித் துரோகம் பண்ணிப்போன சங்கதி பிற்காலத்தில் என் மனதில் பட்டதுபோல அக்காலத்தில் படவில்லை. அதற்குச் சிறிது நாளைக்குள் நடந்த வேறொரு சங்கதியையும் நான் கவனிக்கவேண்டிய அளவு கவனிக்கவில்லை. அப்புறம் நடந்த சங்கதியென்னவென்றால் கடற்கரையில் மாட்டியிருந்த கப்பல் வடத்தை ஒரு புரிதவிர முழுமையும் அறுத்துவிட்டதுதான். இந்தச் செய்கை சுதேசிகளில் யாராலேயாவது நடந்திருக்கவேண்டுமென்று நினைத்தேன். ஒத்தயித்தித் தீவார் ஓரே சீராய்ச் சிநேகமும் ஐக்கியமுமாயிருந்தபடியால் அவர்களால் இது நடந்திராவிட்டாலும், மேற்படி தீவுக்கு ஓயாமல் வரத்துப்போக்காயிருந்த அயல் தீவாராலேயாவது நடந்திருக்கவேண்டுமென்பதே என்னுடைய அபிப்பிராயம் இதனிமித்தமாய், பிரதானிகளை மேற்படி குற்றவாளிகளைப் பிடிக்கும்படி யேவுந்நோக்கமாய் அவர்கள்பேரில் கொஞ்சம் விசனம்பாராட்டினேன். ஆயினும் இது காரியத்தில் அவர்கள் பட்ட பிரயாசங்களெல்லாம் வியர்த்தமாயிருந்தன. பிற்பாடுதான் எங்கள் கப்பலாட்களில சிலராலேயே

இந்தக் காரியம் நடந்திருக்குமென்று நான் நினைக்க ஏவப்பட்டது. கப்பலை எந்த வகையினாலாவது கரையில்வந்து மோதிச் சேதப்படும்படி செய்துவிட்டால், ஒத்தியித்தித்தீவில் இருந்துகொள்ளும்படி விரும்பின காரியம் அனுகூலமாய்ச் சித்திபெறுகிறதாயிருக்குமே. என்றாலும் அந்தக் காலத்தில் தங்கள் சுயதேசத்துக்குத் திரும்புவதை வெறுத்து இந்தத் தீவுகளிலிருந்துகொள்ள அவ்வளவாய் விரும்புவார்களென்று நான் நினைக்க இடமில்லாதிருந்தபடியால் எங்கள் ஆட்களைக் குறித்து என் மனதில் எவ்வளவேனும் சந்தேகம் தோன்றவில்லை.

பெப்ருவரிமாதமும் கழிந்துவிட்டது. மார்ச்சுமாதத்திலும் அநேக நாள் சென்றுவிட்டது. தீவார் எங்கள்பேரிலும், நாங்கள் அவர்கள் பேரிலும் அதிகமதிகமான வாஞ்சையும் பிரியமுமுள்ளவர்களாகிக் கொண்டுவந்தோம். நாங்கள் தீவைவிட்டுப் புறப்படவேண்டிய காலம் கிட்டிவிட்டதென்று அறிந்தபொழுது மிகுதியான துக்கம்வெளிப்பட்டது. ஒருநாள் சாப்பிட்டு முடிந்தவுடனே தீனாவும் அவன் மனைவியும் என்னோடுகூட இங்கிலாந்துக்கு வருகிறோமென்று ஆவலாய்ச் சொன்னதைப் பார்த்து நான் ரொம்பவும் ஆச்சரியப்பட்டேன். இது காரியத்தில் அவனுடைய அலட்டுதலையும் கெஞ்சுதலையும் நிறுத்தும்படியாக, நான் திரும்ப வரும்போது உங்களை இங்கிலாந்துக்குக் கூட்டிக்கொண்டுபோக இராசாவினிடத்தில் உத்தரவுபெற்று வருவேன் என்று அவர்களுக்கு வாக்குறுதிசொல்ல நேரிட்டது. நான் திரும்ப வரும்பொழுது பெரிய கப்பல் கொண்டுவருவேன், அதில் உங்களுக்கும் மற்றவர்களுக்குமிருக்கப் போதுமான வசதியும் விஸ்தீரணமுமிருக்குமே என்றும் வெகுவாய்ச் சொன்னதின்பேரில் அந்த எண்ணத்தை விட்டார்கள்.

மார்ச்சுமாதக் கடைசியில் மேற்படி தீவைவிட்டுப் புறப்பட ஆயத்தம்பண்ணினோம். மேற்படி மீ 27௳ கடற் கரையிலிருந்த செடிகளைக் கப்பலுக்குக்கொண்டுபோகத் தொடங்கினோம். செடிகள் நல்ல ஸ்திதியிலிருந்தன. 31௳க்குள்ளாக செடிகளையெல்லாங் கப்பலிலேற்றித் தீர்ந்தது. அவைகள் எழுநூற்றெழுபத்துநாலு தொட்டிகளிலும் முப்பத்தொன்பது பீப்பாய்களிலும் இருபத்தினாலு பெட்டிகளிலுமிருந்தன. ஈரப்பலாச் செடிகள் 1015 ஒடு வேறுவகையான செடிகளும் அநேகம் சேகரித்துவைத்திருந்தோம்.

கடைசியில் பிரயாணத்துக்குச் சகலமும் தயாராயிற்று. 1789ம் ௵ ஏப்பிரல் மீ 4௳ சனிக்கிழமையன்று அதிகாலையில் நங்கூரந் தூக்கி, காற்றில்லாதிருந்தும் படகுகளைக்கொண்டு ஆறரைமணிக்குள்ளாக கப்பலைத் துறைமுகத்திலிருந்து சமுத்திரத்துக்குள் தள்ளிக்கொண்டு போய்விட்டோம். கொஞ்சநேரத்துக்குள்ளாக கடற்காற்று எழும்ப, கப்பலோட ஆரம்பித்தது. சுதேசிகளில் திரள்பேர் வள்ளங்களிலேறி எங்களை வழியனுப்பிக்கொள்ள வந்தார்கள். தீனாவும் அவன்மனைவியும் எங்களோடு படகிலிருந்தார்கள். மத்தியானம் சாப்பிட்டுத் தீர்ந்தவுடனே, தீனாவுக்கும் அவன் மனைவிக்கும் நான் வெகுமதியாகக்கொடுத்துக் கப்பலிலேயே வைத்திருந்த பதார்த்தங்களையெல்லாம் கப்பலைச் சேர்ந்த படகுகளிலொன்றில் எடுத்துவைக்கும்படி கற்பித்தேன். மேலும் அவனுக்கு ஆயுதங்கள் கொடுப்பேனென்று வாக்குச் சொல்லியிருந்தபடியால், இரண்டு துப்பாக்கிகளும் இரண்டு பிஸ்தோல்களும் போதுமான குண்டுமருந்தும் கொடுத்ததன்பின்பு, சூரியன் அஸ்தமிக்குமுன் படகு திரும்பி வரவேண்டியபடியால் அவர்கள் உடனே போய்விடுவது அவசியமென்று எண்ணியிருந்தேன். அதன்பேரில் மகா உருக்கத்தோடு அவர்கள் என்னை வழியனுப்பிக்கொண்டு படகிலிறங்கி

னார்கள். வழியனுப்புகையில் அவர்கள் சொன்ன [illegible] மொழிகளில் ஒன்று என்னவென்றால் "ஈதுவா உம்மை என்றென்றைக்கும் பாதுகாப்பாராக" என்பது.

இவ்வாறு, ஒத்தயித்தித்தீவில் நாங்கள் ஐந்து மாதம் சஞ்சரித்தபிறகு, அதைவிட்டுப் பயணம்புறப்பட்டோம். தீவார் எங்களுக்கும் நாங்கள் தீவாருக்கும் காண்பித்த பரஸ்பரசயவு எவ்வளவு சிநேகத்துக்கும் பாசத்துக்கும ஏதுவாகப் பலித்ததென்று அடியில்வரும் விர்த்தாந்தத்தினால் பரிஷ்காரமாய் விளங்கும். இந்தத் தீவாருடைய அன்பும் பக்ஷமுமான நடபடிக்கைகளினாலேயே, இந்த யாத்திரையின் நோக்கம் முற்றும் அவமாய்ப்போயிற்று. மற்றபடி எவ்வளவோ அனுகூலமாய் கைகூடியிருக்குமென்று நிச்சயமாய்ச் சாதிக்கலாகும்.

கப்பலில் நடந்த கலகம்.

ஒத்தயித்தித்தீவுக்கு அருகாண்மையிலுள்ள சிறிய தீவுகளுக்குள் உத்தேசம் மூன்றுவாரம் பின்னிட்டோம். மேற்படி தீவுகள் சிலவற்றில் நாங்கள் கரை இறங்கினதுமுண்டு. எனக்கு விதிக்கப்பட்டிருந்த திட்டங்களுக்கிசைவாய், எண்டவர் வாய்க்கால்வழியாய் சுண்டாக் கால்வாயிலிருக்கிற பிரின்ஸ்தீவுக்குப்போகக் கப்பலைச் செலுத்தினோம். ஏப்பிரல் மீ 11௳ மத்தியானத்தில், தோபோவாதீவுக்கும் கோட்டேத்தீவுக்கும் ஊடேவந்துவிட்டோம். அது சமரேகைக்குத்தெற்கே 19 பாகை 18கலை தூரமென்று காணப்பட்டது.

இம்மட்டும் எங்கள் யாத்திரை சேமமாய் நடந்தேறியது. இதுவரையும் சம்பவித்த அநேக சங்கதிகள் எங்கள் மனதுக்குத் திர்ப்திகரமாயும் சந்தோஷகரமாயுமிருந்தன. இது முதல்த்தான் காரியம் விபரீதமாயும் பிரதிகூலமாயும் நடக்க ஆரம்பித்தது.

1789ம் ௵ ஏப்பிரல் 27௳ திங்கள்-சாயங்காலத்தில் காற்று வடதிசையாய அடித்துக்கொண்டிருந்ததினால், தோபாவாத்தீவுக்குத் தெற்காக நாங்கள் செல்லும்படி மேல்திசையாய்க் கப்பலைச் செலுத்தினோம். இரவு முழுவதும் இத்திசையாயே ஓடும்படி திட்டமும் பண்ணியிருந்தேன். அன்று சாமக்காரராய் நின்றவர்களில் கிறிஸ்தியான்என்றவன் ஒருவன்.

28௳ செவ்வாய்- சூரியோதயத்துக்குச் சற்றுமுன்னதாக நான் நித்திரையாயிருக்கையிலேயே, மேற்படி கிறிஸ்தியானும் வேறு மூவரும் என் அறைக்குள் வந்து என்னைப் பிடித்து, பேசினால் அல்லது எவ்வகைச் சத்தமாவது பண்ணினால் தக்ஷணமே கொன்றுபோடுவோமென்று பயமுறுத்தி, ஒரு கயிற்றினால் என் கைகளைப் பின்கட்டாய்க் கட்டினார்கள். என்றாலும் நான் உதவிகிடைக்குமென்ற நம்பிக்கையின் பேரில் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டேன். கலகக்காரர் தங்களைச் சேராத கப்பலாட்களை வெளியே வராதபடிக்குப் பந்தோபஸ்துப் பண்ணி அவர்கள் அறைக் கதவுகளுக்கு முன் காவலாட்களையும் நிறுத்தியிருந்தார்கள். அவ்வாறே என் அறைக்குள் வந்த நாலு பேரைத் தவிர வேறு மூன்றுபேரும் கதவுக்கு முன்னின்றார்கள். கிறிஸ்தியான்கையில் ஒரு சமுதாடுமாத்திரமிருந்தது. மற்றவர்களோ துப்பாக்கிகளும் குற்றுவாட்களும் பிடித்திருந்தார்கள். என்னை என்படுக்கையைவிட்டு இழுத்து, கப்பலின் மேல்த்தட்டிற் கொண்டுவந்து நிறுத்தினார்கள். என் கைகளை இறுகக் கட்டியிருந்ததினாலே எனக்குண்டாயிருந்த வேதனை கொஞ்சமல்ல. இப்பேர்ப்பட்ட நிஷ்டூரஞ்செய்கிறதற்கு முகாந்திரம் என்ன என்று நான் கேட்டதற்கு, பேசாதிருஎன்று வைதார்களே அல்லாமல் வேறு பதிற்சொல்லவில்லை. கலகக்காரரைச் சேராதவர்களில் மிகுதி

யானவர்களை கப்பலின் அடித்தட்டில் வைத்துப் பந்தோபஸ்துப் பண்ணிக்கொண்டு, சிலரை மாத்திரம் மேலேவரவிட்டு அவர்களிலொருவனை வள்ளத்தைக் கடலிலிறக்கிவிடும்படி கற்பித்தார்கள். அவன் சற்று மனமில்லாமை காண்பிக்க, உடனே கொன்றுபோடுகிறோம் பார் என்று பயமுறுத்தினார்கள்.

வள்ளம் கடலிலிறங்கினவுடனே கப்பலாட்களில் மூன்றுபேரை அதிற்போகக் கற்பித்தார்கள். அதன்பேரில் இப்படிச்செய்யச் சொன்னதில் அவர்கள் நோக்கம் என்னவென்று கேட்டு அப்பேர்ப்பட்ட கொடுமைசெய்யாமல் நிறுத்தும்படி என்னைச் சுற்றி நின்றவர்கள் மனதை மாற்றப் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் பட்ட பிரயாசமெல்லாம் வியர்த்தமாயிருந்தது. கிறிஸ்தியான் வைத்திருந்த சமுதாட்டைக் கொடுத்துவிட்டு ஒரு குத்துவாளை வாங்கிக்கொண்டு என்னைக் கட்டியிருந்த கயிற்றைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டு, நான் மூச்சுப்பேச்சுக் காட்டுகிற பக்ஷத்தில் உடனே கொன்றுபோடுகிறேனென்று மிகுதியும் சபித்துக்கொண்டு பயமுறுத்தினான். என்னைச் சூழ்ந்து நின்ற மற்றும் துஷ்டரும் தங்கள் துப்பாக்கிகளை வார்ப்பண்ணிக்கொண்டு சனியன்களைப் பிடித்தவர்களாக நின்றார்கள். சில ஆட்களைப் பேர்பேராகக் கூப்பிட்டு வள்ளத்திலிறங்கும்படி துரிதப்படுத்தித் தள்ளினார்கள். அதினால் வள்ளத்திலிறங்கியிருந்த பேர்களும் நானுமாக திசைகெட்டு அலையும்படி விடப்படப் போகிறோமென்று நிச்சயித்துக்கொண்டேன். ஆகையால் கலகக்காரர் மனதை மாற்றும்படி வேறொரு பிரயத்தனம்பண்ணினேன். அதற்கு, பேசாதிரு உன் மூளை சிதறிப்போகும்படி செய்வோமென்று சொல்லி பயமுறுத்தினதேதவிர வேறு பயன் உண்டாகவில்லை.

வள்ளத்திலிறங்கக் கற்பிக்கப்பட்டவர்கள் கொஞ்சம் கயிறு பாய் விழுதுமுதலிய சில தட்டுமுட்டுகளும் இருபத்தெட்டுக் கலன் தண்ணீர் பீப்பாய் ஒன்றும் நூற்றைம்பது இராத்தல் ரொட்டியும் கொஞ்சம் மதுபானமும் திசையறிகருவிகள் இரண்டொன்றும் எடுத்துக்கொள்ள இடம்பெற்றார்களேயன்றி, படங்களோ கணித நூல்களோ கடியாரமுதலிய கருவிகளோ மற்றெவ்வகைச் சாமான்களோ எடுத்துக்கொள்ள கலகக்காரர் சம்மதிக்கவில்லை.

அப்பால் வள்ளத்திற்போகவேண்டிய மற்ற ஆட்களையும் வரச்சொல்லி வள்ளத்திற்குள் விழத்தள்ளினார்கள். என்னை மாத்திரம் தூரத்திற்கொண்டுபோய் நிறுத்திப் பந்தோபஸ்துபண்ணி வைத்திருந்தார்கள். என்னைக் காபந்துபண்ணிக்கொண்டிருந்தவர்களில் ஒருவன் எனக்கு உதவிசெய்ய சற்று மனஞ்சாய்ந்திருப்பதை நான் கிரகித்து பார்வையினாலும் சைகையினாலும் எங்கள் விருப்பங்களை ஒருவருக்கொருவர் தெரியப்படுத்திக்கொண்டோம். அதை மற்றவர்கள் கண்டுபிடித்து அவனை வேறோரிடத்துக்கு அனுப்பிவிட்டார்கள். அப்பால் இவனும் வேறு சிலரும் என்னோடு வரவிரும்பி வள்ளத்திலிறங்கப் பார்த்தும் அவர்களைப் பயமுறுத்திக் கப்பலிலேயே நிறுத்திக்கொண்டார்கள். நான் வள்ளத்திலிறங்கினபிறகு, இவர்கள் தாங்கள் இக்கலகத்தில் எவ்வளவேனும் சம்பந்தப்படவில்லையென்றும் பலவந்தத்தினாலேயே தாங்கள் தடைப்பட்டிருப்பதாயும் எனக்கு அறிவித்தார்கள்.

என்னோடு போகவேண்டிய ஆட்களெல்லாம் வள்ளத்திலிறங்கித் தீர்ந்தவுடனே, கிறிஸ்தியான் என்னை நோக்கி, மாலுமியே வாரும், உம்முடைய ஆட்களெல்லாம் இப்பொழுது வள்ளத்திலிருக்கிறார்கள்; நீரும் அவர்களோடுகூடப் போகவேண்டும்; எவ்வளவேனும் தடைசெய்கிற

துண்டானால், க்ஷணமே உம்மைக் கொன்றுபோடுவோம் என்று சொல்லி கலகக்காரர் ஆயுதபாணிகளாய் என்னைச் சுற்றி நிற்க கப்பல் வாசலிற்கொண்டுபோய் என்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டு வள்ளத்துக்குள் என்னைத் தள்ளினார்கள். அப்புறம் கொஞ்சம் பன்றியிறைச்சியும் துணிமணியும் நாலு சமுதாடுகளும் வள்ளத்துக்குள்ளெறிந்து எங்களை வெகுவாய்ப் பரியாசம்பண்ணினபிறகு வள்ளத்தைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்து எங்களை நடுச்சமுத்திரத்தில் திசைகெட்டு அலையும்படி விட்டுவிட்டார்கள்.

வள்ளத்தில் என்னோடு பதினெட்டுப் பெயர் இருந்தார்கள். கப்பலாட்களில் பலசாலிகளான இருபத்தைந்து பெயர் கப்பலிலேயேயிருந்துகொண்டார்கள். அப்பால் காற்றில்லாததினாலே நாங்கள் தண்டு வலித்து, வடகிழக்கில் சுமார் முப்பது மைல் தூரத்திலிருந்த தோபோவாத் தீவுக்கு நேரே சென்றோம். கப்பலை நாங்கள் காணக்கூடியவரையில் வடமேற்காக கப்பலைச் செலுத்துகிறவர்கள்போல காண்பித்தார்கள். இப்படிச்செய்தது எங்களை வஞ்சிக்கிறதற்கேயல்லாமல் மற்றப்படியல்ல. என்னத்தினாலென்றால் நாங்கள் கப்பலைவிட்டுப் புறப்பட்டபின்பு ஒத்தயித்தி வாழ்க என்று கலகக்காரர் அநேகம்விசை ஆர்ப்பரித்த சத்தம் எங்களுக்குக் கேட்கப்பட்டது.

இப்பேர்ப்பட்ட கலகம் நடப்பதற்குக் காரணம் என்னவென்று எவர்களும் கேட்பார்களே. இந்தக் கேள்விக்குச் சொல்லத்தக்க பிரதியுத்தரம் என்னவென்றால், கலகக்காரர் தம் சுதேசத்திற் பார்க்க ஒத்தயித்தித் தீவாருக்குள் அதிகச் சுகமாயும் க்ஷேமமாயும் வாழலாம் என்று நினைத்ததும் அவ்விடத்து ஸ்திரீ சனங்களோடு சிலர் பண்ணியிருந்த தூர்ச்சம்பந்தங்களுமே இதற்குக் காரணம் என்று சொல்லத்தக்கது. ஒத்தயித்தித் தீவின் ஸ்திரீ சனங்கள் பெரும்பாலும் முகலட்சணமும் சாந்தகுணமும் ஒழுக்கத்திலும் சம்பாஷணையிலும் மனதைக் கவர்ந்துகொள்ளக் கூடியவர்களும் புருஷரை மயக்கி வசப்படுத்திக்கொள்ளத்தக்க அதிகாரமுள்ளவர்களுமாயிருந்தார்கள். பிரதானிகளும் நம்முடைய சனங்களோடு வெகுவாய்ப் பாசமாகிவிட்டதினாலே, இவர்களைத் தங்களிடத்திலிருந்து கொள்ள ஏவினதுமன்றி அப்படியிருந்துகொண்டால் நல்ல செழிப்பான க்ஷேத்திரங்கள் தருவோமென்று வாக்குறுதியும் பண்ணியிருந்தார்கள். இத்தியாதி முகாந்தரங்களினாலேயே, சுதேசத்தில் நெருங்கிய சுற்றத்தாரோ காணி பூமிமுதலிய ஆஸ்திபாஸ்திகளோ இல்லாத கப்பற்காரர் இவ்வாறு கலகித்து இருந்துகொண்டது ஆச்சரியமாய்க் காணப்படவேமாட்டாது.

கைவிடப்பட்டவர்களுடைய முடிவு.

கப்பலிலிருந்து இவ்வாறு தூரத்திவிடப்பட்டபின், தோபோவாத் தீவில் கரையிறங்கி கொஞ்சம் ஈரப்பலாப் பழமும் தண்ணீரும் சவரித்துக்கொண்டு அப்புறம் தொங்கத்தாபு என்ற தீவுக்குப்போய், நாங்கள் இந்தியா வந்து சேரும்பரியந்தம் எங்களுக்கு வேண்டிய தட்டுமுட்டுக்களும் போசனபதார்த்தங்களும் சேகரித்துத் தந்து அனுப்பும்படி அவ்விடத்து இராஜாவினிடத்திற் கேட்கவேண்டுமென்று முதல் தீர்மானித்தேன். வள்ளத்தில் அகப்பட்ட போசனபதார்த்தமெல்லாம், நூற்றைம்பது இராத்தல் ரொட்டி, பதினாறு பன்றியிறைச்சிக் கண்டம், ஆறுபுட்டி ரம் சாராயம், ஆறு புட்டி உவைன் சாராயம், இருபத்தெட்டுக் கலன் தண்ணீர் இவ்வளவுதான்.

நாங்கள் தோபோவாத் தீவைச் சேர்ந்தபொழுது சூரியன் அஸ்தமித்துப்போயிற்று. தீவின் கரை செங்குத்துப்பாறையாயிருந்தபடி

யால் உடனே கரை இறங்கக்கூடாமல் இரவுமுழுதும் வள்ளத்திலேயே யிருந்தோம். மறுநாட்காலையில் ஒரு சிறிய குடாவைக் கண்டு அங்ஙனம் கரை இறங்கினோம். இந்த இடம் சமோவைக்குத் தெற்கே 19 பாகை 41 கலையாயிருந்தது. தொபாவாத் தீவு பிரண்டிலி என்னப்பட்ட கூட்டத் தீவுகளில் வடமேற்குக் கடைக்கோடியிலிருந்தது. நாங்கள் வள்ளத்திலிருந்த போசனபதார்த்தங்களைச் செலவழிக்காமல் பத்திரமாய் வைத்துக்கொள்ளத் தீர்மானித்து, மேற்படி தீவிலேயே கொஞ்சம் ஆகாரம் சவதரித்துக்கொள்ளப் பார்த்தோம். நாங்கள் மும்மூன்று நந் நான்கு பேராய்ப் பிரிந்து, தண்ணீரும் ஏதாவது கொஞ்சம் ஆகாரமும் அகப்படாதாவென்று இரண்டுநாளாய்த் தீவைச்சுற்றி யலைந்தோம். இவ்விரண்டு நாளும் நாங்கள் படவிலிருந்து கூடக்கொண்டு வந்திருந்த கொஞ்ச ஆகாரத்தைக்கொண்டு தான் எங்கள் பசியை ஆற்றிக்கொள்ளவேண்டியதாயிருந்தது. மேற்படி தீவு முதற்பார்வையில் குடிசனமில்லாத பாழ்த்தீவுபோலவே காணப்பட்டது. மே௴ 1௳ வெள்ளிக்கிழமையன்று இரண்டு புருஷரும் ஒரு ஸ்திரீயும் ஒரு குழந்தையும் எங்கள் சனங்களுக்குத் தென்பட்டார்கள். இவர்கள் கடற்கரையண்டை எங்களிடத்துக்கு வந்து இரண்டு தேங்காய்ச் சிரட்டை நிறையத் தண்ணீர் கொண்டுவந்தார்கள். அப்பால் அவர்களுக்குக் கொஞ்சம் சிநேகம் பாராட்டி, ஈரப்பலாப்பழம் வாழைப்பழம் தண்ணீர்முதலியது பார்த்துக்கொண்டு வரும்படி அனுப்பினேன். கொஞ்சநேரத்துக்குள்ளாக வேறு சில சுதேசிகளும் எங்களிடத்துக்கு வந்தார்கள். மத்தியானத்துக்குள் முப்பது பேர்வரையும் சேர்ந்து எங்களுக்குக் கொஞ்சம் போசனபதார்த்தங்களும் கொண்டுவந்து கொடுத்தார்கள். கப்பலில்லாமையைப்பற்றி சுதேசிகளுக்கு இன்ன முகாந்தரம் சொல்லுகிறது என்று எனக்குத் தோன்றவில்லை. பின்னுக்கு வருகிறதென்று சொல்லுகிறதானால் மலையேறிப் பார்த்துக் காணாத பக்ஷத்தில் நம்பவேமாட்டார்களென்று எனக்குத் தெரியும். நடந்த காரியத்தை உள்ளபடி சொல்லுகிறதோ கப்பல் அமிழ்ந்துபோய் நாங்கள் மாத்திரம் தப்பி வந்தோமென்று சொல்லுகிறதோ எது தகுதியென்று நான் யோசித்துப் பார்த்ததில், பிந்தினதே அனுகூலமாயிருக்குமென்று தீர்மானித்து எல்லாரும் ஒன்றுபோல சொல்லும்படி என் ஆட்களுக்கெல்லாம் போதித்திருந்தேன். நான் நினைத்திருந்த பிரகாரம் சுதேசிகள் கப்பலைப்பற்றி விசாரித்தார்கள். அதன்பேரில் நாங்கள் சொன்ன எங்கள் வாய்ப்பிறப்பை நம்பிக்கொண்டவர்கள்போலுங் காணப்பட்டார்கள். என்றாலும் அவர்கள் முகத்தில் சந்தோஷமாவது துக்கமாவது எவ்வளவேனும் வெளிப்படவில்லை. சற்றே ஆச்சரியக் குறிப்பு மாத்திரம் தோன்றினதாக நினைத்தேன். சாயங்காலமுழுவதும் சுதேசிகளிற் சிலர் வருகிறவர்களும் போகிறவர்களுமாயிருந்தார்கள்.

சாயந்தரம்போல எங்களுக்குக் கிடைத்த போசனபதார்த்தங்கள் ஒருவாறு அதிகப்பட்டதாகக் கண்டு சந்தோஷப்பட்டேன். எங்களுக்குக் கொடுக்கிறதற்குச் சுதேசிகளிடத்திலும் அதிகமிருந்ததாகத் தோன்றவில்லை. அவரவர் கொண்டுவந்தது மகா அற்பசொற்பமாயிருந்தபடியால், எங்கள் பிரயாணத்துக்குப் போதுமான சாமான்கள் கிடைக்குமென்று நானு நினைக்க இடமிருந்ததில்லை. இரவில் நாங்கள் கொஞ்சம் கொஞ்சம் தேங்காயும் ஈரப்பலாப்பழமும் சாப்பிட்டதின்பின் நெருப்பு உண்டாக்கிக் காவலாட்களும் வைத்துவிட்டு மற்றவர்கள் நித்திரைசெய்தோம்.

சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து.—பசிபிக் சமுத்திரத்திலும் தென் துருவத்துக்குச் சமீபத்திலும் சாஸ்திர சம்பந்தமான பரீட்சைகள் செய்துவரும்படி பின்னும் ஒரு கப்பலை அனுப்பத் தீர்மானமாயிருக்கிறது. சற்றுமுந்தி நடந்த வடதுருவயாத்திரைக்குத் தலைமையாயிருந்த சர்சார்ஜ் நேரிஸ் துரையே இம்மரக்கலத்துக்கும் தலைமையாயிருப்பார். எடின்பரோ டியூக் பிரபு அவர்களின் பத்தினியாராகிய எடின்பரோ டச்செஸ் பெருமாட்டியார் ஒரு புத்திரியை பிரசவித்தார்கள். இது நாலாவது குழந்தை. தென் உவேல்ஸ் நாட்டைச் சேர்ந்த நீயுபோர்ட்டு என்னும் ஊருக்குச் சமீபத்த கேணியொன்றில் பயங்கரமான வெடி அதிர்ச்சி உண்டாகி, சுரங்கக்காரரில் 280 பேர் மடிந்துபோனார்கள்.

சீப்புரு.—இத்தீவுக்கு அனுப்பப்பட்ட இந்திய பட்டாளத்து சிப்பாய்கள் இந்தேசத்துக்குத் திரும்புகிறார்கள்.

தூர்க்கியா.—பெர்லின் நகரத்தில் கூடிய ஸ்தானாபத்திய மகா சபையில் ஒப்புக்கொண்டபடி, குறித்த சீர்திருத்தங்களை நடப்பிக்க தூர்க்கியா எவ்வளவும் சிரத்தை காண்பிக்கவில்லை. ஆகையால் ஐரோப்பா ராஜாங்கத்தார் சிலர் அதை பலவந்தமாய்த் தூண்டிவிட யோசிக்கின்றனர். தூர்க்கிய ராஜ்யம் திர்ப்திகேடான ஸ்திதியிலிருக்கின்றது.

போஸ்னியா.—கடுஞ் சமர் புரிந்து சுமார் ௨௯ பேர் மடிந்தபின் அவுஸ்திரியர் பொஸ்னியாவைக் கட்டிக்கொண்டார்கள்.

கபூல்.-இத்தேசத்து ராஜபட்டத்துக்கு வாரிசுதார் தேகவியோகமானார். சர் நேவில் சேம்பர்லேன் துரையை தலைமையாய்க் கொண்ட இங்கிலீஷ் ஸ்தானாபத்தியக் கூட்டம் அவ்விடத்துக்கு வழிக்கொண்டிருக்கிறது.

அக்டோபர்மீ நாள் 31. புரட்டாசிமீ 17௳ முதல், ஐப்பசிமீ 16௳ வரை.

வாரம்.	இங்கி. தேதி.	தமிழ் தேதி.	அனுதினத் தியானம்.
செ	1	௧௭	பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். 1 பே. 1:17.
பு	2	௧௮	உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. நீதி. 6:20.
வி	3	௧௯	தேவனிடத்தில் பட்சபாதமில்லை. ரோமர் 2:11.
வெ	4	௨௰	ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டது. 4:9.
ச	5	௨௧	உங்கள் ஜீவன் தேவனுக்குள் மறைந்திருக்கிறது. கொலோ. 3:3.
ஞா	6	௨௨	கிறிஸ்து எல்லாரிலும் எல்லாருமாயிருக்கிறார். 11.
தி	7	௨௩	துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே. நீதி. 4:14.
செ	8	௨௪	அயலானுக்கு விரோதமாகத் தீங்கு நினையாதே. 3:29.
பு	9	௨௫	இரட்சிப்பு கர்த்தருடையது. சங்கீதம் 3:8.
வி	10	௨௬	நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள். 140:13.
வெ	11	௨௭	உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும். லூக். 19:26.
ச	12	௨௮	ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள். 1 யோ. 3:7.
ஞா	13	௨௯	செபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். ரோ. 12:12.
தி	14	௩௰	ஞானப் பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். 1 பே. 2:3.
செ	15	௩௧	வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர். எபி. 10:23.
பு	16	௧	என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும். சங். 141:3.
வி	17	௨	மூடருக்குத் தோழன் நாசமடைவான். நீதி. 13:20.
வெ	18	௩	வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள். மத். 6:7.
ச	19	௪	கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. யாக். 2:20.
ஞா	20	௫	இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள். யாத். 16:25.
தி	21	௬	நான் அவன் தேவனாயிருப்பேன். வெளி. 21:7.
செ	22	௭	ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். கொலோ. 3:13.
பு	23	௮	நான் பிழைக்கிறபடியினாலே நீங்களும் பிழைப்பீர்கள். யோ. 14:19.
வி	24	௯	ஞானமுள்ளவன் தீமைக்கு விலகுகிறான். நீதி. 14:16.
வெ	25	௰	அவர் அதிகமான கிருபையளிக்கிறார். யாக். 4:6.
ச	26	௧௧	முதலாவது தேவனுடைய ராச்சியத்தைத் தேடுங்கள். மத். 6:33.
ஞா	27	௧௨	ஓய்வுநாளை ஆசரிப்பீர்களாக. யாத். 31:14.
தி	28	௧௩	முற்கோபி மதிகேட்டைச் செய்வான். நீதி. 14:17.
செ	29	௧௪	தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். யாக். 4:6.
பு	30	௧௫	நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள். மத். 6:34.
வி	31	௧௬	தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான். நீதி. 10:19.

விசேஷ நாட்கள்.

6. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 16ம் ஞாயிறு.
11. பௌரணமி.
13. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 17ம் ஞாயிறு.
18. பரி. லூக்காசுவி. திருநாள்.
20. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 18ம் ஞாயிறு.
26. அமாவாசை.
27. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 19ம் ஞாயிறு.
28. பரி. சீமோன், யூதா அப். திருநாள்.

நற்போதகம்.

கக. நவம்பர்மீ. ௲அஎஅ௵.

எஸ்றாவின் புஸ்தகம்.

V. அதிகாரம்.

(தொடர்ச்சி.)

1. "இத்தோ" இவன் சகரியாவுக்குப் பேரன், சகரி. 1:1. வாசி. மத். 23. 35. அப்படியே யெகூ: நிம்சியின் குமாரனல்ல. (1 இரா. 19:16. 2 இரா. 9:20=2 இரா. 9:2, 14). இப்படி வழங்குவது வழக்கந்தான்.

"நாமத்திலே" இவர்கள் தேவனுடைய சனங்கள் என்ற முகாந்தரத்தைக்கொண்டு இந்த 2 தீர்க்கதரிசிகளும் புத்திசொன்னார்கள். எரே. 15:16.

"தீர்க்கதரிசனம்" அதாவது போதித்தார்கள். தேவாலயக்கட்டுமான வேலையை யூதர் அசட்டைசெய்ததினிமித்தம் அவர்களை எச்சரித்து ஏவி எழுப்பிவிடும்படி இந்த 2 தீர்க்கதரிசிகளும் எழும்பினார்கள். ஆகாய். 1:4, 9 வாசி.

2. "எழும்பி" இவர்களுடைய உற்சாகம் குறைந்துபோனதாகக் காணப்படும். ஆகாய். 1:14. அதினால் தீர்க்கதரிசிகள் இவர்களை எழுப்பிவிடவேண்டியதாயிற்று.

"கட்ட" அரைகுறையாய் விட்டிருந்த வேலையைக் கட்டிமுடிக்க மறுபடியும் தொடங்கினார்கள்.

3. "தத்னாய்" இவன் சீரியாவின் சத்திராப் துரை. கிலிக்கியா முதல் எகிப்தின் எல்லைகள்பரியந்தம், ஐபிராத் நதிக்கு மேற்கேயிருந்த இடமெல்லாம் இப்பொழுது சீரியாவைச் சேர்ந்திருந்தது. ஆதலால் செருபாபேல் தத்னாயின் அதிகாரத்துக்குட்பட்டவனாயிருக்கவேண்டும்.

"உங்களுக்குக் கட்டளையிட்டவன் யார்." செருபாபேலும் யெசுவாவும் செய்தது, ஒருவகையாய் சட்டவிரோதந்தான். ஏனென்றால் பார்சுதேசத்து இராசாக்களுடைய சட்டங்கள் மாற்றப்படாதவைகள், பின்வருகிற இராஜா மாற்றினாலொழிய மற்றப்படி அவை

கள் ஊர்ஜிதத்திலேயே இருக்கும். என்றாலும் பிசியடோ சிமேட்டிஸ் உடைய மார்க்க ஆசாரக்கொள்கைகளும், அவனுக்குப் பின்வந்தவனுடைய கொள்கைகளும் ஒன்றுக்கொன்று எதிரிடையானதென்பது பிரபலமாயிருந்ததினாலே, சிமேட்டிசுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாதது அநியாயமல்லவென்று யூதர் நினைத்தார்கள்.

4. "சொன்னோம்" செப்றுவஜிண்ட், சீரியா, அரபி பாஷை திருத்தல்களில், "சொன்னார்கள்" என்றிருக்கிறது. இதுதான் 10 ம் வாக்கியத்துக்கு இசைவாயிருக்கிறது.

5. "மூப்பரின்" செருபாபேலும் யெசுவாவும் முக்கியமானவர்கள்.

6. "வகைபரா" சமாரியாவில் வந்து குடியேறின அந்நிய ஜாதியாரைப் பொதுவாகக் குறிக்கும்.

12. "பிதாக்கள்" 2 நாளா. 36: 16, 17. தானி. 9: 5—12.

16. "அந்நாள்முதல் இதுவரைக்கும்" கி. மு. 536 முதல் 520 வரை, 16ஆ என்றறியவும். இடையில் தேவாலய வேலை தடைப்பட்டிருந்ததை விரோதிகள் சொல்லாமல் சத்தியத்தை மறைத்துப்போட்டார்கள். 4: 21.

"கோரேஸ் யூதர்களுக்கு அநுசரணையாகக் கட்டளை விளம்பரம் பண்ணினதைக்குறித்து விரோதிகளுக்குச் சந்தேகமிருக்கமாட்டாது. ஆனால் அந்த விளம்பரத்துக்கு நகல், பழைய பாபிலோன் ரிக்கார்ட்டுக் கச்சேரிகளிலே இன்னம் பத்திரமாயிருந்திருக்குமோ என்பதைக்குறித்துச் சந்தேகமிருக்கும். இந்த ரிக்கார்ட்டுகள், சிமேட்டிஸ் ஆளுகையில் 7 மாசக்காலமிருந்தது. இவன் தனக்கு முந்தின இராசாக்களுடைய அரசுமுறைகளை மாற்றினவனானதினாலே அவர்கள் யூதருக்கு அநுசரணையாகச் செய்திருந்த கட்டளைகளையும் அழித்துப்போட்டிருப்பானென்று விரோதிகள் நினைக்கக்கூடியது. அப்படியே இந்த ரிக்கார்ட்டுகள் இருக்கவேண்டிய இடமாகிய பாபிலோனில் அகப்படாமல் போனதும் கவனிக்கப்படத்தக்கதாயிருக்கிறது. நாட்டுப்புறத்துக்கு தலைநகரியாயிருந்த எகிப்பற்றாவிலிருந்து அது அகப்பட்டது. இந்த இடத்தைச் சோதிக்கும்படி தத்னாயும் அவன் வகையராவும் தரியு இடத்தில் கேட்டிருக்கமாட்டார்கள்.

இடைக்கிடையில் இராசாக்களுடைய பேர் வருவதில் அவர்கள் சரித்திரம் தெரிந்திருக்கும்படி பின்வருவது கூட்டப்பட்டது.

மேதிய பார்சிய ராச்சியம்.

தரியு. (Darius the Mede.) இவன் மேதியன். இவனுக்கு, 2 ம் சையக்சேரிஸ் என்றும், அகாஸ்வேரு என்றும் பேர். இவன் பெல்ஷாத்சாருக்குப் பின்பு இராசாவானான். இவன்தான் தானியேலைச் சிங்கக்

கெபியிலடைப்பித்தவன். இவன் பாபிலோனிலே இரண்டு வருஷம் அரசாண்டு மரித்தான்.

கோரேஸ். (Cyrus.) இவன் பார்சிய அரசனாகிய கம்பைசீஸ் உடைய மகன். இவன் மாதா, மேதிய அரசனாகிய அஸ்துவாகேஸ் உடைய மகளாகிய மந்தானி. கி. மு. 599 ல் பிறந்தான். இவன் 12 வயசாயிருக்கையில் இவனுடைய மாதா இவனை இவன் பேரனாகிய அஸ்துவாகேக்கும் அவனுடைய மந்திரிமாருக்கும் ஒப்புவித்தாள். இவன் 16 வயசாயிருக்கையிற் பாபிலோனியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி வென்று அடுத்த வருஷம் பார்சியாவுக்கு வந்தான். கி. மு. 582.

இவன் 40 வயசாயிருக்கையில் (பாபிலோனைப் பிடிக்க (21) வருஷத்துக்குமுன்) தன் மாமனாகிய தரியுக்குத் துணையாய் 3000 படைவீரரைக் கொண்டுபோய்ப் பாபிலோனிய அரசனாகிய நிரிக்கிலிசாருடனே யுத்தஞ்செய்யத் தளகர்த்தனாக நின்றான். இவனுடைய சாந்தத்தையும் புத்திக்கூர்மையையுங் கண்டு, லேபோரேசோராட்டு, பெல்ஷாத்சர் இவர்களைச் சேர்ந்த மாகாணத்தார் நிலைமாறி இவனைச் சார்ந்துகொண்டபடியால், பெல்ஷாத்சர் அவர்களைத் தண்டிக்கத் துணிந்தான். அப்பொழுது கோரொஸ் அவனை மடங்கடித்தான். பெல்ஷாத்சாருடைய மாதாவாகிய நித்தோகிறிஸ் பாபிலோன் நகரத்தை அரணுக்கவும் இராச்சியத்தைத் திடப்படுத்தவும் துணிந்தாள். அப்பொழுது பெல்ஷாத்சர், லீதியவரசனாகிய கிறீசைஷத் துணையாகச் சேர்த்துக்கொண்டான். ஆயினும் கோரெஸ் எதிர்த்து யுத்தஞ்செய்து கிறீசெஷின் சேனையைச் சங்கரித்தான். கிறீசெஸ் தன்னுடைய இராசதானியாகிய சர்லைதச்கு ஓட, இவன் அங்கும் போய்ச் சர்தை நகரத்தையும் பிடித்து, சின்ன ஆசியாவையும், ஐபிராத் நதிக்கு மேற்புறத்திலுள்ள சகல தேசங்களையும், 2 ம் சையக்சேரிஸின் ஆளுகைக்குட்படுத்தினான். இந்தச் செயம் பெல்ஷாத்சர் அரசுசெய்த 8 ம் வருஷத்திலே நடந்தது. இக்காலம் யூதர் சிறைப்பட்டு, 57 வருஷத்துக்குச் சரி. கி. மு. 549.

இதற்கு இரண்டு வருஷத்துக்குப்பின் கல்தேயரைச் சங்கரித்துப் பாபிலோனை முற்றிக்கையிட்டான். அந்நகரம் மகா அரணுள்ளதும் தளங்களினாலும் ரஸதுக்களினாலும் மற்றும் முஸ்தீதுகளினாலும் பூரிப்புள்ளதுமாயிருந்ததினால் அவர்கள் இவர்களைப் பரிகாசமாய் எண்ணினார்கள். ஆகிலும் அவன் நகரத்துட்போகிற சலதாரை வழியாய் உட்புகுந்து யெருசலேம் அழிக்கப்பட்ட, 49 வருஷத்திலே, 2 ம் சையக்சேரிஸ் என்னப்பட்ட தரியு உடைய ஆளுகைக்குட்படுத்தினான். இந்தச் செயம் யூதர் சிறையாக்கப்பட்ட, 67 ஆண்டுக்குச் சரியான கி. மு. 538 ல் நடந்தது. இப்படியே 2 ம் சையக்சேரிஸ் பாபிலோனிலும் இரண்டு வருஷம் அரசாண்டு மரித்தான். (தானியேல் 5: 31.) முழு ராச்சியமும் கோரெஸ்க்குச் சுதந்தர ஆட்சியாய்க் கிடைத்து, மேதிய பார்சிய ராச்சியமெனப் பேர்ப்பட்டது. கி. மு. 536.

இவன் யூதர் சிறைப்பட்டுப்போன 70 ம் வருஷத்தில் அரசாட்சிக்கு வந்தான். அது யெருசலேமின் தேவாலயம் அழிக்கப்பட்ட 52 ம் வருஷத்துக்குச் சரி. இவன் யெகோவாவினாலே தெரிந்துகொள்ளப்பட்ட யூதர் தங்களிட்டப்படி யூதேயாவுக்குப்போய்த் தேவாலயத்தைப் புதுப்பிக்கும்படி உத்தரவுண்டெனப் பறைமுறை சாற்றுவித்துக் கட்டளையும் எழுதுவித்துப் பிரசித்தப்படுத்தினதுமன்றி அசீரியா, அலா, மீதியா, கேபா, பாபிலோன்முதலிய இடங்களிலுள்ள யூதர் யாவரும் தங்கள் சொந்தத் தேசத்துக்குப் போகும்படி ஏவியும் விட்டான். இவர்கள் திரும்பிப்போகையில் யோயாக்கீனுடைய பௌத்திரனாகிய செருபாபேலைத் தலைவனாகவும், மகா ஆசாரியனாகிய யோய்தாவின் பௌத்திரன் யெசுவாவை ஆசாரியனாகவும் ஏற்படுத்தி, முன்னே நெபுகத்நெத்சர் எடுத்துக்கொண்டுபோன பணிமுட்டுக்களை செஷ்பாத்சாரென்றும், தேஷ்தாவென்றும், (எஸ்று. 1: 7—11.) செருபாபேலென்றுஞ் சொல்லப்படுகிற யூதாதேசத்ததிபதியினிடத்தில் ஒப்பித்துத் தேவாலயத்தை முன்போல கட்டவும், அதற்கு வேண்டிய செலவு இராசாவின் திரவியசாலையிலிருந்து எடுத்துக்கொள்ளவும் கட்டளையிட்டான். இக்காலத்தில் முன்பின்னாக 50,000 யூதர் யெருசலேமுக்குத் திரும்பினார்கள். 90 வயதுள்ளவனும் இராசாவின் அரண்மனை விசாரணைக்காரனுமாகிய தானியேல் எஞ்சிய யூதருக்கு உதவியாயிருந்தான். இவர்கள் சிறைப்பட்டுப்போன 70 ம் வருஷத்தில் விடுதலைபெற்றார்கள். அப்பொழுது தேவாலயம் அழிக்கப்பட்டு, 52 வருஷம். இதிலே ஏசாயா 44: 28 ம் வாக்கியம் நிறைவேறிற்று. இவர்கள் தங்கள் வேதப்பிரமாணத்தின்படி. நடக்க இடம்பெற்று கோரேசுடைய பரிபாலனத்திலே தாபரிக்கப்பட்டார்கள். இவர்களில் யெருசலேமுக்குப் போகப் பிரியப்பட்டவர்கள் தங்கள் இட்டப்படி போகலாமென்று உத்தரவு கிடைத்தபடியால், இஸ்ரவேலரிலும் அநேகர் திரும்பிப்போனதாக எண்ணலாம். இவன் இப்படி உத்தமனாய்த் தன் சனங்களுக்குப் பிதாவாகவும், யூதருக்குத் தயவாகவுமிருந்து 7 வருஷம் அரசாண்டு மரித்தான். கி. மு. 529.

கம்பைசிஸ், (Cambyscs.) கோரேசுடைய புத்திரன். இவனுக்கு அகாஸ்வேரு என்றும் பேர். (எஸ்று. 4: 6.) இவன் யாதொருவரை மதியாதவனும், பேருணனும், தூர்த்த வியாபாரியும், துஷ்டனும், கடுங்கோபியும், வீராவேசனுமாயிருந்தான். இவன் அரசாட்சிக்கு வந்த ஐந்தாம் வருஷத்தில் எகிப்தைச் செயங்கொள்ளப் புறப்படுகையில் தன் தம்பியாகிய சிமேட்டிஸ் தனது இராசாசனத்தைப் பிடித்துக்கொள்வானென்றெண்ணி அவனைக் கொல்லும்படி அந்தரங்கமாய் ஒருவனுக்குக் கற்பித்து எகிப்துக்குப் போய் எகிப்தைச் செயங்கொண்டு அங்குள்ள நந்தாவனத்தையும் அதிலுள்ள ஆலயங்களையுஞ் சங்காரம்பண்ணும்படி தன் சேனைகளை அனுப்பினான். அவர்களோ, சூறாவழியில்

எழும்பிய மண்மாரியினால் மாண்டுபோனபின்பு இவன் சூஷானுக்குப் போகத் திரும்பிவருகையில், வழியிலே சூஷானிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு தூதன் இவனைச் சந்தித்து, சிமேட்டிஸ் சூஷானை அரசாளுகிறானென்று சொல்லக் கேள்விப்பட்டு வீராவேசங்கொண்டு அதோகதியாய்க் குதிரை ஏறினபொழுது தனது உடைவாளினால் காயப்பட்டு மரித்தான். கி. மு. 522.

சிமேட்டிஸ், (Smerdis) இவன் கம்பைசிஸ் உடைய தம்பியின் நாமத்தைத் தனக்கிட்டுக்கொண்டு, தான் கம்பைசிஸ் உடைய தம்பியென்று மாரீசமாய்ச் சொல்லி, 7 மாதமாய் அரசுசெய்தான். இவனுக்கு அர்தசஷ்டா என்றும் பேர். (எஸ்று. 4: 7.) இவனிடத்திலே சமாரியர் வந்து முறையிட்டதினால், யூதர் தேவாலயத்தைக் கட்டப்படாதென்று உறுதியான கட்டளைபண்ணினான். இவன் மாரீச நாமந் தரித்துக் கம்பைசிஸ் உடைய இடத்தைப் பிடித்தானென்று அறியவந்தவுடனே பார்சிய இராச்சிய பிரதானிகள் இவனைக் கொன்றார்கள். எஸ்று. 4: 23. கி. மு. 522.

தரியுகிஸ்தஸ்பிஸ், (Darius Hystaspis.) இவன் சிமேட்டிஸைக் கொன்ற பிரதானிகள் எழுவரிலொருவன். இவன் கி. மு. 521 ல் இராசபட்டத்துக்கு வந்தான். இவன் சாந்தமுந் தயையுமுள்ளவன். இவன் கம்பைசிஸ் உடைய சகோதரனாகிய சிமேட்டிஸ் உடைய புத்திரியையும், கோரேசின் புத்திரியாகிய அற்றேஷாவையும், அவனுடைய சகோதரியையும் விவாகஞ்செய்தான். இந்த அற்றொஷாவுடைய மகனாகிய சர்க்சேயை, அவன் பிதாவாகிய தரியு தனக்குப் பின்பு அரசனாக்க நியமித்திருந்தான். இக்காலத்திலேதான் யூதர் ஆகாய், சகரியா என்னப்பட்ட தீர்க்கதரிசிகளால் ஏவப்பட்டுத் தேவாலயத்தைக் கட்ட முயன்றார்கள். அதற்குத் தடையாயிருந்த தேச அதிபதிகளாகிய தத்னாயும், சேதார்பொஸ்னாயும் அந்த இடத்தைவிட்டுத் தூரப்படவேண்டுமென்றும், (எஸ்று. 6: 7.) கோரேஸ் நியமித்தபடி இராசதிரவியங்களில் எடுத்துக் கட்டுவேலைக்குச் செலவிடலாமென்றுங் கட்டளையிட்டான். (எஸ்று. 6: 6, 12.) மேலும் இவன் பாபிலோனிலுள்ள கலகக்காரரில் மூவாயிரம் பேரைச் சிலுவையில் அறைவித்துக் கலகத்தை அடக்கினவனும், (ஏசாயா 13 அதி. 47 அதி.) பாபிலோன் நகரத்து மதிலை உயரத்தில் நூறுமுழம் இடிப்பித்து அதின் பித்தளைக் கதவுகளை எடுப்பித்தவனும், கிரேசு, மக்கேதோனியா என்னப்படும் நாடுகளையும் இந்தியாவின் மேலைத்தேசங்களையும் வசப்படுத்தினவனும், 700,000 சனங்களுடனே ஸ்கீத்தருக்கு விரோதமாய்ப் போய் யுத்தஞ்செய்து தோற்றுத் திரும்பினவனுமாயிருந்தான். இவன் அரசாட்சிக்கு வந்த இருபதாம் வருஷத்தில் அயோனியர் இவனுக்கு விரோதமாய் எழும்பிக் கலகம்பண்ணினார்கள். இவனும் அவர்களுடனே, 7 வருஷம் யுத்தஞ்செய்து செயங்கொண்டான். இதினிமித்தமே பார்சியருக்கும்

கிரேக்கருக்கும் இவன் அரசாண்ட 28 ம் வருடத்திலே பெரிய யுத்தம் நடந்தது. இவன் அரசாண்ட, 31 ம் வருஷத்தில் கி. மு. (491.) மராதோனருடனே எதிர்த்துத் தோற்றான். அதினிமித்தம் தன் சேனையை இருபகுதியாக்கித் தன்னுடன் எதிர்த்த எகிப்தியருடன் ஒரு பகுதியையும், மற்றப் பகுதியைக் கிரேக்கருடனும் யுத்தஞ்செய்ய அனுப்பினான். இப்படியே இவனுடைய அரசாட்சியின் காலமெல்லாம் யுத்தஞ்செய்து, 36 வருஷம் அரசாண்டு மரித்தான். இவனுடைய ஆளுகையைக்குறித்துச் சகரியா தீர்க்கதரிசனஞ் சொன்னான். சகரியா 6: 1-8. கி. மு. 485.

1. மகா சர்க்சே (Xerxes the great.) இவன் கோரெஸ் அரசனுடைய புத்திரியாகிய அற்றோஷாவிடத்திற் தரியுக்குப் பிறந்த புத்திரன். இவன் விவேகமில்லாதவனும் பெருணனும், தூர்த்த வியாபாரியும் துஷ்டனுமாயிருந்தான். இவன் தான் அரசாண்ட இரண்டாம் வருஷத்திலே தன் பிதாவின் ஆளுகைக்கமையாத எகிப்தரை வசப்படுத்தினதுமன்றி கிரேக்கரையும் செயங்கொள்ள நினைத்து, கிழக்கே இந்தியா துவக்கி மேற்கே ஸ்பானியாவரைக்குமுள்ள தளங்களில், 17 லட்சங் காலாட்களையும், பார்சிய ராச்சியமடங்கலுமுள்ள தளங்களுள், 10,000 தோலாவீரரையும், 82,000 குதிரைவீரரையும், 1,207 போர்க்கப்பல்களையும், பக்கத்துக்கு மும்மூன்று வரி தண்டு நிரைத்திருந்த, 3000 தோணிகளையுஞ் சேகரித்தான். இப்படியே இவன் தன் தளங்கள் 50 இலட்சமாகும்வரைக்கும் சேர்த்துக்கொண்டாலும், அவைகளெல்லாங் கரை யுத்தங்களிலும் கடல் யுத்தங்களிலும் முறிந்து, கி. மு. 480 துவக்கி 479 க்குள் பின்னப்பட்டுப்போயின. ஆயினும் இவன் அப்படி மடிந்துபோன சேனையையன்றி மற்றைச் சேனைகளைச் சேர்த்தணியாக்கி நித்த யுத்தக்காரனாயிருந்தான். (கி. மு. 469).-பிறகு இவன் தனது தேக இச்சைகளுக்கிடங்கொடுத்துத் தூர்த்த வியாபாரத்தில் அதிகரித்துத் தனது குடிபடைகளைப் பரிபாலியாமல் அசட்டைபண்ணினதினிமித்தம், யாவராலும் வெறுக்கப்பட்டவனாய்த் தன் அரசாட்சியின், 21 ம் வருஷத்திலே தனது மெய்காப்பாளருள் பிரதானியாகிய அர்த்தேபேனஸ் என்பவனாற் கொல்லப்பட்டான். கி. மு. 464.

அர்தசஷ்டா லங்கிமனு (Artaxerxes Longimanus.) இவனுக்கு ஆகாஸ்வேரு என்றும் பேர். (எஸ்தர் 1: 1.) இவன் மனைவி எஸ்தர். இவன் தனது உடன் சுதந்தரனாகிய, கிஸ்தாஸ்பிஸ், என்னும் சகோதரனைத் தன் அரசாட்சியின் இரண்டாம் வருஷத்திலே செயித்துத் தூரத்தினான். கி. மு. 459 ல் எகிப்தில் எழும்பின கலகக்காரரை அடக்கத் தன் சேனைகளுட் சிலரை அனுப்ப அவர்கள் போய் எகிப்தியருக்கஞ்சி மடங்கி வந்தார்கள். இவனோ மற்றை வருஷம், 3,000,000 போர்வீரரையும், 300 போர்க்கப்பல்களையும் அனுப்பி எகிப்தியரைச்செயங்கொண்டு அவர்களை வசப்படுத்தினான். அக்காலத்தில் அத்தேனர் இவனுடன் எதிர்க்க இவன் அவர்களுக்கஞ்சிச் சமாதானமானான். கி. மு. 458.

மேலும் இவன் தன் அரசாட்சியின், 4 ம் வருஷமட்டும் உறுதியாய் ராசரீகஞ்செய்து வந்தான். அக்காலத்தில் இவன் ஸ்தாபித்த விருந்தில், இவனுடைய, 127 மாகாணங்களிலுமுள்ள யூதரை நாசப்படுத்த, ஆமலேக்கின் வழியில் தோன்றின ஆகாகின் வம்சத்தில் வந்த ஆமான் செய்த துராலோசனைக் சற்பிதத்துக்கு நீங்கலாக்கி, யூதரை யாவரும் மதிக்கும்படி செய்தான். இதிலே யூதருக்குத் தேவன் செய்த அதிசயமான பரிபாலனம் விளங்கும். (எஸ்தர் 1 அதி. 10 அதி.) இன்னும் இவனுடைய அரசாட்சியின், 34 ம் வருஷந்தொடங்கி, 27 வருஷமாக நடந்த பிலோபொனீசருடைய அகோரயுத்தத்தை இவனே கி. மு, 440 ல் துவக்கி அது நடந்த, 7 ம் வருஷத்தில் மரித்துவிட்டான். அக்காலத்தில் அந்த யுத்தத்தின் உக்கிராகோரத்துடன் பெருவாதையும் நேரிட்டது. இப்படியே இவன் 41 வருஷம் அரசாண்டான். கி. மு. 424. இவனுடைய காலத்தில் நெகேமியாவும் எஸ்றாவுமிருந்தார்கள்.

2 ம் சர்க்சே (Xerxes II.) இவன் பேரிசேதீஸ் என்னுமிராணியிடத்தில் அர்தசஷ்டாவுக்குப் பிறந்த புத்திரன். இவன் 46 நாள் அரசுசெய்து சாக்டியேனஸ் என்பவனாற் கொலையுண்டான்.

சாக்டியேனஸ் (Sogdianus) இவன் 6 மாசமும், 15 நாளும் அரசாண்டு இற்கானியா தேசாதிபதியாகிய ஒகஸ் என்பவனாலே சாம்பலிற் புதைக்கப்பட்டு மரித்தான். கி. மு. 423.

தரியு நோதஸ். (Darius Nothus.) இவனுக்கு ஒகஸ் என்றும் பேர். இவன் தன்னுடைய அரசாட்சியின் காலத்திலே கிரேச்கையிலும், சின்ன ஆசியாவிலும் உண்டான கலகங்களை அடக்கிக்கொண்டான். எகிப்திலுண்டான கலகமோ அராபியருடைய உதவியினாலே இவனுடைய ராசரீகத்தை முறித்து, 64 வருஷக்காலம் தன்னிட்டம் பெற்றிருந்தது. அதுபோல மேதியரும் சுயேச்சையாய் நடக்க விரும்பியுங் கூடாமற்போயிற்று. கி. மு. 414.

மேற்படி, கி. மு. 407 ல் இவன் தனது இளைய மகனாகிய கோரெஸை, 16 வயசில் சின்ன ஆசியாவுக்கு அதிபனாக ஏற்படுத்திச் சர்தை நகரத்துக்கனுப்பினான். மற்ற வருஷம் மரித்தான். கி. மு. 405.

அர்தசஷ்டா நிமோன். (Artaxerxes Mnemon.) இவன் தரியுநோதஸ்க்குப் பரைசேற்றிஸ் என்னப்பட்டவளிடத்திற் பிறந்தான். இவனுக்கு ஆர்சேசீஸ் என்றும் பேர். இவன் மகா நிதார்த்தனும் தைரியவானும் யோக்கியனுமாயிருந்தான். இவன் தன் பிதா முன்னே சின்ன ஆசியாவுக்கு இளஅரசாய் நியமித்த கோரெஸ் தனக்கு விரோதமாகச் செய்த குற்றத்தை மன்னித்துவிட்டதுமன்றி, அவனை இன்னும் அதற்கு அதிபதியாக்கினான். அப்படி இருக்கையிற் கிரேக்கர் இவனை விரோதித்து

லகதாய்மோனியனையும் எழுப்பிக்கொண்டு, நன்றியற்ற கோரோஸையும் தங்களுக்குத் தளகத்தனாய் ஏற்படுத்திக்கொண்டு, பாபிலோனுக்கு மூன்றுகாத தூரத்துக்குத் தெற்கேயுள்ள கியுநாக்ஷாவிலே சேர்ந்து, இவனோடே யுத்தஞ்செய்தார்கள். அப்பொழுது கிரேக்கருள், 13,000 பேர் முட்டியுத்தமாய் முன்னிட்டோடத் தளபதியாகிய கோரோசும், 3,000 போர் வீரரும் மடிந்தார்கள். அதினால் எஞ்சிய, 10,000 வரும், அணி முறிந்து பின்னிட்டு, 180 காததூரத்துக்குக் காலாட்களாய் ஓடினார்கள். செனோபன் என்னும் தளபதியே, அவர்களைப் பரிபாலித்துக் கொண்டுபோனான். கி. மு. 400.

மேற்படி ஸ்பார்த்தர் சாதியார் எழும்பிக் கலகஞ்செய்ய அவர்களையும் இவனே அடக்கிச் சின்ன ஆசியாவின் கிரேக்கை நகரங்கள் யாவற்றையும் கீழ்ப்படுத்தி, (கி. மு. 387.) 15 வருடக்காலம் ஓயாத யுத்தமாய் இருந்த தீபனருடைய யுத்தத்தையும் முடித்தான். கி. மு. 363.

தரியு ஓகஸ் (Darius Ochus.) இவன் 2 ம் அர்தசஷ்டா உடைய 3 ம் புத்திரன். இவனுக்கு அர்தசஷ்டா ஓகஸ் என்றும் பேர். இவன் தன் பிதா இறந்த செய்தியை, 10 மாதம்வரைக்கும் மறைத்திருந்து, தான் இராசபட்டத்துக்கு வந்த தினத்திலேயே அதை வெளிப்படுத்தி இராச பிரபுக்களுக்குள்ளும் இராச வம்சத்தாருக்குள்ளும் அநேகரைக் கொடிய சங்காரம்பண்ணினான். கி. மு. 376. இவனுடைய சேனைகள் சின்ன ஆசியாவின் இராசாவாகிய அர்தேபேசஸ்க்குத் தோற்றும், கி. மு. 354 ல் மறுபடியும் இவன் தளங்களை மூட்டிப்போய் அதை மேற்கொண்டு அதிலே தன் செயத்தம்பத்தை நாட்டி எகிப்து முழுவதையும் கொள்ளையிட்டு, அதின் நகரங்களையும் ஆலயங்களையும் நாசப்படுத்தி, அதின் பூசாசாரியர் பூசித்த கோவில் இடபத்தையுங் கொன்று அதை ஆராதித்த பூசாசாரியருக்கு அதின் இறைச்சியை விருந்திட்டு, அங்குள்ள புத்தகங்களையும் திரவியங்களையும் வாரிக்கொண்டு எகிப்தியரையுஞ் சிறையாக்கிக்கொண்டு பாபிலோனுக்குத்திரும்பினான். கி. மு. 350.

அக்காலந்தொடங்கி எகிப்துதேசம் எசேக்கியேல் 29: 13, 16 ல் சொல்லியபடி அன்னிய அரசருக்கடிமைப்பட்டதும் அதிநீசப்பட்டதுமாய் இருக்கின்றது. அதின்பின்பு இவன் வீரச்செருக்கடைந்து அசதியாயிருக்கையில், எகிப்தின் தானாபதியாகிய பெக்கோவாஸ், இவன் தன் தேசத்துக்குச் செய்த நிஷ்டூரங்களின் நிமித்தம் இவனோடே பழம் பகை சாதித்து இவனுக்கு நஞ்சிடுவித்துக் கொன்றான். இவன் அரசாட்சிக்கு வந்த 3 ம் வருஷத்தில் மகா அலேக்சந்தர் மக்கேதோனியாவிலே பிறந்தான். அன்றிரவு ஏரோஸ்திரேற்றஸ், எபேசுவிலேயுள்ள தியானாள் கோவிலுக்கு நெருப்பிட்டான். ஆர்சீஸ் (Arses.) பெக்கோவாவினாலே பட்டஞ் சூட்டப்பட்டும், மறுபடி அவனாலேதான் கொல்லப்பட்டான். கி. மு. 338.

தரியு கொடோமேனஸ் (Darius Codomanus.) இவன்தரியு நோதஸ் உடைய வம்சத்தான், மூந்தின பெக்கோவாஸ் இவனுக்கும் நஞ்சிட ஆயத்தம்பண்ணினான். இவன் அதை அறிந்து அந்த நஞ்சை அவனுக்கே யூட்டினான். அக்காலத்தில் மக்கேதோனியனாகிய பிலிப்புவை கிரேக்கை இராச்சியம் முழுதுக்கும் இராசாவாய் ஏற்படுத்தி, அத்தேசத்ததிபதிகள் யாவரையும் ஒருங்குவருவித்து இவனுடைய இராச்சிய அதிகாரத்தை அழிக்க ஆலோசித்து, ஒவ்வொரு நகரத்ததிபதிகளும் தங்கள் தங்கள் படைத்தொகைக்குத்தக்கதாய் யுத்தவீரரை அனுப்பவும், தான் அவர்களுக்குச் சேனாபதியாய்ப் போகவும் தீர்மானஞ்செய்து, தளங்களை மூட்டி அவர்களை முன்னே பார்சியாவுக்கு அனுப்பி, தன் புத்திரியின் விவாகவிருந்து கொண்டாடுகையிற் கொலையுண்டான். கி. மு. 336.

மகா அலேக்சந்தர் (Alexander the Great.) இவன் மக்கேதோனியாவின் இராசனாகிய பிலிப்புவின் மகன். இவன் இராசபட்டத்துக்கு வந்த 2 ம் வருஷத்தில் (கி. மு. 334.) பார்சிய இராசனாகிய தரியு கொடோமேனஸ் உடைய அதிகாரத்தை நாசப்படுத்தும்படி தளங்களுடனே புறப்பட்டு, ஏலஸ்பொன்று என்னும் தொடுவாயைக் கடந்து சின்ன ஆசியா முற்றையும் வசப்படுத்த ஆயத்தமாயிருக்கிறதைத் தரியு கோடோமேனஸ் அறிந்து, தன் தளங்களையும் சேர்த்துக்கொண்டு வல்யுத்தஞ்செய்ய ஆயத்தமாய் இருக்கையில், அவனுடைய போர்க்கப்பற்தளகத்தன் இறந்துபோனதினாற் சமுத்திர யாத்திரையை விட்டுக் காலாட்களாய்க் கிலீக்கியாவுக்கு வந்து இவனோடெதிர்த்து யுத்தஞ்செய்து, 100,000 போர்வீரரை மடியக்கொடுத்து மேதியாவுக்கோடினான். அலேக்சந்தரோ சீரியா, எகிப்து, பார்சியா என்னும் தேசங்களிலுள்ள நகரங்கள் ஒவ்வொன்றையும், ஒன்றன்பின் ஒன்றாய் வென்று வசப்படுத்திக்கொண்டு, தரியு கோடோமேனஸைத் தொடர்ந்துபோகையிற், பட்சகாதகராகிய இரண்டு துரோகிகளால் தரியு கோடோமேனஸ் கொலையுண்டான். அதை அலேக்சந்தர் கண்டு, அவனுக்காகப் புலம்பி அவனை எடுப்பித்து, இராச வரிசையுடன் சூஷானிலே இருந்த அவன் மனைவி வசமாய் அனுப்பிவிட்டான். கி. மு. 330.

கி. மு. 329 ல் அலெக்சந்தர் கிழக்குமேற்காக ஏலஸ்பொன்று துவங்கி சத்திலிசு நதிவரைக்கும், வடக்குத் தெற்காய் எகிப்துத் துவக்கி சாக்டியானு தேசம்வரைக்கும் அடிப்படுத்திக் கொண்டான். (தானி. 7: 6. 8: 5. 11: 3.) இப்படியிருக்க இவன் மனோரதியமாய்ப் பெருமைகொண்டு தான் வியாழபகவானுடைய புத்திரனெனக்கருதி, உலகத்துக்கொரு உற்பாதமாய் இருக்கையிற் தூர்த்த வியாபாரத்திலும், பேருணவிலும் மனம்வைத்து, மின்மின்னி மறைந்தாற்போல் அழிந்தான்: இவ்வகையே நெபுகத்நெத்சர் கண்ட தரிசனத்திற் சொல்லப்படுகிற

பித்தளை உதரமும் இடுப்பும், தானியேல் கண்ட தரிசனத்திற் சொல்லப்படுகிற சிவிக்கியுமாகிய இவன் அழிந்துபோனான். இந்த அலேக்சந்தருக்கு, 3 மனைவிகளிருந்தார்கள். இவர்களில் முதல் மனைவியாகிய ஸ்த்ததிராளுக்குப் புத்திரனில்லை. இவளை இவனுடைய 2 ம் மனைவியாகிய ரேக்ஸானா கொன்றாள். இக்காலத்தில் இவனுடைய பிதா பிலிப்புவின் வைப்பாட்டி புத்திரனாகிய ஏறைடியஸ், இவனுடைய பட்டத்துக்கு வந்திருக்க, அலேக்சந்தருடைய கொம்புகளாக (தானி. 1 : 30 ல்) குறிக்கப்பட்டிருக்கிற தளகத்தராகிய இப்தொல்மி, கசண்டர், செலூக்கஸ், லூசிமேகஸ் என்னும் நால்வரும், அலேக்சந்தருடைய இராச்சியம் முற்றையுந் தங்களிலே பங்கிட்டு அரசாண்டார்கள். ஏறையடியஸ் பட்டத்துக்கு வந்த 6 வருஷமட்டில் அலேக்சந்தருடைய மாதாவாகிய ஒலிம்பியஸ், ஏறைடியஸையும் அவன் மனைவியாகிய யூறைடிசையும் கொல்லுவித்தாள். இந்த நிஷ்டூரத்தினிமித்தம் ஒலிம்பியஸை இவனுடைய யுத்தவீரர் கொன்றார்கள். கசண்டர் அலேக்சந்தரின், 2 ம் மனைவி ரேக்சேனாவையும் அவள் புத்திரனாகிய இஸ்கஸையுங் கொன்றான். இவனுடைய, 3 ம் மனைவியாகிய பராசினாவையும், அவள் புத்திரன் ஏக்குலிசையும் அலேக்சந்தருடைய சேனாதிபனாகிய பொலிஸ்பீர்கோன் கொன்றான். இப்படியே 15 வருஷத்துக்குள் தானி. 11: 4 ம் வசனத்திற் சொல்லியபடி அலேக்சந்தருடைய இராச்சியம் அவனையும், அவன் சந்ததியையும் விட்டு நிர்மூலமாயிற்று.

Narrative of the Mutiny of the Bounty.

நோர்போக்த் தீவார் விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

சனிக்கிழமை சுதேசிகள் எங்களுக்குத் தண்ணீர் கொண்டுவந்து தருவார்களென்று நிச்சயிக்க இடமில்லாதிருந்தபடியால், மலைகளிலிருந்து ஓடும் ஓடைகளில் தண்ணீர். அகப்படுமானால் பார்த்துக்கொண்டுவரும்படி தேங்காய்ச் சிரட்டைகளோடு எங்கள் ஆட்களில் சிலரை அனுப்பினேன். அவர்கள் புறப்பட்டுப்போனபிறகு, நான் நினைத்திருந்தபிரகாரம் சுதேசிகளில் திரள்பேர் வந்து கூடினார்கள். தீவின் வடபாரிசத்திலிருந்து இரண்டு படகுகளும் வந்தன. அவைகளொன்றில் விருத்தாப்பியனான ஒரு பிரதானியுமிருந்தான். சிறிதுநேரத்துக்குள்ளாக தண்ணீருக்குப்போயிருந்த எங்கள் ஆட்களில் இரண்டொருவர் திரும்பிவந்தார்கள். அவர்களோடு முகலட்சணமுள்ள பிரதானி ஒருவனும் வந்தான்.

சுதேசிகள் அதிகமதிகமாய்த் திரண்டு வரவே அவர்களுடைய உபசாரமும் சாந்த நடையும் படிபடியாய்க் குறைந்துகொண்டே வந்தது. எங்களைத் தாக்க நோக்கங்கொண்டிருக்கிறதாகவும் சில குறிப்

புகள் காணப்பட்டது; கொஞ்சநேரத்துக்குப்பின் எங்கள் வள்ளத்தைக் கரையிலிழுக்கப் பார்த்தார்கள். உடனே நான் என்னிடத்திலிருந்த சமுதாட்டை வீசியாட்டிப் பயமுறுத்திக்கொண்டு பிரதானிகளில் ஒருவனைப் பார்த்து அவர்களைத் தடுக்கும்படி பேசினேன். அப்படியே அவர்கள் நிறுத்திவிட, மறுபடியும் எல்லாம் அமரிக்கையாயிற்று. மலைக்குப்போயிருந்த எங்கள் ஆட்கள் இதற்குள்ளாக மூன்று கலன் தண்ணீர் கொண்டு திரும்பிவிட்டார்கள். சுதேசிகள் கொஞ்சங்கொஞ்சமாய்க் கொண்டுவந்த ஈரப்பலாப்பழங்களை நான் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டேயிருந்தேன். எங்களிடத்திலிருந்த நாலு சமுதாடுகளில்த் தானும் இரண்டு வள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டபடியால் எங்கள் உபயோகத்துக்காக சில ஈட்டிகளும் வாங்கினேன். எங்களுக்கு நேரிடத்தக்கதாயிருந்த அபாயத்துக்குத் தப்ப வழிவகை ஒன்றும் காணப்படாவிடினும், ஒருவேளை சாயந்தரத்துக்குள் ஏதாவது அனுகூலம் பிறந்தாலும் பிறககலாமே என்று நினைத்து எங்கள் ஆட்களிடத்தில் சாயங்காலமட்டும் தாமதிப்போம் என்று சொன்னேன். தற்சமயத்தில் புறப்படப் பார்த்தால், சண்டைசெய்துகொண்டே போக வேண்டியதாகும். அதுவும் இரவினால் அதிக அனுகூலமாய் நடக்க ஏதுவிருக்குமே என்றும், இதனிடையில் நாம் வாங்கின பதார்த்தங்களை வள்ளத்திற்கொண்டுபோய்ச் சேர்க்கப் பார்ப்போம் என்றும் சொன்னேன். சுதேசிகள் கடற்கரை நெடுக வந்து கூடியிருந்துகொண்டு கற்கள் உடைக்கிற வண்ணமாயிருந்தார்கள். அவர்களுடைய இருகைகளிலும் கற்களிருந்தன. இது எங்களைத்தாக்க ஆயத்தமென்று எனக்கு நன்றாய்த்தெரியும். மத்தியானத்தில் எங்கள் ஆட்கள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தேங்காயும் ஒவ்வொரு ஈரப்பலாப்பழமும் சாப்பாட்டுக்குக் கொடுத்ததல்லாமலும் என்னோடிருந்த பிரதானிகளுக்கும் சிறிது கொடுத்தேன். இவ்வாறு பிரதானிகளோடு சிநேகமும் ஐக்கியமுமாகவே நானிருக்கிறதாகக் காண்பிக்க விரும்பினேன். என்னை உட்கார்ந்திருக்கும்படி அவர்கள் மேலும் மேலும் வருந்தினார்கள். நானோ மாட்டேனென்று சாதித்துவிட்டேன். என்னத்தினாலென்றால் உட்கார்ந்தால் என்னைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் நோக்கங்கொண்டிருந்ததாகத் தோன்றினதினாலேதான். ஆகலால் எப்பொழுதும் விழிப்பும் எச்சரிப்புமாயிருந்து நிலையில் நின்றுகொண்டே எங்கள் ஆகாரத்தைச் சாப்பிட்டோம்.

சாப்பாட்டுக்குப்பிறகு நான் சவதரித்துக்கொண்ட பதார்த்தங்களைக் கொஞ்சங்கொஞ்சமாய் வள்ளத்திற் கொண்டுபோய்ச் சேர்க்க ஆரம்பித்தோம். கடற்கரையில் அலை மும்முரமாயிருந்தபடியால் இது மிகவும் வருத்தமான வேலையாயிருந்தது. நானோ சுதேசிகளுடைய போக்குவரவுகளையும் நடபடிக்கைகளையும் விழிப்பாயக் கவனித்துக்கொண்டிருந்தேன். அவர்கள் மேலும் மேலும் வந்துகொண்டிருந்ததுமன்றி, எங்களைவிட்டுப் போய்விடுவார்களென்று நினைக்க இடமில்லாமல் நெருப்புகளை உண்டுபண்ணி இரவிலும் அவ்விடத்திலேயே தாமதிக்கப் பிரயத்தனம்பண்ணுகிறார்களென்று அறிந்தேன். அவர்கள் கூடிக்கூடியாலோசனைபண்ணுகிறதாயுங் காணப்பட்டது. அவர்களுடைய நடபடிக்கைகளெல்லாம் அவர்கள் எங்களைத் தாக்கப்போகிறதை எங்களுக்கு நிச்சயப்படுத்தியது. அதன்பேரில் நாங்கள் கரைக்குநேரே வருகிறதைக் காணும்பொழுது, வள்ளத்தில் சுளுவி லேறிக்கொள்ளத்தக்கதாக வள்ளத்தைக் கரைக்குச் சமீபத்திற் கொண்டுவந்து நிறுத்திவைக்கும்படி அங்கிருந்தவர்களுக்குச் செய்தியனுப்பினேன்.

சூரியன் அஸ்தமிக்கும்வேளையில், புறப்படுங்கள் என்று நான் சொல்ல, குறிக்கப்பட்டிருந்தபிரகாரம் ஒவ்வொருவரும் தான் தான் எடுக்கவேண்டிய பதார்த்தங்களைத் தைரியமாயெடுத்து வள்ளத்திற் கொணடுபோய்ச் சேர்த்தார்கள். அதின்பேரில் இரவில் கரையில் தங்கியிருக்கமாட்டீர்களோஎன்று பிரதானிகள் என்னைப்பார்த்துக் கேட்டார்கள். அதற்கு நான், "வள்ளத்திலேயல்லாமல் வேறிடத்தில் நாங்கள் நித்திரைசெய்கிறதேயில்லை, காலையில் திரும்பிவந்து உங்களோடு கொடுக்கல் வாங்கல் செய்வோம், நாங்கள் திட்டஞ்செய்திருக்கிறபடி கால வசதி உண்டாகிறவரையில் இவ்விடத்திலேயே தாமதித்திருந்து தொங்கத்தாபூத்தீவின் பிரதானியைக் கண்டு பேசிக்கொண்டுதான் புறப்படுவோம்" என்று பிரதியுத்தரம் சொன்னேன். உடனே பிரதானிகளில் ஒருவன் எழுந்து நின்று, "மத்தீ, கரையில் நித்திரைசெய்ய மாட்டாய்" என்று சொல்லிக்கொண்டு போய்விட்டான. (உன்னைக் கொன்றுபோடுகிறோம் என்பதுதான் அதன்பொருள்.) அப்பால் சுதேசிகள் எங்களைத்தாக்க எத்தனித்து, நான் மேலே குறிப்பித்த பிரகாரம் ஒவ்வொருவரும் கற்களை உடைத்துத் தயார்செய்தார்கள். நாங்கள் சவதரித்திருந்த பதார்த்தங்களில் இரண்டொன்று தவிர மற்றதெல்லாம் இதற்குள் வள்ளத்துக்குப் போய்விட்டபடியால், நாங்கள் மூச்சுப் பேச்சுக் காட்டாமல் திகிலோடும் நடுக்கத்தோடும் வள்ளத்துக்கு நேரே நடந்துபோய், ஒருவன் தவிர மற்றெல்லாரும் வள்ளத்திலேறிக்கொண்டோம். அந்த மனிதன் வள்ளத்தைக் கரையில் மாட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிடப்போனவன். மற்றவர்கள் போகவேண்டாமென்று அவனைத் தடுத்தும் அவன் கேட்கவில்லை.

நான் வள்ளத்திற் பிரவேசித்த அச்சணமே சுமார் இருநூறு பெயர் ஒருமிக்க எங்களைத் தாக்கினார்கள். சயிற்றை அவிழ்க்கக் கரைக்கு ஓடிப்போன ஏழை மனிதன் அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டான். அவர்கள் அவனைக் கீழே தள்ளிக் கல்லாலடித்தார்கள். எங்கள்பேரில் எறிந்த கல் சரமாரிபோலிருந்தது. சுதேசிகளில் அநேகர் வள்ளத்தைக் கட்டியிருந்த கயிற்றைப்பிடித்து வள்ளத்தைக் கரையிலிழுக்கப் பார்த்தார்கள். அதற்குள்ளாக என் சேப்பிலிருந்த கத்தியையெடுத்துக் கயிற்றை அறுத்துவிட்டேன். அந்தக் கத்தி அந்நேரத்தில் என்னிடத்தில் இல்லாதிருக்குமாயின், நாங்களெல்லாரும் அன்று செத்தவர்கள்தான். உடனே வள்ளத்தைச் சமுத்திரத்துக்குள் தள்ளினோம். எங்களில் கல்லெறியினால் காயப்படாதவர்கள் ஒருவருமில்லை. அந்நேரத்தில் கரைக்கு நேரே நான் பார்த்ததில், ஐந்து பெயர் அந்த ஏழை மனிதனைச் சுற்றியிருக்கவும் அவர்களில் இருவர் அவன் தலையில் இன்னம் கல்லாலடித்துக்கொண்டிருக்கவும் கண்டு மிகவும் பிரலாபித்தேன். ஆயினும் அவனுக்காகத் துக்கிக்கவும் பிரலாபிக்கவும் அது நேரமல்ல. என்னத்தினாலென்றால் சுதேசிகள் தங்கள் வள்ளங்களைக் கற்களால் நிரப்பிக்கொண்டு எங்களைப் பின்றொடர்ந்து வந்து மறுபடியும் எங்களைத் தாக்கினார்கள். அவர்கள் கல்லெறியினால் எங்களுக்கு உண்டான காயம் மிகுதி. எங்கள் வள்ளத்துக்குள் விழுந்த இரண்டொரு கற்களை மாத்திரம் நாங்கள் திருப்பி யெறியக்கூடியதாயிருந்ததேயன்றி, மற்றபடி அவர்கள் எறியையெல்லாம் பட்டுக்கொண்டே சும்மாவிருக்கவேண்டியதாயிற்று. இத்தருவாயில் நான் ஒரு உபாயஞ்செய்தேன். அதென்னவென்றால், சில துணிகளைக் கடலிலெறிந்தால் அதுகளைப் பொறு

க்கிறதற்குத் தாமதிப்பார்கள், அதற்குள்ளாக சிறிதுதூரம் போய்
விடலாமென்று நினைத்து அந்தப்பிரகாரமே செய்ததுதான். காரிய
மும் நான் நினைத்தபடியே நடந்தது. மேலும் அதற்குள்ளாக இருட்
டாகிவிட்டதினால் அவர்கள் எங்களைப் பின்றொடருகிறதைவிட்டுக்
கரைக்குத் திரும்பிப்போனார்கள். அவ்வேளையில் எங்களுக்குண்டா
யிருந்த பரிதாபத்தையும் நிர்ப்பந்தத்தையும் சொல்ல யாராலே
யாகும் ?

அப்புறம் நாங்கள் பாய்வலித்து தோபோவாத்தீவின் மேல்
கரையோரமாய் வள்ளத்தைச் செலுத்தினோம். காற்று கிழக்கிலிரு
ந்து எழும்பி யடித்துக்கொண்டிருந்தது. இனிமேல் நடந்துகொ
ள்ளத்தக்கவிதம் இன்னதென்று நான் சிந்தாப்பிராந்தனாய் யோசித்து
க்கொண்டிருக்கையில், வள்ளத்திலிருந்தவர்கள் அனைவரும் தங்களைச்
சுதேசம்கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டா
ர்கள். அப்பொழுது நான் அவர்களை நோக்கி, நியுஹொல்லாந்துத்
தீவில் நமக்கு ஏதாவது உதவி கிடைக்குமோ என்னமோ, மற்றப்படி
ஒலாந்தர் குடியேற்று ஒன்றிருக்கும் தீமோர்த்தீவு சேரும்வரையும்
உதவி கிடைக்குமென்ற நம்பிக்கை எவ்வளவேனும் இல்லையே, மேற்
படி தீவுக்கு மூவாயிரத்துஅறுநூறு மைல் தூரமிருக்கிறது. அங்கே
சேர்ந்தோமானாலும் தீவின் எந்தப் பாகத்தில் மேற்படி குடியேற்று
இருக்கிறதென்று தெரியாது என்று நான் சொல்ல, அவர்களெல்
லோரும் எங்களுக்கு தினசரி ஒரு அவுன்ஸ் அப்பமும் அரைக்கால்
புட்டி தண்ணீருங் கொடுத்தால் அதோடு திர்ப்தியாயிருப்போமென்று
உடன்பட்டார்கள். அதன்பேரில் எங்களுக்கிருந்த போசனபதார்த்
தங்களைப் பரிசோதித்துப் பார்த்துக்கொண்டு நீங்கள் கொடுத்த வா
க்கை மீறவேபடாதென்று அவர்களுக்குக் கண்டிப்பாய் புத்திசொ
ல்லியபிறகு, கப்பல் போக்குவரவு அதிகமில்லாத அச்சமுத்திரத்தில்,
பதினெட்டுப்பேர் பல தட்டுமுட்டுகளோடு ஏறியிருந்த நுனிக்கு
நுனி இருபத்துமூன்று அடிநீளமான வள்ளத்தைச் செலுத்தனோம்.
என்றாலும் என்னைப் பார்க்க மற்றவர்களெல்லாரும் தைரியமுள்ளவ
ர்களாய் விளங்கினது எனக்குச் சற்று சந்தோஷத்தைக் கொடுத்தது.

எங்களுக்கிருந்த போசனபதார்த்தமெல்லாம் எம்மாத்திரம் என்
றால் நூற்றைம்பதுஇராத்தல் அப்பமும் இருபத்தெட்டு கலன் தண்
ணீரும் இருபது இராத்தல் பன்றியிறைச்சியும் மூன்று புட்டி உவை
னும் ஐந்து புட்டி ரம்சாராயமுமே. சில தேங்காய்களும் கொஞ்சம்
பலாப்பழமும் வள்ளத்திலிருந்தது. பலாப்பழமோ முந்திய சண்டை
யில் மிதயுண்டு கெட்டுபோயிருந்தும் பத்திரமாய் வைத்துக்கொள்
ளவேண்டியிருந்தது.

மேய்மீ 3உ ஞாயிறு. அதிகாலையில் காற்று பலமாயடிக்கத்
தொடங்கிற்று. சூரியன் செக்கச்செவேலென அக்கினிமயமாய் உதய
மாயிற்று. இதினால் பிசல் எழும்பப்போகிறதென்று நிச்சயித்துக்கொ
ண்டோம். அப்படியே எட்டுமணிக்குள்ளாக பிசல் எழும்பியடித்தது.
கடல் மும்முரமாயிருந்தது. என்றாலும் நாங்கள் மகா மோசமான
ஸ்திதியிலிருந்தமையால் பாய்களை இறக்கத்துணியவில்லை. வள்ளத்து
க்குள் தண்ணீர் ஏராளமாய் பாய்ந்துகொண்டிருந்ததினாலே நாங்கள்
தண்ணீரை இறைத்துக்கொட்டினவண்ணமாயிருந்தோம். எங்கள் நிலை
மைக்கு மிஞ்சின பரிதாப நிலைமை எக்காலத்திலும் எவர்களுக்காவது
நேரிட்டிருக்குமோ என்பது சந்தேகம்.

எங்கள் அப்பம் சாக்குகளிலிருந்ததினாலே தண்ணீர்பட்டு நனை

ந்து கெட்டுப்போகிறதற்கு ஏதுவாயிருந்தது. அப்படி நேரிடாதபடி செ
ய்துகொள்ளாதபக்ஷத்தில், நாங்களனைவரும் சாகவேவேண்டியதாகும்.
ஆகையினால் வள்ளத்திலிருந்த சாமான் தட்டுமுட்டுகளைப் பரிசோதித்
து அவைகளில் எறிந்துவிடத்தக்கவைகளுண்டோவென்று பார்த்து,
ஆளுக்கு இரண்டிரண்டு தினிசு வஸ்திரங்கள் மாத்திரம் வைத்துக்கொ
ண்டு மற்ற வஸ்திரங்களையும் சில துண்டுப்பாய்கள் கயறுகள் முத
லிய தட்டுமுட்டுகளையும் கடலில் எறிந்துவிட்டோம். இந்தவிதமாய்
வள்ளம் வெகுவாய் லேசானதுந்தவிர, தண்ணீரை இறைத்துக்கொட்
டுகிறதற்கு அதிக இடமுமுண்டாயிற்று. மேலும் கப்பல் தச்சனிடத்
தில் நேர்த்தியான ஓர் பெட்டியிருந்தது. அந்தப் பெட்டியில் அப்பத்
தை யெடுத்துவைத்துப் பந்தோபஸ்துசெய்துகொண்டோம். அவன்
ஆயுதங்கள் வைத்திருந்த பெட்டியையுமெடுத்து ஆயுதங்களை வள்ளத்
தின் அடியிற்போட்டுவிட்டு அந்தப் பெட்டியையும் உபயோகப்படுத்
திக்கொண்டோம்.

நாங்கள் ரொம்பவும் நனைந்துபோய் குளிரினால் வருந்தினபடி
யால் ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு தேக்கரண்டியளவு ரம்சாராயமும்
கொஞ்சம் கொஞ்சம் பலாப்பழமும் சாப்பிடக்கொடுத்தேன். இது
முதல் நாங்கள் செய்துகொண்ட ஏற்பாட்டைக் கண்டிப்பாய்க் கைக்
கொள்ளவும், தினசரி எவ்வளவு அற்ப ஆகாரம் அவர்களுக்குக்
கிடைத்தபோதிலும், இருக்கிற பதார்த்தங்களை எட்டுவாரத்துக்குக்
காணும்படி செய்துகொள்ளவும் பூரண நிர்ணயம் பண்ணிக்கொண்
டேன்.

திங்கள், 4௳ சூரியன் உதயமானபோது எங்கள் கைகால்களெல்
லாம் மரத்துப்போனபடியால் அதுகளை அசைக்கிறதும் பிரயாசமா
யிருந்தது. உடனே ஒரு தேக்கரண்டி ரம் சாராயம் பகிர்ந்துகொடுக்க,
கொஞ்சம் உற்சாகமும் தைரியமும் உண்டாயிற்று. மத்தியானம்போல
தென்மேற்கே பத்துப் பதினைந்து மைல் தூரத்தில் ஒரு சிறு தீவு எங்
களுக்குத் தென்பட்டது. மேற்படி தீவு சமரேகைக்குத் தெற்கே பத்
தொன்பதாம் பாகையிலும் மேற்கு உச்சம் எழுபத்திரண்டாம் பாகை
யிலுமிருந்ததாக அறிந்தேன். இதைக்கொண்டு நேற்று மத்தியானத்
துக்குப் பிறகு தொண்ணூற்றைந்து மைல் தூரம் நாங்கள் வந்துவிட்ட
தாக விளங்கிற்று. அவ்விடம் சேர்ந்தபொழுது ஐந்து சிறு தேங்காய்
களை உடைத்துப் பகிர்ந்துகொடுத்தேன். எல்லாரும் திருப்தியாயிருந்
தார்கள். அன்று சாயங்காலத்துக்குள்ளாக பின்னும் பத்துப் பன்னி
ரண்டு தீவுகள் எங்களுக்குத் தென்பட்டன. அவைகளொன்றிலும் நாங்
கள் கரைபிடிக்கவில்லை. இராவில் ஆட்களுக்குக் கொஞ்சம் பலாப்பழம்
சாப்பிடக்கொடுத்துச் செபம் நடப்பித்தேன்.

செவ்வாய் 5௳ நேற்றிரவில் மழையில்லாதபடியால் நாங்கள்
ஒருவாறு நன்றாய் நித்திரைசெய்து எழும்பி, வள்ளத்தில் கிடந்து அகப்
பட்ட ஐந்தாறு நண்டு யாம்ஸ் கிழங்கை பங்குவைத்துச் சாப்பிட்
டோம். சாப்பிட்டதின்பிறகு, எங்கள் அப்பம் எப்படியிருக்கிறதென்று
பார்த்ததில் அநேகம் கெட்டுப் புழுத்துப்போயிருந்ததாகக் கண்டோம்.
என்றாலும் அதுகளை எறிந்துவிட மனமில்லாமல் சாப்பிடத் தானே
வைத்துக்கொண்டோம். இன்னும் இரண்டு தீவுகள் தென்பட்டன.
மத்தியானத்தில் கெட்டுப்போன அப்பத்தில் கொஞ்சங்கொஞ்சமும்
அரைக்கால் புட்டி தண்ணீரும் ஆட்களுக்குச் சாப்பிடக் கொடுத்தேன்.

புதன் 6௳ நியுஹொல்லாந்து தீவின் வடபாரிசத்துக்கு நேரா
யே இன்னம் வள்ளத்தைச் செலுத்திக்கொண்டு வந்தோம். இதனிடை

யில் சிறிதும் பெரிதுமான எண்ணிறந்த தீவுகளைக் கண்டும் அவைகளொ
ன்றிலாவது, நாங்கள் கரை இறங்கத் துணியவில்லை. இன்றைத்தினம்
நான் பகிர்ந்துகொடுத்த ஆகாரம் ஆளுக்கு அரைக்கால் புட்டி தேங்
காய்ப் பாலும் இரண்டு அவுன்ஸ் இறைச்சியுந்தான். என்றாலும் சந்
தோஷமாய் வாங்கிச் சாப்பிட்டார்கள். தாகத்தினாலே தான் நாங்கள்
ரொம்பவும் வருத்தப்பட்டோம். இன்று தூண்டிலில் ஒரு பெரிய மீன்
பிடிபட்டது பார்த்து வெகுவாய்ச் சந்தோஷப்பட்டோம். என்றாலும்
அதை வள்ளத்துக்குள் தூக்கியெடுக்கையில் தவறி கடலில் விழுந்து
விட்டபடியால் ஏமாந்துபோனோம்.

வள்ளத்தில் எங்களுக்குப் படுக்க இருக்கப் போதுமான இடமில்
லாததினாலே, எங்கள் ஆட்களை இரண்டு பிரிவாகப் பிரித்து, ஒரு பிரி
வார் படுத்துக்கொள்கையில் மற்ற வகுப்பார் உட்கார்ந்திருக்கவும்
இவர்கள் படுத்துக்கொள்ளுகையில் அவர்கள் உட்கார்ந்திருக்கவும் ஏற்
பாடுசெய்துகொண்டதன்பேரில் கொஞ்சம் வசதியுண்டாயிற்று. என்
றாலும் தாராளமாய்க் கால்களை நீட்டிப் படுக்கக் கூடாமையாலும்,
அடிக்கடி பெய்த மழையினால் நாங்கள் நனைய நேரிட்டபடியாலும்,
இரண்டொரு மணிநேரம் நித்திரை செய்கிறதற்குள்ளாக எங்கள் கை
கால்கள் திமிர்ப்பிடித்து விறைத்துப்போனபடியால் அவைகளை ஆட்டியசைக்கி
றது மிகவும் பிரயாசமாயிருந்தது.

கனம்பொருந்திய டி. பென் (Rev: D. Fenn.) ஐயர வர்களின் அந்தியகால விர்த்தாந்தம்.

சென்னபட்டணத்தில் சர்ச்சுமிஷனேரி சோசைட்டியின் செக்
கிரட்டேரியாயிருந்த கனம்: பென் ஐயரவர்கள், சென்ற அக்டோபர்
௴ 15௳ இம்மையைவிட்டு மறுமைக்குச் சென்றார்கள். அவர்கள்
மரிக்கிறதற்கு இரண்டு மணிநேரம் முதல் கொண்டு மரிக்கும்பரியந்தம்
அவர்களோடு கூடவேயிருந்த கனம்: கோலட்ஸ்மித் ஐயரவர்களும்
வெஸ்லியன் மிஷன் சங்கத்து முதலாளியாகிய கனம்: ஸ்டீவன்சன்
ஐயரவர்களும் கனம்: பென் ஐயரவர்கள் இச்சீவிய ஓட்டத்தை எவ்வி
தமாய் முடித்தார்கள் என்பதைப் பற்றித் தாங்கள் கண்டதும் கேட்ட
துமான சங்கதிகளை விபரமாய் எழுதி அறிவித்திருக்கிறார்கள். அதை
இவ்விடத்தில் சுருக்கமாய்த் தெரிவிக்கிறோம்.

சென்ற அக்டோபர்௴ 14௳ திங்கட்கிழமை சாயங்காலத்
தில் சென்னபட்டணம் டவ்ட்டன் காலேஜில் சென்னபட்டணத்திலும்
அதன் அயலிடங்களிலுமுள்ள பற்பல மிஷன் ஐயன்மார்களில் பலரும்
பொதுவான மிஷனெரிக் கூட்டமாகக் கூடிவந்திருந்தார்கள். கனம்:
பென் ஐயரவர்கள் அந்தக் கூட்டத்துக்குப்போக ஏதுவில்லாதிருந்ததினால்
காகிதம் ஒன்று எழுதி அனுப்பினார்கள்; அதில் சடுதியாய்த் தமக்குண்
டான சுகவீனத்தினிமித்தம் அந்தக் கூட்டத்துக்குத் தாம் போக ஏதுவி
ல்லாதிருக்கிறதாக கண்டிருந்ததுந்தவிர, அடுத்த ஜுன்மாசத்தில் தென்

இந்தியாவிலுள்ள மிஷனெரிகள் பலரும் பெங்களூரில் கூடிவரவேண்டியதைக்குறித்து வேண்டும் ஏற்பாடுகள் செய்வதற்காக, இப்போது சென்னபட்டணத்தில் கூடிவந்திருக்கிற யாவரும் மறுநாள் பகல் 11 மணிக்கு தம்முடைய வீட்டுக்கு வரவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அப்படியே மறுநாள் இந்தக் கூட்டத்தின் பொருட்டுப் போகையில், பென்சிலால் பென் ஐயரவர்கள் எழுதிய சிறு கடிதமொன்று கனம்: ஸ்டீவன்சன் ஐயரவர்களுக்குக் கிடைத்தது; அதில் தமக்கு வருத்தம் இன்னம் நீங்கவில்லையென்றும், அதினால் தமது படுக்கை அறையில் வந்து தம்மைப் பார்க்கவேண்டுமென்றும் கண்டிருந்தது. அப்படியே ஸ்டீவன்சன் ஐயரவர்கள் போய்ப் பார்க்கையில், பென் ஐயரவர்கள் வழக்கப்படி உடுத்தியிருந்தவராகவும் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்து மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறவராகவும் காணப்பட்டார். டாக்ட்டர் ஹாரிஸ் துரை தம்மை வந்து பார்த்துவிட்டு, இன்னம் இரண்டு மணிநேரத்தில் மறுபடியும் வருகிறதாகச் சொல்லிவிட்டுப்போனதாக ஸ்டீவன்சன் ஐயரிடம் சொன்னார். அன்று கூட்டம் ஆரம்பிக்கிறபோது தாம் வரக்கூடாமல்போனதற்காக அவர் மனஸ்தாபப்பட்டுக் கொண்டதுந்தவிர கூடிவந்திருக்கிற சகோதரர்களுக்குத் தன் அன்பை ஞாபகப்படுத்தி, இப்போது பார்க்க ஏதுவில்லையென்றும், கூட்டம் முடிகிறதற்குள்ளாக தான் வந்து அவர்களைப் பார்க்கும்படியாக இருக்கிறதாகவும் செய்தி அனுப்பினார். பகல் இரண்டு மணிக்குச் சற்று முந்தி ஸ்டீவன்சன் ஐயர் மறுபடியும் அவரைப் பார்த்தபோது துக்கப்படத்தக்கதான மாறுதல் அவருடைய தேகத்தில் காணப்பட்டது. அவருக்கு மிகுந்த பலவீனமும் அதிகமான வேதனையுமிருக்கிறதாகத் தோன்றினது. ஆகிலும் அவர் வெகு அமரிக்கையாயிருந்தார். தூரதலையிலிருந்தும் முதியோர்களான ஐயன்மார்களில் பலர் இக்கூட்டத்துக்கு வந்திருக்கிறார்களென்று, அவருக்குச் சொன்னபோது அவர் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டதுமன்றி, கூட்டம் கலையுமுன் தாம் வந்து அவர்களெல்லாரையும் பார்க்கவேண்டுமென்று தமக்கு விருப்பமிருக்கிறதாகவும் மறுபடியும் வெளியிட்டார். அப்போதுதானே ஸ்டீவன்சன் ஐயர் அவர் வியாதிப்பட்டிருக்கிறதைக்குறித்து கனம்: கோல்ட்ஸ்மித் ஐயருக்குக் காகிதமெழுதி அனுப்பினார்.

டாக்ட்டர் ஹாரிஸ் துரை இரண்டு மணிக்குவந்து பார்த்தபோது வியாதி மிகவும் அதிகப்பட்டிருக்கிறதாகக் கண்டு, வேறே வைத்தியர்களின் ஒத்தாசையும் வேண்டி இருக்கிறதென்று சொன்னதினால் வேறே 2 டாக்ட்டர்மார்களையும் வரவழைத்தார்கள். அவருடைய தேகபலம் ஏற்கனவே குறைந்து வருத்தமான ஸ்திதியிலிருந்தும் மேற்குறித்த டாக்ட்டர் துரைகள், முடிவுவரை அவர் பக்கத்திலேயே இருந்து தங்களால் கூடிய சகல பிரயத்தனங்களையும் யோசனையோடும் அன்போடும் செய்தார்கள்.

ஸ்டீவன்சன் ஐயர் கோல்ட்ஸ்மித் ஐயருக்கு பென்ஐயரவர்களுடைய வியாதியைப் பற்றி காகிதம் எழுதினதுந்தவிர, சர்ச்சுமிஷன் பங்களாவில் கூடிய கூட்டம் முடிந்தபின்பு ஹாரிஸ் ஸ்கூல் என்ற இடத்துக்குப்போய், கோல்ட்ஸ்மித் ஐயரையும் செல் ஐயரையும் கூட்டிக்கொண்டு 5 மணிக்கு பென்ஐயரவர்கள் பங்களாவுக்கு வந்தார். வந்தவுடன் ஸ்டீவன்சன் ஐயர் பென்ஐயரைப் பார்த்து உம்முடைய வியாதி மோசமானதென்று டாக்ட்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்களே அது உமக்குத் தெரியுமா என்று கேட்டதற்கு, ஆம் தெரியுமென்றார். பின்னும் ஸ்டீவன்சன் ஐயர் அவரைப் பார்த்து, நீர் எங்களைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுவதினால் எங்களுக்கு நேரிடும் நஷ்டத்திற்காக நாங்கள் துக்கப்படவேண்டியதாயிருந்தாலும், நீர் பாக்கியமான நிலைமையில் பிரவேசிப்பதற்காக உம்மோடுகூட நாங்களும் வெகுவாய்ச் சந்தோஷப்படுவோமென்று சொன்னபோது, உங்களுக்கு வந்தனம் என்று அவர் பதில்சொல்லி, "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் தடியும் என்னைத் தேற்றும்." என்ற வசனங்களைச் சொன்னார். அப்போது அவர் முகம் பரமானந்தத்தால் இலங்கிக்கொண்டிருந்தது. டாக்ட்டர் துரைமார்கள் அவருக்கு வேண்டிய சகாயங்கள் செய்துகொண்டிருக்கையில் மேற்குறித்த ஐயன்மார் மூவரும் அவருக்காக ஒருமனதாய்ச் செபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். டாக்ட்டர் ஹாரிஸ் துரை வெளியே வந்து அவருக்கு வியாதி அதிகரித்துவிட்டது. நம்பிக்கையில்லை. ஏதாவது பேசவேண்டியதிருந்தால் இப்போது பேசிக்கொள்வது நல்லதென்று சொன்னார். ஐயன்மார் மூவரும் அவருடைய அறைக்குள்ப்போய் அவர் படுத்திருந்த இடத்தில் அவரைச்சுற்றி உட்கார்ந்து இருந்தார்கள். அவர் அதிக பலவீனமும் மிகுந்த வருத்தமுமுடையவராகக் காணப்பட்டார். ஆகிலும் அவர் தமக்கிருந்த வருத்தத்தையிட்டு ஒன்றும் முறுமுறுக்கவில்லை. நாங்கள் உமக்காகச் செபம்பண்ணினோமென்று மேற்குறித்த ஐயன்மார்கள் அவரிடத்தில் சொன்னபோது அவர் முகமலர்ந்து அவர்களுக்கு வந்தனம்சொன்னார். அவருக்குப் பிரியமான ஞானப்பாட்டு ஒன்றை கோல்ட்ஸ்மித் ஐயர் அவருக்கு ஞாபகப்படுத்தினபோது அவர் சந்தோஷத்தோடு அதின் கடைசிக்கவியைச் சொல்லிமுடித்தார். நீர் ஏதாகிலும் சொல்லவேண்டியது இருக்குதாஎன்று ஸ்டீவன்சன் ஐயர் கேட்டபோது பெட்டியிலிருக்கிற தமது உயிலைக் கொண்டுவரச்சொல்லி, அதில் கூட்டி எழுதவேண்டியதையும் எழுதி ஆனபின், அதில் அவர் கையொப்பமிட்டார். அதுதவிர லௌகீகவிஷயமாய் ஒன்றையும் அவர் பேசினதில்லை. இந்த சமையத்தில் லௌகீக எண்ணங்களினால் நான் கலக்கமடையாதிருக்கத்தக்கதாக எனக்காகச் செபம் செய்யுங்களென்று மெது

வானசப்தமாய்ச் சொன்னார். வேதவசனத்தில் ஒருபாகத்தை நான் வாசிக்கட்டுமாஎன்று கனம்: கோல்ட்ஸ்மித் ஐயர் கேட்டபோது வெளிப்படுத்தல் 7 ம் அதிகாரம் 9 ம் வசனத்திலிருந்து வாசியுங்களென்று சொன்னார். ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்தவர்களின் கூட்டத்தைப் பற்றி வாசித்தபோது அதை வெகு கவனமாய்க் கேட்டார். வெளிப்படுத்தலின் கடைசி அதிகாரத்தை வாசிக்கட்டுமா என்று கனம்: கோல்ட்ஸ்மித் ஐயர் கேட்டதற்கு வேண்டாம் அது சற்றுநேரம் செல்லும் என்றார். அப்போது அவர் அதிக வருத்தத்திலிருந்தார். பின்பு தாகத்துக்கு கொஞ்சம் தேத்தண்ணீர் கேட்டு வாங்கி சாப்பிட்டபின்பு தம்முடைய வியாதியைப் பற்றி வைத்தியர்கள் என்ன சொல்லுகிறார்கள், மரிக்க இன்னம் நேரம்செல்லுமா என்று கேட்டார். அதற்கு கோல்ட்ஸ்மித் ஐயர், அதைப்பற்றித் தீர்மானமாய்ச் சொல்ல டாக்ட்டர்களால் கூடவில்லையென்று சொன்னார். தமக்கு இந்த வியாதி முந்தின வியாழக்கிழமை ஆரம்பித்த விதத்தையும் திங்கட்கிழமையாகிய முந்தின நாளில் அது அதிகப்பட்டது என்பதையும் பற்றிப் பேசினார். கனம்: ஸ்டீவன்சன் ஐயர் அவர் பக்கத்தில் வந்து சுவிசேஷ இரட்சணியத்தின் மகிமையான சுயாதீனத்தைக் குறித்துப் பேசினபோது ஆம் எல்லாம் தேவனால் ஆகிறது நம்முடைய செய்கைகளினால் ஒன்றும் ஆகிறதில்லை என்று பதில் சொன்னார்.

ஆறுமணி ஆனதின்பேரில் டாக்ட்டர் துரைகள் அவரை சோவாவிலிருந்து மெதுவாய்த் தூக்கி கட்டிலில் கிடத்தி உடுத்தியிருந்த வஸ்திரங்களை மாற்றி வேறு வஸ்திரங்களை இட்டார்கள். கட்டிலில் அவரைச் சாவதானமாய்க் கிடத்தினபின்பு இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்டதற்கு இப்போது அதிக வசதியாயிருக்கிறதென்று சொல்லி, "உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே, நீர் என்னை மீட்டுக்கொண்டீர்." (சங். 31: 5) என்ற வசனத்தை தெளிவாயும் சப்தமாயும் சொன்னார். அதின்பின்பு தம்மைச் சுற்றி நின்ற ஐயன்மார்களைப் பார்த்து, என் பிரிய சிநேகிதர்களே எல்லாரும் ஆயத்தமாயிருக்கிறீர்களென்று நம்புகிறேனென்று சொன்னார். அதின்பின் அவருடைய கண் இருண்டுகொண்டே வந்ததால் அப்புறம் அவர் கண்ணைத் திறக்கவில்லை. திடீரென்று இப்போது மணி என்னவென்றும், இது மாசத்தின் எத்தனாம் தேதி என்றும் கேட்டார். இது மாசத்தின் 15௳ என்றும் 6 மணியும் 45 நிமிஷமுமாயிற்றென்றும் பதில் சொன்னபோது, 1876 ம் ௵ டிசம்பர்௴ 14௳ல் தமது தாயாரும் ஏறக்குறைய அந்நேரம்போல் இறந்ததாகச் சொன்னார். மறுபடியும் அவருடைய தொனி கம்மிப்போயிற்று. பின்னும் சற்று பொறுத்து, சமாதானமும் சந்தோஷமும் விளங்கும் முகத்தோடு 'தேவனே உமது ஊழியக்காரனாகிய எனக்கிரங்கி என்னை ஆசீர்வதியுமென்று சொன்

னார். இவைகளே அவர் சொல்லிய கடைசி வார்த்தைகள். 7 மணி சமையத்தில் வாந்தி எடுக்கவேண்டியவர்போல் தம்முடைய தலையை ஒரு பக்கமாய்த் திருப்பினார். அப்போது அவருடைய உண்மையுள்ள வேலைக்காரனாகிய பெருமாளென்பவன் ஒரு பாத்திரத்தை ஏந்தினான். அதோடு கறகறவென்ற ஒரு சப்தம் கேட்டது. பக்கத்தில் நின்ற டாக்ட்டர் ஹாரிஸ் துரை அதைக் கவனித்து, இது முடிவுக்குக் குறிப்பாயிருக்கிறதென்று சொன்னார். அப்படியே காரியமும் முடிந்தது. வேறே வருத்தம் ஒன்றுமில்லாமல் இரண்டொருதரம் மூச்சுவிட்டு அமைதியாகக் கர்த்தரிடம் போய்ச் சேர்ந்தார். இது சடிதியாயும் அமைதியாயும் நடந்ததினால் அவருடைய ஆவி பிரிந்துபோயிற்றென்று அங்கிருந்த ஐயன்மார்களுக்கும் மற்றவர்களுக்கும் உடனே விளங்காதிருந்தது. கொஞ்சநேரத்தில் சுதேச கிறிஸ்தவ மாணாக்கர்களாகிய வெங்கட ரத்தினம், சீனிவாசகம் என்பவர்களும் வந்து அவர்களோடு அனுதாபப்பட்டார்கள்.

பென்ஐயரவர்கள் சில காலத்துக்குமுன் தாம் சுகத்தோடிருக்கையிலேயே ஒரு சிநேகிதனைப் பார்த்து, நான் ராக்கிலாண்டு ஐயரவர்கள் மரித்த வண்ணம் மரிக்க விரும்புகிறேன்; அதாவது நான் என் வேலையைச் செய்துகொண்டிருக்கும்போதே எனக்கு மரணம் வரவும் அப்போது நான் ஆயத்தமுள்ளவனாகக் காணப்படவும் வேண்டுமென்று சொல்லியிருந்தாராம். அவர் விரும்பினபடியே காரியம் நடந்தது. அவருடைய வேலையும் அவருடைய ஜீவனும் ஒருமிக்க முடிந்தது.

அக்டோபர்௴ 16௳யாகிய மறுநாள் சாயங்காலத்தில் கனம்: பென்ஐயருடைய சரீரம் சென்னபட்டணத்தில் பெரிய தேவாலயமாகிய கெதீட்ரல் என்னும் ஆலயத்தைச்சேர்ந்த இடத்தில் அடக்கம்செய்யப்பட்டது. சங்கைபொருந்திய ஆர்ச்டீக்கன் போதகராலும் கனம்: ஸ்டீவன்சன், செல், பென்னி என்ற ஐயன்மார்களாலும் அடக்கம்பண்ணும் முறைமை நிறைவேற்றப்பட்டது. அருமையான கனம்: பென் ஐயர் கிறிஸ்துவின் மாதிரிக்கொப்பாய்த் தம்முடைய நடக்கையினால் கிறிஸ்து சபையின் பற்பல பிரிவிலுள்ள அநேகருடைய இருதயங்களை அவர் ஆதாயப்படுத்தியிருந்ததினால் சென்னபட்டணத்திலுள்ள பற்பல சங்கத்தின் மிஷனெரிகளும் அவரை அடக்கம்செய்த இடத்துக்கு வந்து கூடி, அவர்பேரில் தங்களுக்கிருந்த அன்பையும் மதிப்பையுங் காட்டினார்கள்.

கனம்: பென்ஐயரவர்கள் பிறந்தது 1826 ம் ௵ ஜூன்௴ 29௳. 1849 ம் ௵த்தில் கேம்பிரிட்ஜ் வித்தியாசாலையில் விசேஷ கல்விப்பட்டம்பெற்று, 1852 ம் ௵த்தில் இந்தியாவுக்கு வந்தார்கள். ஆகையால் அவர்களுடைய வயசு 52. 26 வருஷம் மிஷன் காரியமாக உழைத்தார்கள்.

கனம்: பென்ஐயரவர்களை அறிந்த அனைவரும் இத்தேசத்துக் கிறிஸ்தவர்கள்பேரில் அவர் எவ்வளவு அன்புள்ளவராயிருந்தாரென்று அறிவார்கள். அவரைப்போல வேறொருவர் கிடைப்பது அரிது.

நவம்பர்மீ நாள் 30. ஐப்பசிமீ 17௳முதல், கார்த்திகைமீ 16௳வரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
வெ	1	கஎ	பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். யாக். 4: 7.
ச	2	கஅ	என் செபத்தைக் கேட்டருளும். சங். 55: 1.
ஞா	3	கசு	ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது. மாற். 2: 27.
தி	4	உ0	நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். ரோமர். 12: 9.
செ	5	உக	கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று. நீதி 14: 26.
பு	6	உஉ	அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2 கொரி. 5: 21.
வி	7	உங	பொறாமை எலும்புருக்கி. நீதி. 14: 30.
வெ	8	உச	உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன். யோ. 14: 3.
ச	9	உரு	கர்த்தர் உன்னோடேயிருக்கிறார். யோசு. 1: 9.
ஞா	10	உசு	கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். சங். 100: 2.
தி	11	உஎ	ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள். யாக். 4: 11.
செ	12	உஅ	மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தைமாற்றும். நீதி. 15: 1.
பு	13	உகூ	கண்ணீர்யாவையும் தேவன் துடைப்பார். வெளிப். 21: 4.
வி	14	ங0	உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள். 1 சாமு. 12: 24.
வெ	15	க	எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதேயும். மத். 6: 13.
ச	16	உ	கர்த்தராகிய நான் இரட்சகர். ஏசாயா. 60: 16.
ஞா	17	ங	தேவனுக்குமுன்பாக மனத்தாழ்மையாய் நட. மீகா. 6: 8.
தி	18	ச	தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. நடபடி 10: 34.
செ	19	ரு	பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேர். 1 தீமோ. 6: 10.
பு	20	சு	லௌகிக துக்கம் மரணத்தையுண்டாக்குகிறது. 2 கொரி. 7: 10.
வி	21	எ	அவர்கள் மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். 8: 2.
வெ	22	அ	உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள். [எரே. 7: 3.
ச	23	கூ	உலகத்தில் அன்புகூராதிருங்கள். 1 யோ. 2: 15.
ஞா	24	க0	அவன் இப்பொழுது செபம்பண்ணுகிறான். நட. 9: 11.
தி	25	கக	கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான். நீதி. 15: 10.
செ	26	கஉ	ஆவியின் கனி அன்பு. கலாத். 5: 22.
பு	27	கங	அவருடைய கற்பனைகள் பாரமானவைகளல்ல. 1 யோ. 5: 3.
வி	28	கச	உபதேசிக்கிறதில் சாக்கிறதையாயிரு. 1 தீமோ. 4: 13.
வெ	29	கரு	கர்த்தர் ராச்சியபாரம் பண்ணுகிறார். வெளிப். 19: 6.
ச	30	கசு	நான் பயப்படுகிற நாளில் உம்மை நம்புவேன். சங். 56: 3.

விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
3. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 20 ம் ஞாயிறு.
10. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 21 ம் ஞாயிறு.
10. பௌரணமி.
17. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 22 ம் ஞாயிறு.
24. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 23 ம் ஞாயிறு.
26. அமாவாசை.
30. பரி. அப். அந்திரேயாவின் திருநாள்.

நற்போதகம்.

கஉ. டிசம்பர்மீ. ௲அ௱எ௰அ௵.

எஸ்றாவின் புஸ்தகம்.

VI. அதிகாரம்.

2. "அக்மேதா." இது கோரேசுக்கு இராஜதானியாயிருந்தது. எகிப்ற்றானா பட்டணம் இதுதான்.

3. இதிற் சொல்லிய அளவுகள்: சகரியா, ஆகாய், எஸ்றா (3: 12.) இவற்றிற் சொல்லியதற்குச் சரிப்படவில்லை. (சகரி. 4: 10. ஆகாய் 2: 3). சாலொமோன் கட்டின ஆலயம் கூட (30) முழ உயரந்தான். பக்கத்து அறைகளைக் கூட்டினாலும் (40) முழ அகலத்துக்கதிகமில்லை. இவ்விடத்திற் சொல்லிய அளவுக்குக் கருத்தென்னவென்றால், இந்த அளவுகளுக்கு அதிகப்படாமல் யூதர் கட்டிக்கொள்ளவேணுமென்று கோரேஸ் கட்டளையிட்டான் என்பதுதான்.

4. சுவர்களின் கனதியை மட்டுப்படுத்த கோரேசு இதைச் சொல்லுகிறான். அதாவது சுவர்களின் அகலமானது, மூன்று வரிசைக் கற்களுக்கும், அதற்குட்பட்ட ஒரு மச்சு வரிசை உத்திரவேலைக்கும் அதிகப்படாமலிருக்கவேண்டுமாம்.

"ராசாவின் அரமனை." அதாவது பார்சியர் செலுத்தும் பகுதியிலிருந்து என்றர்த்தம். இந்தக் கட்டளை கோரேசின் பின்னான ஆளுகையிலும் கம்பைசிஸ் உடைய ஆளுகையிலும் நிறைவேற்றப்படவில்லையென்றும், அதினால் அந்தச் செலவையெல்லாம் யூதரே தாங்கினார்களென்றும் நினைக்கவேண்டியதிருக்கிறது. 2: 68, 69.

5. 1: 7—11.

6. "தரியு இராசா" அதாவது தரியுகிஸ்தஸ்பிஸ்.

இந்தப் புஸ்தகத்தை எழுதுகிறவன் கோரேசின் கட்டளையை 3—5 வா-ல் சொல்லியிருக்கிறான். அதைத்தான் தரியு மறுபடியும் எடுத்துச் சொல்லியிருப்பான். அதை இரண்டுதரம் எழுதவேண்டியதில்லையென்று சரித்திரக்காரன் விட்டிருக்கிறான்.

9. கோதுமை, உப்பு, திராட்சரசம், எண்ணெய் இவைகள் சர்வாங்கத்தகன பலிக்கு வேண்டியவைகள் என்பதைக்குறித்து. யாத்தி. 29: 40. லேவி. 2: 13. வாசி.

10. "சுகந்த வாசனை" நியாயப்பிரமாண ஆகமத்தில் இந்த வார்த்தை ரத்தபலிகளைக் குறித்தது. (யாத்தி. 29: 18, 25. லேவி. 1: 9, 13). இந்த வாக்கியத்திலும் தானி. 2: 46லும் தூபங்காட்டுவதைக் குறிக்கலாம்.

இராசாவுக்கும் அவர் குமாரருக்கும் தீர்க்காயுசுண்டாக.

யூதர் எந்த இராசாங்கத்துக்குள்ளிருந்தாலும் சமாதானத்துக்காக மன்றாடும்படி கட்டளையிடப்பட்டிருந்தார்கள். (எரேமி. 29: 7). யூதர் அப்படியே செய்துவந்தார்களென்றும், அது பார்சருக்குத் தெரிந்திருந்ததென்றும் இந்த வாக்கியத்தினால் தெளிவாயிருக்கிறது. யூதர் எப்போதும் இப்படிச் செய்துவந்தார்களென்பது 1 மக்கபெயர் 7: 33னாலும், யோசேப்புஸ், பைலோ இவர்கள் சாட்சியினாலும் ரூபகாரப்படுகிறது. அவர்கள் பார்சு ராஜாங்கத்துக்குள்ளிருந்தபொழுது தேச சமாதானத்திற்காக மன்றாடுகிற முறை, வாக்கியத்தில் காட்டியிருக்கிறது. அதாவது "ராஜாவுக்கும் அவர் குமாரருக்கும் தீர்க்காயுசுண்டாவதாக" என்று செபிப்பார்கள்.

11. தானி. 4: 17. எஸ்று. 4: 17. 5: 7, 11.

"தூக்கி" அதாவது அவன் தூக்கப்பட்டு சிலுவையில் அறையப்படக்கடவன் என்றர்த்தம். ஏனென்றால் பார்சியருக்குள் பெருங்குற்றவாளிகளை சிலுவையில் அறைந்து கொல்லுவது பெரும்பாலும் வழக்கமாயிருந்தது.

12. "நாமத்தை" உபா. 12: 11. 1 ராசா 8: 29.

"நிர்மூலமாக்கக்கடவர்." பெகிஸ்தன் நகரத்தில் இந்த தரியு இராசா எழுதிவைத்திருக்கிற ஒரு மேல்விலாசத்தில் இந்த மாதிரி ஆக்கினை கூறியிருக்கிறது. "தரியு இராசா ஏற்படுத்திவைத்த இந்தச் சாசனத்தை யாராவது சேதப்படுத்தினால் ஆர்மஸட் அவர்களுக்கு எதிரியாவாராக, அவர்கள் சந்தானமற்றுப்போவார்களாக. அவர்கள் எதைச் செய்தாலும் ஆர்மஸட் அதைச் சபித்துப்போடுவாராக."

"இதைமாற்றவும்" அதாவது இந்தக் கட்டளையை.

14. "யூதரின் மூப்பர்" 5: 7 வியா. பார்.

"தீர்க்கதரிசனம்" ஆகாய். 1: 2: அதி. சகரியா. 1—8 அதி.

"கோரேஸ், தரியு, அர்தசஷ்டா." கோரேஸ், தரியு இவர்களோடு அர்தசஷ்டாவின் பேர்சேர்ந்து வருவதைப்பற்றி கொஞ்சம்

தகரார் இருக்கிறது. இந்த அர்தசஷ்டா 4: 7 ல் சொல்லிய அர்தசஷ்டாவாயிருக்கக் கூடாது. ஏனென்றால அவன், கட்டிட வேலைக்கு விரோதியாயிருந்தவன், 7 ம் அதிகாரத்தில் சொல்லிய அர்தசஷ்டா, அர்தசஷ்டாலங்கிமனு என்று காணப்படுகிறது. ஆனால் தேவாலய வேலை, தரியுவின் 6 ம் வருஷத்தில் கட்டி முடிந்தபடியினாலேயும் (வா. 15), அர்தசஷ்டாலங்கிமனுவின் தகப்பனைப் பெற்றபோன் இந்த தரியுவாயிருப்பதினாலேயும், அர்தசஷ்டாவின் கட்டளைப்படியும் ஆலயம் கட்டி முடிந்ததென்று சொல்வது யதார்த்தமல்லவே என்று சொன்னால், அர்தசஷ்டாலங்கிமனு, தேவாலய அலங்கரிப்புக்கு வேண்டியவைகளைச் செய்தபடியினாலும் (7: 20), அதைத் தன் கட்டளையினாலே உறுதிப்படுத்தினபடியினாலும், (7: 13—20), ஆலய வேலையை முற்றுப்பெறச் செய்தவர்களில் ஒருவனாக, கோரேஸ், தரியு இவர்களோடு சேர்த்துச் சொல்லப்படுவதற்கு தகுந்தவன்தான் என்று தோன்றும்.

15. "ஆதார்" யூதருடைய 12வது அல்லது கடைசியான மாதம் இது கிட்டத்தட்ட நம்முடைய மார்ச்சு மாதத்திற்குச் சரி. தரியுவின் ஆறும் வருஷம் கி. மு. 516—515.

17. "பலியிட்டு" சகரி. 4: 10. 1 ராசா 8: 63 வாசி.

"இஸ்ரவேலனைத்தின்" 2: 70 வியா. பார்.

18. தாவீது ஏற்படுத்தின முறையை மறுபடியும் ஏற்படுத்தினார்கள். 1 நாளா. 23: 6—24. 24: 1—19.

"மோசேயின் புஸ்தகத்தில்" எண். 3: 6. 8: 9.

19. யாத்தி. 12: 6. இந்தப் புஸ்தகத்தை எழுதினவன் 4: 8முதல் இதுவரை கல்தேயப் பாஷையில் எழுதிவந்தான். இந்த வாக்கியமுதலோ மறுபடி எபிரேயு பாஷையில் எழுதி புஸ்தகத்தை முடிக்கிறான். அதில் (7: 12—26.) அர்தசஷ்டாவின் விளம்பரம் மட்டும் கல்தேய பாஷையில் வருகிறது.

பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளை அடிக்கும்படியாக லேவியரும் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டார்கள். 2 நாளா. 29: 34. 30: 3 பார். ஆட்டுக்குட்டிகளைச் சபையாருக்காக லேவியர் கொல்லுகிற வழக்கமானது, எசேக்கியா பெரிய பஸ்காவைக் கொண்டாடினதுமுதல் ஆரம்பித்தது. (2 நாளா. 30: 17.) யோசியா பெரிய பஸ்காபண்டிகையைக் கொண்டாடினதுமுதல் ஆசாரியருக்காகவும் லேவியர் ஆட்டுக்குட்டிகளைக் கொன்றார்கள். (2 நாளா. 35: 11, 14). எப்படியிருந்தாலும் யூதருடைய மிஷ்னாமுதலான ஆகமங்களில் தோன்றுகிறபடி, பிற்காலங்களில் அந்தந்த வீட்டுத்தலைவனே தனக்காக ஆட்டுக்குட்டியைக் கொல்லுவான்.

21. "சேர்ந்த அனைவரும்" சிறையிருப்பின் காலத்திலெல்லாம் பலஸ்தீனுவிலே இருந்துவர்த இஸ்ரவேலரையாவது, அஞ்ஞானிகளாயிருந்து இப்பொழுது யூதமார்க்கத்தில் சேர்க்கப்பட்ட புரோசலுத்துக்களையாவது குறிக்கும்.

22. "ஏழுநாள்" யாத்தி. 12: 15.

"அசீரியருடைய ராசா" இந்த இடத்தில் தரியுவைக் குறிக்கும். மேல் ஆசியாவில் அசீரியாவானது பெரிய ராச்சியமாயிருந்தபடியினாலே, அசீரியா ராஜாங்கத்திலிருந்து தொடர்ந்தேற்றியாய் வந்த ராஜாக்களை அசீரியா இராஜாக்கள் என்று வேதாகமத்தை எழுதினவர்கள் பேர்சொல்லி வந்தார்கள். அப்படியே முதலாவது பாபிலோன் இராஜாக்களுக்கும், (2 ராசா 23: 29). இரண்டாவது பார்சு இராஜாக்களுக்கும் இப்படி வழங்கியிருக்கிறார்கள். இப்படித் திட்டவட்டமில்லாமல் ஏரோடாட்டஸ் என்னும் புறச்சரித்திரக்காரன் கோரேசை "மேதியருடைய ராசா" என்று சொல்லுகிறான்.

VII. அதிகாரம்.

1. "இந்த வர்த்தமானங்களுக்குப்பின்பு" இந்த வார்த்தைகள், இதற்கிடையே அதிகக் காலம் சென்றிருக்கவேண்டுமென்று இயல்பாய் காட்டுகிறது. அநேக வியாக்கியானிகள் சொல்லுகிறபடி இந்த வாக்கியத்தில் சொல்லிய அர்தசஷ்டா: லங்கிமனுவாயிருந்தால், தரியுகிஸ்தஸ்பிஸ் ராஜாவின் ஆறும் வருஷமுதல், லங்கிமனுவின் (7)ம் வருஷம்வரையும் (வா. 7) ஊடேயுள்ள காலம் (57) வருஷமாயிருக்கவேண்டும். இந்த (57) வருஷக்காலத்து சம்பவங்கள், எஸ்றாவின் புஸ்தகத்துக்கு ஒரு பெரும்பிரிவை உண்டாக்குகிறது. ஆகையால் வியாக்கியானிகள் இந்தப் புஸ்தகத்தை (2) வெவ்வேறான பிரிவாகப் பிரிக்கிறது நியாயமாயிருக்கிறது.

"அர்தசஷ்டா" கிரேக்கர் இந்தப் பேரை அர்தசர்க்சே என்று சொல்லுவார்கள். இந்தப் பேரையுடைய பார்சு ராஜாக்கள் மூன்று பேர் இருந்திருக்கிறார்கள். அதாவது லங்கிமனு, நிமோன், ஒகஸ் என்பவர்களாம். இந்த வாக்கியத்தில் சொல்லிய அர்தசஷ்டா மேற்காட்டிய மூவரில் யாரென்று தீர்மானிக்கவேண்டும். இவன் அர்தசஷ்டா ஒகஸ் அல்ல என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. (நெகே. 13: 6 வாசி.) அர்தசஷ்டா ஒகசுக்குப்பின், அர்தசஷ்டா என்ற பேருடைய ராசா இருந்ததில்லை. இருந்தாலும் அர்தசஷ்டா ஒகஸ் ஆவது அவனுக்குப்பின்பு வந்த எந்த ராசாவாவது (21) வருஷத்துக்கதிகமாய் ஆண்டிருப்பதில்லை. அப்படியிருக்க நெகேமி. 13: 6 ல் "அர்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம் வருஷத்திலே" என்று சொல்லியிருக்கிறது. இதினால் இவன்

ஒகஸ் அல்ல என்று தீர்மானிக்கலாம். இவனை அர்தசஷ்டா நிமோன் என்று சொல்லவும் ஏதுவில்லை. ஏனென்றால் யெசுவாவின் பேரனாகிய எலியாசாயிப், நெகேமியாவின் காலத்திலும் பிரதானஆசாரியனாயிருந்திருக்கிறான். ஆகையால் யெசுவாவின் காலத்திலிருந்த தரியுகிஸ்தஸ்பேராசாவின் பேரனாகிய லங்கிமனு தான் இந்த வாக்கியத்தில் சொல்லிய அர்தசஷ்டா என்று நாம் எண்ணவேண்டியதேயல்லாது, தரியுகிஸ்தஸ்பேயின் பூட்டனாகிய நிமோன் என்று நிதானிக்க ஏதுவில்லை.

"செராயா அசரியாவின் குமாரன்." இந்த வம்ச அட்டவணை நிறைவானதல்ல. ஏனென்றால் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதற்கும் எஸ்றாவுக்கும் ஊடேயுள்ள காலம் (1000) வருஷத்துக்கும் அதிகம். இந்தக் காலங்களில் (16) தலைமுறைகள் மட்டுமிருந்ததென்றல்ல. அவற்றுக்கு அதிகமிருக்கவேண்டும். (16) தலைமுறைகள் மட்டுமிருந்ததென்றால், ஒரு தலைமுறைக்கு (60) வருஷம்சென்றிருக்கவேண்டுமே. ஆனால் யூதருடைய சராசரிக் கணக்குப்படி, அதிகம் சென்றால் ஒரு தலைமுறை 30 அல்லது 40 வருஷந்தான். ஆகையால் இந்த வம்ச அட்டவணையில் ஊடேஊடே சிலபேரை விட்டிருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். விட்டுவிடப்பட்டிருக்கிற ஒரு பாகத்தை 1 நாளா. 6: 7—10 லிருந்து எடுத்து நிரப்பலாம். அதாவது மெராயோத்துக்கும் (3)ம் வாக்கியத்திற் சொல்லிய அசரியாவுக்கும் ஊடே, அமரியா, அகித்தூப், சாதோக், அகிமாஸ், அசரியா, யோகனான் என்ற (6) பேர்களைக் கூட்டவேண்டும். விட்டுவிடப்பட்டிருக்கிற இன்னொரு பாகம், எஸ்றாவின் தகப்பனாகிய செராயாவுக்கும் (1 வா), எஸ்றாவுக்கும் ஊடேயுள்ளது. செராயா, சிதேக்கியாவின் காலத்துப் பிரதானஆசாரியனும் (2 இரா. 22: 18. 1 நா. 6: 14), எஸ்றாவுக்கு (130)க்கு அதிகமான வருஷங்களுக்கு முன்னே உயிரோடிருந்தவனுயுமிருந்திருக்கிறான். இதின் மத்தியில் 3 அல்லது 4 பேர்களை விட்டிருக்கிறதாகத் தோன்றும். இன்னொரு பேராகிய மெராயோத்தை, சாதோக்குக்கும் 2 ம் வாக்கியத்திற் சொல்லிய அகித்தூபுக்கும் ஊடே விட்டிருக்கிறது. அதை 1 நா. 9: 11லிருந்து எடுத்து நிரப்பலாம். இப்படியாக விட்டிருக்கிற தலைமுறைகளைக் கூட்டினால், (16) அல்ல, (1000) வருஷத்துக்குக் கிட்டத்தட்டப் போதுமான (27) தலைமுறைகளிருந்ததென்று தெரியவரும்.

6. "தேறின வேதபாரகன்" இந்த வார்த்தையே சங்கீ. 45: 1லும் வருகிறது. இப்படிப்பட்டவர்கள் எகிப்தியருக்குள்ளிருந்தார்கள். ஆதி. 39: 4. நியாயாதிபதிகளின் காலத்தில் இப்படிப்பட்ட ஒரு வகுப்பார் இருந்ததாகத் தோன்றும். நியா. 5: 14. தாவீது சாலொமோன் முதலான இராசாக்கள் காலத்தில் கோர்ட்டுக்காரியமாய் இராசாக்களுக்குச் சம்பிரதிகளாயிருந்தவர்களைக் குறிக்குமென்று சிலர் வியாக்கியானம்பண்ணுகிறார்கள். 2 சாமு. 8: 17. 20: 25. 2 இரா. 12:

10. எப்படியிருந்தாலும் சிறையிருப்பின் காலம்வரையும் எஸ்றுவை வேதபாரகன் என்று சொல்லியிருக்கிற கருத்துப்படி வேதபாரகர் எழும்பவில்லையென்று காணப்படுகிறது. எஸ்றுவின் காலத்திலும் அவனுக்குப் பின்னாக யூதருடைய சரித்திரத்திலும் நியாயப்பிரமாணத்தைப் படிக்கிற மாணாக்கன்மாரும், அதை மொழிபேர்க்கிறவர்களும், அதைப் பிரதிபண்ணுகிறவர்களுமாயிருந்தவர்கள் "வேதபாரகர்" என்னப்பட்டார்கள். எரோமி. 8: 8 ல் சொல்லப்படுகிறவர்கள் இவர்கள்தான். இவர்களுக்கு பழய பூர்வ பாஷை தெரியும். இவர்கள் நியாயப்பிரமாணத்தை நுட்பமாய் வியாக்கியானம்பண்ணுவார்கள்; மற்றவர்களுக்கும் போதிப்பார்கள். (10 வா). இவ்விடத்தில் எஸ்றுவுக்கு கண்யமாக வேதபாரகன் என்று சொல்லியிருக்கிறது.

"கரம்" 7: 9, 28. 8: 18, 22, 31. நெகே. 2: 8, 18. தேவன் இவனை நடத்தி இவனுக்குத் துணையாயிருந்தார் என்றர்த்தம்.

7. "ஆசாரியர்" மீ. 2: 70.

9. எருசலேமிலிருந்து பாபிலோன், நேர்பாதைக்கு ஏறக்குறைய (520) மயில் தூரத்திலிருந்தது. இதற்கு (4) மாதம் சென்றது ஆச்சரியமாகத் தோன்றும். ஆனால் எஸ்று கூட்டமான சனங்களோடு வந்தபடியினாலே, படை. பாளயங்கள் வழக்கமாய்ச் செல்லுகிற சுற்றுப்பாதையாகிய கற்கேமிஷ், அறன்டிஸ் பள்ளத்தாக்கு, ஆகிய இவற்றின் வழியாய் வந்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. இந்த வழி (900) மயில் தூரம். இருந்தபோதிலும் இது நீண்ட பிரயாணந்தான். 8: 22, 31 வாக்கியங்களிற் சொல்லிய மோசங்களுக்கு இவன் விலகியிருந்து வரவேண்டியதால் இவ்வளவு தாமதம் நேரிட்டதென்று நிதானிக்கலாம்.

10. இது வேதபாரகனுடைய உயர்ந்த வேலை 6 வா. வியா.

11. 1—10, சுருக்கமாய்ச் சொல்லிவந்த நடபடிகளை இப்பொழுது விரிவாய்ச் சொல்ல ஆரம்பித்து, 8: 32 ல் முடிக்கிறார். இந்தப் புஸ்தகத்தை எஸ்று எழுதினானென்பதற்கு இது ஒரு நியாயமாயிருக்கிறது.

12. "இராசாதிராசா" பார்சுதேசத்து இராஜாக்கள் தங்களை இப்படிச் சொல்வது வழக்கம். அவர்களுடைய சாசனங்களிலும் மேல்விலாசங்களிலும் இப்படி எழுதியிருப்பதைக் காணலாம்.

14. "விசாரித்து" இஸ்ரவேலர் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறார்களா என்று விசாரிக்கும்படி என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் வாக்கியத்தின் வார்த்தைகள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. இந்த உத்தரவு பொது நடையாகத் தோன்றுகிறது. தேசத்தின் க்ஷேமாதிகளை அறியும்படி அனுப்பினான். வருஷத்துக்கொரு

முறை ஒரு உத்தியோகஸ்தனை ஒவ்வொரு நாட்டிலும் அனுப்பி அதை விசாரித்து ரிப்போர்ட்டுச் செய்யும்படி உத்தரவுகொடுக்கிறது பார்சு இராசாக்களுக்கு வழக்கம் என்பதாக செனபோன் என்ற சரித்திரக்காரன் சொல்லுகிறான்.

15. பொன்னும் வெள்ளியும் எவ்வளவு கொடுத்தார்களென்று 8: 25—27 காண்க.

16. "ஏழுமந்திரிமார்" எஸ்தர் 1: 14 ல் இவர்களைப் போலொத்தவர்கள்தான். பார்சில் ஏழு குடும்பத்தார் முக்கியமானவர்களாயிருந்தார்களென்றும், அந்தக் குடும்பங்களிலுள்ள ஏழு பிரதானிகள்தான், பிசியடோசிமேட்டிசுக்கு விரோதமாய் பந்துக்கட்டுப் பண்ணினார்களென்றும் ஏரோடாட்டஸ் சொல்லுகிறான். இந்த ஏழு பிரதானிகள்தான் இராசாவுக்கு மந்திரிமாராயிருந்தார்களென்று நினைப்பது நியாயமாயிருக்கிறது.

17. "போசனபலி மீ." எண். 15: 1—16.

19. "பணிமுட்டுக்கள்." அர்தசஷ்டாவும் அவன் மந்திரிமாரும் கொடுத்த காணிக்கைகளில், பொன், வெள்ளி, வெண்கலம் இவற்றால் செய்யப்பட்ட பணிமுட்டுகள் ஒரு பாகமாயிருந்தது. 8: 25—28.

21. சத்திராப்துரைகள்மூலமாய் பார்சர் தங்கள் நாடுகளில் பகுதிவாங்கிவந்த வகையில், ஒவ்வொரு நாட்டிலும் குறைந்தது ஒரு சஜான்சி இருந்து வருவான்.

பணமல்லாமலும் விளைச்சல்களிலிருந்தும் பார்சர் பகுதிவாங்கி சஜானாவில் சேர்த்து வந்தபடியினாலே, பணங்களைப்போல் இதிற்காட்டிய சாமான்களையும் உடனே எடுத்துக் கொடுக்கலாம்.

24. முன்னிருந்த இராசாக்களுடைய உத்திரவுகளைப் பார்க்கிலும் அர்தசஷ்டாவுடைய கட்டளை யூதருக்கு வெகு அநுகூலமாயிருந்தது.

"நிதனீமியர்." இந்த இடத்தில் ஆராதனைக்கடுத்த வேலைகளில் மிகவும் தாழ்வான வேலை செய்யப்பட்டவர்களைக் குறிக்கும். 2: 55—58.

25. நாடுகளை விசாரிக்கும் அதிகாரத்துக்கும் மேலான அதிகாரம் எஸ்றுவுக்குக் கொடுக்கப்பட்டது. (14. வா.) இவன் ஏற்படுத்தும் உத்தியோகஸ்தர், யூதரை நேராய் ஆண்டு அவர்களுக்கு மரணாக்கினை முதலாய் செய்யத்தக்க அதிகாரமுடையவர்களாயிருந்தார்கள்.

"சகல." யூத சனங்களைமட்டும் குறிக்கும். (26. வா.) மற்றுமுள்ள பல ஜாதிக்காரரைக் குறியாது.

"அறியாதவர்களுக்கு." யூத மார்க்கத்தாரல்லாத மற்றவர்களையும் புரோசலுத்துகளாக்கும்படி லைசென்ஸ் கொடுத்தானென்று

சொல்ல போதுமான ஆதாரமில்லை. ஆகையால் யூதக் கலப்பானவர்களுக்கு என்று அர்த்தம் பண்ணவேண்டும்.

27. இதுமுதல் புஸ்தகம் முடிவுவரை எபிரேயு பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது.

VIII. அதிகாரம்.

1. 1 நாளா. 7: 40. 9: 9. ஒத்துப்பார்.

2. அத்தூஸ். 1 நாளா. 3: 22. ஷை.

13. "கடைசிப்புத்திரர்." மூந்தின புத்திரர் செருபாபேலோடு போயிருக்கலாம்.

15. இந்த வாக்கியத்தோடு, 21ம் 31ம் வாக்கியங்களை ஒத்துப் பார்த்தால், அகாவாஎன்பது ஒரு பட்டணத்துக்கும் நதிக்கும் பேராயிருந்ததென்று காணப்படும். எஸ்று (9) நாளுக்குள்ளாக இவ்விடத்தில் வந்து சேர்ந்தான். 7: 9. 8: 15, 31. இது பாபிலோனியரால் ஈகி என்றும், கிரேக்கரால் ஆய் என்றும் அழைக்கப்பட்டது. தற்காலத்தில் அதற்கு ஹிட் என்று பேபேர். இந்தப் பட்டணத்தில் கிசில் ஊற்றுக்கள் மிகுதியாயுண்டு. இது ஐப்பிராத் நதியில் பாபிலோனுக்கு (80) மயிலுக்கு வடமேற்கே யூதேயாவுக்கு வருகிற நேர் வழியிலிருக்கிறது.

"லேவி." எருசலேமுக்கு லேவியர் கொஞ்சப்பேர்மட்டும் வந்ததைப் பற்றி 2: 40. 3: 8. பார்.

17. "கசிப்பியா." இது பாபிலோனியாவிலுள்ள ஒரு பட்டணம்என்று தோன்றும். அகாவாவுக்குக் கிட்டத்திலிருக்கவேணும் ஏனென்றால் எஸ்று அனுப்பின ஆட்கள் (3) நாளுக்குள் போய்த் திரும்பியிருக்கிறார்கள். 15 வா.

18. "லேவியின் குமாரன்." அதாவது பேரன் யாத்தி. 6: 16—19. 1 நாளா. 6: 4.

"செரெபியா." நெகே. 8: 7. 9: 4. 10: 12. 12: 24.

19. "அஷபியா." வா. 24. நெ. 10: 11. 12: 24.

20. 1 நாளா. 12: 31.

21. 2 நா. 20: 3. யோவேல். 1: 14. 2: 15. எரே. 36: 9.

"செவ்வையானவழி." எருசலேமுக்கு க்ஷேமமாய் சீக்கிரம் வந்து சேரும்படி சரியான நேர்பாதையைத் தேடினார்கள்.

22. "சத்துரு." இவர்களார் என்றும், எப்போ என்னத்திற்காக எஸ்றுவைத் தாக்கவந்தார்களென்றும் தெரியாது. பார்சுஇராசா அனு

ப்புகிற ஆட்களை சமாரியர் எதிர்க்கத் துணிவார்களென்று நினைக்க இடமில்லை. இவர்கள் அரபியர் அல்லது சீரியரான கள்ளர் கூட்டமாயிருக்லாம். 31 வா.

24. எஸ்று (12) ஆசாரியரையும் (12) லேவியரையும் நியமித்தான். செரேபியாவும் அஷபியாவும் (வா. 18, 19), லேவியருக்குள் முக்கியமானவர்கள். 30 வா.

31. "பன்னிரண்டாம்." யூதர் எஸ்றுவுடன் முதலாம் மாதம் முதலாம் தேதியில் (7: 9.) பாபிலோனைவிட்டுப் புறப்பட்டார்கள். (9) நாளில் அகாவாவிடத்தில் சேர்ந்தார்கள். அவ்விடத்தில் (3) நாளிருந்து (8: 15), பன்னிரண்டாம் தேதியில் பிரயாணப்பட்டார்கள்.

32. ஐந்தாம் மாதம் முதல்தேதியில் வந்து சேர்ந்தார்கள், (7: 9.) பாபிலோனை விட்டுப் புறப்பட்டு (4) மாதமானபின்.

33. நெகே. 3: 4, 21. 10: 5.

36. "சன்னதுகளை." 7: 21—24.

IX. அதிகாரம்.

1 "பிரபுக்கள்." எஸ்று எருசலேமுக்கு வந்து சேருமுன் பட்டணத்தை ஆண்டுவந்த முக்கிய அதிகாரிகளாம். செருபாபேல் மரித்தபின் யூதரை ஆளும்படி விசேஷித்த துரை ஏற்படுத்தப்படவில்லை என்றும், அதினாலே "பிரபுக்கள்" என்று சொல்லப்பட்ட சில பிரதானிகள் அதிகாரம் செலுத்தி வந்தார்களென்றும் காணப்படுகிறது. இந்தப் பிரபுக்களில் சிலர்தான் இப்பொழுது எஸ்றுவிடத்தில் பிராது சொன்னார்கள்.

"அருவருப்புகள்." விக்கிரகாராதனைக்காரரோடு சம்பந்தம் கலந்தால், விக்கிரகாராதனைக்குரிய சடங்குகளைச் செய்யவேண்டிவருமே.

"அம்மோனியர்." நியாயப்பிரமாணத்தின் எழுத்துப்படி பார்த்தால், கானானிய சாதியாரோடுமட்டும் விவாக சம்பந்தம் பண்ணக்கூடாதென்று விலக்கப்பட்டது. ஆனால் வரவர இந்தக் கட்டளையின் பொது தாற்பரியத்தை வைத்துக்கொண்டு, பக்கத்திலுள்ள எந்த சாதியான விக்கிரகாராதனைக்காரரோடும் கலக்கக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறதாக எண்ணப்பட்டு வந்தது.

3. ஆதி. 37: 29, 34. யோபு. 1: 20. யோசு. 7: 6.

"தலையிலும்." யோபு. 1: 20. எரே. 7: 29. 16: 6.

4. "வார்த்தைகளுக்கு." அதாவது அந்நிய விவாகத்தைப் பற்றி. உபா. 7: 4=யோசு. 23: 12, 13.

5. கன துயரத்தைக் காட்டும்படி இரண்டாந்தரம் இப்படிக் கிழித்தான். 10: 1 ஆல் துலங்குகிறபடி இது தேவாலய முகப்பில் எல்லாச் சனங்களும் காண இப்படிச் செய்தான்.

6. சங்கீ. 38: 4. 2 நா. 28: 9.

7. நெகேமியா செய்த பாவ அறிக்கையும் (நெ. 9: 29—35), தானியேல் செய்த பாவ அறிக்கையும் (தானி. 9: 5—11), இதைப்போலிருக்கிறது. சுயநீதியும் அகந்தையுங்கொண்ட யூதரை, சிறையிருப்பானது நொறுக்கி நன்றாய்ப் புத்திகொடுத்தது. சொஸ்தப் புத்திக்கு அடையாளம் தாழ்மைதான்.

8. "கொஞ்ச நிமிஷம்." தரியுவின் 2ம் வருஷமுதல் எண்ணினால் இது (60) வருஷத்துக்கதிகமான காலம் (4: 24). கோரேசின் முதலாம் வருஷமுதல் எண்ணினால் ஏறக்குறைய (80) வருஷம். ஒரு சாதியாருக்கடுத்ததாக இந்தக் காலம் எஸ்றாவுக்கு மெத்த அற்பமாயிருந்தது.

"மீதியாகவைக்கவும்." சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்தவர்களைக் குறிக்கும்.

9. நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம் என்றும் திருப்பப்படலாம். இப்பொழுதும் பார்சருக்குள்ளாய்த்தானே இருக்கிறார்கள்.

"வேலி." எருசலேமுக்கு இன்னம் சுவர்கட்டப்படவில்லை. இவ்விடத்தில் உபமானமாய் அவர்கள் சுகமாய்த் தங்கியிருப்பதைக்குறிக்கிறது.

10—12. வேதத்தில் பல இடங்களிலும் பொதுவாகச் சொல்லியதைவைத்து இப்படிச் சொல்லுகிறார். உபா. 7: 3. யோசு. 23: 12.

12. "சமாதானத்தையும் நன்மையையும்." உபா. 23: 6.

"பலத்துக்கொண்டு." உபா. 11: 8.

"தேசத்தின் நன்மையைப் புசித்து." ஏசா. 1: 19.

"உம்பிளிக்கையாக." நீதி. 13: 22=எசேக். 37: 25.

15. "இதினிமித்தம்." அந்நிய விவாகமாகிய பாவத்தினிமித்தம்.

X. அதிகாரம்.

1. "தாழவிழுந்து கிடக்கையில்" துவக்கத்தில் முழங்காலில் இருந்து செபம்பண்ணினவன் (9: 5), இப்போது சாஷ்டாங்கமாய் விழுந்து கிடந்து செபம்பண்ணுகிறான்.

"ஆலயத்துக்குமுன்பாக" அதாவது தேவாலயமுகப்பில், ஆலயத்தை நோக்கி. 1 இரா. 8: 30, 35. தானி. 6: 10.

2. "யெகியேல்" வா. 26. இதினாலே வீட்டிலே துன்பமுண்டாயிருக்கும்.

3. "உடன்படிக்கை" 2 நாளா. 15: 12. 29: 10. 34: 31, 32. நெகே. 10: 29. இதினாலே அதிக வைராக்கியமும் கண்டிப்பும் அடையும்படி ஏவப்பட்டார்கள்.

"ஆண்டவன்" பார்சு இராசாவிடத்திலிருந்து அதிகாரம்பெற்று வந்ததில் அவனுக்கிருந்த மேன்மையான உத்தியோகத்தையும் கண்யத்தையும் காட்டுகிறது.

"நியாயப்பிரமாணத்தின்படியே" உபா. 24: 1, 2.

4. 2 நாளா. 28: 10.

6. "அறைக்குள்பிரவேசித்தான்." தேவாலயத்துக்கு வெளியே இருந்த அறையென்று தோன்றும். 1 இரா. 6: 5, 6. எலியாசிப், யெசுவாவின் பேரப்பிள்ளை (3: 2). அவன் நெகேமியாவுக்குள் பிரதான ஆசாரியனாயிருந்தவன் (நெகே. 3: 1). அவன் யோகனானுக்குப் பிதாவோ அல்லது பிதாவின் பிதாவோ என்பது சந்தேகம். (நெகே. 12: 10—13=12: 22, 23). அவன் பிரதானஆசாரியனானதால் அவனுக்கு இஷ்டமானவர்களுக்கு தேவாலயத்து வெளி அறைகளைக் கொடுக்கலாம். நெகே. 13: 4, 5.

8. "மூன்றுநாளுக்குள்" இதினாலே சிறையிருப்பிலிருந்து திரும்பினவர்கள் கொஞ்ச விஸ்தீரணமான இடத்திலே தான் குடியிருந்தார்களென்று தோன்றும்.

"ஜப்தி" பார்சர் தாங்கள் ஜெயித்த சாதியாருக்கு, அவரவருடைய மாமூல் சட்டப்படி ஆளப்பட்டுவர இடம்கொடுத்திருந்தார்கள். அத்தோடுகூட இப்போ எஸ்றாவுக்கு விசேஷித்த அதிகாரமும் லைசென்சும் கொடுக்கப்பட்டிருந்தது. 7: 25, 26.

"புறம்பாக்க" யாத்தி. 12: 19. எண். 19: 20.

9. "யூதா பெண்யமீன்" மற்றக் கோத்திரத்தாரும் கூட வந்திருப்பார்கள். இதில் முக்கியமானவர்களைச் சொல்லியிருக்கிறது.

"ஒன்பதாம் மாதம்" ஆகையால் எஸ்றா எருசலேமுக்கு வந்து (4) மாசமாச்சுது. 7: 9.

"வீதியில்" அதாவது விஸ்தாரமான முற்றம். 2 நாளா. 29: 4.

"அடைமழை" (9)ம் மாதம் நம்முடைய டிசம்பர் மாதத்துக்

குச் சரி. பலஸ்தீனுவில் நாளதுவரையும் டிசம்பர் மாதத்தில்தான் பெருமழை பெய்துவருகிறது.

14. "வைக்கப்படவேண்டும்." அதாவது எருசலேமிலேயிருந்துகொண்டு விசாரிக்க.

15. "வைக்கப்பட்டார்கள்." எதிர்த்தார்கள் என்று திருப்பப்படுவது இதைவிட சரியாயிருக்கும். 1 நா. 21: 1. 2 நாளா. 20: 23. தானி. 8: 25. சனங்கள் சொன்ன யோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது. 16 வா.

17. இதை முடிவுசெய்ய (2) மாதம் பூர்த்தியாய்ச் சென்றது. சில பேர் இதற்கு இணங்காமலிருந்திருக்கலாம், அவர்களை வருத்தி விசாரணைசெய்ய நேரிட்டிருக்கும். அந்நிய ஜாதி பெண்பிள்ளைகளைக் கண்டுபிடிக்கவும் அவர்களுக்கு தள்ளுதல் சீட்டு எழுதவும் காலம் செல்லும்.

18. "யெசுவா" செருபாபேல் காலத்திலிருந்த பிரதானஆசாரியன். 3: 2.

19. கையடிக்கிறது தங்களையே ஜாமீனாக வைக்கிறதற்குச் சரி. எசே. 17: 18. 2 நா. 30: 8. புல. 5: 6.

20. 2 அதி. காண்க.

24. "பாடகர்" 2: 41, 42.

25. "மற்ற" அதாவது ஆசாரியர், லேவியர், பாடகர், வாசல் காவலாளர் இவர்களல்லாத மற்ற இஸ்ரவேலரில்.

44. குற்றவாளிகளெல்லாரும் (113) பேர். பிரதானஆசாரியர் வம்சத்தில் (4) பேர். மற்ற ஆசாரியரில் (13). லேவியரில் (10). மற்ற இஸ்ரவேலரில் குறைந்தது பத்து வீட்டாருக்குள் (80) பேர்.

"பிள்ளைகளை" என்று செய்தது லேசானதல்ல, வெகு பிரயாசையான காரியம் என்று காட்ட இதுகாரியம் சொல்லப்படுகிறது.

இரக்ஷணிய யாத்திரிகம்.

(தொடர்ச்சி)

கண்டனன் கருணையின் உருவைக் கண்களால்
உண்டனன் செவிவழி உரைச்சஞ் சீவியைப்
பண்டைநல் லுணர்வுவந் தணுகப் பாங்குறும்
கொண்டலை யிருகரங் குவித்தி றைஞ்சியே. 187

நொதியிடை விழுந்தழுக் கியதும் நண்ணிய
மதியுடைச் சஹாயன் வந்துதவு மாட்சியும்
எதிரில் லௌகிகன் வந் திசைத்த மாற்றமும்
சதிவழி புகுந்ததும் சமயச் சாற்றிமேல். 188

புரவலன் அருள்மொழி புகட்ட வல்லவோர்
குரவ மெய்யறிவினைக் கொளுத்தி யேகென
வரவிடுத்தாய் கதிமார்க்கத்தே யெனை
உரவு நீணிலத் தெவர் உனை ஒப்பாவரே. 189

நின்னுழை கடைப்பிடியாது நீசனென்
இன்னலுக் கிடைந்திவண் இறுத்த என்பிழை
தன்னையுஞ் சமித்தெனைத் தாங்குன் கையடை
இன்னருள் சுரத்தி யென்றினிதி னேத்தினன். 190

வேதியன் இன்னணம் விளம்ப வித்தகன்
பாதகம் பாதகம் பாரமார்த்திக
வேத நன்னூல்நெறி விளம்பிடா தொரு
காதகன் உலாவழிக் கவிழ்தல் காண்டியால். 191

எவ்வமில் பரமராஜ்ஜியத்தை யெய்துமுன்
றெவ் வளவிலா துனைச்சேர்தல் திண்ணமால்
இவ்வளவினில் மலைந் திடைந்து பின்னிடல்
அவ்வளவையும் எதிர்த் தடர்ப்பை யேகொளாம். 192

பொய்யுரையாத நம் புரவலன் திரு
மெய்யுரை மனக் கொளீஇ விசுவசித் திடார்த்
ஐயுறும் அனர்த்தமே ஆத்மமூலமன்
செய்யுறு தீவினைக் கென்பர் சீரியோர். 193

கோதிலா மெய்விசுவாசங் கொண்டுநன்
நீதிமானவன் பிழைப்பன் நீத்திடும்
பேதைபால் யானிரோன் பிரீடமாயெனும்
ஆதிநாயக னுரை யறிந்து கோடியால். 194

சருவலோகாதிபன் சாற்று மாற்றமும்
திருவருள் அடைந்துயு நெறியும் தீர்ந்துநீ
பெருவழி பிடித்தனை பேதுற் றுதவில்
ஒருவரும் கேடுனக் குறுவதன்மையால். 195

இன்னவாறுரைத்தசொல் ஏதில் வேதியன்
தன்னிரு செவித்தொளை புகுந்து தைத்திட
மின்னுரு மேற்றினை வெருவிப் புற்றுறை
பன்னகம் பதைத்தெனப் பதைத்து வீழ்ந்தனன். 196

ஜென்மசஞ்சித விடந் தீண்டி மாண்டதின்
கென்மதி யிரக்ஷணைக் கினி யென்செய்குவேன்
முன்மயல் அளற்றிடை முழுகியும் மினும்
நன்மதி படைத்திலேன் நாச மெய்தவோ. 197

மோகமார் பிரபஞ்ச மயலில் மூழ்கிலௌ
கீகமார்க் கத்திலே கெடுவலோ வெனுச்
சோகமுற் றுளங் கசந்தழுது துக்கவெஞ்
சாகரத் தழுந்தினன் தரிப்பொன் றின்றியே. 198

அவ்வயிற் குரவனும் அருளி நிற்கொரு
கௌவை யின்றுக கருணை யெம்பிரான்
எவ்வகைப் பாவமுஞ் சமிப்பர் ஏழைநீ
செவ் விசுவாசத்திற் றிடங்கொள் வாயென்றான். 199

உற்ற இம்மொழி வழி உயிர்வர் துற்றெனச்
சற்றுளந் தெளிந்து நம்பிறைவன் தண்ணருட்
பெற்றியை நினைந்தியான் பிழைக்கு மாறினி
இற்றென நவிற்றுகென் றிறைஞ்சி நின்றனன். 200

இங்கிவன் பரிவுறுநிலையும் இன்னலும்
சங்கை யின்றுக நன்குணர்ந்து தாபத
புங்கவன் வேதிய பொருந்தக் கேளெனுப்
பங்கமில் மதிசில பகருவானரோ. 201

இந்நெறிப் படுத்துனை யெய்த்த லௌகிகன்
தன்னையான் முன்னரோ யறிவன் சற்பனை
மன்னும் இச்சாபுர வாசி நன்னெறி
அன்னியோர்க் கவமதி புகலும் சூழ்ச்சியான். 202

சாலமேமிகு தருமா புரிக்குவந்த்
ஆலயம் புகுந்து மெய்யடியாரா மெனக்
காலையும் மாலையும் பரவு கைதவன்
ஞால மீதினசயலால் நாட்டம் ஒன்றிலான். 203

மீயுற வேதியர் வேடந் தோன்றிடும்
வாயுற மறைத்திரு வசனம் வந்திடும்
வீயுறு அறுவகை விகாரம் மும்மலம்
தீயுறு மனத்திடைச் செறிந்து நிற்குமால். 204

இத்திறத் தவன்மதிக் கிசைந்து நண்பநீ
முத்திமார்க்கத்தினை ஒருவி முற்றுநம்
சத்திய வாசக ருரையைத் தள்ளியத்
எத்திறப் பாதகம் இதயத் தோர்தியால். 205

எந்தை நாமத்தினால் என்னி மித்தமாய்த்
தந்தையைத் தாயைத்தம் மனையைத் தாம்பெறு
மைந்தரை யுடன் பிறந்தவரை மற்றினிச்
சொந்தமாம் ஜீவனைத் துறந்திடா விடில். 206

தன்னொரு சிலுவையைத் தாங்கித் தாங்குமென்
பின்னொருவா நெறி பிடித்திடா விடில்
என்னொரு சீடனென் றியையுறான் எனு
மன்னொரு மகனுரை மனத்துக் கோடியால். 207

வளமலி யெகிப்து மாநிதிய வைப்பினைக்
களமலி குப்பைபோற் சழிய வீசிநம்
இளவர சுயர்த்திய சிலுவை யெய்த்த போழ்த்
உளமலி காதலோ டுவக்க வேண்டுமால். 208

இருண்ட வன்மனத்து லௌகிகன் இன்சொலால்
மருண்டு சீயோன்மலை மார்க்கம் நின்றிழிந்த்
உருண்டனை பாதலத் தய்க்கும் இந்நெறி
தெருண் டிதை விடுத்தியேற் பிழைத்தி சீரியோய். 209

நல்லறக் கிழவனோர் அடிமை நல்கிய
கல்வியல் நெஞ்சினன் காதல் மக்களோட்
அல்லல்கூர் இருஞ்சிறை அகத்துளா னவற்க்
ஒல்லுமோ பவச்சுமை உனக் கொழிக்கவே. 210

கற்பனு தீதராங் ககன வேந்தன் முன்
சற்பிர மாணத்தைத் தழுவி நின்றெவன்
பொற்புறு நீதிமானுன புங்கவன்
எற்படு முலகிடை யாண்டு மில்லையால். 211

முன்னரோ விதிவிலக் கிகந்து முன்னரும்
துன்னெறி யொழுகியோர் தூயர் ஆவரோ
நன்னெறிப் படினும்பின் நன்கு மூழ்கினும்
பொன்னிறம் வாயசம் புணரு மேகொலாம். 212

கள்ள ஞானிய ரிவர் கழறும் வார்த்தையில்
எள்ளளவும் பயனிலைமற் றென் மொழி
உள்ள வாறென்பதற் குயர்ந்த வானமும்
பள்ள நீருலகமும் பகரும் சான்றரோ. 213

சான்றென மொழிந் திடுதருணம் தம்பிரான்
தோன்றி யிங்குரைத்த கற்பனைகள் சோர்வற
வூன்றிநின் றொழுகியீண் டுய்வல் யானென
என்றவன் சாபமே யெய்தி மாள்குவன், 214

என்றிடி யெறென இசைத்த வாசகம்
துன்றிய கொழுஞ்சனற் சுவாலை மீக்கொள்வெங்
குன்றினின் றெழுந்துளங் குலையும் வேதியன்
தன்றுணைச் செவிவழி புகுந்து தாக்கிற்றால். 215

தாக்கலும் சாவலாற் றனக்கு வேறினிப்
போக்கிலை புறத்தொரு புகலும் இன்றெனா
வாக்கொடு மனந்தடு மாறி வாய்வெரீஇ
மீக்கிளர் உயிர்ப்பொடும் விளம்பு வானரோ. 216

வேறு.

வஞ்ச லௌகிக வாய்மொழி யாங்கொடு
நஞ்சம் நுங்கி மயங்கி யென் நன்மதி
துஞ்சி ஆருயிர் சோர்குவ னுலினி
உய்ஞ்சிருக்க வொருமருந் துண்டுகொல். 217

ஈசன் கோபம் எரிக்குமென் றேழையென்
நாச தேசம் துறந்ததும் நன்மனைப்
பாசம் வீசிய பான்மையு மித்தனை
மோசம் எய்தி முழங்கனல் மூழ்கவோ. 218

மேதை யற்றவி வேகம் மிகுத்தவோர்
பேதை யென்னிற் பிறரிலை பெட்புறும்
ஊதியத்தை யொரீஇ உலவாப்பெரும்
சேத மெற்கெனக் கொண்ட திறத்தினே. 219

பாதை விட்டு நம் பார்த்திவன் ஆணையைப்
பேதை நீபிழைத்தாய் பெருங் குற்றமென்
றுதி யென்னை உவர்க்கும் உளக்கரி
வாதை கொண்டுயிர் வாழ்வ தெவ்வாறினி. 220

தம்பிரான் அருட் சார்வினைச் சார்ந்துய்வான்
நம்பிவந்து கடைத்தலை நண்ணுமுன்
வம்பு துற்றிய வார்த்தைக் கிணங்கியே
கொம்பிழந்த குரங்கென லாயினேன். 221

மச்சை யென்பு வழும்பு கொழுந்தசைத்
துச்சில் நச்சி யுவக்கும் துரிச்சையைச்
சிச்சி யென்றுவர்க் காது தியங்குமென்
கொச்சைத் துன்மதியே கொடுங் கூற்றன்றே. 222

ஈச நேசமோ ரெட்டுணையும் இலேன்
நாச தேச சுகத்தினை நாடுவேன்

நீசனேன் என்னிகழ்த்துவ தீண்டெனக்
கூசிக்கூசி யிணையன கூறுவான். 223

(இன்னும் வரும்.)

Narrative of the Mutiny of the Bounty.

நோர்போக்த் தீவார் விர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

வியாழன் 7௳—இன்று காலையில் நாங்கள் நனைந்து குளிரினால் வருந்திக்கொண்டிருந்தபடியால், ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு தேக்கரண்டி ரம் சாராயமும் கொஞ்சம் ரொட்டித்துண்டும் சாப்பிடக் கொடுத்தேன். வள்ளம் தீவுகளுக்கிடையே சென்றுகொண்டிருந்தது. ஒரு தீவிலிருந்து இரண்டு பெரிய படவுகள் புறப்பட்டு எங்களைத் தொடர்ந்து வந்தது. நாங்களோ பிடிகொடாமல் தப்பியோடிப்போனோம். மேற்படி படவுகள் எங்களுக்குப் பொல்லாப்புச்செய்யும் நோக்கமாய்ப் புறப்பட்டவைகளோ அல்லவோ என்பது சந்தேகம். நாங்கள் அவர்களைக் கண்டு பேசியிருந்தால் ஒருவேளை எங்களுக்கு அனுகூலம் உண்டானாலும் உண்டாயிருக்கும். என்றாலும் நாங்களிருந்த ஆதரவற்ற ஸ்திதியில், அப்படிப் பரீட்சை பார்ப்பது எனக்குப் புத்தியாய்த் தோன்றவில்லை.

இந்தத் தீவுகளின் விஸ்தீரணத்தையும் பிரண்டலித்தீவுகளுக்குள்ள தூரம் திசைமுதலிய விசேஷங்களையும் கவனிக்குமிடத்து, இவைகள் பெஜித்தீவுகள்என்று நினைக்கத்தக்கதாயிருக்கிறது. இன்று சாயந்தரம் நாலுமணிக்கு கனத்த மழைவருஷித்தது. நாங்களொவ்வொருவரும் எங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டதல்லாமலும், கையினாற் பிடிக்கக்கூடிய தண்ணீரைக்கொண்டு முப்பத்துநாலுகலன் தண்ணீர்வரையும் சேர்த்துவைத்துக்கொண்டோம். நாங்கள் பிரயாணப்பட்டபின் இப்பொழுதுதான் எங்கள்தாகம் நன்றாய்த்தீர்ந்தது. என்றாலும் இரவில் நாங்கள் பட்டபாடு மிகுதி. பகலெல்லாம் நனைந்த நாங்கள் மூடிக்கொள்ள காய்ந்த துணிமணிகள் ஒன்றுமில்லாதபடியால் கிடுகிடென ஆடிக்கொண்டிருந்தோம். தேவச்செயலாய் எங்கள் அதிஷ்டம், மறுநாள் வெள்ளிக்கிழமைக் காலையில் மழையுமில்லை. கொஞ்சம் வெயிலுமிருந்தது. எங்கள் வஸ்திரங்களைக் களைந்து உலர்த்திக்கொண்டோம். இன்று நான் அவரவர்களுக்குக்கொடுத்த ஆகாரம் ஒன்றரைஅவுன்ஸ் பன்றியிறைச்சி, ஒரு தேக்கரண்டி ரம்சாராயம், கால்புட்டி தேங்காய்ப்பால், ஒரு அவுன்ஸ் ரொட்டியுமே. ரம்சாராயம் அவ்வளவு சொற்பமாயிருந்தபோதிலும், அதினாலுண்டான அனுகூலமே மிகுதி. தூண்டிலொன்று எப்பொழுதும் சமுத்திரத்தில் போட்டிருந்தது. ஏராளமான மீன்களை நாங்கள் பார்த்ததுமுண்டு. ஒன்றாவது தூண்டிலில் அகப்படவில்லை.

மத்தியானத்துக்குமேல் வள்ளத்தைச் சுத்தம்பண்ணினோம். ஒவ்வொரு பதார்த்தத்தையும் உலர்த்தி ஒழுங்காய்வைக்கிறதற்குள்ளாகச் சூரியன் அஸ்தமித்துவிட்டது. இன்று தேங்காய்ச்சிரட்டையினால் ஒரு தராசுசெய்துகொண்டு இதுமுதல் உத்தேசித்துப் பங்குவைக்கிறதை நிறுத்தி, அவரவர் ஆகாரத்தை நிறுத்துக்கொடுக்கத் தொடங்கினேன். அப்பால், வழியில் ஒருவேளை எனக்கு ஏதாவது ஆபத்துநேரிடுகிறபக்ஷத்தில் மீதியானவர்கள் திசையறிந்து வள்ளத்தைச்செலுத்தி தீமோர்த்திவில் சேரத்தக்கதாக, நியுகினியாத்தீவையும் நியுஹொல்லாந்துத்தீவையும் குறித்துவிசேஷங்களை நான் அறிந்திருந்த அளவு அவர்களுக்குச் சொல்லி அவர்களெல்லாரையும் சந்தோஷப்படுத்தினேன். இரவில் அரைக்கால்புட்டி தண்ணீரும் அரை அவுன்ஸ் ரொட்டியும் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு ஒருவாறு எல்லாரும் திர்ப்தியாயிருந்தார்கள்.

சனிக்கிழமை 9உ இரவு ஒன்பதுமணிக்குப்போல மேகம்திரள ஆரம்பித்தது. சிறிது நேரத்துக்குள்ளாக இடிமுழக்கங்களும் மின்னல்களும் பயங்கரமாயுண்டானதுமன்றியும் மழையும் வருஷித்தது. அர்த்தராத்திரிக்குள்ளாக இருபதுகலன் தண்ணீரையும் சேகரித்துக்கொண்டோம். நாங்களெல்லாரும் மழையில் நனைந்துபோய் குளிரினால் மிகவும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தபடியால், இந்த வருத்தத்தை ஒருவாறு சகித்துக்கொள்ளத்தக்கதாக, ஒவ்வொரு தேக்கரண்டி அவ்வளவு ரம்சாராயம் சாப்பிட்டுக்கொண்டோம். மழை வருஷித்தவண்ணமாயிருந்ததோடு காற்றும் பலத்துக்கொண்டேவந்தது. இரவில் மழையும் காற்றும் இவ்வளவு முர்முரமாயிருக்கையில், எங்களுக்கு நித்திரைக்கு இடமுண்டா! பகலிலாவது சற்று சுகமாயிருந்ததோவென்றால் இரவிற்போலவே பகலிலும் எங்கள் நிலைமை மகா பரிதாபமாகவேயிருந்தது. கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. தண்ணீர் வள்ளத்துக்குள் பாய்ந்தவண்ணமாயிருந்தது. இரண்டுபெயர் ஓயாமல் தண்ணீரை இறைத்துக் கொட்டிக்கொண்டேயிருந்தார்கள். வள்ளத்தைக் காற்றின் போக்கிலேபோகவிடவேண்டியதாயிருந்தது. அதை எவ்விதமாயாவது திருப்பியோட்டப் பார்த்தருப்போமாகில் சமுத்திரத்தில் அமிழ்ந்துபோயிருப்போமென்பதற்குச் சந்தேகமில்லை.

நாடோறும் காலை மத்தியானம் சாயந்தரம் மூன்றுதரமும் அரை அவுன்ஸ் ரொட்டியும் அரைக்கால்புட்டி தண்ணீரும் ஒவ்வொருவருக்கும் சாப்பிடக்கொடுப்பது வழக்கம். இன்றைக்கோ மத்தியானத்தில் ஆளுக்கு அரை அவுன்ஸ் பன்றியிறைச்சியுங்கூடக் கொடுத்தேன். ஆகிலும் அது எம்மாத்திரம்?

அந்தவாரம் முழுவதும் மழை வெறிக்கவில்லை. காற்று அடித்து கடல் கொந்தளித்துக்கொண்டேயிருந்தது. எங்கள் வஸ்திரங்களை எவ்வகையாலும் உலர்த்திக்கொள்ள ஏதுவில்லாதபடியால், அதுகளை ஒவ்வொன்றாய் உரிந்து உப்புத்தண்ணீரிலே பிழிந்து போர்த்துக்கொண்டோம். இந்த உபாயத்தினாலே கொஞ்சம் அனல்உண்டாகச் செய்துகொண்டோம். எங்களுக்கு ஓயாமல் தென்பட்டுக்கொண்டிருந்த தீவுகளைப் பார்க்கப்பார்க்க, எங்கள் நிர்ப்பந்தம் அதிகரித்ததேயன்றி மற்றப்படியல்ல. எங்கள் கண்களுக்குமுன் போசனபதார்த்தங்கள் திரள்திரளாயிருக்க, நாங்கள் பசியினாலும் பட்டினியினாலும் சாகிறவர்களாயிருந்தோம். மேற்படி தீவுகளில் கரையிடித்து ஆகாரம் தேடுகிறபக்ஷத்தில் எவ்வளவோ மோசமும் அபாயமும் நே-

ரிடத்தக்கதாயிருந்தது. ஆகவே தப்பிக்கொள்ளலாமென்ற நம்பிக்கை இருக்கிறவரையில், நிர்ப்பந்தத்தை அனுபவித்துக்கொண்டாயினும், ஜீவனை நீடித்திருக்கச் செய்துகொள்வது தாவிளைஎன்று நினைத்தோம். மேலும் இந்த நாட்கள் பெரும்பாலும் மப்புமந்தாரமும் மழையுமாயிருந்தது எங்களுக்கு அருளப்பட்ட தேவாசீர்வாதம்என்று எண்ணவும் ஏவப்பட்டேன். என்னத்தினாலென்றால் உஷ்ணமாயிருந்திருக்குமாகில், நாங்கள் தாகத்தினாலே சாகநேரிட்டிருக்கும். அடிக்கடி மழை பெய்துகொண்டிருந்ததினாலும் வானம் மப்புமந்தாரமுமாயிருந்ததினாலுமே பயங்கரமான அந்த அவஸ்தைக்கு விலக்கமாய்க் காப்பாற்றப்பட்டோம்.

சனிக்கிழமை 16உ சூரியன் மேகங்களுக்கு இடையே காணப்பட்டதைப் பார்த்து எங்கள் வஸ்திரங்களை உலர்த்திக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுண்டாயிற்று. என்றாலும் சூரியன் பிரகாசித்தது கொஞ்சநேரம்மாத்திரந்தான். அப்புறம் தென்கிழக்கிலிருந்து பலத்த காற்று எழும்பியடிக்கவும், மழை வருஷிக்கவும் துவக்கிற்று. மின்னலும் இடிமுழக்கங்களும் மகா பயங்கரமாயிருந்தது. நட்சத்திர வெளிச்சமும் கொஞ்சமுமில்லை. வள்ளம்போனபோக்கும் எங்களுக்குத் தெரியவில்லை.

ஞாயிறு 17உ கிழக்கு வெளுக்கும்பொழுது வள்ளத்திலிருந்த ஒவ்வொருவரும் முறுமுறுக்கவும் அதிக ஆகாரம் கேட்கவும் தலைப்பட்டார்கள். நானோ கொடுக்கமாட்டேனென்று ஒரே சாதனையாய்ச் சாதித்துவிட்டேன். எங்கள் ஸ்திதி மகா நிற்பந்தமானதுதான். ஓயாமல் மழையில் நனைந்து குளிரினால் வருந்துகிறவர்களாயிருந்தோம். மழைக்கு ஒதுக்காவது மூடிக்கொள்ள வஸ்திரமாவது இல்லை. அதன்றியும் வள்ளம் தண்ணீர் நிரம்பி அமிழ்ந்துபோகாதபடிக்கு தண்ணீரை இறைத்துக்கொட்டின வண்ணமாயிருந்தோம். ஒருவகையில் இது எங்களுக்கு நன்மையாயிருந்ததென்று சொல்லவேண்டியது. இந்த முயற்சி இல்லாதிருக்குமாயின் எங்கள் கால் கைகள் திமிர்த்து மரத்து அசைவற்றுப்போக நேரிடுமே. எங்களிடத்திலிருந்த சொற்பமான ரம்சாராயம் எங்களுக்கு மிகுந்த நன்மைக்கேதுவாயிருந்தது. மழையினாலும் குளிரினாலும் அதிக வருத்தம்நேரிட்டபோதெல்லாம் ஒவ்வொருவருக்கும் இரண்டொரு தேக்கரண்டி சாராயம்கொடுப்பேன். அதினால் சற்று உற்சாகமடைந்து, நான் அவர்களை இன்ன இடங்கொண்டு சேர்க்கப்போகிறேனென்று சொல்லவதைக் கேட்டு வெகுவாய்ச் சந்தோஷப்படுவார்கள்.

161973
600 008.

டிசம்பர்மீ நாள் 31. கார்த்திகைமீ 17உமுதல், மார்கழிமீ 18உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றாடகத் தியானம்.
ஞா	1	௭	கருத்தரைப் பின்பற்றிநடக்க உடன்படிக்கை பண்ணினான். 2 இரா.
தி	2	௧௮	கருத்தரண்டைக்கு முழு இருதயத்தோடும்மனந்திரும்பினான் 15.
செ	3	௧௯	என் பராபரன் என்னை நாத்துக்கொள்ளக்கடவர். 1 நாளா. 11. 19
பு	4	௨௰	உம்முடைய பராபரன் உமக்கு அநுக்கிரகஞ் செய்கிறார். 12: 18.
வி	5	௨௧	தங்களைச் சுத்தம் பண்ணிக்கொண்டார்கள். 15: 14. (16: 4.
வெ	6	௨௨	பராபரனாகியகருத்தருடைய நாமத்தைப்பிரஸ்தாபம்பண்ணுங்கள்.
ச	7	௨௩	அவர் செய்கைகளைச் சனசதாங்களுக்குள்ளே அறிவியுங்கள். 8.
ஞா	8	௨௪	அவரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணுங்கள். 9.
தி	9	௨௫	அவருடைய அதிசயங்களையெல்லாந் தியானியுங்கள். 9.
செ	10	௨௬	கருத்தருக்கு நான் பயபக்தியானவன். யோனா 1: 9.
பு	11	௨௭	உமக்குச் சித்தமாயிருக்கிறபடியே தேவரீர் செய்கிறீர். 14.
வி	12	௨௮	கருத்தருக்கு மிகவும் பயப்பட்டார்கள். 16.
வெ	13	௨௯	கருத்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினார்கள். 16.
ச	14	௧	நான்நெருக்கப்படுகையில்கருத்தரைநோக்கிக்கூப்பிட்டேன். 2: 3.
ஞா	15	௨	என் ஆத்துமந் தொய்ந்துபோகையில் கருத்தரை நினைத்தேன். 8.
தி	16	௩	நான் பண்ணின பொருத்தனைகளைச் செலுத்துவேன். 10.
செ	17	௪	இரட்சிப்பு கருத்தருடையது. 10.
பு	18	௫	உன் தேவனாகிய பராபரனை பரீட்சைபாராதிருப்பாயாக. மத். 4: 7.
வி	19	௬	உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொள். 10.
வெ	20	௭	அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக. 10.
ச	21	௮	நாமே அவருடைய ஆலயம். எபி. 3: 6.
ஞா	22	௯	உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். 9.
தி	23	௰	ஒருவருக்கொருவர் புத்திசொல்லி வருவீர்களாக. 13.
செ	24	௧௧	அவர் தமது சொந்தத்திற்சேர்ந்தார். யோவான் 1: 11.
பு	25	௧௨	இயேசுகிறிஸ்து மாமிசத்திலே வந்தார். 1 யோவான் 4: 3.
வி	26	௧௩	பராபரன் அன்பாகவேயிருக்கிறார். 8.
வெ	27	௧௪	தமது குமாரனை யனுப்பினதினாலே அன்புண்டாயிருக்கிறது. 10.
ச	28	௧௫	பிதா, குமாரனை உலக இரட்சகராக அனுப்பினார். 14.
ஞா	29	௧௬	நித்திய ஜீவன் அவருடைய குமாரனிலிருக்கிறது. 5: 11. (சங். 90: 9.
தி	30	௧௭	எங்கள் வருஷங்களை ஒரு கதையைப்போல கழித்துவிட்டோம்
செ	31	௧௮	சென்ற வருஷங்களைத் தியானியுங்கள். 5 மோசே 32: 7.

விசேஷ நாட்கள்.

1. அடுவெந்தென்னும் நாட்களிலுள்ள 1-ம் ஞாயிறு.
8. அடுவெந்தென்னும் நாட்களிலுள்ள 2-ம் ஞாயிறு.
10. பௌரணமி.
15. அடுவெந்தென்னும் நாட்களிலுள்ள 3-ம் ஞாயிறு.
21. பரி. அப். தோமாவின் திருநாள்.
22. அடுவெந்தென்னும் நாட்களிலுள்ள 4-ம் ஞாயிறு.
24. அமாவாசை.
25. கிறிஸ்துவின் ஜநநதிருநாள்.
26. பரி. ஸ்தேவான் ரத்தசாட்சித் திருநாள்.
27. பரி. அப். யோவான் சுவி. திருநாள்.
28. குற்றமில்லாப் பாலர் திருநாள்.
29. கிறிஸ்துவின் ஜநநதிருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.